318

[ISSUED 19—12—1983

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
5 ஏப் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

(B)

MONDAY 11th APRIL 1983

**Volume CXCVIII (No. 3)**

©
GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600 009.*

318

T.N.L.C. Debates

Official Report

1983

Vol. CXCVIII. No. 3, 4.

D
V211, 32'N83
N83.19 .3-4
143180

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

திங்கட் கிழமை, 1983 ஏப்ரல் 11.
பங்குனி 28, துந்துபி—திருவள்ளுவராண்டு 2014.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9.30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு.

* 265 வினா—திரு. பா. ரா. தாமஸ் மற்றும் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஈட்டிய விடுப்பு நாட்களின் எண்ணிக்கையை அதிகமாக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்**: (அ) மற்றும் (இ) தமிழ் நாட்டிலுள்ள அனைத்து வகை நிர்வாகத்தின்கீழ் (அரசு, தனியார் மற்றும் உதவி பெறும் பள்ளிகளில்) பணிபுரியும் (சிறைத் துறைப் பள்ளிகள் நீங்கலாக) தொடக்கநிலை, இடைநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒரு கல்வி ஆண்டிற்கு 10 நாட்கள் ஈட்டிய விடுப்பு வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்**: தலைவரவர்களே, ஆசிரியர்களுடைய கோரிக்கை தாங்கள் பணியாற்றுகின்ற பணி நாட்களின் அடிப்படையில் விகிதாச்சாரப்படி ஈட்டிய விடுப்பு வழங்கப்பட வேண்டும் என்பதுதான். ஒரு அரசு ஊழியர் ஆண்டில் 280 நாட்கள் பணி புரிகிறார் என்றால், அவருக்கு

(318

# பொருளடக்கம்.


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள் | 287—297 |
| 2. உரிமைப் பிரச்சினை— | |
| 'மக்கள் குரல்' பத்திரிகை 8-2-1983 ஆம் தேதிய மேலவை நடவடிக்கைகளைத் திரித்து வெளியிட்டது குறித்து | 297—298 |
| 3. அறிவிப்பு— | |
| அரசு உறுதிமொழிக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம் | 298 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| (1) தமிழாசிரியர்கள் பி.டி. பட்டம் பெற்றபின் 10 ஆண்டுகளும் பணி நிறைந்திருந்தால்தான் மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியராகலாம் என வகுக்கப்பட்டிருக்கும் விதி குறித்து | 299 |
| (2) மதுரை நகரில் குடிநீர்த் தட்டுப்பாடு குறித்து | 300—301 |
| 5. தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம் | 301—410 |
| 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் | 411 |


143180

சென்னை-600 008

V211,32/N83

N83.191 3-4

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
வரலாற்று ஆராய்ச்சி
5 ஏப் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

ஆண்டிற்கு 33 நாட்கள் ஈட்டிய விடுப்பு வழங்கப்படுகிறது. [1983 ஏப்ரல் 13
பள்ளிக்கூட ஆசிரியர்கள் ஆண்டிற்கு 220 நாட்கள் பணி புரிகிறார்கள். தற்போது
பணி புரிகின்ற பணிக் காலத்தின் அடிப்படையில் பார்த்தால், ஈட்டிய விடுப்பு
26 நாட்களுக்கு மேல் வழங்கப்பட வேண்டும். அவர்கள்
ஆசிரியர் தான் பணியாற்றும் நாட்களின் அடிப்படையில் ஈட்டிய விடுப்பு
ஈட்டுகிறார். இந்த அடிப்படையில் இது குறித்த செயற்குறிப்பு இப்போது அந்த அடிப்படையில் ஒரு
இல்லாவிட்டாலும், இனிமேலாவது அரசு இதை அனுதாபத்தோடு பரிசீலிக்குமா விடுப்பை
என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போதுதான் பத்து நாட்கள்
தந்திருக்கிறோம். ஆகவே இப்போது இதுபற்றி ஆராய எந்தப் பிரச்சினையும்
இல்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** முன்பு 3 நாட்களாக இருந்ததை 10
நாட்களாக ஆக்கியது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிற காரியம். இது 3 இலட்சம்
ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்பதாலும், ஆசிரியர்கள்
விடுமுறைக் காலங்களில் மாணவர்களைச் சேர்ப்பது, புரமோஷன் தருவது
போன்ற வேலைகளைச் செய்து வருவதாலும், பணி நாட்களை 220 நாட்களாக
ஆக்கிவிட்டோம் என்பதாலும், பத்து நாட்களை 30 நாட்களாக அதிகரித்து
ஆசிரியர்கள் சமுதாயம் மகிழத்தக்க வகையில் அமைச்சர் அவர்கள்
நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நாம் தருகின்ற சிறு விடுப்பை
15 நாட்களிலிருந்து 20 நாட்களாக உயர்த்தியதே பள்ளிகளில் படிக்கக்கூடிய
மாணவர்களைப் பாதிக்கக்கூடிய அளவிற்குச் சில இடங்களில் ஏற்பட்டு
விட்டதன் காரணமாக இந்த ஏற்பாட்டைச் செய்தோம். ஆகவே இப்போது
எப்படி நடைபெறுகிறது என்பதைப் பார்த்த பிறகுதான், மேற்கொண்டு
எதையும் சிந்திக்க வேண்டும். இப்போது இதை நாம் எடுத்துக்கொள்வதற்
கில்லை என்றாலும், ஆசிரியர்கள் கேட்பதை நாம் தடை செய்யவில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய
கருத்தை நான் வரவேற்கிறேன். முன்பு 180 நாட்கள் டீச்சிங் டேஸ்-ஆகவும்
20 நாட்கள் எக்சாமினேஷன் டேஸ் ஆகவும் இருந்தது. சென்ற ஆண்டு



1983 ஏப்ரல் 11]

வெளியிட்ட ஆணையின் மூலம் 200 நாட்கள் டீச்சிங் டேஸ்-ஆகவும், 20 நாட்கள் எக்சாமினேஷன் டேஸ்-ஆகவும் வெளியிடப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. சனார்த்தனம் கூறியதுபோல, ஆசிரியர்கள் தங்களுடைய விடுமுறை நாட்களில், அதாவது காலாண்டுத் தேர்வு விடுமுறை நாட்களிலும், அரையாண்டுத் தேர்வு விடுமுறை நாட்களிலும் தங்கள் வீடு களிலேயே விடைத்தாள்களைத் திருத்துகிறார்கள். பள்ளிக்கூடப் பணியை வீட்டிலே செய்கிறார்கள். இது கணக்கிலே எடுத்துக்கொள்ளப்படவில்லை. இதையும் கணக்கிலே எடுத்துக்கொண்டால், நியாயப்படி விகிதாச்சாரம் உயர்த்தப்பட்டு ஈட்டிய விடுப்புச் சலுகையை வழங்க வாய்ப்பு இருக்கிறது. இந்தக் கருத்துக்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது நாம் சென்ட்ரல் வேல்யுவேஷன் என்று சொல்லி, பத்தாவது வகுப்பிற்கும் 12-வது வகுப்பிற்கும் விடைத்தாள்களைத் திருத்தும் ஏற்பாட்டை நடைமுறைப்படுத்தி வருகிறோம். ஆகவே குறிப்பிட்ட காலத்திற்குள் விடைத்தாள்கள் திருத்தப்படுகின்றன. குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்வு முடிவுகள் வெளியிடப்படுகின்றன. அதே போல ஒரு முறையை கீழ் வகுப்புகளிலே கொண்டு வரலாம் என்பது போன்ற தொரு ஆலோசனையை மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார். அப்படி நாம் சென்ட்ரல் வேல்யுவேஷன் போன்ற முறையைப் பள்ளிகளில் கொண்டு வருகிறபோது, ஆசிரியர்கள் விடைத்தாள்களைக் கொண்டு போய் வீட்டிலே வைத்துக்கொண்டு திருத்துவதாலே ஏற்படுகிற பல்வேறு சிரமங்கள் இல்லாமல் போகும். ஆகவே அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

### ஆங்கில இலக்கிய பி.ஏ.லிட். பட்டதாரிகள்.

*** 266. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. பா. ரா. தாமஸ் சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆங்கில இலக்கியத்தில் பி.ஏ. லிட்., பட்டம் பெற்று பி.எட்., முடித்தவர்களை, உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் நியமனம் செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) ஆங்கில இலக்கியத்தில் பி.ஏ., லிட்., பட்டம் பெற்று பி.எட். முடித்தவர்கள் இப்பொழுது கூட உயர்நிலைப் பள்ளிகளில் நியமனம் செய்யப்படுகிறார்கள். இவர்களை மேல்நிலைப் பள்ளிகளில் நியமனம் செய்வதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** பி.ஏ. (ஆங்கிலம்) பட்டம் பெற்றவர்களை உயர் நிலைப் பள்ளிகளில் பொதுவாகவே இப்போது எடுத்துக் கொள்ளுவதில்லை. காரணம், பி.ஏ. (ஆங்கிலம்) என்று குறிப்பிட்டு இப்போது பணியிடங்கள் கேட்கப்படுவதில்லை. ஏற்கெனவே கடந்த காலத்திலே நியமனம் செய்யப்பட்டவர்கள்தான் இப்போது பணி புரிகிறார்கள். ஆகவே பி.ஏ. (ஆங்கிலம்) படித்தவர்களை ஓரளவிற்காவது நியமித்தால்தான், ஆங்கிலம் கற்பிக்கும் திறன் அதிகரிக்கப்படலாம் என்ற கருத்தின் அடிப்படையில் பி.ஏ. (ஆங்கிலம்) படித்தவர்களை தேர்வாணைக் குழுவின் மூலமாகவும், 10 ஏ-1 என்ற தற்காலிக நியமனம் மூலமாகவும் கல்விக்கூடங்களில் நியமிக்கும் கருத்துருவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்தப் பிரச்சினைக்குக் காரணம், பி.ஏ. (ஆங்கில இலக்கியம்) படிக்காத மற்ற பட்டதாரிகள் ஆங்கிலத்தை சொல்லித் தரவும், இன்னுமொரு பாடத்தைச் சொல்லித் தரவும் தகுதி படைத்தவர்களாக இருக்கிறார்கள். அந்தக் காரணத்தாலேயே மற்ற ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதும், இவர்கள் வாய்ப்பு இல்லாமல் இருப்பதும் உள்ள நிலைமை ஏற்படுகிறது. பி.ஏ. (ஆங்கிலம்) படித்தவர்கள் ஆங்கிலத்தைச் சொல்லித் தருவதில் மற்ற பி.டி. ஆசிரியர்களைவிட தரம் உயர்ந்தவர்களாக இருப்பார்கள் என்ற அடிப்படையில் சில பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற குறிப்பு தரப்பட்டிருக்கிறது. வாய்ப்பு கிடைக்கும்போது, மற்ற பாடங்களில் ஆசிரியர்கள் போதுமான அளவிற்கு இருப்பார்களேயானால், அப்போது இவர்களுக்குச் சந்தர்ப்பம் தருவதில் சிரமம் இல்லை.

**டாக்டர் இரா. ஜனார்த்தனம் :** இப்போது 'டீச்சிங் மெதட்' கல்வி கற்பிக்கும் முறைகள் மாறியிருப்பதால், ஒரு துறையிலே சிறப்பாகப் படித்தவர்களை அதிகமாக எடுத்துக் கொள்வதன் மூலமாக மொழி என்ற அடிப்படையில் படிக்க உறுதுணையாக இருக்கும் என்று அரசு கருதுகிறதா ?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** 'டீச்சிங் மெதட்' என்பது எல்லா பி.டி. ஆசிரியர்களுக்கும் பொதுவான ஒன்று. அதிலே எந்தவிதமான வித்தியாசமும் இல்லை. ஆங்கில இலக்கியம் படித்தவர்கள் ஆங்கிலத் தகுதி அதிகம் படைத்தவர்களாக இருப்பதால், ஆங்கிலம் சொல்லித் தரும் போது உயர் வகுப்பிற்குச் சிறப்பான முறையில் பாடம் நடத்த முடியும் என்று கருதி மேல்நிலைப் பள்ளிகளில் இதுகுறித்து வலியுறுத்தி நியமனம் செய்து வருகிறோம். ஒரு சில இடங்களில் உயர் நிலைப் பள்ளிகளிலும் அந்த வாய்ப்பு தரப்படுகிறது. சந்தர்ப்பம் வரும்போது, அந்த வாய்ப்பு அவர்களுக்கும் கிடைக்கும்.

*House Rent Allowance to School Staff.*

*267. *Q.*—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any representation has been received from the Correspondent of the Boiler Plant Higher Secondary School, Kailasapuram, Tiruchirappalli-15, requesting the grant of House Rent Allowance to the employees working in the above Institution; and

(*b*) if so, whether the Government would come forward to comply with the request, in view of the fact that such allowance has already been granted to the staff of High Schools in that area?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) திருச்சி, கைலாசபுரம் கொதிகலன் ஆலை மேனிலைப் பள்ளியில் பணி புரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்க தகுந்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

பணியில்லா தமிழாசிரியர்கள்.

*268. வினா—திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகப் பணியில்லாத் தமிழாசிரியர் கழகத்திடமிருந்து 1980, ஜூலைத் திங்களில் முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்த முறையீட்டில் கூறப்பட்டுள்ள கோரிக்கைகள் யாவை ?

(உ) அவைகளின் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

## Adult Education Centres.

*269. Q.—Thiru C. R. LAKSHMIKANDHAN (on behalf of Thiru K. Ramamoorthy): Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) the number of Adult Education Centres, which are run or given grants by the State Government ; and

(b) the annual expenditure involved on the same.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) 6,100.

(இ) ரூ.1.23 கோடி.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இந்த முறை சாராக் கல்வி பள்ளிகளிலே நடத்துவதுபோல, வெளிநாடுகளிலே தொழிற்சாலைகளில் அலுவலர்களுக்கு நடத்தப்படுகிறது. இப்படி 40 வயதிற்கு உட்பட்டவர்கள் கல்வி அறிவு பெறச்செய்வதற்கு தேவையான திட்டங்களை அரசு வைத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** 1977க்குப் பின்னாலேதான் வயது வந்தோர் கல்வியிலே ஆர்வம் காட்டி இந்தத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. அதற்கு முன்னாலே நடைபெறவில்லை. நமக்குச் சுதந்திரம் வந்த பிறகு, வயது வந்தோர் கல்வித் திட்டத்தைத்தான் முக்கியமான திட்டமாக எடுத்துக் கொண்டோம். நாம் அதிலே செய்த தவற்றை இப்போது உணர்ந்திருக்கிறோம். நாம் 1977-லேதான் ஆரம்பித்தோம். மத்திய அரசுகூட இதில் ஒரு முக்கியமான இடத்தைத் தந்து, அவர்களும் இதிலே பங்கு கொண்டிருக்கின்றார்கள். இப்போது மத்திய மாநில அரசுகள் இதிலே ஊக்கம் காட்டி வருகிறார்கள். வேலை செய்பவர்களாக இருந்தாலும் கூட, அவர்களுக்கெல்லாம் இந்த வாய்ப்பு தரக்கூடிய நிலையான் திட்டங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகச் செயல்படுத்தி, தற்போது ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். இது ஆரம்ப நிலையிலே இருப்பதாகத்தான் வைத்துக்கொள்ள வேண்டும். ரூ. 1.23 கோடி செலவில் 6,100 மையங்களை நாம் நடத்திக்கொண்டிருக்கிறோம். அதைப்போலவே 10, 12 மாவட்டங்களில் 3,600 மையங்கள் 1979-80 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு உதவியோடு நடைபெற்று வருகின்றன.

**திரு. க. அருணாசலம் :** நாம் செலவு செய்கின்ற பணத்தை மத்திய அரசு உதவியாகக் கொடுக்கிறதா ? மாநில அரசு அதில் எவ்வளவு ஏற்றுக் கொள்கிறது ?





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நம்முடைய செலவிலே நடைபெறுவது 6,100 மையங்கள். மத்திய அரசினுடைய செலவிலே 12 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு 300 மையங்கள் விதம் 3,600 மையங்கள் தனியாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** முதியோர் கல்வி நிலையங்களில் எத்தனை வயதிலிருந்து எத்தனை வயதுக்குட்பட்டவர்களுக்கு போதனை நடைபெறுகிறது? முறைசாராக் கல்வி என்று செயல்படுகின்ற, நான்-பார்மல் எஜுகேஷனுக்கு என்று பல்வேறு நிறுவனங்கள் இருக்கின்றனவே அதுவும் முதியோர் கல்வி நிறுவனங்களில் ஒன்றா அல்லது வெவ்வேறாகத் தனியாகப் பிரித்து நடைபெறுகின்றனவா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** வயது வந்தோர் கல்வி என்பது 15 வயது முதல் 35 வயது வரைக்கும் உள்ளவர்களுக்கு. முறை சாராக் கல்வி என்பது இன்னும் கீழே வயதுள்ளவர்களுக்கு. அதாவது 14 வயதிற்குக் கீழ், 8, 9. 10, 11 வயதுகூட இருக்கலாம். அதாவது பள்ளிக்கூடத்திற்குப் போகாமல் மாலை நேரங்களில் கல்வி பெறுபவர்களுக்கு. இது பள்ளிகளுக்கு அப்பாற்பட்டு நடத்தப்படுகின்ற கல்வி தான். பள்ளிக்குச் செல்ல வேண்டிய குழந்தைகளுக்கு பள்ளிக்கு அப்பாற்பட்டு தருகின்ற கல்வி முறை சாராக் கல்வி, வயது வந்தோர் கல்வி 15 வயது முதல் 35 வயது வரை உள்ளவர்களுக்கு.

## ஆசிரியர் சம்பளத்தைக் கையாடல்

*270. வினா— திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சாத்தான்குளம் சரகத்தில், ஆசிரியர் சம்பளத்தைக் கையாடல் செய்ததற்காக நீதிமன்றத்தில் குற்ற வழக்கு தொடரப்பட்டுள்ள நிர்வாகிகள் யாரேனும் இருக்கிறார்களா ?

(இ) அவர்கள், நிர்வாகியாக தொடர்ந்து இருக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது உண்மையா ?

[1983 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) மற்றும் (இ) பல்வேறு இடங்களில் தமிழக பணியில்லா தமிழாசிரியர் கழகம் என்ற பெயரில் உள்ள மையங்களிலிருந்து அவ்வப்பொழுது முறையீடுகள் வந்துள்ளன. பொதுவாக வேலை வாய்ப்பு இல்லாத தமிழாசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு தர வேண்டும் என்பதே அம்முறையீடுகளிலுள்ள முக்கியக் கோரிக்கையாகும்.

(உ) அரசு நிதி நிலை இடம் தரும் அளவுக்கு ஆண்டுதோறும் கூடுதலாக தமிழாசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக 1981–82-ல் 500 பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1982–83-ல் 500 பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வேலை வாய்ப்பற்ற மற்ற நிலை ஆசிரியர்கள் பிரச்சினையைப்போல் இவர்கள் பிரச்சினையையும் படிப்படியாகத்தான் தீர்க்க இயலும்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** இந்த மாதிரி வேலையில்லாத தமிழாசிரியர்கள் எத்தனை பேர் நம்முடைய மாநிலத்திலே இருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** 1—3—1979 நிலவரப்படி 3,895 பேர். 30—11—1982 நிலவரப்படி 3,886 பேர். அதாவது கொஞ்சம் பேருக்கு வேலை தருகிறபோது, இன்னும் கொஞ்சம் பேர் படித்துவிட்டு வேலை இல்லாதவர்கள் பட்டியலில் வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

(முற்பகல் 9-40)

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, அந்த மாதிரி வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு தமிழாசிரியர் பதவி மட்டுமல்லாமல் வேறு ஏதாவது பதவி கொடுக்க அரசு உத்தேசித்து உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, தமிழாசிரியர் பதவி கொடுப்பதுபற்றி சொல்கின்ற நிலையிலே நான் இருக்கிறேன். வேறு ஏதாவது பதவி என்றால், அதற்குரிய அமைச்சர்தான் கொடுக்க வேண்டும்.

**திரு. சி. ரா. செட்டமிகாந்தன்:** உயர்நிலைப் பள்ளிகளிலே தமிழாசிரியர்கள் பணியிடங்கள் காலி ஏற்பட்டால், அதற்கு 2/3 பங்கு ஏற்கெனவே பணியில் உள்ளவர்களுக்கும் 1/3 பங்கு வேலையில்லாதவர்களுக்கும் 2:1 என்ற ரேஷியோப்படி ஒதுக்கப்படுகிறது. ஆனால் மேல்நிலைப் பள்ளிகளில் முதுநிலைத் தமிழாசிரியர்கள் பணியிடங்கள் காலியாகும்போது, அந்த விகிதாச்சாரம் பின்பற்றப்படுவதில்லை. 1:1 என்று ஏற்கெனவே பணியில் இருப்பவர்



1983 ஏப்ரல் 11]

பதவி உயர்வுக்கும், வேலையில்லாதவர்கள் புதிதாக வரும்போது 50 சதவிகிதம் என்றும் ஒதுக்கப்படுகிறது. ஆகவே உயர் நிலைப் பள்ளிகள் மேல் நிலைப் பள்ளிகள் பின்பற்றுகின்ற அளவுகோலிலே முரண்பாடுகள் இருக்கின்றன. இந்த முரண்பாடுகளை சமன் செய்து ஒரே விகிதாசாரம் இருப்பதற்கான வாய்ப்புக்களை உருவாக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதை முரண்பாடுகள் என்று சொல்வதற்கில்லை. அந்தக் குறிப்பிட்ட பதவியிடங்களைப் பொறுத்த வரையில், ஒரு விகிதாச்சாரம் இருக்கின்றது. இன்னொரு பகுதியினர் பதவி இடங்களைப் பொறுத்தவரையில், விகிதாச்சாரம் இருக்கின்றது. ஆசிரியர்கள் அப்படி ஏதாவது கோரிக்கைகளை வைத்தால், அதை மாற்றுவதுபற்றி சிந்திக்கலாம். காரணம் அது ஆசிரியர்களுக்குள்ளேயே இருக்கின்ற பிரச்சினை. அரசாங்கத்திற்கும் ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே உள்ள பிரச்சினை என்பதல்ல. அவர்களுக்குள்ளேயே உள்ள பிரச்சினை. அவர்கள் அதைச் சமன்படுத்த வேண்டுமென்றால், அந்த ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்துப் பேச முற்பட்டால், நாம் பேசி அந்த அடிப்படையில் மாற்ற வேண்டும் என்றால் மாற்றலாம். அதிலே அரசுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் இரண்டாம் நிலை தமிழாசிரியர்களை ஒழிக்க வேண்டும் என்று இருந்தபோது, பள்ளிகளில் வேலையில் இருக்கின்ற இரண்டாம் நிலை ஆசிரியர்களை மட்டும் மனதிலே கொண்டு ஒரு கோரிக்கையாக வைத்து, அவர்கள் அதிலே வெற்றி பெற்று, அவர்கள் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். அதற்குத் தடையாக இருக்க விரும்பவில்லை. இப்போது ஏற்பட்டிருக்கின்ற மிகப் பெரிய பாதிப்பு கல்விக்கு மட்டுமல்ல. தமிழ் சொல்லித் தருவதற்கு தமிழ் படித்தவர்களுக்கான வாய்ப்பை இரண்டாம் நிலைக்குச் சார்ந்தவர் தடுத்து நிறுத்தியதன் காரணமாக, இடைநிலைப் பள்ளியில் டிராயிங், கிராப்ட்ஸ் இன்ஸ்ட்ரக்டராக இருந்து தமிழிலே 30, 40 மார்க்குகள் வாங்கியவர்கள்கூட அதிகமாக தமிழாசிரியராக வரக்கூடிய நிலைமை இருப்பதனாலே தமிழ் சொல்லிக் கொடுப்பதிலே தமிழ் கல்வி சொல்லிக் கொடுக்கும் தரம் குறைந்திருக்கிறது. தமிழாசிரியர்கள் குறைபாட்டை நீக்கிக்கொள்கின்றவர்களே, இரண்டாம் நிலை தமிழாசிரியர்களை ஒழித்துக்கொள்கின்றபோது நாம் எல்லாம் மகிழ்ச்சி அடைந்திருக்கலாம். அதிலே ஒரு தவறு ஏற்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதற்குப் பிறகு இந்த விகிதாச்சாரத்தைப் பொறுத்தவரையில், தமிழாசிரியர்கள் வந்து பேசினால், அவர்களுடைய கருத்தைத் தெரிந்து, தேவையான நடவடிக்கைகளை நாம் எடுக்கலாம்.

[1983 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** திருநெல்வேலி மாவட்டம் சாத்தான்குளம் சரகத்தில் உள்ள இப்ராஹிம் நடுநிலைப்பள்ளி நிர்வாகி மீது நீதிமன்றத்தில் குற்ற வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கின் காரணமாக, அவர் நிர்வாகியாகத் தொடர்ந்து வர அனுமதிக்கப்பட்டார். அதன் பிறகு அவ்வழக்கில் நிர்வாகிக்கு விடுதலை வழங்கி தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. எனவே நிர்வாகி மீது மேல் நடவடிக்கை எடுக்கும் பிரச்சினை எழவில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இது போன்ற கையாடல் நடப்பதற்குக் காரணம் நிறுவனங்கள் மூலமாகச் சம்பளம் வழங்குவதுதான். அதை மாற்றி வங்கிகளின் மூலமாக வழங்குவதற்கு அரசு ஒரு நல்ல முயற்சியை மேற்கொண்டது. செங்கற்பட்டு வட்டத்தில் இதை மாற்றுவதிலே தடை ஏற்பட்டிருப்பதாகவும், வழக்கு போடப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. அந்த வழக்கு எந்த நிலையில் இருக்கிறது? கல்லூரி ஆசிரியர்களுக்குக் கொடுப்பதுபோல இந்தப் பள்ளி ஆசிரியர்களுக்கும் கொடுப்பதற்கான ஒரு நிலையை ஏற்படுத்துமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தடை எடுக்கப்பட்டவுடன், இந்த முறையை நாம் பள்ளியாசிரியர்களுக்கும் கொண்டு வந்து, அந்த முறையிலே சம்பளம் தர விரும்புகிறேன்.

தலைஞாயிறு-கொக்காலடி சாலை.

*** 271. திரு. ஈ. எஸ். வெங்கடேசன் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தலைஞாயிறு—கொக்காலடி கப்பிச் சாலையை தார்ச்சாலையாக மேம்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.



1983 ஏப்ரல் 11]

மணக்குடி—வடுகூர் சாலை.

*** 272. வினா—திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்):** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தலைஞாயிறு ஒன்றியத்திலுள்ள மணக்குடி—வடுகூர் சாலையை தார்ச்சாலையாக மேம்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழ இடமில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அடிக்கடி தலைஞாயிறு என்று நாம் நினைவு கொள்கின்ற இந்த நேரத்தில், ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் என்று சொன்னால், மழை வருமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** இன்று காலையிலிருந்து 'வானம் கருக்குது, மழை வரப் பார்க்கிறது, வீசப் பார்க்கிறது காற்று' என்ற வகையிலே காலம் இருந்துகொண்டிருக்கிறது. மழை வந்தாலும் வரலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. உரிமைப் பிரச்சினை.

**'மக்கள் குரல்' பத்திரிகை 8—2—1983 ஆம் தேதிய மேலவை நடவடிக்கைகளைத் திரித்து வெளியிட்டது குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மக்கள் குரல் பத்திரிகை மீது திரு. க. மீனாட்சிசுந்தரம், எம். எல். சி. அவர்கள் 12—2—1983 அன்று ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்பினார்கள். இது குறித்து உரிய பத்திரிகைக்கு எழுதிக்கேட்டு எனது தீர்ப்பினை பிறகு அளிப்பதாகக் கூறியிருந்தேன்.

‘மக்கள் குரல்’ பத்திரிகை 8—2—1983 ஆம் தேதிய மேலவை நடவடிக்கைகளைத் திரித்து வெளியிட்டது குறித்து



இப்பிரச்சினையைக் குறித்து பத்திரிகை ஆசிரியருக்கு எழுதிக் கேட்டதில் கீழ்க்கண்ட பதில் கிடைக்கப்பெற்றுள்ளது :—

(மாண்புமிகு மேலவைத் தலைவர்)

“ 8—2—1983 ஆம் தேதிய மேலவை நடவடிக்கைகளைப் பிரசுரிக்கும் போது, ‘திரு. க. மீனாட்சிசுந்தரம் கூறிய புகாருக்கு’ என்ற வாசகம் தவறாக வெளியிடப்பட்டு விட்டது. இதற்காக எங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்தச் செய்தியையும் திரித்துப் பிரசுரிப்பதோ, இருட்டடிப்பு செய்வதோ எங்கள் நோக்கம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். ”

எனவே மேற்கொண்டு இப்பிரச்சினை மீது நடவடிக்கை ஏதும் தேவையில்லை எனத் தீர்ப்பளிக்கிறேன்.

### 3. அறிவிப்பு

அரசு உறுதிமொழிக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மேலவை விதி 175-ன்படி 1983-84 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவிற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமித்துள்ளேன் .

1. திரு. ம. சங்கரலிங்கம் (தலைவர்)
2. திரு. ஆர். டி. சீத்தாபதி
3. டாக்டர் இரா. சனார்த்தனம்
4. திரு. பி. முனுசாமி
5. திரு. பா. ரா. தாமஸ்
6. திரு. ஆ. நல்லசிவன்
7. திரு. ஜே. எம். மியாகான்.





### 4. கவன ஈர்ப்பு

(1) தமிழாசிரியர்கள் பி. டி. பட்டம்பெற்றபின் 10 ஆண்டுகளும் ஐந்து ஆண்டுகளும் பணி நிறைந்திருந்தால்தான் மேல்நிலை, உயர் நிலைப் . பள்ளிகளில் தலைமையாசிரியராகலாம் என வகுக்கப்பட்டிருக்கும் விதி குறித்து.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

“ தமிழாசிரியர்கள் பி. டி. பட்டம் பெற்ற பின் 10 ஆண்டுகளும் 5 ஆண்டுகளும் பணி நிறைந்திருந்தால்தான் மேல்நிலை, உயர் நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியராகலாம் என வகுக்கப்பட்டிருக்கும் விதி. தமிழ் நாட்டில் தமிழ் ஆசிரியர்கள் தலைமையாசிரியர்களாக வர முடியாத நிலைமையை உருவாக்கி உள்ளதால் அவ்வாசிரியர்கள் படும் இன்னல் குறித்து.”

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவரவர்களே, விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, தற்போதுள்ள விதிமுறைகளைப் பற்றி விவர அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் விவர அறிக்கையின் முதல் பத்தியில் குறிப்பிட்டுள்ள அரசாணை எண் 720 குறித்து உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடரப்பட்டு, அது குறித்து தீர்ப்பு வெளியாகி உள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது. அந்தத் தீர்ப்பின் விவரங்கள் வந்து விட்டனவா ? அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது? தமிழாசிரியர்களுக்கு ஆதரவாக நீதிமன்றத் தீர்ப்பு உள்ளதால், அரசு அதைப் பரிசிலித்து, தீர்ப்பின் அடிப்படையில் அமுல் படுத்துமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, நீதி மன்றத்தினுடைய தீர்ப்பு நம்முடைய கைக்கு வந்து சேர்ந்தவுடன், அந்த அடிப்படையிலே நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது. தமிழாசிரியர்களுக்கு நல்லது செய்வதிலே அரசுக்கு மிக்க மகிழ்ச்சிதான். ஆகவே தீர்ப்பின் விவரங்கள் நமக்கு வந்தவுடன், அது பற்றி அரசு ஒரு முடிவை எடுக்கும்.

---

@ 412 ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1983 ஏப்ரல் 11

## (2) மதுரை நகரில் குடிநீர்த் தட்டுப்பாடு குறித்து.

**டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. பா. ரா. தாமஸ் சார்பில்) :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :

"மதுரை நகரில் ஏற்பட்டுள்ள மிகக் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டினால் மக்கள் படும் அவதி குறித்து".

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவரவர்களே, மதுரை நகரில் நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 65 இலட்சம் காலன் குடிநீர் ஆழ்கிணறுகள் மூலமாகவும், தனியாரிடமிருந்து விநியோகிக்கப்படுகிறது. பெற்றும் குடிநீரைச் சிறப்பாக வழங்கும் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். சென்னை நகரில் ரெயில்வேக்கு 15 இலட்சம் காலன் தண்ணீர் வழங்குவதில் இப்போது அவர்கள் மூன்று இலட்சம் காலன் நீரைக் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். அது அவர்கள் தேவையைப் பொறுத்து செய்ய முடியுமோ என்னவோ! மதுரையில் ரெயில்வே நிர்வாகத்திற்கு ஒரு லட்சம் காலன் தண்ணீரைக் கொடுக்கிறோம். அதை அவர்கள் சரிக்கட்டுவார்களா? அதற்கான முயற்சியை அமைச்சரவர்கள் மேற்கொள்ளுவார்களா? பெரியார் நீர்த் தேக்கம் நிறைந்த வைகையில் தண்ணீர் வந்தால்தான், அங்கே நல்ல நிலைமை ஏற்படும். அதோடு இராக்கியில் ரூ. 40 கோடி திட்டம் இருக்கிறது. மத்திய அரசுடன் பேசி அதற்கான ஏற்பாடுகளைச் செய்து, மதுரை நகருக்கு உள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை அரசு போக்குமா? கல்லாறு திட்டம் என்று சொல்லுவார்கள், அதை அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, கல்லாறு திட்டம் இப்போது அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. ரெயில்வே துறையினரைப் பொறுத்தவரையில், ஒரு லட்சம் காலன் தண்ணீர் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால், அதை அவர்கள் மதுரை நகருக்கு கொடுக்க முடியுமா என்று வேண்டுமானால் விசாரிக்கச் சொல்லலாம்.

---

@ 412-414 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1983 ஏப்ரல் 11]

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவரவர்களே அப்படி நீர் கொண்டு வரும்போது டீசல் பெட்ரோல் டாங்குகளில் தண்ணீர் வருவதால், அவை தண்ணீருடன் கலந்து வரும் நிலை இருக்கிறது. அது மக்களுக்குக் கெடுதலாக இருக்கிறது. இப்போது சென்னையைப் பொறுத்தவரையில், 15 இலட்சம் காலனை அவர்கள் செலவழித்து, அதற்குப் பதிலாக மூன்று இலட்சம் காலன் வருகிறது. அந்தமாதிரி இல்லாமல் ரயில்வே இலாக்கா தன்னுடைய தேவையைப் பூர்த்தி செய்துகொண்டு, அவர்கள் எடுத்துக்கொள்ளும் தண்ணீரை விநியோகத்திற்குத் தருவார்களா? அங்கேயும் விழா நடத்திச் செய்தால் சிறப்பாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, அது பற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. ஆனாலும்கூட ரயில்வே துறையினருக்கு எவ்வளவு தேவை, எவ்வளவு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற கணக்கையெல்லாம் பரிசீலனை செய்து, வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

## 5. தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமைபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன்வைக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, தொழிலாளர் நிலைமைபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்காக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலாளர் நிலைமை பற்றி இன்றைய வறட்சி நிலையிலே

---

@ 415—499 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

நினைத்துப் பார்க்கிறபோது, மிகப் பயங்கரமான சூழ்நிலை உருவாகிறது என்பதை நினைத்துப் பார்க்கிறபோது அது ஒரு அந்தகாரத்திற்குள்ளே அவர்களை அழுத்திவிடுமோ என்ற பயம் இருக்கிறது. இன்றைய நிலையில் நெசவாளர்களாகிய நாங்கள் படும் இன்னல்களை நினைக்கும்போது, மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எங்களுடைய சமுதாய மக்கள் இன்றைக்கு நெய்து வைத்திருக்கும் துணியை விற்கச் சென்றால், வாங்குவதற்குப் பொது மக்களிடத்திலே போதுமான வருமானம் இருந்தும், வறட்சி நிலைமை காரணமாக தண்ணீருக்குச் செலவிட வேண்டியிருக்கிறது, குடிநீருக்கு அலைய வேண்டியிருக்கிறது, எதிர்காலத்தில் மழை பெய்யாமல் போனால் என்ன செய்வது என்று எண்ணி சேமிப்பு வைத்துக்கொள்ள வேண்டுமென்ற நிலையில் துணிகள் வாங்குவதில் தயக்கம் காட்டுகிறார்கள். எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், 9—4—1982 ஆம் நாள் கைத்தறி வார விழாவைத் துவக்கி வைத்து, அந்த வார விழாவிலே முதல் நாள் நாங்கள் விற்பனைக் கணக்கைப் பார்த்து, நேற்று இரண்டாம் நாள் விற்பனைக் கணக்கைப் பார்க்கும்போது, கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு விற்பனை குறைந்திருக்கிறது. அதை வைத்து சொல்கிறேன். துணியை விற்க நெசவாளர்கள் படுகின்ற அவதியைப் போக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு 10 கோடி ரூபாய்க்கு ஜனதா ரகத்தை வாங்கி இன்றைக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு—நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு, மழை பெய்தால்தான் வரப்பு முடியும், நாற்று நட முடியும், களை எடுக்க முடியும், விவசாயத் தொழில் செய்ய முடியும் என்ற சூழ்நிலையில் இருக்கும் தொழிலாளர்களுக்கு; இன்றைக்கு வேலையில்லாமல் யார் வந்து வேலைக்குக் கூப்பிடுவார்கள் என்று ஒவ்வொரு கிராமத்திலுள்ள முச்சந்தியிலும் வந்து நின்று கொண்டிருக்கும் தொழிலாளர்களுக்கு, விறகு பிளக்கக் கூப்பிட மாட்டார்களா, மூட்டை தூக்கக் கூப்பிட மாட்டார்களா, அண்டையில் இருக்கும் நிலத்தில் மண் வாரிப் போடக் கூப்பிட மாட்டார்களா என்று ஏங்கித் தவித்துக் கொண்டு, உணவு இல்லாத சூழ்நிலையில் உள்ள தொழிலாளர்களுக்கு—வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் நம்பி அமர்கின்ற முதலாளிகள், நிலச்சுவாந்தார்கள், நிலப் பிரபுக்கள் எல்லோரும் செயலற்று, தன்னை வேலைக்கு வைத்துக்கொள்ளாமல் எங்கே கைவிரித்து விடுவார்களோ என்று பயந்து, நாளுக்கு நாள் ஐந்து ரூபாய் கோடிங்கள், 10 ரூபாய் கோடிங்கள் என்று பணத்தை வாங்கிக்கொண்டு, அரை வயிற்றுக் கஞ்சி குடித்துக் கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர் சத்துணவுத் திட்டத்தில், அவர்கள் பெற்ற பிள்ளைகள் பள்ளிக்குச் சென்றால், அங்கே அவர்களுக்குச் சாப்பாடு போடுகிறார்கள். அவர்களுடைய பெற்றோர்கள் [illegible] தாய், தந்தையர்கள் [illegible]
[illegible]



இரண்டு பேர்தான் மீதி. அவர்கள் தங்களுடைய வயிற்றை நிறைத்துக்கொள்ள வேலை செய்கிறார்கள். ஒரு பக்கம் முதியவர்களுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது, ஒரு பக்கம் பிள்ளைகளுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலை இருந்தாலும், அவர்களால் துணி எடுக்க முடியாது. வரும் தமிழ் வருடப் பிறப்பு அன்று புத்தாடை அணிய வேண்டுமென்றால், அவர்களால் முடியாது. அதனால் தமிழக அரசு 10 கோடி ரூபாய் அளவுக்குத் துணி எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதன் காரணமாக எங்களுடைய நெசவாளர்களுக்கு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கை எங்கே பாழாகி விடுமோ என்ற சூழ்நிலையில், தலைவரவர்களே, தங்கள் மூலமாக ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். தேக்கம் என்று சொல்ல மாட்டேன், இருப்புச் சரக்கு என்றுதான் சொல்லுவேன். பிரைமரி கூட்டுறவு சங்கங்களிலே கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய் அளவுக்கு இருப்பு இருக்கிறது. பிரைமரி சங்கங்களிலே 20 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கிறது. தனியாரிடத்தில் 50 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கிறது. இந்த விவரங்களை உற்பத்தியாளர்கள் சொன்னார்கள். அந்தச் சரக்குகளை எப்படியாவது விற்றாக வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு வேலை கொடுக்க முடியும். இல்லாவிட்டாலும், அரை வயிற்றுக் கஞ்சிக்குக் கூலி கொடுக்க முடியும். இந்த அரசைக் கேட்டுக்கொள்வது, 10 கோடி ரூபாய்க்கு இவர்கள் துணி எடுத்தது போலவே, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் 5½ லட்சம் நெசவாளர்களின் குடும்பங்கள் வாழ்வதற்கு மத்திய அரசை வற்புறுத்தி, வறட்சியின் காரணமாக இருக்கும் சூழ்நிலையை மனதிலே கொண்டு, அவர்களும் இந்தத் துணிகளை வாங்கச் செய்ய வேண்டும். ரயில் மூலமாகக் கிருஷ்ணா நதித் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கிறார்களே, தண்ணீரை மட்டும் குடித்து எப்படி வாழ முடியும்?

(முற்பகல் 10-00)

வேலை செய்து அதிலிருந்து வருகிற ஊதியத்தை வைத்துத்தானே அவர்கள் சாப்பிட முடியும். அந்த வகையில் இருப்பில் இருக்கிற சரக்கு முழுவதையும் அவர்கள் எடுக்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர்களின் நலன் கருதி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஒரு பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்திருக்கிறது. அதேபோல் கூலி நிர்ணயம் பற்றியும் ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறது. நெசவாளர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்திருப்பதற்கு உள்ளபடியே நான் இந்த அரசை

[திரு. சி. இராமலிங்கம்] [1983 ஏப்ரல் 11

மிகவும் பாராட்டி, வணங்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தச் சட்டத்திற்குக் கூட உற்பத்தியாளர்கள் அல்லது பாலடர் பிவர்ஸ் என்று சொல்லப்படுபவர்கள், 100 பேரை, 200 பேரை வைத்துக் கொண்டு வேலை செய்பவர்கள் தடை உத்தரவு வாங்கியிருக்கிறார்கள். அப்படி தடை உத்தரவு வாங்கும் அளவுக்கு என்ன இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. அப்படி அவர்கள் செய்ததில் அர்த்தமில்லை. அப்படி தடை உத்தரவு வாங்கியவர்கள் அந்தத் தொழிலாளர்கள் நல்ல முறையில் வாழ வசதியையும் செய்யவில்லை. அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டாம் என்கிற முறையில், அதற்கு பயந்துகொண்டு தடை உத்தரவு வாங்கிவிட்டார்கள். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அதுகுறித்து எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவை. மின்சாரப் பற்றாக்குறை, வறட்சி இப்படிப்பட்ட நிலைமை இருக்கும் நிலையில் மில் முதலாளிகள் நூலின் விலையை வேறு ஏற்றிவிட்டார்கள். அதுகுறித்து நாங்கள் முறையிட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கைத்தறி அமைச்சர் அவர்களிடத்தில் சொன்னார்கள். மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்கள் சைமா என்று சொல்லக்கூடிய சவுத் இந்தியா மில் ஓனர்ஸ் அசோசியேஷனை அழைத்துப் பேசினார்கள். ஒரு கட்டுக்கு அவர்கள் 80 ரூபாய் ஏற்றியிருந்தார்கள். இவ்வளவு விலை நூலுக்கு இருக்கும் நிலையில் நாங்கள் பிழைப்பு நடத்த முடியாது என்று கேட்டுக் கொண்டோம். நாங்கள் மறுபடியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் முறையிட்டதன்பேரில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சைமாவில் உள்ளவர்களை அழைத்துப் பேசியிருக்கிறார்கள். இரண்டாம் நம்பர் நூலில் இருந்து 40 ஆம் நம்பர் நூல் வரை குறைந்த விலைக்கு விற்க வேண்டுமென்று உத்தரவு போட்டு அதை இப்போது நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். பேக்டரி ஓனர்ஸ் அதைப் பயன்படுத்தி தர்ணா. போராட்டம் என்றெல்லாம் சொல்லி, தொழிலாளர்களை போராட, திரட்டுகிறார்கள். வடசேரி போன்ற இடங்களில் அவர்களை இவ்வாறு திரட்டி போராட வைத்தார்கள். அரசாங்கத்திலிருந்து பெற வேண்டிய சலுகைகளையும் பெற்றுவிட்டு, தொழிலாளர்களை தர்ணா போன்ற போராட்டத்தில் ஈடுபடுத்தி "பார்த்தீர்களா, இந்த ஆட்சி இப்படி இருக்கிறது" என்கிற முறையில் பேசுவது போன்ற நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தலையிட்டு இப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வறட்சியின் காரணமாக இலட்சக்கணக்கானவர்கள் கர்நாடகாவுக்குக் குடியேறுகிறார்கள் என்று எல்லாம் இங்கே சொன்னார்கள். ஏன் இவ்வாறு ஊரை விட்டுச் செல்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்.



1983 ஏப்ரல் 11] திரு. சி. இராமலிங்கம்]

1947 ஆம் ஆண்டு நமக்குச் சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரம் கிடைத்து 37 ஆண்டுகள் ஆகியும் கூட ஊரை விட்டு மக்கள் போகும் அளவுக்கு மத்திய அரசு செயல்படுகிறது என்றுதான் அர்த்தம். தன்னிறைவுத் திட்டம் என்கிற பெயரிலும் இன்னும் பல்வேறு பெயரிலும் திட்டங்களைத் தீட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனாலும் ஊரை விட்டு மக்கள் போகும் அளவுக்கு ஏன் நிலைமைகள் ஏற்படுகின்றன என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். 1947-52 ஆம் ஆண்டுகளிலே எங்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல், குழந்தை குட்டிகளை எல்லாம் கூட்டிக்கொண்டு சென்னைக்கு வந்தோம். என்னைப் பொறுத்தவரையிலும், 1950 ஆம் ஆண்டு ஊரை விட்டு சென்னைக்கு வந்தேன் அதுபோல் பலர் ஆமதாபாத் போன்ற இடங்களுக்குச் சென்றார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அப்படியும் வளர்ந்துதான் இருக்கிறீர்கள்.

**திரு. சி. இராமலிங்கம்:** அதற்குக் காரணம் ஊரை விட்டு வந்தவர்கள் எல்லாம் ஈனம், மானம் பார்க்காமல் ஏதாவது ஒரு தொழில் செய்கிறார்கள். ஊரிலே என்றால் கௌரவம் பார்ப்பார்கள். அங்கே மாமன், மச்சான் என்று எல்லாம் உறவினர்கள் இருப்பார்கள். அதனால் கவுரவம் பார்த்துத்தான் ஏதாவது தொழில் செய்வார்கள். அந்த வகையில் ஊரை விட்டு வந்து, ஈனம், மானம் பார்க்காமல் கஷ்டப்பட்டு தொழில் செய்தோம். நான் அப்படிச் சொன்ன உடன் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் சிரிக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஈனம், மானம் என்று திரும்பத் திரும்ப ஏன் சொல்லுகிறார்கள்?

**திரு. சி. இராமலிங்கம்:** இங்கே என்றால் வியாபாரியாக இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி, ஏதாவது பேசினாலும் கூட, குறிப்பிட்டுப் பேச முடியாது. அப்படிப் பேசினாலும் பொருட்படுத்த மாட்டார்கள். ஆனால் சொந்த ஊரில் என்றால் அப்படி இல்லை. ஊரில் சுற்றிலும் சொந்தக்காரர்கள் இருப்பார்கள். தொழிலைச் செய்கிறபோதுகூட, கவுரவம் பார்ப்பார்கள். அதையெல்லாம் பார்த்துத்தான் இன்றைக்கு ஆமதாபாத் போன்ற இடங்களில் குடியேறியவர்கள் 4 இலட்சம் பேர் இருக்கிறார்கள். அதுபோல் தென்னார்க்காடு மாவட்டம், பாண்டிச்சேரி போன்ற இடங்களிலிருந்து அங்கே போய் குடியேறியவர்கள் இலட்சக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்கள் போன பிறகு, அதாவது கைத்தறித் தொழிலாளர்கள் போன பிறகு, அவர்

களைப் பின்பற்றி விவசாயிகளும், அன்றாடக் கூலி வேலை செய்பவர்களும் ஆமதாபாத் போயிருக்கிறார்கள். அதுபோல் இங்குள்ள தமிழர்கள் பம்பாயில் இலட்சக்கணக்கில் இருக்கிறார்கள். சேலத்திலிருந்து நிறைய பேர் பம்பாய் போயிருக்கிறார்கள். அங்கே போய் குருவி ஜோஸ்யம் போன்றவற்றைச் சொல்கிற நிறைய தமிழர்கள் இருக்கிறார்கள். அதுபோல் வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து செல்பவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் பெரும்பாலும் பெங்களூருக்கு, கர்நாடகாவுக்குச் சென்று அங்கே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. சோ. ஆறுமுகம்:** சேலத்திலிருந்து தமிழர்கள் பம்பாய் போய் அங்கே குருவி ஜோஸ்யம் பார்ப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். இப்படி சேலத்திலிருந்து தமிழர்கள் பம்பாய்க்குப் போய் குருவி ஜோஸ்யம் பார்ப்பதாகச் சொல்வது சரியில்லை.

**திரு. சி. இராமலிங்கம்:** நான் சேலத்தை மட்டும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாக இங்கிருந்து பம்பாய்க்குப் போகிற தமிழர்கள் பல பேர் பிளாட்பாரத்தில் படுத்துத் தூங்குகிறார்கள். மூட்டை தூக்குகிறார்கள். குருவி ஜோஸ்யம் பார்க்கிறார்கள். இப்படி தமிழர்கள் பொதுவாக அங்கெல்லாம் போய் தொழிலாளர்களாக இருக்கிறார்கள் என்று சுட்டிக் காட்டினேனே தவிர, சேலத்தை குறிப்பிட்டுச் சொல்லவில்லை. வறட்சிக்குப் பிறகுதான் இப்படி ஓரிடத்தை விட்டு இன்னொரு இடத்திற்குக் குடியேறுகிற நிலைமை இருக்கிறது என்பதல்ல. வறட்சி ஏற்படுவதற்கு முன்பு கூட, இம்மாதிரி நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் இதை நான் குறிப்பிடுகிறேன். பம்பாய் மட்டுமல்ல, சுமேகாவில் குடியேறியிருக்கிறார்கள். குஜராத், ஷோலாப்பூர், சூரத் போன்ற இடங்களில் எல்லாம் விசைத் தறி வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் எல்லாம் தமிழ் நாட்டிலேயிருந்து போனவர்கள்தான். ஆந்திராவிலிருந்து போனவர்களும் அங்கு இம்மாதிரி இருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** விஷயத்திற்கு வர வேண்டும்.

**திரு. சி. இராமலிங்கம்:** பஞ்சம் வந்ததற்குப் பிறகு தான் இங்கேயிருந்து அங்கே எல்லாம் ஓடுகிறார்கள் என்று இங்கே சொன்னதற்கு மறுப்பாக மட்டும் தான் இதைச் சுட்டிக்காட்டவில்லை. இது இன்றைக்கு மட்டும்தான் நடை...





...பெறுகிறது என்பதில்லை. 1950 ஆம் ஆண்டே ஆமதாபாத், பம்பாய் போன்ற இடங்களில் தமிழர்கள் போய் குடியேறியிருக்கிறார்கள். வட ஆற்காடிலிருந்து சென்று குடியேறிய தமிழர்கள் இன்றைக்கு ஏராளமான பேர் பத்ராவில் வாழ்கிறார்கள். அங்கு 4 கவுன்சிலர்கள், தமிழர்கள் வரக்கூடிய அளவுக்கு இருக்கிறார்கள். அந்த வகையில் பொதுவாகவே தென்னாற்காடு மாவட்டத்திலுள்ளவர்கள் பெங்களூரிலும் சேலத்திலுள்ளவர்கள் பம்பாயிலும் பெரும்பாலும் குடியேறுகிறார்கள். அதுபோல் திருச்சி, தென்னாற்காடு போன்ற மாவட்டங்களிலிருந்து ஆமதாபாத், பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களுக்குச் சென்று குடியேறியிருக்கிறார்கள். வறட்சியின் காரணமாக, வேலையில்லாமல், பஞ்சத்தின் காரணமாக இப்போது மட்டும்தான் மக்கள் வேறு மாநிலங்களை நோக்கி ஓடுகிறார்கள் என்கிற வாதம் தவறு. அவரவர்களுடைய உறவினர்கள் அங்கங்கே பல ஆண்டுகளுக்கு முன்னாலிருந்தே வாழ்கிறார்கள். அந்த வகையில் உறவினர்களைத் தேடி அவர்களுடைய இடங்களுக்குச் செல்கிறார்கள். குடியிருக்க வீடில்லை. குடிசை இருந்தாலும் கூரையில்லை. கூரை இருந்தாலும் பனை ஓலையால் வேயப்பட்ட குடிசையில் வாழ்கிறான் ஏழை. அந்த ஏழை வேலை செய்யும் எஜமானர் வீட்டிலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்ல விட மாட்டார்கள். ஏழைகளைக் காப்பாற்றியிருக்க வேண்டிய அரசாங்கம் 37 வருடங்களாக இருந்தும், இதுவரை அவர்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளைச் செய்து தரவில்லை. குடியிருக்க வீடில்லை, குடிக்க தண்ணீரில்லை, வாழ வழியில்லை என்கிற நிலைமையில் அவர்கள் ஓரிடத்தை விட்டு இன்னொரு இடத்திற்குச் செல்லாமல் இருக்கும் வகையில் மத்திய அரசின் நிர்வாகம் நடவடிக்கை எடுத்ததா?

இன்றைக்கு பைப்பாய் பைப்பாயாக ரெயிலில் தண்ணீர் வருகிறது என்று சொல்கிறார்கள். தேர்தலுக்கு முன்பே டெல்லிக்குச் சென்று கர்நாடகாவிலிருந்து தண்ணீர் வேண்டுமென்று கேட்டார்கள். அப்போது ஒரு கருத்தைச் சொன்ன அதே பிரதமர்தான் இப்போதும் ஒரு கருத்தைச் சொல்கிறார். இப்போது என்ன சொல்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும். "இது கர்நாடக மாநில அரசு செய்ய வேண்டியது, மத்திய அரசு தலையிடாது" என்று இப்போது சொல்கிறார். அதுபோல் கேரளாவிலிருந்து தண்ணீர் தர அன்றைக்கு இருந்த திரு. நயினார் ஒப்புக்கொண்டார். ஆனால் காங்கிரஸ் ... நிலையில் ஒரு சொட்டு முதலமைச்சர் திரு. கருணாகரன் வந்திருக்கிற தண்ணீர் கூட தரமாட்டேன் என்று சொல்கிறார். இப்படியெல்லாம் காங்கிரஸ் ... ஒப்புக்கொண்டதை இன்று மறுப்பது சரிதானா? இப்போது ... தண்ணீரைக் கொண்டு வந்தது தொடர்ப்பாது யாரை ஏமாற்ற? இன்னும் ... இருக்கிற தண்ணீரில் ... தொடர்ந்து ... விட்டாலே ...

[1983 ஏப்ரல் 11

போதுமே, தமிழ் நாடு வெள்ளக்காடாக மாற. அந்த பாலக்காட்டில் அணைக்கட்டிலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் திறந்துவிட்டாலே போதுமே கோயம்புத்தூர் வெள்ளக்காடாக மாறி விடும்.

(முற்பகல் 10-10)

இது என்ன ஷோ காண்பிக்கப்படுகிறதா? இதன் அடிப்படை என்ன? நாங்கள் நாட்டை விட்டு ஓடுகிறோம். கைத்தறி நெசவாளர்களுக்கு இங்கே வேலை இல்லாத காரணத்தால், நாங்கள் ஓடி வந்தோம். சுதந்திரம் வந்த பிறகு திருவண்ணாமலையில் இருக்கிற நெசவாளர்கள், அங்கே மில் வந்துவிட்டதால் சேலத்தை நோக்கி குடியேறினோம். அங்கே உள்ள நெசவாளர்களைச் சந்தித்து "உங்கள் சொந்த ஊர் எது?" என்று கேட்டால், திருவண்ணாமலைப் பக்கம் என்பார்கள். அங்கே இருப்பவர்கள் பல்வேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள். நாங்கள் வடாற்காடு மாவட்டத்தில் உள்ள மணலூர்பேட்டை பகுதியிலிருந்து அங்கே வேலையில்லாததன் காரணமாக ஓடி வந்தோம் என்று சொல்வார்கள். இந்த நாட்டிலே மற்றவர்கள் உழைத்து உழைக்க வாழக்கூடிய வழி இல்லாமல் செய்தது இந்த மத்திய அரசுதான் என்று மத்திய அரசைக் குற்றம் சாட்டுகிறேன். செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யவில்லை. கண்துடைப்புக்கு. கேட்கும்போது ஏதாவது செய்வதுபோல், இப்போது வறட்சிக் காலத்தில் தண்ணீர் ரயிலில் கொண்டு வருவதுபோல், அரிசிப் பஞ்சத்துக்கு திடீரென 5,000 டன் அரிசி தருவதுபோல், அடிப்படைக் கொள்கை இல்லாமல் இருக்கிற நிலைமை இருக்கிறது. சுதந்திரம் வந்த பிறகு வேலையில்லாமல் அலைகிற கூட்டங்களில் நானும் ஒருவன். சுதந்திரத்திற்கு முன்பு ராஜாக்களைப் போல நாங்கள் வாழ்ந்து வந்தோம். அந்த அளவுக்கு கைத்தறி நெசவு தலைசிறந்திருந்தது. இப்போது கிட்டத்தட்ட ஐந்து லட்சம் விசைத் தறிகளைக் கொண்டு வந்து, கைத்தறியின் மேல் போட்டிருப்பது அந்த அளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. கைத்தறிகளை இவர்களே எடுத்துக்கொண்டு விசைத்தறிகளைக் கொண்டு வந்துவிட்டார்கள். இதனால் கைத்தொழில் நசித்துவிட்டது. ஆனால் விசைத்தறிப் பாதுகாப்புக்காக வெல்பேர் போர்டு என்று வைத்திருக்கிறார்கள். இப்போது ரெண்ட்ஹாம் போர்டைப்போல். ஆக இன்றைக்கு தனக்கே தெரியாத வருமானம் மாதம் ரூ. 5,000-க்கு மேல் வரக்கூடியவர்களுக்கு, நாங்கள் வாழ வழி தெரியாமல் இருப்பது தெரியவில்லை. மத்திய அரசைக் கேட்டால், பெரிய காயம் ஏற்பட்டு கை, கால் போனால்கூட, டிஞ்சர் தடவுவதைப்போல், [illegible] செய்கிறார்கள்.



1983 ஏப்ரல் 11] [திரு. சி. இராமலிங்கம்]

இப்போது அரிசிப் பஞ்சத்துக்கு 5,000 டன் அரிசி கொடுக்கிறார்களே அதைப்போல். இந்தக் கொள்கையால் நெசவாளர்கள் அவதிப்படுகிறார்கள் என்று சொன்னால், அதைக் கொடுத்தது இந்த அரசு. அப்படி விசைத்தறியைப் புகுத்தியிருக்கிறது. இன்றைக்கு இந்த செக்ரட்டரி போட்டிருப்பது உதாரணத்துக்குச் சொல்ல வேண்டுமானால், விசைத்தறியில நெய்த சட்டை கைத்தறியில் நெய்யக்கூடியதை இன்று விசைத்தறியில் நெய்கிறார்கள். அந்த அளவுக்கு நான்கைந்து நாட்கள் நெய்யக்கூடிய துணியை இன்று விசைத் தறியில் நெய்கிறார்கள். அதைப்பற்றி நான் அந்த அம்மையாரிடம் மனு கொடுத்தபோது, அதை 'படாலாபிஹை' என்றார்கள். ஒரு பிரதம மந்திரி பேசக்கூடிய பேச்சா அது? அவர்களை நான் பார்த்துவிட்டு வந்த பிறகு, அந்த விசைத்தறிகளைக் காப்பாற்ற விசைத்தறிக்கு வெல்பேர் போர்டு என்று வைத்திருக்கிறார்கள். அந்த போர்டு அமைத்த பிறகுதான், இன்றைக்கு வங்காளத்தைச் சேர்ந்த திரு. பிரணாப் முகர்ஜி, நிதியமைச்சராக இருக்கிறாரே அவர், குஜராத்திலிருந்து ராஜ்ய சபைக்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறார். அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து, மாநிலத்தை விட்டு மாநிலம் போய் ராஜ்ய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அந்த நிலை இருக்கிறது. எங்களுடைய கைத்தறியை அழித்து விசைத்தறியைக் கொண்டு வந்திருக்கிறார்கள். கைத்தறியைப் பாதுகாக்க மத்திய அரசு தவறிவிட்டது என்று பகிரங்கமாக, ஆழ்ந்த குற்றச்சாட்டை தைரியமாகக் கூறிக் கொள்கிறேன். இன்றைக்கு, "மத்திய அரசே, எங்கள் கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்யுங்கள்" என்று கேட்டோம். இருபது அம்சத் திட்டம் என்று பிரதமர் இந்திரா காந்தி கொண்டு வந்தார்கள். அந்த நேரத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் கட்சி ஆரம்பித்திருக்கிறார். அன்றைக்கு இங்கே இருந்த அரசும், மற்ற மாநிலங்களில் இருந்த அரசுகளும் அவருடைய இருபது அம்சத் திட்டத்தை ஆதரிக்கவில்லை. முதன்முதலாக ஆதரித்தவர் புரட்சித் தலைவர்தான். அறிக்கையே விட்டார். அதன் பிறகு பிரதமரின் மகன் திரு. சஞ்சய் காந்தி ஒரு ஐந்து அம்சத் திட்டத்தைக் கொண்டு வந்தபோது, இந்திரா காந்தியின் மகனாக இருந்தால் என்ன என்று கேட்டு அந்த ஐந்து அம்சத்தை ஆதரிக்காமல், பிரதமர் கொண்டுவந்த இருபது அம்சத் திட்டத்தை ஆதரித்தார்.

(மணியடிக்கப்பட்டது)

அந்த இருபது அம்சத் திட்டத்தில் இருக்கக்கூடிய கிராமத் தொழில் வளர்ச்சி என்ற அடிப்படையில் நெசவாளர் தொழில் வருகிறது. நெசவாளர்களாகிய எங்களுக்கு ஏற்பட்டுள்ள அல்லல்களை அவர்களிடத்தில் எடுத்துக்

காட்டியுள்ளோம். சமயத்தில் அவர்கள் சென்னைக்கு வந்தபோதுகூட மனு கொடுத்தோம். "தமிழகத்தில் வறட்சி இருக்கிறது, துணிகள் தேக்கமடைந்திருக்கின்றன, நெசவாளத் தொழிலாளர்கள் வேலையற்று அலைகிறார்கள்," என்று சொன்னோம். அதற்கு எந்தவிதத் தகவலும் இதுவரையில் இல்லை. சுதந்திரம் வந்த பிறகு, காங்கிரஸ் அரசாங்கம் வருவதற்கு முன்பு, நாங்கள் அண்டையிலுள்ள நாடுகளான பர்மா, சிலோன், சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்தோம். மணிலா, மாலத்தீவு போன்ற நாடுகளில் எங்கள் துணிகளைத்தான் கட்டுவார்கள். பழவேற்காட்டில் இருந்து போகிற துணிகள் பழையகாட் துணிகள் என்று போடப்பட்டிருக்கும். அதற்கு அங்கே மதிப்பு இருந்தது. அதன் காரணமாக இன்றைக்கும் கைத்தறி விற்பனைக் கூடம் ஆரம்பித்தால், முருகன் துணிகள் என்றும் பழையகாட் கைத்தறித் துணிகள் என்றும் மெட்ராஸ் பழையகாட் கைத்தறித் துணிகள் என்றும் போடுகிறார்கள். உற்பத்தி குறையும்போது உடனே தருகிறார்கள். ஆனால் ஒரு பக்கம் விசைத்தறிப் போட்டி, ஒரு பக்கம் மில் முதலாளிகள் போட்டி என்று இருப்பதால், உற்பத்தியாகும துணிகளை "அரசே எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்கிறோம். வேலை கொடுங்கள், கூலி கொடுங்கள் என்று சொல்லி, தொழிலாளர் நலக் கொள்கைக் குறிப்பில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலக் கொள்கை விவாதத்தில் நான் கலந்து கொண்டு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தொழிலாளர் நலன் குறித்து எடுக்கப்பட்டு வருகிற ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை நாங்கள் முழு மனதுடன் வரவேற்கிற நேரத்தில் அவர்களுக்குச் செய்யப்படவேண்டிய சில பணிகளை இங்கே குறிப்பிட வேண்டியது எனது கடமை என்று கருதுகிறேன். தொழிலாளர்களுடைய முன்னேற்றத்திற்காகவும் தொழிலாளர்களுடைய நல்வாழ்விற்காகவும் அரசு ஆற்றி வரும் பல்வேறு முற்போக்குத் திட்டங்களுக்காகவும் அளித்து வரும் பாதுகாப்பு விதிகளுக்காகவும் நாங்கள் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிற அதே நேரத்தில் அரசு கவனிக்கவேண்டிய சில பிரிவுகளையும் இந்த சமயத்தில் குறிப்பிட விரும்புகிறேன். முக்கியமாக இப்போதெல்லாம் எல்லோரும் கவலைப்படுகிற ஒரு கருத்து 'அன் ஆர்கனைஸ்டு லேபர்' என்று முறைப்படியான அமைப்புக்களின் மூலம் வராதவர்களுக்கு நாம் என்ன பாதுகாப்பைக் கொடுக்கிறோம், கொடுக்கப் போகிறோம், அவர்களுடைய நல்வாழ்வுக்காக நாம் என்ன செய்யப்போகிறோம் என்பது. காரணம் இன்று தமிழகத்தில் இருக்கிற





தொழிலாளர்களில் முறைப்படியான அமைப்புக்களின் மூலமாக வராதவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கிறது என்பதையும், அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக நாம் விரைவாகச் செயல்பட்டு பல முற்போக்குத் திட்டங்களை நாம் எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த முறைப்படியான அமைப்புக்களின் மூலமாக வராதவர்கள் என்று சொல்கிறபோது, நான் மிகவும் விரிவாகச் சொல்லவேண்டியதில்லை என்று கருதுகிறேன். நான் நேற்று ஒரு வர்ணத் தொழிலாளர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்களுக்கென்று எந்தவித சங்கமும் கிடையாது. லேபர் யூனியன் என்ற தொழிலாளர் சங்கத்தின் பாதுகாப்பு கிடையாது. ஆகவே எந்தப் பாதுகாப்பும் இல்லாமல், குறைந்த பட்ச ஊதியமும் இல்லாமல் ஓவியர்கள், வர்ணத் தொழிலாளர்கள் இருக்கிற நிலைமையை நேற்றுத்தான் என் வாழ்க்கையில் முதன்முதலாக நேரடியாக அறிய ஒரு வாய்ப்பு கிடைத்தது. இந்தத் தொழிலாளர்கள் வர்ணத்தின் வெப்பம் காரணமாக உடலெல்லாம் காய்ந்து, உடல் நலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்களுடைய ஆடைகளைக் கழற்றிக் காண்பித்ததை என் கண்ணால் பார்க்க நேர்ந்தது. அப்படி அந்த வர்ணத்தின் வெப்பம் அவர்கள் உடலைத் தாக்கியிருக்கிறது. வர்ணத் தொழிலாளர்கள், ஓவியர்கள் என்று ஆயிரக்கணக்கான பேர் பல்வேறு மூலை முடுக்குகளில் இருக்கிறார்கள் தமிழகத்தில். அவர்களுக்குப் பாதுகாப்பு தருவதற்காக நாம் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதைப்போலவே இன்று நான் முன்பே குறிப்பிட்டதைப் போல தமிழகத்தில் பல்வேறு உணவு விடுதிகள் இருக்கின்றன. அரசு உணவு விடுதிகள், தனியார் உணவு விடுதிகள் இருக்கின்றன. கல்விக் கூடங்களுடன் இணைக்கப்பட்ட அல்லது என்று சொல்லப்படுகிற உணவு விடுதிகள் இருக்கின்றன. கல்வி நிலையங்கள். பள்ளிகள். கல்லூரிகள்,

(முற்பகல் 10-20)

பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றோடு இணைக்கப்பட்டிருக்கிற அரசுத் துறையையும் மற்றும் தனியார் துறையையும் சார்ந்த உணவு விடுதிகளில் பணியாற்றுகிற தொழிலாளர்களுடைய நிலைமையை அறிவதற்காக எங்களுக்குக் கிடைத்த வாய்ப்பைக் கடந்த பல மாதங்களாகப் பயன்படுத்திக் கொண்டு பார்த்தபோது, அவர்களின் நிலைமையைக் குறித்து நாங்கள் உள்ளபடியே வேதனைப்படுகிறோம். தற்போது அத்தகைய தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. அவர்களுடைய நலன்களைப்

பார்க்கும்போது, அத்தகைய சலுகைகளில் பாதி அளவுக்குக்கூட தங்களுக்குக் கிடைக்கவில்லையே என்று வருத்தப்படும்போது, அவர்களின் வருத்தம் நியாயமானதாகவே இருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அரசும் உணர்ந்து அவர்களுக்கும் இத்தகைய சலுகைகளையும் உரிமைகளையும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கெல்லாம் பிராவிடண்டு பண்டு உதவி, படிப்பு உதவி, இறந்தால் ரூ. 10,000 போன்ற சலுகைகளையும் வழங்குவதற்கு அரசு முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேலைநிறுத்தத்தைத் தடை செய்யும் சட்டம் குறித்து ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அது சட்டமாவதற்குரிய தேதி ஏற்கெனவே காலாவதியாகிவிட்டது என்பது உண்மைதான் என்றாலும், அது பொறுக்குக் குழுவின் பரிசீலனையில் இன்னும் இருப்பதால், அதற்கு இன்னும் உயிர் இருக்கிறது என்றுதான் பொருள்படும். இந்த நேரத்தில் நான் ஒரு கருத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். பொதுவாக தொழிலாளர்களானாலும் சரி, ஆசிரியர்களானாலும் சரி, அவர்கள் வேலைநிறுத்தம் அல்லது நேரடி நடவடிக்கை அல்லது போராட்டம் ஆகியவற்றில் ஈடுபடும்போது, அதனுடைய நோக்கம் ஏதோ அரசை அச்சுறுத்துவதோ, ஆட்சியில் இருப்பவர்களைப் பலகீனப்படுத்துவதோ, ஆட்சியில் இருப்பவர்களை ஆட்சியிலிருந்து இறக்குவதோ என்பதல்ல. அரசியல்வாதிகள் நடத்துகிற போராட்டத்திற்கும் தொழிலாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் நடத்துகிற போராட்டத்திற்கும் மிகப் பெரிய வேறுபாடு இருக்கிறது. அரசியலில் ஈடுபட்டுள்ளவர்கள் போராட்டம் நடத்தும்போது, அது ஆட்சியில் இருப்பவர்களைப் பலகீனப்படுத்தி அதன் மூலமாக ஆட்சியில் இருப்பவர்களை ஆட்சி பீடத்திலிருந்து இறக்கி, தாங்கள் அந்த இடத்திற்கு வர வேண்டும் என்று பிரச்சினைகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு போராடுகிறார்கள். அது வேறு விஷயம். ஆனால் தொழிலாளர்களையும் மற்றும் ஆசிரியர்களையும் பொறுத்தவரையில், அவர்கள் போராட்டத்தில் ஈடுபடும்போது, அவர்களெல்லாம் கோரிக்கைகளின் அடிப்படையில்தான் போராடுகிறார்கள். அவர்கள் தங்களை யாருடைய எதிரிகளாகவோ, விரோதிகளாகவோ கருதுவதில்லை. அவர்கள் கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற அடிப்படையில் போராடுகிறார்கள். அப்படி அவர்கள் கோரிக்கை வைத்துப் போராடும்போது, அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு



ஏற்பட்டால்—அவர்கள் தொழிலாளர்களானாலும் சரி, ஆசிரியர்களானாலும் சரி—இரட்டிப்பு மகிழ்ச்சியோடு அரசுக்கும் அமைச்சருக்கும் பாராட்டு தெரிவித்து மாலை போடுகிறார்கள்.

எனவே போராட்டத்தில் இரண்டு வகையான போராட்டங்கள் இருக்கின்றன. ஆகவே, தொழிலாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் போராட்டங்களை மற்ற அரசியல்வாதிகளின் போராட்டங்களோடு சம நிலையில் வைத்து அரசு கருதக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது ஏதோ ஒரு அச்ச உணர்வு காரணமாக அரசு வேலை நிறுத்தத்தைத் தடை செய்வதற்கு சட்டம் கொண்டு வந்திருக்கிறது. ஒரு பக்கத்திலே மத்திய அரசுச் சட்டம். மற்றொரு பக்கத்திலே மாநில அரசுச் சட்டம். மாநில அரசும் மத்திய அரசும் தொழிலாளர்களுடைய நலனில் போட்டிபோட்டுக் கொண்டு செயல்பட்டால், அது வரவேற்கக் கூடியதாக இருக்கும். ஒருமுறை மாண்புமிகு அமைச்சர் அவர்களே "மாநில அரசும் மத்திய அரசும் போட்டி போட்டுக்கொண்டு தொழிலாளர்களின் நலனுக்காகச் சட்டங்களைக் கொண்டு வருகிறோம், இதில் எங்கள் இருவருக்கும் ஒரு ஆரோக்கியமான போட்டியே நடைபெறுகிறது" என்றுகூட குறிப்பிட்டார்கள். அப்படி தொழிலாளர்களுக்கான நலன்களுக்காக என்று போட்டி போட்டுக் கொண்டு சட்டங்களைக் கொண்டு வந்தால், அது பாராட்டக்கூடியதாக இருக்கும். அதற்கு மாநில அரசையும் மத்திய அரசையும் முழு மனதோடு பாராட்டுகிறேன். ஆனால் தொழிலாளர்களுக்கு விரோதமான சட்டங்களைக் கொண்டு வருவதில் போட்டி போட்டுக்கொண்டு செயல்படக்கூடாது என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோளாகும். மத்திய அரசு வேலை நிறுத்தத்தைத் தடை செய்து தொழிலாளர்களுக்கு விரோதமான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அதைப்போலவே மாநில அரசும் வேலை நிறுத்தத்தைத் தடை செய்து தொழிலாளர்களுக்கு விரோதமான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இப்படி இரண்டு அரசுகளும் தொழிலாளர்களை அச்சுறுத்துவதன் மூலமாக நாம் எதிர்பார்க்கிற எந்தப் பலனும் கிடைக்காது என்பதை மட்டும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், எந்தப் பிரிவு தொழிலாளர்களுக்கு விரோதமாக இருக்கிறது என்று சொன்னால் பரவாயில்லை.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1983 ஏப்ரல் 11

பாதுகாப்பதற்கு என்று எந்தவிதமான சட்டமும் கிடையாது. அப்படிப்பட்ட தொழிலாளர்கள் மாநிலம் முழுவதும் பல ஆயிரக்கணக்கில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் வேலைத் தன்மையைப்பற்றிக்கூட இங்கே சொல்ல வேண்டியதில்லை. சமையற் கூடங்களில் அவர்கள் தினந்தோறும் மணிக்கணக்கில் நெருப்போடு பழகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் உழைப்பின் காரணமாகத்தான் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் மற்றும் பணியாற்றும் இதர அலுவலர்கள் உணவு பெறுகிறார்கள். அப்படிப்பட்ட "ஹாஸ்டல் எம்ப்ளாயீஸ்"—விடுதித் தொழிலாளர்கள்—இன்றையதினம் எந்தவிதமான சட்டப் பாதுகாப்பும் இல்லாமல் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு தருவதற்காக விரைவாக நாம் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தாக வேண்டும். அதற்கு முன்பு இடைக்கால ஏற்பாடாக என்னென்ன சலுகைகளைச் செய்ய முடியுமோ அவைகளையும் பற்றிச் சிந்தித்துச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

இங்கே தரப்பட்டிருக்கும் கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 23-ல் சுமார் 11 பணிகளைப் பொறுத்தவரையில், அதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் களின் வேலைகளுக்கான குறைந்தளவு ஊதிய வீதங்களை திர்ணயிக்க அல்லது திருத்தியமைக்க, குறைந்தளவு ஊதிய வீதங்கள் குறித்த ஆலோசனைக் குழுக்களை அமைப்பதுபற்றிய செயற்குறிப்புகள் அரசின் ஆய்வில் உள்ளன என்ற தகவல் தரப்பட்டிருக்கிறது. அத்தகைய முயற்சிகளை நான் வரவேற்பதோடு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் இந்தப் பட்டியலில் சேராத அல்லது பெரும்பல மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டக்கூடிய—இத்தகைய பாதுகாப்பு எல்லைக்குள் வராத—மற்ற தொழிலாளர்களையும் இதன்கீழ் சேர்த்து அப்படிப்பட்ட தொழிலாளர் களுக்கும் ஒரு குறைந்தபட்ச ஊதியத்தை திர்ணயிப்பது குறித்தும், அவர் களுக்குக் குறைந்தபட்ச கூலியைக் கொடுப்பது குறித்தும், ஆலோசனைக் குழுவின் பரிசீலனைக்கு விட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் ஏற்கெனவே குறிப்பிட்ட உணவுவிடுதித் தொழிலாளர்கள், வர்ணத் தொழிலாளர்கள் போன்ற மற்ற தொழிலாளர்கள்—அதாவது இதுவரை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படாத தொழிலாளர்கள்—அல்லது மாண்புமிகு உறுப்பினர் களால் இன்னும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படா... இருக்கிற



1983 ஏப்ரல் 11] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

தொழிலாளர்கள் ஆகியவர்களின் நலன்களையும் கருத்தில் கொண்டு அவர் களுக்கெல்லாம் பாதுகாப்பு தருகிற வகையில் சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்-ஆர்கனைஸ்டு லேபர் என்று சொல்லப்படுகிற முறையான அமைப்பு களின்கீழ் வராத தொழிலாளர்களைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பலமுறை குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சட்டத்தின் மூலமாக பல உரிமைகளைப் பெற்றுக் கொண்டிருக்கும் தொழிலாளர்களைப்பற்றிப் பேசும்போது, சட்டத்தின் மூலமாக எந்த உரிமையையும், சலுகையையும், நலனையும் பெறாத இத்தகைய வாயில்லா ஜீவன்களைக் குறித்தும் அரசு சிந்தித்து அவர்களுக்கு என்னென்ன நன்மைகளைச் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் அரசு செய்யக் கடமைப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்து இப்போது அளிக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பிலும் சொல்லப் பட்டிருக்கிறது. முன்பொருமுறை மேதகு ஆளுநர் அவர்களின் உரையிலேயே கூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே இதைக் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான விரைவு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

வர்ணத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், ஒரு இடைக்கால நிவாரணமாக, அவர்களுக்கு விபத்து ஏற்படும்போது, அரசு அவர்களுக்கு நிதியுதவி அளிக்க முன்வர வேண்டும். அவர்களுக்குக் குடும்ப நலத் திட்டத்தை விஸ்தரித்து பணிக்காலத்தில் அவர்கள் இறந்தால், அவர்களுடைய குடும்பத்திற்கு ரூ. 10,000 நிதியுதவி செய்ய வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன். அதைப் போலவே கல்வி நிலையங்களில் பணியாற்றும் விடுதி ஊழியர்களைப் பொறுத்தவரையில், தற்போது அவர்களுக்கு எந்தவிதமான வேலைப் பாதுகாப்பும் இல்லை. அகவிலைப்படி கிடையாது, ஓய்வூதியம் கிடையாது, பணிக்கொடை கிடையாது. அவர்களுடைய பிள்ளைகளுக்குக் கல்விச் சலுகை கிடையாது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில்—அது என்னுடைய ஊரில் இருப்பதால்—அங்கே 10, 20 ஆண்டுகளாகத் தொடர்ந்து விடுதிப் பணியாளர்களாகப் பணி புரிந்தவர் களுக்குக் கூட பணி நிரந்தரப்படுத்தப்படாத நிலைதான் இருக்கிறது. அவர் களெல்லாம் இன்னும் தற்காலிக ஊழியர்களாகத்தான் கருதப்படுகிறார்கள் என்றால், இந்தக் கொடுமையை எங்கே போய்ச் சொல்வது? அதே பல்கலைக் கழகத்தின் வளாகத்திற்குள் பணியாற்றும் மற்ற ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத அலுவலர்களுக்கும் பல்வேறு சலுகைகளை அரசு தருவதை அவர்கள்

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட கருத்தையொட்டி சுருக்கமாக ஒன்றைச் சொல்லிவிட்டு மற்ற கருத்துக்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இதைச் சொல்ல ஆரம்பித்தால் மற்ற கருத்துக்களைச் சொல்ல விடாமல் மாற்றுத் தலைவர் அவர்கள் நேரம் தராமல் தடுத்து விடுவார்கள் என்ற எச்சரிக்கை காரணமாக இதைப்பற்றி விரிவாக எடுத்துக்கொள்ளாமல் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். தொழிலாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வேலை நிறுத்தம் செய்ய உரிமை வேண்டும் என்பது ஆசையல்ல. காரணங்களைக் காட்டி, சாக்குப்போக்கு சொல்லி வேலைநிறுத்தம் செய்தால்தான் ஆக்கம் வரும், பசி எடுக்கும் என்ற உணர்வு யாருக்கும் கிடையாது. தங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக பல்வேறு ஜனநாயக முயற்சிகளில் ஈடுபட்டு, பல்வேறு முறை பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு, ஜனநாயக நடவடிக்கைகளான ஊர்வலம், மாநாடு, கூட்டம் ஆகியவற்றை நடத்தி, அல்லது மறியல் போன்ற போராட்டங்கள், உண்ணாவிரதம் போன்ற போராட்டங்கள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுத்ததற்குப் பிறகும் இந்த நடவடிக்கைகளால் எந்தவித வெற்றியும் காண முடியவில்லை, நியாயம் கிடைக்கவில்லை, நீதி கிடைக்கவில்லை என்ற முடிவுக்கு வந்து வேலை நிறுத்தம் செய்வதைத் தவிர, வேறு வழியே இல்லை என்ற முடிவிற்கு தொழிலாளர்கள் தள்ளப்படும்போது கடைசி ஆயுதமாக வேலை நிறுத்தம் செய்வது என்ற கொள்கையை எடுக்கும்போது, அது தவறு என்று சொல்லக்கூடாது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது பிரச்சினை அதுவல்ல. எஜுகேஷனல் இன்ஸ்டிடியூஷன்ஸ், ஆஸ்பத்திரிகள் ஆகியவற்றில் உள்ளவர்களுக்கு இந்த உரிமை இருக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் வலியுறுத்துகிறாரா? அப்படியென்றால், ஆப்பரேஷன் நடந்து கொண்டிருக்கும்போது, வைத்தியம் செய்து கொண்டிருக்கும்போது, திடீரென்று வேலை நிறுத்தம் செய்தால், பக்களுக்கு என்ன வாகும்? பள்ளிக்குப் போக வேண்டிய சிறார்களுடைய படிப்பு, ஆசிரியர்களுடைய நடைமுறைகள் இவைகள் எல்லாம் நாட்டிற்கு எவ்வளவு பெரிய நன்மை, தீமையைச் செய்யும் என்பதை எல்லாம் விளக்கிச் சொன்னால், நன்றாக இருக்கும். இந்த அரசின் கொள்கை, மத்திய அரசின் கொள்கை என்ன என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். இது இந்த மேலவையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இதைப்பற்றி விரிவாகப் பேசினால், இதைப்பற்றி தமிழக அரசினுடைய கொள்கையை வெளிவாகச் சொல்லுவதற்குப் பின்னாலே வாய்ப்பு ஏற்படும்.





**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் Hospitals and other Educational Institutions Bill பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசு அறிமுகப்படுத்தியிருக்கிற இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில், வேலை நிறுத்தத்தைத் தடை செய்வது மட்டுமல்லாமல், இன்னும் பல்வேறு அடிப்படை ஜனநாயக உரிமைகள் அதிலே பறிக்கப்படுகின்றன. குறிப்பிட்ட வேலை நிறுத்தத்தை மட்டும் பறிக்கிறது என்று எடுத்துக்கொண் டால், வேறு வழியிலே விமர்சனம் செய்யலாம். அப்படி இல்லாமல் வேறு சில ஜனநாயக உரிமைகளையும் பறிக்கிற வகையிலே செயல்படுத்த வாய்ப்புகள் அதிலே இருக்கின்றன. காரணம் ஒரு சட்டத்தைப் பயன்படுத்தும்போது, எந்த வகையிலே பயன்படுத்தப்படுகிறது என்பது குறித்து ஏற்படுகிற அச்சங்களை . . . .

**திரு. க. இராமமூர்த்தி:** Son on a point of order. அந்தச் சட்டம் நிறைவேறவில்லை. சட்டம் நிறைவேறாதபோது அதைப்பற்றிப் பேசிக் [illegible] எப்படி சரியாக இருக்கும்? It must be passed. பெண்டிங் [illegible] இருக்கும்போது அதைப்பற்றிப் பேசுவது எப்படி சரியாக இருக்கும்? We do not know what and how they are going to pass the Bill.

**திரு. எஸ். முத்து:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த [illegible] நெடுங்காலமாக ஆசிரியர்களைப் பற்றிப் பேசிக்கொண் [illegible] ஆசிரியப் பிரதிநிதிகள் கொஞ்சம் மாறி தொழிலாளர்கள் பக்கம் வந்திருக்கிறபோது, அதை வரவேற்று அவர்களுடைய கருத்தைத் கேட்பது நல்லது. நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆசிரியர்களைப்பற்றி மட்டும் பேசிய திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் தொழிலாளர்கள்பற்றிப் பேசுகிறார்கள். அவரை வரவேற்று அவரும் இதிலே கலந்துகொள்ள வாய்ப்பு கொடுக்க வேண்டும். அவரைப் பேச விட வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

**திரு. வ. நல்லசிவன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு சட்டம் வந்த [illegible]. அதைப்பற்றிப் பேச வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அப்படியொரு சட்டம் வருவதற்கு முன்பாகவே அதனால் எப்படி பாதிப்பு ஏற்படும் என்று சொல்வது அது வராமல் தடுப்பதற்கு உதவியாக இருக்கும் என்பதால் இப்போதே பேசுவது நல்லது என்று நினைக்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாற்றுத் தலைவர் அவர்களே, அது இங்கே வர வில்லை. நாடாளுமன்றத்திலே வந்திருக்கிற பில். அந்த பில் எப்படி நிறைவேறப் போகிறது என்பது நமக்குத் தெரியாது. மாண்புமிகு உறுப்பினர்கள்

விரும்புவதுபோல திருத்தங்கள் வரலாம். என்ன நடக்கப் போகிறது என்பது தெரியவில்லை. குழந்தை பிறக்கும் முன்பே பெயர் வைக்க முடியுமா என்ன?

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினருக்கு இன்னும் 3 நிமிடங்கள்தான் இருக்கின்றன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, ஒருகால் மாநில அரசின் சட்டங்களைக் கடுமையான முறையில் விமர்சனம் செய்திருந்தால், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் மகிழ்ச்சி அடைந்திருக்கலாம்.

Thiru K. RAMAMOORTHY: Sir, he is attributing motives. The hon. Member is not in a position to answer me. He is circumventing by attributing motives. It is unfail. I do not think it is labour tacties; may be it is a teacher's tacties.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இந்தச் சட்டத்திலே எது எது பாதகமாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே கேட்டார்கள். இல்லாவிட்டால் இந்த விவாதத்திற்குள்ளே நான் போயிருக்கமாட்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்தண்ணன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், பல தரப்பட்ட பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவது வழக்கம். அந்த வகையிலே இதையும் பேசிக்கொண்டிருக்கிறேன். அதற்கு ஆதரவு தெரிவித்ததற்காக நான் அவருக்கு மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்ட மாதிரி அந்தச் சட்டம் நிறைவேறவில்லை என்பதால், சட்ட முன்வடிவு என்று திருத்திக்கொள்கிறேன். அந்தச் சட்ட முன்வடிவைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு அடுத்த கருத்துக்குச் செல்ல விரும்புகிறேன். அதைப் பொறுத்தவரையில், சில அடிப்படை உரிமைகளை பாதிக்கக்கூடியதாக இருக்கிறது என்பதை மட்டும் சுருக்கமாகச் சொல்லிக்கொள்ளுகிறேன். பொதுவாக தொழிலாளர்களுடைய நன்மைக்காக பல நல்ல காரியங்களைச் செய்து வருகிற இந்த அரசு, பல சலுகைகளை அளித்து வருகிற இந்த அரசு, இதுபோன்ற தொழிலாளர்களுடைய உணர்வுகளைப் பாதிக்கின்ற வகையிலே



சட்டங்களைக் கொண்டுவருவதன் மூலமாக தொழிலாளர்களிடையே கசப்புணர்வைக் கொண்டு வருகிறது. தொழிலாளர்கள் வெளிப்படுத்துகிற உணர்வை ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில், அவர்களுடைய சங்கடங்களை நீக்குகிற வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமானால், உண்மையிலேயே அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். அந்த வகையிலே அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறேன்.

தொழில் பயிற்சி பற்றி கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழகம் தொழிற் பயிற்சியில் பெரும் பங்கு வகிக்கிறது. தொழிற் பயிற்சி நிலையங்களில் ஏற்பட்டுள்ள சாதனைகளுக்காக பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதே சமயத்தில் தொழிற் பயிற்சி நிலையங்கள் மேலும் சிறப்பாக நடைபெற சில ஆலோசனைகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும் கன்னியாகுமரி மாவட்டத்திலே, தருமபுரி மாவட்டத்திலே நிறுவ வேண்டும். கோவை மாவட்டத்திலே தொழில் வளர்ச்சி அதிகமாக உள்ள கோவை, திருப்பூர், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி ஆகிய நகரங்களில் மேலும் புதிய நிலையங்களை அமைப்பதன் மூலமாக ஏற்கெனவே உள்ள தொழில் வளர்ச்சியைப் பயன்படுத்தி சிறப்பான பயிற்சியை நாம் கொடுக்க முடியும். ஆகவே அதைக்குறித்து அரசு பரிசீலிக்க வேண்டும்.

(முற்பகல் 10-40)

இன்னொன்று தனியார் துறைக்கு தொழிற் பிரிவு பயிற்சி நிலையங்கள் தொடங்க அனுமதி அளிக்கப்படுகிறது என்பதை நான் ஆதரிக்கவில்லை. காரணம் இப்படி கொடுக்கின்ற சலுகைகளை பெரும்பாலும் பயன்படுத்துகின்றவர்கள் மதச் சார்பு நிறுவனத்தினர்கள்தான். அந்தச் சலுகைகளை அவர்கள் அதிகமாகப் பயன்படுத்தி, அப்படிப்பட்ட தொழிற் பயிற்சி நிறுவனங்களைத் தொடங்குகிறார்கள். மற்றவர்கள் அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஆகவே மதச் சார்பு நிறுவனங்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளும்போது, அந்தக் குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன என்பது மட்டுமல்ல, அந்தப் பயிற்சி நிறுவனங்களிலே ஒரு அட்மிஷனுக்குக் குறைந்தது ஆயிரம் ரூபாய் வாங்குகின்ற நிலைமை இருக்கின்றது. இது பழைய நிலைமை. இது பழைய தொகை. அது மட்டுமல்ல, வேறு சில முறைகேடுகளும் தனியார் நிறுவனங்கள் நடத்துகின்ற அந்தத் தொழிற் பயிற்சி நிலையங்களில் இருக்கின்றன. ஆகவே தனியாருக்கு அனுமதி கொடுத்து, இப்படி தொழிற் பயிற்சி நிலையங்களை

**திரு. சி. நா. லெட்சுமிகாந்தன் :** நான் சட்டத்தைப்பற்றி விரிவாகப் பேச ஆரம்பித்தால் நேரம் இருக்காது என்பதால், சுருக்கமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். எங்களுடைய கருத்தை விரிவாக நாங்கள் ஏற்கெனவே மனுக்கள் மூலமாக அரசுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறோம்.

**திரு. க. இராமமூர்த்தி:** இரண்டு அரசுகளும் கொண்டு வந்திருக்கிற வேலை நிறுத்தத் தடைச் சட்டத்தைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதால், அதில் எந்தப் பிரிவு தொழிலாளர்களுக்கு விரோதமாக இருக்கிறது என்று தெரிவித்தால், நன்றாக இருக்கும். நாமகூட அந்த வகையில் சிபாரிசு செய்யவும் உதவியாக இருக்கும். முடிந்தால் அந்தச் சட்டத்தையேகூட நீக்குவதற்கும் சௌகர்யமாக இருக்கும். எனவே அந்தச் சட்டத்தின் எந்தப் பிரிவு தொழிலாளர்களுக்கு எப்படி விரோதமாக இருக்கிறது என்று விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சி. நா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கேட்பதால், ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசு "ஹாஸ்பிட்டல் அண்டு அதர் இன்ஸ்டிடியூஷன்ஸ் பில்" என்ற மருத்துவ நிலையங்கள் மற்ற இதர நிலையங்கள் சட்ட முன்வடிவு ஒன்றை அறிமுகப்படுத்தி அது மக்களவையில் நிறைவேற்றப்பட்டு, தற்போது மாநிலங்கள் அவையில் விவாதிக்கப்பட இருக்கிறது.

Thiru K. RAMAMOORTHY: I am specific in my clarification. Whether it could be passed without any amendments is another thing. It may be amended or may not be amended. It may be accepted or may not be accepted. That is another thing. But we cannot comment on a Bill which is pending before a House.

வேலை நிறுத்தத் தடைச் சட்டத்தின் எந்தப் பிரிவு தொழிலாளர்களுக்கு விரோதமாக இருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30).

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இன்னும் பேசவில்லையாதலால், மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசும்போது குறிப்பெடுத்துக்கொண்டு, பிறகு தான் பேசும்போது அதற்குப் பதில் சொல்லலாம்.





**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள், மருத்துவமனைகளில் வேலை நிறுத்தம் செய்யும் உரிமையைத் தர வேண்டும் என்று சொல்லுகிறார்களா? ஆஸ்பிட்டல்ஸ், எஜுகேஷனல் இன்ஸ்டிடியூஷன்ஸ், அண்டு ரிசேர்ச் செண்டர்ஸ் ஆகிய மூன்று இடங்களில் கட்டாயம் வேலை நிறுத்தம் செய்யும் உரிமை இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்களா? சோஷலிச நாடுகளில் இதுபோன்று வேலை நிறுத்தம் செய்யும் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதைப் பற்றியும் விளக்கம் சொன்னால், நான் பதில் சொல்லுவதற்கு உதவியாக இருக்கும். பள்ளிக்கூட மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மருத்துவ மனையில் உள்ள எல்லாத் தொழிலாளர்களுக்கும் வேலை நிறுத்த உரிமை வேண்டும், மற்ற நெகோசியேஷன், கன்சிலியேஷன், ஆர்பிட்ரேஷன் போன்ற வசதிகளை உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டியதில்லை என்று கருதுகிறாரா என்பதைப்பற்றித் தெளிவாகச் சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் அவருடைய கருத்தை, அவர் பேசும்போது சொல்லலாம். எவ்வளவு நேரம் பேசினாலும் நான் பொறுமையாகக் கேட்கிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன காரணத்தாலே, நான் ஒன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கின்ற அ.தி.மு.க.வினர் கடந்த 9 ஆம் தேதி தொழிலாளர் பேரணியை நடத்தினார்கள். மத்திய சர்க்கார் தொழிலாளர்களுடைய உரிமையைப் பறிக்கிறது என்று கோஷம் எழுப்பியதாக செய்தியைப் பார்த்தேன். ஆகவே எந்த அடிப்படையிலே மத்திய சர்க்காரை எதிர்த்தார்கள்? தொழிலாளர்களுக்கு விரோதமாக மத்திய சர்க்கார் எந்த வகையிலே ஈடுபட்டிருக்கிறது என்பதை அறிந்து போரணியை நடத்தினார்கள் என்பதைச் சொன்னால், நாங்கள் தெரிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** எனக்குத் தெரிந்தவரையில், அங்கே அவர்கள் கேட்டது மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்திருக்கிற சட்டத் திருத்தங்களை விரைவிலே கொண்டுவர வேண்டும் என்பது ஒன்று. இரண்டாவது, தமிழக சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிற சட்டத் திருத்தத்திற்கு விரைவிலே ஒப்புதல் தரவேண்டும் என்ற பிரச்சினைகளை அவர்கள் வலியுறுத்தினார்கள் என்பதுதான் எனக்குத் கிடைத்த தகவல்.

ரூ. 450 ஆக நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் சிலர் பணியில் சேர்ந்த உடனேயே பணி வரன்முறைப்படுத்துகின்ற இடைநிலைப் பயிற்சியாளர்களுக்கு ஊதிய விகிதம் ரூ. 475 என்று நிர்ணயிக்கப்படுகிறது. அது ஒரு அனாமலி. ஆகவே பணியில் சேர்ந்த இடைநிலைப் பயிற்சியாளர்களுக்கு தொடக்க ஊதியம் ரூ. 475 ஆகவும் தேர்வு நிலைப் பயிற்சியாளர்களுக்கு தொடக்க ஊதியம் 450 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்படுகிறது. எப்படி இந்த ஊதிய விகிதத்தில் கோளாறு வந்தது என்று தெரியவில்லை. அதுகுறித்தது இந்த குறிப்பிட்ட பயிற்சியாளர்கள் சார்பாக அரசுக்கும் முறையீடுகள் வந்துள்ளன. அதுகுறித்து தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக தமிழகத்திலே வேலை வாய்ப்பு பற்றி சொல்லி முடித்துக் கொள்கிறேன். இங்கே வேலை தேடித்தரும் நிறுவனங்கள் தமிழகத்திலே அமைக்கப்பட்டிருக்கின்றன. 39 வேலை வாய்ப்பு தேடித்தரும் நிறுவனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த 39 நிறுவனங்கள் இப்போது போதுமானதாக இல்லை. ஒவ்வொரு வேலை வாய்ப்பு அலுவலகத்திலும் சென்று பார்த்தால் இது தெரியும். ஒவ்வொரு நாளும் பதிவு செய்ய வருகின்றவர்களுடைய எண்ணிக்கையும், புதுப்பிக்கின்றவர்களுடைய எண்ணிக்கையும், விசாரணைக்கு வருகின்றவர்களுடைய எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது. ஒரு பெருங்கூட்டமாக இருப்பதை ஒரு காட்சியாகப் பார்க்க முடிகிறது. அங்கே எல்லா நேரங்களிலும் அப்படி இருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுடைய எண்ணிக்கை நாளுக்குநாள் மிக அதிகமாக உயர்ந்துகொண்டு வருகின்றது. அந்த எண்ணிக்கைக்கு ஏற்ற வகையில் நாம் வேலை வாய்ப்பு அலுவலகங்களைத் தொடங்கவில்லை. ஆகவே ஒரு வருவாய் வட்டத்திற்கு ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் துவக்க வேண்டியது அவசியம். இப்போது மாவட்டத்திற்கு ஒன்று என்று சொல்கிறோம். ஆனால் ரெவின்யூ தாலுக்காவிற்கு, அதாவது வருவாய் வட்டத்திற்கு ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்க வேண்டும். அப்படிச் செய்தால்தான், இந்தக் குறைகளைத் தீர்க்க முடியும். அதுமட்டுமல்ல. வேலைவாய்ப்பு அலுவலகங்களைப் பொறுத்தவரையில், ஒரு வேலை காலி ஆகும்போது அதற்கு இன்டர்வியு. நேர்முகத் தேர்வுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக உள்ள நார்ம்ஸிலே பல குறைபாடுகள் இருக்கின்றன. அதற்கு ஒரு விவாதம் வைத்தால்கூட, அதுபற்றி விளக்கத் தயாராக இருக்கிறேன். அப்படிப்பட்ட குறைபாடுகள் காரணமாக பணியிடங்கள் காலி ஏற்படும்போது, அதற்கு



வேட்பாளர்களை அனுப்புவதற்கு உள்ள நார்ம்ஸ் சரியாக இல்லை. முன் ஒரு காலத்தில் ரிஜிஸ்ட்ரேஷன் சீனியாரிட்டி அல்லது வயது அடிப்படையிலே யார் மிக அதிக வயது உடையவர்களாக இருக்கின்றார்கள் என்ற வரிசையின்படி வேலைவாய்ப்பு தரப்பட வேண்டுமென்று இருந்தது. அதிலே பிரச்சினை ஏற்படுவதற்கு வழி இல்லை. ஏனென்றால் வயது என்று சொல்லும்போது, அதிலே டிவியேஷன் இருக்க முடியாது. இப்போது அப்படியல்ல. ஏஜ், மெரிட், இன்னும் சீனியாரிட்டி ஆப் ரிஜிஸ்ட்ரேஷன் என்று பல்வேறு கட்டுப்பாடுகளை வைத்து நமக்குச் சாதகமாக எதை நாம் பின்பற்றவேண்டுமோ அதைப் பின்பற்றி வேண்டியவர்களுக்குச் சாதகமாகவும் நியாயமானவர்களுக்கு உரிமைகளைப் பறிக்கின்றபடியும் வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே முறைகள் வரையறை செய்யப்பட்டு, கோளாறுகள் களையப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்கலைக் கழக வேலைவாய்ப்பு தகவல் ஆலோசனைப் பிரிவுகள், யூனிவர்சிட்டி எம்ப்ளாய்மெண்ட் அன்ட் கைடன்ஸ் பீரோ என்று சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள், இந்த மூன்று இடங்களிலும் மூன்று நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் அந்த இடங்களிலே பதிவு செய்யப்படுபவர்களைப் பொறுத்தவரையில், அந்த நிலையங்களுக்கு ஒரு நிறுவனம் எழுதினால், அவர்கள் நேரடியாக ஒரு பட்டியல் அனுப்ப முடியாது. அப்படி ஒரு நியதியை இவர்கள் பின்பற்றி வருகிறார்கள். உதாரணமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே யூனிவர்சிட்டி எம்ப்ளாய்மெண்ட் கைடன்ஸ் பீரோ இருக்கிறது என்றால், அந்த கைடன்ஸ் பீரோவிடம், "எங்களுக்கு 10 வேட்பாளர்கள் அனுப்புங்கள்" என்று சொன்னால், அவர்கள் நேரடியாக அனுப்ப முடியாது. அவர்கள் சென்னையிலே உள்ள அந்த நிறுவனத்திற்கு எழுதி சென்னையிலே இருந்து அந்தப் பட்டியல் வரவேண்டும். அதற்குக் காலதாமதம் ஆகிறது. அது மட்டுமல்ல. அதே சமயத்தில் அந்த நேர்முகத் தேர்வுக்காக குறிக்கப்பெற்று இருக்கின்ற தேதி முடிந்த பிறகுதான், அந்தப் பட்டியலே வருகிறது. அதனால் பல பேர்கள் வேலைவாய்ப்பு இழக்கிறார்கள். ஆகவே சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் நிர்வகிக்கப்படுகின்ற நிலையங்களுக்கு நேரடியாக பட்டியலை அனுப்புகின்ற உரிமையை அரசு தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கொள்கைக் குறிப்பின்மீது சில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக தமிழக அரசு எடுத்து வருகின்ற பல்வேறு ஒத்துழைப்பு நடவடிக்கைக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு, இங்கே

சுட்டிக்காட்டிய குறைபாடுகளைத் தீர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு, சில தொழிலாளர்கள் குறிப்பாக 'அன்-ஆர்கனைஸ்ட் லேபர்' என்று சொல்லக்கூடிய அந்தத் தொழிலாளர்களுக்குச் சலுகைகளைக் கொடுப்பதற்கு சட்டபூர்வமான பாதுகாப்பை அளிப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.

(முற்பகல் 10-50)

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** இன்னும் ஆறு உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலுரை இருக்கிறது. எனவே பேசுகிறவர்கள் சுருக்கமாகப் பேசுவதோடு, குறுக்கீடுகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Thirumathi TARA CHERIAN: Hon. Vice-Chairman. Sir, I thank you for giving me a little time to speak on this Policy Note and also for the warning that you have given to me. One of the points that has not been touched so far by other hon. Members is the exploitation of the youth and I hope to deal at some length with that subject.

Sir, I must congratulate the Hon. the Minister for Labour on the fact that, compared with other States and compared with the figures for our own State relating to previous years the industrial labour relations climate has been very peaceful in 1982. I am talking about the Hon. Minister and I am congratulating him and I hope he is hearing the good words that I am saying about him. Because of a co-operative effort this has been possible. This has been possible because of the co-operation that existed between the Government, the managements and the trade unions. It is also due to the pragmatic approach to problems on the part of the Hon. Minister who is much experienced in the labour movement and who is concerned very much about the welfare of the workers in particular, and about the welfare of society in general.

Sir, several disputes have been solved through arbitration, conciliation and adjudication. Therefore there has not been much necessity for the workers to resort to wild-cat strikes. As I was going through the Policy Note, I was happy to note that our State was much better placed. Day before yesterday, I was stopped near Anna Salai where a procession of people was moving. I could not



read those placards. But, there were a number of constables. Yesterday also, I saw a procession of people holding A.I.A.D.M.K. flags. I do not know what the purpose was. The newspapers which I read did not also give any information about that. Anyhow, comparatively speaking, we have got very few strikes. This is indeed a good sign. I think that this has become possible because of the new approach that the Hon. Minister and the Government take towards industrial disputes. But, Sir, however good and efficient a thing may be, there is always room for improvement. I am sure that the Hon. Minister, being an experienced person, will see to it that all disputes are settled amicably.

Sir, the statistical details regarding strikes, lock-outs, the number of man-days lost, etc. during 1982 show that there has been a definite improvement in the field of industrial labour relations. The revision of minimum wages for farm labour in Tamil Nadu is most welcome because this is an area where both men and women are employed. I hope and pray that agricultural wages are paid according to the work done, irrespective of the fact whether the worker is a man or a woman. Something good has been done for the working journalists. There were some problems in the matter of fixing norms for their wages and in the matter of computation of arrears. All those things have been looked into and I hope something will happen.

Sir, in the matter of fixation of minimum wages for different industrial establishments, eleven new areas have been identified. I hope that in matters like this, the Government will, besides taking the recommendations of the Department, consult the industrialists and also ordinary people like me who are interested in seeing that something good is done for the welfare of the labourers. I hope that the question of conditions of service of workers in the handicrafts and handlooms as well as the powerloom industry is under the consideration of a Committee. I also hope the report of the said Committee will come soon and it will be possible for the Hon. Minister to see that the workers in those industries of whom a lot of them are women get some improvement in their conditions. It is also mentioned in the Policy Note that the minimum wages for the workers in cinema industry and cashew industry have been fixed and the minimum wages in relation to hotel, beedi and other industries have been revised. The constitution of separate wages panels for certain industries is most welcome and I hope that suitable and independent bodies will be constituted so that people may be satisfied with the minimum wages recommended by them.

(Thirumathi Tara Cherian) [1983 ஏப்ரல் 11

I do not want to speak much because there are much experienced Members in the Labour field. I saw in the papers that a Labour Union Leader was injured in an accident some time ago and that he is improving. I know him for many years and I pray and hope that he will soon recover and will continue his work for the welfare of labour as well as society.

On the question of child labour, on which the Labour Minister has in one sentence said that the Government will look into it, I would like to say that out of 52 million working children in the whole world, 38 to 40 million working children are in Indai. According to the Government satistics, the children constitute more than 6 per cent of the working force in our country. The main reason for this amount of large labour force among children is poverty. Poverty alone forces them to go to work. Only better conditions of life assured to the parents along with more earnings will children from work. In 1979 which was the International Year for Children many schemes were chalked out but nothing has materialised. The children are subjected to much hardship and much exploitation. It is not possible to abolish child labour and hence the Government must take up the responsibility for the development of proper personality among such children. I had been to Thirupathur, a Town in North Arcot district, and saw the wonderful work done by the post-graduate students of the Sacred Heart College. They have done constructive work in this field. I hope and pray that the project undertaken at Tiruppathur will become a model not only for our State but for the whole of India. From the Policy Note. I find that the Government are having many concrete proposals for labour welfare projects. I will not go into all the details. But, I would like to say that the poor parents send their children for work only because of their poverty and because of their family circumstances. When they are sent to work, the children are separated from the parents. They lose the parental love and affection. Besides education given in the schools and besides the care taken by the teachers, parental love is very much essential for the proper growth of the children. But these poor children get separated from their parents and go to work, mostly as domestic servants. I hope a time will come when the domestic servants also will have a union so that they may not be made to work all the 24 hours. In the houses in which they work, there is nobody to care for them. They are made to stay in dusty, foul smelling



1983 ஏப்ரல் 11] (Thirumathi Tara Cherian)

(முற்பகல் 11.00)

places. Because of that, their health is affected. Most of these children working as domestic servants suffer from night-blindness and other diseases. A small group of people have made a study into the Condition of these children. The details of the study have been reported in an article in "The Hindu" dated the 25th March 1983, under the caption "Towards a better deal for child labourers". It is a beautiful article prepared by the Vellore staff reporter of the newspaper. He has given all the details in that article. I would like to mention some of the details here. The sample survey made recently by a post-graduate student among 120 respondents has revealed that 18 per cent of these children worked for more than 12 hours a day. 37 per cent of them did not have any weekly holiday, while the rest enjoyed only half a day as weekly holiday. I am sorry and sad to say that nearly 67 per cent of them are given physical punishment when they do not or cannot do the given work 22 per cent of them have only one pair of dress. I saw it for myself when I was there. 53 per cent of them have just two pairs of dress. The survey also revealed that 89 per cent of the children do not have a bath daily. They do not bath because, due to shortage of water, they think that it is not necessary. As regards wages, the survey reveals that 8 per cent of the boys do not get any wage whatsoever. Perhaps, they get a cup of tea or something that is left over. 32 per cent of them get less than a rupee a day. 36 per cent of them get about Rs. 20 a day. Only those who work as porters near railway stations and bus stands are able to earn about Rs.5 a day. Many of these children are also made to work as shoe-shines and hawkers. If big industrialists come to know the plight of these children, they may come forward to do something for these children. We have already given the details of the work done at Tiruppathur to the Hon. Minister and he has also promised to look into it Sir, this is no time to give all the details of what they have done in Tirupathur.But But, I would like to say that a beautiful piece of social work has been done in that small town. I am associated with the Social Welfare Department and I hope I will be for give if I say that the Government should not try to thrust any scheme on the people. It is not only the bure-aucrats who are in the know of all these things. There are many private people who have a long experience in all these things. In Tiruppathur, the N. S. S. volunteers have come forward in a nice way to take part in this project.

The first and foremost duty is to have a survey in the towns about the number of such children. The social workers can be made use of to collect such statistics and furnish the information to

(Thirumathi Tara Cherian) [1983 ஏப்ரல் 11

the Departments concerned. When I asked for such information, I
could not get the information except in Tiruppathur. It is necess-
ary that we should employ all the voluntary agencies for the pur-
pose. While speaking on the Policy Note on Education, the Hon.
the Leader of the Opposition very rightly said that it was not the
people who were in the Education Department and it was not the
teacher alone who could do the work but all the people had got to
participate in the Adult Literacy Programme and each one should
teach another person. Only then it will help the persons who had
not the privilege of going to school and have a little education.
These children are also helped by many international organisations.
The Municipality of the little town Tiruppathur has come forward
to give its help and with the services of the workers' parents and the
people, I am sure it will be able to do the work. I hope the. Hon.
the Labour Minister will, while replying make it clear as to what
programmes he had. Is he going to do it on a compulsory way? The
Government of India have passed a lot of laws which will be there
in the Law books for the benefit of the Advocates and these laws
will never be implemented. It will be suicidal if we put a complete
ban on the employment of children. There is no other go, there is
no other livelihood for such children. Many people who are having
physical handicaps are pushed out of the house and they have no
sustenance. I have a suggestion to make. What has been done at
Tiruppathur should be followed at other places. A lot of money is
given by the Government. The voluntary workers who are willing
to put in their efforts should be utilised. There are voluntary
organisations like the Ramakrishna Home and other missionaries.
They have been doing good work for a long time. Such organisations
could be entrusted with the work. There are some classes of
children whom even the Noon Meal Scheme does not reach. We are
all working in water-tight compartments and there should be a lot
of co-operation among us. I request the Hon. Labour Minister
to see that there is more public participation in what is being done
by the Government.

Recently I saw in the papers and I was rather sad to note that
the quarry workers who had been brought back to Tamil Nadu had
once again gone to the quarries in North India saying that life was
better there. This is after what the Tamil Nadu Government
tried to give them jobs and things, like that. They thought it would
be better for them to go back to their old places of work. They
have to go back now. By going back, perhaps, the employees will
be losing. Why should they go outside the State and make



1983 ஏப்ரல் 11] (Thirumathi Tara Cherian)

the other States flouris, while we ourselves could do something for them? We have done so much for the workers and we have so many workers in our own State. I do not very much relish this report of the quarry-workers leaving our State in search of better life.

*மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) மாண்புமிகு உறுப்பினர் 15 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள் சீக்கிரம் முடிக்க வேண்டும்.*

Thirumathi TARA CHERIAN: Sir, I do not have much time I think your for giving the opportunity. Sir, we are four lady Members here. We always patiently wait for our opportunity to speak. We may not be people with much knowledge and experience. But, I hope that the Business Advisory Committee will find it possible to give us, the lady Members, a little more time because we are mothers and we know the difficulties and, from that point of view, we will be able to give some good suggestions to the Hon. Minister, the Labour Department and other Departments.

Thank you, Sir.

Thiru A. R. DAMODARAN: Hon. Vice-Chairman, Sir, I rise to felicitate the Hon. the Labour Minister on the Note that he has placed on the table of the House.

From the statistics that he has given one cannot but feel a little happy that the number of man-days lost in Tamil Nadu has come down from 41 lakhs to 18.05 lakhs in the year 1982. It would have been more useful also, if the Hon. Minister could have given us the All-India figures for 1981 and 1982 because Members would like to compare how the situation is in Tamil Nadu as compared to that in All-India. I am aware of the fact that the long textile strike in Bombay has caused enormous increase in the man-days lost in India. But, fortunately, in Tamil Nadu the number of industrial disputes has decreased. I was hoping that I would speak after Thiru Nallasivan who would, no doubt, say that something is wrong. I am speaking purely from the point of view of statistics because I do not know in great detail the individual disputes that may exist in various concerns. No one else, the statistics do speak for themselves and I would like to congratulate not only the Hon. the Minister for Labour but also the officials of the Labour Department, the undoubtedly hard work that must have gone in trying to settle many disputes by conciliation rather than referring them to Labour Courts, etc.

[Thiru A. R. Damodaran] [1983 ஏப்ரல் 11

A significant point is that, even out of the 18.05 lakh man-days lost, a good portion of it-though the exact number has not been identified at present in this Note—relates to labour disputes that have occurred in the National Textile Corporation mills, in the Neyveli Lignite Corporation, in the State Transport and in other State organisations. This is something which the Labour Minister should worry himself about because, if the Government are going to set an example to private employers, it is my plea that these disputes should not arise at least in State-owned concerns and should be settled speedily without the workers going to the extreme step of resorting to strikes. Why employees in Public Sector undertakings are going on strike will be explained by the hon. Member Thiru Nallasivan. I feel the Government, as a good and honest employer, must first put its own house in order before venturing to advise private employers as to what they should do in their respective fields.

(முற்பகல் 11-10)

Incidentally, may I request the Hon. the Labour Minister to consider the feeling that has crept in amongst the consumers, the public, the general public of Madras about the terrible dislocation that is caused to life by the innumerable processions that are allowed in Madras City disturbing the normal flow of traffic, the normal flow of life? Even ministerial attendance in the House is being affected by such processions. I believe five Ministers were not allowed to come to the House till 11.20 a.m. the other day. While processions are necessary to reflect whatever degree of feeling is exercised by those sections of the people. I would plead that guide-lines may be issued so that such processions may not block the traffic on the roads, that it should be only five men deep, so that in a metropolitan area like Madras life is not perpetually disturbed. The only other city that can now equal Madras City in so far as disturbance to normal life and traffic is concerned is the City of Calcutta which has its own historical basis for such processions. I hope the Hon. Minister Thiru Raghavanandham will not reduce Madras Metropolitan area to the level at which Calcutta is today, by the disturbances that are caused by such processions.

May I now pass on to another important aspect of labour administration: social security and the various enactments that have been made to protect workers under the Provident Fund Act, the Gratuity Act, and the Family Pension Act? I think the Hon. Minister will



1983 ஏப்ரல் 11] [Thiru A. R. Damodaran]

remember that in 1980 soon after he assumed office for the second time, I raised the question of a particular labourer and I am quoting this example not with the intention of finding fault with the Labour Department but only to show how the very social security measures which are framed by the Government are sometimes used in a fashion which is deleterious to the employee himself. In 1980 I brought to his notice the case of one employee called Venu Udayar of Ulundurpet who died about one and a half years prior to 1980. His widow with five minor children applied for settlement of Provident Fund dues and until I raised the matter in 1980. it was not settled and after I raised the matter, the Hon. the Labour Minister moved and moved swiftly and the Provident Fund dues of that employee were settled. But, till today, till 1983, the widow has not yet got the family pension to which she is entitled. The family pension was Rs. 40 and I was very happy—I think I am correct and I hope the Hon. the Labour Minister will testify to that fact—that he has recently, about four months ago, raised it to Rs. 60 if I am not mistaken. But, even otherwise, till March 1983, this poor widow, whose husband died in service and was earning a salary of Rs. 150, has been driven from pillar to post in trying to obtain the family pension. I mention this one case, because in the administration of the Provident Fund Act, the Hon. Minister has given statistics relating to the number of claims received, the number of claims settled and the number of claims returned for rectification of defects, etc. May I point out that, under the Provident Fund Act, the number of claims returned for rectification of defects is 9,353, out of the total of 59,293 claims received? Similarly, under the Employees Family Pension Scheme, the figure is even larger. Out of the number of claims settled in 1982, amounting to 36,386, the number of claims returned for rectification of defects was 14,405. Under the Employees Deposit-linked Scheme, out of the number of claims settled, numbering 1,994, the number of claims returned for rectification of defects was 1.790. We are all aware that there are two ways of disposing of an application.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

One is to sanction what is due and the other is to return it for rectification of defects. I must confess that there is another method also by which Ministers can delay consideration; and that is to say that the matter is receiving very deep and serious consideration of the Government. Anyhow, in this particular place, I must confess

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1983 எப்ரல் 11

ஆரம்பிப்பதை நிறுத்திவிட்டு அரசுத் துறையிலேயே, மற்ற இடங்களிலே சிறப்பாக நடத்துவதுபோல, வேறு பல இடங்களிலே அதைத் தொடங்கி நடத்த வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.

அப்பிரன்டீஸ் டிரெயினிங் ஆபீசர்ஸ் என்று ஒரு பதவி இருக்கின்றது. இதிலே ஒரு உதவி பயிற்சி அலுவலருக்கு, அப்பிரன்டீஸ் டிரெயினிங் ஆபிசருக்கு 150-க்கு மேற்பட்ட வேலை பயிலும் பயிற்சியாளர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஒரு அப்பிரண்டீஸ் டிரெயினிங் ஆபீசர் பாடங்களைப் பார்த்துக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதனாலே பாடம் நடத்துகின்ற திறன் பாதிக்கப்படுகிறது. ஆகவே இந்த அப்பிரண்டீஸ் டிரெயினிங் ஆபீசர் பதவிகளைக் கூடுதலாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று தேசிய பயிற்சிக் குழு. அந்த தேசிய பயிற்சிக் குழு இதுசம்பந்தமாக, தொழில் கல்வி நிறுவனங்கள் குறித்து பரிந்துரைகளைத் தந்திருக்கின்றது. அந்தப் பரிந்துரைகளில் முறையானவற்றையும் நியாயமானவற்றையும்—இன்னும் சொல்லப்போனால், இந்தப் பரிந்துரைகள் மிகச் சிறப்பாக இருக்கின்றன என்று பயிற்சி நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்களால், அந்த நிறுவனங்களின் சார்பில் சொல்லப்படுகிறது—முழுமையாகச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பயிற்சி நிறுவனங்களில் பயன்படுத்துகின்ற அந்த இயந்திரங்கள் எல்லாம் பழமையானவை. அவைகள் பழமையானவை என்ற காரணமாகவும், அவை அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றதன் காரணமாகவும் இயந்திரத்தில் கோளாறுகள் ஏற்படுகின்றன. அந்த இயந்திரங்களில் வருகின்ற கோளாறுகளைத் தவிர்க்கவும், சீரான முறையில் பராமரிக்கவும் ஒரு மெயின்டினன்ஸ் செல், இயந்திரப் பராமரிப்புக் குழு ஏற்படுத்த வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. அது மட்டுமல்ல, உற்பத்தியோடு இணைந்த பயிற்சி. இப்போது அதுபற்றி சொல்லப்படுகிறது. அது "ஒர்க் எக்ஸ்பீரியன்ஸ் டிரைனிங்" என்று சொல்லப்படுகிறது. அதாவது உற்பத்தியோடு இணைந்த பயிற்சி. இதுதான் இந்த நாட்டிற்கே மிக அதிகமாகத் தேவைப்படுகிறது. அந்த உற்பத்தியோடு இணைந்த பயிற்சி இன்று பல தொழில் பயிற்சி நிலையங்களிலே அறிமுகப்படுத்தப்பட்டு, மிகவும் வெற்றிகரமாக இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இந்தப் பயிற்சியை விரிவுபடுத்துவது இன்றியமையாதது என்பதை வலியுறுத்துகிறேன். அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்களுடைய நலன்களைப் பாதுகாக்க சில நடவடிக்கைகளை இந்தத் துறை எடுக்க வேண்டும். உதாரணமாக சார்ஜ்மேன் ஓவர்சீஸ் என்று இருக்கின்றார்கள். சான்றிதழ்



[1983 எப்ரல் 11] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

பெற்ற பயில்பவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு அகில இந்திய அளவிலுள்ள அளவுகோலில் பணி மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தேசிய பயிற்சிக் குழுவினுடைய பரிந்துரைகளின்படி அப்படிப்பட்ட நிறுவனங்களில் உள்ள பணியாளர்களுக்கு ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் அரசு செயல்படுத்த வேண்டும். அந்த ஊழியர்களுக்கு குடியிருப்பு வசதிகள் போதுமானதாக இல்லை. இன்னும் பல இடங்களில் இல்லவே இல்லை. ஏன் சுத்தமாக இல்லை என்று சொல்லலாம். அந்தக் குடியிருப்பு வசதிகளைச் செய்து தரவேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. இங்கே பணியாற்றுகின்ற அந்த ஆசிரியர்களையும் மற்றும் கல்வித் துறையிலே பணியாற்றுகின்ற சிறந்த ஆசிரியர்களுக்கு 'நல்லாசிரியர்' விருது கொடுக்கின்ற அந்தப் பட்டியலிலே சேர்த்து, அவர்களுக்கு அந்தப் பரிசுகளைக் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, ஊக்கத் தொகை என்று ரூ. 100 கொடுக்கப்படுகிறது. அந்த ஊக்கத் தொகைக்குப் பதிலாக அவர்களுக்கு ஆண்டு ஊதியத்தை உயர்த்தி வழங்குவது முறையாக இருக்கும். ஆகவே ஊக்கத் தொகையை உயர்த்துவதற்குப் பதிலாக ஆண்டு ஊதிய உயர்வாகவே அந்தத் துறை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பயிற்சியாளர்களுக்கு உதவித்தொகை ரூ. 25 என்று தரப்படுகிறது. இது எப்போதோ நிர்ணயிக்கப்பட்ட தொகை. இது தற்போதுள்ள தேவைக்குப் போதுமானதாக இல்லை என்பதைச் சொல்லி, அதை உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பயிற்சி மாணவர்களுக்கு தங்கும் விடுதிகள் பல இடங்களில் இல்லை. இருக்கின்ற இடங்களில் அந்த விடுதிகளில் போதுமான வசதிகள் இல்லை. ஆகவே இந்தப் பயிற்சி மாணவர்களுக்கு போதுமான தங்கும் விடுதிகள் அமைத்து, அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இங்கே இருக்கின்ற மாணவர்களுக்கும் என்.சி.சி. போன்ற அமைப்புக்களை நாம் அறிமுகப்படுத்த வேண்டும். ஆக அங்கே என்.சி.சி. அமைப்புக்கள் இருக்கவேண்டியது அவசியம். நாட்டிலே எதிர்காலத்திலே அவர்களுக்கு அதிலே பல வாய்ப்புக்கள் வரக்கூடும். ஆகவே அவர்களுக்கு என்.சி.சி. பயிற்சி கொடுக்க வேண்டும். உடற்கல்வி ஆசிரியர்கள் பணி இடங்களையும், விடுதி பாதுகாப்பாளர் பணி இடங்களையும் அங்கே ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்று இந்தப் பயிற்சி நிறுவனங்களில் பணிபுரிகின்றவர்களுக்கு இருக்கும் மிக முக்கியமான குறைகள் இங்கே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. அதாவது 10 ஆண்டுக் காலம் பணி புரிந்து தேர்வு நிலை பெறும் இடைநிலை பயிற்சியாளர்களுடைய ஊதிய விகிதத்தில் அவர்களுக்குத் தேர்வுநிலை ஊதிய விகிதம் ரூ. 450—20—590—25—740—30—800 என்று இருக்கிறது. இதில் தொடக்க நிலை ஊதியம்

that I am somewhat troubled at the way in which the administration of these three funds is carried on and I wish to emphasise that it is absolutely necessary that it should be rectified. I do not know if the Government of Tamil Nadu are directly concerned with the administration of this. But, a couple of years ago, the Hon. Minister did say that there was a representative of his Department who sat on the Boards of such concerns. Therefore, I feel that, as Minister for Labour in Tamil Nadu he must call for a report as to why such claims are being returned for frivolous reasons.

This particular lady from Ulundurpet has been asked to furnish endless number of certificates. Probably there is something wrong. But this illiterate lady who is not able to support her family has come to me for help as I told her ... ... ...

The Hon. Thiru S. RAGHAVANANDAM : What is the name of the lady, Sir?

Thiru A. R. DAMODARAN: I will give full particulars to the Hon. Minister separately. I only want the Labour Minister to know that there are 14,000 cases like that. The trouble is they have to get certificates from the Tashildar or the Deputy Tashildar.

I want to mention the above case because like Emile Zola who historically raised the national conscience, I hope to raise the conscience of the Hon. the Labour Minister. If this is a question of rectification of the nomination that was made by the deceased person, that may not be in order or if it is a question of producing certificates, I would request the Hon. Minister to permit the Members of the Legislature to give such certificates as we are doing in the case of Passport verification certificates. About going to the Tashildar or the Deputy Tashildar or the Revenue Inspector for a certificate, I do not want to say anything. Those who have gone there will realise the terrible tortures that have to be undergone to get such certificates. I also recognise that the employees are also involved in this. I would like to make an appeal both to Thiru Manickam and Thiru Nallasivan who represent the Unions of employees in this regard. What is the point in finding fault with an officer of the Labour Department or the Commissioner of Provident Fund, when it is only their own clerical staff who will not clear the arrears in this department? We frequently criticise the



officers for not moving in the matter. We haul up the Minister for these things. While he is administering 100 different Labour Acts, though he is ultimately responsible for everything, he may not know all the shortcomings of the staff. I would like to say that the persons who are doing the mischief in all these administrative matters are the clerical staff who do not display that degree of energy and interest which they should in the disposal of such claim petitions. While I make an appeal to the Hon. Minister to see that this work is done promptly, I also make an appeal to my hon. Friends representing the C.P.M and the C.P.I. to see that the employees also co-operate with the employers in disposing of these claims. I hope that justice will be done and next year when the Hon. Minister presents his report, he will not include these items like the claim petitions returned for rectification. I also hope he will give a directive to the Labour Department to see that a Labour Inspector or some Special Officer is deputed for rectification of these defects so that the poor widows of deceased employees are not subjected to such endless harassment in getting their claims admitted.

My third request is regarding the National Employment Service and the number of people who are registered in our Employment Exchange for jobs. As the Hon. Minister has mentioned in the Note, as on 31—12—1981, the number of applicants on the Live Register was 12 lakhs. I am a bit confused here, Sir, because sometimes the commas are placed in wrong places in these Notes. The all-India figure is very much more and it is about 14 million or 15 million. But, the figure for Tamil Nadu is 1.2 million or 12 lakhs. A number of commas have been misplaced in the Note which I hope will be rectified by his clerical staff and not by the Minister. Anyhow, as on 31st December 1982, the number on the Live Register has gone up to 14,15, 918. We'll all know that unemployment is on the rise. The yound people of our State are facing a terrible hardship and, probably, this also accounts for the bitterness and frustration amongst various classes of society which may also be responsible for the various processions that are led to Fort St. George, etc. But, my point was not with reference to that. My point is what has been mentioned also by another hon. Member. We are not at all happy with the functioning of these Employment Exchanges. There are too many complaints from those who have been registered that out-of-turn applications are sent. All sorts of complaints exist. Sir, I have a feeling—although I hope that my hon. Friends will agree with me—that unless you computerise your Employment Exchanges, you are not going to benefit the people who register in these Exchanges. The thirst for jobs is so great that people are prepared to pay a price to jump the queue.

[Thiru A. R. Damodaran] [1983 ஏப்ரல் 11

[பகுதிகள் 11-20]

We, in India, whether it is a bus-queue, or a cinema queue, or a food queue, or a ration shop queue, delight in jumping the queue at every opportunity. I think this is a fact which the Hon. Minister himself realises in his mind, although, of course, he will say quite a different thing if he seeks to defend the Government's policies in this regard. But, I would request him to computerise the forwarding **of application from the Employment Exchange, so that no mistake** can be made. If you want persons who have registered prior to 1971, a button should give you the list and that list should be sent to the employer whether private or public—and it should be auto- **matic. This is being done all over the world. Sir, I do not say that** people should be thrown out of employment in the Employment Exchange itself. You can find them other jobs in other enactments that you are legislating. I would request that computerisation or data-processing machines must be employed. I hope that the Hon. Minister will try it out in at least three or four places, as a pilot scheme, before he introduces it all over the State.

Sir, may I make another plea to the Hon. Minister? I expected the hon. Lady Member to speak about it, because this relates to the Social Welfare Department. The plea has been made to me by one whose petition I cannot possibly reject, as one interested in social welfare. Therefore, I make the plea to the Hon. Minister. The Bala Sevikas in Kuzhanthaigal Kappagam are paid Rs.175/- per month. They are S.S.L.C. holders and they are social welfare workers. They are paid Rs. 175 per month. They work from 9 a.m. to 3 p.m. They are not granted any holidays and they work on all 365 days of the year. They are not made permanent. These Kuzhanthaigal Kappagam are run by the Welfare Department. There the Government are not following the labour laws which the Government expect the private employers to follow. There is legislation that there must be one weekly holiday. They have no weekly holiday and have no festival holidays. If a person is employed for more than 60 days, he must be made permanent. They are not given provident fund facility. What prevents the Government from applying their own beneficial labour legislation to the employes of the Government in the Welfare Department? I think the Labour Minister should isolate himself from the rest of the Cabinet in this regard and realise that labour **welfare requires a very strict** attitude on the part of the Labour Minister **in regard to**



1983 ஏப்ரல் 11] [Thiru A. R. Damodaran]

Government employees in departments. I would plead with the **Hon. Minister that he may look in to this matter and give them** the minimum wages that they are entitled to in keeping with their qualifications and give them holidays. If necessary, 100 more may be employed. We cannot ask any labourer to work without a weekly holiday, as that would amount to slave labour, forced labour. We cannot ask any person to work on all the 365 days of a year. The only person who can be forced to do this would be the Hon. Minister himself because he does it out of his choice and not out of compulsion.

May I then, in passing, refer to the administration of the Shops and Establishments Act and the Weights and Measures Act? Some very good measures have been taken since last year and a number of seminars have been conducted in the districts and a number of seminars have also been conducted in the State headquarters. Many of our teachers' associations have joined those seminars and have tried to learn something about what is happening in the Department. The Hon. the Labour Minister keeps on issuing G.O.'s at such a rapid pace, changing the design of the forms, etc., that many of us are not acquainted with the type of forms and the types of regis- **ters that have to be maintained. I welcome such enducational** seminars and I would only plead that, in every district, you must call these traders and shop proprietors and give them the guide- **lines to maintain the registers because there are a number of small** shopkeepers who do not know what is to be done. It is not as if they want to evade the law or not maintenance of forms, etc. In the statistics given, the largest number of prosecutions have been under the Tamil Nadu Shops and Establishments Act. Out of a total number of 18,679 prosecutions, the number of prosecutions under the Tamil Nadu Industrial Establishments (National and Festival Holidays) Act is 5,209. Under the Minimum Wages Act, it is only 2,626. The maximum number of evasions, avoidances and arrears are under the Minimum Wages Act, as the Hon. Minister himself realises. He fixed the minimum wages for agricultural labour. Even yesterday, he has done it produly presumably, in anticipation of the discussion on the Policy Note on Labour. He has sanctioned wages of Rs. 18. But not a word has been mentioned about increasing the paddy procurement price even by Rs. 5 to compensate the wage increase that you have effected. If you effect a wage-increase in industry, it is reflected in the cost of the product that comes out of the factory. When you increased **the wages in agriculture, why** was the Hon the **Minister for Agriculture keeping quiet? He should have immediately put forth a demand. If 40 per cent is the labour**

cost of producing paddy, then, automatically the procurement price should have gone up by Rs. 10 or Rs. 12. That is where the unfairness of your legislation lies. That is why people in the farming sector are indifferent to your legislation. How are you going to check whether what you fix is paid to the labourers in the farming sector? Some are paying in kind, some pay in ragi, some pay in paddy, some pay partly in kind and partly in cash. That is an Act that you cannot enforce at all, excepting in the district of Thanjavur, that too in East Thanjavur, where there are a few associations. They are the sweat-and-blood areas where my hon. Friends Thiru Nallasivan and Thiru Manickam are well organised. They will see that wages are paid, irrespective of the fact whether the farmers is ruined or not. But, my concern is about the farmer.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, "கிழக்குத் தஞ்சை" "ஃபேர் வேஜஸ் ஆக்ட்"-ன்கீழ் வருகிறது. கிழக்குத் தஞ்சை தவிர மற்ற தமிழகத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளும் "மினிமம் வேஜஸ் ஆக்ட்"-ன் கீழ் வருவதால், விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்த அட்டவணையின் கூலி நிர்ணயிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Thiru A. R. DAMODARAN: I only wanted to mention that while there were powerful gentlemen like my hon. Friends Thiru Manickam and Thiru Nallasivan to protect farm labourers, they are not able to do it. I would only tell the Hon. Minister that the Government must be fair to the producers also. When the Government want to implement the Shops and Establishments Act, unless the Government increase the profit-earning capacity of those private traders, there will be evasion of the provisions of the Act.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லும்போது, இந்தக் கருத்தைத் தெரிவிக்கலாம் என்று விரும்பினாலும், ஒருவேளை மறந்துவிட்டால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் ஏதாவது நினைத்துக்கொள்வார் என்று இப்போதே சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் இங்கே இப்படி வாதாடுகிறார். அதாவது ஷாப்ஸ் அண்டு எஸ்டாபிளிஷ்மென்ட்ஸ் ஆக்ட்படி வழக்குகள் தொடரப்படுவது அதிகமாக இருக்கிறது என்று குறிப்பிடுகிறார். ஆனால் அவருக்குப் பின்னால் பேச இருக்கிற தொழிற்சங்கத் தலைவர்களாக இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் "அந்தச் சட்டத்தைச்



சரியாகச் செயல்படுத்தவில்லையே" என்று பேச இருக்கிறார்கள். எனவே இந்த இரண்டையும் மனதில் வைத்துச் செயல்பட வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்வார் என்று நம்புகிறேன்.

Thiru A. R. DAMODARAN: No, Sir. I do not object to prosecution. My only point is where a man does not pay the wage that is prescribed and where a man tries to victimise the employees by adopting a practice which is against law, by all means the Government can prosecute. I am not coming in defence of those people. What I am worried about is this. When I have not filled up Form N or some other form, why do you drag me to the Court and see that I am fined in the Court?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்தகைய சிறிய பிரச்சினைகள் எல்லாம் நான் இறுதியாகப் பதில் சொல்லும்போது விட்டுப்போய்விடுமோ என்ற அச்சத்திலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களுக்குக் கொடுக்கப்படும் தகவல் மற்றவர்களுக்கும் பயன்படுமே என்ற எண்ணத்திலும் இப்போது பதில் சொல்ல ஆசைப்படுகிறேன். "அரசு அதிகாரிகள் போய்ப் பார்த்த உடனே பிராசிகியூஷன் செய்ய வேண்டாம். முதலில் தவறு செய்திருக்கிறீர்கள், இந்தத் தவறைத் திருத்துங்கள் என்று சொல்லுங்கள்; அவர்கள் அதற்குப் பிறகும் திருத்தவில்லை என்றால், பிறகு பிராசிகியூஷன் செய்யுங்கள்" என்று தான் நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

(முற்பகல் 11-40)

Thiru A. R. DAMODARAN: That is exactly my point. I know the Hon. Minister would be kind enough to take this action. This action is not being followed down the field. I would request the Hon. Minister to see that in case of minor infringements of the Act, warnings are given and that guidelines like 'Do's Don'ts' are issued. Instead of that, if he is unnecessarily dragged to court, after three times, he becomes a confirmed court-bird and he will not be stirred by the prosecutions at all. He will become a confirmed convict and will not hesitate even to spend Rs. 1,000 on that account. While implementing the Act necessary guidelines may be issued and they may be observed and warning issued in the first instance in case of minor infringements, so that many of these people may not be hauled up for minor infringements.

I would only like to end by stating that while, many views have been expressed about the activities and are still to come from my hon. Friends, I hope that the industrial climate will be main-

tained in Tamil Nadu. We are suffering from a series of difficulties such as power-cut and stoppage of factories due to lack of power and, therefore, this would, perhaps, not be the time for us to disturb the peace in any way. I would request, therefore, that the Government of Tamil Nadu continue their effort to solve industrial disputes by conciliation so that these may not explode and take more vigorous forms such as leading to closure of factories and causing greater difficulties to the people.

Thank you, Sir.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத் துறையினுடைய கொள்கைக் குறிப்பின்மீது எங்கள் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். முதலிலே வேலை நிறுத்த தடைச் சட்டம் சம்பந்தமாக அரசின் நிலையைப்பற்றி எடுத்துக் கொள்ள விரும்புகிறேன். வேலை நிறுத்தத் தடைச் சட்ட முன்வடிவு கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக பொறுக்குக் குழுவிலே இருக்கிறது. ஒரு சட்ட முன்வடிவு பொறுக்குக் குழுவிலே இருக்கிறபோது, அதைப் போன்றதொரு அவசரச் சட்டத்தைக் கொண்டுவருவது எந்த வகையிலே தார்மிகரீதியில் நியாயமாக இருக்கும்? இப்படியொரு சட்டத்தை அரசு கொண்டுவர வேண்டும் என்று விரும்பிய காலத்திலே இதனாலே பாதிக்கப்படுபவர்கள் யார் என்பது பற்றி தமிழ் நாட்டில் இருப்பவர்களுடைய அபிப்பிராயத்தைப் பெற்ற பிறகு தான் கொண்டு வர வேண்டுமென்று கருதி, பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு விட்டிருக்கிறபோது, மீண்டும் ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வருவது என்பது சட்டரீதியாகச் சரியென்று வாதிடுகிறார்கள் என்றாலும், தார்மீக ரீதியாக எப்படி சரியாக இருக்க முடியும்? அது சட்டமாக ஆக்கப் படுவதற்கு லாயக்கு இல்லை, பொறுக்குக் குழுவிற்குப் போய் வர வேண்டும் என்று சட்டமன்றத்திலே கூறி பொறுக்குக் குழுவின் பரிசீலனையில் இருக்கும்போது, அரசு அதையே அவசரச் சட்டமாகக் கொண்டுவருவது என்பது தார்மீக ரீதியாகச் சரியில்லை என்பது என்னுடைய முதல் கருத்து.

1982 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து டிசம்பர் மாதத்திற் குட்பட்ட காலத்திலே தமிழ் நாட்டில் தொழிலாளிகள் போனஸ் பெறுவதற்காக தங்களுடைய உரிமைகளை வற்புறுத்தும் காலத்தில் அவர்களுடைய கோரிக்கையை பலவீனப்படுத்தவே இந்த அரசு இந்த அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். தொழிலாளிகள் போனசுக்காக கோரிக்கைகள் வைத்து போராடத் தயாராக இருந்தார்கள்,





ஆசிரியர்கள் சத்துணவுப் பொறுப்பில் இருந்து தங்களை விடுவிக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்ய தயாராக இருந்தார்கள், அரசு ஊழியர்கள் பல கோரிக்கைகளை வலியுறுத்தி நேரடி நடவடிக்கையில் ஈடுபடத் தயாராக இருந்தார்கள் என்பதால், அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளைத் தடை செய்வதற்காகவே இந்த அரசு பொறுக்குக் குழுவில் இருக்கும்போது அவசரச்சட்டமாகக் கொண்டுவருவது தார்மீக ரீதியில் சரியல்ல என்று தெரிந்தும் அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தது.

அவசரச் சட்டத்தைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பும் பேசியிருக்கிறார்கள். இப்போதும் இந்த விவாதத்திற்கிடையே குறுக்கிட்டுப் பேசியிருக்கிறார்கள். ஸ்ட்ரைக் தடைச் சட்டம் என்று அரசு மேற்கொள்ளுகிற போது, ஸ்ட்ரைக் செய்யும் உரிமை தொழிலாளிகளுக்கு உண்டு என்று அரசு ஒத்துக்கொள்ளுகிறதா, ஆளும் கட்சி ஒத்துக்கொள்ளுகிறதா என்ற பிரச்சினையைக் கிளப்ப விரும்புகிறேன். கொள்கைரீதியாக ஸ்ட்ரைக் செய்வதற்குத் தொழிலாளர்களுக்கு உரிமை இருக்கிறது என்று சொல்லு கிறார்கள். ஆனால் நடைமுறையில் தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் செய்யும்போது அதைத் தடை செய்வதற்குச் சட்டம் போடுகிறார்கள். வேலை நிறுத்தம் செய்வதால், உற்பத்தியில் நஷ்டம் ஏற்படுகிறது, ஆகவே வேலை நிறுத்தம் கூடாது என்று கொள்கை ரீதியாகச் சொன்னால், என்னாலே புரிந்துகொள்ள முடியும். தொழிலாளர்கள் மத்தியிலே போகிறபோது வேலை நிறுத்தம் கூடாது என்று கூறினால், பெரிய சிக்கல் வரும் என்ற பயத்தால் வேலை நிறுத்தம் செய்ய தொழிலாளர்களுக்கு உரிமை உண்டு என்று அங்கே சொல்லுகிறார்கள். ஆனால் நடைமுறையிலே வருகிறபோது, வேலை நிறுத்தத்தை தொழிலாளிகள் அனுபவிக்க வழியில்லாமல் செய்கிறார்கள். ஆகவே இந்த அரசு பல விஷயங்களில் செய்வதைப் போல இந்த விஷயத்திலும் இரட்டைக் கொள்கையைக் கையாண்டு கொண்டிருக்கிறது. எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசும்போதுகூட, ஆஸ்பத்திரியில் எஜுகேஷனல் இன்ஸ்டிடியூஷன்களில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு வேலை நிறுத்தம் வேண்டும் என்று சொல்லுகிறார்களா, இல்லையா என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். அதற்குப் பதில் சொல்லும்போது, அவர் தயங்கித் தயங்கிச் சொன்னார்கள். அப்படிப்பட்ட உரிமை வேண்டும் என்று அந்தத் துறையிலே வேலை செய்கிறவர்கள் விரும்புகிறார்கள். எஜுகேஷனல் இன்ஸ்டிடியூஷனாக இருந்தாலும் சரி, ஆஸ்பத்திரியாக இருந்தாலும் சரி, அந்த உரிமை வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். அப்படியென்றால் ஆப்பரேஷன் நடப்பது எப்படி என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். ஸ்ட்ரைக்கில் ஈடுபடக்கூடியவர்கள் எமெர்ஜென்சிக்கான ஏற்பாடுகளைச்

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 ஏப்ரல் 11

செய்துவிட்டுத்தான் ஸ்ட்ரைக் செய்வார்கள். ஸ்ட்ரைக் என்றால் ஆப்பரேஷனே கூடாது என்று சொல்லவில்லை. தவிர்க்க முடியாது என்றால், அதற்கென்று சிலருக்கு எக்செம்ஷன் கொடுக்கிறார்கள். ஜெனரல் ஸ்ட்ரைக் கால் ஃபார் பண்ணும்போது கூட வாட்டர் சப்ளை சிஸ்டம், எலக்ட்ரிசிட்டி சிஸ்டம், ஆஸ்பிட்டல் ஆகியவற்றுக்கு தொழிற் சங்கங்கள் எக்சம்ஷன் கொடுத்துச் செய்கின்றன. வேலை நிறுத்தம் செய்யும் உரிமை இருக்கிறது என்ற காரணத்தாலே, அதை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்ற பொறுப் புணர்ச்சி இல்லாமல் இருப்பார்கள் என்று சொல்வது சரியல்ல. அடுத்து, பள்ளிக் கூடங்களில் பிள்ளைகள் படிக்க வேண்டாமா என்று கேட்டார். 365 நாட்களும் ஸ்ட்ரைக் பண்ண வேண்டும் என்று சொல்லவில்லை. வேறு எந்த வழியும் இல்லாவிட்டால், கடைசி ஆயுதமாக வேலை நிறுத்தத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்று திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் இந்த உரிமை இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் இப்போதுள்ள பிரச்சினை. வேலை நிறுத்த உரிமை வேண்டும் என்று ஒத்துக்கொள்கிறார்கள் என்றால், அது செய்யப்படுகிறபோது வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். இவர்கள் ஆட்சிக்கு வந்து ஐந்தாறு வருடங்கள் ஆகின்றன. கடந்த ஆறு வருடங்களில் நடந்த ஸ்ட்ரைக்கில் எது நியாயமான ஸ்ட்ரைக், எது நியாயமில்லாத ஸ்ட்ரைக் என்று தெளிவாகச் சொல்லிவிட்டால், அந்த கிரைட்டீரியனை வைத்துக்கொண்டு நாங்கள் எதிர் காலத்திலாவது ஸ்ட்ரைக் செய்யலாம். ஆகவே தொழிலாளர் வர்க்கத்திற்குத் தேவைப்படக்கூடிய முறையில் சரியான முறையில் பயன்படுத்தப்பட்ட ஸ்ட்ரைக் எது, சரியில்லாமல் அநாவசியமாக நடந்த ஸ்ட்ரைக் எது என்று சொன்னால், சர்க்கார் சரியென்று ஏற்றுக்கொள்ளுகிற அந்த ஸ்ட்ரைக்கைச் செய்யலாம். அப்படி இல்லாவிட்டால் தவிர்க்க முடியாது. அப்படி இல்லை என்றால், ஒட்டுமொத்தமாக கொள்கை ரீதியாக வேலை நிறுத்தமே வேண்டாம் என்று ஒத்துக்கொள்ளுகிறார்களா? ஆனால் எப்போது ஸ்ட்ரைக் செய்தாலும் சமுதாயத்திற்கு விரோதமாகப் போகிறார்கள் என்று பேசுவது வழக்கமாக இருக்கிறது.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சமீபத்திலே நெய்வேலியில் நடந்த ஸ்ட்ரைக்கில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட எல்லாத் தொழிலாளர்களும் சேர்ந்து ஸ்ட்ரைக் செய்தார்கள். அப்படி எல்லாத் தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்து போனதால் நிர்வாகம் அதிகமான போனசைக் கொடுக்கத் தயாராக இருந்தது. அதிகமான போனசைப் பெற்றுத்



1983 ஏப்ரல் 11] [திரு. ஆ. நல்லசிவன்]

தர தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்கு அது உதவியாக இருந்தது. அமைச்சர் அவர்கள் அந்த நிர்வாகத்தோடு பேசி அதிகமான போனசைத் தரும்படியாக நெய்வேலி நிர்வாகத்தை நிர்பந்தப்படுத்த முடிந்தது.

(முற்பகல் 11-40)

அப்படிப்பட்ட ஸ்ட்ரைக்கில் பங்கு எடுத்துக்கொண்டதற்காக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிற்சங்கத் தலைமைப் பொறுப்பிலே இருந்தவரை நீக்கிவிட்டார்கள். அப்படி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சங்கம், அரசினுடைய அமைச்சர் அவர்கள் அந்த நிர்வாகத்தோடு பேசுவதற்கு இல்லை. "அந்த தொழிலாளர்களுக்குக் கொஞ்சம் அதிகம் போனஸ் கொடுங்கள்" என்று சொல்லவில்லை. அந்தத் தொழிலாளர்கள் அந்த போனஸ் அளவை ஒத்துக்கொள்ளவில்லை. இருந்தாலும் கூடுதல் போனஸ் கொடுப்பதற்கு அவர்களை நிர்பந்தம் செய்யவில்லை. அந்த ஸ்ட்ரைக்கிலே பங்கெடுத்துக்கொண்டிருக்கின்ற அ.தி.மு.க. தொழிற் சங்கத் தலைமையைக்கூட மாற்றிவிட்டார்கள். அதிலே பங்கு எடுத்ததற்காக அப்படிச் செய்தார்கள். இந்த அரசைப் பொறுத்த மட்டில், அவர்களுடைய கட்சியைப் பொறுத்த மட்டில், தொழிலாளர்களின் தொழிற் சங்க உரிமைகளின் ஒரு பகுதியாகிய வேலை நிறுத்த உரிமை கூடாது என்று திட்டவட்டமான கொள்கையிலே இருக்கிறார்கள் என்பதை அவர்கள் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். அப்படிச் சொல்லாமல் அங்கே தொழிலாளர்களிடம் வருகின்ற போது, வேலைநிறுத்த உரிமை உண்டு என்று சொல்லிவிடுகின்றார்கள். ஆனால் ஒவ்வொரு தடவையும் தார்மீக முறையைக்கூட மீறி, ஒரு மசோதா பரிசீலனையில் இருக்கின்றபோது, அதையும் மீறி அவசரச் சட்டம் கொண்டு வந்து ஒரு மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த இரண்டையும் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒன்றை பொறுக்குக்குழுவிற்கு விட்டிருக்கிறார்கள். அதைக் காலாவதியாக விட்டிருக்கிறார்கள். மசோதா இப்போது பெண்டிங்கில் இருக்கிறது. ஆகவே அந்த மசோதாவை வாபஸ் வாங்க வேண்டும் என்று வற்புறுத்துகிறேன். எனக்கு முன்னால் பேசிய திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் மத்திய அரசு கொள்கையை ஏற்றுக்கொள்கிறது என்று அடிக்கடி சொன்னார்கள். அந்த வேலை நிறுத்தம் செய்வதைத் தடை செய்யும் சட்டத்தைப் பொறுத்தவரையில், அந்த மத்திய அரசினுடைய கொள்கையை வேறு பல நான்—காங்கிரஸ், காங்கிரஸ் அல்லாத அரசுகள் ஏற்றுக்கொள்ளாமல் அந்தப் பாதையிலே போக தயங்கிக் கொண்டிருக்கின்ற போது, மத்திய அரசின் துணை வேண்டிக்கொண்டிருக்கின்ற இந்த அரசு, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும் மத்திய ஏற்றுக்கொள்கிறது.

இருக்கின்ற நிலைமைகளில் மாக்சிமம் பிரஷர் கொடுக்கவில்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஆயுதத்தைத் தடுக்கும் சட்டத்தைக் கொண்டு வர முயற்சிப்பது சரியில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சில பிரச்சினைகளை இந்த அரசின் போக்கை ஒட்டி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அணுகுமுறைகளும் மாறவேண்டு மென்று சொல்லும்போது, பொதுவாக தொழிலாளர்கள் போராட்டம் எப்படி இருக்கவேண்டும்? இந்தியா ஒரு டெவலப்பிங் கன்ட்ரி, ஒரு முன்னேறிக் கொண்டிருக்கக்கூடிய நாடு, அந்த நாடு முன்னேறவேண்டுமென்றால், எந்தெந்த முறையிலே தொழிலாளர்கள் நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் மனதிலே வைத்து அகில இந்திய ரீதியிலேதான் இந்த அரசு அந்தப் பிரச்சினையைப் பார்க்கும். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால்; ஆரம்பத்திலே எஜுகேஷனல் இன்ஸ்டிடியூஷன், ஹாஸ்பிடல்ஸ் என்று பேசுகிறபோது, தமிழக அரசின் சார்பாக நான் பேசியபோது, இவை இரண்டிற்கும் வேலை நிறுத்த உரிமையிலிருந்து விலக்கு கொடுத்து அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க சட்டங்கள் கொண்டுவர வேண்டும், வேறு ஒரு முறையில் வழி வகுக்க வேண்டும் என்று பேசியது உண்மை. அதற்கு மற்ற அமைச்சர்கள் என்ன சொன்னார்கள் என்பதுபற்றி நான் இங்கு சொல்ல விரும்பவில்லை. பெரும்பான்மையான அமைச்சர்களும் ஒத்துக்கொண்டார்கள். அகில இந்திய ரீதியிலே இந்த நாடு முன்னேறவேண்டும் என்று மனதிலே வைத்துக்கொண்டு பல சட்டங்களை இந்த அரசு கொண்டுவருகிறது. அப்படிப் பார்க்கும்போது, மத்திய அரசு பல்வேறு சட்டங்களைக் கொண்டுவரும்போது, தமிழகச் சட்டமும் ஒத்துப்போவதுதான் காரணமாக இருக்கின்றது என்பதையும் சொல்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஒத்துக்கொள்வார்கள், நாங்கள் ஒத்துக்கொள்ள முடியவில்லை. அதனாலேதான் சிக்கலாக இருக்கிறது. டெவலப்பிங் கன்ட்ரீஸ் என்று சொல்கின்றார்கள். நம்முடைய டெவலப்பிங் கண்ட்ரீஸ்லேதான் 125 மிகப் பெரிய மோனோபலியினரை உண்டாக்கியிருக்கிறோம். டெவலப்பிங் கண்ட்ரி என்று சொன்னால், தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை என்றும் விவசாயத்திலே மட்டும் பின்தங்கியிருக்கின்ற நாடு என்ற அடிப்படையிலே தான் நம் நாடு டெவலப்பிங் கண்டரி என்று சொல்கிறோம். இந்த டெவலப்பிங்





கண்ட்ரியிலேதான் 5,000 கோடி ரூபாய் அளவுக்கு 125 மோனோபலியினர் குடும்பங்கள் இருக்கின்றன. டெவலப்பிங் கண்ட்ரியிலே அந்த அளவுக்கு அவர்கள் ஏற்பட்டு வளர்ந்துகொண்டிருக்கிறார்கள். லட்சக்கணக்கான தொழிலாளர்களை அவர்கள் சுரண்டிக்கொண்டிருக்கின்றார்கள். பொருளாதார ரீதியில் தொழிலாளர்கள் அவர்களை எதிர்த்துப் போராடுகின்றார்கள். அவர்கள் அரசினுடைய செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை எதிர்த்து இவர்கள் போராட இந்த ஆயுதம் தேவை இல்லை என்று சொல்கின்றார்கள். "மோனோபலி டெவலப்" ஆகியிருக்கின்றது. அதை யொட்டி அவர்கள் ஏகபோகமாக தொழில் வளர்ச்சியில் வளர்ந்துகொண்டிருக் கின்றார்கள். இவர்கள் உரிமையைப் பாதுகாக்க இந்த உரிமைக்கு அங்கீகாரம் கொடுங்கள் என்று சொல்கின்றேன். ஹாஸ்பிட்டல், எஜுகேஷனல் இன்ஸ்டிடியூஷன் பற்றிச் சொன்னார்கள். அதிலேகூட என்ன சொல்கிறேன்? நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான், நம் மாநில அரசுதான் மத்திய அரசுக்கு அடியெடுத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஹாஸ்பிட்டல்ஸ், எஜுகேஷனல் இன்ஸ்டிடியூஷன்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இப்படி எல்லாவிதமான ஸ்ட்ரைக்கையும் தடை பண்ணுகிறார்கள். ஸ்ட்ரைக் தடைக்குச் சொல்கின்ற காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. ஒன்றைச் சொல்கிறேன். இந்த ஸ்டிரைக் பண்ணுகிற ஆயுதத்தை தடை செய்கிறார்கள். ஸ்ட்ரைக்கைத் தடை செய்யும்போது, லாக் அவுட்டையும் தடை செய்வதாகச் சொல்கின்றார்கள். அந்த அதிகாரத்தை எப்படி தொழிலாளர்களுக்கு பாதகமாகவும் முதலாளிகளுக்கு சாதகமாகவும் பயன்படுத்துகிறார்கள் என்று சொல்கிறேன் திருச்சியிலே சிம்கோ மீட்டர்ஸ் பற்றிச் சொல்கிறேன். இரண்டு உதாரணங்கள் சொல்கின்றேன். இது அதில் ஒன்று. அந்த சிம்கோ மீட்டர்சிலே நிர்வாகம் 305 ஒர்க்கர்ஸ்-ஐ ஆள் குறைப்பு செய்யப் போகிறோம் என்று நோட்டீஸ் கொடுத்தார்கள். இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்ட் பிரகாரம் 25 (என்) கீழே அப்படி ஆள் குறைப்பு செய்வதற்கு முன்பாக ஒரு மாநில அரசிடம் அங்கீகாரம் பெற அவர்கள் மனு கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது.

(முற்பகல் 11-50)

அந்த முதலாளி அப்படிக் கொடுக்கவில்லை. ஏற்கெனவே தமிழ் நாட்டில் பி & சி மில் முதலாளி அந்த மாதிரி நோட்டீஸ் கொடுக்காமல் செய்து, தொழி லாளர்கள் கோர்ட்டுக்குப் போனார்கள்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 ஏப்ரல் 11

அரசினுடைய கொள்கையைப் பின்பற்றித்தான் வந்திருக்கிறார்கள். அது மட்டு
மல்ல. போன தடவைகூட நான் சொன்னேன். எஜுகேஷனல் இன்ஸ்டி
டியூஷனையும் ஆஸ்பிடலைப் பொறுத்தும்கூட, இந்த மாதிரி வேலைநிறுத்
தத்தைத் தடை செய்யக்கூடிய சட்டத்தைக் குறித்து அங்கே யாரும் சொல்ல
வில்லை. அங்கே கட்டப்பட்ட மாநில தொழில் அமைச்சர்கள் கூட்டத்திலே
நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள்தான், "ஏன் அதை விட்டுவிட்டீர்
கள்" என்று கேட்டிருக்கிறார்கள். அந்த எஜுகேஷனல் இன்ஸ்டிடியூஷனை
யும், ஆஸ்பிட்டலையும் ஏன் சேர்த்துக் கொள்ளாமல் விட்டார்கள் என்று மத்திய
அரசுக்கு வழிகாட்டுகின்ற முறையிலே சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய
மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் "வேலைநிறுத்த உரிமையைத் தடுப்பதில்
இதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்" என்று சொன்னார்கள். இந்த
விஷயத்தில் ஒருகால் இன்றைக்கு தமிழகத்தின் மொத்த ஜனத்தொகையிலே
இண்டஸ்ட்ரியல் ஒர்க்கிங் கிளாசும், மிடில் கிளாஸ்களும் ரொம்ப குறைவாக
இருப்பதால், இவர்களுடைய அடிப்படை உரிமையான வேலை நிறுத்த
உரிமையைப் பறிப்பதால் ஆபத்து இல்லை என்று அவர்கள் கணக்குப்
போட்டிருக்கலாம். ஆனால் தமிழ் நாட்டிலுள்ள இண்டஸ்ட்ரியல் ஒர்க்கிங்
கிளாஸ், மிடில் கிளாஸ்கள் இப்படிப் பல்வேறு அமைப்புகளை பிரதி
பலிப்பதால், இவ்வளவு காலமாக அப்படி தொடர்ந்து செய்கின்றார்கள்.
உங்களுடைய நடவடிக்கை அவர்களை ஒன்றுபடுத்திவிடும் என்பதை உங்கள்
கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். போன மாதம் 28 ஆம் தேதி
நடந்த அந்த ஆர்ப்பாட்டம் இருக்கின்றதே, அது தமிழகத்திலே வேலை
நிறுத்தத் தடைச் சட்டத்தை வாபஸ் வாங்க வேண்டும் என்றும், பொறுக்குக்
கமிட்டியிலே இருக்கின்ற அந்த மசோதாவை வாபஸ் பெறவேண்டும் என்றும்
ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். மூந்தாநாள் நீங்கள் ஒரு ஆர்ப்பாட்டம்
நடத்தினீர்கள். ஆனால் தொழிலாளர் வேலை நிறுத்தத் தடைச் சட்டத்தைக்
கொண்டுவர வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் பண்ணவில்லை. நீங்கள் அந்தக்
கொள்கையைச் சொல்கிறீர்கள். அந்த வேலை நிறுத்தத் தடைச் சட்டத்தை
கொண்டுவர வேண்டும் என்று மூந்தாநாள் ஆர்ப்பாட்டம் வைத்திருந்தால்,
உங்களுடைய அந்தக் கொள்கைக்கு ஏற்ப அதற்கான அடிப்படைக்
காரணங்களைச் சொல்லி செய்திருக்க வேண்டும். அந்தக் தடைச் சட்டத்தை
கழகம் அரசு ஏற்றுக்கொள்கிறது என்று சொல்வது உண்மையானால், 9 ஆம்
தேதி நடந்த ஆர்ப்பாட்டம் அந்தக் கொள்கைக்குத்தான் என்றால், தமிழ்
நாட்டிற்கு வேலை நிறுத்தத் தடைச்சட்டம் வேண்டும் என்று
கோஷமிட்டிருக்க வேண்டும். தொழிற் சங்கங்கள் உரிமைகள் பாதுகாக்கப்படு,



1983 ஏப்ரல் 11] [திரு. ஆ. நல்லசிவன்]

வேண்டும் என்று சொல்கின்றார்கள். ஆனால் வேலை நிறுத்தத் தடைச் சட்டம் மூலமாக அந்த உரிமைகள், தொழிலாளர்கள் நன்மைகள் பாதுகாக்கப்படுமா? அது நன்மை செய்யுமா? அதுதான் என் கேள்வி. மாநில அரசைப் பொறுத்த வரையிலும், அவர்கள் ஒன்று சொல்வார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் ஆட்சியிலே, பேசியே தீர்த்துக்கொள்ளலாம், போராட்டமே வேண்டியதில்லை என்றார்கள். நான் சொல்ல விரும்புவது நம்முடைய அரசியல் சாசனத்திலே அதை எழுதியபோதே, நம்முடைய சமுதாய பொருளாதார அமைப்பிலே வேலை செய்கின்றவர்கள் தங்களுடைய சரீர உழைப்பையும், புத்திசாலித்தனத்தையும், அறிவையும் பயன்படுத்தி வேலை செய்கின்ற இடங்களில் அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய கூலிகளையும் நியாயமான உரிமைகளையும் பெறுவதற்கு வேலை நிறுத்தம் போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. 'பார்கெயினிங் பவர்', தங்களுக்காக பேரம் பேசும் உரிமை அவர்களுக்குத் தேவைப்படுகிறது என்றும் அதற்காகக் கிளர்ச்சி பண்ணுகின்ற உரிமையும் இருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது, ஒரு சீப் மினிஸ்டர் மாறின உடனே வேலைநிறுத்தம் தேவையில்லை என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்வது, நம் அமைச்சரவைக்குத் தகுதியுடையதுதானா என்று யோசித்துப்பார்க்க வேண்டும். இந்தப் போராட்டம் தேவை, இந்த பார்கெயினிங் பவர் அவர்களுக்குத் தேவை என்பது இந்த சமுதாய பொருளாதார அமைப்பில் இருக்கிறது. ஒரு நாடு மாறுவதால், ஒரு சீப் மினிஸ்டர் மாறுவதால், நிலைமை மாறாது. இந்தியா பூராவுக்கும் சமுதாய பொருளாதார அமைப்பு ஒரு முதலாளித்துவ அமைப்பாக இருக்கின்றபோது, தனிப்பட்டவர்கள் வளர்ந்திருக்கின்ற அளவில் இருக்கின்றபோது, அறிவாளியும் உடல் உழைப்பாளியும் தனிப்பட்ட சொத்துரிமையோடு இருக்கின்றபோது, அவர்களிடம் பேரம் பேசுவதற்கு உரிமை உண்டு என்று இருக்கிறது. ஆனால் இங்கே தமிழகத்தில் முதலமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்காக இருப்பதாக ஒரு ஆர்குமெண்ட் சொல்வதை அந்த அறிவாளிகளாக இருப்பவர்கள், அந்தத் தொழிலாளர்கள், உடலுழைப்பாளர்கள், அவர்கள் அறிவை, உழைப்பை விற்று பொருளாதாரத்தை வளர்த்துக்கொள்பவர்கள் எப்படி ஏற்றுக்கொள்வார்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். வேலை நிறுத்தத்திற்குத் தடைச் சட்டம் என்று இருக்கிறதே அதைக் கைவிட்டுவிட வேண்டும். இப்போது பல காரணங்களுக்காக இந்தக் தடைச் சட்டம் வருகிறது. அவர்கள் போராடக்கூடிய நிலைமைகள் வராமல் இருப்பதன் காரணமாக அந்த அரசுக்கு எந்த அளவுக்கு மாக்சிமம் பிரஷர் கொடுக்க முடியுமோ அதை அவர்கள் கொடுக்கமுடியாமல், அவர்கள் ஒன்று சேராது

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** [1983 ஏப்ரல் 11
களே, நான் கடைசியில் மறந்துவிடுவேனோ என்பதற்காக இப்போதே சொல்கிறேன். குறுக்கிடுவதாகக் கருத வேண்டாம். அந்த நிர்வாகம் 25 (என்) கீழ்
அனுமதி கேட்டு, அரசுக்கு மனு அனுப்பினார்கள். அது கமிஷனுக்குப்
போக வேண்டும். கமிஷனர் பதில் எழுதும்போது, 25 (என்) உயர்நீதி
மன்றத்திலே ஸ்டிரக்-டவுன் ஆனதால், "எங்களுக்கு எழுத வேண்டியதில்லை"
என்று பதில் எழுதிவிட்டார்கள். அதற்குமேல் தொழிற் சங்கம் ஆர்ட்டிகிள்
32 என்று நினைக்கிறேன், அதன்கீழ் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றார்கள்.
சுப்ரீம் கோர்ட்டிலிருந்து டைரக்ஷன் வந்து, முதலாளி 25 (என்)-ஐ 'அப்சர்வ்'
செய்ய வேண்டுமென்று சொல்லி, அவர்கள் இப்போது பெர்மிஷன் கேட்டு
எழுதியிருக்கிறார்கள். கமிஷனர் விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ஆ. நல்லசிவன்:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர
வர்கள் ஒரு போர்ஷன் சொன்னார்கள். 25 (என்)-ஐ ஏற்கெனவே உயர்நீதி
மன்றம் செல்லாது என்று அடித்த பிறகு, அரசாங்கம் என்ன செய்தது?
25 (என்) என்ன சொல்கிறதென்றால், எந்த அரசாங்கமாக இருந்தாலும்,
மத்திய அரசு, மாநில அரசுகளாக இருந்தாலும், அனுமதி கேட்டு ஆள்
குறைப்பு செய்ய வேண்டுமென்று சொல்லுகிறது. பி & சி மில் கேசில் அதை
'ஸ்டிரைக் டவுன்' பண்ணியவுடன் அரசு அப்பீல் செய்யவில்லை. தமிழ்
நாட்டில் இண்டஸ்டிரியல் ஒர்க்கர்சைப் பாதிக்கும் விஷயத்தில் தொழிலாளர்
அரசு என்ன செய்திருக்கிறது? ஒரு தொழிற்சாலையில் தொழிலாளர்கள்
ஆட்குறைப்பு செய்வதற்கு அரசிடம் அனுமதி வாங்க வேண்டியதில்லை என்று
உயர்நீதிமன்றம் கூறியிருக்கிறது. அனுமதி வாங்க வேண்டுமென்று மத்திய
சட்டம் கூறுகிறது. அனுமதி வாங்க வேண்டியதில்லை என்று உயர்நீதி மன்றம்
சொல்லுகிறது. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு தவறு என்று அரசு ஏன் சுப்ரீம்
கோர்ட்டுக்குப் போகவில்லை? யோசித்துப் பாருங்கள். அப்படிப் போக
வில்லை. முதலமைச்சரவர்கள் பேரவையிலும், மேலவையிலும் பேசும்போது,
எப்படியெல்லாம் உயர்நீதி மன்றம் அரசு கொண்டுவரும் சட்டங்களுக்குப்
பாதகமாகச் செய்கிறதென்று சொன்னார்கள். இந்தக் குறிப்பிட்ட கைறக்
கோர்ட் தீர்ப்பு தமிழ் நாட்டில் லட்சக்கணக்கான தொழிலாளர்களைப்
பாதிக்கும்போது, அரசு என் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகவில்லை?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** துணைத் தலைவரவர்களே,
நான் குறுக்கிடுவதற்காக வருத்தப்படுகிறேன். பின்னால் இந்தப் பாயிண்ட்
விட்டுவிடுமோ என்பதற்காக இப்போதே சொல்கிறேன். இந்திய அரசும்,



தமிழ் நாடு அரசும் காம்பரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டு வர, முடிவு எடுத்திருக்கிற காரணத்தால்தான் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகவில்லை. இது மாத்திரம் ஸ்டிரைக் டவுன் ஆகவில்லை. மற்றும் பல 'கிளாஸ்' கள் ஸ்டிரைக் டவுன் ஆகியிருக்கின்றன. எல்லாவற்றையும் சேர்த்து பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்றுதான் இருந்தோம். அதனால்தான் ஒவ்வொன்றுக்கும் கோர்ட்டுக்குப் போக வேண்டுமென்ற நிலையை இந்த அரசு எடுக்கவில்லை.

**திரு. ஆ. நல்லசிவன்:** துணைத் தலைவரவர்களே, எந்த விஷயத்தில் கோர்ட்டுக்குப் போகிறார்கள், எந்த விஷயத்தில் கோர்ட்டுக்குப் போகவில்லை என்பதற்குப் பிறகு வருகிறேன். இலட்சக் கணக்கானவர்களுக்குப் பாதகம் ஏற்படும் தீர்ப்பு வந்த பிறகும், கோர்ட்டுக்குப் போகவில்லை. மாண்புமிகு முதலமைச்சரவர்கள், உயர்நீதி மன்றம் அரசு கொண்டுவரும் நல்ல சட்டங்களை அடித்து விடுகிறது என்று சொன்னார்கள். மாநில அரசு அனுமதியில்லாமல், லேபர் கமிஷனர் சம்மதம் பெறாமல் தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்யக் கூடாது என்று மத்திய அரசு போட்டுள்ள சட்டத்தை உயர்நீதிமன்றத் தீர்ப்பு அடித்துவிடுகிறது. அரசைக் கேட்காமல் ஆட்குறைப்பு செய்யலாம் என்று முதலாளிகளுக்குப் பச்சை விளக்கு காட்டுகிறது. அதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகவில்லை. ஆகவே முதலாளிகளுக்குச் சாதகமான அரசு, தொழிலாளர்களுக்குப் பாதகமான சட்டத்தை எதிர்த்து சுப்ரீம் கோர்ட் போகவில்லை என்று கூற விரும்புகிறேன். அப்படிப் போகாதது மட்டுமல்ல. அந்தத் தொழிற் சங்கம் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய், 25 (என்) பிரகாரம் லேபர் டிப்பார்ட்மென்ட் அனுமதி வாங்காமல் ஆட்குறைப்பு செய்யப் போகிறார்கள் என்று சொல்லி; ஸ்டே வாங்கிற்று. ஆனால் சிம்கோ மீட்டர்ஸ் முதலாளி சட்ட விரோதமாக லாக்-அவுட் பண்ணிவிட்டார். அந்த லாக்-அவுட்டை எடுக்க அரசாங்கம் தன்னிடமுள்ள அதிகாரத்தை உபயோகிக்கவில்லை. சுப்ரீம் கோர்ட் உத்தரவை அமுல் நடத்த மாட்டேன் என்று சவால் விட்டு லாக்-அவுட் பண்ணியுள்ளதை எடுக்க அரசு எந்த அதிகாரத்தையும் பயன் படுத்தவில்லை. இதில் வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால், அமைச்சர வர்களை அவர்கள் அணுகி சமரசம் பண்ணுங்கள் என்று கேட்டபோது, 'முதலாளி ஒத்துக்கொள்ள மாட்டேன் என்று சொல்லுகிறார், சுப்ரீம் கோர்ட் கேசை வாபஸ் வாங்கி வாருங்கள். தலையிடுகிறேன்' என்று அமைச்சரவர்கள் சொன்னதுதான்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** துணைத் தலைவரவர்களே, சுப்ரீம் கோர்ட் கேசை வாபஸ் வாங்கிக்கொண்டு வாருங்கள் என்று நான் எந்தக் கட்டத்திலும் சொல்லவில்லை.

[1983 ஏப்ரல் 11

**திரு. ஆ. நல்லசிவன்:** துணைத் தலைவரவர்களே, நான் தெளிவாகச்
சொன்னேன். லட்சக் கணக்கான தொழிலாளர்களைப் பாதிக்கும் பிரச்
சினையில் உயர்நீதி மன்றம் பாதகமான தீர்ப்பு கொடுத்தும், அதை எதிர்த்து
சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் பண்ணாத அரசு, ஒரு வருடத்திற்கு மேல் அந்த
பேக்டரி மூடிக் கிடக்க அனுமதித்தது. அந்த லாக்-அவுட்டை எடுக்க நடவ
டிக்கை எடுக்கவில்லை. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை முறியடிக்க அவர்கள்
லாக்-அவுட் செய்திருக்கிறார்கள். அரசு இதில் தலையிட்டு, தீர்க்க வேண்டு
மென்று கேட்டபோது, லேபர் டிப்பார்ட்மெண்டும், அமைச்சரவர்களும் எந்த
விதமான முயற்சியும் பண்ணவில்லை. கடைசியாக 1982 டிசம்பரில், ஒரு
வருடத்திற்குப் பிறகு, சுப்ரீம் கோர்ட் என்ன தீர்ப்பு அளித்தது என்றால்,
25 (என்)-ன்படி மாநில அரசிடம் அனுமதி கேட்டுத்தான் ஆட்குறைப்பு
செய்ய வேண்டுமென்று தீர்ப்பு கொடுத்து, அந்தப் பிரச்சினை தீர்ந்திருக்கிறது.
1,000 தொழிலாளர்கள் வேலை பார்க்கும் தொழிற்சாலையில், தமிழ் நாட்டில்
மீட்டர்கள் செய்யும் முக்கியமான—எசன்சியல் சர்வீஸ்—தொழிற்சாலையில்
சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை மீறி ஒரு நிர்வாகம் இருந்தபோது, அமைச்சரவர்கள்
சொல்லியிருக்கிறார்கள்—இல்லை என்று சொன்னார்கள், அதை 'வெரிபை'
பண்ணுகிறேன். லேபர் டிப்பார்ட்மெண்ட் அதிகாரிகளைப் பொறுத்தவரையில்,
சுப்ரீம் கோர்ட் கேசை வாபஸ் பண்ணாமல் சமரசம் செய்ய முடியாது என்று
திட்டவட்டமாகக் கூறினார்கள். அமைச்சரவர்கள் இப்போது மறுத்தார்கள்.
அதுசம்பந்தமான ரிக்கார்டுகளை 'ப்ரொட்யூஸ்' பண்ணுகிறேன்.

ஒரு மாநிலத்திற்குப் பொருந்தக்கூடிய சட்டத்தை உயர்நீதி மன்றம்
செல்லாது என்று அடித்த பிறகு, அதனால் லட்சக்கணக்கான தொழிலாளர்கள்
பாதிக்கப்படுகிறார்கள் என்று தெரியும் நிலையிலே, தொழிற் சங்கத்திலே
நீண்ட காலம் இருந்து அனுபவப்பட்டவர் அமைச்சராக இருக்கும்போது,
'காம்பரஹென்சிவ் லெஜிஸ்லேஷன்'-க்காகக் காத்திருந்தோம் என்று சொல்லு
கிறார்கள். இந்தப் பிரச்சினையில் லட்சக்கணக்கான பேர்கள் பாதிக்கப்படும்
போது 'காம்பரஹென்சிவ் லெஜிஸ்லேஷன்' என்று தாமதித்தார்கள்.
நெல்லிக்குப்பத்திலுள்ள பாரி கம்பெனி தொழிற்சாலையில் ஒரு சங்கம் இருக்
கிறது. அந்தச் சங்கத்திற்கும், மேனேஜ்மென்டுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்
பட்டது. அதிலே தொழிலாளிக்குக் கிடைக்கும் 2 லட்சம் ரூபாயை தொழிற்
சங்க ரீதியாகக் கொடுக்க வேண்டுமென்று அக்ரிமென்ட் போட்டார்கள்.
தொழிற் சங்கத்திடம் பணம் கொடுக்கப்பட்டது. அது தொழிற் சங்கத்தின்
பெயரிலே பிக்சட் டிபாசிட்டிலே போடப்பட்டது. ஆனால் தொழிலாளர் நல
இலாக்கா அந்த அக்ரிமெண்ட் செல்லாது, தொழிலாளர்களுக்குக் கொடுத்த
பணம், தொழிற் சங்கத்திற்குப் போகக்கூடாது என்று கேஸ் போட்டது.



1983 ஏப்ரல் 11]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** துணைத் தலைவரவர்களே,
இதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முழு உண்மையையும் சொன்னால்,
நன்றாக இருக்கும். ஒரு ஸ்பெஷல் இண்டஸ்டிரியல் டிரிப்யூனல் நெல்லிக்
குப்பத்திற்காக நியமிக்கப்பட்டது. அந்த டிரிப்யூனல் கொடுத்த அவார்ட்
தொகையை, அதாவது எவ்வளவு தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டு
மென்று அவார்ட் கொடுத்ததோ, அந்தத் தொகையைக் குறைத்துக்கொண்டு
ஒரு ஒப்பந்தம் போட்டு, தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய தொகை
யைக் குறைத்துக்கொண்டு, பல லட்சம், 20, 30 லட்சம் என்று கருதுகிறேன்,
அதைக் குறைத்துக்கொண்டு ஒப்பந்தம் போட்டு, அதன் பிறகு 2 லட்சம்
ரூபாய் யூனியனுக்குக் கொடுத்து, அதை டிரஸ்டிலே போட்டுள்ளதால், ப்ரீச்
ஆஃப் செட்டில்மென்ட் என்ற முறையிலே, அந்தத் தீர்ப்பை ஒழுங்காக அமுல்
படுத்தவில்லை என்பதற்காக இந்த அரசாங்கம் ப்ராசிகியூஷன் செய்தது
தவறா? தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணம் கிடைக்காமல்
குறைவாக ஒப்பந்தம் போட்டார்கள். ஸ்பெஷல் இண்டஸ்டிரியல் டிரிப்யூனல்
கொடுத்தது. அதன் தலைவர்கூட இறந்துவிட்டார். அதைக் குறைத்து
ஒப்பந்தம் போட்டது உண்டா? அது சரியா, தப்பா? இந்த அரசு தப்பு
என்று கருதுகிறது. அந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது. அதை
இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.
அங்கேயுள்ள யூனியன் சி.ஐ.டி.யூ. சங்கம்தான்.

(நண்பகல் 12-00)

**திரு. ஆ. நல்லசிவன்:** ஒரு 'இண்டஸ்ட்ரியல் டிரிபியூனல்' வழக்கை நடத்து
கிறது. தொழிற் சங்கத் தலைவர்கள்கூட இதுபற்றி விவாதித்தார்கள்.
மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சொல்கிறபடி பார்த்தால்,
அந்த பாரி அண்ட் கம்பெனியை விற்றால்கூட இப்பிரச்சினையைத் தீர்க்க
முடியாது. காரணம் 1½ கோடி ரூபாய்க்கு மேல் தேவை என்கிற பிரச்சினை
வருகிறபோது, கம்பெனியை விற்றால்கூட முடியாது. மேலும் 'தொழிலாளர்
சார்பாக வாங்கப்பட்டது அந்தப் பணம்', என்று இங்கே மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முதலில் அந்த வழக்கு செஷன்ஸ்
கோர்ட்டில் நடந்தது. பிறகு அரசாங்கத் தரப்பிலிருந்து அப்பீல் செய்யப்
பட்டது. ஹைக்கோர்ட்டுக்குக் கூட அது போனது. ஏறத்தாழ 2 ஆயிரம்
தொழிலாளர்கள் வேலை செய்கிற தொழிற்சாலை அது. ஒரே ஒரு தொழிற்
சங்கம் கொண்டது அந்தத் தொழிற்சாலை. சி.ஐ.டி.யு. என்கிற ஒரே ஒரு
தொழிற் சங்கம்தான் இந்த 2 ஆயிரம் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில்.

[திரு. ஆ. நல்லசிவன்]



ஆதரவாகத் தீர்ப்பு வந்தால், அதன்படி முதலாளிகள் நடக்க நிச்சயம் ஸ்டிரைக் நடக்கும். 1½ லட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்கள் ஒட்டுமொத்தமாக ஸ்ட்ரைக் செய்ய ஆரம்பித்தால், அப்போது நிலைமை என்ன ஆகும் என்பதை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அன்றைக்கு அமைச்சர் அவர்கள் இதற்கு பதில் சொல்ல வேண்டியிருக்கும். கோர்ட்டு தீர்ப்பைக் காட்டி முதலாளிகளுக்கு ஆதரவாக நடக்கலாமென்று அரசு நினைக்கிறது. நாங்கள் நோட்டீஸ் கொடுத்தவுடன், அரசு தொழிலாளர்களின் நலன் கருதி, முதலாளிகளிடம் கொடுக்கும்படி வற்புறுத்திச் சொல்லியிருக்க வேண்டும். அவர்களும் கொடுத்திருப்பார்கள் ஆனால் தொழிலாளர்களுடைய நலன் கருதி ஒரு பிரச்சினை வருகிறதென்றால், உடனே அரசு வெளியே போய்விடுகிறது. இந்த அரசுக்கு ஆதரவு தெரிவித்து 9 ஆம் தேதி ஆர்ப்பாட்டம் பண்ணியிருக்கலாம். ஆனால் இவர்களுடைய தொழிற் சங்கங்களுடைய பலம் என்ன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியும். இந்தப் பிரச்சினையைக் கோர்ட்டுக்குக் கொண்டுபோய் விட்டதன் காரணமாக, தொழிலாளர்களுக்கு மிகப் பெரிய இழப்பு ஏற்பட செய்துவிட்டார்கள். கோயம்புத்தூரிலுள்ள 1½ இலட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கும் எதிராக ஒருவேளை கோர்ட்டு தீர்ப்பு அமைந்துவிடுமே யானால், அதனால் ஏற்படுகிற அனைத்து விளைவுகளுக்கும் இந்த இலாகாவும், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும், இன்னும் சொல்லப் போனால் இந்த அமைச்சரவையே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டி யிருக்கும். 1½ இலட்சம் தொழிலாளர்களுக்கு எதிராக, அவர்களுடைய நியாயமான கோரிக்கைக்கு எதிராக, அவர்களுடைய எண்ணங்களை மீறி இப்படி அரசாங்கம் ஒரு காரியத்தில் இறங்கியது நியாயம்தானா? சட்டங்கள் என்ன கூறினாலும்கூட, தொழிலாளர்களுக்கு உண்மையிலேயே நன்மை செய்ய வேண்டுமென்று ஒரு அரசாங்கம் கருதினால், தொழிலாளர்களுக்குச் சாதகமாக சட்டங்களைப் பயன்படுத்த பல்வேறு வழிவகைகள் இருக்கின்றன. நேரம் ஆகிக்கொண்டிருக்கிற காரணத்தால், நான் அவைகளையெல்லாம் விவரமாகச் சொல்ல விரும்பவில்லை. சுருக்கமாக ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி என் உரையை முடித்துவிடுகிறேன்.

(பிற்பகல் 12-10)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நானும் ஒரு பஞ்சாலைத் தொழிலாளி என்ற அடிப்படையில் உறுப்பினர் அவர்கள் பேச வேண்டுமென்று கருதுகிறேன். ஆனால் மேலவைத் துணைத் தலைவர் என்று இருப்பதால், காலத்தைக் கருதி உறுப்பினர் அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று நினைக்கிறேன்.





**திரு. ஆ. நல்லசிவன் :** உங்கள் நிலை புரிகிறது. நானும் அதிக நேரம் எடுத்துக் கொள்ளவில்லை. ஒரே ஒரு கருத்தைச் சொல்லிவிட்டு முடித்துக் கொள்கிறேன். அதேபோல், குமரி மாவட்ட ரப்பர், அங்கே 2,100 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் போனஸ் கேட்டுப் போராடினார்கள். கொடுக்க முடியாததற்குக் காரணம் என்ன என்று கேட்டால், டிபார்ட்மெண்ட் பணம் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். ஆனால் நாங்கள் எடுத்துக் காட்டினோம். பேமெண்ட் ஆப் போனஸ் ஆக்ட்படி மாநில அரசுக்கு மட்டும் சம்பந்தம் இல்லை. மத்திய அரசுக்கும் சம்பந்தம் உடையது என்று சொன்னோம். மத்திய அரசின் தபால் துறையும், ரயில்வே துறையும் டிபார்ட்மென்ட்தான். சட்டத்தில் அங்கே போனஸ் கொடுக்க இடம் இருக்கிறது. அங்கே டிபார்ட்மென்ட்டாக இருந்தாலும் போனஸ் கொடுக்கிறார்கள். அதைக் காரணமாகக் காட்டி நீங்களும் தரலாம் என்று சொன்னோம். ஆனால் இங்கே டிபார்ட்மென்ட்டுக்குக் கிடையாது என்று கூறி அதைக் கைவிட்டார்கள். ஆனால் 136 நாளைக்குப் பிறகு, டிபார்ட்மென்ட் ரப்பர் கம்பெனியை கார்ப்பரேஷனாக மாற்றினால் போனஸ் தரமுடியுமென்று சொன்னார்கள். அப்படி அட்டானமஸ் கார்ப்பரேஷனாக மாற்ற வேண்டுமென்று 136 நாள் ஸ்டிரைக்குக்குப் பிறகு, இவ்வளவு அதிகமான ரப்பர் உற்பத்தி குறைந்ததற்குப் பிறகு மாற்றியிருக்கிறார்கள். அதற்கு முன்பே மாற்றி ஒரு 8.5 சதவீதம் போனஸ் கொடுத்திருக்கக்கூடாதா? நாலரை மாதத்திற்கு முன்பே மாற்றியிருக்கக் கூடாதா? இதை டிபார்ட்மென்ட் போனஸ் என்று கொடுத்திருக்கக் கூடாதா? சட்டத்தை அரசு எப்படிப் பார்க்கிறது என்றால், தொழிலாளர்களுக்கு என்று தாங்கள் வந்தால் அவர்களை எப்படி நெருக்க வேண்டும் என்று பார்த்து, அவ்வளவும் முடியாமல் போனால்தான் மாற்றுகிறதே தவிர அவ்வளவு சீக்கிரமாக சட்டத்தை தொழிலாளர்களுக்குச் சாதகமாக மாற்றுவது இல்லை. அது மாதிரி, டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மென்ட்டில் போனஸ் கொடுத்திருக்கிறார்கள். எப்படிக் கொடுத்தார்கள் என்றால், அதுதான் வேடிக்கை. டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மென்டில் போனஸ் ஆக்ட்டுக்கு வெளியிலே கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு போனஸ் ஆக்ட்டுக்கு வெளியே கொடுங்கள் என்று கேட்டபோது மறுத்தார்கள். பஞ்சாலை முதலாளிக்கு அரசு சிபாரிசு செய்திருந்தால், கிடைத்திருக்கும். அப்படி சிபாரிசு செய்யவில்லை. ஆனால் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனுக்குப் போனால், உங்கள் கணக்குப்படி குறைவாக வந்தால், அதைக் கொடுக்கிறீர்கள். இன்னொன்று, தொழிலாளர்களுக்காக, அவர்கள் சங்கத்துடன் பேசுகிறார்கள். திடீரென்று ஏதாவது அறிவித்து விடுகிறார்கள். பஞ்சாயில் உள்ள பிரச்சினை தீர வேண்டுமென்றால், அகாலிகளால்தான் முடியும் என்று அந்த அம்மாவுக்கு தெரிகிறது. ஆனால் ஏதாவது அகாலிகளுக்குச் சாதகமாக, அவர்கள்

அதனால் ஒரு பிரச்சினை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சி.ஐ.டி.யு. தொழிற் சங்கம் என்றால் பிடிக்காது. சட்டம் அனுமதிக்கிறதாலும், தொழி லாளர்கள் ஆதரவு இருப்பதாலும்தான் நாங்கள் அப்படி வைத்திருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** சி.ஐ.டி.யூ. தொழிற் சங்கத்தை அமைச்சருக்குப் பிடிக்காது என்பது சரியல்ல. பொதுவாகவே, ஒரு தொழிற் சாலையை மூடுவதற்கு முன்னால் அனுமதி வாங்கிவிட்டுத்தான் மூட வேண்டும். அதுதான் சட்டம். அதைக்கூட அவர்கள் செய்யவில்லை. 1976 என்று நான் கருதுகிறேன். திரு. இரகுநாத ரெட்டி அவர்கள் அமைச்சராக இருந்தபோது கொண்டுவரப்பட்டது இச்சட்டம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்போதும் இந்த அப்ரோச்சைக் கையாள வேண்டும். தொழிலாளர்களின் நலன் கருதித்தான், அந்தத் தொகையை நாங்களே குறைத்துப் பேசி வாங்கி விட்டோம். நாங்கள் நியாயமாகச் செய்வதைக்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறு என்று சொல்கிறார்கள். ஒன்றை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். தொழிற் சங்கம் சொன்ன தொகையைவிட குறைவாகப் பெற்றுக் கொண்டு, 2 இலட்சம் ரூபாயை வங்கியில் போட்டோம். இப்படி குறைத்துக் கொண்டு, 2 இலட்சம் ரூபாயை நாங்கள் வாங்கியது சரியா தவறா என்று நீதி மன்றம் தீர்ப்பு கொடுக்க வேண்டாமா? மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டமாதிரி, அமைச்சருக்குப் பிடித்த தொழிற் சங்கம், பிடிக்காத தொழிற் சங்கம் என்பது என்றைக்குமே இல்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** இப்படி 2 ஆயிரம் பேர் வேலை செய்கிற ஒரு தொழிற் சங்கத்திற்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டாமா? தொழிலாளர் நலனைக் கருதும்போது அரசாங்கம் ஹைக்கோர்ட், சுப்ரீம் கோர்ட் என்று செல்ல வேண்டும். எப்போதுமே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு தரப்பிலிருந்து இப்பிரச்சினையை அணுகுகிறார்கள். முதலாளி சாப்டா இல்லையா என்று பார்க்கிறார்கள். ஒரு தொழிலாளர் அரசு என்று அரசு சொல்லிக்கொண்டிருக்கும் நிலையில், நான் நடைமுறையில் தொழிலாளர் களுக்கு இருக்கிற பிரச்சினைகளையும், அதை அணுக வேண்டிய முறைகளைப் பற்றியும் சொல்லும்போது, அமைச்சருக்குக் கோபம் வருகிறது.

அடுத்து, இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்டில் 10 (பி) என்கிற ஒரு திருத் தத்தைக் கொண்டு வந்தார்கள். ஒரு ஸ்ட்ரைக் அல்லது லாக் அவுட் வரும் போது அதைத் தடை செய்வதற்கான சட்டம். ஏதாவது ஒரு சலுகையை முதலாளி தொழிலாளர்களுக்குக் கொடுத்து, அதை தொழிலாளி ஏற்காத





நிலையில் தொழிலாளர்கள் கோர்ட்டுக்குப் போகலாம். ஒரு பார்கெயின்
என்று வரும்போது, முதலாளிகளிடமிருந்து அதிகம் வாங்கி தொழிலாளர்
களுக்குக் கொடுக்க வேண்டும்.

நான் பேசிக் கொண்டிருக்கும்போது இங்கே மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் விளக்கம் தந்து கொண்டிருக்கிறபடியால், நான் இன்னும் கொஞ்சம்
நேரம் அதிகமாகப் பேச மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் அனுமதிக்க
வேண்டும். இன்னும் கொஞ்ச நேரத்தில் முடித்துக்கொள்கிறேன். 10 (பி)
சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தபோது, நாங்கள் ஆட்சேபித்தோம்.
அப்போது அமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டிலே நீண்ட நாட்களாக தொழிற்
சாலைகளில் ஸ்ட்ரைக் நடப்பதைத் தவிர்க்கத்தான் இது கொண்டு வரப்படு
கின்றது என்று சொன்னார்கள். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில்,
முதலாளிக்கு அல்ல, தொழிலாளிக்குச் சாதகமான சட்டம் என்றும் சொன்
னார்கள். 1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1½ இலட்சம் பஞ்சாலைத்
தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டார்கள். அவர்
களுக்கு வழங்கப்பட்ட போனஸ் குறைவு. 1964-லிருந்து 18 ஆண்டுகளாக
குறைவான போனஸ், கோயம்புத்தூர் பஞ்சாலைத் தொழிலாளர்களைப்
பொறுத்தவரையில், வழங்கப்பட்டு வந்தது. 1982-ல் தான் மூன்றாண்டு
ஒப்பந்தம் முடிந்து போனது. மீண்டும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட வேண்டும்.
அது தாவாவுக்கு வந்தபோது, மில் முதலாளிகள் போனஸ் சட்டப்படி
போனசைக் குறைவாகத்தான் தருவோம் என்றார்கள். 18 வருடங்களாகக்
கொடுத்து வந்ததைக் குறைத்து விட்டார்களே என்கிற எண்ணத்தில் அது
குறித்து நோட்டீஸ் கொடுத்தோம். இப்படி எங்கள் தொழிற் சங்கத்தின்
சார்பாக நோட்டீஸ் கொடுத்தவுடன், கோர்ட்டுக்குப் போய்விட்டார்கள்.
நாங்களாக வேலை நிறுத்தம் செய்து, எங்களால் தாக்குப் பிடிக்க முடியாமல்
'வித்ட்ரா' பண்ண ஒன்றும் கேட்கவில்லை. 18 வருடங்களாக ஒப்பந்த
அடிப்படையில் போனஸ் வழங்கப்பட்டிருக்க இப்போது மட்டும் திடீரென்று
கோர்ட்டுக்குப் போனால், அதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? நாங்கள்
போனஸ் குறைவு என்று வாதாட உரிமை இருக்கிறது. புரவிஷன் இருக்கிறது.
அதன் அடிப்படையில் இந்த ஆண்டு போனஸ் வேண்டுமென்று கேட்கிறபோது,
அதைக் கொடுக்க முதலாளி முன்வராதபோது, அரசு தொழிலாளர்களுக்கு
ஆதரவாக இருந்திருக்க வேண்டாமா? தொழிலாளர்கள் கேட்டது நியாயமான
கோரிக்கை. ஆனால் நாங்கள் ஸ்டிரைக் பற்றி நோட்டீஸ் கொடுத்த பிறகு,
அரசாங்கம் முதலாளிக்குப் பாதுகாப்பாக இப்பிரச்சினையை கோர்ட்டுக்குக்
கொண்டு போயிருக்கிறது. இன்றைக்கு கோர்ட்டிலிருந்து 'போனஸ்
பேமென்ட் ஆக்ட்' பிரகாரம் கம்பெனி கொடுத்தது நியாயம்தான், குறைந்த
பட்ச போனசைத்தான் கொடுக்க முடியும் என்கிற வகையில் முதலாளிகளுக்கு

[திரு. ப. மாணிக்கம்] [1983 ஏப்ரல் 11

கொள்கை என்ன? வேலை நிறுத்தம் தொழிலாளர்களுடைய உரிமை. அதை ஒப்புக் கொண்டுவிட்ட பிறகு, அதை மறுக்கிற காரியங்களைத் தொடர்ந்து செய்கிறார்கள். இதுதான் பிரச்சினை. ஒப்புக் கொண்டதை, ஏற்றுக் கொண்டதை நிறைவேற்றாமல் இருப்பதை, நான் மோசடி என்று சொல்ல மாட்டேன், அது கொடுமை என்று சொல்கிறேன். நடைமுறையில் அதை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அதனால் அரசுக்குச் சீர்குலைவுதான் வரும்.

(பிற்பகல் 12-20)

நான் இதைத் தத்துவத்திற்காகச் சொல்லவில்லை. யார் ஒரு கொள்கையை ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்கள் அந்தக் கொள்கையை நிறைவேற்றவில்லை என்றால்—அந்த அமைப்பு கண்டிப்பாகச் சீர்குலையத்தான் செய்யும். அரசியல் கட்சியானாலும் சரி, ஒரு தொழிற் சங்கமானாலும் சரி அல்லது ஒரு அரசே யானாலும் சரி, இந்த நிலை பொருந்தும். இந்த அரசைப் பொறுத்த வரை யில், தொழிலாளர் நலனில் எவ்வளவு அக்கறை இருக்கிறது என்று அண்மையில் 9 ஆம் தேதி பார்த்தோம். சட்டப் பேரவையில் தொழிலாளர் நலத் துறை மானியம் வரும்போது இந்த அரசுக்கு வலுவூட்டுவதற்காக என்ற முறையில் ஒரு பக்கம் பெரிய பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது இந்த அரசு எந்த அளவுக்குத் தன்னுடைய கொள்கைக்கு வெளியேயிருந்து ஆதரவைத் திரட்டிக் கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம். இதே கொள்கையை நாங்கள் கையாண்டோமானால், இந்த நேரத்தில் பேரணி ஏற்பாடு செய்தால் அது அமைதியைக் குலைக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியம் வருகிற நாளன்று அதற்கு வலுவூட்டுவதற்காக பேரணி நடத்தப்படவில்லை. என்னுடைய தொழிலாளர் நலன் மானியம் முதலில் 6 ஆம் தேதி பேரவையில் வருவதாக இருந்தது. ஊர்வலம் 9 ஆம் தேதி வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அலுவல் ஆய்வுக் குழுவில் என்ன காரணத்திற்காகவோ அதை மாற்றி 9 ஆம் தேதி என்று வைத்துவிட்டார்கள். எனவே மானியமும், பேரணியும் 'சிங்க்ரனைஸ்' ஆகிவிட்டது. இதற்காக என்று அந்த நாளில் ஏற்பாடு செய்யப்படவில்லை. மானியம் அங்கே 6 ஆம் தேதி தான் வருவதாக இருந்தது. இதற்கெல்லாம் முன்பாக 28 ஆம் தேதி இந்த மானியம் எடுத்துக் கொள்ளப்படுவதாக இருந்தது. ஆனால் அன்று நீங்க ளெல்லாம் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டம் அதோடு சிங்க்ரனைஸ் ஆன காரணத்தால், 28 ஆம் தேதியிலிருந்து 6 ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப் பட்டது.



1983 ஏப்ரல் 11]

திரு. ப. மாணிக்கம் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. நான் இந்த அரசின் அணுகுமுறையைத்தான் இங்கே குறிப்பிட்டேன். எப்படியோ இந்த அரசுக்கு எதிராக ஒரு இயக்கம் நடத்தப்பட்டுவிட்ட காரணத்தால், அதற்கு இந்த வழியில் பதில் சொல்ல வேண்டும் என்று எண்ணி, சட்டமன்றப் பேரவையில் இந்த மானியம் விவாதிக்கப்படும்போது, அதற்குரிய முறையில் பதில் சொல்லியிருப்பதை நான் வரவேற்கிறேன். அப்படித்தான் வரலாற்றில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தெரியாமல் நாமே வந்து மாட்டிக் கொள்ள வேண்டியிருக்கிறது. நல்லது. அப்படியே நீங்களும் கொண்டு வாருங்கள், நாங்களும் கொண்டு வருகிறோம். அப்படி மக்கள் [illegible]சைய அசையத்தான் நாட்டில் மாறுதல்கள் ஏற்படும். ஆனால் நான் இங்கே குறிப் பிடுவது அதுவல்ல. அரசுக்கு இன்றைய தினம் ஏற்பட்டிருக்கிற அணுகு முறை நல்லதல்ல. தமிழகத்தில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதில் இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறதா, அதற்கான அணுகுமுறையைத்தான் இந்த அரசு கையாளுகிறதா என்று கேட்டால், உடனே மாண்புமிகு அமைச்[illegible] அவர்கள் எழுந்து "ஆம்" என்று சொல்லக்கூடும். அவர் எத்தனை முறை குறுக்கிட்டாலும், அதை நான் வரவேற்கிறேன். அதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. ஆனால் இதனால் என்னுடைய நேரம் குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

உண்மையிலேயே நாட்டில் உற்பத்தியை அதிகரிக்கவும், தொழிலாளர்களின் உரிமைகளை நிலை நாட்டவும் இந்த அரசு அக்கறை கொண்டுள்ளதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். என்னுடைய வர்தம், இந்த அரசைப் பொறுத்தவரையில், நாட்டில் உற்பத்தியைப் பெருக்குவதிலோ அல்லது தொழில் உறவைப் பாதுகாப்பதிலோ அக்கறை மிகவும் குறைவு. இதை நான் ஒரு குற்றச்சாட்டாகவே சொல்ல விரும்புகிறேன். அதற்கு நிறைய விவரங்கள் இருக்கின்றன. நான் இப்போது அதற்குள் போக விரும்பவில்லை. காரணம் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, பல விவரங் களை இங்கே எடுத்துக் கூறினார்கள். நான் ஒன்றிரண்டை மட்டுமே இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒரு கொள்கையை அறிவிப்பது முக்கியமல்ல. அதை எப்படி அமுல்படுத்தப் போகிறார்கள் என்பதுதான் முக்கியமாகும். நான் ஏற்கெனவே இந்த அவையில் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறேன். அதாவது

"Politicians are judged not by their words but their oonduct"

தலைவர்களுடன் ஒரு பக்கம் பேசிக்கொண்டிருக்கும்போதே, மத்திய அரசாங்கம் திடீரென்று ஏதாவது அறிவித்து விடுகிறது. மத்திய அரசாங்கத்தைப் பின்பற்றி, அந்த அம்மையாரின் முறைகளைப் பின்பற்றி, இந்த அரசும் அப்படியே. இந்த விஷயத்தில், தொழிற் சங்கத் தலைவர்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதே, முடிவு பெறாமல் திடீரென்று ஏதாவது அறிவித்து விடுகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது மத்திய அரசாங்கத்தை, ரயில்வே போனஸ், தபால் தந்தி துறை போனஸ் போன்றவைகளில் பின்பற்றக் கூடாதா என்று கேட்டார்கள். ஆனால் இதற்குள்ளாக இந்தப் பிரச்சினையில் மத்திய அரசைப் பின்பற்றுகிறீர்களே என்று கேட்கிறார்.

**திரு. ஆ. நல்லசிவன் :** உங்களை ஃபாலோ பண்ண வேண்டிய விஷயங்களில் ஃபாலோ பண்ணவில்லை, ஃபாலோ பண்ண வேண்டாத விஷயங்களில் ஃபாலோ பண்ணுகிறார்கள் என்றுதான் சொன்னேன். இதுதான் பிரச்சினை. இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையில் அவர்களிடம் பேசிக்கொண்டிருக்கிறபோது, அக்ரிமெண்ட் வருகிற வாய்ப்பு இருக்கும்போது, அப்படிச் செய்யாமல் திடீரென்று அறிவித்துவிட்டு, தொழிற் சங்கத் தலைவர்களுக்குப் பெயர் வந்துவிடுமோ என்று பார்க்கிறீர்கள். உங்களுடைய கொள்கை என்ன? தொழிற் சங்கத்தை அங்கீகரிக்கக்கூடாது போட்டி சங்கம் ஏற்படுத்த வேண்டும். ஒன்றுபட்ட ஸ்தாபனம் இருக்கக்கூடாது என்று பார்க்கிறீர்கள். அதை அங்கீகரித்தாலே முதலாளிகள் பயப்படுவார்கள். வீக்கர் செக்ஷன் என்று பேசிவிட்டு, அவர்களுடைய தொழிற் சங்கத்தை உடைத்து விடுகிறீர்கள். ஆகவே அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், நயவஞ்சகமான கொள்கை கொண்டிருக்கிறது. தொழிலாளர் அமைப்பை உடைப்பது, யூனியனை உடைக்கிறது என்ற நிலையில் இருக்கிறது. மத்திய அரசு உங்களுக்குப் பக்கபலமாக இருப்பது, ஆர்கனைஸ்டு லேபர் இருப்பதால்தான். உங்களுக்கு வேண்டுமென்கிறபோது இதை ஆதரிக்கிற மாதிரி பாவ்லா செய்தால், அது சரியாக இருக்காது. அதன்பிறகு அர்த்தாலை உடைப்பது, கரும்படை வைத்து தொழிலாளர்களை சிதறச் செய்வது போன்றவைகள் பலன் அளிக்காது என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு தந்ததற்கு முதலில் நன்றி கூறிக்கொள்கிறேன். அநேகமாக ஆண்டுதோறும் இந்தக் கொள்கைக் குறிப்பின்மீது இந்த அவையில் விவாதம்





நடந்து கொண்டே வருகிறது. ஆனால் கொள்கையில் ஏதாவது மாற்றம் இருக்கிறதா என்று சொன்னால், மாறுதல் வரவில்லை என்பதை முதலில் மிக அழுத்தமாகக் குறிப்பிட விரும்புகிறேன். இதிலே மாறுதல் வேண்டும். மாறுதல் இல்லாவிட்டால் அரசு தன்னுடைய காரியங்களைத் திறம்படச் செய்வதற்கும், தொழில் அமைதிக்கும் உதவி செய்ய முடியாது. அமைதி சில நேரங்களில்தான் கிடைக்கும். இந்த அறிக்கை பற்றி சில விபரங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். இதை அரசாங்கத்தின் கொள்கைக் குறிப்பு என்று சொன்னாலும்கூட, கொள்கைப் பிரச்சினைகளைவிட அநேகமாக அரசு செய்துள்ள நிர்வாகம் சம்பந்தமான விபரங்கள்தான் இதிலே அதிகமாக இருக்கின்றன. அரசுடைய கொள்கை குறித்து இதிலே தெளிவாகக் குறிப்பிடக்கூடிய அம்சங்கள் காணப்படவில்லை. காரணம், 1980-க்குப் பிறகு கையாண்டு வந்த சில கொள்கைகள் என்று பார்த்தாலும், அவர் கொடுத்திருக்கக்கூடிய விபரங்கள், வேலை நிறுத்தங்கள், மனித சக்தி இழப்புக்கள் என்பது பற்றி குறிப்பிட்ட அவர்கள், சென்ற ஆண்டு வேலை நிறுத்தம் குறைவு என்று கூறுகிறார்கள். அவர்கள் மட்டுமல்ல, சில பத்திரிகைகளும் அப்படிப்பட்ட வியாக்கியானங்களை எழுதுகின்றனர். வேலை நிறுத்தங்கள் அதிகமாக வேண்டுமா, குறைவாக வேண்டுமா என்று பார்த்தால், நான் சார்ந்திருக்கிற கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைமையை மட்டும் தெரிவிக்கிறேன், வேலை நிறுத்தம் எப்படியாவது வேண்டுமென்ற ஆசை, கொள்கை கிடையாது, ஆனால் பிரச்சினைகள் தீரவேண்டும் என்பதுதான். வேலை நிறுத்தங்கள் மூலமாக தமிழகத்தில் சமுதாய மாற்றமும், அதன் மூலம் ஆட்சி மாற்றமும் ஏற்பட வேண்டுமென்பது இல்லை. அப்படி விரும்பினாலும் சமுதாய மாற்றத்திற்குச் செய்ய வேண்டிய பல காரியங்களில், தொழிலாளர்களைத் திருப்தி செய்ய வேண்டியதும் ஒன்று. அதை மாற்றினால் மட்டுமே ஆட்சி மாறும் என்ற சித்தாந்தம் எங்களுக்கு இல்லை. ஆனால் ஒரு அரசாங்கம் தொழிலாளர் பிரச்சினையில் கையாள வேண்டிய நடைமுறைகளைக் கூற விரும்புகிறேன். மாநில அரசுகள் பல சட்டங்கள் போடுகின்றன; மத்திய அரசும் சட்டங்கள் போடுகிறது. பெரும்பாலும் மத்திய சட்டங்களைப் பின்பற்றித்தான் மாநிலச் சட்டங்கள் வருகின்றன. அப்படி கையாளக்கூடிய கொள்கைகளைத் தயாரிக்கும் என்று சொல்கிறபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இறுதியாக பதில் உரைக்கும்போது கூட இந்த அரசின் கொள்கை என்ன என்று அறிவிப்பார்கள். இதுவரையில் அறிவித்த கொள்கை, தமிழகத்தில் தொழில் அமைதி வேண்டும் என்பதுதான். இன்றைக்குப் பாதுகாப்பாக உபயோகிக்கிறார்கள், இந்தியா ஒரு 'டெவலப்பிங் கண்ட்ரி' என்று. இந்த வார்த்தைகள் பேச அழகாக இருக்கின்றன. இந்தியா வளர்ச்சி பெறுகிற நாடு. இதற்கேற்ற கொள்கை வருமானால் அதை நாங்களும் ஆதரிக்கிறோம். ஆனால் கையாளக்கூடிய

[திரு. ப. மாணிக்கம்] [1983 ஏப்ரல் 11

எனவே இந்த அரசு என்ன கொள்கையை அறிவிக்கிறது என்பதல்ல முக்கியம். இது எப்படி நடந்து கொள்கிறது என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். நாட்டில் உற்பத்தி அதிகரிக்க வேண்டும். தொழில் உறவு பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், எங்காவது தொழில் உறவு கெடக்கூடிய பிரச்சினை எழுந்தால், அதற்குத் தமிழக அரசின் அணுகுமுறைதான் காரணம். இதற்கு 1980 ஆம் ஆண்டுக்கு முன்னாலே இருந்து உதாரணங்களைச் சொல்ல முடியும் என்றாலும், தற்போது அவை வேண்டாம். 1980 ஆம் ஆண்டுக்குப் பிறகு நடைபெற்ற சம்பவங்களை மட்டுமே நான் இங்கே குறிப்பிட விரும்பு கிறேன். பல்வேறு இடங்களில் இந்த அரசால் அறிவிக்கப்பட்ட கொள்கை, தெரிவிக்கப்பட்ட கொள்கை என்ன என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இப்படி இருந்தும், தொழிலாளர் பிரச்சினை காரணமாக எங்காவது வேலை நிறுத்தம் போன்ற பிரச்சினைகள் உருவானால், அதில் அரசாங்கத்தின் தலை யீட்டை நாம் விரும்பாமல், நேரடியாக நிர்வாகத்தோடு "பை-லேட்டரல் டாக்ஸ் ஆர் பெட்டர்"—என்ற முறையில் நேரடிப் பேச்சுவார்த்தைகளைத்தான் மேற் கொண்டிருக்கிறோம். காரணம் அரசின் தலையீடு காரணமாக எல்லாப் பிரச்சினைகளிலும் ஒரு இழுபறி நிலை ஏற்படுகிறது என்பது மல்ல. தொழிலாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய நியாயமான சலுகைகளும்கூட கிடைக்காமல் போய் விடுகின்றன. இந்தக் காரணத்தால்தான்—பை-லேட்ட ரல் டாக்ஸ் ஆர் பெட்டர்—என்று தொழிற் சங்கங்களே முடிவு செய்கின்றன. இது எனக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்ல சிவன் அவர்கள் எப்படி பாரி அண்டு கம்பெனி 1 கோடி ரூபாய்க்கு மேல் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு, அது என்னவாயிற்று என்று சொன் னார்கள். ஒரு டெவலப்பிங் கன்ட்ரியில் ஒரு இண்டஸ்ட்ரியின் பேயிங் கெப்பா சிட்டி என்ன என்பதைப் பார்த்துத்தான் சொல்கிறோம். எங்களைப் பொறுத்தவரையில், இந்த நாடு விடுதலை பெறுவதற்கும், அதற்குப் பிறகு இந்த நாடு நல்ல முறையில் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காகவும் தொடர்ச்சி யாக ஒரு கொள்கைப் பிடிப்போடு சேவை செய்து, தியாகம் செய்துகொண்டு வருகிறோம். இதில் எங்களோடு போட்டி வேண்டாம். இருந்தாலும், நாங்கள் போட்டி போடவும் தயாராக இருக்கிறோம். இந்த நிலையில் தான் தொழிற் பிரச்சினைகள் ஏற்படும்போது, "பை-லேட்டரல் டாக்ஸ் ஆர் பெட்டர்" என்று போகிறோம். காரணம் அரசாங்கம் இந்தப் பிரச்சினைகளில் தலையிட்டால், அதனால் ஏற்படுகிற சிக்கல்களுக்குள் நான் போக விரும்பவில்லை—அப்படிப் போனால் அவை விரசமாகவும், விரும்பத் தகாதனவாகவும் இருக்கும். எனவே



1983 ஏப்ரல் 11] [திரு. ப. மாணிக்கம்]

ஒரு இண்டஸ்ட்ரியின் 'பேயிங் கெப்பாசிட்டி' என்ன என்று பார்த்துத்தான் ஒரு முடிவுக்கு வருகிறோம். இதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்ல சிவன் அவர்கள் தலைமை ஏற்றிருக்கிற பிரிவானாலும் சரி, என்னைச் சார்ந்த நண்பர்கள் இருக்கும் பிரிவானாலும் சரி, மேற்கொண்டு வருகிறோம். இவ்வாறு நாங்கள் மேனேஜ்மென்ட்டோடு நேரடியாகப் பேசுவதன் மூலமாக பல்வேறு சலுகைகள் கிடைக்கின்றன. இதன் காரணமாக பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் எளிதாகக் காண முடிகிறது. அரசாங்கம் அப்படியும் சில இடங்களில் தலையிட்டு அதன் காரணமாக 'பை லேட்டரல் டாக்ஸ்' நடைபெறாமல் செய் திருக்கிறார்கள். நான் அந்த விவரங்களுக்குள்ளே இப்போது போக விரும்ப வில்லை.

தமிழ் நாட்டில் மின்சார நெருக்கடி ஏற்பட்டது. இது ஒரு வளர்ந்து வருகிற நாடு. முன்னேற்றத்தில் அக்கறை உள்ள அரசைக் கொண்ட நாடு. இவ்வாறு மின்சார நெருக்கடி ஏற்பட்டதன் காரணமாக, 15 நாட்களுக்கு பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டன. இந்த மின்சார உற்பத்தி குறித்து அரசு முன்கூட்டியே திட்டமிட்டிருக்கக் கூடாதா? கேட்டால் "கோல் அண்ட் காம்பனென்ட்ஸ்" இல்லை என்று சொன்னார்கள். நிலக்கரியும் உதிரி பாகங்களும் சரியில்லை என்று சொன்னார்கள். இதெல்லாம் ஒரு அரசுக்கு முன்கூட்டியே தெரியாதா? இதற்கு முன்னமேயே ஏற்பாடு செய்திருக்கலாமே. உற்பத்தியில் ஒரு அரசுக்கு அக்கறை இருக்கிறது என்றால் முன்கூட்டியே இதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்திருக்க வேண்டாமா? பிறகு டீசல் ஜெனரேட்டர்கள் சப்ளைக்கு டிட்கோ மூலம் கடன் தருவதாக அறிவிக்கப் பட்டது. எதற்காக அறிவிக்கப்பட்டது? ஜெனரேட்டர்களைப் பயன்படுத்திக் கொள்ள? இடைக்காலத்தில் ஏன் அவ்வளவு ஜெனரேட்டர்கள் விற்பனை ஆயின? ஜப்பான் ஜெனரேட்டர்கள் எதற்காக அவ்வளவு பெரும் எண்ணிக்கையில் விற்பனை ஆனது? அந்த விவரத்திற்குள் எல்லாம் நான் இப்போது போக விரும்பவில்லை. இந்த ஜெனரேட்டர்களை ஜவுளிக் கடைக்காரர்களும், சில்லரைக் கடைக்காரர்களும்தான் வாங்கி உபயோகப்படுத்தினார்கள். இதைச் சொல்வதற்குக் காரணம் ஏன் அரசு மின்சார உற்பத்தியில் அக்கறை இல்லாமல் போனது? பிறகு நிலைமையைச் சமாளிக்கிறார்கள். எனவேதான் சொல்லு கிறேன் ஒரு கொள்கை அறிவிப்பு அல்ல முக்கியம், அரசு நடைமுறையில் எப்படி நடக்கிறது என்பதுதான் முக்கியம். கொடுக்கப்படும் ஜெனரேட்டர்கள் சின்னஞ்சிறு தொழிற்சாலைகளுக்குத் தரப்படும் என்று அறிவித்தார்கள். அதன் விளைவாக தமிழகத்தில் உள்ள பொருள் உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கும் மிகப் பெரிய தொழிற்சாலைகள் மூடப்பட்டன. காரணம் சொல்லப்பட்டது.

விவசாயத்திற்குத் தருவதாக அப்போது சொல்லப்பட்டது. காரணம் அந்த நேரம் உணவு உற்பத்தி பாதிக்கப்படக் கூடிய நேரமாக இருந்தது. அதனால் விவசாயத்திற்கு முன்னுரிமை என்றார்கள். சரி. இருக்கிற கொஞ்ச மின்சாரத்தையும் விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுத்துத் தந்தார்கள். முதலில் அந்தக் கொள்கை எங்கே போயிருந்தது? இதனோடு லேபர் பாலிசி சேர்ந்து வரவில்லையா? தொழிலாளர் கொள்கை என்பது தனியாக இருக்கிறதா? இப்படி அரசின் கோளாறு காரணமாக, தொழில் துறை மிகவும் பாதிக்கப்பட்டு, தொழிலாளர்களுக்கு வேலையில்லாத நிலைமை ஏற்பட்டது. டெவலப்பிங் கண்ட்ரியில் இருக்கிற தொழிலாளர்கள் பட்டினியால் இறக்க வேண்டும் என்றும் தொழில் முனைவர்கள் நிறைய லாபம் சம்பாதிக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறதா? இப்படி யாரும் சொல்லவில்லை.

இறுதியில் மின்சார உற்பத்தியை அபிவிருத்தி செய்து மீண்டும் தந்தபோது கூட, மின்சார உபயோகத்திற்கு சர்சார்ஜ் போட்டார்கள். தொடர்ச்சியாக மின்சாரத்தை உபயோகிக்க வேண்டிய தொழில்களான "கெமிக்கல் பெர்ட்டி லைசர்ஸ்" "தாரங்கதாரா" போன்ற தொழிற்சாலைகளுக்கு சர்சார்ஜ் போட்ட தன் காரணமாக அவர்கள் தங்களுடைய உற்பத்திச் செலவு அதிகமாகிறது என்றும் இதனால் தாங்கள் தயாரிக்கும் பொருள்களை வெளி மார்க்கெட்டில் போட்டி போட்டுக் கொண்டு விற்க முடியாத நிலை உருவாகியிருப்பதாகவும் தெரிவித்தார்கள். அரசிடம் அவர்கள் முறையிட்டார்கள். அரசு அதைக் கேட்கவில்லை. தொழிலாளர்கள் தங்களுக்கு வேலை போகிறது என்று முறை யிட்டார்கள். நானும் இதே அவையில் மின்சார வாரியம் குறித்துப் பேசும் போது சொன்னேன். அப்போதும் அரசு அதைப் பரிசீலிக்கத் தயாராக இல்லை. பிறகு அவர்கள் தொழிற்சாலையை மூடிய பிறகு, அரசு இந்தப் பிரச்சினையை மீண்டும் பரிசீலிக்கிறோம் என்று வந்தது. அப்போது தொழிற் சங்கங்கள் எல்லாம் அரசைப் பார்த்து, இப்படி தொழிற்சாலையை மூட விடக் கூடாது, சர்சார்ஜ் அதிகமாகப் போடக்கூடாது, இதனால் உற்பத்திச் செலவு தான் அதிகரிக்கும் என்று சொன்னபோதும் . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : விவாதம் நிறைவு எய்தும் வரை, அவையின் அனுமதியோடு, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

(பிற்பகல் 12-30)

**திரு. ப. மாணிக்கம்** : எனவே அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். எனவே தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தத்தின் மூலம் உருக்குலைய வேண்டுமென்ற நிலையில் இல்லை. அதற்கு மாறாக தொழிலைக் காப்பாற்ற





தொழிற் சங்கங்கள் பயன்படுகின்றன. வேலை நிறுத்தத்தின் மூலமாக தொழில் அமைதி சீர்குலைகிறது, உற்பத்தி பாதிக்கப்படுகிறது என்று இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. உற்பத்தியைப் பெருக்குவதிலும், தொழில் அமைதியைப் பாதுகாப்பதிலும் தொழிற் சங்கங்களுக்கு அக்கறை உண்டு. நேரிடையாக அதிகார வர்க்கம் இதிலே தலையிடாவிட்டால், இந்தத் தொழிற் சங்கங்கள் நிச்சயமாக இந்தக் கொள்கைகளை நிறைவேற்றும், பின் பற்றும். இந்தக் கொள்கையை தொழிற் சங்கங்கள் நேற்றும் பின்பற்றி வந்தன, இன்றும் பின்பற்றி வருகின்றன, நாளையும் பின்பற்றி வரும். அரசு இதை அறிவிக்கிறதே தவிர, அதிலே உண்மையான அக்கறை அரசுக்கு இல்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அரசு சமீப காலத்திலே தொழிற் சங்கங்களுக்கு இடையில் போட்டியை உண்டாக்கி, சில குறிப்பிட்ட சங்கங் களுக்கு அரசு ஆதரவு அளித்து, அதிலே தலையிட்டு பிரச்சினைகளைத் தீர்க் கிறது, அல்லது அவர்கள் விரும்புகிற வழியில் தொழிலாளர்களுக்கு நன்மையைப் பெருக்க காரியம் செய்து கொண்டிருக்கிறது. இந்தக் கொள்கையை அரசு கைவிட வேண்டும்.

இந்த அரசு தொழிலாளர்கள் நலனில் அக்கறையுள்ள அரசு என்று சொன்னாலும், உண்மையிலேயே தொழிற் சங்கங்களுக்கிடையில் போட்டியை உண்டாக்கி, தானே ஒரு சங்கத்தை ஊக்குவித்து, அந்தத் தொழிற் சங்கத்திற்கு சலுகைகளைத் தருவது என்பதும், அந்தச் சங்கங்கள் மூலம் தொழிலாளர் களுடைய நலனுக்கான கோரிக்கைகள் வந்தால், அவற்றை நிறைவேற்றுவது என்பதும் மற்ற சங்கங்களிடமிருந்து கோரிக்கைகள் வந்தால், அவற்றைச் சீர்குலைக்க இந்தச் சங்கங்களைப் பயன்படுத்துவது என்ற போக்கும் சமீப காலத்திலே அதிகமாக இருக்கிறது. ஒவ்வொரு கட்சியும் தனக்கு ஆதரவாகத் தொழிலாளர்களைத் திரட்ட வேண்டும் என்று முயற்சிப்பது அவர்களுடைய உரிமை. அப்படிச் சங்கங்களை அரசு ஆதரவுடன் ஊக்குவிப்பது முதல் தடவையல்ல. சுதந்திரத்திற்குப் பிறகு, இது தொடர்ந்து நடந்து கொண்டிருக் கிறது. முன்பு ஐ.என்.டி.யூ.சி. இப்போது பேரவை. நாளைக்கு வேறு ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தால், தனக்கென்று ஒரு பேரவையை வைத்துக் கொள் ளும். ஆனால் பிரச்சினைகளைத் தீர்க்கும்போது, திட்டமிட்டு அதன் மூலம் வந்தால்தான் தீர்ப்போம் என்பது சரியல்ல. கூட்டுறவுச் சங்கத்தை எடுத்துக் கொண்டால், டிரான்ஸ்பர், வேஜ் ரிவிஷன் ஆகியவைகள் எல்லாம் செய்ய வேண்டும் என்றால், எங்கள் சங்கத்திற்கு வாருங்கள் என்று பகிரங்கமாக வெளி யிட வேண்டுமா? கொள்கையை வைத்து ஆதரவு திரட்டுவதில் ஆட்சேபணை இல்லை. ஒரு காலத்திலே, ஆட்சிக்கு வருவதற்கு முன்பு கிளர்ச்சியில் ஈடு பட்டிருந்த இன்றைய ஆளும் கட்சி நியாயத்திற்குச் சண்டை போட்டபோது.

அதற்குத் துணை நின்றது. எனவே நியாயம் இருந்தால், ஏற்க வேண்டும். ஆனால் நியாயமான உரிமையைப் பெற கிளர்ச்சியைச் செய்யும்போது, அதை ஒடுக்குவதற்கு, மற்றொரு சங்கத்தைப் பயன்படுத்தி சீர்குலையச் செய்வது என்பது நல்லதல்ல. இன்றைக்கு அதிகாரம் இருப்பதால், அதைச் சுலபமாகச் செய்யலாம். அது இனிமையாக இருக்கலாம். அதுவே பின்னர் ஆபத்தாக முடியும் என்பதை மட்டும் சொல்லி எச்சரிக்க விரும்புகிறேன்.

இன்னுமொரு பிரச்சினை இந்த அவையிலே கிளப்பப்பட்டது. அரசு கொண்டு வந்திருக்கும் கொள்கைக் குறிப்பிலே இல்லாவிட்டாலும், சொல்ல விரும்புகிறேன். விவசாயத் தொழிலாளிகள் ஏர், கலப்பையோடு உழவு செய்தால் 18 ரூபாய் என்று அறிவித்தார்கள். இதை அமுல்படுத்த வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம், சண்டை போட்டுக் கொண்டிருக் கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கூட அதை இங்கே கிளப்பினார்கள். விவசாய விளைபொருள்களுக்குக் கட்டுபடி யாகக் கூடிய விலை நிர்ணயிப்பதைப்பற்றி அரசு கவனிப்பதில்லை. நாங்கள் எப்படி தொழிலாளிக்கு நியாயமான ஊதியம் கொடுக்க வேண்டும் என்று போராடுகிறோமோ அதே உரிமையுடன், அதே கொள்கைத் தெளிவுடன் விவசாய விளைபொருள்களுக்கு விலை நிர்ணயிக்க வேண்டும் என்று தொடர்ச்சி யாக 1972 ஆம் ஆண்டிலிருந்து பல போராட்டங்களை நடத்திக் கொண்டிருக் கிறோம். அதைத் தொடர்ந்து செய்வோம். கரும்புக்கும், கடலைக்கும் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். கடந்த மார்ச் மாதம் 18 ஆம் நாள் கரும்புக்கு விலை நிர்ணயிக்க வேண்டும் என்று உண்ணாவிரதம் இருந்தார்கள். அதற்குப் பிறகு 24 ஆம் தேதி உண்ணாவிரதம் இருந்தார்கள். விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். எனவே சேர்ந்தவர்களாக இருந்தாலும், தொழிற் சங்கத்தைச் பிக்க வேண்டும் என்பதிலே உறுதியாக இருக்கிறோம். விவசாய விளைபொருள்களுக்கு விலை நிர்ண ஊக்கம் தர வேண்டும், உற்பத்தி செய்த பொருள்களுக்கும் தொழிலாளர்களுக்கும் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறோம். விலை நிர்ணயம் என்று சொல்லுகிறோம். இண்டஸ்ட்ரியல் புரொடெக்ட்ஸ் ஆனால் அதிக விலை வேண்டாம் என்று சொல்லும்போது, லேபர் காஸ்ட் அதிகம் என்று காஸ்ட் அதிகம் கணக்குப் போடும்போது, நியாய விலைக்கு மேல் போகக் கூடாது. சொல்லுகிறார்கள். விலையில் இண்டஸ்ட்ரியல் புரொடெக்ட்ஸ் வேண்டும் என்று வாதாடுகிறோம். நியாய

பல இடங்களில் அரசு தலையிட்டால் பிரச்சினைகள் சிக்கலாகின்றன. அதற்கு இரண்டு, மூன்று உதாரணங்களைச் சொல்லி எட்டு நிமிடத்திற்குள் முடித்துக் கொள்ளுகிறேன் பால்வளத் தொழிலில் அமைதி நிலவுகிறது என்று





அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். தன்னைத்தானே பாராட்டிக் கொள் வது நல்லதல்ல. 1,500 பால்வள நிறுவன ஊழியர்கள் அமைச்சருடன் பேசி னார்கள், தொழிலாளர் நல அமைச்சரோடு அல்ல, வேறு ஒரு அமைச்சருடன், ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தார்கள் என்பதற்காக வேலைக்கு வர வேண்டாம் என்று சொன்னார்கள். அதற்கு அதிகாரபூர்வமான உத்தரவு கிடையாது. சட்டங்கள் ஏட்டில்தான் இருக்கின்றன. பல நாடுகளில் பல சட்டங்கள் இருக்கின்றன. சட்டங்களைச் சரியாக நிறைவேற்றாவிட்டால், புரட்சி ஏற்படும். கம்யூனிஸ்ட் கொள்கையின்படி, தொழில் புரட்சி மட்டுமல் லாமல், சமுதாயப் புரட்சி வரும். அப்படிச் சொல்லும்போது, தூண்டி விட்டோம் என்று சொல்லுகிறார்கள். ஒரு கட்சி தூண்டுவதால் வருவது கலவரம். எனவே 19—11—1980-ல் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி னார்கள். இரண்டாண்டுகள் ஆகின்றன பேச்சு வார்த்தை நடந்து முடிந்து. முதல்வரிடம் கேட்டு பிறகு தெரிவிக்கிறேன் என்ற வார்த்தையோடு முடிந்தது அந்தப் பேச்சுவார்த்தை. ஒரு நாள் வேலை நிறுத்தத்திற்காக அவர்களை நிரந்தரமாகப் பழி வாங்கிவிட்டார்கள். "வாருங்கள் பிறகு பேசலாம்" என்று சொல்லி, எழுத்து மூலமாக உத்தரவு எதுவும் இல்லாமல், அவர்களை வெளியே நிறுத்தியிருக்கிறார்கள். அதற்குப் பதிலாக புதிதாக ஆட்களைக் கொண்டுவந்து நியமனம் செய்திருக்கிறார்கள். நான் ஒரு உண்மையைச் சொன்னால், அமைச்சர் அவர்களுக்கு கோபம் வந்தாலும் வரலாம். இருந்தாலும் சொல்லுகிறேன். ஆளும் கட்சிக்கு வேண்டியவர்கள் திரட்டப்பட்டு அங்கே அமர்த்தப்பட்டார்கள். ஐ.எல்.ஓ. கன்வென்ஷன்படி ஒரு நிறுவனத்தில் வேலை நிறுத்தம் இருக்கும்போது, பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, புதிதாக ஆட்களைப் போடக்கூடாது. இந்தக் கன்வென்ஷன் பால் வளத் துறையில் மீறப்பட்டிருக்கிறது. அதற்கு இந்த அரசு உடன்பட்டிருக் கிறது. சட்டத்தைச் சுலபமாக மீறியிருக்கிறார்கள். அவையிலே சொல்லும் போது சட்டத்தைச் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களே மீறியிருக்கிறார் கள். கடந்த இரண்டாண்டுகளாக அவர்கள் நடுத்தெருவில் நின்று கொண் டிருக்கிறார்கள். அதிலே பல பேர் வேலை தேடி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு சோகக் கதை. அரசு இன்றைக்குள்ள அதிகார பலத்தைக் கொண்டு இதைச் செய்திருக்கிறது. இதற்கு எழுத்து பூர்வமான உத்தரவு கிடையாது. பேச்சுவார்த்தை கிடையாது. நானும், மாண்புமிகு உறுப் பினர் திரு. நல்லசிவன் அவர்களும் சேர்ந்து அமைச்சரைச் சந்தித்து நேரிடை யாக முறையிட்டோம். உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி இந்தப் பிரச்சினையைத் தீருங்கள் என்று முறையிட்டபோது, பார்த்துச் செய்யலாம் என்று சொன்னார்கள். அது நல்ல வார்த்தைகளாக இருக்கின்றன. ஆனால் காரியங்கள் கொடுமையாக இருக்கின்றன. அப்படிப்பட்ட கொடுமையான காரியங்கள் இருக்கக்கூடாது.

[திரு. ப. மாணிக்கம்] [1983 ஏப்ரல் 11

நிறுவனங்களின் சிறிய நடத்துநர்களைப் பணிய வைக்க நடக்கிறது. பச்சையாகச் சொல்வதானால் லஞ்சம் வாங்குவதற்கு அப்படி நடக்கிறது. இது சரியல்ல. அதன் நடைமுறைகளை மாற்ற வேண்டும்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக, 9-ஆம் தேதி கட்டிடத் தொழிலாளர்கள் ஊர்வலம் வந்திருக்கிறார்கள். அவர்கள் கட்டிடத் தொழிலாளர்களுக்குச் சட்டம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களே அப்படி கோஷம் போட்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். கட்டிடத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு தர வேண்டும் என்று பல இடங்களில் கேட்டிருக்கிறார்கள். நான் சொல்வது சிறிய வீடுகள் கட்டுபவர்களுக்காகவல்ல. பெரிய அணைகளைக் கட்டுகின்றவர்களுக்காகச் சொல்கிறேன். அரசு கட்டும் அணைகளைத்தான் சொல்கிறேன். அரசைக் கேட்டால், அந்த அதிகாரிகள் எங்களுக்குச் சம்பந்தம் இல்லை என்கிறார்கள். காண்ட்ராக்டர்கள் பொறுப்பு என்று சொல்கிறார்கள். அந்த காண்ட்ராக்டர்கள் "நாங்கள் தர முடியாது" என்கின்றார்கள். அந்தக் காண்ட்ராக்டர்களை எந்தச் சட்டமும் கட்டுப்படுத்தவில்லை. பல பேர்கள் விழுந்து சாகிறார்கள். எந்த அணைக்கட்டிலும் ஒரு உயிராவது போகாமல் கட்டப்படவில்லை. அது பாபநாசம் அணைக்கட்டாக இருந்தாலும் சரி, மணிமுத்தாறு அணைக்கட்டாக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும் அதில் உயிர் இழக்காமல் இல்லை. விபத்திற்குள்ளாகாமல் இல்லை. ரூபாய் 500 சம்பளம் கொடுத்தால், அதற்காக உயிரை விடுவானா? கிடையாது. பலருடைய தியாகத்திலேதான் அந்த அணைக்கட்டுகள் உருவாகின்றன. அவர்களுக்கெல்லாம் பாதுகாப்பு இல்லை. இது சம்பந்தமாக விரிவான ஒரு சட்டத்தை மத்திய அரசு கொண்டு வரும் என்று காத்திருக்கலாம். எவ்வளவு காலம் காத்திருப்பது? இப்போது செய்ய வேண்டும். கடலிலே செல்லும் மீனவத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளித்திருக்கிறோம். அதுபோலவே இவர்களுக்கும் செய்ய முயற்சி எடுக்க வேண்டும். இந்தத் தொழிலாளர் நலக் கொள்கை என்பது தொழிலாளர் நல விரோதமாக நடைமுறையில் இருப்பதை மாற்றி நலக்கொள்கையாகக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டு, நான் அமைகிறேன்.

Dr. M.A. MUTHIAH CHETTIAR : Mr. Deputy Chairman, we have heard many people speaking on this Policy Note and they are all more experienced in this field. First of all, I would like to offer my felicitations to the Hon. the Labour Minister on the best relationship he is having with labour and he has mentioned in his Policy Note that the relationship with labour is fairly good. In



1983 ஏப்ரல் 11] (Dr. M. A. Muthiah Chettiar)

regard to details, I do not want to take up the time of the House and I will not take more than five minutes. There is no special mention about the number of accidents involving child labour. We have heard that there is much child labour in match industry and beedi industry. The Government must have done their best for their benefit in all possible ways. I want information from the Hon. Minister as to the number of accidents that took place during the last five years and how much compensation has been paid to the victims. I do not want him to say "I have no information with me now". I know that it is not possible to give such information offhand and the Hon. Minister can place the information required on the table of the House during the next session of the House in September or October. So far as casual workers are concerned, I have myself seen them in Quilon and other places. Their fingers get spoilt and about half-an-inch of the fingers in their hands will be lost by them. Consequently they suffer a lot and the girls are not getting married. So far as accidents are concerned, compensation must be fairly decent. When there is loss of life, the compensation must be considerable. Based upon the period of treatment as well as the suffering and injury, the compensation amount should be determined.

One other thing is the serious motor accidents. In the highway from Tiruchur and Madras, every day a dozen accidents occur. Similarly, a dozen accidents occur in the Highway between Madras and Bangalore. I do not refer to the loss of life or injury to the passengers and it may be it will be the concern of the Transport Minister or some other member of the Cabinet. There are labourers carried in the lorries and when they capsize, 15 or 20 workers lose their lives. Sometimes they are given compensation to the extent of Rs. 5,000 or some other amount from the Chief Minister's Fund. I do not know what has happened to the Group insurance or consolidated insurance. No doubt there is no real compensation for a loss of life. But insurance must be effected by the lorry owner or by the contractor who carries the workers in lorries and a compensation of one lakh of rupees must be available in the case of loss of life. If the existing legislation is not effective, the Hon. Minister should bring forward new legislation in the next session. Every other day the Prime Minister mentions that child labour is horrible. We must take steps to control it. I do not know whether this subject is in the Concurrent List. Anyhow, I do not think that the Government of India will object to our legislating on this subject.

[திரு. ப. மாணிக்கம்] [1983 ஏப்ரல் 11

கூட்டுறவுத் துறையிலே பல இடங்களில் போட்டிச் சங்கங்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. அவர்கள் இருக்கின்ற சங்கங்களுக்கு ஒத்துழைப்பு தருகிறோம் என்று சொல்லி, சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் பேசினாலும், பல நிர்வாக அதிகாரிகள் திட்டமிட்டு அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களைப் புறக் கணிக்கிறார்கள். பேச்சுவார்த்தையில் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் புறக் கணிக்கப்படுகின்றன.

அதேபோல சமீபத்திலே ஒரு வார காலத்திற்குள் கடந்த மாதம் 30, 31 ஆம் தேதி நடைபெற்றிருக்கிறது. எனக்குத் தந்தி வந்திருக்கிறது. எண்ணூர் அனல் மின் நிலையம், தூத்துக்குடி அனல் மின் நிலையம் போன்ற பல்வேறு இடங்களில் பல பேர் திடீரென்று மாற்றப்பட்டிருக்கிறார்கள். அதுபற்றி வேறு பிரச்சினைகூட இங்கே எழுப்பியிருக்கிறேன். தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலிருந்து 217 பேரும், எண்ணூரிலிருந்து 322 பேரும், பேசின்பிரிட்ஜி லிருந்து 200 பேரும் மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

(மாற்றுத் தலைவர் திரு. க. இராமமூர்த்தி தலைமை)

(பிற்பகல் 12-40)

எனவே காலையிலே அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். மாலையிலே அவர்கள் 'டிரான்ஸ்பர்' செய்யப்பட்டிருக்கிறார்கள். இதிலே கணவன் இங்கே, மனைவி வேறு இடத்திலே. தொழிற் சங்கத்திலே கூப்பிட்டுப் பேசவில்லை. 'இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்ட்'-லே சில முறைகள் இருக்கின்றன. அவை களும் அனுஷ்டிக்கப்படவில்லை. சங்கத்திலே கூப்பிட்டுப் பேசவில்லை. அதுவும் செய்யவில்லை. சட்டமும் அங்கீகரிக்கப்படவில்லை. மரபுகளும் அங்கீகரிக்கப்படவில்லை. நிராகரிக்கப்பட்டன. இந்த மூன்று உதாரணங் களும் கூட்டுறவுத் துறையிலும், பால் வள நிறுவனத்திலும், மின்சாரத் துறை யிலும் தொடர்ந்து நடந்து வருகின்றன. எல்லாம் அறிக்கையிலே அழகாகச் சொன்னாலும், நடந்துள்ள விஷயத்தில் அழகாக இல்லை. அதற்கு மாறாக அரசு அது குறித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு கடினமான பிரச்சினை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல சட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றை நிறைவேற்று வதற்கு உத்தரவாதம் இல்லை.

இன்னொரு விஷயம். எம்ப்ளாய்மெண்ட் எக்சேன்ஜ் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள்கூட சொன்னார்கள். நானும் சொல்கிறேன். எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஒரு நாள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். எம்ப்ளாய்மெண்ட் எக்சேன்ஜில் 4 ஆண்டுகளுக்கு



1983 ஏப்ரல் 11] [திரு. ப. மாணிக்கம்]

முன்பு ரிஜிஸ்டர் செய்தவர்கள் பலர் இருக்கிறார்கள். 3 மாதங்களுக்கு முன்பு பதிவு செய்தவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் வேலைக்குப் போகி றார்கள். ஒரே குவாலிபிகேஷன் உள்ளவர் போயிருக்கின்றார். கம்பியூட்டர் வைத்துச் செய்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அது எப்படி நடக் கிறது? இதிலே எப்படி பண்ணப்பட்டிருக்கிறது? அதற்கு ஒரு சிறந்த உதாரணம். வெளிநாட்டிற்கு ஆட்கள் எடுக்கின்றார்கள். பல பேர்கள் அதைச் செய்கின்றார்கள். அதிலே மோசடிகளும் நடக்கின்றன. அது வேறு விஷயம். அரசு இதைச் செய்வதை நாங்கள் பாராட்டுகிறோம். நிறைய அதற்காக என்று நிறுவனங்கள் ஆரம்பித்துச் செய்கின்றார்கள். அதற்கு என்று ஒரு ரூ. 20 லட்சம் செலவு செய்திருக்கிறார்கள். அதற்கு 50 லட்சம் ரூபாய் வரையில்கூட மூலதனம் போட்டு, ரூ. 10 லட்சம் பங்குத் தொகை போட்டு சேர்த்திருக்கின்றார்கள். அது எவ்வளவு என்று சொன்னால், அதில் அனுப் பியது 603 பேர்கள். அதிலே பதிவு செய்த ஆட்கள் நிறைய உண்டு. அதிலே சேர்ந்தவர்கள் 10,411 பேர்கள். அதில் 603 பேர்களுக்குக் கிடைத்திருக்கின்றது. அது பரவாயில்லை. இன்றைக்குள்ள சூழ்நிலையில் இது ஒரு சாதனை என்று சொல்லிக் கொண்டால், அதுவும் திருப்தியாக இருந்தால், பரவாயில்லை. இதில் நான் சொல்கின்றது என்னவென்றால், காரியங்களைச் செய்வதிலே 'எம்ப்ளாய் மெண்ட் எக்சேன்ஜ்' இப்படி இருக்கிறது. வெளி நாட்டிற்கு அனுப்புகின்ற விஷயத்திலே பார்த்தாலும், 603தான் இங்கே வந்துள்ளது. அவ்வளவு பேர்கள் பதிவேட்டிலே இருக்கிறது. ஆனால் அதற்கான வேலை வேறு விதத்திலே நடந்து கொண்டிருக்கிறது. இந்த மாதிரி விஷயத்திலே எம்ப்ளாய்மெண்ட் எக்சேன்ஜ் வேலை வாய்ப்பைத் தேடித் தருவதில் ஒரு நெறிமுறை வேண்டும். நான் சொல்வது பழைய நெறி முறையைச் சொல்லவில்லை. 60, 70 வயதான வர்கள் என்ன சொல்கிறார்கள்? உலகம் கெட்டுப் போயிற்று என்று சொல்கிறார் கள். அவர்கள் வேதனைப்படுகிறார்கள். அப்படிச் சொல்லக் காரணம் காலம் மாறிப் போயிற்று என்பதுதான். அரசு வகுத்துள்ள நெறிமுறைகள் என்னவோ அவைகளை எம்ப்ளாய்மெண்ட் எக்சேன்ஜில் பின்பற்ற வேண்டும். அதன்படி நடக்க வேண்டும்.

பிராசிகியூஷன் பற்றி பிரச்சினை வந்திருக்கிறது. பிராசிகியூஷனில் நடக் கிறது என்னவென்றால், உண்மையிலேயே நியாயமானதாக இல்லை. அங்கே இருக்கின்ற அதிகாரிகளிடம் இணக்கமாக இல்லையென்றால் பிராசிகியூஷன். பிராசிகியூஷன் தொழிலாளர்கள் உரிமைக்காக அல்ல. அதிகாரிகளிடம் உள்ள உறவின் காரணமாக சிக்கல்கள் வருகின்றன. பல துறைகளைப் பற்றி எனக்குத் தெரியும். பிராசிகியூஷன் கதையை எடுத்தால், பிராசிகியூஷன் குறிப்பிட்ட

[திரு. க. இராமமூர்த்தி] [1983 ஏப்ரல் 11

இண்டஸ்ட்ரிசில் இந்த அளவுக்கு அதிகரித்திருப்பது தமிழகத்தின் வளர்ச்சிக்கு உதவுவதாக இராது என்று சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறை இதிலே அதிக கவனம் செலுத்தியாக வேண்டும்.

இன்னொன்று, அரசாங்கமே ஒரு முதலாளியாக இருந்து தன்னிடம் பணி செய்கிறவர்களை எப்படி நடத்துகிறது என்பதில் மற்றவர்களுக்கு, தொழில் முதலாளிகளுக்கு முன்னோடியாக இருந்து வழி காட்ட வேண்டுமென்று எனக்கு முன்னே பேசிய உறுப்பினர்கள் பேசினார்கள். ரெவின்யூ துறையிலே கிராம அதிகாரிகளை நீக்கி விட்டார்கள். அது வேறு விஷயம். அவர்களுக்குக் கீழே 'மீனியல் ஸ்டாபாக' தலையாரியாக, தோட்டியாகப் பணியாற்றுகிறவர்களுக்குக் கடைசியாகக் கிடைத்த சம்பளம் 100 ரூபாய்தான். 10 ரூபாய் அல்லது 5 ரூபாய் அதிகமாகியிருக்கலாம் அல்லது குறைந்திருக்கலாம். பல ஆண்டுகளாகப் பணியாற்றி, நமது புதிய சட்டத்தின் விளைவாக வீட்டுக்குச் சென்று விட்டார்கள். கிராம அதிகாரிகளுக்குக் காம்பன்சேஷன் கொடுக்கலாமென்று ஏற்பட்டது. மீனியல்சுக்கு ஒன்றுமே இல்லாமல், திடீரென்று வீட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள். 100 ரூபாய் சம்பளம் வாங்கியவர்களில் பெரும்பாலோர் ஆதி திராவிடர்கள். அதில் குறைந்த சதவிகிதம்தான் மற்ற சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். இப்படி இவர்களை வீட்டுக்கு அனுப்பி, சம்பந்தம் இல்லாத நிலையில் இருக்கிறவர்களுக்குக் காம்பன்சேஷன் கொடுத்திருக்கிறார்கள். பல ஆண்டுக்காலம் இந்த ஆட்சியிலே பணியாற்றி, கடைசியிலே 55 அல்லது இன்னும் அதிகமான வயதிலே வீட்டுக்கு அனுப்பும் போது, அவர்களுக்குப் பென்ஷன் கிடையாது, காம்பன்சேஷன் கிடையாது. கடைசி மாதம் வாங்கிய சம்பளத்தோடு சரி என்று சொல்லி வீட்டுக்கு அனுப்பிய நிலைமை இருக்கிறது. அவர்கள் வந்து கேட்கவில்லை என்றால், அவர்களுக்கு வசதியில்லை. வாய்ப்பு இல்லை, அதற்கான அறிவு இல்லை. 'ஆர்கனைஸ்டு லேபர்' என்றால் பலன்கள் கிடைக்கும். களாகச் சொல்லும் நிலைமைகள் இல்லாமல் இருக்கிறது. எனவே அவர் மனதிலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை அரசாங்கம்

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ராஜா சர் அவர்கள் 'சைல்ட் லேபர்' பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்தியாவிலேயே, தமிழ் நாட்டில் அதிகமாக 'சைல்ட் லேபர்' இருக்கிறது. அமைச்சரவர்கள் தலையாட்டுகிறார். இல்லை என்று சொல்வதாக நினைக்கிறேன். நாடாளுமன்றத்திலிருந்து தகவல் வந்தது. உங்களுடைய பிராசிகியூஷனை எடுத்துப் பாருங்கள். தெளிவாக இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். எவ்வளவு accepted policy நீங்களே அதற்கு எதிர்ப்பாக இருக்கிறீர்கள். It is an Prosecution க்குக் கணக்கு கொடுத்திருக்கிறார்கள்.



1983 ஏப்ரல் 11] [திரு. க. இராமமூர்த்தி]

Employment of Childden Act, 1938 லே எவ்வளவு பேர்களை Prosecute பண்ணியிருக்கிறோம் என்பது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.
During the year sanctioned, disposal, convicted,— எல்லாவற்றுக்கும் 1தான் வருகிறது. Fine 300 ரூபாய். மற்ற எல்லாவற்றிலும் லட்சக்கணக்கில், ஆயிரக்கணக்கில் வருகிறது. சைல்ட் லேபர் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்களே அறிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இதில் அக்கறை கொண்டுள்ளார், அமைச்சரவை சட்டம் கொண்டுவர இருக்கிறது, அந்த அளவுக்கு அக்கறை கொண்டிருக்கிறது என்று தெளிவுபடுத்தினார்கள். 10 நாட்களுக்கு முன்பு நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினை வந்து, தமிழ் நாட்டில் இது அதிகமாக இருக்கிறது, அதற்காக கமிட்டி அனுப்பி விசாரிக்கச் சொல்லியிருக்கிறோம் என்று சொல்லி, அங்கே 'சிவகாசி' பெயரும் வந்தது. அந்த மேச் இண்டஸ்ட்ரி எவ்வளவு வலுவான இண்டஸ்ட்ரி என்று புதிதாக என்ன சொல்லப் போகிறேன்? எவ்வளவு குழந்தைகள் தொழிலாளிகளாக உழைக்கின்றன? பிராசிகியூஷன் என்னவாயிற்று? லிஸ்டில் பெயர் வந்திருக்க வேண்டுமே. தகவல் வரவில்லை. ஒரு நடவடிக்கையும் இல்லையா? சைல்ட் லேபர் வைத்து, அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பது இருக்கட்டும், கூலி கொடுப்பது இருக்கட்டும், எவ்வளவு அவர்களை ஏமாற்றுகிறார்கள், ஏமாற்றாமல் இருக்கிறார்கள் என்பது ஒருபுறம் இருக்கட்டும். தொழிற்சாலைகளில்

(பிற்பகல் 1-00)

பணியாற்றி இறந்துபோன குழந்தைகளுக்குப் பாதுகாப்பு இல்லை. குழந்தைகளைப் பாதுகாப்பளிக்காமல் வைத்துக்கொள்ள பேக்டரிக்கு பெர்மிஷன் இல்லை. சம்பவம் நடைபெற்று இவ்வளவு நாட்கள் ஆகியும் ஏன் இதுவரை சம்பந்தப்பட்டவர்கள் மீது பிராசிகியூஷன் இல்லை? மற்ற தொழில்களைப் பொறுத்தவரையில், எப்படி இருந்தாலும்கூட, மேச் பேக்டரியைப் பொறுத்தவரையில், மேச் இண்டஸ்ட்ரியைப் பொறுத்தவரையில் நான் எவ்வளவு வேண்டுமானாலும் சொல்ல முடியும். அவர்கள் யாரை வேண்டுமானாலும் ஆட்டிப் படைக்க முடியும். அந்த அளவுக்கு அவர்களிடம் வசதியும் வாய்ப்பும் இருக்கிறது. மற்ற மாநிலங்களில் அப்படி இருந்தால்கூட, நம்முடைய மாநிலத்திலுள்ள இந்த அரசினையும் கூட அவர்கள் அப்படி ஆட்டிப் படைக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. இதை எப்படிக் கட்டுப்படுத்தியிருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்நிலைமை நம்முடைய தமிழ் நாட்டிலேயும் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள் என்பதைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. வேஜஸைப் (Wages) பொறுத்தவரையில் மீண்டும் பரிசீலனை செய்ய சொல்லியிருக்கிறேன் என்கிற ஒரு வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அப்படி என்றால்

(Dr. M. A. Muthiah Chettiar) [1983 ஏப்ரல் 11

Sir, the subject of Housing is closely related to the subject of labour. Several labourers live in different parts of the City of Madras. The Hon. the Labour Minister is in charge of Housing and he is the President of the Madras Metropolitan Development Authority of which I am also a Member. I have been on it for many years. A lot has to be done in the matter of providing housing facilities for the labourers because we are receiving a lot of criticism. We have to provide them housing facilities and the cost may be recovered in instalments. In house construction sites, many accidents take place and we are not able to fix the responsibility for the accidents. Sometimes, a contractor constructs a building. Sometimes, the chief mason himself becomes a contractor and does the construction. Sometimes, the owner himself engages labourers

(பிற்பகல் 12-50.)

and does the construction. Therefore, at the time of issue of building licence, a condition should be imposed that the person should furnish information whether he is going to let the construction work on contract or whether he is going to do the construction himself by engaging labourers. If he engages labourers, he should furnish weekly statements about the number of laborers engaged by him, the wages paid to the labourers, etc.

Sir, mention has been made in this Policy Note about the fixation of minimum wages. Yesterday, I had been to Gobichettipalayam to take part in the 'Mani Vizha' of Thiru Mahalingam, an industrialist. There, a function was got up and they called it a 'Vivasaya Maanaadu'. About 5,000 persons participated in it and most of them were workers in the sugarcane estates. They have got the minimum wages but they say that the wages are not enough. But the argument advanced by the sugarcane field owners is that the price paid for sugarcane is not enough. Though they are willing to pay, they are not able to pay the labourers. The factory-owners say that if they pay more for the sugarcane, the factories may have to be closed down because the Banks will not give them money. These points of view were made by different speakers in that function. Some speeches of felicitation were also made, but it was called a 'Vivasaya Maanaadu'. The main problem is that the agricultural labourer in that part of the State does not get enough wages. I think that the hon. Member Thiru Manickam also would have referred to this problem. I hope that the Hon. Minister will take this into consideration.

With these words, I would like to offer my felicitations to the Hon. Minister. Thank you, Sir.



1983 ஏப்ரல் 11]

(பிற்பகல் 12-50)

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு தொழிலாளர் கொள்கை பற்றிய குறிப்பை ஒட்டி முதலிலே என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒன்றிலே நாம் நிச்சயமாக நல்ல முறையிலே செயல்பட்டிருக்கிறோம். எத்தனை மனித உழைப்பு நாட்களை இழந்திருக்கிறோம் என்ற கணக்குக்கு வரும்போது, இந்த ஆண்டு வெகுவாக அதைக் குறைப்பதிலே இந்தத் துறை ஈடுபட்டிருக்கிறது. இந்தியாவிலேயே நம்முடைய பகுதியிலே ஒரு நல்ல உறவை உருவாக்குவதிலே, தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கும் நிலையிலேயே பிரச்சினைகளைத் தீர்ப்பதிலே நாம் சென்ற ஆண்டைவிட ஓரளவிற்கு நல்ல முறையிலே கவனம் செலுத்தியிருக்கிறோம் என்பதைக் காட்டுவதாகத்தான் புள்ளிவிவரம் அமைந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். எனக்குக் கிடைத்த தகவல்கள், சென்ற ஆண்டிலே நாம் இந்தியாவிலேயே முதன்மையாக நின்றிருக்கிறோம் என்பது தான். எத்தனை வேலை நாட்கள் இழந்திருக்கிறோம் என்ற புள்ளி விவரத்திலே, கிடைத்த செய்திகளின் அடிப்படையிலே, இந்தியாவிலேயே அதிகமாக மனித உழைப்பு நாட்களை இழந்த மாநிலம் தமிழ்நாடு என்று இருந்திருக்கிறது. இந்த ஆண்டு வெகுவாக அதைக் குறைத்திருக்கிறோம். அதிலேகூட மிகக் குறைந்த அளவுக்குத்தான் மனித உழைப்பு நாட்களை இழந்த மாநிலமாக இருக்கிறோம் என்று கருதுகிறேன். அதற்காக இந்தத் துறையை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால் அதே நேரத்தில் ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரிசைப் பொறுத்தவரையில் நூற்பாலைகளைப் பொறுத்தவரையில், எந்த அளவுக்கு இழந்திருக்கிறோமோ அதைவிட அதிகமாக இன்ஜினியரிங் இண்டஸ்ட்ரிசில் மனித உழைப்பு நாட்களை இழந்திருக்கிறோம். இன்ஜினியரிங் இண்டஸ்ரிசில் இழந்திருப்பது, எவ்வளவு பெரிய அளவுக்கு இந்த மாநிலத்தின் உற்பத்தித் துறையை, மற்ற துறைகளைப் பாதித்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். (There is something basically wrong) இந்தத் தொழிற்சாலைகள் மிகமிக அத்தியாவசியமான தொழிற்சாலைகள். அடிப்படையிலே அதனுடைய முக்கியத்துவத்தைக் காண்பதைவிட, For a developing country, Engineering Industries என்ற அளவிலே வரும்போது, அந்தத் தொழிற்சாலைகளிலே எந்த அளவுக்கு மனித உழைப்பு நாட்களை இழந்திருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். 6,43,526 நாட்கள் என்று தகவல் கொடுத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அது அதிகரித்திருக்கிறது. அது தவிர்க்கப்பட வேண்டியதுதான். டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரீஸ் குறைந்திருக்கும் அதே நேரத்திலே, இன்ஜினியரிங்

குழந்தைகள் இருக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களை ஏமாற்றாத அளவுக்குச் செய்யச் சொல்லியிருக்கிறேன் என்கிற அடிப்படையில், சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு நிலைமை இன்று அமைச்சர் அவர்களுக்கே கூட இருக்கிறது. இப்படி எல்லாம் அமைச்சர் அவர்களே கூட சொல்கிறார் என்றால், இதிலே எவ்வளவு தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் எண்ணிப் பார்க்க முடிகிறது. அதே நேரத்தில் இது தொடர்பாக எத்தனை பேர் மீது வழக்கு தொடரப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்கிற கணக்கைப் பார்க்கிறபோது, எனக்கு ஏமாற்றமாக இருக்கிறது என்பதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை.

அடுத்து, ஸ்டிரைக்கைப் பொறுத்தவரையில், அந்த சித்தாந்தத்துக்குள்ளே நான் போக விரும்பவில்லை. அதுகுறித்து எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் என்னால் ஒன்றை நன்றாகப் புரிந்துகொள்ள முடிகிறது. வேறு மாநிலங்களில் கூட நாம் பார்க்கிறோம். பல பெரிய தொழிற்சாலைகளில்கூட வருடக்கணக்கில் ஸ்ட்ரைக் நடக்கிறது. இன்றைக்கு டெக்ஸ்டைல் இன்டஸ்ட்ரியைப் பொறுத்தமட்டில், மராட்டியத்தில் வருடக் கணக்கில் ஸ்ட்ரைக் நடக்கிறது. இப்படி ஸ்ட்ரைக் நடந்திருந்தாலும் கூட, மார்க்கெட்டைப் பொறுத்தவரையில், உற்பத்தி பாதிக்கப்பட்டதாகவோ, விலையைப் பொறுத்தவரையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாகவோ உணர முடியாத அளவுக்கு நிலைமைகள் நாட்டிலே இருக்கின்றன. இது குறித்து என்னால் சரியான காரணத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. தொழிற்சாலை உண்மையிலேயே மூடப்பட்டிருந்தால், அதன் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனாலும் உண்மை நிலைமை என்ன என்றால், மார்க்கெட் மற்றும் உற்பத்தி போன்றவைகளைப் பொறுத்தவரையில், வெளி மார்க்கெட்டில் எந்தவித பாதிப்பும் இல்லை. இப்படி ஸ்ட்ரைக் ஏற்படும் காலத்தில் தேவைக்குத் தகுந்தபடி துணி கிடைக்கவில்லை என்கிற நிலை ஏற்படுமே யானால், அந்த அளவுக்கு நாம் ஸ்ட்ரைக் பற்றிப் புரிந்துகொள்ள முடியும். ஆனால் அந்த அளவுக்கு நிலைமை இல்லை. துணி தாராளமாகக் கிடைக்கிறது. அப்படி என்றால் தொழிலாளர்களைக் கொண்டு அவர்களது சங்கங்களை பேரம் பேசி, அதன் மூலம் உற்பத்தியைச் செய்கிறார்களா? "நாங்கள் ஸ்ட்ரைக் பண்ணுவது மாதிரி ஸ்ட்ரைக் பண்ணுகிறோம், நீங்கள் தொழிற்சாலையை மூடுவது மாதிரி மூடுங்கள்" என்று வெளி உலகுக்கு ஸ்ட்ரைக் என்று சொல்லி விட்டு, உண்மையிலே பேரம் ஏதாவது இவர்களுக்குள்ளே பேசி உற்பத்தியைச் செய்கிறார்களோ என்னவோ? அதுமாதிரி ஒன்றும் இல்லாமல் அரசாங்கம் இதிலே மிகவும் கருத்தாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் நான் சொல்லப்போகும்
கருத்து குறித்து கோபிக்க மாட்டார் என்று கருதுகிறேன். தொழிற் சங்கங்
களைப் பொறுத்தவரையில், நெகோசியேஷனைப் பொறுத்தவரையில், மாண்பு
மிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் கேட்டுக்
கொண்டிருந்தேன். பேச்சுவார்த்தைக்குப் பிறகு நிர்வாகம் இவ்வளவு நஷ்ட
ஈட்டை தொழிற் சங்கத்துக்குத் தர வேண்டும், இல்லாவிட்டால் தொழிற்
சாலையை மூட வேண்டியிருக்கும் என்று ஒரு தொழிற் சங்கம் சொல்வது
இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு நல்லதா என்பதை எண்ணிப் பார்க்க
வேண்டும். ஒரு தொழிற் சங்கம் எங்களுடைய டிரஸ்டுக்கு 2 இலட்சம்
ரூபாய் கொடு என்று சொல்வது சரியல்ல. இப்படித் தவறு செய்கின்ற தொழிற்
சங்கங்கள் குறித்து தெளிவாகப் படம் பிடித்து வெளி உலகுக்கு மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் காட்ட வேண்டும். முதலாளிகள் தங்கள் நிறுவனங்களை
(Establish) 'எஸ்டாபிளிஷ்' பண்ணுவது என்பது ஒருபுறமிருக்க இப்படிப்
பட்ட தொழிற் சங்கங்கள் ஒரு முதலாளியைப் போல் இயங்கக் கூடாத வகை
யில் இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க
வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் சட்டத்தை இயற்ற வேண்டும்.

அடுத்து, இங்கே வேலை நிறுத்தத் தடைச் சட்டத்தைப் பொறுத்த
வரையில், வாக்குவாதங்கள் வெகுவாக நடைபெற்றன. மத்திய அரசைப்
பொறுத்தவரையில், அது வேலை நிறுத்தத் தடைச் சட்டத்தைக் கொண்டு
வருகிறது என்று சொல்லும் அதே நேரத்தில் அது ஒன்றைத் தெளிவாக்கியிருக்
கிறது. வேலை நிறுத்தமே ஏற்படாத அளவுக்கு, வேலை நிறுத்தத்தைத்
தவிர்க்கின்ற அளவுக்கு தொழிலாளர்களுடைய உரிமைகள், அல்லது கோரிக்கை
கள், அல்லது தேவைகள் நிறைவேற்றப்படும் அளவுக்கு நிலைமைகள் இருக்க
வேண்டும். அதற்கேற்ற வகையில் எவ்வாறு சட்டங்கள் இருக்கலாம், எவ்வாறு
நடவடிக்கைகள் இருக்க வேண்டும் என்கிற வகையிலே தொழிற் சங்கத் தகராறு
களை மாநில அரசுகள் சுமுகமாக, கவனம் செலுத்தி, அக்கறையோடு தீர்க்க
வேண்டுமென்கிற அளவுக்கு மத்திய அரசு இதில் ஆர்வத்தோடு இருக்கிறது.
மேலெழுந்தவாரியாக வேலை நிறுத்தத்திற்குத் தடைச் சட்டம் கொண்டு வரப்
பட்டிருக்கிறது என்று விவாதிப்பது வேறு. வேலை நிறுத்தம் என்கிற பிரச்
சினை வருகிறபோது, வேலை நிறுத்தம் செய்யப் போவதாக தொழிலாளர்கள்
அறிவிப்பு கொடுக்கிற நிலை வருகிறபோது, அவர்களுடைய கோரிக்கையிலே
நியாயம் இருந்தால், கண்டிப்பாக முதலாளி அதனை ஏற்றுக்கொள்கிற சூழ்
நிலையை மாநில அரசுகள் உருவாக்க வேண்டுமென்கிற அளவுக்கு மத்திய அரசு
மாநில அரசுகளுக்குத் தகவல் தந்திருக்கிறது. இது குறித்தும் மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் விளக்கத்துடன் மன்றத்திற்குத் தகவல்கள் தருவார்கள்

என்று நினைக்கிறேன். இது மிக மிகத் தேவையான ஒன்று. மாண்புமிகு உறுப்பினர் திரு இராமலிங்கம் பேசும்போது, நெசவுத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்கிற ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். அதில் எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை. அவருடைய கருத்தைப் பொறுத்தவரையில், பவர் லூம்ஸை (Powerloom) எடுத்துக் கொண்டால், மாநில அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்தை அவர் கொண்டிருப்பதில் எனக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் அவர் அந்தக் கட்சியில் இருப்பதால், பிரேமையில் இருக்கிறார் என்று நினைக்கிறேன். ஏதோ மத்திய அரசுதான் பவர் லூம்சுக்கான அனுமதியைக் கொடுப்பது மாதிரியும், அதன் பிறகுதான் ஆரம்பிக்கிறார்கள் என்பது மாதிரியும் பேசினார்கள். அதோடு மட்டுமல்ல, அதற்காக வேண்டி இங்கே இருப்பவர்களை எல்லாம் மத்திய அரசுக்கு எதிராகப் படையெடுக்க அழைக்கிற தொனியிலும் பேசினார்கள். இதற்கெல்லாம் மத்திய அரசுதான் காரணம் என்று அவர்கள் உண்மையிலேயே நம்புவார்களேயானால், நான் அவர்களுக்கு சொல்கிறேன்—அதைச் செய்வது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். காரணம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அரசுதான் இப்போது லைசன்ஸ் வழங்கியிருக்கிறது. அதையும் அதிகாரபூர்வமாக வழங்காமல் திருட்டுத்தனமாகத் தொழில் நடத்திக் கொண்டிருந்தவர்களுக்கு • வழங்கினார்கள். அதோடு மாத்திரமல்லாமல் புதிதாகத் தொழிற்சாலைகள் வேறு தொடங்கப்பட்டன என்று, பெருமைப் பட்டுக்கொள்கிற, கணக்கை வேறு கொடுத்திருக்கிறார்கள். அப்படி என்றால் மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களை இந்த அரசு ஏமாற்றிக்கொண்டிருக் கிறது.

**திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர் கள் "பவர் லூம்ஸைத் தொடங்க லைசன்ஸ் கொடுத்தது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்" என்று இங்கே சொன்னார்கள். ஆனால் மத்திய அரசிலே விசைத் தறிக்குப் பாதுகாப்பாக ஒரு வாரியத்தை அமைத்து அதன் மூலமாக லைசன்ஸ் இல்லாத தறிகளையெல்லாம் அங்கீகரிக்க வேண்டு மென்ற தீர்மானத்தை திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் அங்கே நிறைவேற்றி னார்கள். அந்த அடிப்படையிலேதான் இங்கேயும் வழங்கப்பட்டது. அது மாத்திரமல்லாமல், பகிர்ந்து கொடுக்கிற அடிப்படை என்கிற நிலை வருகிற போது குஜராத்திற்கு 2 ஆயிரம், நமக்கு 7 ஆயிரம் என்றும் பகிர்ந்தளித் தார்கள். அதையும் கூட்டுறவு முறையிலே என்கிற திட்டத்தைக் கொண்டு





வந்திருக்கிறார்கள். ஆனால் பவர் லூம்சைப் பொறுத்தவரையில், பவர் லூம்சினால் கைத்தறி அழிகிறது என்கிற வாதம் உண்மை என்பதைச் சுட்டிக் காட்டி அன்றைய தினம் திரு. ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த போது—பிரதமராக திரு. நேரு அவர்கள் இருந்தபோது—தீர்மானமாக நிறை வேற்றி கரை போட்ட வேட்டியை எல்லாம் கைத்தறிக்கு ஒதுக்க வேண்டு மென்று சொன்னோம். அவர்கள் அதை அன்றைக்கு நிறைவேற்றினார்களா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விளக்கம் அல்லது பதில் சொல்லலாம். திரும்பவும் சொற்பொழிவு ஆற்றக்கூடாது.

**திரு. சி. இராமலிங்கம் :** பதில் தான் சொல்கிறேன். அன்றைய தினம் ஆளும் கட்சி உட்பட அனைத்துக் கட்சியினரும் சேர்ந்து தீர்மானம் நிறை வேற்றி அனுப்பினோம். ஆனால் அதை அவர்களால் செயல்படுத்த முடிய வில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** பவர் லூம்சுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய அரசு லைசன்ஸ் கொடுத்ததா இல்லையா என்பது தான் இங்கே முக்கியமான பிரச்சினை. மத்திய அரசு லைசன்ஸ் கொடுத்ததன் காரண மாகத்தான் கைத்தறி நெசவாளர்கள் வேலை இழந்தார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதால்தான் நான் இதனைச் சொல்கிறேன். அப்படி லைசன்ஸ் கொடுத்து, மிகப் பெரிய பாவத்தைச் செய்து புண்ணியத்தைத் தேடிக் கொண்டது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தான். எது எதற்கெல்லாமோ உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இது இவ்வளவு பெரிய நெசவாளர்கள் பிரச்சினை ஆயிற்றே. ஒருவராவது இந்தப் பிரச்சினைக்காக உண்ணாவிரதம் இருக்க முன் வந்தார்களா? ஒருவரும் முன் வரவில்லை. இங்கே நான் மாண்புமிகு உறுப்பினரைக் குறை சொல்லவில்லை. இந்த அரசைத்தான் நான் சொல்கிறேன். அதற்கும் மாறாக இன்னொன்றைச் சொல்கிறேன். இதனை ரெகுலரைஸ் செய்யும்போது, உங்களுக்குச் செய்ய முடியாது என்று இந்த அரசு சொல்லியிருக்க முடியும். ஆனால் அப்படிச் சொல்லவில்லை. திருட்டுத்தனமாகத் தொழில் நடத்திக்கொண்டிருந்தவர் களுக்கு அங்கீகாரம் தந்திருக்கிறார்கள்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி வெகு சாமர்த்தியமாக தனக்கு இருக்கிற வாதத் திறமையால் தன்னுடைய கருத்தை நியாயப்படுத்தி இங்கே பேசிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி தன் னுடைய கருத்தை நிலை நாட்டிக்கொள்வதன் மூலமாவது மத்திய அரசைக்

[திரு. எஸ். ஆர். இராதா] [1983 ஏப்ரல் 11

காப்பாற்றலாமென்கிற எண்ணத்தில் அப்படிப் பேசுகிறார்கள். மத்திய அரசு
இதிலே மிகப் பெரிய தவறு செய்திருக்கிறது. அவர்கள் தான் கொடுக்க
வேண்டுமென்பதற்கான அதிகாரத்தை வைத்திருக்கிறார்கள். மத்திய
சர்க்காரை எதிர்த்துப் போராட முன் வாருங்கள்—எந்தச் சர்க்காராக இருந்
தாலும் நெசவாளர்கள் சார்பாக நான் இதனைச் சொல்கிறேன்.

(பிற்பகல் 1-10)

**திரு. க. இராமமூர்த்தி :** இதற்கு பதில் அளிக்க தொழிலாளர் நல
அமைச்சர் இருக்கிறார். அவரிடம் புள்ளி விவரங்கள் வாங்கிப் பாருங்கள்.
யார் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு பவர்லூம் அதிகமாக வந்தது என்று பாருங்
கள். மத்திய சர்க்கார் ரெகுலரைஸ் செய்யுங்கள் என்று சொன்ன பிறகு,
அதற்கு முன்பிருந்த அந்த இடைக்காலத்தில் நீங்கள் தடை செய்தீர்களா?
திருட்டுத்தனம் என்று நான் சொல்வதில் அர்த்தம் இருக்கிறது. நீங்கள்
ஆட்சியை வைத்துக்கொண்டு, அதிகாரத்தை வைத்துக் கொண்டு, இவ்வளவு
பெரிய நிர்வாகத்தை வைத்துக் கொண்டு, திருட்டுத்தனமாக நடந்தது என்று
சொன்னால்
எவ்வளவு பெரிய தொழில்கள் ,are you so inefficient?
எவ்வளவு ஏக்கரில் இந்த இண்டஸ்டிரியை வைத்து நடத்திக் கொண்டிருக்
கிறான்? உங்களுக்குத் தெரியாமலா நடந்தது? ஒவ்வொருத்தன்
நடத்தியிருக்கிறார்கள்,

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** துணைத் தலைவர் அவர்களே, அந்த
லைசன்ஸ் தருவது மத்திய சர்க்காரிடம் இருக்கிறது. அது பல மாநிலங்
களுக்கும் தந்து, எல்லா மாநிலங்களிலும் பாதிக்கப்பட்ட நெசவாளர்கள்
இருந்தது போல், தமிழ் நாட்டிலும் அதிகமான நெசவாளர்கள் பாதிக்கப்பட்
டிருந்தார்கள். அதுதான் உண்மையான நிலை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** என்ன செய்வது? மத்திய
சர்க்காருக்கு அப்படி ஒரு லைசன்ஸ் இருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** மத்திய சர்க்காருக்கு லைசன்ஸ் இருக்கிறது.
ஆனால் சிபாரிசு செய்கிற தகுதி இந்த அரசுக்குத்தான். அந்தச் சிபாரிசை
முழுமையாகச் செய்த பெருமைக்குரியவர்கள் இந்த அரசினர் தான். மாநில
அரசு யாருக்குச் சிபாரிசு செய்கிறதோ அவர்களுக்குத் தான் மத்திய அரசு
லைசன்ஸ் கொடுக்கிறது. திருட்டுத்தனமாகத் தொழில் செய்தவர்களுக்குச்
சிபாரிசு செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்
கிறது. எவ்வளவு பெரிய காரியத்தைச் செய்தார்கள்? எவ்வளவு நல்லவர்கள்
இவர்கள்!



1983 ஏப்ரல் 11]

**திரு. எஸ். ஆர். இராதா :** துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் ஒரு கருத்தை திரும்பத் திரும்பச் சொல்லி அவையில் தவறான கருத்தை உரு வாக்குகிறார். விசைத் தறியைப் பொறுத்தவரையில், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் அனுமதியில்லாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று மத்திய சர்க்கார் புள்ளி விவரங்கள் சொல்லி, அப்படி அங்கீகரிக்கப்படாத விசைத்தறிகள் இருக்கின்றன. அதை முறைப்படுத்துங்கள் என்று உத்தரவு போட்டு, அவர்களுடைய அதிகாரிகள்தான் செய்கிறார்களே தவிர, இந்த மாநில அரசுதான் செய்கிறது என்று சொல்வது தவறான தகவல்.

**திரு. க. இராமமூர்த்தி :** இதுதான் நான் சொன்னது. இதிலே நான் சொல்வது சரியாக இல்லை என்று அமைச்சர் சொல்லட்டும். அதோடு மட்டு மல்ல, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் பேசியபோது சொன்னார்கள், என்ன நாடகம், என்ன ஷோ இது என்று கேட்டார். நெசவாளர் களை அழித்துவிட்டு, பவர் லூம் லைசன்ஸ் கொடுப்பது என்ன நாடகம் என்று கேட்டார். இன்னும் கூட சொன்னார், ரயிலில் தண்ணீர் வருவது நாடகம்; அரிசி தருவது நாடகம் என்று கூட சொன்னார். அது நாடகம் என்று சொன்னால், நீங்கள் உண்ணாவிரதம் இருந்தது எவ்வளவு பெரிய நாடகம்? உங்களுடைய மந்திரி மார்ச்சுக்கு மேலே அரிசி இல்லை, பட்டினி என்று சொன்னாரே, இப்போது மே வரையில் இருக்கிறது என்று சொல்கிறாரே, என் அரிசியை வைத்துக்கொண்டே இந்த நாடகம் ஆடுகிறீர்கள்? ஆகவே இன்றைக்கு இருக்கிற நிலைமை அது அல்ல. தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், இந்தத் துறை தன்னுடைய கடமைகளை ஓரளவுக்கு வரவேற்கிற அளவில் மகிழ்ச்சியடைகிற அளவில் காரியங்கள் செய்திருக்கிறது என்றாலும் கூட, சில விஷயங்களில் தனியாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அதைப்போலவே, பிராசிக்யூஷனைப் பொறுத்தவரையில், தமிழ் நாடு இண்டஸ்டிரியல் எஸ்டாபிளிஷ்மெண்டில் அங்கீ கரிக்கப்பட்ட தேசிய விடுமுறை நாட்களில் தொழில் நடத்தியதற்காக பிராசிக் யூஷன் செய்திருக்கிறது. அது எந்த அளவுக்கு அதிகமாக இருக்கிறது என்பது பார்த்தாலே தெரிகிறது. இந்த அடிப்படையில் இன்னும் அதிகமான கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துவது என் கடமை. குறைந்தபட்ச ஊதியத்தைப் பொறுத்தவரையில், 791 குற்றம்தான் சாங்க்ஷண்டு பிராசிக்யூஷன் ஆகி இருக்கிறது. ஆனால் மொத்த எண்ணிக்கை 2,626. குறைந்த பட்ச பிராசிக்யூஷனை மீறுகிற இடங்களில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால், அதில் நாம் மெத்தனமாக

[திரு. க. இராமமூர்த்தி] [1983 ஏப்ரல் 11

இருக்கிறோமோ என்ற உணர்வு வருகிறது. அதை ஒழுங்குபடுத்த வேண்டும். இறுதியாக அன்எம்ப்ளாய்மெண்ட் ரிலிப் ஸ்கீமில் வேலை வாய்ப்புத் திட்ட அடிப்படையில் உள்ள புள்ளி விவரம். Number of persons who were asked to send applications from 1st July 1980 to 31st December 1982 is 40,211. Number of filled in applications forwarded to Tahsildars for verification and sanction of relief amount to eligible applicants are 24,603—But number of sanctions issued by Tahsildars are 16,166 only. என்றுதான் அனுப்பியிருக்கிறார்கள். நீங்கள் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடம் விண்ணப்பங்களை வாங்கி, அது எங்கே போய் முடிகிறது என்றால், தாசில்தார் அதை ஆய்வு செய்யப் போகும்போது, 40 ஆயிரம் என்பது 16 ஆயிரமாகக் குறைகிறது. இதிலிருந்து அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு விரோதமான, அல்லது ஒத்துப் போகாத அதிகாரிகளை வைத்துக்கொண்டு செயல்படுகிற நிலை இருக்கிறது. அதைப்போல் பார்வை இழந்தவர்களைப் பொறுத்தவரை, 226 விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அதை தாசில்தாருக்கு ரிப்போர்ட்டுக்காக அனுப்பியிருக்கிறீர்கள். ஆனால் தாசில்தாரிடமிருந்து 37 பேருக்குத்தான் பதில் வந்திருக்கிறது. வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது அவர்களுக்கு. இது நம்முடைய கொள்கை மட்டுமல்ல. The working of the very machinery with regard to labour problems concerned is very lathargic என்பதைப் பார்க்க வேண்டும். தாசில்தார்கள் ரெவின்யூ இலாகாவைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். அவர்களை ஒன்றும் செய்ய முடியாது. அரசுத் துறையிலிருந்து போகும்போது, மனிதாபிமானமற்ற முறையில் இந்தத் துறை இயங்குகிறது என்பதை அரசு பார்க்க வேண்டும். மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் சர்க்குலர் அனுப்பி இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக தொழிலாளர்களின் நலனில் அக்கறை எடுத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, அதிகமாகக் குறை சொல்வதற்கு இல்லையென்று சொல்கிற நோக்கில், சிலவற்றைப் பாராட்டுகிற வகையில் செயல்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லி, என் உரையை முடிக்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் நிலைமை குறித்த கொள்கைக் குறிப்பின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு



1983 ஏப்ரல் 11] [திரு. சோ. ஆறுமுகம்]

கிறேன். அவர்கள் தந்துள்ள இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்தில் தமிழ் நாட்டிலே பதிவு பெற்ற தொழிற்சங்கங்கள் 3,932 என்றும், தொழிற்சாலைகளுடைய எண்ணிக்கை 11,465 என்றும், இதிலே பணி புரியக்கூடிய தொழிலாளர்களுடைய எண்ணிக்கை 7 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் என்றும் புள்ளி விவரத்தைத் தந்து, இதிலே தொழிலாளர்களுக்கு எந்தெந்த வகையில் மாநில அரசு, மத்திய தொழிலாளர் சட்டத்துக்குட்பட்டு காரியங்கள் நிறைவேற்றியிருக்கிறது என்று காண்பித்திருக்கிறார்கள். பொதுவாக மாநில அரசு அவர்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தைப் பயன்படுத்தி தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பான நிலைமையைச் செயல்படுத்துகிறார்களா என்று கடந்த நான்கைந்து ஆண்டு காலமாகப் பார்க்கிறபோது, அரசியல் நோக்கத்தோடு இந்தத் துறையிலே தொழிலாளர்களைப் பயன்படுத்திக் கொள்ள இந்த அரசு முனைகிறது என்பதுதான் என்னைப்போல இருக்கக்கூடிய பொதுமக்களுடைய பிரதிநிதிகள் கவனத்திற்கு நாள்தோறும் வருகிற செய்திகளாக அமைகின்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-20)

இங்கே தரப்பட்டிருக்கும் கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 23-ல் சுமார் 11 தொழில்களில் ஈடுபட்டு பணியாற்றும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய சட்டங்களைக் கொண்டுவர வேண்டும் என்று உத்தேசித்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருப்பது வரவேற்கக்கூடியதாக இருந்தாலும், ஆலோசனை என்ற பெயரில் இதற்காக நீண்ட காலத்தை எடுத்துக் கொள்வது சரியல்ல, அதை விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதில் மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கட்டிடத் தொழிலாளர்களின் பிரச்சினையையும், வர்ணத் தொழிலாளர்களுடைய பிரச்சினையையும் ஆய்வில் எடுத்துக்கொண்டு அவர்களுக்கும் ஒரு பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்க அரசு முன்வர வேண்டும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. மாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், கட்டிடத் தொழிலாளர்கள் என்றால், அது ஏதோ வீடு கட்டும் தொழிலாளர்களை மட்டும் குறிக்கவில்லை. இன்றைய தினம் சென்னை நகரில் பல்வேறு இடங்களிலும் பலமாடிக் கட்டிடங்கள் கட்டப்படுவதைப் பார்க்கிறோம். நாம் அவைகளை அண்ணாந்து பார்த்தாலே மயங்கி விழுந்துவிடக் கூடிய அளவுக்கு உயரமான கட்டிடங்களாக அவை இருக்கின்றன. அந்த அளவுக்கு மிகவும் உயரமான கட்டிடங்களில் ஆண்களும் பெண்களும் பணியாற்றுகிறார்கள். எனவே அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று

[திரு. சோ.. ஆறுமுகம்] [1983 ஏப்ரல் 11

ஆட்சியில் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லாததால், இந்த ஆட்சி
அவர்களுக்கு வேலை அளிக்கும் என்ற உத்தரவாதம் இல்லாததால், அவர்களில்
சிலர் இன்றைக்கு நக்சலைட்டுகளாக மாறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறந்துவிடக் கூடாது. நக்சலைட்டுகள்
என்றாலே ஏதோ மிகக் கொடூரமானவர்கள், கொள்ளை அடித்தே வாழ்வது
என்று தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர்கள் என்ற குற்றச்சாட்டை
இங்கே சோஷலிச—சமதர்மக் கொள்கையை உருவாக்கப் போகிறோம் என்று
சொல்லுகிற ஒரு சர்க்கார் பேசக்கூடாது. படித்துப் பட்டம் பெற்றவர்கள்,
பல ஆண்டுகளாக வேலை இல்லாமல் குடும்பமே வறுமையில் வாடிக் கொண்
டிருக்கும்போது நம்மாலே குடும்பத்திற்கும் உதவ முடியவில்லையே, நாமும்
இப்படித் துன்பத்திற்கு ஆளாகிறோமே என்று எண்ணுகிறபோதுதான்
அவர்கள் சில கொள்கைகளை ஏற்றுக்கொண்டு அந்தக் கொள்கைகளில்
தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள
விரும்புகிறேன்.

தொழிலாளர்களைப் பற்றிப் பேசும்போது, இந்த மேலவையிலும், பேரவை
யிலும்கூட ஒரு கருத்து எடுத்துச் சொல்லப்பட்டது. சட்டமன்றங்கள் பணி
யாற்றும்போது மட்டும் சில பேரை நாம் தினக் கூலிகளாக, தற்காலிக அடிப்
படையில் பணியில் அமர்த்துகிறோம். சட்டமன்றக் கூட்டம் முடிந்த உடனே
அவர்களையெல்லாம் வீட்டிற்கு அனுப்பி விடுகிறோம். இங்கே ஒரு 4 பேரும்,
பேரவையில் ஒரு 10 பேரும் அவ்வாறு தற்காலிக அடிப்படையில் பணியாற்றிக்
கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை
தரப்போகிறோம் என்று சொல்லுகிற இந்த அரசு இவர்களையாவது குறைந்த
பட்சம் நிரந்தரமாக்கக்கூடாதா என்றுதான் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு
தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஒருவேளை செய்வார்கள் என்று
நம்புகிறேன்.

அடுத்து, தொழிலாளர்களை அரசியல் நோக்கத்தோடு நடத்துகிறார்கள்
என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ.
ஆறுமுகம் அவர்கள், இங்கே உள்ள உறுப்பினர்களை நிரந்தரமாக்க வேண்டும்
என்று சொல்லுகிறாரா அல்லது வேலை செய்பவர்களை நிரந்தரமாக்க வேண்டும்
என்று சொல்லுகிறாரா?

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ கனவில் [redacted]
இருக்கிறார் போல் இருக்கிறது. நான் பணியாளர்களைத்தான் நிரந்தரமாக
ஆக்க வேண்டுமென்று குறிப்பிட்டேன்.



1983 ஏப்ரல் 11] [திரு. சோ. ஆறுமுகம்]

சேலத்தில் அண்ணா போக்குவரத்துக் கழகத்தில் 5 தொழிலாளர்கள்—திரு
வாளர்கள் பி. மாணிக்கம், இருதயராஜ், ஏழுமலை, காளியப்பன், செல்வம்—
வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். கடந்த 2 ஆண்டுகளாக அவர்கள்
கோரிக்கை வைத்து அவர்களுடைய பிரச்சினை தீர்க்கப்படாத காரணத்தால்,
அவர்கள் தீ வைத்துக்கொண்டு சாகக்கூடிய அளவுக்கு மண்ணெண்ணெயோடு
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன் சென்றபோது, காவல்துறை
யினரால் கைது செய்யப்பட்டார்கள். அந்தத் தொழிலாளர்களின் பிரச்சினை
இதுவரை தீர்க்கப்படவில்லை. அந்தத் தொழிலாளர்கள் தி.மு.க.வைச்
சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால்தான், அவர்கள் பிரச்சினை இன்னும் தீர்க்கப்
படவில்லை. ஆனால் அதே நேரத்தில் இவர்களைவிட மிக மோசமான தவறு
தல்களுக்காகக் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் மீது பல லட்சக்கணக்கான ரூபாய்
கள்ள டிக்கட் மோசடி செய்தும், போக்குவரத்து நிறுவனத்தின் நிதியைக்
கையாடல் செய்தவர்களாக இருப்பவர்கள் மீது விசாரணை இன்னும் செய்யப்
படாமலேயே இருக்கிறது. அவர்களெல்லாம் அண்ணா தி.மு.க.-வைச்
சார்ந்தவர்கள் என்ற காரணத்திற்காக அவர்களுக்குப் பாதுகாப்பு தரப்
படுகிறது. பல லட்சக் கணக்கில் அவர்கள் மோசடி செய்தும் அவர்கள்மீது
நடவடிக்கை இல்லை, ஆனால் தி.மு.க.-வைச் சேர்ந்த இந்த ஐந்து தொழிலாளர்
களுக்கு மட்டும்தான் பாதுகாப்பு இல்லை.

(பிற்பகல் 1-30)

பால்வள நிறுவனத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்
சொன்னார்கள். 1,500 தொழிலாளர்களுடைய பிரச்சினை அது. தொழிலாளர்
களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற மனம் இருந்தால் மார்க்கம்
உண்டு. மனம் இல்லை, மார்க்கம் கிடைக்கவில்லை என்பது பொருள். 1,500
தொழிலாளர்களுடைய பிரச்சினையை இன்னும் தீர்க்காமல் இருப்பது முறை
யல்ல. அவர்களுடைய பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்று
இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சேலம் இரும்பாலையைத் துவக்கியதால் பாதிக்கப்பட்டவர்களுக்கென்று
சான்றிதழ் வழங்குகிறார்கள். அந்தச் சான்றிதழைப் பெற்றவர்கள் வேலை
தேடித் தரும் நிறுவனத்தில் பதிவு செய்திருந்தால், அவர்களுக்கு வேலை
வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கிறார்கள். ஆனால் இப்போது சான்றிதழ்
வழங்கும் அந்த அலுவலகத்தையே மூடி விடுவதாக உத்தரவிட்டிருப்பதாக
அறிகிறேன். 31—3—1983 அன்றோடு மூடிவிடுங்கள் என்று உத்தரவிட்
டிருப்பதாக அறிகிறேன். இன்னும் அங்கே நில ஆர்ஜிதம் செய்து கொண்டிருக்

கிறார்கள். அப்படியானால் பாதிக்கப்பட்டவர் என்ற சான்றிதழ் வழங்க வேண்டும். அப்படி வழங்கினால்தான், அவர்கள் கொண்டு போய் வேலை தேடித் தரும் அலுவலகத்திலே பதிவு செய்ய முடியும். அப்படிப் பதிவு செய்தால்தான், ஏதாவது ஒரு வேலை அங்கே கிடைக்கும். ஆகவே அதையும் கவனிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருப்பதாலே ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சேலத்திலே, வீராணம் என்ற பகுதியில் நெசவாளர்களுக்காக வீடு கட்டித் தந்திருக்கிறார்கள். ஆரம்பத்திலே கட்டுகிறபோது எட்டாயிரம் ரூபாய் மதிப்பீடு போட்டார்கள். பணி முடிகிறபோது அது 11 ஆயிரம் ரூபாயாக ஆகிவிட்டது. முதலில் மாதம் தோறும் 50 ரூபாய் கட்ட வேண்டுமென்று இருந்தது. இப்போது 105 ரூபாய் கட்ட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதனாலே நெசவாளர்கள் அந்தத் தொகையைச் செலுத்த முடியாமல் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக சென்னையிலே ஒரு கூட்டம் போட்டு அந்தத் தொகையைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அதைப் போலவே சேலம் விஷயத்திலும் ஏதாவது செய்ய முடியுமா என்று பரிசீலனை செய்யலாம்.

**திரு. சோ. ஆறுமுகம் :** மிகவும் நன்றி. இருந்தாலும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். "அட்கோ" நிறுவனம் மூலமாக இந்த 12 ஆயிரம் ரூபாயைப் பெற்று நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டிக் கொடுக்கிறோம். எல்லோருக்கும் அல்ல. ஆனால் இந்த 12 ஆயிரம் ரூபாயில் அரசாங்கத்தின் மானியம், 1962, 1965-க்கு முன்பு இருந்ததைப் போலவே ஆயிரம் ரூபாய்தான் தருகிறோம். மீதியை அட்கோ நிறுவனம் மூலமாகக் கடனாகப் பெறுகிறார்கள். ஆகவே நெசவாளர்களுடைய நலனை முன்னிட்டு மூன்றாயிரம் ரூபாய், நான்காயிரம் ரூபாய் அரசு மானியமாக ஏன் கொடுக்கக் கூடாது என்பதை அரசு யோசிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

28—3—1983 அன்று தமிழகத்திலே அனைத்துத் தொழிற் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் பேரணியை நடத்தினார்கள். தமிழக அரசு அத்தியாவசியப் பணிகளில் வேலை நிறுத்தத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல, அது பொறுக்குக் குழுவின் பரிசீலனையில் இருக்கும்போதே, மேலும் ஒரு அவசரச் சட்டத்தை ஆளுநரின்



மூலமாக தமிழகத்திலே பிறப்பித்திருக்கிறார்கள். இது தொழிலாளர் விரோதப் போக்கு. அதிகார துஷ்பிரயோகம். அடக்குமுறையைச் செய்து வருகிறார்கள். ஆகவே அனைத்துத் தொழிற் சங்கங்களும் சேர்ந்து ஒரு பேரணியை நடத்தினார்கள். இதையெல்லாம் அரசாங்கம் கொள்கை ரீதியாகச் சந்திக்க வேண்டும். இதற்கு மாற்று ஏற்பாடாக உடனே ஆளும் கட்சியினுடைய தொழிற் சங்கங்கள் மூலம் திசை திருப்பிவிடக் கூடிய வகையில், மாநில அரசு இயற்றியிருக்கக்கூடிய நல்ல சட்டங்களுக்கு உடனடியாக மத்திய அரசு அனுமதி கொடுக்க வேண்டும் என்று சொல்லி, ஏற்கெனவே நடைபெற்ற தொழிற் சங்கங்களுடைய வேகத்தை, மக்களுக்கு ஏற்பட்ட எழுச்சியை அடக்குகிற நோக்கத்தோடு ஒரு பேரணியை 9 ஆம் தேதியன்று ஆளும் கட்சியினர் நடத்தினார்கள். அதைத் தவிர வேறு என்ன நோக்கம் இதிலே இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 26-வது டிவிஷனிலே தி.மு. கழகம் ஒரு பொதுக் கூட்டத்தைப் போட்டது என்றால், அதற்கடுத்த நாள் 27-வது டிவிஷனிலே அகில இந்திய அண்ணா தி.மு. கழகம் ஒரு பொதுக் கூட்டத்தைப் போடுவார்களேயானால், அது அடக்குமுறை என்று சொல்ல முடியாது. அரசியல் கட்சி தங்களுடைய கொள்கையை விளக்க பொதுக் கூட்டம் போடுவதைப் போலவே தொழிலாளர் பேரவை ஒரு பேரணியை நடத்தும்போது, அது அவர்களுக்குள்ள உரிமை. இதைச் செய்வதால் மற்றதை அடக்க வேண்டும் என்ற நோக்கோடு செய்யப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் கொள்ள வேண்டாம். அப்படிக் கருதுவார்களேயானால் defeatist mentality என்று ஆகிவிடும்.

**திரு. சோ. ஆறுமுகம் :** எதிர்க் கட்சியிலே இருக்கக்கூடிய தொழிற் சங்கங்கள் கொள்கை ரீதியாக, நாட்டு மக்களுக்கு, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியது கடமை. ஆனால் ஆளும் கட்சியினர் பேரணியை எதற்காக நடத்தினார்கள் என்பதுதான் பிரச்சினை. மத்திய சர்க்கார், மாநில அரசாங்கத்தின் திட்டங்களுக்கு உடனடியாக அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்பது தேவைதானா? எதற்காக இங்கே ஒரு சர்க்கார் இருக்கிறது? தொழிலாளர் நல இலாக்கா அமைச்சர் இங்கே எதற்காக இருக்கிறார்? மாநில அரசு போட்ட சட்டங்களை மத்திய அரசு அங்கீகரிக்கவில்லை என்றால், அது குறித்து மத்திய அரசோடு நேரிடையாகப் பேசித் தீர்க்க வேண்டும். மத்திய சர்க்காரை நிர்ப்பந்தப்படுத்தி நல்ல சட்டத்தை நிறைவேற்ற முயற்சி எடுக்க வேண்டும். அதற்குப் பதிலாக பேரணி எதற்கு?

கேட்டுக்கொள்கிறேன். இதற்கெல்லாம் வழக்கம்போல மத்திய அரசைப் பார்த்து கையைக் காட்டிக் கொண்டிருக்காமல் மாநில அரசே முன்வந்து இத்தகைய தொழிலாளர்களுக்கு ஒரு பாதுகாப்பான நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் சென்று பாதிக்கப்பட்டால் அல்லது அவர்கள் கடலில் உயிரிழந்தால், மாநில அரசு அவர்களுக்கு நிதி உதவி அளிப்பதைப்போல், பனை மரமேறும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டால், நிதி உதவி அளிப்பதைப்போல் இப்படிப்பட்ட கட்டிடத் தொழிலாளர்கள் தங்களின் வேலை நேரத்தில் உயிரிழந்தால் அல்லது பாதிப்பு ஏற்பட்டு அதன் காரணமாக அவர்களுக்குக் கை, கால் முடம் ஏற்பட்டால், அரசாங்கம் குறைந்தபட்சம் ரூ. 5,000 அல்லது ரூ. 10,000 தர உத்தரவாதம் அளிக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே தரப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பில் ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது தமிழ் நாட்டில் தொழிற்சாலைகளில் விபத்துக்கள் அதிகமாகிப் போனதற்குக் காரணம், இங்கே அதிகமான அளவுக்குத் தொழிற்சாலைகள் ஏற்பட்டு தொழில் வளர்ச்சியடைந்திருப்பதாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் காரணம் ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணமல்ல. தொழிற்சாலைகள் விதிமுறைகளுக்கு உட்பட்டு தொழில்களை நடத்தாததன் காரணமாகவோ, பயிற்சி பெறாதவர்களைத் தொழிலில் ஈடுபடுத்துவதன் காரணமாகவோ இத்தகைய விபத்துக்கள் இங்கே அதிகரித்திருக்கின்றன என்பதுதான் உண்மையாகும். தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறது, எனவே விபத்துக்களின் எண்ணிக்கையும் உயர்ந்துவிட்டது என்று மன்றத்தில் தரப்பட்டிருக்கும் கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே கூட படித்துப் பார்த்திருப்பார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். கொள்கைக் குறிப்பில் இப்படிப்பட்ட கருத்துக்களைப் பிரதிபலிப்பது என்பது, தொழிலாளர்கள் மத்தியில் தவறான எண்ணத்தை உருவாக்கும் என்பதோடு, இன்னும் அதிகமான அளவுக்கு தொழிற்சாலைகளில் விபத்துக்களும் உயிரிழப்புகளும் ஏற்படுவதற்கு வழிவகை செய்வதாக அமையும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.





மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசும்போது தமிழகத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் எப்படிப்பட்ட நிலையில் இருக்கிறது என்பதை, மிக அழகாக எடுத்துக் காட்டினார்கள். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நானும் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். இன்றைய தினம் வேலை கோரி தங்களின் பெயர்களைப் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை—1—4—1981 முதல் 31—12—1981 வரை—12,00,091 ஆக இருந்தது. ஆனால் அதுவே 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களின்போது 14,15,918 ஆக உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். இங்கே தரப்பட்டிருக்கிற புள்ளிவிவரம் இன்றைய தினம் பதிவு செய்துகொண்டு இன்னும் வேலையில்லாமல் நிலுவையில் இருக்கிறவர்களின் கணக்கு. இவர்கள் அல்லாமல் வேலை கோரி தங்களின் பெயர்களைப் பதிவு செய்துகொண்டு பலமுறை அதைப் புதுப்பித்துக் கொண்ட பின்னரும், வேலை கிடைக்காமல் போய், இனி வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையே இல்லாமல் மீண்டும் தங்களின் பெயர்களைப் புதுப்பித்துக் கொள்ளாதவர்களின் எண்ணிக்கை இதில் 1/4 பங்கு அளவுக்காவது இருக்கும் என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

கடந்த 3 ஆண்டுகளில் வேலைக்காகப் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த நிலையில்தான் அரசு "குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை அளிக்கப்படும்" என்ற ஒரு திட்டத்தையும் அறிவித்து அதற்காக ரூ. 18 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை எந்த வகையில் நிறைவேற்றப் போகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. அதற்குக்கூட இப்போது தான் கணக்கெடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்று சொல்லிவிட்டு, மாநிலத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள் எவ்வளவு பேர் என்று இப்போது கணக்கெடுப்பதாக நான் அறிகிறேன். அப்படியானால் இந்த அரசு அறிவித்த திட்டத்திற்கும், இந்தச் செயல்முறைக்கும் என்ன ஒற்றுமை இருக்க முடியும் என்று அறிய விரும்புகிறேன். எனவே, இது மக்களை ஏமாற்றுகிற காரியமா இல்லையா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, போஸ்ட் கிராஜுவேட் பட்டம் பெற்றவர்கள் வேலைக்காகத் தங்களின் பெயர்களைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தாலும், அது ஆண்டுக்காண்டு உயர்ந்து கொண்டே இருக்கிறதே தவிர குறையவில்லை. அவர்களுக்கெல்லாம் இந்த

[திரு. சோ. ஆறுமுகம்] [1983 ஏப்ரல் 11

நீங்கள் என்ன எதிர்க் கட்சியா? எதிர்க்கட்சியாக இருந்தால், அப்போது நடத்தினால் அதை நாங்கள் வரவேற்கத் தயாராக இருக்கிறோம். இந்தச் சர்க்காருடைய கொள்கையை மத்திய சர்க்காரிடத்திலே சொல்லிப் பார்த்தேன். அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, ஆகவே தொழிலாளர் நல அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தொழிலாளர்களோடு போராட்டம் நடத்துகிறேன் என்று அமைச்சர் அவர்கள் வருவாரேயானால், நான் பாராட்டுவேன். அவர் பதவியிலேயும் இருக்க வேண்டும் . . .

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள், ஆளும் கட்சியாக இருப்பதால், ஆளும் கட்சியில் இருந்து ஊர்வலம் நடத்தக்கூடாது என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அவருடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக இருக்கும்போது, திராவிட முன்னேற்றக் கழக தொழிற்சங்கப் பிரிவு இப்படிப்பட்ட பேரணிகளை நடத்தியிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரும் அதிலே கலந்து கொண்டிருப்பார்கள்.

**திரு. சோ. ஆறுமுகம் :** இந்த ஆட்சியை எதிர்த்து தொழிலாளர் இயக்கம், போராட்டம் நடத்துவது என்பது வேறு. மத்திய சர்க்காரை எதிர்த்துப் போராடுவது என்பது வேறு. திசை திருப்ப வேண்டாம். பொதுவாக தமிழ் நாட்டிலே அரசுப் பணியாளர்கள் சில கோரிக்கைகளை வைத்து வேலை நிறுத்தம் போன்ற போராட்டங்களில் ஈடுபட்டதற்காக இந்த ஆட்சி ஐநூறுக்கு மேற்பட்டவர்களை வேலை நீக்கம் செய்து உத்தரவிட்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட அடக்குமுறைச் சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலமாக தொழிலாளர்களுக்கு விரோதமாக இந்த அரசு செயல்படுகிறது. தொழிற் சங்கங்களின் குரல்வளையை நசுக்கி விடுகிறார்கள் என்பதால், இது தொழிலாளர் விரோத சர்க்கார் என்பதை எடுத்துச் சொல்லி அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இங்கே விவாதம் எப்போதும் போல் —of a high order— சிறப்பாக அமைந்தது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் உட்பட.



1983 ஏப்ரல் 11]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** ஆமாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் உட்பட. ஆனால் என் பதிலில் சில நேரத்தில் கோபாவேகத்துடன் குறுக்கிடுவார்கள் என்று நினைக்கிறேன். என்னைப் பொறுத்த வரையில், எப்போதும் உள்ள அந்தப் பாரம்பரியத்தை எல்லோரும் காப்பாற்றினார்கள் என்பதற்காக நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, கோபம் வராமல் இருக்க வேண்டுமானால், முதலில் பசியைப் போக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகள் . . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஏற்பாடு ஆக உத்தரவாதம் ஆகியிருப்பதால் கோபப்படாமல் இருப்பது பயன் தரும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** முதன் முதலில் பேரவையில் சொன்னதைப் போல ஒன்றை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றைய தினம் வரையில் ஸ்ட்ரைக்ஸ் அண்டு லாக்-அவுட்ஸ் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுடைய எண்ணிக்கை 1,986 தான்.

மத்திய அரசுக் கொள்கையைப் பற்றிப் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஏதாவது இன்ஸ்ட்ரக்ஷன் வந்திருக்கிறதா என்று கேட்டார்கள். இப்போதே இதற்குப் பதில் சொல்லுவது நல்லது என்று நினைக்கிறேன். இரண்டு சர்க்குலர்கள் வந்திருக்கின்றன. ரிமைண்டர்கள் வேறு வந்திருக்கலாம். ஆனால் இரண்டு கருத்துக்கள் வந்திருக்கின்றன. ஒரு கருத்து, போனஸ் சட்டத்திற்கு மேல் போனஸ் வாங்கிக் கொண்டிருப்பதாக கன்சிலியேஷன் போன்ற முயற்சியில் ஈடுபடக்கூடாது. தொழிலாளர்களுக்கு சட்டப்படி எவ்வளவு கொடுக்க வேண்டுமோ அதுதான் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் கொடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டால், சட்டத்தின் நோக்கத்தையே கெடுப்பதாக ஆகும்.

(பிற்பகல் 1-40)

இரண்டாவது கூடுமானவரையில் தொழிலாளர்கள் பேச்சுவார்த்தை முறிவு ஏற்பட்டால், முதலாளிகள் 'பைபார்ட்டைட் கன்சிலியேஷனிலே' தோல்வி ஏற்பட்டால், ஒரு வாலண்டரி ஆர்பிட்ரேஷன், வாலண்டரி அட்ஜுடிகேஷனுக்குப் போவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அவர்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அந்த முயற்சியில் மாநில அரசு ஈடுபட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எதை எடுத்தாலும் மத்திய அரசு சொல்வதை

யெல்லாம் ஏற்காமல் மோத வேண்டும், சண்டை போட வேண்டும் என்ற எண்ணம் இல்லை. இன்னும் சொல்லப்போனால், இரண்டு பேர்களும் ஒரே கருத்தோடு ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

தண்ணீர்ப் பிரச்சினை பற்றியெல்லாம் பேசினார்கள். ஆரம்பத்திலே இப்படியிருந்தாலும் வரவர சரியாகி விடும். டிஸ்கிரிமினேஷன் வருகிறபோது அந்த டிஸ்கிரிமினேஷன் வந்துதான் தீரும். அது வேறு கட்சி. இது வேறு கட்சி. அதற்கு என்று ஒரு கொள்கை இருக்கிறது. இதுவேறு அது மத்தியிலே ஆளக்கூடிய கட்சி. இது தமிழ் நாட்டிலே ஆளுகின்ற கட்சி. இது வேறு கொள்கை வைத்திருக்கிறது. 'கன்ப்ராண்டேஷன்' சில நேரங்களில் வரத்தான் செய்யும். அந்த கன்ப்ராண்டேஷனை நாசுக்காக, சோபிஸ்டிகேட்டட் ஆகச் செய்வதுதான் சாமர்த்தியம். அதனாலே அங்கேயிருந்து வருகின்ற ஒரு சட்டத்தைத் தூக்கி எறிவது என்பதல்ல மாநில அரசினுடைய கொள்கை. கூடுமானவரையிலே வாலண்டரி ஆர்பிட்ரேஷன், அட்ஜுடிகேஷன் என்று இருந்தாலும், பேசித் தீர்த்துக் கொள்ளலாம். இல்லை என்றால் வழக்கு மன்றத்திற்குப் போயாவது தீர்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் தொழிலாளர்கள் மத்தியிலே வளர்ந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நல்லசிவன், திரு. மாணிக்கம் போன்றவர்கள்கூட தங்களையும் அறியாமலேயே மாறி வருகிறார்கள் இந்த நாட்டினுடைய தன்மையைக் கருதி என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அவர்கள் பேச்சைத் திருத்தக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். திருத்துவது என்பது very bad எனவே மாறி வருகிறார்கள் என்று சொல்வது சரியல்ல. கொள்கையை பல ஆண்டுகளுக்கு முன்னாலே அறிவித்தோம், தொடர்கிறோம் என்றுதான் சொன்னேன். பைலேட்டரல் டாக்ஸ் ஆக இருந்ததை, சிவில் லிட்டிகேஷனாக மாற்றுவதுதான் இந்த இலாகாவினுடைய வேலையாக இருக்கிறது என்ற முறையிலேதான் சொன்னேன். பைலேட்டரல் செட்டில்மென்ட்ஸ் அதிகமாக இருக்கின்றன. அரசினுடைய தலையீடு அனுசரணையாக இல்லை என்ற காரணத்தினாலேதான் அதை நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவர் அவர்களே, எங்கள் மீது குற்றம் சாட்டினால், அப்படியில்லை என்றுதான் நான் சொல்வேன். அப்படி அரசின் தலையீட்டினால் பைலேட்டரல் செட்டில்மெண்ட்ஸ் அதிகமாக ஆகின்றன என்று சொல்கின்றார்கள். அப்படி அரசு தலையிட்டினால் அல்ல.



எப்படியோ, நேரடிப் பேச்சுவார்த்தைகளில் அதிகமான செட்டில்மெண்ட் வருகிறது என்பதை புரட்சித் தலைவர் ஆட்சி பார்த்து மெத்த மகிழ்ச்சி அடைகிறது. மத்திய அரசு சொல்லியிருப்பது போல . . ..

**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழில் ஒரு பழமொழி இருக்கிறது. சண்டைக்காரன் காலில் விழுவதைவிட சாட்சிக்காரன் காலில் விழலாம் என்பார்கள். அதுபோல இவர்கள் மூலமாகத் தீர்ப்பதைவிட நேரடியாகவே முதலாளிகளிடம் பேசித் தீர்ப்பதே நல்லது என்று நினைக்கிறேன். மன்னிக்கவும். திருத்திக் கொள்கிறேன். சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுந்து விடலாம் என்று பழமொழி சொல்வார்கள். இந்த இலாகாவிற்குப் போவதைவிட நேரடியாக முதலாளிகளிடம் போய் பேசுவது நல்லது என்ற அளவுக்கு எங்களுடைய இன்றைய அனுபவம் இருக்கிறது. இதைத்தான் இந்த இலாகா செய்திருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அப்படி சட்டமன்றத்திலே பேசினாலும் truth behind it. உண்மை என்னவென்றால், இந்தப் போராட்டங்கள், பெரிய சண்டை, நீண்ட வேலை நிறுத்தங்கள் இவைகளையெல்லாம் பற்றி காலம் மாறி வருவதை மனதிலே வைத்து, பேச்சு வார்த்தைகள் மூலமாக இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது, சொல்லப்பட்டு வருகிறது என்பதைத்தான் இது காட்டுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு பேருமே ஒரே கருத்துடையவர்கள். நான் படித்த மார்க்சிசம் சரியாக இருந்தால் அவர்கள் வேலை நிறுத்தம்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அது 'ஆல் ஸ்ட்ரகிள்ஸ் ஆர் பொலிட்டிக்கல் ஸ்ட்ரகிள்' என்று மார்க்ஸ் சொல்லியிருக்கிறார்.

**திரு. ப. மாணிக்கம்:** அது distortion of Marx.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** அப்படியிருந்தால் சரி. உறுப்பினர் அவர்கள் அதிலே அத்தாரிட்டி. நான் படித்திருக்கிறேன். 'கம்யூனிஸ்ட் கட்சிக்கு அரசியல் போராட்டம் என்பது இந்த வேலை நிறுத்தங்கள்' என்று நான் படித்திருக்கிறேன். டிஸ்டார்ஷன் என்றால், நான் அதை இப்படித்தான் படித்திருக்கிறேன் என்பதைச் சொல்லியாக வேண்டும். அந்தத் துறையிலே அந்தக் கொள்கையிலேயிருந்து மாறி பேச்சுவார்த்தையின் மூலமாகப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் பரவி வருகிறது. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசில், புரட்சித்

தலைவர் அவர்களுடைய கருத்துக்கள் வெற்றி பெற்று நாடு நல்ல வகையிலே போகிறது என்பதைப் பார்க்க மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக தொழிற் சங்கத் தலைவர்களாக இருக்கின்ற இரு பெரும் தொழிற் சங்கத் தலைவர்களை மனமார, உளமார புரட்சித் தலைவர் அவர்கள் சார்பாக நான் பாராட்டுகிறேன்.

வேலை நிறுத்தச் சட்டத்தைப்பற்றி எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றிப் பொதுவாகச் சொல்கிறேன். அவரவர்கள் சொன்ன கருத்தைப் பற்றிச் சொல்கிறேன். தொழில் துறையிலே தொழிற்பயிற்சிக் கூடங்களைப் பற்றி திரு. வெட்கரிகாந்தன் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தைப் பற்றி அரசு பரிசீலனை செய்யும். அங்கே அரசு நடத்திக் கொண்டிருக்கின்ற தொழிற் கூடங்களில் கொடுக்கின்ற ஸ்டைபண்ட் பற்றிச் சொன்னார்கள். அதையும் அரசு பரிசீலனை செய்யும். தொழிற்பயிற்சிக் கூடங்களில் பெரும் பகுதி இடங்களில் இப்போது தேர்ட் ஷிப்ட் கொண்டுவருவதற்கு முயற்சி எடுத்து வருகிறேன். தேர்ட் ஷிப்ட் மூலமாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். புதிதாக ஆரம்பிப்பது என்றால், என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால், வந்துள்ள புள்ளிவிவரம் 50 லட்சம் ரூபாய் அளவுக்கு வருகிறது என்று கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே தேர்ட் ஷிப்ட் ஆரம்பித்து எப்படி நடக்கிறது என்று பார்த்தால், அதற்குப் பின்னால் எந்த மாறுதலைச் செய்ய வேண்டுமோ அந்த முறையிலே செய்யலாம்.

திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் ஆல் இந்தியா பிகர்ஸ் இனிமேல் தர வேண்டுமென்று சொன்னார்கள். இங்கே செயலர் எல்லாம் இதைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பு எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் கணக்கு எடுத்து, ஆல் இந்தியா பிகர்ஸ், தமிழ் நாட்டில் எவ்வளவு, மேற்கு வங்காளத்தில் எவ்வளவு, திரிபுராவில் எவ்வளவு, குஜராத்திலே எவ்வளவு என்று சொல்லலாம்.

**திரு. எ. ஆர். தாமோதரன்:** வெஸ்ட் பெங்கால் பற்றியெல்லாம் நான் கேட்கவில்லை. ஆல் இந்தியா பிகர்ஸ், பற்றித்தான் கேட்டேனே தவிர, மற்றவற்றைப் பற்றிக் கேட்கவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மறுபடியும் நாளை மறுநாள் அவர்கள் சந்திக்கும்போது, ஆல் இந்தியா பிகர்ஸ் என்பதை எப்படிக் கருது கிறார் என்று அவர்கள் என்னிடம் சொல்வார்களானால், அப்படித் தர ஏற்பாடு





செய்கிறேன். public sector undertakings should be model employers. அவர்கள் வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்ற கருத்தை அவர்கள் சொன்னார்கள். எப்போதுமே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'சென்டரிஸ்ட்'தான். இந்த என்டுக்கும் போகாமல், அந்த என்டுக்கும் போகாமல், நடுவிலேயே இருந்துகொண்டு, இருந்த நிலையிலேயே இருந்து கருத்தைச் சொல்பவர்கள். அவர்கள் சொல்கின்ற கருத்தை எல்லோரும் கவனிப்பார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பிடித்து உட்கார்ந்து கொண்டு இருக்கின்ற இடமே அப்படித்தான் இருக்கிறது. ஜாக்கிரதையாக உட்கார்ந்திருக்கிறார்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** எல்லோருமே கவனிக்கின்ற அளவுக்குப் பேசுவார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன். பப்ளிக் செக்டார் அன்டர்டேகிங்ஸ் அதிகாரிகளை அழைத்து எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று பார்க்க கூட்டம் நடத்துகிறோம். அந்தக் கூட்டத்திற்கு நான்தான் தலைமை தாங்கி நடத்துகிறேன். அவர்கள் சொன்ன கருத்துக்களை மனதிலே வைத்து அதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யச் சொல்லி பிறர் பாராட்டுகின்ற வகையிலே அவர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்கிறோம். அப்படி ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். பால் சேவிகா ஊதியம் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றிப் பரிசீலனை செய்யப்படும் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன். ஷாப்ஸ் அண்டு எஸ்டாபிளிஷ்மென்ட்ஸ் ஆக்ட் பிராசிகியூஷன் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி நான் அப்போதே பதில் சொல்லிவிட்டேன். பிராசிகியூஷன் அதிகமாகி இருந்தால் பரவாயில்லை, நன்றாகச் செயல்படுகிறது என்று அதை மனதோடு மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நல்லசிவன் அவர்களும், திரு. மாணிக்கம் அவர்களும் பாராட்டுவார்கள். அதிகமாக இருக்கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். அவர்களுடைய கருத்து மதிக்கக்கூடிய கருத்துதான். அவர்கள் வாழ்நாள் பூராவும் தொழிற் சங்கத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களோடு கூட போராட்டம் நடத்திய பெருமை எனக்கு உண்டு. அதை ஒரு பாக்கியமாகக்கூட நான் கருதக்கூடியவன். ஆக இரண்டு கருத்துக்கும் இடையிலே வேகமாகப் போய்விடாமல், தொழிலாளர்கள் நசித்துவிடாமல். தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு விடாமல், இந்தக் காரியத்தை அரசு அக்கறையுடன் செய்யும். அந்தக் காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதிலே அரசு அக்கறையாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. மாணிக்கம், திரு. நல்லசிவன் கருத்துக்கு இறுதியாக பதில் சொல்லி விடுகிறேன். ஒரே பாணியில் அமைந்திருக்கின்ற காரணத்தால் அப்படிச் சொல்லிவிடுகிறேன்.

அடுத்து, டாக்டர் ராஜா அவர்கள் சைல்ட் லேபர் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்களும் சைல்ட் லேபர் பற்றிச் சொன்னார்கள். எல்லோரும் அதைப்பற்றிச் சொன்னார்கள். திரு. க. இராமமூர்த்தி அவர்கள் மனித உழைப்பைப் பற்றிச் சொன்னார்கள். சைல்ட் லேபர் வராமல் கூடுமானவரையில் தடை செய்ய வேண்டும் என்று சொன்னார் கள். கூடுமானவரையில் குறைப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம். இன்ஜினியரிங் இன்டஸ்ட்ரிஸ் பற்றி அவர்கள் மிகவும் வருத்தப்பட்டுச் சொன்னார்கள். அதிலே யும் குறைப்பதற்கு எங்களால் ஆன முயற்சிகளை எடுப்போம் என்று சொல்லிக் கொள்கிறேன். கிராம மீனியல்ஸ் பற்றிச் சொன்னார்கள். நேரடியாக அது என்னுடையது அல்ல. அது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடம் இதைப் பற்றிப் பேசுகிறேன். சைல்ட் லேபர் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். எல் லோருக்கும் பதில் சொல்லும்போது, அதைப்பற்றிப் பொதுவாகச் சொல்கிறேன். மினிமம் வேஜஸ் பற்றிச் சொன்னார்கள். மினிமம் வேஜஸ் பிராசிகியூஷன் குறைவதற்குக் காரணம், அது மைனஸ் அக்ரிகல்சரல் லேபர். மற்ற இடத்திலே அந்தச் சட்ட பிரகாரம் அரசு ஆய்வாளர்கள் போய் பார்த்துச் செய்வது ஒன்று

(பிற்பகல் 1-50)

அந்தத் தொழிலாளர்களே ரிப்போர்ட் செய்து, கோர்ட்டுக்குப் போகலாம். தொழிற் சங்கங்களே அந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டு, தொழிலாளர் களுக்கு மினிமம் வேஜஸ் வாங்க முயற்சி செய்யலாம். இங்கே இரண்டு மாபெரும் உறுப்பினர்கள் இருக்கிறார்கள், அரசுக்கும் தொழிலாளர்களுக்கும் உதவி செய்யும் வகையில். நிர்ணயிக்கப்படுகிற மினிமம் வேஜசை, அக்ரிகல் சுரல் லேபரர்ஸ் தவிர மற்ற தொழிலாளர்கள் பெற தொழிலாளர்களும், தொழிற் சங்கங்களுமே வழக்கு மன்றத்திற்குப் போகலாம். அந்த முயற்சியில் அவர்கள் ஈடுபட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் வலி யுறுத்தினார்கள். அந்த முறையில் ஈடுபட்டு, பணியாற்ற வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்ச் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தைக் குறித்து வைத்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம மூர்த்தி அவர்கள் சொன்னதைக் குறித்து வைத்திருக்கிறேன். அதையும் பரி சிலனை செய்து, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கிறேன் என்றும் சொல்லிக்கொள்கிறேன். சேலம் இரும்பாலை பற்றிச் சொன்னதும் கவனிக்கத் தக்கது என்று சொல்லிக்கொள்கிறேன்.





இப்போது சைல்ட் லேபர் பற்றிச் சொன்ன கருத்துக்களுக்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். நேற்று முன்தினம் Statesman பத்திரிகையில் **'Over-worked Children'** என்று இரண்டாவது தலையங்கம் வந்துள்ளது.

The Union Minister of State for Labour's recent admission in the Lok Sabha that there was no proposal to prohibit child labour reiterated the Centre's earlier rejection of an important recommendation of the Committee on Child Labour.

மத்திய அரசு சைல்ட் லேபரை **as a whole prohibit** செய்வதில்லை என்று முடிவெடுத்திருக்கிறது என்று சொன்னார்கள். அது சாத்தியக்கூறு இல்லை என்பதால்தான் **it is a ticklish Problem** என்பதால்தான், அதை **handle** செய்வதை சாமர்த்தியமாகச் செய்ய வேண்டும். சிவகாசியில் அப்படி இருக்கிறார்கள். சைல்ட் லேபர் பிரச்சினை பற்றி இந்த அரசின் அமைச்சரவை கூடி, 5 முடிவுகள் எடுத்தது.

The provisions of the relevant Acts on child labour should be strictly enforced.

Immediate action may be taken to shift the operation of the factories to the villages where the children reside by setting up work sheds in villages by employers or by co-operative societies.

Comprehensive scheme be worked out to give the children in the area sufficient incentives to attend schools and to give them education side by side with their work wherever possible.

Minimum wages be revised with a view to increasing the earning capacity of the workers.

A Board under the chairmanship of Collector of Ramanathapuram, with representatives of employers and labour unions as members be constituted to ensure welfare measures to the children employed in the factories and to co-ordinate the activities of the various agencies involved in mitigating the problem of child labour.

இந்த முடிவுகளை எடுத்து, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. தொழிற் சங்கத் தலைவர் கள், முதலாளிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு இதைக் கவனித்துக் கொள்கிறது. இதுவன்றியில், மத்திய அரசின் பரிந்துரையின்மீது, தொழிலாளர் நல அமைச்சர் தலைமையில் ஒரு

குழு அமைக்கப்பட்டு, இதை கவனித்துக் கொண்டிருக்கிறோம். இதிலே என்ன செய்ய முடியுமோ அதைச் செய்கிறோம். நம்முடைய அமைச்சரவை பரி சீலனைக்கு, ஆலோசனைக்கு லேபர் இலாக்காவால் ஒரு திட்டம் கொடுக்கப்பட் டிருக்கிறது. அதுபற்றிப் பரிசீலனை செய்து, மாற்ற வேண்டுமென்று ஐடியா கொடுத்தது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். முதலமைச்சராக இருப் பவர் அப்படித்தான் சொல்லுவார். கூப்பிட்டு, இந்த லைனில் டிராப்ட் தயாரித்து வையுங்கள் என்று சொல்லுவார். அப்படி வைக்கப்பட்டிருக்கிறது. டெல்லியிலே ரெஸ்டாரண்டுகளிலே மட்டும் 60,000 சிறுவர்கள் வேலை செய்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் என்னிடத்தில் இருக்கிறது. தவறு வந்து விடப் போகிறது. ஏனென்றால் சட்டசபை. எதுவும் சரியாக இருக்க வேண்டும். பார்த்தே சொல்லி விடுகிறேன். **About 60,000 children of Delhi are** employed in eating places. Though their hours of work, rest, interval working conditions are regulated by the Delhi Shops and Establishments Act, 1954 and the Minimum Wages Act, 1948, these laws are universally flouted, according to Mr. R. N. Puri, Labour Commissioner of Delhi Administration.

என்று இருக்கிறது. குற்றம் சொல்வதற்காக நான் இதைச் சொல்லவில்லை. இது ஒரு நாட்டு பிராப்ளம் சிக்கலான, டிக்லிஷ் பிராப்ளம்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, சமீபத்திலே நாடாளுமன்றத்தில் சைல்ட் லேபர் எக்ஸ்ப்ளாய்டேஷன் (child labour exploitation) தமிழ் நாட்டில் அதிகமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதை 'ரிபீட்' பண்ணி, அமைச்சரவை தகவல் கொடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மத்திய அரசு என்றால் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் விட மாட்டேன் என்கிறார்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, அது பாராட்ட வேண்டிய விஷயம். மத்திய அரசு என்றால், அவர் விடக்கூடாது. மாநில அரசு என்றால் நான் விடக்கூடாது. One should discharge one's duties. தகவல் கேட்பது உண்மை. தகவல் தப்பாட்டது உண்மை. இந்தப் பிராப் ளத்தைச் சொல்லி, எப்படி இருக்கிறது என்று சொன்னதைப் பார்த்தேன். பாராளுமன்றத்தில் இதை ப்ரோஹிபிட் பண்ணவில்லை என்று சொன்னதை வைத்துக்கொண்டு எப்படி சட்டத்தை நிறைவேற்றலாம் என்பதைப் பரிசீலிக்க





வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஊதியம் சரியாகப் போய்ச் சேரவில்லை என்ற புகார் இருக்கிறது. கமிட்டியின் முன்னிலையில் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று பரிந்துரை வைத்திருப்பதாக என்னுடைய ஞாபகம். அது சரியாக இருக்குமென்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப் பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் இதிலே அக்கறை கொண்டவர்கள். எவ்வளவு சமூகமாகப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமோ அந்த அளவுக்குச் செய்து, அவர்களுக்கு நன்மைகளைச் செய்ய இந்த அரசு ஏற்பாடுகளைச் செய்யும்.

**திரு. ப. மாணிக்கம் :** தலைவரவர்களே, அர்பான் சிங் ரிப்போர்ட்— குழந்தைகள் வேலைபற்றி அறிக்கை இருக்கிறது. அதை இந்த அவை உறுப் பினர்களுக்குத் தர முடியுமா? அதன் அடிப்படையிலே அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அர்பான் சிங் குழுவின் பரிந் துரைகளை ஒட்டித்தான் 5 முடிவுகள், அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப் பட்டிருக்கின்றன. நான் படித்தது அதுதான். மாண்புமிகு உறுப்பினர், அந்த அறிக்கையைத் தர வேண்டுமென்று கேட்பது பற்றி என்னால் சொல்ல முடியாது. அது பற்றி கன்சல்ட் செய்ய வேண்டும். 5 முடிவுகள், அர்பான் சிங் குழு அறிக்கையை வைத்து எடுத்ததுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறதா? இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது என்றால், அதில் அங்கம் பெற்றுள்ள தொழிற் சங்கத் தலைவர்களின் பெயர்களைக் குறிப் பிட முடியுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, இது கேள்வி நேரமில்லை. அதிலே தொழிற் சங்கத் தலைவர்களின் பிரதிநிதிகள் இருக் கிறார்கள். முதலாளிகளின் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். யார் யார் என்ற தகவல் என் கைவசமில்லை. 'இருக்கிறார்கள்' என்றால் திருப்தி அடைவீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அடுத்து, எல்லோரும் பேசியது கட்டிடத் தொழிலாளர்கள் பற்றியதாகும். அந்தச் சட்டம்பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மத்திய அரசு கட்டிடத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பாக ஒரு சட்டத்தை உருவாக்கி, அந்த டிராப்ட் பில்லை மாநில அரசுகளுக்கு அனுப்பிற்று. அப்படி வந்ததிலே நாங்கள் சில திருத்தங்களைச் செய்து, இந்த அரசின் சார்பாக அனுப்பியிருக்

கிறோம். என்ன காரணமோ, அதை இன்னும் அறிமுகம் செய்யவில்லை. This brooks no delay என்ற காரணத்தால் நாங்கள் உடனடியாக ஒரு சட்டத்தைத் தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். அவர்கள் ஒப்புதலை எதிர்பார்க்கிறோம். அது வந்ததற்குப் பிறகு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெய்வேலி வேலைநிறுத்தம் பற்றிச் சொன்னார்கள். வேலை நிறுத்தம் நடந்தது. மத்திய நிறுவனம்தானே அது என்று சொல்லாமல், அவர்களை அழைத்து, வேலை நிறுத்தத்தை நிறுத்திவிட்டு வாருங்கள், பேசலாம் என்று சொன்னேன். அவர்கள் மனநிறைவோடு வேலை நிறுத்தத்தை நிறுத்திவிட்டு, வந்து பேசினார்கள். நிதானமாகப் பேசியதால், அதிகமாக போனஸ் பெற்று சென்றார்கள். இதுவரை வாங்காத அளவுக்கு போனஸ் வாங்கிச் சென்றார்கள் என்ற தகவலைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 2-00)

சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினைபற்றி இங்கே சொன்னார்கள். சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு இருக்கிறது. மேலும் இங்கேயுள்ள கமிஷனரிடம் 3 மாதம் தவணை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதுபற்றி நிலையில் சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிற பிரச்சினைபற்றி நாம் பேசுவது இப்படிப்பட்ட பொருத்தமாக இராது. இப்போது இதைப்பற்றி அதிகமாகப் பேச வேண்டாம்.

லாக் அவுட்டை ஏன் ரத்து செய்யவில்லை என்று கேட்டார்கள். இன்றைக்கு சுப்ரீம் கோர்ட்டில் இருக்கும்போது 'லிப்ட்' செய்வது சரியாக அது இராது. பொதுவாகவே வன்முறையை ஒருவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். மறைந்துவிட்ட திரு. மொய்தீன் அவர்கள் தன் கைப்பட வன்முறை பற்றி எழுதிய கடிதம் இருக்கிறது. இப்படி எல்லாம் செயல்பட்டால், எக்ஸ்டிரிமிஸ்ட் நக்சல்பாரிகள் உருவாக மாட்டார்கள் என்று இங்கே மாண்புமிகு என் உறுப்பினர் திரு. ஆறுமுகம் கேட்டார். நானும் அவரும் ஒரே கட்சியில் ஒரு காலத்தில் இருந்தவர்கள். இரண்டு பேரும் 15 வருடத்திற்கு முன்பு ஒன்றாக இருந்தவர்கள். அப்போது அவர்கள் ஒரு முறை மாதக்கணக்கில் மருத்துவ மனையில் இருந்தார்கள். அப்போது நான் அவரை அடிக்கடி போய் மருத்துவ மனையிலேயே பார்த்தவன்.

திரு. சோ. ஆறுமுகம்: ஒரு மாதம் தான் நான் மருத்துவ மனையில் இருந்தேன். (சிரிப்பு). ஆனால் அவர் வந்து பார்த்தது உண்மை.





மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அப்போது ஒரே ஒரு கட்சி இருந்தது. அவர் ஒரு மாதம் மருத்துவமனையில் இருந்தாலும், நான் அதிக நாள் போய் அவரைப் பார்த்ததால் சொல்கிறேன். ஆனால் பொதுவாகவே யாரும் எக்ஸ்ட்ரீமிஸ்டாக போய்விடாதவாறு எல்லோரும் பார்த்துக் கொள்ள வேண்டும். நாங்கள் நிதானமாகப் போனதால் 340 பேர்களுக்கு, ரிட்ரென்ச் ஆக வேண்டியவர்களுக்கு, நோட்டீஸ் கொடுக்கப்பட்டவர்களுக்கு முழு ஊதியம் கிடைக்கிற ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஆகவே தான் சுப்ரீம் கோர்ட்டினுடைய தீர்ப்பைப் பார்த்து அதன் பிறகு இது குறித்து நாம் என்ன செய்வது என்பது குறித்து முடிவெடுக்கலாம்.

திரு. ஆ. நல்லசிவன்: நான் ஒரு விவரம் கேட்டிருந்தேன். 25 (என்) என்று சொல்லும்போது, இலட்சக்கணக்கானவர்கள் பாதிக்கக்கூடிய இதனை ஏற்று அரசு அப்பீல் செய்யவில்லை. அப்பீல் செய்ய வேண்டுமென்பது அரசின் கடமையா இல்லையா? காம்பிரிஹென்சிவ் லெஜிஸ்லேசன் என்று வரும்போது, நம் சட்டத்திலே பல குறைகள் இருக்கின்றன. சுப்ரீம் கோர்ட்டினுடைய தீர்ப்பு வருகிறவரை காத்திருப்பது என்கிற நிலைமை அவ்வளவு நல்லதல்ல. காரணம் இது இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படக் கூடிய ஒரு பிரச்சினை சம்பந்தப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: 25 (என்)-ஐ ஹைக்கோர்ட் ஸ்ட்ரைக் டவுன் செய்துவிட்ட காரணத்தால், மத்திய அரசு இதைக் கொண்டு வந்தது. இது குறித்து பின்னால் முடிவு எடுக்க இருக்கிறோம்.

10 (பி)-ஐப் பற்றிச் சொன்னார்கள். அதுகுறித்து தவறான கருத்து பரவியிருக்கிறது. ஒருவேளை அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ளக் கூடிய அளவுக்கு என்னால் திறமையாக நிலைமைகளைச் சொல்ல முடியவில்லையோ என்னவோ. நீதிமன்றத்திற்கு ஒரு வழக்கு போவதற்கு முன்னால் தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணமாக ஏதாவது நிவாரணம் கொடுப்பதற்கான அதிகாரம் நமக்கு—நமக்கு என்றால் அரசுக்கு இல்லாமல் இருந்தது. இந்தச் சட்டத்தின்மூலம் தொழிலாளர்களுடைய சர்வீஸ் கண்டிஷனுக்குப் பாதுகாப்பு, இடைக்கால நிவாரணம் போன்ற எல்லாச் சலுகைகளையும் கொடுத்துவிட்டு, அதன்பிறகு நீதிமன்றத்திற்கு அந்த வழக்கை அனுப்புகிற அதிகாரத்தைக் கொடுப்பதுதான் இந்த 10 (பி) பிரிவு. தொழிலாளர்கள் கேட்ட ஆண்டுக்கு முன்பு எவ்வளவு போனஸ் வாங்கினார்களோ அதைவிட அதிகமாக போனசை நாங்கள் வாங்கிக் கொடுத்தோம். இதை மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள்

[திரு. எஸ். இராகவானந்தம்] [1983 ஏப்ரல் 11

ஏற்றுக்கொண்ட பெருந்தன்மையை நான் பாராட்டுகிறேன். இனிமேல்
போனஸ் நிலைமை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான முடிவிற்கு அதை
நீதிமன்றத்திற்கு அனுப்பியிருக்கிறோம். தீர்ப்பு தொழிலாளர்களுக்குப் பாதக
மாக வந்தால்; வேலை நிறுத்தம் வரும் என்றெல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்
பினர் சொன்னார். இப்படி மாண்புமிகு உறுப்பினர் ஸ்ட்ரைக், ஸ்ட்ரைக்
என்று பேசிக் கொண்டிருப்பது நாட்டுக்கு நல்லதல்ல.

**திரு. ஆ. நல்லசிவன் :** ஒவ்வொரு தடவையும் அக்ரிமெண்ட் போட்டு
அதன்படி போனஸ் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலைமை இருந்து வந்தது.
இப்படி அரசு இதனைக் கோர்ட்டுக்கு 'ரெபர்' பண்ணியதன் மூலம்
18 ஆண்டுகளாக கோயம்புத்தூர் மில் தொழிலாளர்கள் அனுபவித்து வந்த
ஒரு உரிமை பறிபோயிருக்கிறது. இப்படி வழக்குமன்றத்திற்கு இது
போயிருப்பதன்மூலம் தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதா
இல்லையா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** வழக்கு மன்றத்திற்குப் போகக்
கூடாது என்கிற கொள்கையுடையவர்கள் அல்ல சி.பி.எம். மற்றும் ஏ.ஐ.டி.யு.சி.
கட்சியினர். சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினைக்காக சுப்ரீம் கோர்ட் வரை
சென்றிருக்கிறார்கள். ஆனால் இப்போதெல்லாம் இந்தக் கட்சிகளிடத்தில்
பாராட்டத்தக்க அளவுக்கு ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. முன்பெல்லாம்
பிரச்சினைகள் என்றால் நடுத்தெருவிலே, துப்பாக்கி முனையிலே தீர்க்கப்பட
வேண்டுமென்ற மனப்பான்மையிலே இருந்தார்கள். ஆனால் இப்போது அந்த
எண்ணம் மாறிக்கொண்டு வருவது நல்லதுதான்.

**திரு. ஆ. நல்லசிவன் :** நாங்களும் லேபர் கோர்ட்டுகளையும் லேபர் இலாகா
வையும் அவசியம் ஏற்பட்ட நேரத்தில் எல்லாம் பயன்படுத்தியிருக்கிறோம்.
ஆனால் அப்படியும் முடியாது என்கிற கட்டாயம் ஏற்படும்போது, அவசியம்
ஏற்படும்போது மட்டும் தான், வேலை நிறுத்தம் செய்கிறோம். நான் வெளி
யிட்ட எண்ணத்தையொட்டி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம்
சொல்லவில்லை. இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் தங்களுடைய பிரச்
சினைகளை 18 வருடங்களாக அக்ரிமெண்ட் என்கிற அணுகுமுறையின் மூலம்
தீர்த்து வந்தார்கள். ஆனால் இன்றைய தினம் அப்படி பிரச்சினைக்கு முடிவு
காணாமல் இதனை கோர்ட் விவகாரமாக்கியது சரிதானா? மாண்புமிகு
அமைச்சர் அவர்களின் தலையீட்டால்தான் இது நடைபெற்றது என்பது
உண்மையா இல்லையா ?



1983 ஏப்ரல் 11]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** நேரடி பேச்சுவார்த்தை
நடந்தது. நேரடி பேச்சுவார்த்தையில் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டு
ஒப்பந்தம் ஏற்படவில்லை. கன்சிலியேஷன் நடந்ததாயினும் ஒப்பந்தம்
எதுவும் ஏற்படவில்லை. உடனே வேலை நிறுத்தம் என்றார்கள்.
உடனே பெரிய வேலை நிறுத்தம் வாராதபடி அரசு பார்க்க வேண்டாமா? டெக்ஸ்
டைல் ஒர்க்கர்ஸ் [illegible] பாதிக்கப்படக் கூடாது. இண்டஸ்ட்ரியும்
பாதிக்கப்படக் கூடாது என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம். அதனால்
தான் இடைக்கால ஏற்கெனவே தொழிலாளர்கள் வாங்கிக் கொண்டிருந்த
போனஸை வாங்கட்டும் என்று நாங்கள் டைரக்ஷன் கொடுத்தோம். 10 (பி)
இம்மாதிரி பிரச்சினை ஏற்படும்போது அரசு ஒரு இண்டரிம் டைரக்ஷன்
கொடுக்கலாம் என்பதற்கான அதிகாரத்தை அளிக்கிறது. ஏற்கெனவே வாங்கிக்
கொண்டிருந்த போனஸை வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னோம்.
பிரச்சினை வந்ததால், கோர்ட்டுக்குப் போகிற நிலைமை ஏற்பட்டாலும்
இடையில் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெறலாம். இதெற்
கெல்லாம் நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. இதை நான் மாண்புமிகு உறுப்
பினர் [illegible] கொண்டு வரும் அதே நேரத்தில் [illegible]
தாலும் போராட்டம், இப்போதே போராட்டம் என்பது சரிதானா என்பதை
எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படியெல்லாம் போராட்டம், போராட்டம்
என்று நினைவுபடுத்திக்கொண்டிருந்தால், என்ன ஆவது? இப்போது சி.ஐ.டி.யு.
[illegible] ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இப்படி மாற்றம் ஏற்பட்டுக்
கொண்டிருக்கும் நேரத்தில் திரும்பவும் ஸ்ட்ரைக் பண்ணுவது [illegible] அஜிடேட்
பண்ணுவது, இவற்றையெல்லாம் துணை நிற்பதுதான் எங்களுடைய கொள்கை
என்கிற முறையில் பேசிக் கொண்டிருப்பது தொழிலாளர்களுடைய நலனுக்கு
நன்மை செய்வதாகுமா ?

போராட்டம் என்பதற்கு பதில் நெகோசியேஷன், கன்சிலியேஷன், ஆர்பிட்
ரேஷன், அட்ஜூடிகேஷன் போன்ற அணுகுமுறைகளை அவர்கள் வளர்ப்பது
நாட்டின் நலனுக்கும், தொழிலாளர் நலனுக்கும் நல்லது. ஆனால் காலப்
போக்கில் அவர்களுக்குள்ளேயே ஒரு 'சேஞ்ச்' ஏற்பட்டிருப்பது வரவேற்கத்
தக்கது. முன்பெல்லாம் அவர்களிடம் எடுத்ததற்கெல்லாம் போராட்டம்
என்கிற அணுகுமுறை இருந்தது. கட்டாயம் போராட வேண்டுமென்கிற
நிலையைத் தவிர்த்தால் ஒழிய, மற்ற நேரங்களில் எல்லாம் வேலை நிறுத்தம்
செய்வது கூடாது. எங்களுடைய இந்த எண்ணத்திற்குச் சாதகமான ஒரு
சூழ்நிலையை நோக்கி மாண்புமிகு உறுப்பினர் அவர்களைச் சார்ந்த கட்சி
யினர் வந்து கொண்டிருப்பதற்காக இந்த அரசு மகிழ்கிறது, அவர்களை இந்த
[illegible]

அரசு பாராட்டுகிறது. ஆகவே தான் சொல்கிறேன். 10 (பி) என்கிற பிரிவு இருப்பது நிச்சயமாக தொழிலாளர்களுக்கு நன்மை செய்வதற்காகத்தான். அதனால் தான் நாங்கள் அதனை நடைமுறைப்படுத்தியிருக்கிறோம்.

அடுத்து, அரசாங்கம் குறிப்பிட்ட தொழிற்சங்கத்துக்கு ஆதரவு தருகிறது என்பது பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொன்னார்கள், நான் இங்கே பேசும்போது, கூடுமானவரை "கான்ட்ரோவெர்சி" இல்லாமல் இருக்க வேண்டுமென்றுதான் விரும்புகிறேன். எல்லோரும்தான் பேச்சுவார்த்தைக்கு ஆட்களை அனுப்புகிறார்கள். எல்லோரும்தான் அமைப்புகளை வைத்திருக்கிறார்கள். சி.ஐ.டி.யு. என்கிற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அமைப்பே முன்பு ஒன்றாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்து வந்தது தான். இவர்களுக்காக வேண்டி அப்படி ஒரு கட்சியை ஆரம்பித்தார்கள். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்ட சி.பி.எம். மற்றும் சி.பி.ஐ. போன்ற தொழிற்சங்கங்களும் மற்றும் இருக்கின்ற எல்லா அமைப்புகளும் தொழிற்சங்கங்கள்தான். ஆனால் இவைகளினால் தொழிலாளர்களுக்கு 'டிஸ்டர்பன்ஸ்' என்கிற நிலைமை வருகிறபோதுதான் எங்களுக்கு சிரமமாக இருக்கிறது.

திரு. ப. மாணிக்கம்: அரசே போட்டித் தொழிற்சங்கத்தை உருவாக்கி, 800 பேர் உள்ள ஒரு தொழிற்சங்கம் இருக்கும்போது, 13 தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சங்கத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்வது என்பது சரிதானா?. வலுவுள்ள 800 பேர் அடங்கிய தொழிற்சங்கம் இருக்க, 13 பேர் கொண்ட வலுவற்ற தொழிற்சங்கத்துடன் பேச்சு வார்த்தைக்குப் போன போது அவர்களுக்கு ஆதரவாக காவலர்களையும் அனுப்பிய காரணத்தால் தான், வன்முறை நடந்தது. குறிப்பிட்ட ஒன்றிரண்டு நிலைமைகளை மட்டும் சொல்கிறேன். விவகாரத்திற்குள் நான் போக விரும்பவில்லை. அரசு இட்ட மிட்டு, இந்தத் துறையின் மூலம், மற்ற தொழிற்சங்கங்களின் நலன்களை, உரிமைகளை ஒடுக்குகிறது. அந்த வகையில் உறுதுணையாக இருக்கிற ஒரு தொழிற்சங்க அமைப்பை இரண்டாக உடைக்க அரசே காரணம் என்பது தான் என்னுடைய குற்றச்சாட்டு.

(பிற்பகல் 2-10)

(மாண்புமிகு தலைவர் தலைமை.)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இதற்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் திரு. மாணிக்கம் அவர்களும், திரு. நல்லசிவன் அவர்களும் ஒப்புக்கொள்வதைப் போல், எந்தக் கட்சி ஆட்சிக்கு



வந்தாலும், தனக்கு ஒரு லேபர் விங் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறது. என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், 1920ல் தான் ஏ.ஐ.டி.யு.சி. ஆரம்பிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் வந்தது எல்லாம் ரைவல் யூனியன் தான். தி.மு.க.-வில் நான் இருக்கும்போது, நானும் ஆரம்பித்தேன். அது ரைவல் யூனியன்தான். அகில இந்திய அண்ணா தி.மு.க.-வில் யூனியன் ஆரம்பிக்கப்பட்டதும், ரைவல் யூனியன்தான். சி.ஐ.டி.யூ. ரைவல் யூனியன்தான். ஜனதா கட்சி ஆரம்பித்ததும் அதுவும் யூனியன் ஆரம்பித்தது. எச்.எம்.எஸ். ரைவல் யூனியன்தான். ஆக It has become the orded of the day எந்த அரசியல் கட்சி ஆரம்பித்தாலும், யூனியன் ஆரம்பிக்கிறார்கள். தயவு செய்து அதைக் குற்றம் சொல்ல வேண்டாம். இந்தியாவில் இது பழக்கமாகி விட்டது. அரசே ஆரம்பிக்கிறது என்று சொல்கிறார்கள். ஒரு விழா நடக்கிறது என்று வைத்துக்கொண்டால், அதை அண்ணா தி.மு.க. தொழிற் சங்கம் நடத்துகிறது என்றால், போக்குவரத்துத் துறை அமைச்சர் கலந்து கொள்வார். நானும் கலந்து கொள்வேன் என்றால், அதை அரசாங்கமே ஆரம்பித்தது என்று பொருள் அல்ல. எங்களுக்கும் தொழிற் சங்கம் இருக்கிறது. ஆட்சியில் இருந்தாலும் எங்களுக்கும் கட்சி இருக்கிறது. 28 ஆம் தேதி நடந்த கூட்டத்தை விட, 9 ஆம் தேதி அதிக அளவுக்குக் கூட்டம் சேர்கிற பெரிய ஆளும் கட்சியாக இருக்கிறது.

திரு. ப. மாணிக்கம்: 9 ஆம் தேதி நடந்த கூட்டம் அதிகம் என்று அமைச்சர் அவர்கள் வேண்டுமென்றால் ஆசைப்பட்டு சொல்லிக் கொள்ளலாம். அது அதிகம்தானா? உண்மையிலேயே சொல்லுங்கள். உண்மையை மறைக்க முடியும். ஆனால் அதைக் கொல்ல முடியாது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அதைத்தான் நான் சொல்கிறேன். மக்கள் பார்த்து எந்தக் கூட்டம் அதிகம் என்று முடிவு செய்யட்டும். தங்கள் கட்சிக்கென்று, தனக்கென்று ஒரு தொழிற் சங்கம் ஆரம்பித்து நடத்துகிறார்களே தவிர, போட்டிக்காக ஆரம்பிக்கவில்லை. குடியாத்தத்தில், திருமகள் பஞ்சாலைபற்றிப் பேசினேன். அங்கே சி.ஐ.டி.யூ.தான் இருந்தது. ஏ.ஐ.டி.யூ.சி. பின்னால் ஆரம்பித்தார்கள். டாக்டர் கண்ணபிரான்தான் அதன் தலைவர் என்று நினைக்கிறேன். அவர்கள் பேச வந்தார்கள். நான் உடனே நம்முடைய கோதண்டராமன் அவர்களைக் கேட்டேன், "என்னங்க. உங்களுடைய யூனியனுக்கு ரைவலாக ஆரம்பித்திருக்கிறார்களே?" என்று கேட்டேன். ஒத்துக் கொண்டார்கள். அதை 'நேச்சுரல் கரோலரி' என்று விட்டு விட்டேன். அதைப்போல நாகப்பட்டினத்தில் ஸ்டீல் ரோலிங் மில்லில் கூட ஏ.ஐ.டி.யூ.சி. தான் இருக்கிறது. அதில் சி.ஐ.டி.யூ. ஆரம்பித்தார்கள். யார் யார் போட்டி சங்கம் வைத்தார்கள் என்று பட்டியல் வைத்திருக்கிறேன்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 ஏப்ரல் 11

கூடிய எல்லா அறிவாளிகளும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. அது நியாயம் அல்ல. ஆனால் வேலை நிறுத்தம் செய்யும் உரிமையை எல்லா இடத்திலும் கொடுத்திருக்கிறோம். வேலை நிறுத்தம் செய்ய அவசியம் இல்லாமல், உரிமையைக் கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** "நீங்கள் ஆட்சிக்கு வந்தால், வேலை நிறுத்த உரிமையைக் கொடுக்க மாட்டீர்கள்". கொடுக்கவில்லை. எங்கும் கொடுக்கவில்லை. பிரதமர் மாண்புமிகு திருமதி இந்திரா காந்தி அவர்களின் ஆட்சியில் அத்தியாவசிய சர்வீஸில் ஸ்டிரைக்கைத் தடை செய்கிறார்கள். எங்களுக்கு வேறு கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அதே போல் இந்த நாட்டில் அரசியலார் வேலை நிறுத்த உரிமை உண்டு. ஆனால் ஆஸ்பத்திரிகளில் நடக்கும் ஆபரேஷன், கல்வித் துறையில், தண்ணீர் வழங்குவதில் கூடாது என்று சொல்லியிருக்கிறோம். "நீங்கள் ஆட்சியில் இருக்கிற அந்த நாட்டிலும் எங்கேயும் வேலை நிறுத்த உரிமை இல்லை." Hospitals, Educational Institutions and other Essential Services என்ற எங்கேயும் வேலை நிறுத்தம் செய்ய உரிமை இல்லை. போலந்து நாட்டில் ஒரு போராட்டம் நடந்தது. அந்த வேலை நிறுத்தம் தடைசெய்யப் பட்டது. 'சாலிடாரிட்டி' என்ற இயக்கத்தால் தடை செய்யப்பட்டது. அரசைக் கவிழ்ப்பதற்காக தேசத் துரோகச் சக்திகள் ஒன்றாகச் சேர்ந்து வேலை நிறுத்தம் செய்தார்கள் என்று சொல்லி வேலை நிறுத்தம் செய்த திரு. வலேசா போன்றவர்களைச் சிறை வைத்து, அவர் ஏற்கெனவே எலக்ட்ரீஷிய னாக இருந்தவர். திரும்பவும் அவர் வேலைக்கு வந்தபோது, அவருக்கு வேலையும் கொடுக்கவில்லை. ராணுவ ஆட்சியைக் கொண்டுவந்து பல்லாயிரக் கணக்கான பேரை சிறைச்சாலையிலே வைத்தார்கள். காரணம் ஒரு சோஷலிஸ்ட் ஆட்சியை நொறுக்குவதற்காக தேசத் துரோகிகள், வேலை நிறுத்தத்தைச் செய்தார்கள் என்று குற்றம் சாட்டினார்கள். அதைப்போல நீங்கள் ஆட்சியிலே இருந்தால் இந்த வேலை நிறுத்தம் நடந்தாலும், இந்த சோஷலிஸ்ட் ஆட்சியை மாற்றக்கூடியது என்று செய்வீர்கள். ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், அந்த நிலைமை நாங்கள் எடுக்கவில்லை. வேலை நிறுத்தம் செய்யக்கூடாது என்று சொல்ல



1983 ஏப்ரல் 11] [திரு. எஸ். இராகவானந்தம்]

வில்லை. ஒருவேளை நீங்கள் என்றைய தினம் துரதிருஷ்டவசமாக ஆட்சி பீடத்துக்கு வருகிறீர்களோ, அப்போது என்ன ஆகும் என்று கேட்டால், தொழிலாளர்கள் மாறுபட்ட கருத்தையே சொல்ல முடியாது. வேலை நிறுத்தமே கூடாது என்றுதான் சொல்வீர்கள். அப்படி இருந்தால், போலந்தில் நடந்தது போல் தான் நடக்கும். வேலை நிறுத்தம் என்பது சரியா இல்லையா என்பது வேறு. வேலை நிறுத்தம் என்பது உங்கள் ஆட்சியில் கிடையாது, கிடையாது, கிடையாது.

(பிற்பகல் 2-20)

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நம் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு பச்சையான கம்யூனிச விரோதி என்பதை இங்கே பிரகடனப்படுத்திக் கொண்டிருப்பதற்காக நான் சந்தோஷப்படுகிறேன். போலந்து நாட்டு அரசியல் சாசனத்திலேயே அங்குள்ள தொழிலாளர்களுக்கு வேலை நிறுத்தம் செய்வதற்கான உரிமை கொடுக்கப்பட்டிருந்தது. 1979 ஆம் ஆண்டு முதல் 1982 ஆம் ஆண்டு வரை போலந்து நாட்டில் 'சாலிடேரிட்டி மூவ்மெண்ட்'-க்கு வேலை நிறுத்தம் செய்வதற்கான உரிமை கொடுக்கப்பட்டு, 3 ஆண்டுக் காலத்தில் அவர்கள் வேலை நிறுத்தம் கூடச் செய்தார்கள். ஆனால் அங்கே வேலை நிறுத்தம் என்பது சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான போராட்டமாக இல்லாமல் அமெரிக்க தூண்டுதலோடு போலிஷ் சமதர்ம ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்கத்தோடு நடத்தப்பட்டால், அந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தலைவர்களை மட்டும் தனிமைப்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த உண்மையைக் கூட பார்க்க முடியாமல் நம் முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில்—அவர் கூட இவ்வளவு பச்சையாக கம்யூனிச எதிர்ப்பு பேசவில்லை— ஆனால் அவருடைய பெயரைச் சொல்லிக்கொண்டு, அவருடைய மந்திரி சபையில் இருந்து கொண்டிருக்கிற ஓர் அமைச்சர் இப்படி பச்சையான கம்யூனிச விரோதியாக நான் இருப்பதை தமிழ்நாடு முழுவதும் பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதை மட்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் அமைச்சர் அவர்களையும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களான மாண்புமிகு உறுப்பினர்களையும் பார்த்து ஒன்றைக் கூற விரும்புகிறேன். அதை விட்டுவிட்டு விஷயத்திற்கு அவர்கள் வர வேண்டும். அது இப்போது முடிவாகிற விஷயமல்ல.

அது தேவையில்லை. அதில் தவறில்லை. This is natural corollary ஜனதா கட்சி ஆரம்பித்த பிறகு ஜனதா தொழிற் சங்கம் திரு. நாராயணன் அவர்களைத் தலைவராக வைத்து ஜனதா தொழிற் சங்கம் ஆரம்பித்தார்கள். அதைப்பற்றித் தவறாக நினைக்க வேண்டாம். எங்களுடைய தொழிற் சங்கங்கள் என்று ஆரம்பித்த பிறகு அதனுடைய கூட்டங்களுக்குப் போகவில்லை என்று சொன்னால் எப்படி? எங்களுடைய கட்சி மந்திரி பதவியை ராஜி நாமா செய்ய வேண்டுமென்று பேசினார்கள். இந்த நாட்டிலே புரட்சித் தலைவருக்குச் செல்வாக்கு இருக்கிற வரைக்கும், அந்தக் கட்சியின் ஆட்சி இருக்கும். அவர் முதலமைச்சராக இருக்கும்வரை, அவர் விரும்புகிறவரை, நானும் இருப்பேன். அவர் பார்த்து ராஜிநாமா செய் என்றால் ராஜிநாமா செய்வேன். அவர் பார்த்து 'டிராப்' செய்தால், அவருடைய கட்டளை என்று ஏற்றுக்கொள்ளக்கூடியவன். அந்தக் கட்சியின் 'டிசிப்ளின்டு சோல்ஜர்' என்ற முறையில் அந்தக் கட்சியின் தொழிற்சங்கம் நடத்துகிறது என்று சொன்னால் அந்தத் தொழிற் சங்க விழாக்களுக்கு நாங்கள் போகிறோம். அது எங்களுடைய 'டூட்டி'. இது ஒவ்வொரு அரசியல் கட்சித் தலைவரும் செய்யக்கூடிய ஒன்று. அதைத் தவறு என்று சொல்ல மாட்டார்கள் என்று நம்புகிறேன். (குறுக்கீடுகள்) நான் ஒன்று கேட்பேன். தலைவர்களும் கோபித்துக் கொள்ளாமல் சொல்வார்களா? அவர்கள் ஆட்சியில் இருந்தால் வேலைநிறுத்தத்திற்கு அனுமதி தருவார்களா? தரமாட்டார்கள். எனக்குப் பதில் வேண்டும். மீண்டும் சொல்கிறேன், அவர்கள் ஆட்சியில் இருந்தால் (குறுக்கீடுகள்) . . . மத்திய அரசாங்கம் அத்தியாவசிய சர்வீஸ்களில் 2 இடத்தில் தடை செய்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களுக்குப் பதில் சொல்வேன். அவருக்கும் சங்கடமாக இருக்கும். பாண்டிச்சேரியில் என்.ஜி.ஓக்கள் பத்து, போராட்டம் நடத்தி ஒரு மாதம் சிறைத் தண்டனை பெற்றிருக்கிறார்கள். பிறகு ஐக்கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். அது வேறு பிரச்சினை. அங்கே முதலமைச்சராக இருப்பவர், நமது புரட்சித் தலைவர் பெயரைக் கொண்டவர்தான், தி.மு.க. தான். நான் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை, எங்கெங்கே போராட்டம் நடக்கக் கூடாது என்று அரசு கருதுகிறதோ அதேபோல் அங்கே பாண்டிச்சேரியில் மின்சாரத் துறையில் ஸ்டிரைக்கைத் தடை செய்திருக்கிறார்கள். அங்கே இருக்கும் முதலமைச்சர் என்னுடைய நெருங்கிய நண்பர்தான். நீங்கள்தான் போட்டிருக்கிறீர்கள். உங்களை டிபெண்ட் பண்ணித்தான் பேசுகிறேன். (திரு. ஆறு முகத்தைப் பார்த்து) நீங்கள் எழுந்தால் சங்கடமாகப் போய்விடும். அது போல் மத்திய அரசு உணவுக் கழகத்தில் ஸ்டிரைக்குக்குத் தடை ஏற்படுத்தியிருக்கிறது. ஆக ஆளுகிற அரசு இந்த நாட்டின் நன்மையைக் கருத்தில் கொண்டு எங்கெங்கே வேலை நிறுத்தம் நடக்கக்கூடாது என்று கருதுகிறதோ அங்கே அத்தியாவசிய சர்வீஸ் சட்டப்படி ஸ்டிரைக்கைத் தடை செய்கிறது.





மத்திய அரசாங்கத்தின் சட்டத்தில் தண்ணீர் கூட வருகிறது. இந்த நேரத்தில் குடிதண்ணீர் கொடுப்பவர்கள் எல்லாம் திடீரென்று வேலை நிறுத்தம் என்று சொன்னால் என்ன ஆகும்? இதனால் நாட்டுக்குக் கெடுதி என்று தடைச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இல்லையென்று சொல்லவில்லை. அது செலக்ட் கமிட்டியில் இருப்பது உண்மை. மத்திய அரசு ஒரு சட்டம் கொண்டு வந்திருப்பது உண்மை. "பாண்டிச்சேரியில் தடை செய்திருப்பது உண்மை. ஸ்டிரைக் செய்தால் நாடு அதைத் தாங்காது. பேச்சுவார்த்தையில் அதை முடித்துக் கொள்ளலாம் என்றுதான் சட்ட முன்வடிவு கொண்டு வந்திருக்கிறோம். நான் கேட்க விரும்புவது "நீங்கள் ஆட்சியில் இருந்தால் ஸ்டிரைக் செய்ய உரிமையைத் தருவீர்களா? தரமாட்டீர்கள்". எனக்குப் பதில் வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, நிலைமையை ஏற்கெனவே தெளிவுபடுத்தியிருக்கிறோம். மத்திய அரசு சொத்துரிமையை அடிப்படையாகக் கொண்டிருக்கிற காலம் வரையிலும், இந்த அரசால் தொழிலாளர்களுடைய எல்லா உரிமைகளையும் வேலை நிறுத்தம் இல்லாமலேயே அளிக்க முடியாது, தர முடியாது. ஆனால் இப்போது நாங்கள் ஆட்சி செய்கிற திரிபுராவிலும், மேற்கு வங்காளத்திலும் வேலை நிறுத்தம் நடந்தபோது தடை செய்யவில்லை. "அப்படி தடை செய்கிறோமா என்று சொல்லுங்கள். உங்களைப் போல நாங்களும் இரண்டு மாநிலத்தில் அரசியல் சட்டத்தின் அடிப்படையில் ஆட்சி நடத்துகிறோம். தடை செய்யவில்லை. நீங்கள் ஏன் அப்படித் தடை செய்யாமல் இருக்கக்கூடாது?" என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** என்னுடைய கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் புரிந்துகொள்ளவில்லை. வருந்துகிறேன். நான் சரியாகச் சொல்லவில்லை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உங்கள் இரண்டு பேருக்குள்ளே இருக்கிற தகராறு தீருகிற விஷயமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பச்சையாகச் சொல்கிறேன். இந்தியாவை கம்யூனிஸ்ட் கட்சி ஆண்டால் வேலை நிறுத்த உரிமை கொடுப்பார்களா?

**திரு. ஆ. நல்லசிவன் :** அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது அடிக்கடி போலந்தில் நடந்த வேலை நிறுத்தம் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். அங்கும் இந்த உரிமையைக் கொடுத்திருக்கிறோம். ஆனால் போலந்தில் நடந்த வேலை நிறுத்தம், கோரிக்கைக்காக இல்லாமல் அரசையே கவிழ்க்கும் அளவுக்கான வேலை நிறுத்தம் என்று உலகம் பூராவும் இருக்கக்

[1983 ஏப்ரல் 11

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் ஆட்சியில் வேலை நிறுத்த உரிமையைக் கொடுத்திருக்கிறீர்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். கம்யூனிஸ்ட் கான்ஸ்டிடியூஷனில் Right to strike work is fundamental என்று இருக்கிறது. இது விவரம் மட்டுமல்ல, ஒரு வரலாற்று உண்மை. இந்த வரலாற்று உண்மைகளை மறைப்பது தவறு. அப்படிப்பட்ட முறையில் தன்னிடம் ஆதாரம் எதுமில்லாமல் தவறான விவரத்தை இங்கே சொல்லி அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிலை நாட்டவும் முயற்சிக்கிறார். போலந்து நாட்டில் எவ்வளவு நாட்கள் வேலை நிறுத்தம் நடைபெற்றது. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மீண்டும் மீண்டும் அரசு அழைத்துப் பேசியது, பிறகு எப்போது இராணுவ ஆட்சி வந்தது, எப்போது எமெர்ஜென்சி டிக்ளேர் செய்யப்பட்டது என்பதை நாம் அனைவருமே அறிவோம். இப்படி ஸ்தூலமான பிரச்சினைகளுக்கு ஸ்தூலமாகப் பதில் சொல்லாமல் திரித்திக் கூறுவதும், வரலாற்றுப் பூர்வமான கட்டங்களையெல்லாம் மீறிப் பேசுவதும் எந்த வகையில் நியாயம்? எந்தப் பிரச்சினையிலும் காலத்திற்கும் நேரத்திற்கும் தகுந்தாற்போல்தான் முடிவெடுக்க வேண்டும். இந்த நிலையில் தமிழ் நாட்டில் உள்ள அரசு இன்டஸ்ட்டிரியல் டிஸ்பியூட் சட்டத்தைக்கூட மதிக்காமல் இயங்குகிறது என்று சொல்லும் போது, சி.பி.எம்., சி.பி.ஐ. ரைவல் யூனியன்கள் என்று அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருப்பது சரியல்ல.

அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு பல்வேறு முறைகளையும் யுக்திகளையும் கையாளலாம். அதற்கு அவருக்கு உரிமை உண்டு. ஆனால் எழுப்பப்பட்ட ஸ்தூலமான பிரச்சினைகளை விட்டுவிட்டு, வரலாற்று மூலமாக வேறுபட்ட, பொருந்தாத விவரங்களைச் சொல்லி, தன் கருத்தை நிலைநாட்ட முயற்சிப்பது தவறு என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நேரம் அதிகமாகிறது. இந்த விவாதம் இப்போதைக்குத் தீர்வதாகத் தெரியவில்லை. போலந்து பற்றி விவாதிப்பதற்காக நாம் இங்கே கூடியிருக்கவில்லை. விஷயத்திற்கு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். போலந்தில் வேலை நிறுத்தம் தடை செய்யப்பட்டது. இராணுவ ஆட்சி வந்தது. பல ஆயிரக்கணக்கான தோழர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். இது கம்யூனிச ஆட்சியில் நடந்தது. நீங்கள் அப்படித்தான் செய்வீர்கள். இது எங்கள் கருத்து. ஆனால் நாங்கள்



1983 ஏப்ரல் 11] [திரு. எஸ். இராகவானந்தம்]

அப்படிச் செய்யவில்லை. புரட்சித் தலைவரின் அரசு அப்படிச் செய்யவில்லை. மத்திய அரசும் அப்படிச் செய்யவில்லை. இந்த உண்மையைச் சொல்லித்தான் ஆக வேண்டும். ஆனால் வேலைநிறுத்தம் எங்கெங்கே நடைபெற்றால், நாட்டின் உற்பத்தி பாதிக்கப்படும் என்று கருதுகிறோமோ அங்கே, அப்படிப்பட்ட எசென்சியல் சர்வீசில் மட்டும் ஸ்டிரைக்கைத் தடை செய்திருக்கிறோம். அண்மையில் போக்குவரத்துத் தொழிலாளர்களின் போனஸ் பிரச்சினை ஏற்பட்டபோது, பேச்சு வார்த்தை தொடுத்தோம். பேச்சு வார்த்தை முடிந்த பிறகு நாங்களே எங்களை ஒரு ஜுடிஷியல் ஸ்குரூட்டினிக்கு ஆட்படுத்திக் கொண்டிருக்கிறோம். அந்தக் கேசை ரெபரன்ஸ்க்கு கொடுத்து விட்டோம். "போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுத்தது சரியா? மேலும் கொடுக்கப்பட வேண்டுமா?" என்று அந்தப் பிரச்சினையை நாங்களே கோர்ட்டுக்கு விட்டு அதன் மூலம் இந்த அரசு தன்னைக் கோர்ட்டினுடைய தீர்ப்புக்கும் சபார்டினேட் செய்து கொண்டிருக்கிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறோம். ஏனென்றால் நாட்டு மக்களுக்கு இதைச் சொல்லியாக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நல்லசிவன் மற்றும் திரு. மாணிக்கம் அவர்கள் எழுந்து பேசியதைக் கேட்பவர்கள் "ஏதோ இந்தப் புண்ணியவான்கள் ஆட்சி வந்தால் வேலை நிறுத்தம் தினந்தோறும் நடத்துவது சாத்தியம் என்றும் இந்த உரிமை அவர்கள் ஆட்சியில் காப்பாற்றப்படும் என்றும் யாராவது எண்ணிவிடக் கூடாது அல்லவா? அப்படியில்லை தம்பி, அப்படி நடக்காது' என்று சொல்ல வேண்டியது என்னுடைய வேலை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இரண்டு தரப்பாருக்கும் சொல்கிறேன். தயவுசெய்து விஷயத்திற்கு வர வேண்டும். போலந்து பிரச்சினையை நீக்கி விஷயத்திற்கு வர வேண்டும். அந்தப் பிரச்சினையில் நேரத்தை வீணாக்குவதைத் தலைவன் என்ற முறையில் நான் இனி அனுமதிக்கத் தயாராக இல்லை.

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போக்கை ஆட்சேபிக்கும் முறையில் நான் இந்த அவையை விட்டு வெளியேறுகிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் அவையிலிருந்து வெளியேறினார்.)

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிலாளர் நலன்குறித்த கொள்கை விளக்கம் மீதான விவாதத்தைப் பயன்படுத்திக் கொண்டு கம்யூனிச இயக்கத்தைப் பற்றித் தவறான கருத்துக்களைத் திரித்துக் கூறுகிறார். அதை மறுப்பதற்கு எங்களுக்கும் போதிய சந்தர்ப்பமும் நேரமும் கொடுக்க வேண்டும். தொழிலாளர் அமைச்சர் அவர்கள் தொழிலாளர் நலன் குறித்த கொள்கை விளக்கம் மீதான

நலன் குறித்துப் பேசுவதாகச் சொல்லிக்கொண்டு உலகத் தத்துவத்தை அவதூறு படுத்திக் கொண்டு பேசிக் கொண்டிருப்பதை ஆட்சேபித்து நானும் அவையை விட்டு வெளியேறுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நான் அனுமதித்ததை ஆட்சேபித்து வெளியேறுகிறாரா அல்லது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பேச்சை ஆட்சேபித்து வெளியேறுகிறாரா?

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பேச்சை ஆட்சேபித்துத்தான் வெளி நடப்பு செய்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நல்லசிவன் அவர்கள் அவையை விட்டு வெளியேறினார்).

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சி தொழிலாளர் விரோத ஆட்சி என்று சொல்லும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் சார்ந்திருக்கும் கட்சி ஆட்சியிலிருந்தால், நாட்டு மக்களுடைய நிலை என்னவாகும் என்று சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். அதைத்தான் செய்து கொண்டிருக்கிறேன் என்று சொல்லி, மற்ற பிரச்சினைகள் எல்லாம் அரசாங்கத்தால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லி, குறைந்தபட்ச ஊதியம் புதிதாக யார் யாருக்கு நிர்ணயிக்கப் போகிறோம் என்பதையும் சொல்லி, எது எது பரிசீலனையில் இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, நிர்ணயித்து 2 ஆண்டுகளுக்கு மேலாகி வாழ்க்கைப் புள்ளியும் 50 சதவிகிதம் உயர்ந்திருக்குமானால் அந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் குறைந்தபட்ச ஊதியத்தை உடனடியாக உயர்த்த வேண்டும் என்று அரசு திட்டமிட்டிருக்கிறது என்ற அந்தக் கொள்கையை விரைவில் நிறைவேற்றும் என்று சொல்லி, தொழிலாளர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது நல்ல விளக்கங்களைச் சொன்ன எல்லா மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், அவையை விட்டு வெளியேறியிருக்கிற உறுப்பினர்களுக்கும்—உண்மை காப்பாக இருக்கிற காரணத்தால்—நன்றி அறிதலைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 12—4—1983 செவ்வாய்க் கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்.

**பின்னர்,** அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 2-26)



## 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

248. Notification issued with G.O. Ms. No. 670, Housing and Urban Development Department, dated 20th July 1982 regarding variation to the Master Plan for Madras Metropolitan Areas in Eranavur village (Tamil and English) (Laid on the Table of the House under section 123 (3) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).

249. Notification issued with G.O. Ms. No. 673, Housing and Urban Development Department, dated 20th July 1982 regarding variation to the Master Plan for Madras Metropolitan Area in S. Nos. 13 part, 14 part, 15 part and 16 part of Nanganallur village (Tamil and English) (Laid on the table of the House under section 123 (3) of he Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).

250. Notification issued with G.O. Ms. No. 675, Housing and Urban Development Department, dated 20th July 1982 regarding variation to the Master Plan for Madras Metropolitan Area in S. No. 3/11 B of Kulapakkam village (Tamil and English) (Laid on the table of the House under section 128 (3) of Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).

### B. *Reports, Notifications and Other Papers.*

139. A Review of the Tamil Nadu Fire Service Department 1983-84 (Tamil and English).

* 140. Policy Note on Adi-Dravidar and Tribal Welfare Department, 1983-84 (Tamil and English).

* 141. Annexures to Policy Note on Adi-Ddavidar and Tribal Welfare Department, 1983-84 (Tamil and English).

* 142. Performance Budget on Adi-Dravidar and Tribal Welfare Department, 1983-84 (English).

143. Report and Proceedings of the Joint Select Committee of the Tamil Nadu Apartment of Ownership Bill, 1981 (L.A. Bill No. 20 of 1981).

---

* Circulated to all M.L.Cs on 9th April 1983.

## இணைப்பு I

[299 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

28—4—1981 நாளிட்ட அரசாணை எண் 720ன்படி, வெளியிடப்பட்ட பணி விதி 7 (ஆ)ன்படி, மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களாக பதவி உயர்வு பெறுவோர், ஏதாவதொரு பாடத்தில் முதுகலைப் பட்டமும், ஆசிரியர் பயிற்சிப் பட்டமும் பெற்றிருந்தலுடன் பி.டி. ஆசிரியர் அல்லது தமிழாசிரியர் பணியில் பி.டி. பயிற்சி பெற்றபின் குறைந்தது 10 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும். அதன் அடிப்படையில், மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் 10 ஆண்டு பணிக்காலம் முடிந்த முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் முதுகலைத் தமிழாசிரியர்கள், ஒவ்வொராண்டும் தயாரிக்கப்படும் முன்னுரிமைப் பட்டியலின்படி (மேற்கூறப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில்) முதுகலை ஆசிரியர்களுக்கான ஒதுக்கீட்டில் 50 சதவிகிதத்தில் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களாகப் ஆசிரியைகளாக பதவி உயர்வு பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி தமிழாசிரியர்களும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களாக பதவி உயர்வு பெற வாய்ப்புகள் உள்ளன.

2. உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் முதல்நிலைத் தமிழாசிரியர்கள், தமிழில் பி.லிட். பட்டமும், பி.டி. பயிற்சியும் பெற்றிருந்தால் 'அ' மற்றும் 'பி' பிரிவு ஒருங்கிணைக்கப்பட்ட முன்னுரிமைப் பட்டியலின்படி உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களாக தமிழ்நாடு சார் நிலைக் கல்விப் பணி விதிகளின்படி பதவி உயர்வு அளிக்கப்பட்டு வருகின்றனர். பணி விதிகளின்படி மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெறுவதற்கு ஆசிரியர்கள் முதுகலைப் பட்டத்துடன் 10 ஆண்டுக்காலம் ஆசிரியராகப் பணியாற்றி இருக்க வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற 5 ஆண்டு காலம் பள்ளிகளில் ஆசிரியர் பயிற்சிப் பட்டம் பெற்ற பிறகு ஆசிரியராகப் பணியாற்றி இருக்க வேண்டும். முன் அனுபவமும் இருந்தால்தான் நல்ல நிர்வாகத் திறன் பெற முடியும். ஆகையால் இத் தகுதிகளைக் குறைப்பது பாத்தியமல்ல.

## இணைப்பு II

]300 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

1894 ஆம் ஆண்டு முதல் மதுரை நகரில் வைகை நதியை ஆதாரமாகக் கொண்ட குடிநீர்த் திட்டம் இயங்கி வருகிறது. மதுரை மாநகராட்சியின் மக்கள் தொகை 1981 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 8,17,562. ஒரு





நபருக்கு ஒரு நாளைக்கு தேவைப்படும் குடிநீர் 110 லிட்டர் என்ற அடிப்படையில் இந்த அளவு மக்கள் தொகைக்கு 90.00 மில்லியன் லிட்டர்கள் குடிநீர் ஒரு நாளைக்கு தேவைப்படும். மதுரை போன்ற நகரத்திற்கு இதுவும் குறைந்த அளவே ஆகும். தற்பொழுது அரப்பாளையம், கோச்சடை மற்றும் மேலக்கல் ஆகிய இடங்களில் மூன்று வடி அடுக்குகளும் (infiltration Wells கோச்சடையில் ஒரு திரட்டுக் கிணறும் (Collector well) இருக்கின்றன. இந்த ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் நீரின் அளவு வெவ்வேறு காலங்களில் தினம் சுமார் 68.10 மில்லியன்களில் இருந்து 22.70 மில்லியன் லிட்டர்கள் வரை மாறுபடும். இவ்வருடம் பருவ மழை தவறியதாலும், வைகை அணையிலிருந்து பெறப்படும் நீரின் அளவு குறைந்ததாலும் கிடைக்கும் தண்ணீரின் அழுத்தம் குறையாமலிருக்க மதுரை நகரின் 5 பகுதிகளிலும் ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீரை வினியோகிக்க வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.

2. தற்போது மாநகரில் 665 கைப்பம்புகள் பொருத்திய ஆழ்குழாய் கிணறுகளும், 265 மின்சார பம்பு செட்டுகள் பொருத்திய ஆழ்குழாய் கிணறுகளும் உள்ளன. இவற்றின் மூலம் நாளொன்றுக்கு சுமார் 65 லட்சம் காலன் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. குழாய்கள் இல்லாத இடங்களிலும், குடிநீர் குழாய்களின் அழுத்தம் குறைவின் காரணமாக குடிநீர் வராத பகுதிகளுக்கும் 15 லாரிகள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

3. மாநகராட்சியின் குடிநீர் பற்றாக்குறையை நீக்க, நிவாரண பணிகளின் கீழ் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன :—

(1) மதுரை மாநகரின் குடிநீர் பற்றாக்குறை தீர பெரியார் நீர் தேக்கத்திலிருந்து உபயோகப்படுத்த முடியாத நீரை (Dead storage) வைகை நீர்த் தேக்கத்திற்கும் பின்னர் வைகை நீர்த் தேக்கத்திலிருந்து மாநகராட்சி குடிநீரேற்று நிலையங்களுக்கும் தண்ணீரை கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(2) திருப்பரங்குன்றம் டவுன் பஞ்சாயத்திலிருந்து கிடைக்கும் உபரி குடிநீரை மதுரை மாநகராட்சிக்கு விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதன் மூலம் 2–3 லட்சம் காலன் தண்ணீர் கிடைக்க வாய்ப்புள்ளது.

(3) தனியார் கிணறுகளில் உள்ள உபரி நீரை பெற்று மதுரை நகரின் குடிநீரை மிகத் தேவையான இடங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

1983 ஏப்ரல் 11]

(4) நலிந்த பிரிவினர்கள் வாழும் இடங்களில் தொட்டிகள் அமைக்கப்பட்டு லாரிகள் மூலம் தண்ணீர் நிரப்பப்பட்டு வழங்கப்படுகின்றது.

(5) மணலூரில் அமைக்கப்பட்டுள்ள சேகரிப்பு (கலெக்டர்) கிணற்றிலிருந்து ஆற்றில் தற்காலிக குழாய் பதித்து நாளொன்றுக்கு சுமார் 2—3 லட்சம் காலன் வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

(6) தச்சயபத்தில் அமைக்கப்பட்டுள்ள கிணற்றிலிருந்து ஆற்றில் குழாய் புதித்து மேலக்கால் நீரேற்று நிலையத்திற்கு கொண்டு வந்து மேலக்கால் நீரேற்று நிலையத்தின் ஊற்றை பெருக்குவதற்கு வகை செய்யப்படுகிறது.

(7) மேலும் தேவையான ஆழ் குழாய் கிணறுகள் அமைத்து குடிநீர் விநியோகம் பெருக்கப்படும்.

(8) ஏற்கெனவே உள்ள ஆழ்குழாய் கிணறுகளில் கூடுதல் ஷிப்ட் மூலம் மேலும் நீரிறைத்து வழங்க வகை செய்யப்படும்.

(9) மேலும் அதிக லாரிகள் வாடகைக்கு அமர்த்தி குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

மேற்கண்ட நடவடிக்கைகள் மூலம் நகரின் எல்லா பகுதிகளுக்கும் சீரான முறையில் தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1983 ஏப்ரல் 11]

## இணைப்பு III.

[301 ஆம் பக்கத்தில் இனம் 5-க்கான அடிக்குறிப்பை காண்க].

### தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன்.

### அத்தியாயம் 1.

### பொது.

1.1. 1982ஆம் ஆண்டு முழுவதும் தமிழ் நாடு பொதுவாக அமைதியான தொழில் நல்லுறவினைப் பெற்றிருந்தது. நிர்வாகங்களும், தொழிற்சங்கங்களும் அரசுக்கு நல்கிய இசைந்த ஒத்துழைப்பும் தொழிலாளர்களின் நலனை நிலை நாட்டவும் அதே நேரத்தில் சமூகத்தின் பரவலான நன்மையைக் கருத்தில் கொண்டும் அரசு கடைப்பிடித்து வந்துள்ள பயன் ஊக்கக் கொள்கையுமே இதற்குப் பெரிதும் காரணம்.

1.2. 1982ஆம் ஆண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகள் மற்றும் வீணான உழைப்பு நாட்கள் பற்றிய புள்ளி விவரங்கள் 1981ஆம் ஆண்டைவிட தொழில் உறவுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை தெளிவுபடுத்துகிறது. நிர்வாகம், தொழிலாளர் இருதரப்பினரிடையேயும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயலாற்றும் சுமுக நிலைக்கு அரசு தனது பாராட்டுதலைத் தெரிவிக்க விரும்புகிறது. இச் சுமுக சூழ்நிலை எதிர் காலத்திலும் நிலவக்கூடிய நல்ல தொழில் உறவுக்கு முன்னோடியாக அமையும் என அரசு நம்புகிறது.

1.3. தொழிலாளர் நலத் துறையின் பணிகள் பற்றிய விவரங்கள் இவ்வறிக்கையின் இப்பகுதியில், கீழ்க்காணும் தலைப்புகளின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன.

1. தொழில் உறவுகள் குறித்த சட்டம்.

2. பணி நிபந்தனைகள் மற்றும் வேலை நிலைமைகள் குறித்த சட்டங்கள்.

3. ஊதியங்கள் குறித்த சட்டங்கள்.

4. சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.

5. தொழிலாளர் நலப்பணிகள்.

6. எடைகள்-அளவைகள் குறித்த சட்டம்.

[1983 ஏப்ரல் 11

அத்தியாயம் 2.

## தொழிலுறவுகள் குறித்த சட்டம்.

### 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.

2.1. கீழ்க்காணும் விவர அட்டவணையில் 1981 மற்றும் 1982ஆம் ஆண்டுகளில் எழுந்த தொழில் தகராறுகளின் எண்ணிக்கையும் அவை தீர்த்து வைக்கப்பட்ட விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன :—

விவர அட்டவணை.

| விவரம். | 1981 (1981ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாளிலிருந்து 1981ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் வரை.) | 1982 (1982ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாளிலிருந்து 1982ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் வரை.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| அ. ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த புகார்கள் மற்றும் தகராறுகளின் எண்ணிக்கை. | 1,770 | 1,542 |
| ஆ. வரப்பெற்ற புகார்கள், எழுந்த தகராறுகளின் எண்ணிக்கை. | 8,425 | 7,347 |
| இ. முந்தைய ஆண்டுகளில் முடிவுறாதிருந்த புகார்கள், தகராறுகள் உள்பட புலன் விசாரணை செய்யப்பட்ட புகார்கள், தகராறுகளின் எண்ணிக்கை. | 8,653 | 7,1[illegible] |



1983 ஏப்ரல் 11]

| விவரம். | 1981 (1981ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாளிலிருந்து 1981ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் வரை.) | 1982 (1982ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாளிலிருந்து 1982ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் வரை.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஈ. இணக்க முறையில் தீர்வு கண்ட தகராறுகளின் எண்ணிக்கை | 1,791 | 1,328 |
| உ. வேறுவகையில் சமரச அலுவலர்களின் உதவியுடன் தீர்வு கண்ட தகராறுகளின் எண்ணிக்கை | 5,789 | 4,907 |
| ஊ. தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் மன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 1,035 | 894 |
| எ. தொழிற் தகராறுகள் சட்டம் 10 (2)ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றத் தீர்ப்புக்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 33 | 29 |
| ஏ. நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 5 | 1 |
| ஐ. ஆண்டு இறுதியில் முடிவுறாமல் இருந்த தகராறுகளின் எண்ணிக்கை. | 1,542 | 1,730 |

318

T. N. L. C. Debates

Official Report

1983

Vol. CXCVIII. No. 3, 4.

D
V211, 32 'N83
N83.19 13-4
143180

[1983 ஏப்ரல் 11

2.7 முக்கிய உடன்பாடுகள்.—

(1) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள தனியார் பேருந்து நிறு வனங்கள் ;

அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, மிகையூதியம் (போனஸ்)
முதலிய கோரிக்கைகள் தொடர்பாக தஞ்சாவூர் மாவட்டத்தி
லுள்ள 210 தனியார் போக்குவரத்து நிறுவனங்களைச் சேர்ந்த
தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதாக அறிவித்தனர்.
தஞ்சாவூர் தொழிலாளர் நல அலுவலர் மற்றும் சென்னை தொழி
லாளர் நல உதவி ஆணையர் ஆகியவர்களின் முன்னிலையில்
சமரசப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன ; இதன் பயனாக
தொழிலாளர் நல அலுவலர், முன்னிலையில் 28-10-1982 அன்று
ஒரு உடன்பாடு கையெழுத்தானது. இந்த உடன்பாட்டினால்
சுமார் 3,500 தொழிலாளர்கள் பயன் பெற்றனர்.

(2) டபிள்யூ. எஸ். இன்சுலேட்டர்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், போரூர், சென்னை.—

சம்பள உயர்வு மற்றும் அகவிலைப்படி உயர்வு முதலான
கோரிக்கைகளை வலியுறுத்தி இந்நிறுவனத்தின் தொழிலாளர்கள்.
25-12-1981 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். தொழி
லாளர் நலத் துணை ஆணையர் (ஆய்வு) நடத்திய சமரச பேச்சு
வார்த்தையினாலும் மற்றும் தொழிலாளர் நல அமைச்சரின்
நல்லாலோசனையினாலும் தொழிலாளர் நலத் துணை ஆணையர்
(ஆய்வு) முன்னிலையில் ஓர் உடன்பாடு 20-2-1982 அன்று ஏற்
பட்டது. இதன் பயனாக வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு
24-2-1982 லிருந்து தொழிலாளர் வேலைக்குத் திரும்பினர்.
இவ்வுடன்பாட்டின்படி, அகவிலைப்படி மற்றும் இதர படிகளின்
உயர்வால் 1,500 தொழிலாளர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 200
லிருந்து 250 ரூபாய் வரை கூடுதலாகப் பெற்றனர்.

(3) திருச்சி மாவட்டத்தில் பீடி சுற்றும் பணியாளர்கள் :

திருச்சி மாவட்டத்திலுள்ள பீடி சுற்றும் பணியாளர்கள்.
ஊதிய உயர்வு அகவிலைப்படி உயர்வு, மிகை ஊதியம்
(போனஸ்) முதலிய கோரிக்கைகளுக்காக 8-3-1982 முதல்
வேலை நிறுத்தத்தில் ஈடுப்பட்டனர். சென்னை தொழிலாளர்
நல இணை ஆணையாளர் முன்னிலையில் சமரசப் பேச்சு
வார்த்தை நடைபெற்றதன் பயனாக ஓர் உடன்பாடு ஏற்ப
ட்டது. அவ்வுடன்பாட்டின்படி வீட்டுப் பணியாளர் உட்பட
25,000 பணியாளர்கள் அகவிலைப்படி உயர்வு மற்றும் மிகை
ஊதியக்கொடை பெற்றனர். 18-3-1982 முதல் வேலை
நிறுத்தம் நீக்கிக் கொள்ளப்பட்டது.



1983 ஏப்ரல் 11]

(4) தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் :

பொது, தனியார் மற்றும் கூட்டுறவுத் துறைகளில் உள்ள சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் கோரிக்கைகள் பட்டியல் ஒன்றை முன் வைத்து 20-1-1982 முதல் வேலை நிறுத்தம் செய்வதாக அறிவித்தனர். தொழிலாளர் நல இணை ஆணையர் முன்னிலையிலும் பின்னர் தொழிலாளர் நல அமைச்சர் முன்னிலையிலும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. தொழிலாளர் நல அமைச்சரின் நல்லாலோசனையின்படி தொழிலாளர் நல இணை ஆணையர் முன்னிலையில் 19-3-1982 அன்று ஒரு உடன்பாடு ஏற்பட்டது. இவ்வுடன்பாட்டின்படி பணியாளர்கள் அடிப்படை ஊதியம், மற்றும் அகவிலைப்படியின் வீதம் சிறப்புப்படி முதலிய வற்றில் உயர்வு பெற்றனர். இந்த உரிய நேர உடன்பாட்டினால் 20,000 தொழிலாளர்கள் மேற் கொள்ளவிருந்த வேலை நிறுத்தம் தவிர்க்கப்பட்டது.

(5) நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட், கோயம் புத்தூர் :

ஊதிய உயர்வு, அகவிலைப்படி மற்றும் இதர படிகளுக்காக இந்நிறுவனத்தின் தொழிலாளர்கள் 5-4-1982 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். கோவை தொழிலாளர் நல துணைஆணையர் முன்னிலையிலும் பின்னர் சென்னை தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையர் முன்னிலையிலும் பேச்சு வார்த்தைகள் நடந்தன. அந்த பேச்சு வார்த்தைகளின் பயனாக தொழிலாளர் நல தனித் துணை ஆணையர் முன்னிலையில் 21-4-1982 அன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இதன் பயனாக 23-4-1982 முதல் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

(6) தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேசன் லிமிடெட், அரியலூர்.

1981-82 ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் குறித்து தொழிலாளர் நல ஆணையர் முன்னிலையில் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இதன் பயனாக 12-11-1982 அன்று நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அந்த உடன்பாட்டின்படி சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒவ்வொரு தொழிலாளருக்கும் 8.33 சதவீதம் மிகை ஊதியமும் சிறப்பு ஊதியமாக ரூ. 750-ம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

(7) மெட்டல் பாக்ஸ் இந்தியா லிமிடெட், சென்னை :

இந்த நிறுவனத்தில் சம்பள உயர்வு, அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி சம்பந்தமாக ஏற்பட்ட தொழில் தகராறு தொழிலாளர் நல இணை ஆணையர் முன்பு நடந்த சமரசப் பேச்சு

வார்த்தையின் காரணமாக 29–11–1982 அன்று சுமுகமாகத் தீர்க்கப்பட்டது. இவ்வுடன்பாட்டின்படி, ஒவ்வொரு தொழிலாளியும் மாதத்திற்கு ரூ. 140-லிருந்து ரூ. 182 வரை ஊதிய உயர்வு பெறுவார். இதனால் 276 தொழிலாளர்கள் பயன் பெற்றனர்.

**(8) இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் லிமிடெட், நாகப்பட்டினம் :**

நிர்வாகம் செய்யக் கருதியிருந்த ஆட்குறைப்பு, இயந்திரங்கள் இடமாற்றம் முதலியவைகளை எதிர்த்து, இந்நிறுவனத்தின் தொழிலாளர்கள் 1982ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1ஆம் நாள் முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். திருச்சி தொழிலாளர் நல துணை ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர் மற்றும் தொழிலாளர் நல அமைச்சர் முன்னிலையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அதைத் தொடர்ந்து தொழிலாளர் நல தனித் துணை ஆணையர் முன்னிலையில் சமரசப் பேச்சு வார்த்தை நடைபெற்று 1982ஆம் ஆண்டு மே திங்கள் 20ஆம் நாள் அன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அவ்வுடன்பாட்டின்படி தொழிலாளர்கள் அன்றே வேலைக்குத் திரும்பினர்.

**(9) தாரங்கதாரா கெமிகல் ஒர்க்ஸ் லிமிடெட், திருநெல்வேலி மாவட்டம்.**

மிகை ஊதியம் குறித்து இந்நிறுவனத்திலுள்ள தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் இடையே தொழிற் தகராறு எழுந்தது. தொழிலாளர்கள் 1982ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்தனர். நிர்வாகத்தினரும் அன்றே கதவடைப்பு அறிவித்தனர். திருநெல்வேலி தொழிலாளர் நல துணை ஆணையர் மற்றும் சென்னை தொழிலாளர் நல தனித் துணை ஆணையர் முன்னிலையில் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. பின்னர் தொழிலாளர் நல அமைச்சரின் நல்லாலோசனையின்படி தொழிலாளர் நல தனித் துணை ஆணையர் முன்னிலையில் 1982ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 24ஆம் நாள் அன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அவ்வுடன்பாட்டின்படி நிர்வாகம் 1982ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27ஆம் நாள் அன்று கதவடைப்பை விலக்கிக் கொண்டது. தொழிலாளர்களும் வேலைக்குத் திரும்பினர்.

**(10) நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட், நெய்வேலி:**

மிகை ஊதியச் சட்டத்தின் 31-ஏ-பிரிவின்படி, மிகை ஊதியம் வழங்குவது பற்றி நிர்வாகத்தினரின் அறிவிப்பினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் 1982ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள்





27 ஆம் நாள் இரவு 10 மணியிலிருந்து வேலை நிறுத்தம் மேற்கொண்டனர். தொழிலாளர் நல இணை ஆணையர் மற்றும் தொழிலாளர் நல அமைச்சர் முன்னிலையில் பலமுறை பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இப்பேச்சு வார்த்தைகளினாலும், தொழிலாளர் நல அமைச்சரின் நல்லாலோசனையினாலும் மிகை ஊதியம் வழங்குவது பற்றி தொழிலாளர் நல ஆணையர் முன்னிலையில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. 1982 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 5 ஆம் நாள் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

**2.8 முக்கியத் தொழிற் தகராறுகள் :**

**(1) துணி ஆலைகளில் மிகை ஊதியம் வழங்குவது பற்றிய பிரச்சினை :**

துணி ஆலைத் தொழிலாளர்கள், 1981–82 ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியக் கோரிக்கை சம்பந்தமாக 1982 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்வதாக அறிவித்தனர். தொழிலாளர்கள் மிகை ஊதியம் குறித்து தென் இந்தியா துணி ஆலைகளின் சங்கத்தின் கொள்கை விதிமுறையின் அடிப்படையில் 1979 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உடன்பாட்டின்படி மிகை ஊதியம் வழங்கும்படி கோரினர். நிர்வாகத்தினர் இக்கோரிக்கையை எதிர்த்து மிகை ஊதியச் சட்டத்தின்படிதான் மிகை ஊதியத் தொகையை நிர்ணயிக்க முடியும் என்று கூறினர். தொழிலாளர் நல இணை ஆணையரின் சமரசப் பேச்சு வார்த்தைகள் தோல்வியுற்றதால் அரசு பிரச்சினையை சென்னை தொழில் நடுவர் மன்றத் தீர்ப்புக்கு அனுப்பியுள்ளது. அத்துடன் 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருத்தச் சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்டவாறு 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 10-பி-பிரிவின்கீழ் கீழ்க்கண்ட கட்டளைகளையும் பிறப்பித்தது.—

(அ) 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 18 (1) பிரிவின்கீழ் கோயம்புத்தூரிலுள்ள தென் இந்தியத் துணி ஆலைகள் சங்கத்தினால் பிரதிநிதித்துவம் உள்ள சில துணி ஆலை நிர்வாகங்களுக்கும் அவர்களுடைய தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டின் கோட்பாடுகளின் அடிப்படையில் கணக்கிட்டவாறு, 1982 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 13 ஆம் நாள் அன்றோ அதற்கு முன்பாகவோ தொழிலாளர்களுக்கு மிகை ஊதியம் மற்றும் கூடுதல் தொகை வழங்கப்பட வேண்டும்.

(ஆ) சென்னை, தொழில் நடுவர் மன்றத்தின் தீர்ப்பு வருமுன்னர் நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கு விடப்பட்ட பிரச்சினை சம்பந்தமாக நிர்வாகம் கதவடைப்பு செய்யவோ அல்லது தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யவோ கூடாது.

(இ) இக்கட்டளைகளின்படி, தொழிலாளர் ஒருவருக்கு வழங்கப்பட்ட தொகையினை மேற்கூறிய வழக்கில் சென்னை தொழில் நடுவர் மன்றத்தின் தீர்ப்பின்படி அத் தொழிலாளர் களுக்கு கொடுக்கப்பட வேண்டிய தொகையிலிருந்து நிர்வாகம் கழித்துக் கொள்ளலாம்.

(2) அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் மிகை ஊதியப் பிரச்சினை :

அரசுப் போக்குவரத்து கழகங்களில் பணி புரியும் தொழிலாளர் களின் பல்வேறு தொழிற் சங்கங்கள், 1981—82 ஆம் ஆண்டிற் கான மிகை ஊதியம் தொடர்பாக் 1982 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16 ஆம் நாள் அன்றோ அல்லது அதன் பிறகோ வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்தனர். இரு தரப்பினரோ டும் தொழிலாளர் நல ஆணையர் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். தொழிற் சங்கங்கள் 20 சதவீதம் மிகை ஊதி யமும் கருணைத் தொகையாக ரூபாய் 500-ம் கோரின. நிர் வாகங்கள், 1981—82 ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் ஒவ் வொரு கழகத்தின் செயல் திறன் அடிப்படையில் வழங்கப்பட்ட தென்றும் மேற்கொண்டு எதுவும் தர இயலாதென்றும் கூறினர். மேற்கொண்டு பேச்சு வார்த்தைகள் தொழிலாளர் நல அமைச்சர் முன்னிலையில் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8 ஆம் நாள் அன்று நடைபெற்றன. ஆயினும் உடன்பாடு எதுவும் காண முடியாத காரணத்தினால் அரசு இப்பிரச்சினையை சென்னை தொழில் நடுவர் மன்றத் தீர்ப்புக்கு அனுப்பியுள்ளது.

2.9. வழக்குத் தொடர்தல் : கீழ்க்கண்ட இரண்டு நிறுவ னங்களுக்கு எதிராக வழக்குத் தொடர இவ்வாண்டில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது:—

(1) தொழிலாளர் நீதி மன்றத்தின் தீர்ப்பைச் செயற்படுத் தாததற்கு மதுரை மாவட்டம், முத்து கிருஷ்ணாபுரத்தில் உள்ள வாழைப்பழ மண்டி உரிமையாளர் திரு. கே. எஸ். குருசாமி, (2) தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் செய் யப்பட்ட உடன்பாட்டினை அமுல்படுத்தாததற்காக சென்னை யிலுள்ள அனுசூயா இன்டஸ்ட்ரீஸ். முதல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் நீதி மன்றத்தினால் ரூபாய் 50 அபராதம் வழங்கப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளார். இரண்டாவது வழக்கு நீதி மன்றத்தின் விசாரணையில் உள்ளது.



2.10. முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி:—

இந்த ஆண்டில் பின்வரும் துணி ஆலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 200 வீதம் மேற்படி நிதியிலிருந்து வழங்க அரசு ஒப்புதல் அளித்தது.—

| ஆலையின் பெயர். | தொழிலாளர்கள் எண்ணிக்கை. |
|---|---|
| (1) ஜோதி மில்ஸ், கோயம்புத்தூர் .. .. | 707 |
| (2) ஜெயலட்சுமி மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர். | 67[illegible] |

2.11. தொழிற்சங்கங்கள் :

1—1—1982 ஆம் நாள் வரை பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 3,840. இவ்வாண்டில் 475 தொழிற் சங்கங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. 385 தொழிற் சங்கங்களின் பதிவு விலக்கம் செய்யப்பட்டது. நான்கு தொழிற் சங்கங்களின் பதிவு விலக்கம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது ஒரு தொழிற்சங்கம் கலைக்கப்பட்டது. ஒரு தொழிற்சங்கம் மற் றொரு சங்கத்தோடு இணைக்கப்பட்டது. ஆக, ஆண்டு இறுதியில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 3,932.

2.12. சுமுகத் தொழிலுறவுக்குப் பரிசு வழங்கும் திட்டம் :

தொழில் நிறுவனங்களில் நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர் களுக்குமிடையே சுமுகமான தொழிலுறவு தொடர்ந்து நிலவ ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு சிறப்புத் தொழிலுறவுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தினை நிறுவியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க தொழிலதிபர், தொழிலா ளர் பிரதிநிதிகளுடன், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையின்கீழ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு 1980 ஆம் ஆண்டுக்கு பரிசு பெறுவதற்குரியவர்களைத் தெரிந்தெடுத்தது. இவர்களுக்கு முதற் பரிசாக சுழற் கோப்பை ஒன்றும் நிலையாக வைத்துக் கொள்ளக் கூடிய கேடயம் ஒன்றும், இரண்டாம் பரிசாக தகுதிச் சான்றிதழ் ஒன்றும் இதற்கென 4—8—1982 அன்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தலைமையில் நடத்தப்பட்ட விழாவில் மாண்புமிகு ஊரகத் தொழிலமைச்சர் வழங்கினார்.

[1983 ஏப்ரல் 11

## அத்தியாயம் 3.

## பணி நிபந்தனைகள் மற்றும் வேலை நிலைமைகள் குறித்த சட்டங்கள்.

### 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் :—

3.1. 1982 ஆம் ஆண்டு தொடக்கத்தில், 1948 ஆம் ஆண்டு
தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் 10,444 தொழிற்சாலைகள்
இருந்தன. இந்த ஆண்டில் 537 தொழிற்சாலைகள் நீக்கம் செய்
யப்பட்டன. 1,558 தொழிற்சாலைகள் புதிதாக பதிவு செய்யப்
பட்டன. எனவே, ஆண்டின் இறுதியில் தொழிற்சாலைகளின்
எண்ணிக்கை 11,465 ஆக உயர்ந்தது. 1982 ஆம் ஆண்டின்
இறுதியில், இச்சட்டத்தின் கீழ் பணி புரிவோரின் எண்ணிக்கை
7,01,450 ஆகும்.

3.2. இச்சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணங்
கள், மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்கு
களின் விவரங்கள் முறையே இணைப்புகள் II, III, IV-இல்
தரப்பட்டுள்ளன.

### தொழிலாளர்களின் பாதுகாப்பு :

3·3. அறிக்கை ஆண்டில் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட
விபத்துக்களின் விபரம் வருமாறு:

| ஆண்டு. | உயிரிழப்பு ஏற்பட்ட விபத்துக்கள். | உயிரிழப்பு ஏற்படாத விபத்துக்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1981 .. .. | 47 | 24,815 |
| 1982 .. .. | 50 | 25,889 |

3.4. விபத்துக்களின் எண்ணிக்கையில் சிறிது கூடுதலுக்குக்
காரணம் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும் அதைத்
தொடர்ந்து தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அதிகமானதே
ஆகும். மேலும் புதிதாக வேலைக்கு வருபவர்கள் போதுமான
தொழில் அனுபவமும் தொழிற்சாலையில் பாதுகாப்பு உத்திகள்
பற்றிய தெளிவும் பெறாதவர்கள், விபத்துக்களின் எண்ணிக்
கையை குறைக்க, விபத்துக்கள் அதிகமாக நிகழும் தொழிற்
சாலைகளில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு தீவிர ஆய்வுகளும்
மேற்கொள்ளப்படுகின்றன.



1983 ஏப்ரல் 11]

### அரசு வழங்கும் பாதுகாப்புப் பரிசுகள், உழைப்பு வீரர் பரிசுகள் :

3.5. தொழிலாளர்கள், நிர்வாகத்தினரிடையே தொழில் பாது
காப்பை மேம்படுத்தவும், புதிய முயற்சிகளை மேற்கொள்ளவும்,
பாதுகாப்பு பரிசுகள், உழைப்பு வீரர் பரிசுகள் ஆகிய இரு தனிப்
பரிசுகள் வழங்கும் திட்டத்தை அரசு செயற்படுத்தி வருகிறது.

3.6. இத்திட்டத்தின் கீழ் 1980-ஆம் ஆண்டில் பரிசு பெற
தகுதியுடையவர்களின் பெயர்கள் முடிவு செய்யப்பட்டு பண,
முடிப்பும், சுழற்கோப்பைகளும், 4–8–1982 அன்று, சென்னை
யில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டன. 1981-ஆம் ஆண்
டிற்கான விண்ணப்பங்கள் தொழிலாளர்களிடமும், நிர்வாகத்தின
ரிடமும் வரப்பெற்று, அவை பரிசீலனையில் உள்ளன.

### பாதுகாப்புப் பிரிவுகள் :

3.7. மதுரையில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு பிரிவு தவிர,
1982-ஆம் ஆண்டு கோயம்புத்தூரிலும் ஒரு பாதுகாப்புப் பிரிவு
அமைக்கப்பட்டது. பெருவாரியாக விபத்துக்கள் ஏற்படுவதாக
தெரிவிக்கப்படும் தொழிற்சாலைகளில் அவ்வாறு விபத்துக்கள்,
பெருமளவில் ஏற்படுவதற்கான காரணங்களை ஆராயவும் பாது
காப்பு ஆய்வினை மேற்கொள்வதும் இப்பாதுகாப்பு பிரிவுகளின்
முக்கியப் பணிகளாகும். இப்பிரிவுகள் தொழிற்சாலையில் பாது
காப்புக்குரிய கருவிகள் மற்றும் இதர சாதனங்களை வடிவமைக்
கவும், தொழிற்சாலையின் பாதுகாப்பு முறைகளை மேம்படுத்த
வும் தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு ஆலோசனையும் வழங்கு
கிறது. இப்பிரிவுகள் தொழிற்சாலை பாதுகாப்பின் பல்வேறு அம்
சங்கள் குறித்து தொழிலாளர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்
கும், தொழில் நுட்பப் பணியாளர்களுக்கும், நிர்வாகப் பணி
யாளர்களுக்கும், பயிற்சி வகுப்புகளையும் நடத்தி வருகின்றன.

3.8. மதுரையில் உள்ள பாதுகாப்புப் பிரிவு 2,036 தொழி
லாளர்கள் பயனடைந்த 64 பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகளை
நடத்தியது. கோயம்புத்தூரில் உள்ள பாதுகாப்பு பிரிவு 266
தொழிலாளர்கள் பயன்பெற்ற 5 பயிற்சி வகுப்புகளை நடத்தியது.

3.9. ஒரு பாதுகாப்பு சுற்றாய்வும் மேற்கொள்ளப்பட்டது.
தொழிற்சாலை ஆய்வகத்தின் ஆதரவில் ஒரு பாதுகாப்பு கருத்
தரங்கும் நடைபெற்றது.

3.10. பாதுகாப்பு பிரிவு ஒன்று "பாதுகாப்பு செய்தி"
என்னும் காலாண்டு இதழை வெளியிட்டது.

[1983 எப்ரல் 11

பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் :

3.11. தொழிற்சாலை பாதுகாப்புப் பற்றி பல்வேறு கூறுகளைக் கற்பிக்க தொழிலாளர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும் ஏழு பயிற்சி வகுப்புகள் 1982-ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன. இதில் 148 நபர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இவ்வகுப்புகளில் தொழிற்சாலை பாதுகாப்பு பற்றிய திரைப் படங்களும் இலவசமாகக் காண்பிக்கப்பட்டன.

உற்பத்தித் திறன் :

3.12. இந்த ஆண்டில், சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி ஆகிய ஆறு இடங்களில் உற்பத்தித் திறன் குழுக்கள் இயங்கின.

தொழிலாளர் உடல் நலம்.

தொழிற்சாலையில் தொழிலாளர் உடல் நலம் பேணும் பிரிவு :

3.13. மாநில தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில், ஆய்வுக்கூடத்துடன் இணைந்த தொழிற்சாலை சுகாதாரம் உடல் நலம் பேணும் பிரிவு செயல்படுகிறது. ஆபத்தான பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை மருத்துவப் பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்தல், உயிரின மாதிரிகளை ஆய்வுக்கூடத்தில் ஆய்வு செய்தல், அவர்கள் தொழில் சார்ந்த நோய் எவற்றாலும் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்று ஆராய்தல் போன்றவை இப்பிரிவின் பணிகளாகும்.

3.14. இந்த ஆண்டில் 37 தொழிற்சாலைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொழிலாளர்களின் இரத்தம் சிறுநீர், சளி முதலிய 1,057 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டன. அதன் முடிவை அறிந்து தொழிலாளர்களுக்கு உடல்நலக்கேடு விளையாமல் இருக்கத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு நிர்வாகங்களுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. தூசி, புகை அல்லது ஆவியை அவை தோன்றுமிடத்திலிருந்து உடனடியாக வெளியேற்றுவதற்கான வெளியேற்று வசதிகளை அமைத்திடுமாறு அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய நச்சுநோய் குறித்தும், அதிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான வழிவகை பற்றியும் எடுத்துக்கூறப்பட்டது.

தொழிலாளர் மருத்துவ கவனப் பிரிவு :

3.15. நிறுவன அமைப்பின் கீழ் வராத தொழில் பிரிவுகளில் பணியாற்றுபவர்களும் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் மருத்துவ வசதி கிடைக்காதவர்களுமான தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி அளிக்க மருத்துவ கவனப் பிரிவு மதுரையில் செயல்படுகிறது. இதன் கிளைகள் பசுமலை, செல்லூர் ஆகிய இடங்களில் உள்ளன. இந்த ஆண்டில் தலைமை மருத்துவப் பிரிவில் 193 நோயாளிகள் சிகிச்சை பெற்றனர். 1,702 நோயாளிகள் செல்லூரிலும், 354 நோயாளிகள் பசுமலையிலும், சிகிச்சை பெற்றனர்.



1983 எப்ரல் 11]

3.16. சான்றளிக்கும் மருத்துவர்களைக் கொண்ட ஆறு பிரிவுகள், சென்னை, வேலூர், சேலம், சிவகாசி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆண்டில் ஆறு சான்றளிக்கும் மருந்துவர்கள் ஆபத்தான தொழில்களில் பணிபுரியும் 7,682 தொழிலாளர்களைப் பரிசோதனை செய்தனர். தீப்பெட்டி, பட்டாசுத் தொழிற்சாலைகளில் 4,012 இளம் தொழிலாளர்களுக்குச் சான்றளித்துள்ளனர்.

1947-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள்—நிறுவனங்கள் சட்டம் :

3.17. 1947-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள்—நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் வரும் கடைகள்—நிறுவனங்களின் எண்ணிக்கை, மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் 41-ஆம் பிரிவின் கீழ் முடிவு செய்யப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் II முதல் V வரையிலான இணைப்புகளில் காணப்படும் விவர அட்டவணைகளில் கொடுக்கப்பட்டு உள்ளன.

நிரந்தர தற்காலிக விலக்களிப்புகள் :

3.18. இவ்வாண்டு, அரசு ஒரு நிறுவனத்திற்கு நிரந்தர விலக்களிப்பும், நான்கு நிறுவனங்களுக்குத் தற்காலிக விலக்களிப்பும் வழங்கியது. கண்காட்சிகள் திருவிழாக்கள் உட்பட 31 தற்காலிக விலக்களிப்புகளைத் தொழிலாளர் நல ஆணையர் வழங்கினார்.

3.19. தொழிலாளர் நலத்துறை ஆணையர்கள் 133 நிறுவனங்களுக்கு தற்காலிக விலக்களிப்பு வழங்கியதுடன், 15 நிறுவனங்களில் இச்சட்டத்தைச் செயல்படுத்துவதினின்று தற்காலிகமாக நிறுத்தி வைக்கவும் அனுமதித்தார்கள்.

3.20. இச்சட்டத்தின் 51-ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட நான்கு விண்ணப்பங்கள் இவ்வாண்டுத் தொடக்கத்தில் முடிவடையாமலிருந்தன. ஒரு விண்ணப்பம் இவ்வாண்டு தாக்கல் செய்யப்பட்டது. ஐந்து விண்ணப்பங்களில், ஆணையர் மூன்று விண்ணப்பங்கள் குறித்து ஆணைகள் பிறப்பித்தார். ஆண்டு இறுதியில் இரண்டு விண்ணப்பங்கள் முடிவு செய்யப்படாமலிருந்தன.

1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம் :

3.21. இச்சட்டத்தின் கீழ் வரும் உணவகங்களின் எண்ணிக்கை வசூலிக்கப்பட்டப் பதிவுக் கட்டணம், மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள், 19-ஆம் பிரிவின் கீழ் முடிவு செய்யப்பட்ட மேல் முறையீடுகள் ஆகியவை குறித்த விவரங்கள் II முதல் V வரையிலான இணைப்புகளில் காணப்பெறும் விவர, அட்டவணைகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், 1968-ஆம் ஆண்டு தமிழ்நாடு சுருட்டு, பீடி தொழிலாளர்கள் பணி நிலைமைகள் விதிகள் :

3.22. இச்சட்டத்தின் கீழ் 1982-ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட உரிமத் தொகை, ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகள், இச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை பற்றிய விவரங்கள் II முதல் IV வரையிலான இணைப்புகளில் காணப் பெறும் விவர அட்டவணைகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

3.23. பீடித் தொழிலாளர் நலன் :

பீடித் தொழிலாளர்கள் நலனுக்காக நிறைவேற்றப்படும் திட்டங்களுக்கு நிதியுதவி செய்ய வேண்டியதைக் கருத்திற் கொண்டு மத்திய அரசு, பீடித் தொழிலாளர் நல நிதி என்ற ஒரு நிதியை ஏற்படுத்தியது. மத்திய அரசு நியமித்துள்ள தொழிலாளர் நல ஆணையாளர்கள் இந்த நலத்திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றனர். இவ்வாண்டில் கீழ்க்காணும் நலத் திட்டங்கள் இம் மாநிலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

(அ) சுகாதாரம் :

வேலூரிலுள்ள நிலையான நடமாடும் மருந்தகத்தின் பிரிவாக துணை மருந்தகம் ஒன்று குடியாத்தத்தில் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நல அமைச்சர் இப்பிரிவை 10–4–1982 அன்று தொடங்கி வைத்தார். சத்துவாச்சாரி, வேலூர், தென்காசி, ஈரோடு ஆகிய இடங்களில் தற்போதுள்ள மருந்தகங்கள், பீடித் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து மருத்துவ வசதிகள் அளித்து வருகின்றன.

(ஆ) வீட்டு வசதி :

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சத்துவாச்சாரியில் (வேலூர்) கட்டிய குடியிருப்புகளிலுள்ள வீடுகளை ஒதுக்குவதற்காக 150 பீடித் தொழிலாளர்களின் தகுதிகள் சரிபார்க்கப்பட்டு அத்தொழிலாளர்களின் பட்டியலுக்கு ஒப்புதலளிக்கப்பட்டது.



(இ) படிப்புதவித் தொகை:

தகுதியுள்ள பீடித் தொழிலாளர்களின் 1,148 குழந்தைகளுக்குப் படிப்புதவித் தொகை வழங்க அனுமதிக்கப்பட்டது. அவ்விதம் அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.2,23,776·70 ஆகும்.

(ஈ) குழுக்கள் :

(1) மத்திய அரசு ஒருங்கிணைந்த முத்தரப்புக்குழு ஒன்றை அமைத்தது. இக்குழு 2—2—1982 அன்று புதுடில்லியில் கூடி 1966 ஆம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தைச் செயற்படுத்துவது குறித்து ஆய்வு செய்வதோடு, இச்சட்டத்தைச் செயற்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்தும் விவாதித்தது.

(2) தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நல அமைச்சரைத் தலைவராகக் கொண்டு தமிழ்நாடு மாநிலத்திற்கான ஆலோசனைக்குழு ஒன்றையும் மத்திய அரசு அமைத்துள்ளது. இக்குழு 1982 ஆம் ஆண்டில் ஒரு முறை கூடி, இம்மாநிலத்தில் பீடித் தொழிலாளர்களின் நலனை மேம்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்தது.

1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்.

3.24. இச்சட்டத்தின்கீழ் வசூலித்த. பதிவுக் கட்டணம் ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகள், தொடர்ந்த வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் II, III, IV ஆம் இணைப்புகளில் காணப்பெறும் விவர அறிக்கைகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள், ஏனைய செய்தித்தாள் நிறுவனப் பணியாளர்கள் (பணி நிலைமைகளும் பல்வேறு விதித்துறைகளும்) சட்டம்.

3.25. இச்சட்டத்தை சென்னை மாநகரில் சென்னை தொழிலாளர் நல ஆணையர் அலுவலகத்தைச் சேர்ந்த பொதுமக்கள் தொடர்பு அலுவலரும், வெளியூர்களில் தொழிலாளர் நல ஆய்வாளர்களும், தொழிலாளர் நலத்துணை ஆய்வாளர்களும் செயற்படுத்தி வருகின்றனர். 1982 ஆம் ஆண்டு இறுதியில், இச்சட்டத்தின் கீழ், 120 நிறுவனங்கள் வருகின்றன. இவற்றில் 816 பத்திரிகையாளர்கள் பணி புரிகின்றனர்.

[1983 ஏப்ரல் 11

3.26. பலேக்கர் நடுவர் மன்றத் தீர்ப்பின்படி, உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கும் ஏனைய செய்தித்தாள் நிறுவனப் பணியாளர்களுக்கும் சேரவேண்டிய தொகையைக் கோரி வரப் பெற்ற ஐம்பத்தி ஆறு விண்ணப்பங்கள், இச்சட்டத்தின் 17 (1) பிரிவின் கீழ் சென்னைத் தொழிலாளர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டன.

1976ஆம் ஆண்டு விற்பனை மேம்பாட்டு பணியாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம் :

3.27. தற்போது மருந்துத் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ள இச்சட்டம் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்களால் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் :

1982 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் 434 மலைத் தோட்டங்கள் இருந்தன. இவற்றில் சுமார் 91,390 தொழிலாளர்கள் பணி புரிந்தனர். 1982 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரையிலான கால அளவில் 1,349 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள 24 மலைத் தோட்டங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. 438 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள 7 மலைத் தோட்டங்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன. ஆண்டு இறுதியில் 451 மலைத் தோட்டங்கள் பட்டியலில் இருந்தன. 31—12—1982 ஆம் நாள் நிலவரப்படி இவற்றில் பணி புரிந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை தோராயமாக 92,300 ஆகும்.

3.29. சென்னை, தொழிலாளர் நல இணை ஆணையர், மலைத் தோட்டங்களின் தலைமை ஆய்வாளராவார். உதகமண்டலம், குன்னூர், கூடலூர், வால்பாறை, ஏற்காடு, திண்டுக்கல், நாகர்கோவில் ஆகிய இடங்களில் ஏழு மலைத் தோட்ட ஆய்வாளர்கள் இச்சட்டத்தின் விதித்துறைகளைச் செயற்படுத்துவதில் தலைமை ஆய்வாளருக்கு உதவி புரிகின்றனர். இந்த ஆய்வாளர்கள் தவிர, மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பது தொடர்பான விதித்துறைகளைச் செயற்படுத்துவதற்காகவும், மலைத் தோட்டங்களிலுள்ள மலைத் தோட்ட மருத்துவ மனைகள் மருந்தகங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்வதற்காகவும், நாகர்கோவில், உதகமண்டலம் ஆகிய இடங்களில் இரு மருத்துவ அதிகாரிகளும் பணி புரிகின்றனர். இவ்வாண்டு, இம்மருத்துவ அதிகாரிகள் 1951 ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தின் விதிக்



1983 ஏப்ரல் 11]

3.30. இச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் III, IV ஆம் இணைப்புகளில் காணப்பெறும் விவர அறிக்கைகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

1970ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (ஒழுங்குபடுத்தலும் நீக்குதலும்) சட்டம் :

3.31. இச்சட்டத்தின் கீழ் 1982 ஆம் ஆண்டில் 420 பேர் முதன்மைத் தொழிலதிபர்களாகவும், 337 பேர் ஒப்பந்தக்காரர்களாகவும் பதிவு செய்யப்பட்டனர்.

இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் III, IV ஆம் இணைப்புகளில் காணப்பெறும் விவர அறிக்கைகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

1946-ஆம் ஆண்டு தொழில் வேலை வாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம் :

3.32. சான்றிதழ் வழங்கும் அதிகாரிகள் 45 தொழில் நிறுவனங்களின் நிலை ஆணைகளுக்கு 1982 ஆம் ஆண்டில் சான்றிதழ் வழங்கினர். 11 தொழில் நிறுவனங்களைப் பொறுத்தமட்டில், நிலை ஆணைகளில் செய்யப்பட்ட திருத்தங்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கினர். இச்சட்டத்தின்கீழ் மேல் முறையீட்டு அதிகார மன்றங்களான தொழிலாளர் நீதிமன்றங்கள் இவ்வாண்டு தாக்கல் செய்யப்பட்ட 22 மேல் முறையீடுகளை முடிவு செய்தன.

1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம் :

3.33. இவ்வாண்டு ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் தொடர்ந்த வழக்குகள் குறித்த விவரங்கள் III, IV ஆம் இணைப்புகளில் காணப்பெறும் விவர அறிக்கைகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களின் பணியை நிரந்தரப்படுத்தல்) சட்டம் :

3.34. 24 திங்கள் கால அளவில், தொடர்ந்து 480 நாள் பணி புரிந்த தொழிலாளர்களின் பணியை நிரந்தரப்படுத்த இச்சட்டம் வகை செய்கிறது. இச்சட்டம், இம்மாநிலத்தில் தொழிலாளர் ஆய்வகத்தாலும் தொழிற்சாலை ஆய்வகத்தாலும் 1—1—1982 ஆம் நாளிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை உயர்நீதி மன்றத்தில் சில தொழில் அதிபர்கள் சட்டத்தின் விதித்துறைகளை எதிர்த்து தாக்கல் செய்த ரிட் மனுக்கள், உயர் நீதி மன்றத்தில் முடிவுறாமல் உள்ளன.

3.35. 50 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தியுள்ள தொழில் நிறுவனங்களுக்குப் பொருந்தக்கூடிய இச்சட்டம், தொழிலாளர் நல-வேலை வாய்ப்புத்துறையின் 24—9—1982 ஆம் நாளிட்ட 2048 ஆம் எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கையின் மூலம், 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தியுள்ள தொழில் நிறுவனங்களுக்கும் தற்போது பொருந்தும்படி செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் கொண்டுவரப்பட்ட சட்டங்கள்.

(1) 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு-பணி நிபந்தனைகளை முறைப்படுத்துதல்) சட்டம் :

3.36 நிறுவன அமைப்பின்கீழ் வராத தொழிலாளர்களின் பணி நிபந்தனைகளை முறைப்படுத்துவதற்குரியதாகும் இச்சட்டம். இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட உள்ள விதிகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. விதிகள், திட்டங்கள் இறுதியாக்கப்பட்டவுடன் இச்சட்டம் செயற்படுத்தப்படும்.

(2) 1982ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம்.

3.37. இத்திருத்தத்தால் 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தில் 10பி என்னும் புதிய பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. இவ்விதித்துறை, தொழிலாளர் நீதிமன்றங்கள் அல்லது தொழில் நடுவர் நீதி மன்றம், தீர்ப்பிற்காக அனுப்பப்பட்ட தொழில் தகராறுகள் குறித்து அம்மன்றம் தீர்ப்பளிக்கும் வரையில் அரசு வரையறுத்தவாறுள்ள வேலை குறித்த வரையறை, நிபந்தனைகளைத் தொழிலதிபர்கள் அல்லது தொழிலாளர்கள் அல்லது அவ்விருவரும் பின்பற்றுமாறு கோருவதற்கும், பொதுமக்களின் பயனுக்கான பணிகளை மூடக்கூடாது என்று கோருவதற்கும் அரசுக்கு அதிகாரமளிக்கின்றது.

(3) 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி (திருத்தச்) சட்டம் :

3.38. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள உணவகங்கள், கடைகள், வணிக நிறுவனங்கள் ஆகியவை இச்சட்டத்தின் கீழ் வரும் வகையிலும், தொழிலாளர்களும், தொழிலதிபர்களும் கொடுக்கும் தொகையை முறையே 1 ரூபாயிலிருந்து இரண்டு ரூபாயாகவும், 2 ரூபாயிலிருந்து 4 ரூபாயாகவும் உயர்த்துவதற்கு இயலும் வகையிலும்,





தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் 2 ரூபாய் வீதம் அரசு தொகை வழங்கவும் இச்சட்டம் வகை செய்கிறது. இத்திருத்தச் சட்டம் 15—9—1982 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது.

## அத்தியாயம் 4.

### ஊதியங்கள் குறித்த சட்டங்கள்.

#### 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டம்.

4.1. பின்வரும் வேலைகளுக்கு குறைந்தளவு ஊதிய வீதங்களை அரசு 1982-83 ஆம் ஆண்டில் முதல் முறையாக நிர்ணயித்துள்ளது:—

(1) திரைப்படத் தொழிலில் வேலை

(2) முந்திரித் தொழிலில் வேலை

ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதிய வீதங்கள் பின்வரும் வேலைகளுக்குத் திருத்தியமைக்கப்பட்டன.—

(1) கம்பளி விரிப்புகள் தயாரித்தல் மற்றும் சால்வை நெய்யும் நிறுவனங்களில் வேலை.

(2) பொன் ஆபரணம் செய்யும் தொழிற்சாலையில், வேலை

(3) பருத்தியிலிருந்து விதையை நீக்குதல், அமுத்துதல் மற்றும் கழிவுப் பருத்தித் தொழில்களில் வேலை.

(4) வாசனைப் புகையிலை தயாரிக்கும் தொழிலில் வேலை

(5) திரையரங்குகளில் வேலை

(6) உணவகங்களில் வேலை

(7) புகையிலை தொழிற்சாலையில்(பீடி தயாரிப்பு உட்பட வேலை.

(8) வெட்டுமரத் தொழிலில் வேலை.

4.2. 1982-83 ஆம் ஆண்டில் குறைந்த அளவு ஊதிய வீதங்கள் நிர்ணயிக்கப்பட்ட அல்லது திருத்தியமைக்கப்பட்ட வேலைகைளைப் பொறுத்த மட்டில் அடிப்படை ஊதியங்களுடன் மாறக்கூடிய அகவிலைப்படிகளுக்கு வகை செய்யவும் விதித்துறைகள் இயற்றப்பட்டுள்ளன. தனியாக அகவிலைப்படி நிர்ணயிக்கப்படாத சில இனங்களைப் பொறுத்த மட்டில், குறைந்தளவு ஊதியங்களில் அகவிலைப்படியையும் சேர்த்து நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

4.3. ஆய்வு ஆண்டில், மலைத் தோட்டங்களில் வேலைக்கு குறைந்தளவு ஊதிய வீதங்களைத் திருத்தியமைப்பது குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்க ஆலோசனைக் குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது.





4.4. பின்வரும் வேலைகளுக்கான குறைந்தளவு ஊதிய வீதங்களை நிர்ணயிக்க/திருத்தியமைக்க குறைந்தளவு ஊதிய வீதங்கள் குறித்த ஆலோசனைக் குழுக்களை அமைப்பது பற்றிய செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

(1) தோல் பதனிடும் மற்றும் தோல் பொருள் தயாரிப்புத் தொழிற்சாலைகளில் வேலை.

(2) செங்கற்கள் தயாரிக்கும் தொழிலில் வேலை.

(3) சவ்வரிசி தயாரிக்கும் தொழிலில் வேலை.

(4) மோட்டார் வண்டி பணிக்களரியில் வேலை.

(5) அச்சகங்களில் வேலை.

(6) பொருள்களை ஏற்றி இறக்கும் தொழிலில் வேலை.

(7) வாடகை மோட்டார் வண்டிகள் மற்றும் ஆட்டோ ரிக்ஷாக்களில் வேலை.

(8) பொதுவான பொறியியல் மற்றும் எந்திரக் கட்டுமானத் தொழிலில் வேலை.

(9) மீன்பிடித் தொழிலில் வேலை.

(10) மூக்குப்பொடி தயாரிக்கும் தொழிலில் வேலை.

(11) உப்பளங்களில் வேலை.

4.5. தகர கொள்கலன்கள் தயாரிப்புத் தொழிற்சாலையில் புரியும் வேலையை 1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் சேர்ப்பது குறித்து பொது மக்களிடமிருந்து மறுப்புரைகள்—கருத்துரைகள் எவையேனுமிருப்பின் அவற்றை அனுப்பி வைக்குமாறு கோரி அரசு வரைவு அறிக்கையினையும் வெளியிட்டுள்ளது.

மறுப்புரைகள் கருத்துரைகள் எவையேனும் பொது மக்களிடமிருந்து வரப்பெற்றால் அவற்றை ஆய்வு செய்து இந்த வேலையைக் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

4.6. ஆய்வு ஆண்டு காலத்தில் குறைந்த அளவு ஊதியங்கள் குறித்த மாநில ஆலோசனைக் குழுவின் கூட்டம் சென்னையில் 16—12—1982 அம் நாளன்று நடைபெற்றது.

4.7. இது தொடர்பாக தொழிலாளர் நல அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் முதலியன குறித்த விவரங்கள் இணைப்புகள் III IV ஆகிய வற்றிலுள்ள விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

4.8. 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தை. வேளாண்மைத் துறையில் செயல்படுத்தும் பணி, வருவாய்த்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவு ஊதியம் கொடுக்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்து அதனைத் திறம் பட செயல்படுத்தும் பணி புதிய 20 அம்ச திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளது. வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு ஊதியம் கிடைக்கச் செய்ய வேண்டிய பணியை முனைப் பாகச் செயல்படுத்த வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்கு நிலச் சீர்திருத்தத்துறை ஆணையாளர் மூலம் கட்டளை கள் பிறப்பிக்கட்டுள்ளன. குறைந்த அளவு ஊதியம் கொடுக்கப் படவில்லை அல்லது அதற்குத் குறைவாகக் கொடுக்கப்பட்டது. என்று வேளாண்மைத் தொழிலாளர் முறையீடு செய்து கொண் டால், அது விசாரணை செய்யப்பட்டு விரைவில் தீர்த்து வைக்கப் படுகிறதா என்பதைக் கவனித்து கொள்வதோடு, அரசு நிர்ண யித்துள்ள குறைந்த அளவு ஊதியத்திற்குக் குறையாமல் ஊதியம் கொடுக்கப்பட்டு வருவதை உறுதி செய்துகொள்ள அடிக்கடி ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர்களுக்கு அறி வுரைகள் தரப்பட்டுள்ளன.

**1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம் :**

4.9. இச்சட்டம் தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் தொழிற்சாலை ஆய்வாளர்களாலும் ஏனைய தொழில் நிறுவனங் களைப் பொறுத்த மட்டில் தொழிலாளர் நல ஆய்வாளர்களாலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4.10. செய்தித்தாள் நிறுவனங்களுக்கும் இச்சட்டத்தின் விதித்துறைகளை நீட்டித்து 5-8-1981 ஆம் நாளிட்ட 1710 ஆம் எண். அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட வரைவு அறிவிக்கையை, அரசு இவ்வாண்டில், தொழிலாளர் நல வேலைவாய்ப்புத் துறை யின் 16—9—1982 ஆம் நாளிட்ட 1951 ஆம் எண். அரசாணை யில் உறுதிப்படுத்தியது.





4.11. இச்சட்டத்தை, மத்திய அரசு 1982 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் (38 ஆம் சட்டம்) மூலம் திருத்தியமைத் துள்ளது. இத்திருத்தச் சட்டத்தின் முக்கியமான கூறுகள் வருமாறு :—

(அ) இச்சட்டத்தின் விதித்துறைகள், மாநில அரசு அறிவிக்கை வெளியிட வேண்டும் என்ற அவசியம் இல்லாமலேயே இச்சட்டத்தின் தொழில் நிறுவனம் என்பதற்கு அளிக்கப்பட் டுள்ள பொருள் விளக்கத்திற்குள் வரக்கூடிய பல்வேறு வகைத் தொழில் நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு பொருந்தச் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இச்சட்டம் பொருந்துவதற்கு தற்போதுள்ள ஊதிய அளவு ஒரு திங்களுக்கு ரூ. 1,000லிருந்து ரூ. 1,600 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

(இ) தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க ஊதியத்திலிருந்து தொழிலதிபர் பிடித்தம் செய்வது தொடர்பான இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவு, தொழிலாளர் ஒருவர் எழுத்துமூலமாக அனுமதி அளிப்பதன்பேரில் தொழிலாளர்கள் அவர்களின் குடும்பத்தினர் ஆகியோரின் நலனுக்காக, தொழிலதிபரால் ஏற்படுத்தப்பட்டுள்ள யாதொரு நல நிதிக்கு தொழிலாளரின் பங்குத் தொகை யாதொரு தொழிற் சங்கத்தின் உறுப்பினராக இருக்கச் செலுத்தத் தக்க கட்டணம் முதலிய அத்தொகைகளைப் பிடித்தம் செய்து கொள்வதற்கு இயலும் வகையில் திருத்தப்பட்டுள்ளது. இத் திருத்தச் சட்டம் 15—10—1982 ஆம் நாள் முதல் செயலுக்கு வந்துள்ளது.

4.12. மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் முதலியன குறித்த விவரங்கள் II முதல் V வரையி லான இணைப்புகளிலுள்ள விவர அறிக்கைகளில் கொடுக்கப் பட் டுள்ளன.

**1981 ஆம் ஆண்டு தமிழ் நாடு வாழ்க்கைப்படி வழங்கல் சட்டம்**

4.13. இச்சட்டம் 1—1—1982 ஆம் நாளன்று செயலுக்கு வந்தது. இது தொழிலாளர்கள் தற்காலிகப் பணி நீக்கத்தில் இருக்கும்போது அக்கால அளவில் அவர்களுக்கு தொழில்

நிறுவனங்களின் நிருவாகங்கள் வாழ்க்கைப்படி கொடுக்க வேண்டுமென்பதை கடப்பாடாக்குகிறது. தரப்படவேண்டிய வாழ்க்கைப்படி வீதங்கள் வருமாறு :—

| | |
|---|---|
| தற்காலிகப் பணி நீக்கத்தின் முதல் 90 நாட்கள். | ஊதியத்தில் 50 சதவீதம். |
| 90 நாட்களுக்குப் பின்னர், 180 நாட்கள் வரை. | ஊதியத்தில் 75 சதவீதம். |
| 180 நாட்களுக்கு மேல் .. .. .. | முழு ஊதியம். |

4.14. இவ்வாண்டில் இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வாழ்க்கைப்படித் தொகையைப் பெறுவதற்கான 121 உரிமைக் கோரிக்கை மனுக்களை துறை அதிகாரிகள் பெற்றனர். அவற்றில் 92 மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்டுவிட்டன. ஆண்டு இறுதியில் 29 மனுக்கள் நடவடிக்கை எடுத்து முடிக்கப்படாமல் இருந்தன.



## அத்தியாயம் 5.

## சமூகப் பாதுகாப்பு.

### 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி-பலவகை விதித்துறைகள் சட்டம்.

5.1. இன்றைய நாள் நிலவரப்படி இச்சட்டம் 172 தொழில்களுக்கும் தொழில் நிறுவன வகைகளுக்கும் பொருந்துகிறது.

இச்சட்டத்தின் கீழ்வரும் நிறுவனங்கள்/சந்தாதாரர்கள் :—

5.2. 1982 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதி நிலவரப்படி இச்சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள் தொழிலாளர்கள் சந்தாதாரர்கள் ஆகியோர் குறித்த விவரங்கள் வருமாறு :

| | விலக்களிக்கப்பட்டவை. | விலக்களிக்கப்படாதவை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| நிறுவனங்களின் எண்ணிக்கை. | 453 | 16,561 | 17,014 |
| தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 3.74 (இலட்சம்) | 12.40 (இலட்சம்). | 16.14 (இலட்சம்) |
| சந்தாதாரர்களின் எண்ணிக்கை. | 3.62 (இலட்சம்). | 11.70 (இலட்சம்). | 15.32 (இலட்சம்) |

### 1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்பநல ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வரும் உறுப்பினர்கள்.

5.3. 31—12—1982 ஆம் நாள் நிலவரப்படி உறுப்பினர்களின் எண்ணிக்கை 10,91,635 ஆகும்.

1976 ஆம் ஆண்டு தொழிலாளர்களின்வைப்பீட்டுத் தொகை இணைந்த ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் வரும் உறுப்பினர்களின் எண்ணிக்கை.

5.4. (1) 1952 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வருங்கால வைப்புநிதித் திட்டத்தை நிறைவேற்றும் விலக்களிக்கப்பட்ட/விலக்களிக்கப்படாத நிறுவனங்களிலுள்ள உறுப்பினர்கள் அனைவரும் 1976 ஆம் ஆண்டு தொழிலாளர்களின் வைப்பீட்டுத் தொகை இணைந்த ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் உறுப்பினர்களாவர்.

(2) சட்டப்படியான திட்டத்தைவிட அதாவது தொகுதி காப்புறுதித் திட்டத்தைவிட சிறந்த காப்புறுதித் திட்டத்தைச் செயல்படுத்தும் 29,006 சந்தாதாரர்களைக் கொண்டுள்ள 57 நிறுவனங்களுக்கு இதுவரை விலக்களிக்கப்பட்டுள்ளது.

கேட்பு, வசூல், நிலுவை :—

5.5. இம்மூன்று திட்டங்களின் கீழ் 1982 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய தொகை வசூல், நிலுவை குறித்த விவரங்கள் வருமாறு :—

| | கேட்பு. | வசூல். | 31-12-1982 ஆம் நாள் நிலவரப் படி நிலுவை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| (1) தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதித் திட்டம். | 5,627.86 | 5,407.01 | 220.85 |
| (2) தொழிலாளர்களின் குடும்பநல ஓய்வூதியத் திட்டம். | 915.69 | 881.51 | 34.18 |
| (3) தொழிலாளர் வைப்பீட்டுத் தொகை இணைந்த ஈட்டுறுதித் திட்டம். | 221.06 | 213.40 | 7.66 |
| மொத்தம் .. | 6,764.61 | 6,501.92 | 262.69 |





5.6. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகையில் பெரும்பகுதி பின்வரும் வகை தொழில் நிறுவனங்களிலிருந்து வராமல் முடங்கிக்கிடந்தன:—

| | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி. | தொழிலாளர் குடும்பநல ஓய்வூதியம். | தொழிலாளர் வைப்பீட்டுத் தொகை இணைந்த ஈட்டுறுதி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| (1) தேசிய துணி ஆலை நிறுவனம் மேற்கொண்ட நலிந்த துணி ஆலைகள். | 59.15 | .. | .. |
| (2) மேற்கூறிய திட்டம் பொருந்துவது குறித்து எதிர்ப்புத் தெரிவித்து ரிட் மனுக்களைத் தாக்கல் செய்து, தடையாணை பெற்றுள்ள நிறுவனங்கள். | 68.84 | 6.02 | 2.10 |
| (3) கலைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள். | 15.34 | 0.79 | 0.26 |
| (4) மூடப்பட்டுள்ள நிறுவனங்கள். | 4.50 | 9.02 | .. |
| மொத்தம் .. | 147.83 | 6.83 | 2.36 |

5.7. நாட்டுடைமையாக்கப்பட்ட ஆலைகளிடமிருந்து நிலுவைத் தொகையை வசூலிப்பது குறித்த பிரச்சினை மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1983 ஏப்ரல் 11

5.8. ரூபாய் 105.67 இலட்சம் (ரூபாய் 262.69—157.02) நிலுவைத் தொகையை முனைப்பாக வசூலிக்க 370 இனங்களைப் பொறுத்த மட்டில் ரூபாய் 63.79 இலட்சம் அளவிற்கு வருவாய் வசூல் சான்றிதழ்களை இவ்வமைப்பு வழங்கியுள்ளது. இத்துடன் நிலுவைகளை உரிய நேரத்தில், கட்டத் தவறியவர்கள் மீது 1,840 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

5.9. வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை முடித்து தொகை கொடுத்துத் தீர்த்தல்.

(அ) 1982 ஆம் ஆண்டில் 47,999 இனங்களைப் பொறுத்த மட்டில் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை இறுதியாக்கி தொகை வழங்கித் தீர்ப்பது தொடர்பாக 1,714.94 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

(ஆ) 1982 ஆம் ஆண்டில் வரப்பெற்ற உரிமைக் கோரிக்கைகள் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டவை அல்லது குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காகத் திருப்பி அனுப்பப்பட்டவை. தொகை கொடுத்துத் தீர்க்கப்படாமலுள்ள உரிமைக் கோரிக்கைகள் ஆகியவை குறித்த விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| (1) 31-12-1981 ஆம் நாள் நிலவரப்படி தொகை கொடுத்துத் தீர்க்கப்படாமலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 4,404 |
| (2) 1982 ஆம் ஆண்டில் வரப்பெற்ற உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 59,293 |
| (3) தொகை கொடுத்துத் தீர்க்கப்படவேண்டியிருந்த உரிமைக் கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை. | 63,697 |
| (4) 1982 ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 47,999 |
| (5) குறைபாடுகளைச் சரிசெய்வதற்காகத் திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 9,353 |
| (6) 31-12-1982 ஆம் நாள் நிலவரப்படி தீர்க்கப்படாமலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் | 6,345 |



1983 ஏப்ரல் 11]

(இ) 1982 ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் பற்றிய பகுப்பாய்வு :—

| | |
|---|---|
| (1) இறப்பு .. .. .. .. | 2,652 |
| (2) வயது முதிர்வு பெற்றமை .. .. | 5,857 |
| (3) நிரந்தரமாக இயலாமையுற்றது .. | 777 |
| (4) பதவியை விட்டு விலகியது .. .. | 32,789 |
| (5) ஆட்குறைப்புச் செய்யப்பட்டது .. | 4,748 |
| (6) இடம் பெயர்த்தல் .. .. .. | 49 |
| (7) பணியிலிருந்து நீக்கப்பட்டது .. .. | 461 |
| (8) பல்வகை .. .. .. .. | 666 |
| மொத்தம் .. | 47,999 |

5—10—1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப நல ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் தொகை கொடுத்து தீர்க்கப்பட்டவை.

| | |
|---|---|
| (1) 31—12—1981 ஆம் நாள் நிலவரப்படி முடிக்கப்பெறாமலிருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 4,158 |
| (2) 1982 ஆம் ஆண்டு வரப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 53,355 |
| (3) தொகை கொடுத்துத் தீர்க்கப்பட உள்ள மொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 57,513 |
| (4) 1982 ஆம் ஆண்டு தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 36,386 |

| | |
|---|---|
| 5) குறைபாடுகளைச் சரிசெய்து அனுப்பி வைக்குமாறு கூறி திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 14,405 |
| (6) 31–12–1982 ஆம் நாள் நிலவரப்படி முடிவுறாமல் இருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 6,722 |
| (7) தொகை கொடுத்து தீர்க்கப்பட்ட கோரிக்கைகளுக்காக வழங்கப்பட்ட தொகை. | ரூ. 59.77 இலட்சம். |
| (8) 31–12–1982 ஆம் நாள் நிலவரப்படி ஓய்வூதியம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை. | 957 |

5–11–1976 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வைப்பீட்டுத் தொகை இணைந்த ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் தொகை கொடுத்து தீர்க்கப்பட்டவை :—

| | |
|---|---|
| (1) 31–12–1981 ஆம் நாள் நிலவரப்படி முடிக்கப்படாமலிருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 534 |
| (2) 1982 ஆம் ஆண்டில் வரப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 4,086 |
| (3) தொகை கொடுத்து தீர்க்கப்பட உள்ள மொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 4,620 |
| (4) 1982 ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 1,994 |
| (5) குறைபாடுகளைச் சரி செய்து அனுப்புமாறு கூறி திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 1,790 |
| (6) 31–12–1982 ஆம் நாள் நிலவரப்படி நடவடிக்கை எடுக்காமல் நிலுவையாக இருந்த உரிமைக் கோரிக்கை மனுக்களின் எண்ணிக்கை. | 836 |
| (7) தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளைப் பொறுத்த மட்டில் ஈட்டுறுதித் திட்ட நலன் தொடர்பாக வழங்கப்பட்ட தொகை. | ரூபாய் 80.36 இலட்சம். |





முன்பணங்கள் :—

5–12–1982 ஆம் ஆண்டில் பின்வரும் நோக்கங்களுக்காக இத்திட்டத்தின் சந்தாதாரர்களுக்கு அவர்களது வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் உள்ள தொகையிலிருந்து முன் பணங்கள் வழங்கப்பட்டன. அவை பற்றிய விவரம் பின்வருமாறு :—

| நோக்கம். | இனங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் பாலிசிகளுக்குத் தொகை கொடுக்க (பத்தி 62). | 12,832 |
| (2) குடியிருப்பு மனை அல்லது வீடு அல்லது தனிக்குடியிருப்பு வாங்க அல்லது வீடுகட்ட அல்லது வீடு வாங்கியது தொடர்பாக ஏற்பட்டக் கடனைத் தீர்க்க (பத்தி 68பி அண்டு 68பிபி). | 6,559 |
| (3) 15 நாட்களுக்கு மேல் கதவடைப்பு செய்யப்பட்ட அல்லது மூடப்பட்ட நிறுவனங்களின் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட முன்பணம் (பத்தி 68-எச்). | 5,889 |
| (4) குடும்பத்தில் உள்ளவர்களுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டு அவர்களின் மருத்துவச் சிகிச்சைக்கான செலவிற்காக. | 567 |
| (5) உறுப்பினரின் திருமணத்திற்கு உறுப்பினரின் மகள்கள், மகன்கள், சகோதரிகள், சகோதரர்கள் திருமணத்திற்கு உறுப்பினரின் மகன், மகள் ஆகியோரின் உயர்கல்விக்கு (பத்தி 68கே). | 16,734 |
| (6) மின்வெட்டு காரணமாக தொழிற்சாலையில் லே-ஆப் இருக்கும்போது ஊதியத்தில் குறைவு ஏற்பட்டு அவதியுறும் தொழிலாளர்களுக்கு (பத்தி 68-எம்). | 101 |
| (7) உடல் ஊனமுற்றவராக உள்ள சந்தாதாரர்கள் இடர்பாட்டைக் குறைக்க கருவிகள் வாங்குவதற்கு (பத்தி 68-என்). | 2 |
| மொத்தம் .. | 42,687 |

இந்த 42,687 உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்ட முன் பணத்தின் மொத்த தொகை ரூபாய் 807.45 இலட்சமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம்.

5.13. இம்மாநிலத்தில் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம் 1955 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மின்சக்தியைப் பயன்படுத்துகின்ற 10-ம் அதற்கு மேற்பட்டும் பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் மின்சக்தியைப் பயன்படுத்தாத 20 அல்லது அதற்கு மேல் பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் மற்றும் சில நிறுவனங்களுக்கும் இத் திட்டம் பொருந்தும். இத்திட்டத்தின்கீழ் பின்வரும் உதவி களுக்கு வகை செய்யப்பட்டுள்ளது.

(1) மருத்துவ உதவி .. .. மருந்துப் பொருட்களாக வழங்கப்படுகிறது.

(2) நோய்க்கால உதவி .. .. பணமாக அளிக்கப்படுகிறது.

(3) பேறுகால உதவி .. .. ,,

(4) ஏலாமையுற்றோருக்கு உதவி .. ,,

(5) சார்ந்துள்ளவர்கள் நல உதவி .. ,,

(6) இறுதிச் சடங்குக்குரிய செலவுத் தொகை. ,,

5.14. இம்மாநிலத்தில் புதிய பகுதிகளுக்கு இத்திட்டம் படிப் படியாக நீட்டிக்கப்பட்டுள்ளதால், ஈட்டுறுதி செய்யப்பட்டவர் களின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது. இது தொடர்பான விவரங்கள் (30–6–1982 அன்றுள்ளவாறு) கீழே கொடுக்கப் பட்டுள்ளன :

| | |
|---|---|
| (அ) தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை | 4,89,050 |
| (ஆ) ஈட்டுறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை. | 5,27,000 |
| (இ) இதில் அடங்கிய குடும்பங்களின் எண்ணிக்கை | 5,27,000 |
| (ஈ) பயனடைவோரின் மொத்த எண்ணிக்கை .. | 20,44,760 |



5.15. தொழிலாளர் நல ஈட்டுறுதி திட்டங்களை பின்வரும் பகுதி களுக்கு நீட்டிக்க 1982–83–ல் அரசு அனுமதித்தது. இதற்கு ரூபாய் 16.65 இலட்சம் மதிப்பீட்டுச் செலவாகும்.

(1) இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரை.

(2) வடஆற்காடு மாவட்டத்தில் அரியூர்.

(3) தருமபுரி மாவட்டத்தில் ஓசூர்.

(4) திருநெல்வேலி மாவட்டத்தில் வீரவநல்லூர்.

(5) செங்கல்பட்டு மாவட்டத்தில் பாடியநல்லூர், அலமாதி, பகுதிகள்.

(6) நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலம்.

(7) செங்கல்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர், திருநின்றவூர்.

(8) வடாற்காடு மாவட்டத்தில் வாலாஜா.

இப்பகுதிகளுக்கு தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம் நீட்டிக்கப்படுவதன் காரணமாக ஈட்டுறுதி செய்து கொண்டவர் கள் உட்பட மொத்தம் 47,204 பேர் பயன் பெறுவர்.

5.18. தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் அயனாவரம் (சென்னை), கே. கே. நகர் (சென்னை), மதுரை, கோயம்புத்தூர், வேலூர், (வட ஆற்காடு மாவட்டம்). ஆகிய இடங்களில் ஐந்து மருத்துவ மனைகளும், 112 நிலையான மருந்தகங்களும், 9 நடமாடும் மருந்தகங்களும் 3 பயன்பாட்டு மருந்தகங்களும், 2 பகுதி நேர மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன. மேற் கூறிய ஐந்து தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளின் எண் ணிக்கை வருமாறு—

| | படுக்கைகள் |
|---|---|
| (1) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை. அயனாவரம், சென்னை. | 625 |
| (2) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை கே. கே. நகர், சென்னை. | 206 |
| (3) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, மதுரை. | 202 |

| | |
|---|---|
| (4) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை கோயம்புத்தூர். | 500 |
| (5) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை வேலூர் (வடாற்காடு). | 50 |

5.17. ஐந்து தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனைகளும், 112 நிலையான மருந்தகங்களில் 45-ம் அரசுக்கு அல்லது தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்திற்குச் சொந்தமான கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. எஞ்சிய மருந்தகங்கள் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

5. 18. பின்வரும் இடங்களில் ஒவ்வொன்றும் 50 படுக்கைகள் கொண்ட மேலும் நான்கு தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனைகளைக் கட்டும் செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

(1) சேலம்.
(2) மேட்டூர் அணை.
(3) திருச்சிராப்பள்ளி.
(4) சிவகாசி.

5.19. கோயம்புத்தூர், தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை வளாகத்தில் 25 படுக்கைகள் கொண்ட நோய் நீங்கிய பின் ஓய்வு எடுக்கும் இல்லம் ஒன்று 2-12-1982 முதல் செயல்படத் தொடங்கியது.

1972 ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டம்.

5.20. இச்சட்டம் 1972 செப்டம்பர் முதல் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர் நல வட்டாரத் துணை ஆணையாளர்கள் அலுவலகத்தைச் சேர்ந்த உதவி ஆணையாளர்களும் தொழிலாளர் நல வட்டாரத் துணை ஆணையாளர்களும் அவரவர் அதிகார வரம்புப் பகுதியில் இச் சட்டத்தின் கீழ் முறையே கட்டுப்பாட்டு அலுவலர்களாகவும், மேல் முறையீட்டு அலுவலர்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்த அலுவலர்கள் இச்சட்டத்தின் கீழ் 1982 ஆம் ஆண்டில் பெற்று தீர்த்து வைத்த வழக்குகளின் விவரங்கள் V ஆம் இணைப்பில் உள்ள விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

5.21. 1982-ம் ஆண்டில், இச்சட்டத்தின் விதித்துறைகளை மத்திய அரசு பின்வரும் புதிய நிறுவனங்களுக்கும் நீட்டித்தது.

(1) உள்ளாட்சி மன்றங்கள்.

(2) வழக்குரைஞர் அலுவலகங்கள்.



## அத்தியாயம் 6.

### தொழிலாளர் நலப் பணிகள்.

### அரசு உதவி பெறும் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம்.

### தனியார் துறை தொழிலதிபர் திட்டங்கள்.

6.1. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர்களின் பயனுக்காக வீடுகள் கட்ட தனியார் தொழிலதிபர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

6.2. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 1,206 வீடுகள் தொழிலதிபர்களால் கட்டப்பட்டுள்ளன. இதுவரை செலவிட்ட தொகை ரூ. 47.21 இலட்சமாகும்.

### மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்.

6.3. குடியிருப்பு ஒன்றுக்கு ரூ. 4,000 என்ற உச்சவரம்புச் செலவு அடிப்படையில், தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட மலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு நிதி உதவி அளிக்க இத்திட்டம் வகை செய்கிறது. இத்தொகையில் 50 சதவீதம் கடனாகவும் 37.50 சதவீதம் உதவித் தொகையாகவும் வழங்கப்படுகிறது.

6.4. அறிக்கை ஆண்டில் பின்வரும் புதிய திட்டங்களுக்கு அரசு அனுமதி அளித்தது.

| (1) | வீடுகளின் எண்ணிக்கை (2) | கடன் (3) | உதவித் தொகை (4) |
|---|---|---|---|
| (1) கிளண்டேல் எஸ்டேட், குன்னூர். | 40 | 80,000 | 60,000 |
| (2) வாட்டர் பால்ஸ் எஸ்டேட் (கிழக்கு), வால்பாறை. | 12 | 24,000 | 18,000 |
| (3) வாட்டர்பால்ஸ் எஸ்டேட் (மேற்கு) வால்பாறை. | 34 | 68,000 | 51,000 |
| (4) கிளன்வாஸ் எஸ்டேட் நியூ ஹோப் போஸ்ட். | 44 | 88,000 | 66,000 |
| (5) சோலையார், காளையார் எஸ்டேட், வால்பாறை. | 100 | 2,00,000 | 1,50,000 |

1983 ஏப்ரல் 11]

6.5. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை ரூ. 21.79 இலட்சம் செலவில் 828 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

6.6. தொழிற்சாலை விபத்துக்கள் துயர் துடைப்பு நிதி—
(1) கல் உடைத்தல் வெடி வைத்துத் தகர்த்தல், கிணறு தோண்டு தல் அல்லது அவைபோன்ற ஆபத்தான தொழில்களில் பணி புரியும் போது காயமேற்பட்டு அதனால் நிலையாக பணியாற்ற இயலாமற்போன தொழிலாளர்களுக்கு அல்லது மரணமடைந்த தொழிலாளர்களைச் சார்ந்து இருப்பவர்களுக்கு உதவியளிக்கும் பொருட்டு, ஆண்டொன்றுக்கு 15,000 ரூபாய் தொடர் மானியத் துடன் அரசால் இந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1923 ஆம் ஆண்டு தொழிலாளர்களின் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப் பீடு வழங்குவதற்குத் தொழிலதிபர்களிடம் நிதி வசதி இல்லாதிருந் தால் அல்லது வேறு காரணங்களை முன்னிட்டு தொழிலாளர் கள் அல்லது அவர்களைச் சார்ந்துள்ளோர் அச்சட்டத்தின் கீழ் இழப்பீட்டுத் தொகை பெற இயலாது போனால் இந்நிதியிலிருந்து உதவித் தொகை அளிக்கப்படும். இழப்பீடு வழங்கப் போதுமான நிதி வசதி இல்லாத சிறிய ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் விபத்தில் மரணமடைந்தால் அல்லது காய மடைந்தால் அவர்களும் இந் நிதியிலிருந்து உதவித் தொகை பெறுவார்.

1982-ல் நான்கு தொழிலாளர்களுக்கு நிதியிலிருந்து துயர் தணிப்புத் தொகையாக ரூ. 4,000 வழங்கப்பட்டது.

தமிழ்நாடு தொழிலர்ளர் நல வாரியம்.

6.7. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தொழிலாளர் நல அமைச்சர் தலைமையின் கீழ் இயங்குகிறது. இவ்வாரியம், தொழிலாளர்களின் நல்வாழ்வுக்காக பல நடவடிக்கைகளை எடுத் துள்ளது.

6.8. ஏற்கனவே உள்ள 22 தொழிலாளர் நல நிலையங் களுடன் இவ்வாண்டில் பின்வரும் 8 இடங்களில் தொழிலாளர் நல நிலையங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| சேலம் | விழுப்புரம் |
| விருதுநகர் | பழனி |
| இராணிப்பேட்டை | திருநெல்வேலி |
| கும்பகோணம் | பல்லடம். |

6. 9. இவ்வாரியம் செயல்படுத்திய ஏனைய நலத்திட்டங் களும் அவற்றின் மூலம் பயனடைந்தோரின் எண்ணிக்கையையும் பற்றிய விவரங்கள் வருமாறு.



1983 ஏப்ரல் 11]

(1) தொழிலாளர் நல நிலையங்கள்—

| | 1982–83 |
|---|---|
| (1) தையல் பயிற்சி நிலையங்கள்— | |
| (அ) நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | 32 |
| (ஆ) பயிற்சி பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை .. .. .. .. | 1,024 |
| (2) பாலர் பள்ளிகள்— | |
| (அ) நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | 30 |
| (ஆ) பயனடைந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை .. .. .. .. | 836 |
| (3) குழந்தைக் காப்பு நிலையங்கள்— | |
| (அ) நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | 5 |
| (ஆ) பயனடைந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை .. .. .. .. | 198 |
| (4) படிப்பகங்கள்— | |
| (அ) படிப்பகங்களின் மொத்த எண்ணிக்கை | 4 |
| (ஆ) பயன்பெறும் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை .. .. | 38,290 |

(5) ஏனைய திட்டங்கள்—

| | பயனடைந்தோரின் எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|
| (அ) தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடிக்கான செலவுத் தொகை யைத் திருப்பி கொடுத்தல் .. | 263 | 12,376 |
| (ஆ) தொழிலாளர் குழந்தைகளுக்கு தட்டச்சு, சுருக்கெழுத்து படிப்புக் கட்டணங்கள் .. .. .. | 446 | 44,133 |
| (இ) புத்தக வங்கி .. .. .. | 9,923 | 1,42,728 |
| (ஈ) ஈமச்சடங்கிற்குரிய செலவுகள் | 494 | 98,800 |

6.10. பின்வரும் படிப்புகளுக்காக மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்கிய வகையில் 1982 ஆம் ஆண்டில் வாரியம் நிதியுதவி அனுமதித்துள்ளது.

| | பயனடைந்துள்ளவர்களின் எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|
| | | ரூ. |
| (a) பொறியியல் படிப்பிற்கான படிப்புதவித் தொகைகள் .. .. | 19 | 16,906 |
| (b) மருத்துவப் (எம்.பி.பி.எஸ்.) படிப்பிற்கான படிப்புதவித் தொகைகள் .. .. .. | 6 | 4,500 |
| (c) பொறியியல் பட்டயப்படிப்பிற்கான படிப்புதவித் தொகை .. .. | 14 | 8,575 |
| (d) தொழிற்பயிற்சி நிலையங்கள் படிப்புக்களுக்கான படிப்புதவித் தொகை .. .. .. | 8 | 1,950 |

சட்ட உதவி—

6.11. உயர்நீதிமன்ற வழக்குகள் தொடர்பாக, தொழிற்சங்கங்களுக்கு ஆகும் சட்டச் செலவுகளுக்காக, சில நிபந்தனைகளுக்குட்பட்டு, ரிட் மனு ஒன்றுக்கு அல்லது ரிட் மேல் முறையீடு ஒன்றுக்கு ரூ. 150 என்ற வீதத்தில் நிதியுதவி அளிப்பதற்கான அனுமதி வழங்க, தொழிலாளர் நல ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆயினும், 1982 ஆம் ஆண்டில் இத் திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது, சட்ட உதவிக்கு திட்டத்தின்கீழ் உதவித்தொகை எதுவும் கோரப்படவில்லை.

6.12. தொழிலாளர்கள் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் இழப்பீடு கோரும், ஏழ்மை நிலையிலுள்ள, தகுதி வாய்ந்தத் தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு மாநில அரசுச் செலவில் சட்ட உதவி அளிப்பதற்காக அரசு ஆண்டொன்றுக்கு ரூபாய் 1,000 ஒதுக்குகிறது. காயமடைந்த தொழிலாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டுமென இழப்பீட்டுத் தொகை ஆணையாளர்கள் பிறப்பித்த ஆணைகளை எதிர்த்து நிருவாகங்கள் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ளும் போது சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் உயர்நீதிமன்றத்தில் தங்கள் தரப்பை எடுத்துரைத்து வழக்காட சட்ட உதவி பெறத் தகுதியுடைவராவர். இவ்வாறு உதவிபெற, இழப்



பீட்டுத் தொகை கூடுதல் ஆணையாளர்களின் முன்னிலையில் நடைபெற்ற சட்ட நடவடிக்கைகளின்போது அவர்களுக்கு அத்தகைய சட்ட உதவி அளிக்கப்பட்டிருக்க வேண்டும். 1982 ஆம் ஆண்டில், இத்தகைய சட்ட உதவி வேண்டி நான்கு மனுக்கள் வரப்பெற்று, அவற்றிற்காக ரூபாய் 7,300 வழங்கப்பட்டது.

தொழிலாளர் நலச் சட்ட ஆலோசனைக் குழுக்கள் :

6.13. சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மூன்று இடங்களில் சட்ட ஆலோசனைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றை ஓய்வு பெற்ற நீதிபதிகளும், ஓய்வு பெற்ற தொழிலாளர் நல அதிகாரிகளும் நிருவகித்து வருகின்றனர்.

6.14. இக்குழுக்கள், 1982 ஆம் ஆண்டில் 336 முறையீடுகளுக்குத் தீர்வு கண்டுள்ளன.

தமிழ்நாடு தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குச் சத்துணவு திட்டம் :

6.15. இத் திட்டம், 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் தொழிற்சாலைகளிலும் மலைத் தோட்டங்களிலும் பணியாற்றும் தொழிலாளர்களின் நலனைக் கருதி செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பள்ளி செல்லும் வயதடையாத குழந்தைகள் கருவுற்ற மகளிர்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்றனர். 1982 ஆம் ஆண்டில் இத் திட்டம், 98 மையங்களைச் சேர்ந்த 27,000 பேர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

மேற்கூறிய திட்டம் தவிர, உடல்நலப் பணிகள் ஒருங்கிணைந்தத் தீவிரத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், சென்னை.

6.16. தொழிற்சங்க நடவடிக்கைகளின் தரத்தை உயர்த்துவது, நிருவாக வாயில்களை மேம்படுத்துவது, திறமையான தொழிலாளர் நல நிருவாகப்பணியை உருவாக்குவது ஆகியவை இந் நிலையத்தின் நோக்கங்களாகும்.

6.17. 1982 ஆம் ஆண்டில் இந்நிலையம் பின்வரும் திட்டங்களைச் செயற்படுத்தியது.

(1) அரசுச் சார்புச் செயலாளர்களுக்கும், தலைமைச் செயலகப் பிரிவு அலுவலர்களுக்கும் தொழிலாளர் நலச் சட்டங்கள் பற்றி நினைவு கூர் பயிற்சி,

(2) பல்வேறு பொதுத் துறை நிறுவனங்களைச் சேர்ந்த இளநிலை உதவியாளர்களுக்கு, அலுவலக நடைமுறையிலும் கணக்குகளிலும் அடிப்படைப் பயிற்சி.

(3) வணிக நிறுவனங்களைச் சேர்ந்த வேலையளிப்ப வர்களுக்கு கடைகள்—நிறுவனங்கள் சட்டம், ஏனைய தொழி லாளர் நலச் சட்டங்கள் ஆகியவை குறித்து வகுப்புகள்.

இந்நிலையம், இதுவரையில், நடத்திய வகுப்புகள், கருத் தரங்குகளின் எண்ணிக்கை 160 ஆகும்; இவற்றில் 4,216 பேர்கள் கலந்து கொண்டனர்.

**தொழிலாளர் நல நிருவாகம் பற்றிய பகுதி நேரப்பட்டயப் படிப்பு :**

6.18. இக் கல்வி நிலையம் 15–9–1979 முதல் தொழிலாளர் நல நிர்வாகம் பற்றி ஓராண்டு பகுதி நேரப் பட்டய மேற்படிப்பு வகுப்பினையும் நடத்திவருகிறது. தொழிலாளர் நல நிரு வாகம் பற்றிய நான்காவது பட்டய மேற்படிப்பு வகுப்பை, தொழிலாளர் நல அமைச்சர் 22–6–1982 ஆம் நாளன்று தொடங்கி வைத்தார். இவ்வாண்டு இப்படிப்பில் 42 மாண வர்கள் பயிலுகின்றனர்.

**6.19. தமிழில் தொழிலாளர் நலம் பற்றிய திங்கள் இதழ் :**

இந் நிலையம் ''உழைப்பவர் உலகம்'' என்னும் திங்கள் இதழ் ஒன்றை தமிழில் வெளியிட்டு வருகிறது. தொழிலாளர் நீதிமன்றங்கள், உயர்நீதி மன்றங்கள், தலைமை நீதிமன்றம் ஆகி யவை தொழிலாளர் பிரச்சினை தொடர்பாக அளித்த முக்கிய மான தீர்ப்புகள் பற்றிய செய்திக் குறிப்புகள் இதில் வெளி யிடப்படப்படுகின்றன. மேலும் அரசு அறிவிக்கைகளும் இவ் விதழில் வெளியிடப்படுகின்றன. இவ்வெளியீட்டின் சந்தா தாரர்களின் எண்ணிக்கை 1981 ஏப்ரலில் 6,800 ஆக இருந்து 1982 டிசம்பரில் 13,000 ஆக உயர்ந்துள்ளது.

6.20. திருநெல்வேலி, சங்கர் நகரில் ''உழைப்பவர் உலகம் வாசகர்கள் மன்றம்'' ஒன்றை தொழிலாளர் நல அமைச்சர் 8–5–1982 ஆம் நாளன்று தொடங்கி வைத்தார். படிப்பகங்கள் ஏற்படுத்துதல் தொழிலாளர் கூட்டங்களை நடத்துதல் முதலி யன மூலம் இயன்ற வரையில் பல தொழிலாளர்களுக்கு இந்த இதழில் வெளிவரும் கருத்துகளைப் பரப்புவதே இம்மன்றத்தின் நோக்கமாகும்.





## அத்தியாயம் 7.

### எடைகள்—அளவைகள் குறித்த சட்டம்.

7.1. தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு எடைகள் அளவைகள் (செயற்படுத்தல்) சட்டத்தின் விதித் துறைகளையும், அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளையும் தொழிலாளர் நலத் துறை யால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்காக, தொழி லாளர் துறை துணை ஆணையர் (ஆய்வு) எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார். இப்பணியில் அவருக்கு உதவியாக, தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழி லாளர் நல துணை ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் ஆகி யோர் உள்ளனர்.

7.2. மேற்சொன்ன சட்டத்தைத் திறம்படச் செயற்படுத்து வதற்காக, அரசு, இச்சட்டத்தின்கீழ் முத்திரையிடும் பணியைக் கவனிப்பதற்கென்றே சென்னை மாநகரிலும், செங்கற்பட்டு மதுரை மாவட்டங்களிலும் தனிப்பணியாளர்களை நியமித்துள் ளது.

7.3. 1982 ஆம் ஆண்டில் செய்த ஆய்வுகள், கூட்டாக நடத்திய திடீர் சோதனைகள் தொரப்பட்ட வழக்குகள் ஆகிய வற்றின் விவரங்கள் வருமாறு :

| | |
|---|---|
| கிராம ஆய்வுகளின் எண்ணிக்கை .. | 9,843 |
| ஆய்வு செய்யப்பட்ட வணிக நிறுவனங்களின் எண்ணிக்கை. | 58,950 |
| கூட்டாக நடத்திய திடீர் சோதனைகளின் எண்ணிக்கை. | 2,020 |
| சோதனை செய்த வணிக நிறுவனங்களின் எண்ணிக்கை. | 52,608 |
| தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 18,176 |
| தண்டனை முடிந்த வழக்குகளின் எண்ணிக்கை (1981-லிருந்து முடிவடையாமலுள்ள வழக்குகள் உட்பட). | 18,109 |
| விதிக்கப்பட்ட அபராதத் தொகை ரூபாய் | 9,80,803,00 |

7.4. இச்சட்டத்தின் கீழ் 1981, 1982 ஆம் ஆண்டுகளில் வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணம், முத்திரையிடுவதற்கான கட்டணம் ஆகியவை பற்றிய விவரங்கள் வருமாறு :

| | 1981 | 1982 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| பழுது பார்ப்பவருக்கான உரிமங்கள் | 240 | 258 |
| விற்பனையாளர்களுக்குகான உரிமங்கள் | 552 | 589 |
| தயாரிப்பாளர்களுக்கான உரிமங்கள் | 108 | 121 |
| வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணம் | ரூ. 1,57,859,50 | 1,71,394 |
| வசூலிக்கப்பட்ட முத்திரை யிடுவதற்கான கட்டணம். | ரூ. 51,75,638.79 | 52,46,068.59 |



7.5. வணிக நிறுவனங்களில் குறைத்து எடை போடுதல் அல்லது அளவையிடுவதைக் கண்டுபிடிப்பதற்காக நடத்தும் சிறப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக மாநில முழுவதும் திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன. இவை பற்றிய விவரங்கள் வருமாறு :

| தொழில்வகை. | திடீர் சோதனை நடத்தப் பட்ட நாள். | செய்யப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை. | கண்டுபிடிக்கப்பட்ட முறைகேடுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (அ) பெட்ரோல், டீசல் அளவைக் கருவிகள். | 6—2—82 | 316 | 37 |
| (ஆ) தெருவில் மண்ணெண்ணெய் விற்பவர்கள். | 8—2—82 மற்றும் 22—4—82 | 226 | 83 |
| (இ) சிறப்பு அங்காடிகள் .. | 25—4—82 | 105 | 1416 சிப்பங்களில் 133 சிப்பங்கள் எடை குறைவானவையாக இருந்தது அறியப்பட்டு அவை கைப்பற்றப் பட்டன. |

பற்றிய —

(ச) சிமிட்டி தொழிற்சாலைகள்—

| | | | |
|---|---|---|---|
| (1) சிமிட்டி நிரப்புமிடங்களில் | 7—5—82 | 705 மூட்டைகள் சோதனை யிடப்பட்டன. | எடை குறைவாக இருந்த 71 மூட்டைகள் மீண்டும் சரியாக நிரப்பப்பட்டு தரப்படுத்தப்படுவதற்காகத் தனியே பிரிக்கப்பட்டன. |
| (2) ஒப்படை செய்யுமிடங்களில் | 7—5—82 | 35 லாரி சுமைகள். | எடை குறைவாக இருந்ததற்காக 17 (5) (பி) பிரிவின் கீழ் 3 லாரி சிமிட்டி மூட்டைகள் நிறுத்தி வைக்கப்பட்டன. |
| (உ) உணவு பங்கீட்டு கடைகளிலும் ஏனைய முகவரமைப்புகளிலும். | 6—7—82 மற்றும் 7—7—82. | 399 | 107 |



7.6. 1982-இல் கூட்டாக நடத்தப்பட்ட திடீர் சோதனைகளின்போது கைப்பற்றப்பட்ட தவறான, குறைபாடாக உள்ள அல்லது மீண்டும் சரி பார்க்கப்படாத பல்வேறு எடைகள். அளவைகள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

| | |
|---|---|
| எடைகள் .. .. .. .. | 26,043 |
| கொள்ளளவு கருவிகள் .. .. | 14,471 |
| நிறுவைக் கருவிகள் .. .. .. | 1,063 |
| துலாத்தராசுகள் (பீம் ஸ்கேல்) .. | 4,295 |
| அளக்கும் கருவிகள் .. .. .. | 713 |

[1983 ஏப்ரல் 11

பாகம் 2

அத்தியாயம் 8

## தேசிய வேலை வாய்ப்புப் பணி.

### 8.1. வேலை வாய்ப்புகள்—

தமிழ் நாட்டில், 13 துணை வேலை வாய்ப்பு அலுவலகங்கள்
5 தனி வேலை வாய்ப்பு அலுவலகங்கள், சென்னை, மதுரை,
அண்ணாமலை நகர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலுமுள்ள
பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் ஆலோசனைப் பிரிவு
கள் மூன்று ஆகியன உட்பட 39 வேலை வாய்ப்பு அலுவலகங்கள்
இயங்கி வருகின்றன.

பதிவு செய்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை வேலை
அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை செல்லுபடி பதிவேட்டில்
(Live Regi.tar) உள்ளவர்களின் எண்ணிக்கை, அறிவிக்கப்
பட்ட காலியிடங்களின் எண்ணிக்கை அறிக்கையாண்டில் வேலை
வாய்ப்பு அலுவலகங்களின் பணியைப் பயன்படுத்திக் கொண்ட
பொது, தனி வேலையளிப்போரின் எண்ணிக்கை, ஆகியவை
பற்றிய விவரங்கள் முந்திய ஆண்டின் நிகரான கால அளவு
தொடர்பான விவரங்களுடன் இணைப்பு VI-ல் உள்ள விவர
அறிக்கையின் பிரிவு 1-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 8.2. உடல் ஊனமுற்றோருக்கான தனி வேலை வாய்ப்பு அலுவலகங்கள் :

உடல் ஊனமுற்றவர்களைப் பதிவு செய்யவும், அவர்களுக்கு
வேலை வாய்ப்பு அளிக்கவும் தனி வேலை வாய்ப்பு அலுவலகம்
சென்னையில் ஒன்றும் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்
பள்ளி, சேலம் ஆகிய மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு
பிரிவாக நான்கு பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன. அவை,
பொது தனியார் துறைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு
வெவ்வேறான உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பைத்
தேடிக் கொடுக்கின்றன. 1-4-1982-ல் இருந்து 31-12-1982
வரையிலான காலத்தில் பதிவு செய்யப்பட்டு வேலையில் அமர்த்
தப்பட்ட உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்கள் பற்றிய
புள்ளி விவரங்கள் இணைப்பு VI-ல் உள்ள விவர அட்டவணை
யின் 2 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.



1983 ஏப்ரல் 11]

### 8.3. தொழில்—நிர்வாக வேலை வாய்ப்பு அலுவலகம் :

இவ்வலுவலகம், தமிழ்நாட்டில் தொழில் அறிவியல், பொறி
யியல நிர்வாகத் துறைகளில் உயர் தகுதியுடைய விண்ணப்ப
தாரர்களின் தேவைகளை நிறைவு செய்கிறது. அவர்களுக்குத்
தகுந்த வேலையைக் கண்டுபிடித்து, அவர்களைப் பணியிலமர்த்து
வதற்காக இவ்வலுவலகம், பொது தனியார் துறைகளைச்சேர்ந்த
முன்னணி வேலையளிப்போருடன் நெருங்கிய தொடர்பு
வைத்துள்ளது. 1-4-1982 இலிருந்து 31-12-1982
வரையிலான கால அளவில் இந்த அலுவலகம் புரிந்த பணி
தொடர்பான புள்ளி விவரங்கள் இணைப்பு VI-இல் உள்ள விவர
அறிக்கையின் 3 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல்-ஆலோசனைப்
பிரிவு பல்கலைக் கழகத்தில் பயின்ற மாணவர்களுக்கு வேலை
வாய்ப்பு பற்றிய தகவல் அளிப்பதுடன், வேலை தேடுபவர்களைப்
பதிவு செய்து, அவர்கள் வேலை வாய்ப்புப் பெறவும் உதவுகிறது.
1-4-1982 முதல் 31-12-1982 வரையுள்ள கால அளவில்
பல்கலைக் கழக வேலை வாய்ப்பு தகவல் ஆலோசனைப் பிரிவு
தொடர்பான புள்ளி விவரங்கள் இணைப்பு VI-ல் உள்ள விவர
அட்டவணையின் 4 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

தொழில் நுட்பத் தகுதி உடையவர்களுக்காக சென்னை,
திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் மூன்று வேலை
வாய்ப்பு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இந்த அலுவல
கங்கள், தொழில் நுட்பக் கல்வித் தகுதி பெற்றவர்களைப் பதிவு
செய்து பொது, தனியார் துறைகளில் தகுந்த பணிகளில் அவர்
களைப் பணியிலமர்த்துகிறது.

### 8.4. வேலை வாய்ப்பு நிலவரத் தகவல் திட்டம் :

(அ) இத்துறை செயல் படுத்தும் வேலை வாய்ப்பு நிலவரத்
தகவல் திட்டத்தின்கீழ், 10 அல்லது அதற்கு அதிகமான தொழி
லாளர்கள் (வேளாண்மை நீங்கலாக) பணி புரியும், தனியார்,
பொதுத் துறைகளில் உள்ள எல்லா நிறுவனங்களிலும் வேலை
வாய்ப்பு நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய தகவல்
காலாண்டுக்கு ஒரு முறை சேகரிக்கப்படுகிறது. அமைப்பு ரீதி
யான நிறுவனங்கள் தொடர்பாக மட்டுமே இத்தகவல் சேகரிக்கப்
படுகிறது. பொது, தனியார் துறைகளிலுள்ள நிறுவனங்களைப்
பொறுத்தவரை 31-3-1982, 30-6-1982 அன்றுடன்
முடிவடைந்த இரு காலாண்டுகளில் தொடர்பு கொள்ளப்பட்ட
நிறுவனங்களின் எண்ணிக்கை ஆகியவை இணைப்பு VI-ல் உள்ள
விவர அறிக்கையின் 5 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

[1983 எப்ரல் 11

(ஆ) தமிழ் நாட்டிலுள்ள வேலை வாய்ப்பகங்களின் செல்லு படிப் பதிவேடுகளிலுள்ள முதல் வகுப்புப் டட்டதாரிகள் என்னும் பொருள் குறித்து மேற் கொள்ளப்பட்ட தனி ஆய்வு முடிக்கப் பட்டு விட்டது.

(இ) இவ்வியக்கத்தால் மேற்கொள்ளப்பட்ட கீழ்க்கண்ட ஆய்வுகள் நடந்தேறி வருகின்றன:—

(1) தமிழ்நாட்டின் சில குறிப்பிட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் செல்லுபடி பதிவேட்டிலுள்ள தேசிய தொழிற் பழகுநிலை சான்றிதழ் (National Apprenticeship Certificate) தேசிய தொழிற் சான்றிதழ் (National Trade Certificate) பெற்றவர்கள் பற்றிய ஆய்வு;

(2) மதுரை மாவட்ட வேலைவாய்ப்பகத்திலும், திண்டுக் கல் துணை வேலை வாய்ப்பகத்திலும் உள்ள செல்லுபடி பதி வேடுகளில் பதிவு செய்து காத்திருப்பவர்களில் எத்தனை பேர்கள் ஏற்கனவே வேலையில் உள்ளனர் என்பதைப் பற்றிய ஆய்வு :

(3) தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பகங்களில் செல்லுபடிப் பதிவேட்டில் பதிவு செய்துள்ள மருத்துவ பொறியியல் பட்டதாரி களில் பணியில் அமர்த்தப்பட்டவர்கள் எண்ணிக்கை பற்றிய ஆய்வு :

(4) சேலம் உருக்காலை திட்டம், சேலம் பாரத் ஹெவி எலெக்ட்டிரிகல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி, ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ், உதகமண்டலம் ஆகிய இடங்களில் எக்ஸ் 49 வழங்குவது (இல்லையென்பதற்கான சான்றிதழ்) பற்றிய விரிவான சிறப்பு ஆய்வு.

(5) தமிழ்நாட்டின் வேலை வாய்ப்பகங்கள் மூலம் நிரப்பப்பட்ட காலியிடங்களின் கால அளவு எவ்வளவு என்பது பற்றிய மாதிரி ஆய்வு.

(6) எந்தெந்த காலியிடங்களுக்கு ''இல்லையென்பதற்கான சான்றிதழ்'' வழங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்டதற்கான காரணங்கள் : ஆகியவை குறித்த ஆய்வு :

வேலை வாய்ப்பகங்களின் பணியை கணக்கீட்டு பொறியைக் (கம்பியூட்டர்) கொண்டு செய்தல்.

8.5. சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களிலுள்ள 9 வேலை வாய்ப்பகங்களின் பணிகளைக் கணக்கீட்டுப் பொறி மூலம் செய்யும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், மனுதாரர்களின் விவரங்கள் கணக்கீட்டுப்



1983 எப்ரல் 11]

பொறி நாடாவில் பதிவு செய்யப்பட்டு அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையத்தில் சேகரித்து வைக்கப்பட்ட புள்ளி விவரத் தொகுப்பு கொண்ட கணக்கீட்டுப்பொறி நாடாக்களின் உதவியால் வேலை வாய்ப்பகங்களின் பணிகளைச் செய்ய திட்ட மிடப்பட்டுள்ளது. இப்பணியை சென்னை-17 தொழில் திருவாக வேலை வாய்ப்பு அலுவலகத்தில் முதற்கண் செயற்படுத்த கருதப்பட்டுள்ளது. இதுவரை மேற் கொள்ளப் பட்ட பணிகளின் முன்னேற்றம் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) இப் படிவங்களை பாகுபாடு செய்தபின், அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையம், தகவல் படிவத்தில் பிழைத்திருத்தங் கள் செய்யும் பொருட்டு பதிப்பித்தல் பட்டியல் (Edit list) வழங்கியது. தேவையான பிழைத்திருத்தங்கள் செய்யப்பட்டு அரசு புள்ளி விவரத் தொகுப்புப் பிரிவுக்கு அனுப்பப்பட்டன.

(ஆ) பதிப்பித்தல் பட்டியல்படி, பிழைத்திருத்தங்கள் செய்யப்பட்ட 25,995 மனுதாரர்களின் விவரங்கள் கொண்ட முடிவான பட்டியல் ஒன்றினை அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையம் வழங்கியுள்ளது. பிழைத்திருத்தங்கள் சரியாகச் செய்யப் பட்டுள்ளதா என்று அவை சரிபார்க்கப்பட்டு தேவையான நீக்கங்கள், மாற்றங்கள் செய்யப்பட்டு அப்பட்டியல் அரசு புள்ளிவிவரத் தொகுப்பு நிலையத்திற்கு அனுப்பப்பட்டது.

(இ) அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையம் கணக்கீட்டுப் பொறிநாடாவில் முடிவான பட்டியல் (Master List) தயாரிக் கும் பணியினை மேற்கொண்டுள்ளது. இப்பணி முடிந்ததும் மனுதாரர்களைத் தெரிந்தெடுக்கும் பணிகளுக்கும் இதர வேலை வாய்ப்பக பணிகளுக்கும் கணக்கீட்டுப் பொறி வாயிலாக முதற் கண் சோதனை முறையில் மேற்கொள்ளப்படும்.

8.6. வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டுதலும், வேலை வாய்ப்பு ஆலோசனை அளித்தலும் (Vocational Guidance and Employment Counseling)

தமிழ்நாட்டில் தருமபுரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் நீங்கலாகப் பிற மாவட்டங்களில் வாழ்க்கைத் தொழில் ஆலோ சனைப் பிரிவுகள் செயற்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள வேலை தேடுவோர்களுக்கு தொடர்ந்து தொழில் வேலைவாய்ப்பு, பயிற்சி பெறுவதற்கான வசதிகள், வேலை வாய்ப்பு குறித்து தகவல் தொழில் பழகு வசதிகள், குறித்த விவரங்களை அளிக்கிறது. மாணவர்கள் பதிவு செய்தவர்கள் பயனடையும் வகையில் வழிகாட்டுதல் தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்தப்படு கின்றன. மாணவர்கள் வேலை தேடுவோரின் பயனுக்காக வேலை

வாய்ப்பகங்களிலுள்ள வாழ்க்கைத் தொழில் ஆலோசனைப் பிரிவுகள் காலாண்டு தோறும் ஆலோசனை அறிக்கைகள் தயாரித்து, பள்ளிகளுக்கும், நூலகங்களுக்கும் அவற்றை அனுப்புகின்றன. வாழ்க்கைத் தொழில் ஆலோசனைப் பிரிவுகளில் நடைபெறும் பணிகள் விவரங்கள் இணைப்பு VI-இல் உள்ள விவர அட்டவணையில் 6-ம் பிரிவில்கொடுக்கப்பட்டுள்ளன.

சென்னையிலுள்ள வேலைவாய்ப்புப் பயிற்சித் துறை இயக்ககத்தின் மாநில வாழ்க்கை தொழில் ஆலோசனை பிரிவு 33 தொழிற்பயிற்சி நிலையங்களில் சுமார் 28,446 விண்ணப்பதாரர்களுக்கு திறனாய்வுத் தேர்வு (Aptitude test) நடத்தியது. தொழிற் பயிற்சி நிலையங்களில் பல்வேறு தொழில்களில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக இத்தேர்வு நடத்தப்பட்டது. அண்ணாமலை நகர் பல்கலைக்கழக வேலைவாய்ப்புத் தகவல் ஆலோசனைப் பிரிவு, நாகர்கோயில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் ஆகியவற்றால் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் வேலை வாய்ப்பு தொடர்பான பொருட்காட்சிகள் நடத்தப்பட்டன.

8.7. வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலகப் பிரிவு :

இப்பிரிவு பர்மா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு தகுந்த வேலை வாய்ப்பு, பயிற்சி வசதிகளைப் பெற்றுத் தருவதன் மூலம் அவர்களுக்கு உதவி செய்கிறது. இப்பிரிவில் மேற்கொள்ளப்படும் பணிகளின் விவரங்கள், இணைப்பு VI இல் உள்ள விவர அட்டவணையில் 7 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

8.8. 1959 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பகங்கள் (வேலை காலியிடங்களைக் கட்டாயமாகத் தெரிவித்தல்) சட்டத்தைச் செயற்படுத்தல்.

30—9—1982 அன்றைய நிலவரப்படி 13.172 நிறுவனங்கள் இச்சட்டத்தின் கீழ் வந்தன. 30—9—1981 ஆம் நாள்படி 12,853 நிறுவனங்கள் இச்சட்டத்தின் கீழ் இருந்தன. குறிப்பிட்ட காலங்களில் அறிவிக்கப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கையும் அந்நிறுவனங்களால் நிரப்பப்பட்ட இடங்களின் எண்ணிக்கையும் இணைப்பு VI இல் உள்ள விவர அட்டவணையில் 8 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

8.9. வேலைவாய்ப்பற்றோருக்கு உதவித் திட்டம் :

படித்த, வேலைவாய்ப்பில்லாதோர்களிடையே உள்ள அவல நிலையைப் போக்கும் பொருட்டு, வேலைவாய்ப்பற்றோர் உதவித் திட்டம் ஒன்றை அரசு உருவாக்கி இத்திட்டம் 1—7—1980 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள ஏற்பளிக்கப்பட்ட பின்வரும் 8 பிரிவுகளைச் சேர்ந்த வேலை நாடுவோர் அத்திட்டத்தின் கீழ் உதவிபெறத் தகுதியுடையவர்கள் ஆவார்.

1. அனைத்துப் படிப்புத் துறைகளிலும், பட்டதாரிகள், பட்ட மேற்படிப்பு பட்டதாரிகள்.
2. தகுதி வாய்ந்த இடைநிலைப் பள்ளி ஆசிரியர்கள்.
3. தகுதி வாய்ந்த உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள்.
4. தகுதி வாய்ந்த உடற்பயிற்சி கல்வி தொடக்கப்பள்ளி உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்.
5. தகுதி வாய்ந்த தமிழ், பிற மொழி ஆசிரியர்கள்.
6. தகுதி வாய்ந்த கைவினை ஆசிரியர்கள்.
7. பொறியியல் பட்டயச் சான்றிதழ் பெற்றவர்கள்.
8. பள்ளி இறுதி வகுப்புத் தேறிய அல்லது புதிய 10-வது வகுப்பு தேறிய அல்லது அதற்குச் சமமான கல்வித் தகுதியுடைய அல்லது பார்வை இழந்தோர்.

இத்திட்டத்தின் கீழ் 1980—81, 1981—82, 1982—83 (31—12—1982வரை) ஆம் நிதி ஆண்டுகளில் பயனடைந்தோரின் மொத்த எண்ணிக்கை அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உதவித் தொகை ஆகியவவை பற்றிய விவரங்கள் இணைப்பு IVல் உள்ள விவர அட்டவணையில் 9-ம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

8.10. ஆதி திராவிடர் பழங்குடியினருக்கான வேலைவாய்ப்பு உதவி.

(1) ஆதி திராவிடர், பழங்குடியினரை வேலையில் அமர்த்துவதில் வேலை வாய்ப்பகங்களின் பணிகளை ஒருங்கிணைக்க இவ்வியக்ககத்தில் ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மைய, மாநில அரசுப் பணிகளில் நிரப்பப்படாமல் உள்ள காலியிடங்களை நிரப்புவதற்கான சிறப்பு நடவடிக்கைகளை இப்பிரிவு மேற்கொள்கிறது. வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள, வேலையில் அமர்த்தப்பட்ட ஆதி திராவிடர், பழங்குடியினரின் எண்ணிக்கை விவரங்கள் இணைப்பு IV-ல் உள்ள விவர அட்டவணையின் 10 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

(2) பழங்குடியினருக்கு வாழ்க்கைத் தொழில் வழி காட்டுவதற்காகவும் பழங்குடியினரை அனுப்புவதற்குத் தகுந்த வேலைகளிலுள்ள காலியிடங்களைக் கண்டறியவும், பழங்குடியினருக்கு

கான தனி வாழ்க்கைத் தொழில் முறை வழி காட்டும் நிலையம் ஒன்று உதகமண்டலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவால் நடைபெறும் பணிகளின் விவரங்கள் இணைப்பு VI-ல் உள்ள விவர அட்டவணையின் 11 வது பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

8.11. மாவட்ட உழைப்பாற்றல் திட்ட வேலை வாய்ப்புக் குழுக்கள் :

தமிழக அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட உழைப் பாற்றல் திட்ட, வேலைவாய்ப்பு உற்பத்திக் குழுக்களை அமைப் பதற்கு அனுமதியளித்துள்ளது. உள்ளூரில் கிடைக்கும் வாய்ப் புக்களை அடிப்படையாகக் கொண்டு தனித்து இயங்கக் கூடிய பல்வேறு சுய வேலைவாய்ப்பு முயற்சிகளில், மாவட்டங்களில் வேலையற்று இருப்போரையும் போதிய வேலைவாய்ப்பு அற்று இருப்போரையும் வழிப்படுத்தும் ஓர் அமைப்பாக இந்த குழுக் கள் செயல்படும். சுய வேலைவாய்ப்புச் சாத்தியக் கூறுகள் சுய வேலைவாய்ப்பை மேற்கொள்ள விழைப்பவர்களைக் கண்டறிய பல குழுக்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. வேலையற்ற இளைஞர்களை, சுயவேலைவாய்ப்பு மூலம் பயனடைய தூண்டு வதற்காகவும், அவர்களுக்குத் தேவையான கடன் வசதிகளை பெற்றுத்தரவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8.12. வருங்காலத் திட்டங்கள் :

(1) புதுக்கோட்டை, தருமபுரி மாவட்டங்களின் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வேலைவாய்ப்பு ஆலோசனைப் பிரிவு களை ஏற்படுத்தல்.

இம்மாவட்டங்களைச் சேர்ந்த வேலை தேடுபவர்களுக்கு, வேலைவாய்ப்பு சம்பந்தப்பட்ட ஆலோசனைகள் வழங்குவதற் காக புதுக்கோட்டை, தருமபுரி மாவட்டங்களிலுள்ள வேலை வாய்ப்பகங்களில் வேலைவாய்ப்பு ஆலோசனைப் பிரிவுகளை ஏற் படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(2) கோயம்புத்தூரில் வட்டாரத் துணை இயக்குநர் அலு வலகத்தை ஏற்படுத்தல்.

வேலை தேடுவோருக்கு ஏற்படும் குறைகளை விரைவில் முடித்து வைக்கவும், களப்பிரிவுகளின் நிருவாகம், கட்டுப்பாடு, மேற்பார்வை, ஆகிய பணிகளைத் திறமையாக மேற்கொள் ளும் வகையிலும், 1983-84-ல் கோயம்புத்தூரில் வட்டாரத் துணை இயக்குநர் அலுவலகம் ஒன்றை ஏற்படுத்தக் கருதப்பட் டுள்ளது.



வேலை வாய்ப்பு அலுவலகங்களில் தயாரிக்கப்பட்ட தெரிந் தெடுக்கப்பட்ட பட்டியல்களில் முதுநிலை விண்ணப்பதாரர் களின் பெயர்கள் விடுபடாமலிருக்கும் நோக்கத்துடனும் வேலை வாய்ப்பளிக்கும் பல்வேறு நிறுவனங்களுக்கு தகுதியுடைய அனைத்து முதுநிலை விண்ணப்பதாரர்களின் பெயர்களும் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்து வதற்காகவும் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய் துள்ளவர்கள் பற்றிய தேவையான அனைத்து விவரங்கள் அடங் கிய சிறிய வடிவிலான அட்டைகளைத் தயாரித்து அவற்றை அலுவலரின் நேரடிப் பாதுகாப்பில் வைத்துக் கொள்ளக் கருதப் பட்டுள்ளது. இத்திட்டத்தை முதற்கண் ஆறு வேலை வாய்ப்பு அலுவலகங்களில் முன்மாதிரித் திட்டமாகப் பின்பற்றக் கருதப் பட்டுள்ளது.

[1983 ஏப்ரல் 11

## அத்தியாயம் 9.

### கைவினைஞர் பயிர்சி திட்டம்

### தொழிற் பயிற்சி நிலையங்கள.

9.1, 1982 ஆகஸ்டிலிருந்து எல்லாம் பயிற்சி வசதிகளும் பெற்ற தொழிற் பயிற்சி நிலையமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ள மக ளிருக்கான எஸ்.எம்.ஆர்.வி. அரசு துணி ஆலை நிறுவனம் உட்பட தமிழ்நாட்டில் 35 தொழில் பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. இத்தொழில் பயிற்சி நிலையங்களில் அனுமதிக் கப்பட்ட மொத்த மாணவர்கள் 13,588 ஆகும். 30 பொறியியல் பிரிவுகளிலும், 12 பொறியியல் அல்லாத பிரிவுகளிலும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 22 தொழில் பிரிவுகளின் பயிற்சிக் காலம் ஓராண்டாகும். 20 தொழில் பிரிவுகளின் பயிற்சிக் காலம் இரண்டாண்டாகும். மகளிருக்கென தனியாக மூன்று தொழில் பயிற்சி நிறுவனங்கள் ஒன்று சென்னையிலும் மற்றொன்று கடலூரி லும் ஒன்று நாகர்கோவிலிலும் இயங்கி வருகின்றன. எந்திரக் கம் மியர் (பொது மின் அணுவியல்) துறையில் பயிற்சி அளிப்பதற் காக தனித்தொழில் பயிற்சிப் பிரிவு ஒன்று அடையாறு மின்னணு வியல் கூடத்தில் இயங்கி வருகிறது. சாதி இட ஒதுக்கீடு விதி களைப் பின்பற்றி ஆண்டிற்கு ஒரு முறை தொழில் பயிற்சி நிலையங்களில் தகுதி அடிப்படையில் பயிற்சியாளர்கள் சேர்க் கப்படுகின்றனர்

9.2 பயிற்சி பெறுபவர்கள், பயிற்சி முடிந்த பின்னர் நல்ல வேலை வாய்ப்பு வசதிகளைப் பெறும் பொருட்டு, வேலை வாய்ப்பு குறைவாக உள்ள தொழில் பிரிவுகளை நீக்கி விட்டு வேலை வாய்ப்பு அதிகம் உள்ள தொழில் பிரிவுகளைப் புதிதாக அறிமுகப்படுத்துவதன் மூலம் தொழில் பயிற்சி நிலையங்களில் தொழில்களைப் பலதிறப்படுத்துதல் திட்டத்தை அரசு செயற் படுத்தி வருகிறது.

9.3. 1982–83 ஆம் ஆண்டு ஓசூர் தொழிற் பயிற்சி நிலை யத்தில் கருவிகள்—அச்சுத் தயாரிப்புத் தொழில் பிரிவும் கைக் கடிகாரம், சுவர் கடிகாரம் செய்பவர் தொழில் பிரிவும் ஏற்படுத் தப் பட்டுள்ளன. வார்ப்படத் தொழிற் பயிற்சிப் பிரிவுகள் இரண்டு கடலூர் தொழிற் பயிற்சி நிறுவனத்திலிருந்து இந்நிறு வனத்திற்கு மாற்றப்பட்டது. விருதுநகர், மேட்டூர் அணை, திண்டுக்கல் ஆகிய இடங்களில் உள்ள தொழில் பயிற்சி நிலை யங்களில் கம்மியர் (மோட்டார் வண்டி) தொழில் பிரிவும் தொடங்கப்பட்டுள்ளது.



1983 ஏப்ரல் 11]

9.4. இதுவரை நடைபெற்ற 18 அனைத்திந்திய திறனாய்வுப் போட்டிகளில், தமிழ்நாடு முதன்மை இடத்தை எட்டு முறைகள் பெற்றுள்ளது. இதற்கென குடியரசுத் தலைவரின் சுழற் கேட யத்தையும் எட்டு முறை பெற்றுள்ளது.

9.5. தொழில் பழகுவோரின் பயிற்சித் திட்டத்தைத் திறம் படச் செயல்படுத்த திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங்களில் தொழிற்பயிற்சி சம்பந்தப்பட்ட பயிற்சி மையங்கள் இரண்டு ஏற்படுத்தப்பட்டன. இவற்றையும் சேர்த்து தமிழ்நாட்டில் இயங்கிவரும் தொழில் பயிற்சி சம்பந்தப்பட்ட மையங்களின் எண்ணிக்கை தற்பொழுது 8 ஆக உயர்ந்துள்ளது. தெற்கு வட்டாரத்தில் உள்ள அச்சக நிர்வாகப் பிரிவுகளின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, மதுரை, தொழிற்பயிற்சி நிலையத் தில் அச்சுத் துறை சம்பந்தப்பட்ட அடிப்படைப் பயிற்சி நிலை யம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

9.6. இத்திட்டத்தின்கீழ் 30–9–1981, 30–9–1982 அன் றுள்ளபடி தொழில் பழகுவோரின் விவரப் பட்டியல் கீழ்வரு மாறு :—

| | பொதுத் துறை. | தனியார் துறை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொழில் பழகுவோர் எண்ணிக்கை. | | |
| (அ) 30–9–1981 அன்றுள்ளவாறு .. | 3,622 | 7,381 | 11,003 |
| (ஆ) 30–9–1982 அன்றுள்ளவாறு | 3,662 | 7,555 | 11,217 |
| | தேர்வு செய்யப்பட்ட தொழில் பழகுவோரின் எண்ணிக்கை. | | |
| (அ) 30–9–1981 அன்றுள்ளவாறு .. | 2,685 | 7,485 | 10,170 |
| (ஆ) 30–9–1982 அன்றுள்ளவாறு .. | 2,885 | 7,482 | 10,367 |

தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு மாலை நேர வகுப்புகள்.

9.7. தொழிற் சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குத் தொழில் துறை அறிவினை மேம்படுத்தி அதன் மூலம் அவர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள பகுதிகளான கிண்டி, வட சென்னை, அம்பத்தூர், மதுரை முதலிய இடங்களில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நிதி உதவி பெறும் தொழில் பள்ளிகள் :

9.8. வேலை வாய்ப்பு.—பயிற்சித் துறை இயக்குநரால் பிறப்பிக்கப்பட்ட தொழில் பயிற்சி பள்ளிகள் ஒழுங்குமுறை விதிக்கோவையின் கீழ் ஏற்பு அளிக்கப்பட்ட 92 தொழிற் பள்ளிகள் தற்சமயம் தமிழ்நாட்டில் உள்ளன. இப்பள்ளிகள் தச்சுத் தொழில், கருமார் தொழில், பொருத்துநர் தொழில் பற்ற வைக்கும் தொழில், பூ வேலை, பின்னல் வேலை, துணி வெட்டுதல், தைத்தல் முதலியவற்றில் பயிற்சி அளிக்கின்றன. இத்தொழில்களின் பயிற்சிக் காலம் ஓராண்டு முதல் மூன்று ஆண்டுகளாகும். அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 6,066. தற்போது 5,450 மாணவர்கள் இப்பள்ளிகளில் பயிற்சி பெறுகிறார்கள். அங்கீகரிக்கப்பட்ட எல்லா தனியார் நிறுவனங்களிலும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு எல்லாத் தொழில்களுக்கும் பொதுப்பாடத் திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டு பொதுத் தேர்வும் நடத்தப்பட்டு வருகிறது. தொழில் பள்ளிக்கான ஒழுங்குமுறை விதிக்கோவையின் விதித்துறைகளின்படி இப்பள்ளிகள் மானியம் பெறத் தகுதியுடையவையாகும்.

சிறப்புப் பயிற்சித் திட்டம் :

9.9 வேலை இழந்த பொற்கொல்லர்கள், மாதிரி வடிவமைப்புத் தயாரிப்பாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் முதலியோர் தங்களுக்குப் பொருத்தமான வேலையைப் பெறுவதற்கான சில தொழில் நுட்பப் பயிற்சிகளை அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். சேலம், திருச்சி, மதுரை, பேட்டை ஆகிய இடங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1982 ஆம் ஆண்டு 80 பயிற்சியாளர்கள் இவ்வகுப்பில் அனுமதிக்கப்பட்டனர். 1982 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் 59 பேர் தேர்வு எழுதினர். அவர்களில் அனைவரும் தேர்ச்சி பெற்றனர்.



9.10. வாழ்க்கைத் தொழில் உயர் பயிற்சித் திட்டம் : தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் தொழில் துறை அறிவினை மேம்படுத்த, அம்பத்தூர், தொழிற்பயிற்சி நிலையத்தில் வாழ்க்கைத் தொழில் உயர் பயிற்சித் திட்டம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அம்பத்தூர் தொழில் பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட தொழில்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன :

(1) இந்தியத் தர நிர்ணயம் பொறியியல் வரைபடங்களைக் கற்றல், (2) உலோகப்பற்ற வைப்பில் சிறப்புப் பயிற்சி, (3) கருவி அச்சு தயாரித்தல், (4) கம்மியர் பராமரிப்பு, (5) மின்சாரம் —பராமரிப்பு, (6) பொறியியல் தொழில் நுட்பவியல் அறிமுகம்.

9.11. 1981–82 ஆம் ஆண்டு இத்திட்டம் கோயம்புத்தூரில் உள்ள தொழில் பயிற்சி நிலையத்திற்கும் நீட்டிக்கப்பட்டு பின் வரும் தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன.

(1) மின் பராமரிப்பு.

(2) கம்மியர் பராமரிப்பு.

அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பணியாளர்களுக்கான பயிற்சித் திட்டம்.

9.12. இத்திட்டத்தின் நோக்கமும் குறிக்கோளும் கல்வி கற்பிப்பதில் பயிற்றுநர்களுக்கு தொழில் நுட்ப உத்தி குறித்தும் ஒலி, ஒளி கருவிகளை உபயோகிப்பது குறித்தும், நிர்வாகம் குறித்தும் தனிப் பயிற்சி அளிப்பதேயாகும். இப்பயிற்சித் திட்டம் 1980 ஆம் ஆண்டு சனவரியிலிருந்து அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இளநிலைப் பயிற்சி அலுவலர்களுக்கும் உதவி பயிற்சி அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சித் திட்டத்தில் நவீன தொழிற்சாலைகளைப் பார்வையிடுவதும் அடங்கும். இதுவரை 143 தொழிற் பயிற்சியாளர்கள் பயிற்சியளிக்கப்பட்டு உள்ளனர்.

நினைவுகூர் பயிற்சித் திட்டம் :

9.13. பல்வேறு பயிற்சித் திட்டங்களைச் செவ்விய வகையில் செயல்படுத்துவதற்கும் தொடர்புத் திறனையும் செயல் நோக்குக் கூறுகள் கூருணர்வுத் திறம், தொகுதி ஆற்றல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும் தொழிற் பயிற்சி நிலையங்களின் முதல்வர்களைத் தகுதியானவர்களாக்கும் நோக்குடன் தேசிய உற்

[1983 ஏப்ரல் 11

பத்தி திறன் குழுவின் மூலம் 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில், மதுரையிலுள்ள தொழில் பயிற்சி நிலையத்தில் நினைவு கூர் பயிற்சி ஒன்று நடத்தப்பட்டது. இதில் 15 தொழிற் பயிற்சி நிலையங்களின் முதல்வர்கள் கலந்து கொண்டனர்.

பாடத்திட்ட வளர்ச்சிப் பிரிவு.

9.14. தொழிற் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதற்காக அவ்வப்போது தொழில் நுட்பவியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு ஏற்ப கற்பிக்கும் முறையில் ஏற்படக் கூடிய மாற்றங்களைச் செய்யவும், வணிகத் தொழில் பயிற்சி நடைமுறை நூல், பாடப் புத்தகங்கள், தகவல் குறிப்புத் தாள்கள் நிலவரை படங்கள் ( Blue Print ) தயாரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக—வேலை வாய்ப்புப் பயிற்சித் துறை இயக்குநர் அலுவலகத்தில் பாடத் திட்ட வளர்ச்சிப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பொது :

9.15. 1983–84 ல் கோயம்புத்தூர், மதுரை, வட சென்னை தொழிற் பயிற்சி நிலையங்களில் மூன்றாம் மாற்றுமுறைப் பயிற்சித் திட்டத்தை (Shift ) ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

9.16. 1983–84-ல். மதுரையிலுள்ள தொழில் பயிற்சி நிலையத்தில், வாழ்க்கைத் தொழில் உயர் பயிற்சித் திட்டத்தைத் தொடங்குவது பற்றி செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

9.17. தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டத்தைப் பயனுள்ள வகையில் செயல் படுத்துவதற்காக 1983–84-ல் ஒசூரில் புதிய தொழிற் பயிற்சி சம்பந்தப்பட்ட மையம் ஒன்று ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.



1983 ஏப்ரல் 11]

பாகம் 3

அத்தியாயம் 10

57 ஆம் கோரிக்கையின் கீழ் சில துணைத் திட்டங்கள்.

கைவினைஞர்கள் பயிற்சித் திட்டம், தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்காக 1983–84 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் பகுதி 1 திட்டத்தின் கீழ் கோரிக்கை 57-ன் கீழ் உள்ள துணைத் திட்டங்கள் பல்வகை மூலதனச் செலவு ஏ. 495—ஏனைய சமூக சமுதாய நலப்பணிகள் குறித்து மூலதனச் செலவு ஏனைய சமூக சமுதாய நலப்பணிகள்—ஏபி—வேலை வாய்ப்பு என்னும் கணக்குத் தலைப்பில் பின்வரும் துணைத் திட்டப் பணிகளை நிறைவேற்ற ரூ. 10.42 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

10.1. தொழிற் பயிற்சி நிலையங்களில் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் :

இம்மாநிலத்திலுள்ள 25 தொழிற் பயிற்சி நிலையங்களில், தெரிந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு, நிலையான குடியிருப்புகள் உள்ளன. எஞ்சிய தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு, இத்திட்டத்திற்காக 1983–84 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,000 அடையாள நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

10.2. தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர்விடுதிக் கட்டிடங்கள் கட்டுதல் :

இம் மாநிலத்திலுள்ள 24 தொழில் பயிற்சி நிலையங்களில் நிலையான மாணவர் விடுதிக் கட்டிடங்கள் உள்ளன. ஈரோடு தொழிற் பயிற்சி நிலையத்தில் மாணவர் விடுதி கட்டும் பணி 1982–83-ல் தொடங்கப்பட்டுள்ளது. இதில் செய்யப்படாமல் விடுபட்டுப் போனப் பணிகளை முடிப்பதற்காக 1983–84 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

10.3. அரக்கோணத்திலும், கடலூரிலும் உள்ள மகளிர் தொழிற் பயிற்சி நிலையங்களில் இயந்திரங்கள் கருவிகளுக்கும் கட்டிடங்களுக்கும் வகைசெய்தல்.

அரக்கோணத்திலும், கடலூரிலும் மகளிர் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு ஆன கட்டிடங்கள் கட்டுவதற்காக 1983–84 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,000 அடையாள நிதி ஒதுக்கமும், இயந்திரங்கள், கருவிகள் வாங்குவதற்காக ரூ. 2½ இலட்சம் நிதி ஒதுக்கமும் செய்யப்பட்டுள்ளது.

[1983 ஏப்ரல் 11

**10.4.** தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம் :

சென்னை (வடக்கு) தொழிற் பயிற்சி நிலையத்தில் உள்ள தொழில் தொடர்பான அடிப்படைப் பயிற்சி வகுப்புக்களை நடத்துவதற்கு வகுப்பறைகள் கட்டும் பணி 1982–83-ல் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், கட்டிடம், இயந்திரங்கள், கருவிகள் ஆகியவை வாங்குவதற்காக ரூ. 1,000 அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**10.5.** தொழில்களைப் பல்திறப்படுத்தல் :

செங்கற்பட்டு, கிண்டி, தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழில்களைப் பல்திறப்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகச் சில இயந்திரங்கள், கருவிகள் வாங்கப்பட்டன.

இத்திட்டத்தின் கீழ் இந்தத் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு மேலும் தேவையான இயந்திரங்கள், கருவிகள் வாங்குவதற்கு 1983–84 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 2.06 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**10.6.** சாதனங்கள் வாங்குதல் :

பல்வேறு தொழில்களுக்காக வரையறுத்த கருவிகள், சாதனங்கள் குறித்த தரப்பட்டியலை மைய அரசு திருத்தியமைத்ததனால் கம்மியர் (மோட்டார் வாகனங்கள்) இயந்திரங்களை இயக்குபவர் ஆகிய தொழில் பயிற்சிப் பிரிவுகளுக்காக கூடுதல் கருவிகளும் சாதனங்களும் வாங்க வேண்டியுள்ளது. இதற்காக 1983–84 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இயந்திரங்கள் மற்றும் சாதனம் வாங்க ரூபாய் 1.11 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**10.7.** தொழிற் பயிற்சி நிலையங்களை மேம்படுத்தல் :

1982–83 ஆம் ஆண்டில், ஓசூர், திண்டுக்கல் முதலிய இடங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள கருவிகள்-அச்சுத் தயாரிப்பு, கைக்கடியாரங்கள்-சுவர் கடிகாரம், கம்மியர் (மோட்டார் வண்டிகள்) தொழில் பிரிவுகளுக்குத் தேவையான சில இயந்திரங்களும் சாதனங்களும் வாங்கப்பட்டுள்ளன.

மேற்சொன்ன தொழிற் பயிற்சி நிலையங்களுக்கும் தேவையான, பாக்கியுள்ள இயந்திரங்களும், சாதனங்களும் வாங்குவதற்காக 1983–84 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 12,000 ஒதுக்கப்பட்டுள்ளது.



1983 ஏப்ரல் 11]

**10.8.** கம்மியர் தொழில் (பொது மின்னணுவியல்) பயிற்சி:

அடையாறு பயிற்சிப் பிரிவுக்கு கருவிகள், சாதனங்கள், வாங்குவதற்காக 1983–84-ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 5,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**10.9.** தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் நவீன வசதிகள் செய்து கொடுத்தல்.

வேலூர், தொழிற் பயிற்சி நிலையத்தில் தோல் பதனிடும் தொழில்களுக்கும், அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் வாழ்க்கைத் தொழில் மேற் பயிற்சித் திட்டத்திற்கும், கருவிகள், சாதனங்கள் வாங்குவதற்காக 1983–84-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 1,00,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1981–82-ஆம் ஆண்டிலிருந்து வாழ்க்கைத் தொழில் மேற் பயிற்சித் திட்டம் கோயம்புத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்திலும் செயல்படுத்தப்பட்டது. இதற்காக இயந்திரங்கள், கருவிகள் வாங்குவதற்காக 1983–84-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 1,00,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**10.10.** கிராமப் பகுதி இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பிற்கான பயிற்சித் திட்டம்.

ஏனைய பலநிறுவனங்களுடன் 27 தொழிற் பயிற்சி நிலையங்களும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் முனைந்துள்ளன.

1982–83-இல், துயிற்கூட வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள், பணிமனைகள் ஆகியவற்றைக் கட்டும் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளன.

துயிற்கூட வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள், பணிமனைகள் ஆகியவற்றைக் கட்டி முடிப்பதற்காக 1983–84-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூபாய் 47,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**10.11.** எஸ். எம். ஆர். வி. அரசு துணித் தொழில் நிலையத்தை முழு அளவிலான மகளிர் தொழிற் பயிற்சி நிலையமாக தரம் உயர்த்தல்.

இந்நிலையத்தில் புதிதாகத் தொடங்கப்பட்ட தொழிற் பயிற்சி பிரிவுகளுக்காக 1982–83-ல் சில இயந்திரங்களும் சாதனங்களும் வாங்கப்பட்டுள்ளன.

எஞ்சியுள்ள இயந்திரங்கள், சாதனங்கள் ஆகியவற்றை வாங்குவதற்காக 1983–84-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 99,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பாகம் —4.

## அத்தியாயம் 11.

### 11.1. வெளி நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்.

தமிழக அரசு நிறுவனமான வெளி நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் 1956-ஆம் ஆண்டில் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 1978-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ந் தேதி அன்று நிறுவப்பட்டது.

11.2. இந்நிறுவனம் ரூபாய் 50 இலட்சத்தை ஏற்பளிக்கப்பட்ட மூலதனமாகக் கொண்டுள்ளது. இத் தொகையில் இதுவரை ரூ. 10 இலட்சம் பங்குத் தொகையாக வழங்கப் பெற்றுள்ளது. இந்நிறுவனத்தின் நோக்கங்கள் வருமாறு :—

(1) திறமை பெற்ற, ஓரளவு திறமை பெற்றவர்களுக்கு வெளி நாடுகளில் வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவது.

(2) வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்களால் சேமித்து அனுப்பி வைக்கப்பெறும் தொகையினை முதலீடு செய்வது.

(3) இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் கூட்டுத் தொழில் நிறுவனங்கள் நிறுவுவது.

(4) இந்தியப் பொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்துவது.

11.3. தற்போது வெளி நாடுகளில் தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகளைக் கண்டறிவது பற்றிய பணியை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. வெளிநாடுகளில் வேலை செய்ய விரும்பும் தொழிலாளர்களை இந்த நிறுவனம் பதிவு செய்து கொள்கிறது. 31—12—1982 அன்றுள்ளபடி இந்நிறுவனத்தில் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை 10,411 ஆகும். இந்நிறுவனம், ஐக்கிய அரசு எமிரைட்ஸ், ஈராக், லிபியா, தெற்கு ஏமன் ஆகிய நாடுகளுக்கு இதுவரையில் 603 தொழிலாளர்களை அனுப்பியுள்ளது. அவர்கள் மூலமாக இந்தியாவிற்கு ஆண்டு ஒன்றுக்கு 1.25 கோடி அந்நியச் செலாவணி கிடைக்கிறது.



பாகம் 5.

## இணைப்பு—I.

### தொழிலாளர்—தொழிலதிபர் நல்லுறவு.

(1) தொழில் வாரியாக வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த விவரங்கள்.

| தொடர் எண்ணும் தொழிலும். | வேலை நிறுத்தங்கள். கதவடைப்புகளின் எண்ணிக்கை. | | ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | | இழந்த உழைப்பு நாட்கள். | |
|---|---|---|---|---|---|---|
| | 1981 | 1982 | 1981 | 1982 | 1981 | 1982 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| (அ) துணி நெசவு | 133 | 80 | 1,14,392 | 23,237 | 27,99,352 | 5,86,166 |
| (ஆ) பொறியியல் .. | 86 | 52 | 16,178 | 10,429 | 5,01,817 | 6,43,526 |
| (இ) தோல் பதனிடும் தொழிற் சாலைகள். | 6 | 3 | 909 | 2,650 | 13,247 | 3,900 |
| (ஈ) புகையிலை, பீடித் தொழில். | 1 | — | 605 | .. | 37,520 | .. |
| (உ) மலைத் தோட்டங்கள். | 13 | 6 | 17,358 | 4,887 | 2,70,818 | 1,57,190 |
| (ஊ) ஏனையவை .. | 49 | 46 | 36,732 | 25,474 | 5,01,267 | 4,15,196 |
| மொத்தம் .. | 288 | 187 | 1,86,174 | 66,677 | 41,24,021 | 18,05,978 |

| (1) | தீர்ப்புக்கு அனுப்பப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. 1981 (2) | 1982 (3) | தீர்ப்புகள் வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. 1981 (4) | 1982 (5) |
|---|---|---|---|---|
| (2) தீர்ப்பு வழங்குதல். | | | | |
| (அ) சென்னை தொழில் நடுவர் மன்றம். | 87 | 32 | 91 | 36 |
| (ஆ) தொழிலாளர் நீதிமன்றங்கள் .. | 943 | 862 | 909 | 909 |
| (இ) 10(2)-ஆம் பிரிவின் கீழ் அனுப்பப்பட்டவை. | 33 | 29 | .. | .. |
| (ஈ) நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டவை. | 5 | 1 | 3 | 3 |
| (உ) தொழிலாளர் நீதி மன்றங்கள் முன்பு 33-சி(2)-ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்களில் முடிவு செய்யப்பட்டவை. | 1,694 | 2,556 | .. | .. |
| (3) வசூல் .. .. .. | .. | .. | .. | .. |

1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 33-சி(1) ஆம் பிரிவின்கீழ் தொழிலாளர்களுக்கு சேரவேண்டிய பாக்கித் தொகைகளை வசூலிப்பதற்காக அரசு ஆணை பிறப்பித்த விவரங்கள்.

| வசூல் செய்ய ஆணையிட்டவை. 1981 (1) | 1982 (2) | தொகை ரூபாய். 1981 (3) | 1982 (4) |
|---|---|---|---|
| 205 | 143 | 26,61,048.31 | 13,76,996.20 |



## இணைப்பு II.

பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் உள்ள நிறுவனங்கள், தொழிலாளர்கள், வசூலிக்கப்பட்ட உரிமத் தொகை குறித்த விவரங்கள்.

| (1) | நிறுவனங்களின் எண்ணிக்கை. (2) | பணிக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. (3) | வசூலிக்கப்பட்ட உரிமப் பதிவுக் கட்டணம். (ரூபாய்) (4) |
|---|---|---|---|
| (1) தொழிற்சங்கம் அமையப்பெற்ற தொழில்கள்— | | | |
| (அ) 1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்— | | | |
| 1981 .. .. .. | 10,444 | 6,40,850 | 53,31,106 |
| 1982 .. .. .. | 11,465 | 7,01,450 | 64,59,281 |
| (ஆ) 1951-ஆம் ஆண்டு மலைத் தோட்ட தொழிலாளர் சட்டம்— | | | |
| 1981 .. .. .. | 434 | 91,390 | ஏதுமில்லை. |
| 1982 .. .. .. | 451 | 92,300 | ஷை |
| (இ) 1961-ம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்— | | | |
| 1981 .. .. .. | 1,626 | 58,035 | 84,877.77 |
| 1982 .. .. .. | 1,658 | 58,511 | 81,140.23 |

| (1) | நிறுவனங்களின் எண்ணிக்கை. (2) | பணிக்கமர்த்தப் பட்டதொழிலாளர் களின் எண்ணிக்கை. (3) | வசூலிக்கப்பட்ட உரிமப் பதிவுக் கட்டணம். (4) |
|---|---|---|---|
| | | | (ரூபாய்) |
| தொழிற்சங்கம் அமையப் பெறாத தொழில்கள்— | | | |
| (அ) 1966 ஆம் ஆண்டு பீடி. சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமை) சட்டம்— | | | |
| 1981 .. .. .. | 1,332 | 12,361 | 42,617.00 |
| 1982 .. .. .. | 1,173 | 10,979 | 20,951.00 |
| | | (வீட்டுத் தொழிலாளர்கள் 2,00,000) | |
| (ஆ) 1947-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம்— | | | |
| 1981 .. .. .. | 2,78,123 | 2,64,492 | ஏதுமில்லை. |
| 1982 .. .. .. | 2,72,363 | 2,66,182 | டிை |
| (இ) 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம்— | | | |
| 1981 .. .. .. | 27,987 | 71,146 | 3,09,298·00 |
| 1982 .. .. .. | 26,349 | 66,966 | 2,87,622·95 |



## இணைப்பு III.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ், தொழிலாளர் நல ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வுகள் குறித்த விவரங்கள்.

| வரிசை எண்ணும் சட்டத்தின் பெயரும். (1) | முறையான ஆய்வு. (2) | விடுமுறைகள் ஆய்வு. (3) | தனி ஆய்வு. (4) | திடீர் ஆய்வு. (5) | இரவு நேர ஆய்வு. (6) | சரி பார்ப்பு ஆய்வு. (7) |
|---|---|---|---|---|---|---|
| 1. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம். | 20,052 | 932 | 1,154 | 432 | 68 | 1,001 |
| 2. 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம். | 4,06,570 | 45,391 | 6,618 | 11,554 | 16,897 | .. |
| 3 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம். | 51,958 | 1,330 | 724 | 1,134 | 365 | .. |
| 4. 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம். | 3,796 | 36 | 233 | 192 | .. | .. |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 5. 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர் மற்றும் ஏனைய செய்தித்தாள் பணியாளர்கள் (பணி நிலைமையும் பல்வகை ஒதுக்கீடுகளும்) சட்டம். | 133 | .. | .. | .. | .. | .. |
| 6. 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) சட்டம். | 871 | .. | .. | .. | .. | .. |
| 7. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை விடுமுறைகள்) சட்டம். | 1,91,978 | 2,787 | 1,455 | 1,873 | .. | .. |
| 8. 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம். | 1,668 | 136 | 73 | 49 | .. | .. |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 9. 1936-ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம். | 60,089 | 202 | 271 | 339 | .. | .. |
| 10. 1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம். | 1,16,362 | 330 | 374 | 815 | .. | .. |
| 11. 1966-ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமை) சட்டம். | 2,410 | 133 | 335 | 41 | .. | .. |
| 12. 1938-ஆம் ஆண்டு சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் சட்டம். | 487 | 29 | 8 | 3 | .. | .. |
| 12. 1961-ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம். | 7.821 | .. | .. | .. | .. | .. |

5.

# இணைப்பு –IV.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள், முடிக்கப்பட்ட வழக்குகள் குறித்த விவரங்கள்.

| வரிசை எண்ணும் சட்டத்தின் பெயரும். | தொடக்கத்தில் முடிவு பெறாமல் இருந்தவை. | இந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்டவை | முடிக்கப்பட்டவை | தண்டனை அளிக்கப்பட்டவை | விடுதலை பெறப்பட்டவை. | தண்டிக்கப்பட்டவை. | திரும்ப பெறப்பட்டவை. | முடிவு றாமல் உள்ளவை | பெறப் அபராதத் தொகை ரூபாய். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1. 1948—ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம். | 1,906 | 4,669 | 3,955 | 3,789 | 25 | 18 | 123 | 2,620 | 5,52,128 |
| 2. 1947—ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம். | 5,932 | 18,679 | 18,729 | 18,565 | 25 | 87 | 52 | 5,882 | 8,22,897 |
| 3. 1958—ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம். | 1,441 | 3,195 | 2,963 | 2,913 | 9 | 20 | 21 | 1,673 | 1,78,857 |
| 1981—ஆம் ஆண்டு மோட்டார் போக்கு வரத்து தொழிலாளர் சட்டம். | 194 | 457 | 482 | 473 | 6 | 1 | 2 | 169 | 58,810 |
| 1970—ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) சட்டம். | 3 | 53 | 22 | 22 | .. | .. | .. | 34 | 5,190 |
| 1958—ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம். | 1,760 | 5,209 | 4,908 | 4,845 | 15 | 30 | 18 | 2,061 | 1,66,680 |



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7. 1981—ஆம் ஆண்டு மலைத் தோட்ட தொழிலாளர் சட்டம். | 47 | 121 | 103 | 91 | 11 | .. | 1 | 65 | 19,309 |
| 8. 1936—ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம். | 753 | 1,451 | 1,387 | 1,369 | 4 | 10 | 4 | 817 | 62,533 |
| 9. 1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம். | 791 | 2,626 | 2,362 | 2,318 | 16 | 17 | 11 | 1,055 | 1,22,430 |
| 10. 1961—ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம். | 1 | 9 | 5 | 4 | .. | .. | 1 | 5 | 310 |
| 11. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம். | 1 | 2 | 2 | 2 | .. | .. | .. | 1 | 125 |
| 12. 1966-ஆம் ஆண்டு பீடி சுருட்டு தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம். | 59 | 318 | 204 | 201 | 2 | .. | 1 | 173 | 23,665 |
| 13. 1976-ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம். | 2 | 8 | 4 | 4 | .. | .. | .. | 5 | 470 |
| 14. 1938-ஆம் ஆண்டு சிறுவாகளை வேலைக்கமர்த்துதல் சட்டம். | .. | 1 | 1 | 1 | .. | .. | .. | .. | 300 |

# இணைப்பு V.

**(அ) பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் துறை அலுவலர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.**

| தொடர் எண்ணும் விவரங்களும். | தமிழ்நாடு உணவகங்கள் சட்டம். | | தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள்* சட்டம். | | பணிக்கொடை வழங்குதல் ** சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1981. | 1982. | 1981. | 1982. | 1981. | 1982. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| (1) தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகள். | 22 | 38 | 146 | 124 | 173 | 350 |
| (2) இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை. | 128 | 70 | 336 | 208 | 1,236 | 880 |
| 3) மொத்த வழக்குகளின் எண்ணிக்கை. | 150 | 108 | 482 | 332 | 1,409 | 1,230 |
| 4) நடப்பாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 112 | 74 | 358 | 172 | 1,059 | 915 |
| 5) ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை | 38 | 34 | 124 | 160 | 350 | 315 |

*தொழிலாளர் நல அலுவலர்கள், தொழிலாளர் நல உதவி ஆணையர் (இணக்கம்) ஆகியாரால் முடிவு செய்யப்பட்டவை.

**தொழிலாளர் நலத் துணை ஆணையர்களின் அலுவலகங்களில் உள்ள தொழிலாளர் நல உதவி ஆணையர்களால் முடிவு செய்யப்பட்டவை.



**(ஆ) தொழிலாளர் நலத் துணை ஆணையர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.**

| தொடர் எண். விவரங்கள். | தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம். | | ஊதியம் வழங்குதல் சட்டம். | | பணிக்கொடை வழங்குதல் சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1981. | 1982. | 1981. | 1982. | 1981. | 1982. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1) ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 339 | 254 | 216 | 181 | 163 | 14[illegible] |
| 2) இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை. | 874 | 927 | 758 | 671 | 327 | 14 |
| 3) மொத்தம் .. .. .. | 1,213 | 1,181 | 974 | 852 | 490 | 28 |
| 4) இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 959 | 882 | 793 | 684 | 344 | 20 |
| 5) ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 254 | 299 | 181 | 168 | 146 | [illegible] |

## இணைப்பு VI.

தேசிய வேலை வாய்ப்புப் பணியின் கீழ் சாதனை குறித்த விவரங்கள்.

| வேலை வாய்ப்புகள் விவரங்கள். | 1–4–1981 முதல் 31–12–1981 வரை. | 1–4–1982 முதல் 31–12–1982 வரை. | 1–1–1982 முதல் 31–12–1982 வரை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (அ) தமிழ் நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 3,92,604 | 4,46,354 | 5,50,720 |
| ஆ) பணியிலமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 53,339 | 54,402 | 72,578 |
| இ) அறிவிக்கப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கை. | 78,215 | 77,710 | 99,292 |
| (ஈ) வேலைவாய்ப்பு அலுவலகங்களைப் பயன்படுத்திக்கொண்ட வேலையளிப்போரின் எண்ணிக்கை. | 23,588 | 18,019 | 24,687 |
| (உ) டிசம்பர் 31 ஆம் நாள் நிலவரப்படி வேலை வாய்ப்பகங்களில் செல்லுபடி பதிவேடுகளிலுள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை. | 12,60,991 | 14,15,918 | 14,15,918 |



2. உடல் ஊனமுற்றோர்களுக்கான தனி வேலை வாய்ப்பு அலுவலகம்—

1–4–1981 முதல் 31–12–1981 வரை.

| | பார்வையற்றோர். | காதுகேளாதோர். | கைகால் ஊனமுற்றோர். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (அ) பதிவு செய்தவர்கள் .. .. .. | 494 | 551 | 5,597 | 6,642 |
| (ஆ) பணியிலமர்த்தப்பட்டவர்கள் .. .. | 96 | 160 | 2,405 | 2,661 |
| (இ) செல்லுபடிப் பதிவேட்டில் உள்ளவர்கள். | 1,289 | 1,114 | 13,682 | 16,085 |

1–4–1982 முதல் 31–12–1982 வரை.

| | பார்வையற்றோர். | காது கேளாதோர். | கை, கால் ஊனமுற்றோர். | மொத்தம். |
|---|---|---|---|---|
| | (6) | (7) | (8) | (9) |
| (அ) பதிவு செய்தவர்கள் .. .. .. | 263 | 230 | 3,152 | 3,645 |
| (ஆ) பணியிலமர்த்தப்பட்டவர்கள் .. .. | 54 | 100 | 1,528 | 1,682 |
| (இ) செல்லுபடிப் பதிவேட்டில் உள்ளவர்கள். | 1,490 | 1,203 | 14,948 | 17,641 |

| | 1–1–1982 முதல் 31–12–1982 வரை. | | | |
|---|---|---|---|---|
| | பார்வை யற்றோர். | காது கேளா தோர். | கை, கால் ஊனமுற் றோர். | மொத்தம். |
| | (10) | (11) | (12) | (13) |
| (அ) பதிவு செய்தவர்கள் .. .. .. | 348 | 297 | 4,305 | 4,950 |
| (ஆ) பணியிலமர்த்தப்பட்டவர்கள் .. .. | 55 | 135 | 2,077 | 2,267 |
| (இ) செல்லுபடிப் பதிவேட்டில் உள்ளவர்கள். | 1,490 | 1,203 | 15,108 | 17,801 |

3. தொழில் நிருவாக வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை—

| (1) | 1–4–1981 முதல் 31–12–1981 வரை. (2) | 1–4–1982 முதல் 31–12–1982 வரை. (3) | 1–1–1982 முதல் 31–12–1982 வரை. (4) |
|---|---|---|---|
| (அ) பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை .. | 8,828 | 9,329 | 11,075 |
| (ஆ) வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 1,564 | 2,571 | 3,418 |
| (இ) டிசம்பர் இறுதியில் வேலைவாய்ப்பகச் செல்லுபடி பதிவேட்டில் உள்ளவர் களின் எண்ணிக்கை. | 21,339 | 24,907 | 24,907 |



• அண்ணாமலை நகர், சென்னை, மதுரையில் உள்ள பல்கலைக் கழக வேலை வாயப்புத் தகவல் ஆலோசனைப் பிரிவுகள்.

| (1) | 1-4-1981 முதல் 31-12-1981 வரை. (2) | 1-4-1982 முதல் 31-12-1982 வரை. (3) | 1-1-1982 முதல் 31-12-1982 வரை. (4) |
|---|---|---|---|
| **1. பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் ஆலோசனைப் பிரிவு, சென்னை.** | | | |
| (அ) பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை .. | 118 | 123 | 154 |
| (ஆ) வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 7 | 21 | 23 |
| (இ) டிசம்பர் இறுதியில் வேலை வாய்ப்பகச் செல்லுபடி பதிவேட்டில் உள்ளவர் களின் எண்ணிக்கை. | 282 | 318 | 318 |
| **2. பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் ஆலோசனைப் பிரிவு, மதுரை.** | | | |
| (அ) பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை .. | 1,510 | 1,402 | 1,716 |
| (ஆ) வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 152 | 122 | 252 |
| (இ) டிசம்பர் இறுதியில் வேலை வாய்ப்பகச் செல்லுபடி பதிவேட்டில் உள்ளவர் களின் எண்ணிக்கை. | 3,544 | 3,715 | 3,715 |

3. பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல்—ஆலோசனைப் பிரிவு, அண்ணாமலை நகர்.

| | | | |
|---|---|---|---|
| (அ) பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை .. | 157 | 304 | 342 |
| (ஆ) வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 20 | 39 | 99 |
| (இ) டிசம்பர் இறுதியில் வேலை வாய்ப்பகச் செல்லுபடி பதிவேட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை. | 457 | 467 | 467 |

5. வேலைவாய்ப்பு நிலவரத் தகவல் திட்டம்.

| தொடர் எண்ணும், காலாண்டும். | நிறுவனங்களின் எண்ணிக்கை. | | நிறுவனங்களிலுள்ள மொத்த வேலைவாய்ப்பு. | |
|---|---|---|---|---|
| | பொதுத்துறை. | தனியார் துறை. | பொதுத்துறை. | தனியார் துறை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (1) 31-3-1982 .. | 9,263 | 12,112 | 12,63,041 | 7,01,589 |
| (2) 30-6-1982 .. | 9,355 | 12,215 | 12,60,447 | 7,04,537 |



6. வாழ்க்கைத் தொழில் ஆலோசனை.

| | 1-4-1981 முதல் 31-12-1981 வரை. | 1-4-1982 முதல் 31-12-1982 வரை. | 1-1-1982 முதல் 31-12-1982 வரை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (1) நடத்தப்பட்ட கூட்டு விவாதங்களின் எண்ணிக்கை. | 2,544 | 2,246 | 3,406 |
| (2) கூட்டு விவாதங்களில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை. | 40,941 | 62,544 | 86,102 |
| (3) பதிவு வழிமுறைகளைப் பயன்படுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை. | 16,325 | 13,230 | 17,731 |
| (4) பணியில் அமர்த்தப்பட்ட தொழில் பழகும் பயிற்சியில் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 866 | 1,285 | 1,354 |
| (5) பள்ளிகள், கல்லூரிகளில் நடத்தப்பட்ட தொழிற்பயிற்சி உரைகளின் எண்ணிக்கை. | 216 | 202 | 348 |
| (6) தொழில் பழகுவதற்காக படிப்பதவித் தொகைக்காக (மேற்படிப்புக்காக) அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 9,170 | 10,086 | 14,794 |

7. வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலகப் பிரிவு (ஸ்ரீலங்காவிலிருந்தும் பர்மாவிலிருந்தும் தாயகம் திரும்பியவர்கள்.)

| (1) | 1–4–1981 முதல் 31–12–1981 வரை யிலான கால அளவிற்கு. ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள். (2) | பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள். (3) | 1–4–1982 முதல் 31–12–1982 வரை யிலான கால அளவிற்கு. ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள். (4) | பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள். (5) | 1–1–1982 முதல் 31–12–1982 வரை யிலான கால அளவிற்கு. ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள். (6) | பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள். (7) |
|---|---|---|---|---|---|---|
| (1) பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை. | 3,343 | 1,215 | 4,503 | 687 | 5,850 | 901 |
| (2) பணியில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 608 | 428 | 714 | 401 | 933 | 542 |
| (3) செல்லுபடி பதிவேட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை. | 12,786 (31–12–81 ஆம் நாள் நிலவரப்படி) | 2,317 (31–12–81 ஆம் நாள் நிலவரப்படி) | 13,846 (31–12–82 ஆம் நாள் நிலவரப்படி) | 2,163 (31–12–82 ஆம் நாள் நிலவரப்படி) | 13,846 (31–12–82 ஆம் நாள் நிலவரப்படி) | 2,163 (31–12–82 ஆம் நாள் நிலவரப்படி) |



8. 1959ஆம் ஆண்டு வேலைவாய்ப்பகங்கள் (வேலைக் காலி இடங்களைக் கட்டாயமாக அறிவித்தல்) சட்டம் :

| காலம். (1) | அறிவிக்கப் பட்ட பதவி காலி இடம். (2) | நிரப்பப் பட்ட பதவி காலி இடம். (3) |
|---|---|---|
| (அ) 1–4–1981 ஆம் நாள் முதல் 31–12–1981 ஆம் நாள்வரை | 74,523 | 48,860 |
| (ஆ) 1–4–1982 ஆம் நாள் முதல் 30–9–1982 ஆம் நாள் வரை | 49,532 | 31,064 |
| (இ) 1–1–1982 ஆம் நாள் முதல் 30–9–1982 ஆம் நாள் வரை. | 65,912 | 44,717 |

9. வேலை வாய்ப்பற்றோர் உதவித் தொகை வழங்கு திட்டம் :—

| | |
|---|---|
| (1) 1—7—1980 ஆம் நாள் முதல் 31—12—1982 ஆம் நாள் வரை விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 40,211 |
| (2) தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு சரிபார்த்து உதவித் தொகை அளிப்பதற்காக வட்டாட்சியருக்கு அனுப்பப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 24,603 |
| (3) வட்டாட்சியரால் அனுமதி அளிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை. | 6,166 |
| (4) 1982 ஆம் ஆண்டு டிசம்பர் வரை விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்ட பார்வையிழந்தவர்களின் எண்ணிக்கை. | 226 |
| (5) பார்வையிழந்த தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு, சரிபார்த்து உதவித் தொகை அளிப்பதற்காக மாநிலத்திலுள்ள வட்டாட்சியர்களுக்கு அனுப்பப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 226 |
| (6) வட்டாட்சியர்களால் உதவித்தொகை அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை .. | 37 |

1980–81, 1981–82, 1982–83 ஆம் ஆண்டுகளுக்கான செலவுகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| | செலவு. ரூ. |
|---|---|
| 1980–81 .. .. .. .. .. | 22,04,000.00 |
| 1981–82 .. .. .. .. .. .. .. .. | 75,29,428.00 |
| 1982–83 (1982 ஆம் ஆண்டு செப்டம்பர் வரை) .. .. .. | 28,07,272.00 |

10. ஆதிதிராவிடர் பழங்குடியினர்களுக்கு வேலை வாய்ப்பு உதவி :

| | 1–4–1982 முதல் 31–12–1982 வரை. ஆதி திராவிடர். | பழங் குடியினர். |
|---|---|---|
| (அ) பதிவு செய்து கொண்டவர்கள் .. .. .. .. | 61,118 | 1,754 |
| (ஆ) பணியில் அமர்த்தப்பட்டவர்கள் .. .. .. | 8,477 | 293 |
| (இ) பதிவேட்டில் உள்ளவர்கள் (31—12—1982 ஆம் நாள் நிலவரப்படி). | 223,033 | 5,543 |



11. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலுள்ள பழங்குடியினருக்கான தனி வாழ்க்கைத் தொழில் ஆலோசனை நிலையம், உதகமண்டலம் :—

| | 6–3–1980 முதல் 31–12–1982 வரை. |
|---|---|
| 1) பழங்குடியினர் வாழுகின்ற தொலை தூரத்திலுள்ள இடங்களுக்கு இப்பிரிவு சென்று வந்தபொழுது பதிவு செய்து கொண்ட பழங்குடியினரின் எண்ணிக்கை. | 1,136 |
| 2) பதிவு செய்துகொண்ட காலத்தில் வழிகாட்டப்பட்ட பழங்குடியினரின் எண்ணிக்கை. | 403 |
| (3) வாழ்க்கைத் தொழில் பற்றியும், தொழிற் பயிற்சி வசதி குறித்தும் தனிப்பட்ட வகையில் தகவல் பெற்ற பழங்குடியினரின் எண்ணிக்கை. | 2,198 |
| (4) ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள்/மாணவர் இல்லங்களில் பழங்குடியினருக்காக நடத்தப்பட்ட தொழிற் பயிற்சி உரைகளின் எண்ணிக்கை. | 57 |
| (5) வாழ்க்கைத் தொழில் தனி ஆலோசனை நிலையத்தின் மூலம் பணியில் அமர்த்தப் பட்ட பழங்குடியினரின் எண்ணிக்கை— | |
| (அ) பணியில் .. .. .. .. .. .. .. | 85 |
| (ஆ) தொழில் பழகுவோர் பயிற்சியில் .. .. .. .. .. | 67 |
| (இ) பயிற்சித் திட்டத்தில் .. .. .. .. .. .. | 10 |
| (ஈ) சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் .. .. .. .. .. | 11 |

5 ஏப் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

[ISSUED 30—11—1983

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

TUESDAY 12th APRIL 1983

Volume CXCVIII (No. 4)

© GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009.

Price Rs. 2.75 Paise]

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
5 ஏப் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600
318

பொருளடக்கம்


| | |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள். | 501—517 |
| 2. உரிமைப் பிரச்சினை— தமிழ்நாடு வழக்கறிஞர்கள் மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது குறித்து .. .. | 518 |
| 3. கவன ஈர்ப்பு— | |
| (1) தஞ்சை மாவட்டம், கூத்தாநல்லூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக் கட்டிடத்தின் சுவர்கள் பிளந்தும், கூரைகள் சரிந்தும் மிக ஆபத்தான நிலையில் உள்ளதால் பெற்றோர் மாணவர்களிடையே தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து .. | 419—520 |
| (2) கடலூரில் கழிவு நீரை அகற்றுவதற்கான இயந்திரம் பொருத்தப்பட்ட வாகனம் பழுதுபட்டிருப்பதால் கழிவு நீர் தேங்கி, கொசுக்கள் உற்பத்தியாகி, கொடிய வியாதிகள் வரக்கூடிய அபாய நிலை ஏற்பட்டிருப்பது குறித்து .. .. | 521—522 |
| 4. அரசின் தீர்மானம்— ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம் .. .. .. .. | 523—604 |
| 5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. | 605—606 |


143180
V211.35 N84
D2 C 127—23 · 1

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

*செவ்வாய்க்கிழமை, 1983 ஏப்ரல் 12.*

*பங்குனி 29, துந்துபி, திருவள்ளுவராண்டு-2014.*

*சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.*

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Contingent Staff.*

* 273 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU P. R. THOMAS): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that no recommendation has been made by the Tamil Nadu Third Pay Commission regarding the regularisation of the services of the Contingent Staff in Aided High Schools, and bringing them into the time scale of pay; and

(*b*) if so, the action proposed to be taken for regularising their services?

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.*

*(இ) அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1—4—1979 அன்று ஐந்து ஆண்டுகள் பணிமுடித்த சிற்றேவலர்களது பணியினை முறைப்படுத்தி 1—4—1981-ல் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

### *Pasumpon M.T.M. Government High School, Kamuthi.*

* 274 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU P. R. THOMAS): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Teaching and Non-Teaching Staff of Pasumpon M.T.M. Government High School, Kamuthi, Ramanathapuram district, have made an appeal to sanction the facility to enjoy Festival Advance, Provident Fund Loan, etc; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) ஆம். தற்போது இப்பள்ளியில் பணியாளர்களுக்குப் பண்டிகை முன்பணம், பொது சேமிப்பு நிதியில் இருந்து முன்பணம் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.

## புலவர் பட்டம்

* 275 வினா.—திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பள்ளிகளில் கடைநிலை ஊழியராகப் பணியாற்றுவோர் புலவர் பட்டம் பெற்றாலும் ஆசிரியராகப் பதவி உயர்வு பெற, தற்சமயம் விதிமுறை களில் இடம் இல்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவர்கள் அப்படி பதவி உயர்வு பெற, அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) விதிகளில் இடமுண்டு.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கடைநிலை ஊழியர்களாகப் பணியாற்று இறவர்கள் புலவர் பட்டம் அல்லது வேறு உயர் கல்வித் தகுதி பெற்றால், அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பதற்கான பணி மூப்புப் பட்டியலில் அவர்களுடைய பெயர்களை இணைப்பதில்லை என்ற கருத்து இப்போது இருக்கிறது. தகுதி படைத்தவர்களை அந்தப் பட்டியலில் சேர்க்க விதிகளில் இடம் உண்டு என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பட்டியலில் அவர்களுடைய பெயர்களைச் சேர்க்க தகுந்த அறிவுரையை வழங்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பதவி உயர்வு என்று வருகிறபோது, அந்தப் பதவிக்குக் கீழே இருக்கின்றவர்களுக்குத்தான் முதலிடம் தருவார்கள். அதற்குக் கீழே உள்ளவர்களுக்குத் தருவதற்கில்லை. முதல் நிலை தமிழாசிரியர் களுக்குக் கீழே உள்ள பதவிக்குக் கீழே உள்ளவர்கள் இவர்கள். அந்த அடிப்படையிலே பார்க்கும்போது, அவர்கள் இல்லையென்றால் இவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்.



## உடற்பயிற்சி ஆசிரியர்களுக்குத் தேர்வுநிலை.

* 276 வினா.—திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அனைத்து ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது போல், உடற் கல்வி ஆசிரியர்களுக்கு தேர்வு நிலை வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், எல்லாத் தர உடற்கல்வி ஆசிரியர்களுக்கும் தேர்வு நிலை வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) 20—2—1971 நாளிட்ட அரசாணை நிலை எண் 288-ல் இடைநிலை ஆசிரியர்கள், பி.டி. ஆசிரியர்கள், முதல்நிலைத் தமிழாசிரியர்கள், இரண்டாம்நிலைத் தமிழாசிரியர் கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் ஆகியவர்களுக்கு 10 சதவிகித அடிப்படையில் தேர்வுநிலை 1—1—1971 முதல் வழங்கப்பட்டன. இந்த ஆணைகளின்படி முதல்நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு தேர்வுநிலை வழங்கப்படவில்லை. முதல்நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு 15—4—1975-ம் நாளிட்ட கல்வித் துறை அரசாணை நிலை எண் 583-ல் வெளியிட்ட ஆணைகளின்படி 1—4—1975 முதல் 10 ஆண்டு பணிக்கால அடிப்படையில் தேர்வுநிலை வழங்கப்பட்டது. முதல்நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும் 1—1—1971 முதல் 10 சதவிகிதம் அடிப்படையில் (1—9—1980 முதல் பணப்பயன்) தேர்வுநிலை வழங்கி கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை அரசாணை நிலை எண் 549, நாள் 29—3—1982-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பத்து சதவீத அடிப்படையில் 1—1—1971 முதல் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு தேர்வு நிலை வழங்கியதுபற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பட்டதாரி ஆசிரியர்களுக்கும் ஏனையவர்களுக்கும் பத்தாண்டுக் கால பணி அடிப்படையில் 1973 முதல் தேர்வு நிலை வழங்குவதைப்போல உடற்கல்வி ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டதா ? அப்படி இல்லை என்றால், பத்தாண்டுக் கால பணியின் அடிப்படையில் அவர்களுக்கும் கொடுக்க தகுந்த நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா ?

உடற்கல்வி ஆசிரியர்களுக்குச் சிறப்பு நிலை வழங்கப்பட்டிருக்கிறதா ? அப்படி இல்லை என்றால், அதை வழங்க அரசு முயலுமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒரே நோக்கில் நான்கு துணைக் கேள்விகளா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நான் விளக்கமாகப் பதில் சொல்லி யிருக்கிறேன். 1—4—1975 முதல் பத்து ஆண்டு பணிக்கால அடிப்படையில் தேர்வு நிலை வழங்கப்பட்டது. முதல் நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும்

[1983 ஏப்ரல் 12

1—1—1971 முதல் பத்து சதவீத அடிப்படையில் தேர்வு நிலை வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று கூறியிருக்கிறேன். சிறப்பு நிலைபற்றி விவரம் இல்லை.

### பி.டி. பட்டம் பெற்ற பட்டதாரிகள்

* 277 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பி.டி. பட்டம் பெற்ற பட்டதாரிகள். முதுகலைப் பட்டதாரிகளில் எத்தனை பேர் மாநிலம் முழுவதும் வேலையில்லாமல் இருக்கிறார்கள்?

(இ) 1977 முதல் 1980 வரை ஆண்டுதோறும் எத்தனை பி.டி. பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்கப்பட்டது?

(உ) அவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட அரசுப் பள்ளிகள் எத்தனை? தனியார் பள்ளிகள் எத்தனை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) தமிழ் நாட்டில் உள்ள எல்லா வேலை வாய்ப்பகங்களிலும் 30—11—1982 அன்றைய நிலவரப்படி பதிவு செய்து காத்திருக்கும் பி.டி. பட்டம் பெற்றவர்கள் மற்றும் முதுகலைப் பட்டதாரிகளின் எண்ணிக்கை 14,793 ஆகும்.

(இ) வேலை வாய்ப்புத்துறையின் புள்ளி விவரங்களின்படி 1977-ல் 280; 1978-ல் 620; 1979-ல் 2,738; 1980-ல் 2,787 ஆக மொத்தம் 6,425 பி.டி. பட்டதாரிகளுக்கு வேலை தரப்பட்டது. ஆண்டுதோறும் புதிதாக கூடுதலாக ஏற்படுத்தப்பட்ட பணியிடங்களும் ஓய்வு பெறுதல் முதலிய காரணங்களால் காலி விழுந்த பணியிடங்களும் இவற்றில் அடங்கும்.

(உ) அந்த நான்கு ஆண்டுகளிலும் சேர்த்து அவ்வாறு பி.டி. பட்டதாரிகள் வேலை வாய்ப்புப் பெற்ற அரசுப் பள்ளிகள் எண்ணிக்கை 648; தனியார் பள்ளிகள் எண்ணிக்கை 767 ஆகும்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மேல்நிலைக் கல்வியின் காரணமாக பல பி.டி. ஆசிரியர்களுக்கு வேலை கொடுத்திருப்பதற்காக நன்றி தெரிவிக்கும் நேரத்தில் எட்டாம் வகுப்புகளுக்கும் பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்து. கல்வியின் தரத்தை உயர்த்தும் முயற்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஈடுபடுவார்களா? எட்டாம் வகுப்புக்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதைப்பற்றி நாம் இன்னும் எந்த விதமான முடிவும் எடுக்கவில்லை.



1983 ஏப்ரல் 12]

திரு. க. மீனாட்சிசுந்தரம்: 14,793 முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் வேலை இல்லாமல் இருந்ததாகவும், அதிலே 6,425 பேருக்கு வேலை கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே மேலும் எட்டாயிரம் பேர் வேலை இல்லாமல் இருக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. தற்போது ஆசிரியர்-மாணவர் விகிதம் எந்த விகிதத்தில் பின்பற்றப்படுகிறது? இந்த விகிதத்தைப் பின்பற்றுவதால்தான் ஆசிரியர்களுக்கு வேலை இல்லாமல் இருக்கிறதா? கல்வியின் தரத்தை உயர்த்தவும், ஆசிரியர்களிடையே நிலவும் வேலையில்லாத நிலையைப் போக்கவும் ஆசிரியர்-மாணவர் விகிதத்தைக் குறைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போது அதிகமான அளவிற்கு ஆசிரியர்களை நியமிக்காததற்குக் காரணம் நம்முடைய நிதிப் பற்றாக்குறைதான்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தன்னுடைய இடத்திலே அமராமல் உறுப்பினர்கள் அமரும் இடத்திலே அமர்ந்திருக்கிறார்கள். அதற்கு ஏதாவது தனியான காரணம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: பேசத் துவங்கினால் அங்கேயிருந்து பேச முடியாது. அவருடைய இடத்திற்கு வந்துவிடுவது நல்லது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: பட்டம் பெற்று வேலையில்லாமல் இருப்பவர்களில் பட்டதாரி ஆசிரியர்கள் எத்தனை பேர், முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் எத்தனை பேர்? இப்போது அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விவரப்படி. பலருக்கும் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்று தெரிகிறது. உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில். விஞ்ஞானம், கணிதம், சரித்திரம் என்ற மூன்று பணியிடங்கள் இருக்கின்றன. ஆனால் நம்முடைய கல்வித் துறை இரண்டு பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்களைத்தான் அனுமதிக்கிறது. மேலும் ஒருவரை அனுமதிப்பதில்லை. இந்தக் குறையை நிவர்த்தி செய்து கொடுக்க ஆணையைத் திருத்தி அமைத்தால் போதும். இதனால் வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கும் வேலை கிடைக்கும். இந்தக் கருத்தை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இரண்டு ஆசிரியர்களைப் போட வேண்டும் என்ற அடிப்படையிலே நிபந்தனை விதித்து அறிவுரை தருவதற்குக் காரணம், போதுமான அளவிற்கு ஆசிரியர்களைப் போட முடியாத நிலைக்குக் காரணம், நிதி வசதி இல்லாததுதான். வேறு ஒன்றுமல்ல. அது மட்டு

மல்லாமல், படித்த ஆசிரியர்களுக்கெல்லாம் வேலை தர வேண்டும் என்றால், முடியாது. அப்படிச் செய்தால், ஆசிரியர்கள் பணிக்குத்தான் படிப்பார்கள், வேறு படிப்புக்குப் போகமாட்டார்கள்.

(முற்பகல் 9-40)

**திரு. செ. முத்துசாமி:** கல்வியின் தரத்தைப் பொறுத்த அளவில், எத்தனை மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் சொல்லித் தரமுடியும் என்பதை கல்வித் துறை நிபுணர்கள் மிக நல்ல முறையிலே கணக்கிட்டுத்தான், 'ஆசிரியர்-மாணவர்கள்' விகிதத்தை இந்த அரசும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கான ஆணைகளையும் வெளியிட்டிருக்கின்றார்கள். ஆனால் அந்த 'ஆசிரியர்-மாணவர்கள்' விகிதத்திற்கு மேல் ஏராளமான மாணவர்கள் ஒரு வகுப்பிலே இருக்கின்ற காரணத்தினால். கல்வித் தரம் கெட்டுவிடுகிறது என்பது நமக்குத் தெரிந்ததே. ஒரு பக்கத்திலே ஆசிரியர்களைத் தயாரித்து வேலை இல்லாது வைத்துக் கொண்டிருப்பதும், இன்னொரு பக்கத்திலே கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு, மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்தும் பொருளாதாரத்தைச் சொல்லி ஆசிரியர்களை நியமிக்காமல் இருக்கக்கூடிய சூழ்நிலையும் இருக்கிறது. கல்வித் தரம் உயரவும், வேலையில்லாத ஆசிரியர்களுக்கு வேலை தரவும் பொருளாதாரத்தைக் கணக்காகச் சொல்லாமல் ஒரு ஜனநாயக அரசிலே கல்வியின் தரத்தை உயர்த்த ஆசிரியர்கள் நியமனம் செய்வதற்காக இந்த 'Pupil-Teacher Ratio' ஐ முழுமையாக அமுல்படுத்துவதற்கு உத்தேசம் உண்டா? அதை மறுபரிசீலனை செய்யுமா? இதுவரையில் நிதியில்லை. இனிமேலாவது ஒதுக்குவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** நாம் ஆசிரியர்களை, அதிகமாக நியமிக்கிறோம் என்றால், அவர்களுக்குச் சம்பளம் தந்தாக வேண்டும். சம்பளம் தர வேண்டுமென்று சொன்னால், நாம் நிதிவசதியைப்பற்றிக் கவலைப்படாமல் எந்த முடிவும் எடுப்பதற்கில்லை. ஆகவே இப்போது இருக்கின்ற வசதிகளுக்கு ஏற்ப ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு அதிகமாகப் புதிய ஆசிரியர்கள் பணியிடங்கள் ஒதுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு ஒதுக்கியிருக்கிறோம். கல்வியை எல்லோருக்கும் புகட்ட வேண்டும், எல்லோரும் படிக்க வேண்டும் என்ற ஒரு சமுதாய நோக்கோடுதான், கடந்த ஒன்பது ஆண்டுக்காலமாக நாம் எடுத்த முடிவுகளின் காரணமாக இந்த சிரமம் ஏற்பட்டிருக்கிறது. இந்த சிரமத்திற்காக இந்த முடிவை நிறைவேற்றாமல் இருக்க முடியாது. காரணம் நம்முடைய மக்கள் எல்லோரும் படிக்க வேண்டுமென்று நினைக்கிறோம். அதே நேரத்திலே இருக்கின்ற வசதிகளுக்கு ஏற்ப ஆசிரியர்களைப் போட வேண்டியவர்களாக இருக்கிறோம். அதனாலே வருகின்ற சிரமம்தான் இது.



**திரு. பா. ரா. தாமஸ்:** இன்று மாநிலத்திலே பல நூற்றுக்கணக்கான உயர் நிலைப் பள்ளிகளுக்கு ஏற்பு அளிக்கப்பட்டும், நிதி வசதியில்லாததால், தலைமை ஆசிரியர்கள் இல்லாது, போதனை ஆசிரியர்கள் இல்லாது, மாணவர்களை அரசுத் தேர்வுகளுக்கு அனுப்பிக்கொண்டிருக்கின்றார்கள். அதற்கு அனுமதித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையை மாற்றினால், பல நூற்றுக்கணக்கான பட்டதாரி ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அத்தகைய நிலைமைகளை உருவாக்க கல்வி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முழுமையாகச் சொல்லவில்லை. பேற்பாதியைப் பார்த்து வருகிறார்கள். இரண்டாவது பேராவிலே இருந்து கதையை ஆரம்பிக்கின்றார்கள். முதல் சேப்டரிலே ஆரம்பித்து சொல்லியிருக்க வேண்டும். மைனாரிட்டி வகுப்பினர், அரசாங்கத்தினுடைய அனுமதி கேட்காமலேயே பள்ளிகள் ஆரம்பிக்கலாம். அப்படி அரசியல் சட்டத்திலே ஒரு உரிமையைத் தந்திருப்பதால், அவர்கள் அப்படி ஆரம்பித்துவிடுகின்றார்கள். இன்றைக்கு நினைத்தால்கூட, அவர்கள் ஆயிரம் பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்கலாம். அந்த ஆயிரம் பள்ளிக்கூடங்களுக்கு ஆசிரியர்கள் போட வேண்டுமென்று சொன்னால், எந்த அரசாங்கம் வந்தாலும் முடியாது. இந்த சிரமத்தைத்தான் நாம் இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறோம். வெளியிலேயும் சொல்லிக்கொண்டு வருகிறோம். அதைப் பற்றி அனைவரும் சிந்தித்தாக வேண்டும். ஒரு அரசாங்கத்தை திவாலா ஆக்கக்கூடிய ஒரு சக்தி உருவாகிக்கொண்டிருக்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ்:** கல்வி அமைச்சர் அவர்களுடைய கருத்தை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஒரே ஒரு கருத்து என்னவென்றால், ஒரேயொரு கேள்வியைக் கேட்க விரும்புவது. எந்தெந்தப் பள்ளிகள் பல ஆண்டுக்காலமாக இருக்கின்றனவோ, அந்தப் பள்ளிகளில் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் இல்லாது இருந்தால், அந்தப் பள்ளிகளுக்காவது ஒரு சில இடங்களை முன்னுரிமை என்ற அடிப்படையிலே கொடுத்து ஆதரிக்கக்கூடிய வகையிலே, தலைமையாசிரியர் இடமாவது கொடுத்து, அனுதாபமான ஒரு அணுகுமுறையை இப்போது பின்பற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அப்படி இருந்த 43 பள்ளிக் கூடங்களில், எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் இருந்த போஸ்ட்களைப் பகிர்ந்து கூடுமானவரைக்கும் நாம் முன்னுரிமை தந்து கொடுத்திருக்கிறோம். அந்தப் பிரச்சினையை முடித்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 ஏப்ரல் 12

## ஆசிரியர்களுக்கு பணிப் பாதுகாப்பு

***278 வினா.—திரு. செ. முத்துசாமி (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறையும்போது அவைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கொடுக்கப் பட்டுள்ளதைப் போல், தனியார் ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பணிப் பாதுகாப்பு கொடுக்கப்படுவதில்லை என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ) அரசு இதனைப் பரிசீலித்து, ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஆசிரியப் பணியிடங்களை நிர்ணயிக்கப் பின்பற்றப்பட்டுவரும் தற்போதைய முறையில் எந்தவித மாற்றமும் செய்யத் தேவையில்லை என முடிவெடுத்துள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாணவர்களின் எண்ணிக்கை குறைவின் காரணமாக வேலையிழப்புக்கு ஆளாகின்ற ஆசிரியர்களை வேறு பள்ளிகளிலே, தனியார் பள்ளிகளிலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கும்போது, சில பகுதிகளிலே அவர்களை அனுப்புகின்றபோது, இந்தக் குறிப்பிட்ட ஆசிரியர்கள் தேவையில்லை என்று தனியார் பள்ளி நிர்வாகிகள் மறுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் மறுக்கின்றதற்கு வழிவகை இல்லாத வகையிலே சட்டத்திலே மாறுபாடுகளைச் செய்து, அரசு அனுப்புகின்ற அவர்களையே அவர்கள் எடுத்தாக வேண்டும் என்ற வகையிலே ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** சில பள்ளிக்கூடங்களிலே நாம் ஆட்களை அனுப்பும்போது, அவர்களைத்தான் நியமிக்க வேண்டும் என்று வற்புறுத்த முடியாது. மைனாரிட்டி பள்ளிகளை அப்படி வற்புறுத்த முடியாது. மற்ற பள்ளிகளிலே ஏறத்தாழ எடுத்துக்கொள்கிறார்கள். இந்தப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் இருக்கின்றார்கள் என்ற அளவிற்கு என்னிடத்தில் எந்தவிதமான புகார்களும் வரவில்லை. ஆனாலும் அவர்களுக்குப் பாதுகாப்பு தருகின்ற இந்த விதியின் பிரகாரம் அவர்களுக்கு ஏதாவது ஒரு இடத்தில் நிச்சயமாக வேலை கிடைக்கும்.



1983 ஏப்ரல் 12]

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தும் என்னுடைய கருத்தும் ஒட்டியதாக இருக்கிறது. அதாவது முதலாவது கல்லூரிகளிலே பணியாற்றிய ஆசிரியர்கள் பேராசிரியர்கள் 'டிப்ளாய்மெண்ட்' என்ற முறையிலே கல்லூரிகளிலிருந்து மாற்றப்பட்டிருக்கின்றார்கள். பி.யூ.சி. வகுப்பு அகற்றப்பட்டபோது, அப்படி இருந்தது. அந்த முறையிலே உயர் நிலைப் பள்ளியிலே இருந்து நாங்கள் இந்த விண்ணப்பத்தை அரசுக்குக் கொடுத்து, அரசும் அதற்கு அனுசரணையாக ஆணை கொடுத்து ஏதாவது ஒரு உயர்நிலைப் பள்ளியிலே ஆசிரியர்கள் நீக்கப்படுகின்ற நிலைமை ஏற்பட்டு, அவர்களை 'டிப்ளாய்' செய்து மாற்றும்போது, இவர்களை நியமிக்க வேண்டும் என்று விதி வைத்திருக்கிறோம். அதே முறையிலே நடுநிலைப் பள்ளிக்கும் தொடக்கப் பள்ளிக்கும் விதி இருக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். அந்த முறையிலே மாணவர்களுடைய எண்ணிக்கை குறைவினாலோ, அந்த நிர்வாகத் தினருடைய செயலாகவோ ஒரு ஆசிரியருக்குப் பணியிழப்பு வருகின்ற சூழ்நிலை உருவானால், அந்தப் பணியிடங்களிலிருந்து ஆசிரியர்களை மாற்றும்போது, ஏற்கெனவே அனுமதித்திருக்கின்ற பெர்மனன்ட் போஸ்ட்டுகள் என்ற முறையிலே அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அப்படி பிரச்சினை இருக்கும் என்றால், அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. செ. முத்துசாமி:** இந்தப் பிரச்சினை எப்படி எழுந்தது என்று சொன்னால், டைரக்டர் அவர்கள் ஒரு புரோசீடிங்ஸ் போட்டார்கள். தமிழ் நாடு ரெகக்னைஸ்ட் பிரைவேட் ஸ்கூல்ஸ் ரெகுலேஷன் ஆக்ட் என்று ஒரு சப்ஜெக்ட்டிலே போட்டு உயர்நிலைப் பள்ளிகள், செகண்டரி ஸ்கூல்ஸ் என்று அவர்கள் அதிலே குறிப்பிட்டு, அந்தப் பள்ளிகளிலே மாணவர்கள் வருகை காரணமாக ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டால், இன்னொரு பள்ளிக்கு அவர்கள் மாற்றப்படுகின்றவரை, அவர்களைத் தொடர்ந்து நீக்கி வைக்கவேண்டும் என்று இல்லாமல் அதே பள்ளியிலே இருக்கும்வரை அரசு சம்பளம் கொடுக்கும் என்றும் அந்த மாறுதல் ஏற்பாடு செய்யும்போது அவர்கள் செல்வார்கள் என்றும் இந்த புரோசீடிங்சில் சொல்லியிருக்கின்றார்கள். அந்தக் குறிப்பு ஆரம்பப் பள்ளி. நடுநிலைப் பள்ளி, செகண்டரிப் பள்ளி எல்லா வற்றிற்கும் சேர்த்து குறிப்பிடப்பட்டதுதான். ஆனால் கீழே இருந்த வாசகத்திலே 'செகண்டரி ஸ்கூல்ஸ்' என்று போட்டதால், இவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஆரம்பப் பள்ளிகளிலும் நடுநிலைப்

பள்ளிகளிலும், மாணவர்கள் எண்ணிக்கை குறையும்போது, இன்னொரு பள்ளிக்கு அவர்கள் திடீரென்று வெளியேற்றப்பட்டு விடுகின்றார்கள். அவர்கள் சம்பளம் இல்லாமல் தெருவிலே நிற்கிறார்கள். இன்னொரு பள்ளிக்கு அவர்களை மாற்றும்வரை அந்த இடைக் காலத்திலே அவர்கள் சம்பளம் இல்லாது பாதிக்கப் படுகிறார்கள். இது ஆரம்பப் பள்ளிகளிலும் நடுநிலைப் பள்ளிகளிலும் மட்டும்தான் நீடிக்கிறது. அதைத் தயவுசெய்து மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உயர்நிலைப் பள்ளிக்கும், கல்லூரிக்கும் இருப்பதுபோல், ஆரம்பப் பள்ளிகளிலும், நடுநிலைப் பள்ளிகளிலும் ஒரு நடைமுறையை உண்டாக்குவார்களா என்பதையும், அதை அரசு பரிசீலித்து செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி என்று வருகின்றபோது, இது 1-வது வகுப்பிலே இருந்து ஆரம்பிக்கிறது. அதிலே புதிய மாணவர்களைச் சேர்ப்பது, இரண்டாவதில் புதிய மாணவர் களைச் சேர்ப்பது என்பதில் இருக்கின்றது. இந்த அளவில் மாணவர்களுடைய எண்ணிக்கையை நாம் அதிகரிக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அந்த முயற்சிகள் நடுநிலைப் பள்ளியிலே, ஆரம்பப் பள்ளியிலே நடக்கின்றன. நாம் அதைத் தளர்த்துவோமானால், அங்கே மாணவர்களுடைய எண்ணிக்கை எதிர்பார்க்கின்ற அளவுக்கு அதிகமாக வழியில்லை என்ற காரணமாக, மறுபடியும் இதைப் பரிசீலனை செய்து இந்த முடிவை எடுத்திருக்கின்றார்கள். பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையிலே தங்களுடைய குறைகளை எடுத்துச்சொன்னால், அந்த அடிப்படையிலே வேண்டுமானால் இந்த பிரச்சினையைப்பற்றி மீண்டும் பரிசீலிக்கலாம்.

**திரு. செ. முத்துசாமி:** இதைப் பொறுத்த அளவில், கல்லூரி ஆசிரியர்களை வெளியேற்ற வேண்டும் என்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்கியிருக்கிறார்கள். சில பேர்களை நீக்க வேண்டும் என்பதற்காக பல இடங்களில் மாணவர்களைச் சேர்க்காமல் விடுகின்றார்கள். இப்படிப்பட்ட சங்கடங்களை நிர்வாகத்தினர் உண்டாக்குகின்றார்கள். அது எல்லாம் அமைச்சர் அவர்கள் அறியாததல்ல. அப்படி இருக்கும்போது, உயர்நிலைப் பள்ளிகளிலே தந்திருக்கக்கூடிய அதே பாதுகாப்பை, இந்த ஆசிரியர்களுக்கும் கொடுக்க வேண்டும். அந்த நிலைமைகள் ஆசிரியர்களால் வருவதல்ல. அந்த நிர்வாகத் தினரால் ஏற்படுகின்ற நிலைமை என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். உயர்நிலைப் பள்ளிகளிலே இருக்கக்கூடியவர்களுக்கு பாதுகாப்பு இருக்கும்போது, ஒரே சட்டத்தின்கீழ் உள்ள ஆரம்பப் பள்ளி களுக்கும் அந்த உரிமை இருக்கிறது என்பதை மீண்டும் வலியுறுத்தி



அத்தகைய பாதுகாப்பு தர வேண்டுமென்று கோருகிறேன். ஒரு பள்ளியிலே இருந்து இன்னொரு பள்ளிக்குச் செல்லும்போது, அவர்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று விதிகள் வைத்திருக்கிறார்கள். இந்த இடைக் காலத்தில் அவர்களுக்குச் சம்பளம் இல்லாமல் போகிறது. அந்தப் பாதுகாப்பையும் அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** உடனடியாக நாம் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கில்லை என்றாலும், தாமதத்தைக் குறைக்க வேண்டுமென்றால், அதற்கு ஏதாவது செய்யலாமே தவிர, வேலை செய்யாமல் இருக்கின்ற நேரத்திலே சம்பளம் தருவது போன்ற சூழ்நிலையை இதிலே நாம் ஏற்படுத்த முடியாது.

### ஆரம்பப் பள்ளிகளுக்குக் கட்டிட வசதிகள்

***279 வினா.—திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியைச் சேர்ந்த சிங்காநல்லூர், பேரூர் பகுதிகளில் உள்ள ஆரம்பப் பள்ளிகளுக்கு போதிய கட்டிட வசதிகள் செய்து தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, திட்டக்குழுவால், இரண்டாவது பகுதி திட்டம் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. ஆனால் கோவை மாநகராட்சி, அதற்குத் தனியாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. செ. முத்துசாமி:** சிங்காநல்லூர் பகுதி மாநகராட்சியினுடைய ரோடுகள் இருக்கின்ற நிலைமைகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். பஞ்சாயத்தின் ஆட்சிக்காலத்திற்குப் பிறகு இன்றைக்கும் மீண்டும் எந்தவிதமான அபிவிருத்தித் திட்டமும் இல்லை. காரணம் ரூ. 40 லட்சம், ரூ. 50 லட்சம் என்று வரி தரவேண்டிய மில் முதலாளிகள் அதைத் தராமல் கோர்ட்டுகளுக்குச் சென்று கொண்டிருக்கின்றார்கள். அங்கே இருக்கின்ற அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கின்றது. அந்த நிலையில் இருந்த நகராட்சி, இப்போது மாநகராட்சியாக வந்திருக்கின்றது என்று நன்றாக அறிவார்கள். பள்ளிக்கூடங்கள் இப்படி ஒரு மோசமான நிலையில் இருக்கின்றன என்பதைக் கருதித்தான் கட்டிடங்களுக்காக

(முற்பகல் 9-50)

5 கோடி ரூபாய், 3 கோடி ரூபாய் என்று ஒதுக்கும் காலகட்டத்தில், பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள், அதைப்போல மாநகராட்சிப் பள்ளிகளுக்கும் முன்னுரிமை கொடுத்துச் செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, சிங்காநல்லூர் ஒரு நகராட்சியாக இருந்து, இப்போது கடந்த 1—5—1981 முதல் மாநகராட்சிப் பகுதியாக மாற்றப்பட்டிருக்கிறது. கோவை மாநகராட்சிப் பகுதிகளைப் பொறுத்தவரையில், 50 கூடுதல் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு 25 லட்சம் ரூபாயாகுமென்று மதிப்பீடு செய்து, அரசுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் திட்டக் குழு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் மாநகராட்சியினுடைய பொது நிதியிலிருந்து இந்தப் பள்ளிக் கட்டிடங்களைக் கட்டிவிடலாமா என்ற பரிசீலனை இருக்கிறது. எவ்வளவு சீக்கிரமாக நடவடிக்கை எடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நடவடிக்கை எடுத்து, செய்யப்படும்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, கோவை மாநகராட்சியிலே நான் கணபதிக்குச் சென்றிருந்தேன். அங்கே ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. ஆரம்பப் பள்ளியிலே உட்கார இடமில்லை. அங்கே குடிநீர் வசதியும் இல்லை. குடம் 60 பைசா என்று நீரை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அங்கேயுள்ள உப்புத் தண்ணீர் வாயில் ஊற்ற முடியாத அளவுக்கு இருக்கிறது. இதுபற்றி மாநகராட்சிக் கமிஷனருக்கு எழுதியிருக்கிறேன். இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இப்படிப்பட்ட பள்ளிகளுக்குத் தண்ணீர் வசதியும், இட வசதியும் செய்யப்பட வேண்டும். அங்கே பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகள் படிக்கிறார்கள். அப்படிப்பட்ட பள்ளிகளுக்குத் தனிப்பட்ட கவனம் செலுத்தி, தண்ணீர் வசதி செய்யவும், இட வசதியைச் செய்யவும் முன்னுரிமை அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, கணபதியும் ஏற்கெனவே பஞ்சாயத்துப் பகுதியாக இருந்து மாநகராட்சியோடு சேர்க்கப்பட்ட பகுதியாகும். கணபதிக்கும் இப்போது கூடுதல் கட்டிடம் கட்ட, இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் அங்கே குடிநீர் பிரச்சினை இருப்பதாகத் தெரிவித்தார்கள். இன்று தமிழகத்திலேயே ஒரேயொரு மாநகராட்சியிலேதான் எந்தவிதமான தட்டுப்பாடும் இல்லாமல் தண்ணீர் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அது கோவை மாநகராட்சி. சிறுவாணித் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்தும் காரணத்தினால், தட்டுப்பாடு இல்லாமல் தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. சிறுவாணித்



தண்ணீர் மாநகராட்சிக்கு வரும் வழியில் உள்ள கிராமங்களுக்கும்—(way side villages) தண்ணீர் கொடுக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறோம். சமீபத்தில் நான் மணியக்காரன்பாளையத்திற்குப் போயிருந்தேன். அந்தப் பகுதிக்குத் தண்ணீர் கொடுத்துவிட்டு வந்தேன். அங்கே குடம் 60 பைசாவுக்கு விற்பதாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். அது எப்போது என்று தெரியவில்லை. கணபதிக்கு சிறுவாணித் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட அவல நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவரவர்களே, கோவை மாநகராட்சியைச் சேர்ந்த பல பள்ளிகள் வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளுக்குச் சொந்தக் கட்டிடங்கள் ஏற்படுத்தித் தருவார்களா ? ஆர். எஸ். புரம் முனிசிபல் பள்ளி நான் படித்த பள்ளி. அந்தப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டித் தரப்படுமா ? கல்வி அமைச்சரவர்கள் படித்த பள்ளி சிட்டி முனிசிபல் பள்ளி. அந்தப் பள்ளிக்கும் புதிய கட்டிடம் கட்டித் தரப்படுமா ? கல்வியில் புரட்சி செய்யும் அமைச்சரவர்களின் பெயரை அங்கே வைப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, யார் யார் எந்தெந்தப் பள்ளியில் படித்தார்கள் என்ற கணக்கெடுத்தால், கண்டிப்பாக எல்லாப் பள்ளிகளுக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டி வரும். எந்தெந்தப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடம் தேவை என்பதைக் கண்டு, இட வசதி மாணவர்களுக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்கிறோம். மாநகராட்சிப் பகுதியில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் பள்ளிகளை சொந்தக் கட்டிடங்களுக்கு மாற்ற வேண்டுமென்ற திட்டத்தை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறோம். எவ்வளவு சீக்கிரமாக நடைமுறைப்படுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நடைமுறைப் படுத்தப்படும்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, கணபதியில் உள்ள மேல்நிலைப் பள்ளி ஆரம்பப் பள்ளி இரண்டிலுமே தண்ணீர் இல்லை. அவர்கள் விலை கொடுத்துதான் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்தப் பள்ளிகளுக்கு பைப் போடும் ஏற்பாட்டை அமைச்சரவர்கள் செய்வார்களா ? நான் சொல்லுவது உண்மை. அமைச்சரவர்கள் ஒரு முறை விசிட் செய்தால் தெரியும். அவர்களுக்கு இருக்கும் சங்கடத்தைத்தான் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அமைச்சரவர்கள் சார்ந்துள்ள மாவட்டத்திலுள்ள மாநகராட்சி

[1983 ஏப்ரல் 12

அது. கோவையில் தண்ணீர் தட்டுப்பாடு எல்லா இடங்களிலும் இல்லாமல்
இருக்கும்போது, அந்த இரண்டு பள்ளிகளில் உள்ள தண்ணீர் தட்டுப்பாட்டை
அமைச்சரவர்கள் போக்குவார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, அந்தப்
பள்ளிகளில் தண்ணீர் தட்டுப்பாட்டைப் பொறுத்தவரையில், அது அரசின்
கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அப்படிப்பட்ட அவல நிலை
இருந்தால் கண்டிப்பாக அது போக்கப்படும். உடனடியாகக் குறாய்
வசதிகளைச் செய்துகொடுத்து, மாணவர்களுக்கு எந்தவிதமான தட்டுப்பாடு
மின்றி தண்ணீர் கொடுக்கப்படும்.

## வங்கிகள் மூலம் ஊதியம்

* 280 **வினா.—திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை
அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—
சென்னை மாநகராட்சி ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு வங்கிக்
கணக்கு வைத்து, வங்கிகள் மூலம் வசதிக்கேற்ற வங்கிகளில் ஊதியத்தை
மாநகராட்சியே செலுத்துவது போன்ற திட்டத்தை கோயம்புத்தூர், மதுரை
மாநகராட்சி ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும் நீட்டிக்கும் செயற்குறிப்பு
ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தற்போது இல்லை.

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, 'தற்போது இல்லை' என்று
சொன்னதால், பின்னால் அரசு செய்ய வாய்ப்பு இருக்கிறது என்று
கருதுகிறேன். இந்தத் திட்டம் சென்னை மாநகராட்சியில் செம்மையாக
நடைபெற்று, வெற்றிகரமாக இருந்தால், இதை மற்ற மாநகராட்சிகளுக்கு
விஸ்தரிப்பதில் என்ன சங்கடம் இருக்கிறது? காரணம், இது நல்ல திட்டமாக
இருக்கிறதென்று ஆசிரியர்கள் உணருகிறார்கள். ஒரு மாநகராட்சியில்
செய்வதை, மற்ற இரண்டு மாநகராட்சிகளுக்கு 'இல்லை' என்று
கூறுவதற்குக் காரணம் என்ன? அதில் என்ன சிக்கல் இருக்கிறது? இதை
எப்போது செய்யலாமென்று இருக்கிறார்கள். பின்னால் செய்யலாமென்று
அரசு கருதுகிறதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, சென்னை
மாநகராட்சியைப் பொறுத்த அளவிலே இருக்கக்கூடிய ஆசிரியப் பெருமக்களுக்
கெல்லாம் அவர்களுடைய சம்பளத்தை அவரவர்கள் விரும்பும் வங்கியில்
மாதாமாதம் அவர்களுடைய சேமிப்புக் கணக்கில் போடுகிறோம். அதன்மூலம்
சிக்கன நடவடிக்கையும், சேமிப்பு எண்ணமும் அவர்களுக்கு ஏற்படுகிற



1983 ஏப்ரல் 12]

என்ற அடிப்படையிலேதான் இவைகள் செய்யப்படுகின்றன. கோவை, மதுரை
மாநகராட்சிகளில் இப்படிப்பட்ட திட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென்றால்,
அதற்குத் தனியாக ஊழியர்களைப் போட வேண்டியிருக்கிறது. அதற்குச்
செலவு அதிகமாகும் என்பதால்தான், தற்போது இந்தத் திட்டம் நிறுத்தி
வைக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் சீக்கிரமாக இந்தத் திட்டத்தை அமுல்
படுத்த நடவடிக்கை எடுப்போம்.

**செல்வி ஆ. லீலாவதி:** தலைவரவர்களே, சென்னை மாநகராட்சியிலே
ஆசிரியர்களுக்கு வங்கியின் மூலம் சம்பளம் பட்டுவாடா செய்யப்படுகிறது.
இது வரவேற்கத்தக்கது. ஆசிரியர்கள் இதை விரும்புகிறார்கள். அமைச்ச
ரவர்கள் கூறுவதுபோல, அதற்கு இங்கே தனிப்பட்ட செலவு செய்யவில்லை.
அதே நிர்வாகம் இருந்துகொண்டு, அதே கிளார்க்குகள் இருந்துகொண்டு,
இந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு தனிப்பட்ட செலவு
இல்லாததால், இந்தத் திட்டத்தை மற்ற மாநகராட்சிகளுக்கும் விரிவாக்க
அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, சென்னையிலே
தனிப்பட்ட செலவு இல்லை. கோவையைப் பொறுத்த அளவில் தனிப்பட்ட
செலவு ஏற்படுகிறது. நகராட்சியாக இருந்து மாநகராட்சியாக உயர்த்தப்பட்ட
நிலையிலே, அது இருக்கிறது. இவைகளை கவனத்தில் கொண்டு, சீக்கிரமாக
நடவடிக்கை எடுக்க பரிசீலனை அரசாங்கத்தின் மூலமாக எடுக்கப்பட்டு
வருகிறது.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவரவர்களே, இந்த நகராட்சியைப் பொறுத்த
வரையில், நீதிமன்றம் சென்று தடை வாங்கவில்லை. மாநிலத்தில் எல்லா
ஆசிரியர்களும் நேரடியாக ஊதியம் வாங்க வேண்டுமென்ற கொள்கையை
நம்முடைய அரசு பின்பற்றுகிறது. அதனால் நகராட்சி, மாநகராட்சி, ஊராட்சி
ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடியாக வழங்க ஆரம்பித்தால்,
காலப்போக்கில் நீதி மன்றம் இதன் நியாயத்தை உணர்ந்து, தனியார் பள்ளி
ஆசிரியர்களுக்கும் அப்படி வழங்க வேண்டுமென்று தீர்ப்பளிக்க அடிப்படை
யாக இருக்கும். அந்த அடிப்படையிலே உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள்
பெருமனது வைத்து, இதைச் செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, எதற்கெடுத்தா
லும் நீதி மன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்ற எண்ணம் எல்லோருக்கும்
ஏற்பட்டுவிட்டது. அரசாங்கம் போடுகின்ற ஆணைகள் 'அட்மினிஸ்டிரேடிவ்
ரீசன்ஸ்' ஐப் பொறுத்து இருக்கிறது. அதற்காக சில நடவடிக்கைகளை
எடுக்கிறோம். மாநகராட்சியிலும் சரி, நகராட்சியிலும் சரி, சிலர் கோர்ட்டுக்
குச் செல்லுகிறார்கள். அங்கேதான் நீதி வழங்கப்படுகிறதென்று சென்று

கொண்டிருக்கிறார்கள். அது அரசாங்கத்திற்கு எதுவாக இருக்க முடியாது.
அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், எந்தவித பாகுபாடும் இல்லாமல் நட
வடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அரசாங்கத்தினுடைய நடவடிக்கை
களைத் தடுக்க வேண்டுமென்று சிலர் கோர்ட்டுக்குச் செல்லுவது உண்மை
யிலேயே அரசாங்கத்தின் மூலமாக நாம் நடவடிக்கைகளை எடுக்க ஏதுவாக
இல்லை. இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்வது, எந்த நடவடிக்
கையை மேற்கொண்டால், பணி புரியும் ஆசிரியர்களுக்குச் சரியாகப் படுமோ,
அதைச் செய்வதற்கு இந்த அரசாங்கம் எப்போதுமே தயாராக இருக்கிறது.

(முற்பகல் 10-00)

**திரு. செ. முத்துசாமி :** இப்போது ஆசிரியர்கள் நேரடியாக மாநகராட்சி
அலுவலகங்களுக்குச் சென்று சம்பளம் வாங்க வேண்டியிருக்கிறது.
அவர்கள் சம்பளம் வாங்குவதற்காக நேரில் செல்வதால், கல்வி பாதிக்கப்படு இப்படி
கிறது என்று உணர்ந்துதான், இத்திட்டத்தை சென்னை மாநகராட்சியில்
நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொல்வதிலிருந்து
யாரோ தவறான தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லி
யிருக்கலாம் என நான் கருதுகிறேன். சென்னை மாநகராட்சியில் எப்படி
இதற்காக கூடுதல் ஊழியர்கள் இல்லாமல், கூடுதல் பணச் செலவு இல்லாமல்
செய்யப்படுகிறதோ இதேபோலத்தான் கோயம்புத்தூர் மற்றும் மதுரை
மாநகராட்சிகளுக்கும் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த
வகையில் நிச்சயமாக கூடுதலான ஊழியர்கள் தேவைப்படாது. மீண்டும்
இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து சென்னை
மாநகராட்சி நடைமுறைப்படுத்தும் திட்டத்தை மதுரை மற்றும் கோயம்புத்தூர்
மாநகராட்சிகளுக்கும் நடைமுறைப்படுத்த வேண்டும். இதனால் பொருளாதாரச்
செலவு ஒன்றும் இல்லை. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் வாயிலாக
ஆசிரியர்களிடத்தில் சேமிக்கும் பழக்கம் வளர்கிறது. பள்ளியை விட்டு
சம்பளம் வாங்குவதற்காக அலுவலகத்திற்குச் செல்கிற நேரமும் மிச்சமாகிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கேள்வி சுருக்கமாக இருப்பது நல்லது.

**திரு. செ. முத்துசாமி :** நான் சொன்ன அடிப்படையில் இத்திட்டத்தை
மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கு மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் நடைமுறைப்படுத்துவார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** எனக்கு யாரும் தவறான தகவலைச்
சொல்லவில்லை. குறிப்பிட்ட சில நகராட்சிகளில் அல்லது மாநகராட்சிப்
பள்ளிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத அலுவலர்
கள் சம்பந்தமாக நாம் ஏதாவது ஒரு முடிவு எடுத்தால், அதை மூட்டை கட்டிப்
போடவேண்டும். அல்லது அதைத் தடை பண்ண வேண்டும் என்கிற வகையில்





சிலருக்கு எண்ணம் இருக்கிறது. கோவை மாநகராட்சியில் உள்ள 13 லைசன்ஸ் இன்ஸ்பெக்டர்களை மாற்றினோம். 10, 15 வருடங்களாக ஒரே இடத்தில் பணியில் இருந்திருக்கிறார்கள். சிலருக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய நிலையில், சீனியாரிட்டி பேசிஸ்-ல் இதைச் செய்தோம். உடனே நீதிமன்றத் திற்குப் போய் தடை வாங்கிவிட்டார்கள். பிறகு தீர்ப்பு வந்தபோது, நாங்கள் செய்ததுதான் சரி என்று தீர்ப்பு வந்தது. லைசன்ஸ் இன்ஸ்பெக்டர்களாக இருப்பவர்கள், எப்படியோ நாங்கள் பணம் சம்பாதித்து விட்டோம் என்பதை வெளியே காட்டுவதற்காக இப்படிச் சென்றிருக்கிறார்கள். யாராக இருந்தா லும் சரி, தேவையில்லாமல் இம்மாதிரி சிலர், எதற்கெடுத்தாலும் நீதிமன்றத் திற்குச் செல்வது என்கிற நிலையைத் தவிர்க்க வேண்டும். ஆசிரியர்களுக்கு இருக்கிற சங்கடங்கள் போக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் எண்ணம். ஆனால் நிதித் துறைக்கு இது சென்றால், கூடுதலாக இதற்காக ஊழியர்களைப் போட வேண்டியிருக்கும் நிலை வந்தால், உடனே அவர்கள் இதனை நிறுத்தி விடுகிற நிலை இருக்கிறது. ஆனால் கோவை, மதுரை போன்ற மாநகராட்சிகளைப் பொறுத்தவரை, சென்னை மாநகராட்சியில் இருக்கிற முறையை அமுல்படுத்த வேண்டும் என்பதுதான் இந்த அரசின் எண்ணம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஆசிரியர்களுக்கு சில சிரமங்கள் இருப்ப தாக இங்கே தெரிவித்தார்கள். கோடிக்கணக்கான ரூபாய் புழங்கக்கூடிய நிலை இருப்பதால், "ஆசிரியர் வங்கி" ஒன்றைத் தொடங்கி அதன் மூலம் சம்பளம் வழங்கினால், கண்டவரிடத்தில் எல்லாம் கடன்பட்டு, கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினார் ஆசிரியர் என்று கலங்கக் கூடிய நிலை ஆசிரியர்களுக்கு ஏற்படாது அல்லவா? அந்த முறையில் "ஆசிரியர் வங்கி" தொடங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மூலக் கேள்வியே சென்னை மாநகராட்சி ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு வங்கிக் கணக்கு வைத்து, வங்கி கள் மூலம் வசதிக்கேற்ற வங்கிகளில் ஊதியத்தை மாநகராட்சியே செலுத்து வது பற்றியதாகும்.

**திரு. சி. இராமலிங்கம் :** சென்னையிலுள்ள ஆசிரியர்கள் யாராவது வங்கி கள் மூலம் சம்பளம் வாங்குகின்ற முறையை ஆட்சேபித்து வழக்கு மன்றத் திற்குச் சென்றிருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அதுபற்றிய குறிப்புகள் இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[1983 எப்ரல் 12

## 2. உரிமைப் பிரச்சினை.

### தமிழ்நாடு வழக்கறிஞர்கள் மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் 12—2—1983 ஆம் தேதியன்று, தமிழ்நாடு சட்டமன்றம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவையில் 8—2—1983 ஆம் தேதி உரையாற்றும்போது நீதிமன்றம் குறித்துக் குறிப்பிட்ட சில சொற்றொடர்களுக்குக் கண்டனம், அதாவது எதிர்ப்பு தெரிவிக்கும் முறையில் நிறைவேற்றியுள்ள தீர்மானம் குறித்து ஒரு அவை உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பினார்.

அரசியலமைப்புச் சட்டத்தில் 194 (2) பிரிவில் இந்த அவையின் உரிமைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி இந்த அவையில் உரையாற்றியதற்காகவோ, அல்லது வாக்களித்தது குறித்தோ எந்த ஒரு உறுப்பினர் மீது நீதிமன்றங்களில் நடவடிக்கை எடுக்கவோ, வழக்கறிஞர் சங்கம் போன்ற ஒரு அமைப்பு ஆட்சேபிக்கவோ, கண்டிக்கவோ முடியாது, கூடாது. இந்த வகையில் ஏற்கெனவே உயர்நீதிமன்றங்களிலும், உச்ச நீதி மன்றங்களிலும் பல தீர்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

வழக்கறிஞர் மன்றம் இந்த அவையில் மாண்புமிகு முதல்வர் உரை குறித்து, "வியூஸ் வித் கிரேட் கன்சர்ன்" (Views with great concern) என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகப் பத்திரிகைகளில் வந்துள்ளது என மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் எடுத்துக் கூறியுள்ளார். ஆனால், இது குறித்து வழக்கறிஞர் மன்றத்திடமிருந்து எனக்கு எந்தவிதமான தகவலும் இல்லை. பத்திரிகைகளில் வந்த செய்திதான். பத்திரிக்கையிலும் இத்தீர்மானம் நிறைவேறியது முறைப்படி இல்லை என்று அந்த மன்றத்திலேயே விவாதம் எழுந்தது என்ற செய்தியும் வெளிவந்துள்ளது.

இந்த நிலையில், அவையின் தகுதியையும், கண்ணியத்தையும் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சினையை இத்துடன் விட்டுவிடலாம் என்று கருதுகிறேன்.

## 3. கவன ஈர்ப்பு.

**(1) தஞ்சை மாவட்டம், கூத்தாநல்லூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக் கட்டடத்தின் சுவர்கள் பிளந்தும், கூரைகள் சரிந்தும் மிக ஆபத்தான நிலையில் உள்ளதால் பெற்றோர் மாணவர்களிடையே தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம்** : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"தஞ்சை மாவட்டம், கூத்தாநல்லூர் அரசினர் மேல்நிலைப்பள்ளிக் கட்டடத்தின் சுவர்கள் பிளந்தும், கூரைகள் சரிந்தும் மிக ஆபத்தான நிலையில் உள்ளதால்—பொறியாளர் அக்கட்டடத்தில் வகுப்புகள் நடத்தக் கூடாது என அறிவித்திருந்தும் தொடர்ந்து அக்கட்டடத்திலேயே வகுப்புகள் நடைபெற்று வரும் நிலையில் பெற்றோர் மாணவர்களிடையே தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து".

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : தலைவரவர்களே, அவைமுன் ஒரு விவர அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்** : இந்தப் பள்ளிக்கூடத்தினுடைய நிலைபற்றி கல்வி மானியக் கோரிக்கையின்மீது நான் பேசும்போதே குறிப்பிட்டேன். அந்தப் பள்ளிக்கூடத்தின் சுவர்கள் எல்லாம் எவ்வாறு பிளந்தும், கூரைகள் சரிந்தும் கிடக்கின்றன என்பதை நிழற்படம் எடுத்து, 24 படங்கள் அடங்கிய ஆல்பத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். மாணவர்கள் அங்கு போய் படிப்பதற்கு அச்சப்படும் நிலைமைகள் இருக்கின்றன. இதுசம்பந்தமாக மாணவர்கள் கையெழுத்துப் போட்டு தந்த விண்ணப்பத்தை, மகஜரை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். எந்த அளவில் அந்தப் பள்ளிக்கூடம் நெருக்கடியான நிலையில் இருக்கிறது என்பதை அவர்களே அறிவார்கள். விவர அறிக்கையில் "சில பிரமுகர்கள், இப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டித் தர நன்கொடை அளிப்பது குறித்து சில பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 8 வகுப்பறைகள் ஓட்டுக் கட்டிடத்திலும் ஏனைய 11 வகுப்புகள் ஓலை வேய்ந்த கொட்டகைகளிலும் நடந்து வருவதாக விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் கீத்துக் கொட்டகைகள் போடுவதற்கு

---

@ 106-107 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

நடவடிக்கை எடுக்கும்படியாக முதன்மைக் கல்வி அலுவலர் அறிவுறுத்தப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஊர் பொதுமக்களிடத்தில் மற்றும் ஊர் பெரியவர்களை இதுபற்றி கலந்து பேசியபோது இந்தப் பள்ளிகளை தனியாரிடத்தில் அல்லது சங்கத்தினிடம் தந்து விட்டால், அவர்கள் எல்லாக் கட்டிடங்களையும் நல்லமுறையில் கட்டுகின்ற வாய்ப்பிருக்கிறது என்று கூறுகிறார்கள். நாம் பொதுமக்களிடமிருந்தும், ஊர் பிரமுகர்களிடமிருந்தும் இதற்காக நிதி வசூல் செய்தால் கூட அவர்கள் ஓரளவுக்குத்தான் தருவார்கள். மேலும் வசூல் செய்வதில் கால தாமதம் வேறு ஆகும். ஆகவே தனியாரிடம் இந்தப் பள்ளிக்கூடம் தரப்படுமா? இல்லையென்றால் அரசே 15 இலட்சம் ரூபாய் செலவு செய்து சம்பந்தப்பட்ட பணிகளைச் செய்ய உத்தேசித்திருக்கிறதா? எப்போது இந்தப் பணிகள் முடிவடையும்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பொதுமக்களுக்கு இருக்கின்ற நிலையை அரசு உணர்ந்து, தேவையான நடவடிக்கையை இந்த அரசு எடுத்துக் கொண்டு வருகிறது. எப்படியாவது இந்தப் பள்ளிக்கூடம் சிறப்பாக நடைபெற வேண்டும் என்கிற அளவில் அரசு தக்க முயற்சிகளை மேற்கொள்ளும். கல்வி மானியக் கோரிக்கை விவாதத்தின்போது கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பள்ளிக்கூடம் பற்றி விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள். அதையும் கவனத்தில் கொண்டு இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இந்தப் பள்ளிக்கூடத்திலேதான் எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைத் தேர்வு எல்லாம் நடைபெறக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. பள்ளிக் கட்டிடங்கள் பழுதுபட்டிருக்கும் நிலையில் பரீட்சைகளுக்கான சென்டரை அருகாமையில் இருக்கின்ற மகளிர் பள்ளிக்கு மாற்றினால் நலமாக இருக்கும் என்று அங்குள்ள மாணவர்களும், ஆசிரியர்களும் சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றியும் பரிசீலிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதையும் அரசு பரிசீலிக்கும்.



**(2) கடலூரில் கழிவுநீரை அகற்றுவதற்கான இயந்திரம் பொருத்தப்பட்ட வாகனம் பழுதுபட்டிருப்பதால் கழிவுநீர் தேங்கி கொசுக்கள் உற்பத்தியாகி கொடிய வியாதிகள் பரவக்கூடிய அபாய நிலை ஏற்பட்டிருப்பது குறித்து.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"தென்னாற்காடு மாவட்டத்தின் தலைநகரமான கடலூரில் கழிவுநீரை அகற்றுவதற்காக வாங்கப்பட்டுள்ள இயந்திரம் பொருத்தப்பட்ட வாகனம் பழுதுபட்டிருப்பதால் நகரம் முழுவதும் தெரு மற்றும் சாலை ஓரங்களில் கழிவுநீர் பெருமளவுக்குத் தேங்கி கொசுக்கள் உற்பத்தியாவதால் மூளைக்காய்ச்சல் போன்ற கொடிய வியாதிகள் பரவக்கூடிய அபாய நிலை குறித்தும் பிரச்சினை தீர நடவடிக்கை எடுப்பது குறித்தும்".

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அவைமுன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பைக் கொடுத்ததற்குப் பின்னாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதுபோல், சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விவர அறிக்கையிலேயே இரண்டு லாரிகளில் ஒரு லாரி கழிவுநீரை அகற்ற உபயோகப்படுத்த முடியாத நிலையில் இருப்பதாகவும், மற்றொன்றைப் பழுது பார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் ஏற்கெனவே உள்ள வடிகால்களை வெட்டி, தூர்வாரி, கழிவுநீர் தேங்காவண்ணம் இணைத்து அப்புறப்படுத்தப்படுகிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். இப்படி வடிகால் அமைக்கிறபோது, பெரிய பெரிய குழிகளை, தண்ணீர் தேங்கக்கூடிய வகையிலே

(முற்பகல் 10-10)

அங்கே அமைத்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை வேண்டுமானாலும் அனுப்பி பார்வையிடச் செய்யலாம். அதனால் கொசுக்கள் மிக அதிகமாக இருப்பதால், மூளைக் காய்ச்சல் நோய் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே கழிவு நீர் தேங்காத வண்ணம் நடவடிக்கைகள் எடுக்க உத்தரவிட வேண்டும். அங்குள்ள வடிகால்கள் பழுதடைந்திருக்கின்றன. அதை நல்லமுறையில் ஆழப்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்குள்ள

---

@ 107-108 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

### கடலூரில் கழிவுநீரை அகற்றுவதற்கான இயந்திரம் பொருத்தப் பட்ட வாகனம் பழுதுபட்டிருப்பதால் கழிவு நீர் தேங்கி, கொசுக்கள் உற்பத்தியாகி, கொடிய வியாதிகள் பரவக்கூடிய அபாய நிலை ஏற்பட்டிருப்பது குறித்து

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] 

கழிவு நீர் அகற்றும் லாரிகள் பழுதடைந்திருப்பதால், அவைகளைச் செப்ப னிட்டும், புதிய லாரிகள் வாங்கவும் நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கடலூர் நகராட்சியைப் பொறுத்தவரையில், கடலுக்குப் பக்கத்தில் இருக்கிற நகராட்சி. ஆகவே எவ்வளவுதான் பள்ளமாக வடிகால் தோண்டினாலும், அவைகளில் நேரடியாகத் தண்ணீர் கட லுக்குச் செல்ல முடியாத நிலை இருக் கிறது. மேலும் அங்கே மேடும் பள்ளமும் ஆன பகுதிகள் இருப்பதால், அங்கங்கே தண்ணீர் தேங்கிவிடுகிறது. எவ்வளவு தூரம் தண்ணீர் தேங்காமல் வெளியே அகற்ற முடியுமோ அவ்வளவுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதை மேலும் எப்படிச் செய்யலாம் என்று அதிகாரிகள் நேரில் போய் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற மாதிரி, மூளைக் காய்ச்சல் நோய் வராமல் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன. மூளைக் காய்ச்சல் வந்ததாகத் தகவல் இல்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகளுக்காக மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அவைகள் தற்காலிக ஏற்பாடுகள். கடலூரைப் பொறுத்தவரையில், தமிழகத்திலே மிகவும் பின்தங்கிய மாவட்ட தலைநகர் கடலூராகத்தான் இருக்கும். இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமானால், நிலத்தடி கழிவு நீர் திட்டத்தைக் கொண்டு வந்தால்தான், இதற்குப் பரிகாரமாக இருக்கும். அதற்குரிய குறிப்புகள் கூட அரசுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும், அது அரசிடம் தேக்க மடைந்திருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தென்னாற்காடு மாவட்டத்தை தங்கள் சொந்த மாவட்டமாகக் கருதி நிலத்தடி கழிவு நீர் திட்டம் அமைக்க அரசு அந்த நகராட்சிக்கு உரிய உதவிகளைச் செய்ய நடவடிக்கைகள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சரைப் பொறுத்தவரையில், எல்லா மாவட்டங்களும் சொந்த மாவட்டங்கள்தான். ஆகவே இந்த மாவட்டம்தான் கவனிக்கப்பட வேண்டும் அல்லது இந்த நகராட்சிதான் கவனிக்கப்பட வேண்டுமென்று இல்லை. பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அது இந்த அரசின் பரிசீலனையில் உள்ளது. அதற்காகத் தனியாகக் கேள்வி போட்டால், விபரமாக பதில் அளிக்க முடியும். இருந்தாலும் அது பரிசீலிக்கப்படும் என்று





### 4. அரசின் தீர்மானம்

### ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக்குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள ஆதி-திராவிடர்—பழங்குடியினர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

மாண்புமிகு உறுப்பினர்களே, அவை பிற்பகலில் முடிவதற்கு தினமும் இரண்டரை மணி ஆகிவிடுவதால், இங்கே சொல்ல முடியாமல் என்னிடம் பல உறுப்பினர்கள், தாங்கள் அவையில் முழுமையாக இருக்க விரும்பினாலும், உணவு காரணமாக இடையில் செல்கிற குறைபாடு தாங்கள் விரும்பாமலேயே ஏற்படுகிறது. ஆனால் கொஞ்சம் முடிந்தால் நேரத்தோடு நடத்தி முடித்தால் நல்லது என்று சொன்னார்கள். இன்னும் சில உறுப்பினர்கள் "நேரமாகி விடுவதால் விடுதியில் உணவு கிடைப்பதில்லை. ஆகவே முழுப் பட்டினியாக இருந்து விடுகிறோம்" என்று சொல்கிறார்கள். நேற்று சிற்றுண்டி கொடுக்கப் பட்டது. ஆனால் நாழி கழித்து தின்கிறபோது எரிந்து வருகிற பசிக்கு அந்தச் சிற்றுண்டி போதுமானது அல்ல" என்று குறை கூறினார்கள். உறுப்பினர் களுக்குத் தெரிந்திருக்கும். நான் கூட பேச்சாளன்தான் என்று தெரிவித்துக் கொள்கிறேன். விஷயங்களைப் பேசுவதென்றால் 10 நிமிடங்கள் போதும். அதுவும் இன்று எடுத்துக் கொள்கிற விவாதம் அந்த வட்டத்திற்குள்ளேயே எடுத்துக்கொள்ளலாம். ஆகவே பத்து நிமிடத்துக்கு மேல் எடுத்துக் கொள்ளாமல் பேசி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. முனுசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 1983-84 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் பழங்குடியினர் நல மானியக் கோரிக்கையின் மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். 1983-84 வது ஆண்டு மானி யக் கோரிக்கையில் ஏறக்குறைய ரூபாய் 4.445.68 லட்சம் ஒதுக்கியுள்ளதை

@ 108-148 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. பி. முனுசாமி]



நான் மனதார வரவேற்கிறேன். ஏனென்றால் சமுதாயத்தில் நலிந்து, தாழ்த் தப்பட்ட மக்கள் சமூகப் பொருளாதாரத் துறையில் முன்னேற வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தப் பெரும் தொகையை இந்த அரசு ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுகிறேன். தமிழகத்தில் ஆதி திராவிட பழங்குடி மக்கள் ஏறக்குறைய 88.86 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இதில் சரிபாதி பேர், வறுமைக் கோட்டின் கீழே வாழ்கிறவர்களாக இருக்கிறார்கள். அதாவது 88 லட்சத்தில் 44 லட்சம் மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இன்றைக்கும் இருக்கிறார்கள். ஏறக்குறைய 19 லட்சம் குடும்பங்களில் 9 லட்சம் குடும்பங்கள் அப்படியிருப்ப தாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த மக்களுக்காகப் போடப்படுகிற திட்டங்கள் அவர்களுக்குப் போய்ச் சேருகிற அளவுக்கு அமைக்க வேண்டு மென்ற எண்ணத்தோடு போடுகின்றனர். இப்படி வறுமைக் கோட்டின் கீழே யுள்ள மக்களைக் கைதூக்கிவிட அவர்களின் சமூகப் பொருளாதாரம் உயர சிறப்புத் திட்டம் ஒன்றை தமிழக அரசு 1980-81-லிருந்து அறிமுகப்படுத்தியிருக் கிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஆதி திராவிடர் குடியிருப்பு களுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, மின்சார வசதி, சுகாதார வசதி, பள்ளிக்கூட வசதி ஆகிய நல்ல பல திட்டங்களுக்காக இந்தச் சிறப்புத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். ஆகையால் இந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் இந்தச் சிறப்புத் திட்டம் சென்னைக்குப் பயன்தர வில்லை என்ற ஒரே குறைதான் எனக்கு. அது என்னவென்றால், தமிழகத்தில் வறுமைக் கோட்டின் கீழே உள்ள ஆதிதிராவிட மக்கள் எப்படி வாழ்கிறார்களோ அதே நிலைமையில்தான் சென்னையிலும் இருக்கிறார்கள். ஏறத்தாழ 600 காலனிகளுக்கு மேல் சென்னையில் இருக்கின்றன. இருந்தாலும் வறுமைக் கோட்டின் கீழேயுள்ள மக்கள் சென்னையிலும் வாழ்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுக்கு நினைவுகூர விரும்புகிறேன். ஆகவே இந்தச் சிறப்புத் திட்டத்தை சென்னையில் அமுல் நடத்தி, முக்கியமாக மற்ற துறைகளில் அவர் களுக்கு உதவி செய்யாவிட்டாலும், வறுமைக் கோட்டின் கீழே இங்கேயிருக்கிற மக்களுக்காகத் தேர்ந்தெடுத்து, பால் பண்ணை, மாடுகள் வாங்க கடன், வங்கி மூலம் கடன் போன்றவைகளைச் செய்யலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. ஆதி திராவிடர்கள், சமூகப் பொருளாதாரத் துறையில் உயர வேண்டுமென்று சொன்னால், அவர்களுக்குக் கல்வி அவசியம் தேவை. அதை உணர்ந்துதான் கல்விக்காக 1983-84-ல் 2,378 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக் கிறீர்கள். அரசு பெருந்தன்மையுடன் இவ்வளவு தொகை ஒதுக்கியும், பள்ளிகளில் படிக்கிற தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குத் தரமான கல்வியைக் கொடுக்க முடியவில்லை என்ற வருத்தம் எனக்கு இருக்கிறது.





[திரு. பி. முனுசாமி]

சென்னையில் 5 ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் இருக்கின்றன. அங்கே யிருக்கிற மாணவர்களைப் பார்க்கிறபோது, தரமான கல்வி அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. இங்கே மாநகராட்சி மூலம் நடக்கிற கார்ப்பரேஷன் பள்ளிகளை விட அவை கள் தரம் குறைந்துதான் இருக்கின்றன. ஆகவே தரமான கல்வியை அங்கே உருவாக்க முயலவேண்டும். அது மட்டுமல்ல, ஆதி திராவிடர் நலப் பள்ளி களிலும் தரமான கல்வியைக் கொடுக்கும் வகையில்—தனியார் பள்ளிகளிலும், மற்ற அரசாங்கப் பள்ளிகளிலும் படிக்கும் ஆதி திராவிட மாணவர்கள் நன்றாகப் படிப்பதைப்போல்—இங்கேயும் அந்த தரம் உயர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

ஏற்கெனவே இலவசப் பகலுணவுத் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருந்தது. இப்போது அது மாறி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சத்துணவுத் திட்டத்தின் மூலம் பகலில் குழந்தைகளுக்கு இலவச உணவு அளிக்கப்பட்டு வருகிறது. முன்பு ஒரு மாணவனுக்கு 22 பைசா செலவு செய்திருந்த நிலைமை மாறி, இன்றைக்கு நாளொன்றுக்கு 45 பைசா செலவு செய்கிற நடைமுறை இருக்கிறது. இப்படி அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசமாகப் பகலுணவு கொடுக்கிறோம் என்று சொல்லுகிற நிலைமை மட்டும் இருந்தால் போதாது. அவர்களின் கல்வித் தரத்தையும் உயர்த்துவது குறித்து அரசே கவனிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் சத்துணவுத் திட்டம் என்பது ஏழை எளிய மக் களுக்கு ஒரு பெரிய வரப் பிரசாதமாக இருக்கிறது. உள்ளபடியே எல்லோ ராலும் பாராட்டப்பட வேண்டிய ஒரு திட்டம் அந்தத் திட்டம். மற்ற மாநிலங் களில் உள்ள தலைவர்களும் பாராட்டுகிற அளவுக்கு சத்துணவுத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் காரணமாக, கிராமப் பகுதிகளில் இருக்கிற ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்பட்ட வகுப்பு களைச் சார்ந்த மக்கள் எல்லாம் இன்றையதினம் வயிறார உண்ணுகிற அளவுக்கு இன்றைக்குச் சத்துணவுத் திட்டம் நடைமுறையில் செயல்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தில் சில பல குறைபாடுகள் இருந்தாலும்கூட, இன்னும் நல்லமுறையில் தொடர்ந்து அதைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி. முனுசாமி] [1983 ஏப்ரல் 12

இந்தத் திட்டத்தைப்பற்றி நம் அண்டை மாநிலத்தில் இருக்கிற ஆந்திர முதலமைச்சர் அவர்கள் ஒரு குறை சொல்லுகிற அளவுக்கு வார்த்தையைச் சொல்லியிருக்கிறார். "நாங்கள் பள்ளிக்கூடங்களையெல்லாம் சமையற்கூடங் களாக மாற்ற மாட்டோம். குழந்தைகளுக்குச் சத்துணவு என்ற பெயரில் ரொட்டியும், பாலும் முட்டையும்தான் கொடுப்பேன்" என்று சொல்லி யிருக்கிறார். தற்போது நமக்கு ஒரு வகையில் அரிசிப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்த நிலைமையில் நாமும் அத்தகைய முறைகளைக் கையாளலாமா என்பதையும் அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மாணவர்களுடைய படிப்புதவித் தொகையாக மெட்ரிக்கு லேஷன் படிப்பிற்கு, மேற்பட்டப் படிப்பிற்கு மத்திய அரசின் உதவித் தொகை யைப் பெறுவதற்கு அவர்களின் பெற்றோர்/பாதுகாவலர்களின் ஆண்டு வருவாய் ரூபாய் 9,000-லிருந்து தற்போது ரூபாய் 12,000 அளவுக்கு உயர்த்தப்பட்டிருக் கிறது. அதே நேரத்தில் தமிழக அரசின் உதவித் தொகை பெறுவதற்காக பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூபாய் 6,000 லிருந்து ரூபாய் 9,000 ஆக மாற்றப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இது ரூபாய் 3,000 ஆக இருந்தது. பின்னர் ரூபாய் 6,000 ஆக உயர்த்தப்பட்டது. இந்த நிலைமையில் இந்த அளவுக்கு வருவாய்த் தொகையை வைத்திருப்பது சரியல்ல. மத்திய அரசு வைத்திருக்கிற அளவுக்கு அதை உயர்த்த வேண்டும் என்று மாநில அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதிதிராவிட மாணவர்கள் மற்றும் பழங்குடியினர் தங்கிப்படிக்க இருக்கும் மாணவர் விடுதிகளில் ஒரு மாணவருக்கு மாதத்திற்கு ரூபாய் 95 தரப்படுகிறது. விலைவாசி மிகவும் அதிகமாக உயர்ந்துள்ள இன்றைய நிலை யில் ரூபாய் 95 போதுமா என்று அரசு சிந்திக்க வேண்டும். காரணம் வாரத் திற்கு ஒருமுறை மாணவர்களுக்கு அசைவ உணவும் முட்டையும் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயித்துவிட்டு, இந்த அளவுக்குக் குறைவான தொகை யைக் கொடுப்பது நியாயமல்ல என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கி றேன். அரிசி ஒரு கிலோ ரூபாய் 1.60 விற்றபோது ரூபாய் 95 நிர்ணயிக்கப்பட்டது. இப்போது அரிசி ஒரு கிலோ ரூபாய் 2.30-க்கு விற்கிறது. அதைப்போலவே மற்ற காய் கறிகள் விலையெல்லாம் உயர்ந்திருக்கிறது. குறிப் பாகச் சென்னையில் ஹாஸ்டல்களில் தங்கிப் படிக்கிற மாணவர்களுக்கு இந்த உதவித்தொகை போதாது என்பதால், இதை மேலும் உயர்த்திக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். அதைப்போலவே வெளியூர்களில் தங்கிப் படிக்கிற மாணவர்களுக்கும் இந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1983 ஏப்ரல் 12] [திரு. பி. முனுசாமி]

அடுத்து, சமூகநலத் துறையின் மூலம் கைத்தொழில் தெரிந்த நபர்களுக் குத் தொழில் செய்வதற்கு வாய்ப்பாக இலவசமாகத் தொழில் செய்யும் கருவி கள் வழங்கப்படுகின்றன. அதாவது தையல் கருவி, தச்சுக் கருவிகள், கருமார் தொழில் செய்யத் தேவையான கருவிகள் மற்றும் முடிதிருத்துவோர் தொழில் செய்வதற்குத் தேவையான கருவிகள் எல்லாம் வழங்கப்படுகின்றன. அந்தக் கருவிகள் எல்லாம் அவர்களால் உண்மையாகவே பயன்படுத்தப்படுகின்றனவா என்றால், எனக்குத் தெரிந்த வரையில், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். எனக்குத் தெரிந்த சிலர் அப்படிப்பட்ட உதவிகளைப் பெற்ற பிறகும், அந்தத் தொழில்களைச் செய்யவில்லை. நானே 2, 3 பேருக்கு அந்தக் கருவிகளை வாங்கிக் கொடுத்திருக்கிறேன். 2, 3 மாதத்திற்குப் பிறகு அவர்கள் வீட்டிற்குப் போய்ப் பார்த்தபோது, அத்தகைய கருவிகள் அவர்களிடம் இல்லாமல் இருந்தன. கேட்டதற்கு அவைகளையெல்லாம் வாடகைக்கு விட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். எனவே இத்தகைய கருவிகளைக் கொடுக்கும்போது, அவர்களிடம் ஒரு உறுதிமொழி வாங்கிக்கொள்ள வேண்டும். தொடர்ந்து அவர்களே அந்தக் கருவிகளைப் பயன்படுத்துவதாக அவர்கள் தெரிவித்தால் தான், வழங்கப்பட வேண்டும். அதோடு 3 மாதத்திற்கு ஒருமுறையோ அல்லது 6 மாதத்திற்கு ஒருமுறையோ இலாக்காவின் இன்ஸ்பெக்டர்கள் மூலமாக அவைகளை நேரில் போய்ப் பார்த்து பரிசோதனை செய்ய உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உள்ளபடியே அவர்களுக்கு இந்தக் கருவிகள் பயன்பட வேண்டும் என்றால், அரசு இதைச் செய்ய முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து. ஆதிதிராவிட மக்களுக்குச் சிறு தொழில்களைச் செய்வதற்கு வட்டி யில்லாத கடன் கொடுக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் ஒரு நபருக்கு ரூபாய் 200 முதல் ரூபாய் 1,500 வரை தரப்படுகிறது. ஆனால் சைக்கிள் கடை, காய்கறிக் கடை போன்றவைகளை வைக்க ரூபாய் 15,000 வரை தருகி றார்கள். வங்கிகளிடம் இத்தகைய கடன்களைப் பெறுவதற்குத் தேவைப்படும் முன்-வைப்புத் தொகையைக் கொடுப்பதில்லை. சென்னையில் தாழ்த்தப்பட்ட வர்கள் ஆட்டோ-ரிக்ஷா ஓட்டுநர்கள் கூட்டுறவு சங்கம் என்று ஒன்று இருக் கிறது. அந்தச் சங்கத்திற்கு இலாக்கா கடன் பெறுவதற்கு உதவிடும் வகையில் முன் வைப்புத் தொகை தருவதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். ஆதிதிராவிடர் நலத் துறைக்கு விண்ணப்பம் போட்டால் அவர்கள் முன்வைப்புத் தொகை அளிப்பதில்லை. கேட்டால் தனிப்பட்டவர்களுக்குத் தரமுடியுமே தவிர, கூட்டுறவுத் துறை மூலமாக இயங்கும் சங்கங்களுக்குக் கொடுக்க முடியாது என்கிறார்கள். எனவே கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வும், வங்கிகள் மூலமாகவும் வாங்குகிற பொருள்களுக்கும் முன் வைப்புத்

[திரு. பி. முனுசாமி] [1983 ஏப்ரல் 12

தொகைக்கான பண உதவியைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு ஆட்டோ ரிக்ஷாவின் விலை ரூபாய் 20,000 ஆகிறது. அதற்கு ரூபாய் 2,000 முன்வைப்புத் தொகையாகத் தேவைப்படுகிறது. ஒரு ஆதிதிராவிடக் குடிமகன் எப்படி அந்தத் தொகையைக் கட்ட முடியும்? ஆக அந்த முன்வைப்புத் தொகையை வட்டியில்லாக் கடனாகத் தருவதற்கும், அதையும் கூட்டுறவுத் துறை சங்கங்கள் மூலமாகக் கொடுக்கவும் அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதிதிராவிடர் வீட்டுவசதி வாரியத்தின் தலைமையகம் தற்போது விழுப்புரத்தில் அமைந்திருக்கிறது. இது சென்னையில் அமையாமல் விழுப் புரத்தில் அமைந்ததற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. அது விழுப்புரத்தில் இருப்பதன் காரணமாக அதன் தலைவரும், எம்.டி.-யும் எஞ்சினீயர்களும் பணியாளர்களும் அடிக்கடி சென்னைக்கு வந்து மற்ற துறை அதிகாரிகளைச் சந்திக்க வேண்டியிருப்பதால், அவர்களுக்குப் பயணப்படி யாகவே பெருந்தொகை தற்போது செலவாகிக் கொண்டிருக்கிறது. இந்த வகையில் செலவாகும் பயணப்படித் தொகை அனைத்தும் வீட்டு வசதிக் கழகத் திற்காக ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்துதான் செலவாகிறது. இதன் காரண மாக ஆதிதிராவிட மக்களுக்குக் கிடைக்க வேண்டிய தொகை வீணாகிக் கொண் டிருக்கிறது. எனவே இந்தக் கழகத்தின் தலைமையகத்தை விழுப்புரத்தி லிருந்து சென்னைக்கு மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தற் போது ஒரு அதிகாரி வரும்போது அவருடன் அவருடைய டிரைவர், பணி யாளர், எஞ்சினீயர் போன்ற பல்வேறு நபர்களும் சென்னைக்கு வருகிறார்கள். இது தேவையற்ற செலவினமாக இருக்கிறது.

அடுத்து, இந்தக் கழகத்தின் மூலமாக ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்டிக் கொள்வதற்குக் கடன் தொகையாக ரூபாய் 4,000 தரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது போதுமான தொகையா என்று சிந்திக்க வேண்டும். இன்றையதினம் செங்கல், சுண்ணாம்பு, சிமின்ட் போன்ற பொருள் களின் விலையெல்லாம் மிகவும் உயர்ந்திருக்கிறது. எனவே குறைந்தபட்சம் இந்தத் தொகையை ரூபாய் 6,000 ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் கட்சிகளைச் சார்ந்த நாமெல்லாம் ஜாதி ஒழிய வேண்டும் என்று பேசி வருகிறோம். இருந்தாலும் நாட்டில் எங்கே பார்த்தாலும், இனக் கலவரங் கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இவ்வாறு இனக் கலவரங் கள் நடக்கும்போது, எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் அந்தந்த பகுதி களுக்குச் செல்வதில்லை. மேடையில்தான் பேசுகிறோமே தவிர, கலவரம் நடக்கும் பகுதிகளுக்கு நாம் யாரும் போய்ப் பார்ப்பதில்லை. எங்களைப் போன்ற சிலரும் மாண்புமிகு அமைச்சர்களும் தான் ஒரு சில இடங்களைச் சென்று பார்வையிட்டு வருகிறார்கள். அவர் தொகுதியிலேயே, அரக்கோணம்



1983 ஏப்ரல் 12] [திரு. பி. முனுசாமி]

(முற்பகல் 10–30)

தொகுதியிலேயே இரண்டு, மூன்று கலவரங்கள் ஏற்பட்டபோது, நான் போய் பார்த்தேன். அமைச்சர் அவர்களும் அங்கே வந்திருந்தார்கள். எங்கெங்கே கலவரம் நடக்கிறதோ அங்கெல்லாம் உடனடியாக அரசியல்வாதிகளும் அமைச் சர்களும் அடிக்கடி வந்து. . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அடிக்கு அடி நான் மணி அடித்துக் கொண்டிருக்கிறேன். கலவரம் நடக்கிறது என்பதால், காவல் துறைக்குப் போக வேண்டாம்.

**திரு. பி. முனுசாமி :** அரசியல் தலைவர்களும் பங்கெடுத்து உடனடியாகக் கலவரம் நிகழாவண்ணம் பார்த்தால், இனிமேல் கலவரம் அடக்கப்படும், ஒடுக்கப்படும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், மின்னல் கிராமத்தில் சுப்பிரமணியம் என்ற ஆதி திராவிட தோழர் அந்தக் கலவரத்தில் கொல்லப்பட்டார். அமைச்சர் அவர்கள் அங்கேயும் வந்திருந்தார்கள். கொல்லப்பட்ட அந்த ஆதி திராவிடருடைய குடும்பத்திற்கு அமைச்சர் என்ன செய்திருக்கிறார் என்று புரியவில்லை. இது வரையில் எந்த ஏற்பாடும் செய்யவில்லை என்ற கூறியிருக்கிறார்கள்.

அதைப்போலவே ஆற்காடு விளாம்பாக்கம் கிராமத்தில் பல குடிசைகள் கொளுத்தப்பட்டன. அங்கே ஒரு ஆதி திராவிடத் தோழர் சந்திரசேகரன் என்ற ஆசிரியர் கொல்லப்பட்டார். அவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். அந்தக் கலவரத்தில் கொளுத்தப்பட்ட வீடுகளுக்குப் பதிலாக வீடு கட்டித் தருவோம் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரையில் எந்த ஏற்பாடும் செய்யவில்லை என்று அங்கேயுள்ளவர்கள் சொல்லுகிறார்கள். அதற்கும் அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இதுவரையில் பேச எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

[1983 ஏப்ரல் 12

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர், பழங்குடி மக்கள் நலத்தைப்பற்றி சில விஷயங்களைக் கூற விரும்பு கிறேன். அவர்கள் எல்லாம் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டு, அடக்கப்பட்டு நீண்ட காலமாக அடிமைகளாக, கொத்தடிமைகளாக வைக்கப்பட்டிருந்தனர். அவர் களுக்குப் பாதுகாப்பு, முன்னேற்றம் வேண்டும் என்று சுதந்திரம் அடைந்த பிறகு, அரசியல் சட்டத்திலேயே பல சலுகைகள் வழங்கப்பட்டு முன்னேற்றத் துடித்து, தடுமாறி முன்னேறிக் கொண்டிருக்கக்கூடிய சமுதாயம் அந்தச் சமு தாயம். அதற்காக பல நன்மைகளை மத்திய அரசும், மாநில அரசும் திட்டமிட்டு செய்து கொண்டிருக்கின்றன. அவர்களுடைய கல்வி அறிவு மிகச் சிறப்பான முறையில் அமைந்தால்தான், அந்தச் சமுதாயம் முன்னேற்றம் அடைய முடியும் என்பதிலே ஆர்வம் காட்டி, அவர்களுக்குத் தகுந்த உதவிகளை மாநில அரசு செய்து வருகிறது. கல்வியைப் பொறுத்த வரையில், பழங்குடி மக்களுக்காக நல்ல திட்டத்தை ஏற்படுத்த வேண்டும். மலைப் பகுதிகளான கொல்லிமலைப் பகுதியிலும், ஏற்காட்டிலும், கல்ராயன் பகுதியிலும், தாளவாடி பகுதியிலும், அந்தியூர், பர்கூர் பகுதியிலும், நீலகிரி மாவட்டத்திலும் அதிகமான பழங்குடி மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கென்று உறைவிடப் பள்ளிகளை ஏற்படுத்த வேண்டும். அங்கேயே தங்கி படிக்கக்கூடிய சூழ்நிலையை உண்டாக்க வேண்டும். ஏனென்றால் பிள்ளைகள் பள்ளிகளுக்குச் சரியாக வருவதில்லை. மாடு மேய்ப் பது போன்ற மற்ற காரியங்களைச் செய்கிறார்கள். ஆசிரியர்களும் சில பள்ளி களுக்குச் செல்ல முடியாத நிலை இருக்கிறது. ஆகவே மலைப் பகுதிகளில் ஐந்து அல்லது பத்து இடங்களில் உறைவிடப் பள்ளிகளை ஏற்படுத்தும் முயற்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஈடுபட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தத் துறைக்காக மத்திய அரசினர் நிறைய நிதி தருகிறார்கள். மாநில அரசும் நிதி ஒதுக்கீடு செய்து சரியான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அரிசன மாணவர்களுக்கும், பழங்குடி மாணவர்களுக்கும் கல்விச் சாலை களில் இலவசமாகப் புத்தகங்கள் தருகிறோம். பள்ளி திறந்து மூன்று மாதங் கள், நான்கு மாதங்கள் ஆன பிறகுதான், இலவசமாகப் புத்தகங்களைத் தருகி றார்கள். மற்ற பிள்ளைகள் எல்லாம் ஜூன் மாதத்திலேயே புத்தகங்களை வாங்கிப் படிப்பார்கள். அப்படியானால் இவர்கள் யார் வீட்டுக்குச் சென்று படிப்பார்கள்? ஆகவே எப்படியோ வாங்கிப் படிப்பார்கள். அதற்குப் பிறகு இலவசமாகப் புத்தகம் வழங்குவதால், என்ன பயன் என்பது எனக்குப் புரிய வில்லை. ஆகவே அரிசன, பழங்குடி மக்கள் நல இலாக்கா சண்டை போட்டு வாங்கி, இதற்கு முன்னுரிமை கொடுத்து, ஜூன் மாதம் 1 ஆம் தேதியன்று அரிசன, பழங்குடி மக்கள் கையில் புத்தகங்களைத் தர வேண்டும் என்ற உணர் வோடு பணியாற்றி வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.



1983 ஏப்ரல் 12] [திரு. செ. முத்துசாமி]

ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத் துறையின் நிர்வாகத்தில் பணி யாற்றக்கூடிய ஆசிரியர்கள் நலனைப் பொறுத்தவரையில், அவர்களுடைய நலத்திற்கு எதிராக துறை செயலாற்றும் நிலை இருப்பதால், ஆதி திராவிட, பழங்குடியினர் நலத் துறையில் பணியாற்றக் கூடிய ஆதி திராவிட ஆசிரியர்களின் நலன் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சமுதாயம் பிற்படுத்தப் பட்டிருக்கிறது, ஒடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறோம். ஆனால் நிர்வாகமே பிற்படுத்தப்பட்டிருப்பதற்குக் காரணம் என்னவென்று தெரிய வில்லை. இதிலே ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள். அப்படியிருந்தும் கல்வித் துறையிலே உள்ள பல சலுகைகள் இந்தத் துறையிலே உள்ளவர் களுக்குக் கிடைக்காமல் பின்னுக்குத் தள்ளப்படக்கூடிய நிலை ஏன்? இந்த இலாக்காவிற்கு என்று தனியாக அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இளைஞர், துடிப்பு உள்ளவர். அவர் தன்னுடைய காலத்திலேயே சரியான சீர்திருத்தத்தைச் செய்து முடிப்போம் என்ற அறைகூவலை ஏற்றுக்கொண்டு, அதிலே வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன். அரசுப் பள்ளிகளில் வழங்கப்படும் சலுகைகளை அரிசன நலப் பள்ளிகளிலும் தர வேண்டும் என்பதிலே முனைப்போடு செயலாற்றி அதிலே வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

ஆதி திராவிடர்களுக்காக பல சலுகைகள் வழங்கப்படுகின்றன. காதி வாரியம் பல சலுகைகளை ஆதி திராவிடர்களுக்கு வழங்குகிறது. அந்தச் சலுகைகள் அவர்களுக்குப் போய்ச் சேராமல் இடையிலே சில பேர் சுரண்டக் கூடிய அமைப்புகள் வந்துவிட்டன. சாதியின் பெயரால் அவர்களுக்கும் தலைவர் என்று சொல்லிக் கொண்டு தவறு செய்வதால், அவர்களுக்குச் சலுகைகள் சரியாகப் போய்ச் சேருவதில்லை. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மவுண்ட் ரோடில் செருப்பு தைக்கும் ஒரு தொழிலாளி, வங்கியிலே லோன் வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று என்னிடம் சொல்லுவார். "உங்களுக்கென்று சங்கம் இருக்கிறதே . . ."

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மவுண்ட் ரோடு என்று ஒரு ரோடு இல்லை.

திரு. செ. முத்துசாமி : அண்ணா சாலை என்று திருத்திக்கொள்ளுகிறேன். என்னைத் திருத்தியதற்காக துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன். "உங்களுக்குத்தான் சங்கம் இருக்கிறதே, அதன் மூலம் கேட்டு வாங்கிக் கொள்ளக்கூடாதா?" என்று கேட்டேன். "எங்கள் சங்கத்தின் மூலம் லோன் வாங்கினால் 500 ரூபாய் அவர்களுக்குக் கொடுக்க

வேண்டும். அப்போதுதான் எல்லா ஏற்பாடுகளும் செய்வார்கள்.
நீங்கள் கையெழுத்துப் போடுங்கள்" என்று அந்தத் தொழிலாளி
பரிதாபமாகக் கேட்டார். சாதாரண தொழிலாளிகளுக்காக உள்ள ஒரு
சங்கத்திலேயே இப்படிப்பட்ட நிலைமைகள் ஏன் இருக்கின்றன என்பதை
எண்ணிப் பார்க்கவேண்டும். அந்தச் சமுதாயத்திற்கென்று பயன்படக்கூடிய
சங்கத்திலேயே இப்படிப்பட்ட பிற்பட்ட போக்கு இருக்குமானால், சூழ்நிலை
எங்கே கொண்டு போகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே
அந்தச் சமுதாயத்தினர் பயன்படுத்தக்கூடிய சங்கங்களை மிக நல்ல
முறையில் இயங்கச் செய்யும் முயற்சியில் அமைச்சர் அவர்கள் ஈடுபட
வேண்டும். தீ விபத்து ஏற்படும்போது, அவர்களுக்கு வழங்கப்படும் தொகை
யிலிருந்து எடுத்துச் செல்லக்கூடிய நிலைமையிலே சிலபேர் வளர்ந்து
வருகிறார்கள். அதைப்போல வளர்ந்து வருவது சரியல்ல. ஆகவே வழங்கக்
கூடிய எல்லாச் சலுகைகளும் அந்த மக்களுக்குச் சென்று அடையக் கூடிய
வகையில் தூய்மைப்படுத்தும் முயற்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
ஈடுபட வேண்டும்.

பல நேரங்களில் யாரை வைத்து யாரைப் பிடிப்பது என்று அமைச்சர்
அவர்கள் யோசிக்கிறார்கள். இந்த நிர்வாகத்தில் தவறுகள் நடந்தால், அந்தத்
தவறுகளை நீக்க வேண்டும் என்ற முனைப்போடு மேலே இருப்பவர்கள்
கங்கணம் கட்டிக்கொண்டுவிட்டால், நிச்சயமாக அதிலே வெற்றி காண
முடியும். மேலே இருப்பவர்கள் சரியான அடிப்படையிலே சீர்திருத்த
வேண்டும் என்று முனைப்போடு செயலாற்றும்போது, நூறு சதவீதம் வெற்றி
அடையாவிட்டாலும், வெற்றியை நோக்கிச் சென்று கொண்டிருக்க முடியும்
என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பல சலுகைகள் அவர்களைப் போய்ச் சேராமல் இருக்கின்றன. ஊரூர்
பகுதியில் செக்கு ஆட்டி நாட்டுச் செக்கு எண்ணெய் தயாரிப்பதற்காக 1,500
ரூபாய் மானியம் தரப்படுகிறது. அதிலே அவர்களிடம் கையெழுத்து வாங்கிக்
கொண்டு ஐநூறு ரூபாயைத் தந்துவிட்டு, ஆயிரம் ரூபாயை எடுத்துக்
கொண்டார்கள் என்று சொல்லுகிறார்கள். அதிலே படித்தவர் ஒருவர்
ஈடுபட்டார். அதனாலே இது தெரியவந்தது. இப்படிப்பட்ட புகார்களை
சாதாரண ஏழையெளிய மக்கள் தெரிவித்தால், அப்படி சுரண்டுபவர்கள்மீது
நடவடிக்கை எடுத்தால்தான், நாடு திருந்த வாய்ப்பு ஏற்படும். இதிலே
வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று விட்டுக்கொடுக்காதீர்கள் என்று





(முற்பகல் 10-40)

தெரிவித்துக்கொள்கிறேன். ஏழை மக்களைப் பார்க்க வேண்டும். பெரிய பணக்காரர்கள் ஒரு லட்சம், 10 லட்சம், 20 லட்சம் ரூபாய் என்று வாங்குகின்றார்கள். அதிலே எடுத்துக்கொள்கின்றார்கள். அந்தப் பணத்தை சீக்கிரம் வாங்குவதற்கு அப்படிச் செய்கின்றார்கள். வட்டி நஷ்டம் வருகிறது. அப்படி கொடுத்துவிடுகிறார்கள். பரவாயில்லை. அது நாடு பூராவும் நடக்கின்றது. அது வேறு சமாசாரம். இந்த ஏழை மக்களுக்குக் கொஞ்சம் முன்னேற்றம் ஏற்படுவதற்கு என்று நடத்துகின்ற திட்டங்களிலேகூட சில சுரண்டல்கள் நடக்கின்றன. இது அக்கிரமம், அக்கிரமம் என்று சொல்லிக்கொள்கிறேன். காந்தி அடிகள் படம் இங்கே காட்டப்படுகிறது. ஆதி திராவிட மக்களுக்காக அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் கொஞ்ச நஞ்சமல்ல. அந்த மனிதர் இந்த நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கிக்கொடுத்தார். ஆதி திராவிட மக்கள் முன்னேற வேண்டும் என்பது அவருடைய அபிலாஷையாக இருந்தது. அந்த காந்தி அடிகள் அவர்களுடைய படத்தைப் பார்க்கக்கூடிய இந்த கால கட்டத்தில் சொல்கிறேன். ஆதி திராவிடர்களுக்காக அவர்கள் உழைத்த உழைப்பை எண்ணிப்பார்க்கவேண்டும். ஆதி திராவிட மக்களுக்கு இந்த நாட்டின் அரசாங்கத்திலிருந்து செல்லக்கூடிய வரிப்பணத்தினை, அவர்கள் முழுமையாக அடையச் செய்ய வேண்டும். அதிலே ஒரு நல்ல சீர்திருத்தத்தை உருவாக்குவதிலே இந்த அரசு வெற்றி பெற வேண்டும் என்று நான் மீண்டும் சொல்லிக்கொள்கிறேன். இப்படிச் சொல்லும்போது, நான் குற்றம் சாட்ட வேண்டுமென்று சொல்லவில்லை. இந்தக் குறைகளை எடுத்துச் சொல்லும்போது, அதை ஏற்றுக்கொள்வது நமது கடமை. அமைச்சர் அவர்கள் தவறு செய்கின்றார்கள் என்று நான் சொல்லத் தயாராக இல்லை. அமைச்சர் பொறுப்பிலே இருக்கின்ற துறையிலே பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் வேலை செய்கின்றார்கள். எல்லாமே அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு வர முடியாது. அதனாலே ஜனநாயக அமைப்பிலே, இந்த அவையிலே இருக்கக் கூடியவர்களாகிய நாங்கள் அந்தந்தப் பகுதிகளிலே உள்ள தவறுகளைப் பற்றி இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து சொல்கின்றோம். அவர்களுக்குக் கீழே இருக்கக்கூடிய நிர்வாக இயந்திரத்திலே இருக்கக்கூடிய தவறுகளை, நடக்கின்ற தவறுகளை எடுத்து வந்து சொல்கின்றோம். அதை எடுத்துக்கொண்டு அதைப்பற்றி அறிந்து செயல்படுத்தி இதிலே வெற்றி காண வேண்டும் என்ற விருப்பத்திலேதான் இதை நான் சொல்கின்றேன். ஆதலால் இங்கே சொல்லும்போது, இந்தத் துறையைப்பற்றி மோசமாக இருக்கின்றது என்று உறுப்பினர் முத்துசாமி படம் பிடித்து காட்டுகின்றார் என்பதைப் போல அமைச்சர் அவர்கள்

எண்ணக்கூடாது. இருக்கக்கூடிய சங்கடங்களை, கீழே இருப்பவர்கள்
செய்கின்ற தவறுகளை, அந்த உண்மைகளைச் சொல்கின்றோம். அந்த
உண்மைகளை மனதிலே வைத்துக்கொண்டு, அவர்களோடு விவாதிக்கும்போது,
மற்ற காரியங்களைச் செய்யும்போது, அதற்கான நியாயங்களைப் பார்க்க
வேண்டும். அந்த அதிகாரிகள் அதற்கான நியாயங்களைச் சொன்னாலும்,
அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் நன்கு ஆராய வேண்டும். எல்லா தப்பையும்
நியாயப்படுத்தி, அவர்கள் நாசூக்காகச் சொல்ல ஆரம்பிப்பார்கள். அவர்கள்
'அது ஏன் முடியவில்லை என்றால்' என்று ஆரம்பித்து அந்த அமைச்சரையே
கன்வின்ஸ் பண்ணக்கூடிய அளவுக்கு சொல்கின்ற கெட்டிக்கார அதிகாரிகளாக
இருக்கின்றார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து 'கன்வின்ஸ்'
ஆகிவிடக்கூடாது. அதைத்தான் நான் இந்த நோத்திலே தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் படி அரிசித் திட்டம் பற்றிச்
சொன்னார்கள். அந்தத் திட்டத்தை அவர்கள் அறிவித்தபோது, இந்த
அதிகாரிகள் 'அத்திட்டம் நடக்காது' என்று சொன்னார்கள். "நான்
அறிவித்திருக்கிறேன், நீங்கள் நடத்துங்கள்" என்று சொன்னார்கள். அதை
நடத்த அவர்கள் முயற்சித்தார்கள். அதிலே வெற்றி தோல்வி என்று வரலாம்.
அது வேறு. ஆதலால் நிர்வாகத்தை தூய்மைப்படுத்தி, ஏழை மக்களுக்கு,
இல்லாத மக்களுக்கு, அந்த சமுதாயத்தின் சார்பாக வந்திருக்கக்கூடிய
அமைச்சர் அவர்கள் அடிபட்டு நொடிக்கப்பட்ட சமுதாயத்தின் சார்பாக
வந்திருக்கின்ற குடிமகன். ஆதலால் அந்த உணர்வுகளின் அடிப்படையிலே
நமக்கு இந்த வாய்ப்பு இருக்கின்றது. நமக்கு பல மரியாதைகள் கிடைக்கின்றன.
ஆனால் உண்மையிலேயே துடித்துத் தவித்துக்கொண்டிருக்கின்றவர்களும்
இருக்கிறார்கள். தர்மபுரி, திருப்பத்தூர் பகுதிகளில் எவ்வளவு கொடுமையான
அளவுக்குக் கஷ்டப்படுத்தப்படுகின்றார்கள். அவர்கள் எந்த வருமானமும்
இல்லாமல் நக்சலைட்டுகள் ஆகிக்கொண்டிருக்கிறார்கள். அதிலே ஆதி திராவிட
மக்கள் பெரும்பகுதியினர் வாழ்வதற்கு வழியின்றி, சோற்றுக்கு வழியின்றி
வாழ்வு இதுதானா என்று நினைக்கக்கூடிய நிலைமையிலே அவர்கள்
இருக்கின்றார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆதலாலே இப்படி
வறுமைப்பட்டு, நொடிக்கப்பட்டு, ஜனநாயகத்திலே உரிமை இருக்கிறது என்று
சொல்லி வோட்டுக்கு வருகிறபோது மட்டும் அவர்களுக்கு மரியாதை
காட்டப்பட்டு, இன்றைக்கு அவர்களுக்குக் காரியங்களின் பலன்கள்
சென்றடையாமல் இருக்கின்றன. இதை எண்ணிச் செயல்படுங்கள், எண்ணிச்
செயல்படுங்கள், எண்ணிச் செயல்பட்டு அவர்கள் சங்கடங்களை, அவர்களுக்கு
நடக்கின்ற அக்கிரமங்களை நீக்குங்கள், அந்த தவறுகளைப் போக்குங்கள்,
வெற்றி பெறுங்கள் என்று வாழ்த்தி முடிக்கிறேன்.





**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத் துறை மீதான கொள்கைக் குறிப்பின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிடர்களைப் பொறுத்தவரையிலே, பல்வேறு நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதிலே அமைச்சர் அவர்கள் துடிப்போடு இருக்கின்றார்கள். இன்றைக்கு அந்த மக்கள்மீது அனுதாபம் காட்டி, அந்த மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற உணர்வோடு சலுகைகள் காட்டப்படுகின்றனவே தவிர வேறு ஒன்றுமில்லை. இன்றைக்கு அந்தச் சமுதாயத்திலே இருக்கின்ற மக்கள் நம்மோடு இருப்பவர்களிலே ஒரு பகுதியினர்களாக இருக்கின்றார்கள். ஆதி திராவிடர்களாக ஏன் இருக்க வேண்டும் என்ற கேள்வியைக் கேட்கின்ற அளவுக்கு ஒரு துணிவு அந்த சமுதாயத்திலே இருப்பவர்களுக்கு வருவதில்லை. அவர்கள் ஆதி திராவிடர்களாகவும், வேறு சிலர் திராவிடர்களாகவும், மற்றவர்கள் அதைவிட உயர்ந்தவர்களாகவும் ஆகியிருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. இன்றைக்கு அந்த இழி நிலைமைகள் இந்த நாட்டிலே ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் பல்லாண்டுகளாக இருக்கின்றதே என்பதுபற்றி பலபேர்கள் எழுப்பியிருக்கின்றார்கள். தந்தை பெரியார் அவர்கள் சுமார் 60 ஆண்டுக்காலமாக உழைத்து ஆதி திராவிடர்கள் என்பவர்கள் ஒரு தனியான பிரிவைச் சேர்ந்தவர்கள் அல்ல, அவர்களும் மக்களிலே ஒருவர்தான் என்ற நிலையிலிருந்து அவர்களைப் பிரிக்கக்கூடாது என்பதற்காக கடுமையாக இந்து மதத்தினை சாடினார்கள். உலகத்திலே வேறு எந்த மதத்திலும் இல்லாத அளவுக்கு இப்படி இருந்தது. நாம் துரதிருஷ்டவசமாகப் பிறந்த இந்த இந்து சமுதாயத்திலே இப்படி இருக்கின்றது. வேறு மதங்களிலே நிற வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் நாம் பிறந்த இந்து மதத்திலே பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. அந்தப் பிரிவினரை, ஜாதி வாரியாகப் பிரித்திருக்கிறார்கள். சில பேர்களை உயர்ந்த ஜாதிக்காரர்களாக ஆக்கி, சில பேர்களைத் தாழ்ந்த ஜாதிக்காரர்களாக ஆக்கி, சில பேர்களை மிகவும் தாழ்ந்த ஜாதிக்காரர்களாக ஆக்கி, ஆதி திராவிடர்களாக ஆக்கி அவர்களை என்றென்றைக்கும் அடிமைகளாக ஆக்குகின்ற இந்த சமுதாயக் கொடுமை இருக்கின்றதே அதை நீக்கிவிட வேண்டுமென்ற முதல் குரலை தந்தை பெரியார் எழுப்பியதற்குப் பின்னர்தான், இன்றைக்கு ஆதி திராவிடர்களுக்கு சமுதாயத்திலே ஒரு அந்தஸ்தே வந்திருக்கிறது என்பதை நாம் நிச்சயமாக ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். அவர்கள் எந்த நிலையிலே இருக்கின்றவர்களாக இருந்தாலும் சரி, இன்றைக்கு ஆதி திராவிடர்களுக்காகப் பரிந்துரை செய்து பேசுகின்ற பெரிய மதவாதிகளாக இருந்தாலும் சரி, தந்தை பெரியார் அவர்கள் எழுப்பிய வினாவிற்குப் பின்னாலேதான்

[திரு. எஸ். ஆர். இராதா] [1983 ஏப்ரல் 12

"அவர்களும் மனிதர்கள், அவர்களும் நம்மைச் சேர்ந்தவர்கள்" என்ற உணர்வே உண்டாக்கப்பட்டது என்று தைரியமாகச் சொல்வேன். இன்றைக்கு சலுகைக்காக ஆதி திராவிடர்களைத் தேடி எத்தனை பேர்கள் போகிறார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் பேசும்போது, வார்த்தையினுடைய வேகத்திலே "ஹரிஜனங்கள், ஹரிஜனங்கள்" என்று வார்த்தைகளைச் சொல்லி ஆரம்பித்தார். நான் இதே மன்றத்திலே ஒரு முறை குறிப்பிட்டேன். அவர்களை 'ஹரிஜனங்கள்' என்று சொன்னால், அதற்குப் பின்னாலே 'சிவ ஜனங்கள்' இருக்க வேண்டும். ஹரிஜனங்கள் இருக்கின்றார்கள், சிவ ஜனங்கள் இருக்கின்றார்கள், பிரம்மா ஜனங்கள் இருக்கின்றார்கள் என்று இந்து மதத்திலே இருக்கின்ற கடவுளர்கள் பெயராலே மக்களைப் பிரித்து வைத்து அவர்களை தாழ்த்தப்பட்டவர்களாக ஆக்குகின்றோம் என்று சொன்னால், நான் பணிவோடு சொல்வேன், இந்த ஹரியை ஒழித்தாக வேண்டும். இந்த சிவனை ஒழித்தாக வேண்டும். அப்படி ஒழித்தால்தான் நம்மிடையே வேறுபாடு இல்லை, நாம் அத்தனை பேரும் ஒன்று, நாம் மனிதர்கள் என்ற உணர்வோடு இருப்போம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இல்லாதவைகளை ஒழிக்கத் தேவையில்லை.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களை ஒழிக்க வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம், நாமே ஏதோ ஒரு பொருளை ஒழிப்பதற்காக முயற்சித்துக்கொண்டிருக்கிறோம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அது அல்ல. அந்த உணர்வு உள்ளவர்களை ஒழிக்க வேண்டும். அந்த உணர்வு உள்ளவர்களாலேதான் ஆதி திராவிடர்கள் என்று இன்றைக்கு கீழ்நிலைக்குக் கொண்டுபோகப்பட்டு, சமுதாயத்திலே கோடிக்கணக்கான மக்கள் அடிமைப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

திரு. செ. முத்துசாமி: இந்த உணர்வு உள்ளவர்களை ஒழிக்க வேண்டும் என்று சொல்வது தவறான ஒரு பதிவாகிவிடும். அவர்கள் கொண்டுள்ள அந்த —உணர்வு உள்ளவர்களின்—உணர்வை ஒழிக்க வேண்டுமென்பதுதான் மிகச் சரியாக இருக்கும். அவர்கள் உணர்வுகளைத் தவறாகக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களை ஒழிக்கவேண்டுமென்று சொல்வது, மனிதர்களை ஒழிக்கக்கூடிய கருத்தாக வந்துவிடும். ஆதலால் அவர்கள் கொண்டுள்ள மூட உணர்வுகளை ஒழிக்க வேண்டும் என்று, அதனைத் திருத்திக்கொள்ளவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



1983 ஏப்ரல் 12]

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திரு. முத்துசாமி அவர்கள் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மனிதர்களை ஒழிப்பது அல்ல அண்ணா அவர்களுடைய கொள்கை. மனிதனுடைய கொள்கைகளை, உணர்வுகளை மாற்ற வேண்டும் என்றுதான் அண்ணா அவர்கள் நினைத்தார்கள். அந்த இயக்கத்திலேயிருந்து வந்தவர்கள் மனிதர்களை ஒழிப்பதிலே நிச்சயமாக முன்னாலே போகமாட்டார்கள். மனிதர்களுக்கு இருக்கின்ற அந்த உணர்வுகளை ஒழிக்க வேண்டும் என்ற தன்மையிலேதான் நான் பேசுகிறேனே தவிர வேறல்ல. இதை மனதிலே கொண்டு நான் மனிதர்களை ஒழிப்பதற்காகப் புறப்பட்டுவிட்டதாகக் கருத வேண்டாம். அது தவறான விவரமாகும். அந்த உணர்வுகள் இன்றைக்கு அழிக்கப்பட வேண்டுமென்பதிலே நான் மிகுந்த அக்கறையோடு கவனித்துக் கொண்டிருக்கிறேன். ஒரு உணர்வை இன்றைக்கும் தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியா முழுவதும் பரவலாகப் பரப்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆதி திராவிடர்களுக்குச் சலுகைகளைக் கொடுத்துக் கொடுத்து அதிகமாக வளர்ந்து விட்டார்கள். தடிப்பான வார்த்தைகளிலே ஒரு நண்பர் என்னிடத்திலே சொன்னார்கள். அதிகமாகக் 'கொழுத்து' விட்டார்கள் என்று சொல்கின்ற அளவுக்குகூட வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. அப்படிச் சொல்கின்ற உயர்ந்த ஜாதிக்காரர்கள் நிச்சயமாக நினைத்துப்பார்ப்பதில்லை. இந்தியாவிலே இருக்கின்ற ஜனத்தொகையிலே ஒரு கணிசமான அளவுக்கு இருப்பவர்கள் ஆதி திராவிடர்கள், பழங்குடியினராக இருக்கின்றார்கள். அவர்களுடைய உழைப்பிலேதான். அவர்களுடைய நிறம் கறுத்த பின்னர்தான், இவர்கள் சிவப்பாக இருக்கின்றார்கள். அவர்களுடைய உழைப்பிலேதான் இவர்கள் வளர்ந்துகொண்டு இருக்கின்றார்கள். அவர்களுடைய உழைப்பு இல்லை என்று சொன்னால், இவர்கள் சமுதாயத்திலே வாழ்வதற்குக்கூட முடியாது. சலுகைகளைத் தருகின்ற நேரத்திலே ஒரு உயர்ந்த ஜாதிக்காரர், "இவ்வளவு சலுகைகளைக் கொடுக்கின்றார்களே" என்கின்றார்கள். அந்த சலுகைகளிலே பங்கு கேட்பதற்கு, பாகம் கேட்பதற்கு இன்றைக்கு கோஷங்களை எழுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். அந்த கோஷங்களை நான் மதிக்கிறேன். எங்களுக்கும் உரிமையுண்டு. ஆதி திராவிட மக்களுக்குத் தருகின்ற உரிமை எங்களுக்கும் வேண்டும் என்று சொன்னால், நான் பணிவோடு அரசைக் கேட்பேன். சமுதாயத்தைக் கேட்பேன். இன்றைக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக வரவேண்டி ஒதுக்குகின்ற அதே நேரத்தில், நான்கு ஐயர்களை நகரசுத்தித் தொழிலாளர்களாக மாற்றுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அதிலே ரிசர்வேஷன்

(முற்பகல் 10-50)

கொண்டுவர வேண்டும். ஆதி திராவிடர்கள்தான் நகர சுத்தித் தொழிலாளர்

" அவர்களும் மனிதர்கள், அவர்களும் நம்மைச் சேர்ந்தவர்கள் " என்ற
உணர்வே உண்டாக்கப்பட்டது என்று தைரியமாகச் சொல்வேன். இன்றைக்கு
சலுகைக்காக ஆதி திராவிடர்களைத் தேடி எத்தனை பேர்கள் போகிறார்கள்
என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். உறுப்பினர் திரு. முத்துசாமி
அவர்கள் பேசும்போது, வார்த்தையினுடைய வேகத்திலே "ஹரிஜனங்கள்,
ஹரிஜனங்கள்" என்று வார்த்தைகளைச் சொல்லி ஆரம்பித்தார். நான்
இதே மன்றத்திலே ஒரு முறை குறிப்பிட்டேன். அவர்களை 'ஹரிஜனங்கள்'
என்று சொன்னால், அதற்குப் பின்னாலே 'சிவ ஜனங்கள்' இருக்க வேண்டும்.
ஹரிஜனங்கள் இருக்கின்றார்கள், சிவ ஜனங்கள் இருக்கின்றார்கள், பிரம்மா
ஜனங்கள் இருக்கின்றார்கள் என்று இந்து மதத்திலே இருக்கின்ற கடவுளர்கள்
பெயராலே மக்களைப் பிரித்து வைத்து அவர்களை தாழ்த்தப்பட்டவர்களாக
ஆக்குகின்றோம் என்று சொன்னால், நான் பணிவோடு சொல்வேன், இந்த
ஹரியை ஒழித்தாக வேண்டும். இந்த சிவனை ஒழித்தாக வேண்டும். அப்படி
ஒழித்தால்தான் நம்மிடையே வேறுபாடு இல்லை, நாம் அத்தனை பேரும்
ஒன்று, நாம் மனிதர்கள் என்ற உணர்வோடு இருப்போம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இல்லாதவைகளை ஒழிக்கத்
தேவையில்லை.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்
அவர்களே, அவர்களை ஒழிக்க வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம்,
நாமே ஏதோ ஒரு பொருளை ஒழிப்பதற்காக முயற்சித்துக்கொண்டிருக்
கிறோம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அது அல்ல. அந்த உணர்வு
உள்ளவர்களை ஒழிக்க வேண்டும். அந்த உணர்வு உள்ளவர்களாலேதான்
ஆதி திராவிடர்கள் என்று இன்றைக்கு கீழ்நிலைக்குக் கொண்டுபோகப்பட்டு,
சமுதாயத்திலே கோடிக்கணக்கான மக்கள் அடிமைப்படுத்தப்பட்டிருக்
கின்றார்கள் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

திரு. செ. முத்துசாமி: இந்த உணர்வு உள்ளவர்களை ஒழிக்க வேண்டும்
என்று சொல்வது தவறான ஒரு பதிவாகிவிடும். அவர்கள் சொன்னது அந்த
—உணர்வு உள்ளவர்களின்—உணர்வை ஒழிக்க வேண்டுமென்பது [illegible]
சரியாக இருக்கும். அவர்கள் உணர்வுகளைத் தவறாகச் [illegible]
கின்றார்கள். அவர்களை ஒழிக்கவேண்டுமென்று சொல்வது, [illegible]
ஒழிக்கக்கூடிய கருத்தாக வந்துவிடும். ஆதலால் அவர்கள் [illegible]
உணர்வுகளை ஒழிக்க வேண்டும் என்று. அதனைத் திருத்[illegible]
என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.





திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திரு. முத்துசாமி அவர்கள் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மனிதர்களை ஒழிப்பது அல்ல அண்ணா அவர்களுடைய கொள்கை. மனிதனுடைய கொள்கைகளை, உணர்வுகளை மாற்ற வேண்டும் என்றுதான் அண்ணா அவர்கள் நினைத்தார்கள். அந்த இயக்கத்திலேயிருந்து வந்தவர்கள் மனிதர்களை ஒழிப்பதிலே நிச்சயமாக முன்னாலே போகமாட்டார்கள். மனிதர்களுக்கு இருக்கின்ற அந்த உணர்வுகளை ஒழிக்க வேண்டும் என்ற தன்மையிலேதான் நான் பேசுகிறேனே தவிர வேறல்ல. இதை மனதிலே கொண்டு நான் மனிதர்களை ஒழிப்பதற்காகப் புறப்பட்டுவிட்டதாகக் கருத வேண்டாம். அது தவறான விவரமாகும். அந்த உணர்வுகள் இன்றைக்கு அழிக்கப்பட வேண்டுமென்பதிலே நான் மிகுந்த அக்கறையோடு கவனித்துக் கொண்டிருக்கிறேன். ஒரு உணர்வை இன்றைக்கும் தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியா முழுவதும் பரவலாகப் பரப்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆதி திராவிடர்களுக்குச் சலுகைகளைக் கொடுத்துக் கொடுத்து அதிகமாக வளர்ந்து விட்டார்கள். தடிப்பான வார்த்தைகளிலே ஒரு நண்பர் என்னிடத்திலே சொன்னார்கள். அதிகமாகக் 'கொழுத்து' விட்டார்கள் என்று சொல்கின்ற அளவுக்குகூட வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. அப்படிச் சொல்கின்ற உயர்ந்த ஜாதிக்காரர்கள் நிச்சயமாக நினைத்துப்பார்ப்பதில்லை. இந்தியாவிலே இருக்கின்ற ஜனத்தொகையிலே ஒரு கணிசமான அளவுக்கு இருப்பவர்கள் ஆதி திராவிடர்கள், பழங்குடியினராக இருக்கின்றார்கள். அவர்களுடைய உழைப்பிலேதான். அவர்களுடைய நிறம் கறுந்த பின்னர்தான், இவர்கள் சிவப்பாக இருக்கின்றார்கள். அவர்களுடைய உழைப்பிலேதான் இவர்கள் வளர்ந்துகொண்டு இருக்கின்றார்கள். அவர்களுடைய உழைப்பு இல்லை என்று சொன்னால், இவர்கள் சமுதாயத்திலே வாழ்வதற்குக்கூட முடியாது. சலுகைகளைத் தருகின்ற நேரத்திலே ஒரு உயர்ந்த ஜாதிக்காரர், "இவ்வளவு சலுகைகளைக் கொடுக்கின்றார்களே" என்கின்றார்கள். அந்த சலுகைகளிலே பங்கு கேட்பதற்கு, பாகம் கேட்பதற்கு இன்றைக்கு கோஷங்களை எழுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். அந்த கோஷங்களை நான் மதிக்கிறேன். எங்களுக்கும் உரிமையுண்டு. ஆதி திராவிட மக்களுக்குத் தருகின்ற உரிமை எங்களுக்கும் வேண்டும் என்று சொன்னால், நான் பணிவோடு அரசைக் கேட்பேன். சமுதாயத்தைக் கேட்பேன். இன்றைக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக வரவேண்டி ஒதுக்குகின்ற அதே நேரத்தில், நான்கு ஐயர்களை நகரசுத்தித் தொழிலாளர்களாக மாற்றுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அதிலே ரிசர்வேஷன்

(முற்பகல் 10-50)

கொண்டுவர வேண்டும். ஆதி திராவிடர்கள்தான் நகர சுத்தித் தொழிலாளர்

ளாக இருப்பார்கள். அவர்கள்தான் கக்கூஸ் எடுப்பார்கள், தெருக்
கூட்டுவார்கள் என்ற இழி நிலையை தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில்
போக்கியாக வேண்டும். அவனுக்கு மட்டும் அந்த நிலை இருக்க வேண்டும்,
இவனுக்கு இந்த நிலை இருக்க வேண்டுமென்று சொல்லுவது, தவறான
அடிப்படையிலே வருவதாகும். இன்றைக்கு இழி தொழிலை யார் யார்
செய்கிறார்களோ, அதற்கும் ரிசர்வேஷன் போட்டு, உயர்ந்த சாதிக்காரர்களை
அந்தத் தொழில் செய்யச் சொல்ல வேண்டும். அப்போது அந்தத் தொழில்
செய்ய யாராவது வருகிறார்களா என்று பார்க்கலாம்.

திருமதி தாரா செரியன் : துணைத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய
உறுப்பினர் திரு. இராதா அவர்களுக்கு ஒன்றைக் கூறிக்கொள்கிறேன்.
இதற்கெல்லாம் விதி வேண்டியதில்லை. நாமே சென்று ஏன் துடைப்பத்தை
எடுத்து பெருக்கக்கூடாது? எல்லோரும் இந்தக் காரியங்களைப் பொதுவாகச்
செய்யலாமே.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவரவர்களே, உயர்ந்த
சாதிக்காரர்கள், சினிமா எடுக்கத்தான் இந்தக் காரியங்களைச் செய்யலாம்;
போட்டோ எடுக்கத்தான் செய்யலாமே தவிர, அந்த உணர்வு அவர்களுக்கு
வரவில்லை. வேண்டுமானால் படம் பிடித்துக்கொள்ளலாம். பெரிய மனிதன்
தெருக் கூட்டுகிறான் என்றால், அது படம் எடுக்கப் பயன்படும், சொந்த
வீட்டிலே கக்கூஸ் எடுக்க யாருக்காவது தைரியம் வருகிறதா என்றால் இல்லை.
உயர்ந்த சாதிக்காரனுக்கு அந்தச் சலுகைகள் வேண்டுமென்றால், தாழ்ந்த
சாதிக்காரன் இருக்குமிடத்திற்கு அவர்களைக் கொண்டு வாருங்கள். அப்போது
தான் மதம் ஒழிக்கப்பட்டு, சாதிகள் ஒழிக்கப்பட்டு, ஒரு பகுத்தறிவுச்
சமுதாயத்தை உருவாக்க முடியும். இல்லையென்றால் மாண்புமிகு
உறுப்பினர்கள் திரு. முனுசாமி போன்றவர்கள், திரு. தாஸ் போன்றவர்கள்
சலுகைகள் தாருங்கள், சலுகைகள் தாருங்கள் என்று பிச்சை கேட்கும்
அளவுக்கு இருக்குமே தவிர, சமுதாயத்தில் இருக்கிறவர்கள் தங்களிடமுள்ள
உணர்வுகளை மாற்றிக்கொள்ள மாட்டார்கள். தாழ்ந்த நிலையில்
உள்ளவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவரும்போது, உயர்ந்தவர்களையும்
இவர்கள் நிலைக்குக் கொண்டுவர வேண்டும். அப்போதுதான் அவர்களுடைய
நிலையிலே மாற்றம் ஏற்படும். இன்றைக்கு சாதிகளின் பெயராலே ஏற்படும்
கொடுமைகளை எண்ணிப் பார்த்து, எண்ணிப் பார்த்து வேதனைப்படுகிறோம்.
மாண்புமிகு உறுப்பினர் திரு முனுசாமி அவர்கள் சாதிக் கலவரங்கள் வரும்
இடத்திற்கு வாருங்கள் என்று சொன்னார்கள். நான் தலை நிமிர்ந்து
சொல்வேன், தந்தை பெரியார் அந்த உணர்வுகளை உண்டாக்கிய பிறகுதான்,
இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழகத்தில் வருப்பு



கலவரங்கள், சாதிக் கலவரங்கள் இல்லாத நிலைமைகள் ஏற்பட்டன. அதை ஆதி திராவிடர் சமுதாயத்தில் நெஞ்சார நினைக்கிறவர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி போன்றவர்கள் அதை மறந்திருப்பார்கள். பெரியார் அவர்களின் பணியை மறந்துவிட முடியாது. அப்படி மறந்தால் இந்தச் சமுதாயத்தை உயர்ந்த சாதிக்காரர்கள் அழித்து ஒழித்து, அடிமைகளாக ஆக்கி வைத்திருப்பார்கள் என்று நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பெரியாருடைய அந்தக் கேள்விதான் அவர்களை உணர்வுள்ள மனிதர்களாக்கியது. அந்தப் பெரியார் பெயரிலே இன்றைக்குக் கேட்கிறேன், எந்த அளவுக்கு கல்வியிலே அவர்கள் உயர்ந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். பெரியார் எழுப்பிய தீபத்தின் ஒளியில் இன்றைக்கு அந்தச் சமுதாயத்தைப் பார்க்கும் நேரத்தில், கல்வியிலே 1980-81-லே அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 18 விழுக்காட்டைவிட அதிகமான அளவுக்கு வருகிறார்கள் என்றால், அது சமுதாயத்திற்குக் கிடைத்துள்ள பெரிய பெருமை என்று சொல்லுவேன். இதற்கு முன்னால் பொறியியல் கல்லூரியாக இருந்தாலும், மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும் அவர்களுக்கு என்று ஒதுக்குகிற இடத்திற்குக்கூட ஆட்கள் வரவில்லை என்றால், என்ன காரணம்? அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பல்வேறு சலுகைகளைப் பார்க்கும்போது, உயர்ந்த சாதிக்காரர்களுக்குக்கூட ஆசை வரும். நாம் ஏன் ஆதி திராவிடர்களாகப் பிறக்கக்கூடாது என்று ஆசை வரும். சலுகைகளைப் பார்க்கும்போது, அவ்வளவு சலுகைகள் இருக்கின்றன. இவை அவர்களுக்குப் போய்ச் சேருகின்றனவா? அந்த அளவுக்கு வளர்ந்துவிட்டார்களா என்றால், இன்னமும் அந்தச் சமுதாயம் வளரவில்லை. அவர்கள் வளர்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த முயற்சி முழுமை பெறுவதிலே அரசு அக்கறை கொண்டிருக்கிறது. கல்விக்கூடங்களிலே 18 விழுக்காட்டுக்கு மேலே அவர்கள் சேரும் நிலைமை வந்திருக்கிறதென்றால், நாம் நிச்சயமாகப் பாராட்ட வேண்டும். அதேபோல வேலை வாய்ப்புகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் ஒரு கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கும்போது, மகிழ்ச்சி அடைகிறேன். வேலை வாய்ப்பைப் பொறுத்தவரையில், சமுதாயத்திலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு, ஆதி திராவிடர்களுக்கு 18 சதவிகிதம் தர வேண்டுமென்று சொல்லும்போது, அதற்கான கணக்கைப் பார்த்தால், இன்னும் 18 சதவிகிதம் அளவுக்கு வரவில்லை, 12 சதவிகிதத்தைத் தாண்ட முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று புள்ளிவிவரம் காட்டுகிறது. இதனைப் பார்க்கும்போது, அவர்கள் எவ்வளவு கீழ் நிலையில் இருக்கிறார்கள் என்பதை நினைத்து வேதனைப்படுகிறேன். ஆதி திராவிடர் சமுதாயத்தைச்

சேர்ந்தவர்கள் அதிகமான அளவுக்கு இருந்தும், அரசிலே அவர்களுக்கு வாய்ப்பு கொடுத்தும், வேலைக்கான தகுதி பெறவில்லை. இன்றைக்கு தமிழக அரசு சலுகைகள் தருகிறது, மத்திய அரசு சலுகைகள் தருகிறது. ஆக சலுகைகளை அரசுகள் தருகின்றனவே தவிர, அரசு தரும் சலுகைகளைப் பற்றிக் கேள்வி கேட்கும் உயர்ந்த சாதிக்காரர்களைக் கேட்கிறேன். எத்தனை தனியார் கம்பெனிகளில் ஆதி திராவிடர்களைச் சேர்த்திருக்கிறார்கள்? நகர சுத்தித் தொழிலாளியாக, கூட்டுகிறவனாக இருப்பானே தவிர, டி.வி.எஸ்., சிம்ப்சன் போன்ற நிறுவனங்களில் ஒரு ஆதி திராவிடர் கிளார்க்-ஆக உட்கார வைக்கப்பட்டிருக்கிறானா என்ற கேள்வி ஆதி திராவிட சமுதாயத்தில் எழுகிறதா என்றால் இல்லை. ஜாயின்ட் செக்டார் என்று சொல்லப்படும், அரசு தரும் பணத்தில் நடைபெறும் தொழில்களிலும் ஆதி திராவிட மக்களுக்குப் பணிகள் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப் பணிகள் தருவதன் மூலமாக இந்தச் சமுதாயத்தை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும். அப்படி உயர்ந்த நிலைக்குக் கொண்டுவரும்போது, என்ன சங்கடமான நிலைமை என்றால், ஒரே இடத்தில் குடி வைக்கும் துரதிருஷ்ட வசமான நிலைமை இருக்கிறது, அதை மாற்றி அவர்களைப் பிரித்துவிடுங்கள். எல்லோருடனும் சேரும் வாய்ப்பைத் தாருங்கள். அவர்களுக்கு வீடுகள் கட்ட பல்வேறு திட்டங்களைப் போட்டிருக்கிறோம். ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கும்பகோணம் நகராட்சியில் ஆதி திராவிடர்களுக்குக் குடியிருப்பு இருக்கிறது. அதற்கு பழைய மீன் மார்க்கெட் என்று பெயர். இடிந்து தரையிலே விழக்கூடிய நிலையில் உள்ள கட்டிடத்தில் அவர்கள் குடியிருக்கிறார்கள். பன்றி ஒரு பக்கம் படுத்திருக்கும். இவன் ஒரு பக்கத்தில் படுத்திருப்பான். இரண்டுக்கும் வித்தியாசம் தெரியாத நிலைமை இருக்கும். இந்த இழி நிலைமையைப் போக்க முயற்சி எடுத்தோம். மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள், ஹவுசிங் போர்ட் மூலம் அவர்களுக்கு வீடு கட்டப் பணம் தருகிறோமென்று சொன்னார்கள். நகராட்சிக்கும், அவர்களுக்கும் ஒத்து வராததால், வீடுகளைக் கட்டித் தர முடியவில்லை. நான் பணிவோடு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வேன். ஆதி திராவிடர்களுக்கு, நகர சுத்தித் தொழிலாளர்களாக இருப்பவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தால், அவர்களுடைய சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்துகொள்ளலாம். அவர்களுக்கு அதிகமான சலுகைகளைத் தர வேண்டியதில்லை. உலக வங்கியிடமிருந்து, வேறு எங்கேயாவது கடன் வாங்கி, நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு நல்ல குடியிருப்புகளைக் கட்டித் தர வேண்டும். அவர்கள் அழகான இடத்
இருக்க வேண்டும்.



அவர்களுக்கு வேண்டிய கையுறைகள் வாங்கித் தருகிறோம். நவீன
ண்டிகள் வாங்கித் தருகிறோம், மலத்தைத் தூக்கக்கூடாது, தள்ளிக்கொண்டு
பாக வேண்டும், அதற்கு வண்டிகள் தருகிறோம் என்று சொல்லி அந்தப்
ணியை நவீனப்படுத்தும் முயற்சி பாராட்ட வேண்டிய முயற்சி. மாண்புமிகு
அமைச்சரவர்கள் நல்ல இளைஞராக இருப்பதால், கொஞ்சம் சுறுசுறுப்போடு
இருக்கிறார்கள். ஆகையால் வெளி நாடுகளிலே விஞ்ஞான ரீதியில் செய்யப்படும்
நகர சுத்தித் தொழிலாளியின் வேலைகளைத் தெரிந்துகொண்டு, அதைப்போல
தமிழகத்தையும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதில் தனி
முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசுப் பணிகளுக்கும், தமிழக அரசுப் பணிகளுக்கும் பயிற்சி தர
திட்டங்களை வைத்திருக்கிறார்கள். அதிலே இன்னும் முனைப்பு இருக்க
வேண்டும். ஆரம்பக் கல்வி முறையில் தரமான கல்வியைக் கொடுத்து, அவர்கள்
கல்வியிலே உயர்ந்த நிலைக்கு வந்து, அவர்களுக்கு அளித்துள்ள சலுகைகளைப்
பயன்படுத்திக்கொள்ளும் நிலைமைகள் ஏற்பட வேண்டும்.

தீண்டாமைபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எந்த அளவுக்குத் தீண்டாமை
இருக்கிறது என்பது தெரியாது. தீண்டாமை என்ற பெயரில் வழக்கு
மன்றத்தில் வழக்குகள் நடந்து, முடிந்திருக்கின்றன என்று போடப்பட்டிருக்
கிறது. இதிலே என்ன வேதனை என்றால், ஒரு ஆதி திராவிடன்
'தீண்டாதவன்' என்று சொல்லியதற்காக, யார்மீது வழக்கு போட்டிருக்
கிறார்கள் என்றால், அவனோடு வாழ்ந்து கொண்டிருக்கிறவன்தான் வருவான்.
இதில் உயர்ந்த சாதிக்காரன் மாட்ட மாட்டான். மாட்டியிருந்தாலும், 9,000
கேஸ்களிலே 4,500 கேஸ்கள் அவன் கேஸ்கள், அடிபட்டிருக்கும். பக்கத்திலே
அவனுக்குத் துணை செய்கிற, அவனைப்போல் இருக்கிற சாதிக்காரர்களைக்
கொண்டு போய் வழக்கு போடுவதை கவனிக்க வேண்டும்.

தீண்டாமையைப் பொறுத்தவரைக்கும், அதுபற்றி பிரச்சாரம் செய்ய
புரட்சித் தலைவர் அவர்களின் அரசு பல்வேறு திட்டங்களை வைத்திருக்கிறது.
கலப்புத் திருமணம்பற்றிச் சொல்லி, அவர்களுக்குச் சலுகைகள் கொடுத்திருக்
கிறார்கள். இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர்களிடத்தில் ஒன்று
கேட்டுக்கொள்வேன். கலப்புத் திருமணம் செய்து கொண்டிருக்கிறவர்கள்,
தந்தையின் சாதியையோ, தாயின் சாதியையோ தெரிவித்தால் எழுதிக்
கொள்ளலாமென்று இருக்கிறது. மீண்டும் அவர்களை சாதிக் குழியிலே
தள்ளாதீர்கள். கலப்புத் திருமணத் தம்பதிகள் என்று போடுங்கள். கலப்புத்
திருமணத் தம்பதிகள் பாரம்பரை என்கிற ஒரு பாரம்பரை வரட்டும்.
மீண்டும் அவனை அந்த
வர்களோடு உள்ள ஒரு சம்பந்தம் வரட்டும்.

[திரு. எஸ். ஆர். இராதா] [1983 ஏப்ரல் 12

(முற்பகல் 11-00)

ஜாதிக்குச் சொந்தக்காரன் ஆக்க வேண்டாம். அந்த ஜாதிக்குப் போய்—தந்தை பெரிய ஜாதி என்றால் அந்த ஜாதிக்குப் போவதும்—தாய் பெரிய ஜாதி என்றால் அந்த ஜாதிக்குப் போவதும்—மீண்டும் ஜாதிக் கொடுமைக்கு அவன் ஆளாகிற நிலைமை வர வேண்டாம். கலப்புத் திருமணத் தம்பதிகள் என்று வந்தால், பிற்கால சமுதாயத்திலே அவன் ஒரு பெரிய நிலைமைக்கு வரக்கூடிய சூழ்நிலைகள் உருவாக வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்.)

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் இரண்டாவது முறையாக மணி அடித்து விட்டார்கள் என்பதால், வேகமாகச் சொல்கிறேன். இந்தக் கலப்புத் திருமணத்தை எந்த அளவுக்கு உற்சாகப்படுத்துகிறோமோ அந்த அளவுக்கு ஒரு பகுத்தறிவு சமுதாயம் எதிர்காலத்திலே உருவாவதற்கு இது அடிப்படையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல இங்கே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசிலேயிருந்து "விசைத் தறிகளை ஆதி திராவிடர்களுக்குத் தர வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் அவையில் இருந்திருந்தால், விசைத் தறிப் பிரச்சினைபற்றி அவரோடு பேச வேண்டுமென்று ஆசைப்பட்டேன். அதிலே ஆதி திராவிட மக்களுக்காக விசைத் தறி தரும் ஒரு நல்ல திட்டத்தை வைத்திருக்கிறார்கள். அதை தமிழக அரசு செய்யவில்லை என்றால், "மத்திய அரசு ஆதி திராவிடர்களுக்குச் சலுகை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் தமிழக அரசு அதை வாங்க மறுத்து விட்டது" என்கிற குற்றச்சாட்டுக்கு நாங்கள் ஆளாவோம். ஆனால் விசைத் தறி என்று வருகிறபோது அதை திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் எதிர்க்கிறார்கள் என்று சொன்னால், நான் பணிவோடு ஒன்றைச் சொல்வேன். எங்களுடைய இயக்கத்தைப் பொறுத்தவரையில், என்னைப் பொறுத்தவரையில், ஆரம்பக் காலத்திலிருந்து விஞ்ஞான யுகத்திற்குப் போவேனே. தவிர, பழைய கால மனிதனாக மீண்டும் கதருக்கே போகிற நிலைமைக்கு நாங்கள் வர மாட்டோம். நாங்கள் ஒழிப்பதாக இருந்தால், முதலில் கதரை ஒழித்தாக வேண்டும். கதரை ஒழித்ததற்குப் பின்னாலே கைத்தறி ஒழிக்கப்பட வேண்டும். கைத்தறி ஒழிந்ததற்குப் பின்னாலேதான் மில்களில் வேலை செய்கிற நிலைக்கு அந்தக் கைத்தறி நெசவாளனை



1983 ஏப்ரல் 12]

**திரு. க. இராமமூர்த்தி:** ஒழிக்க வேண்டும் என்பது எங்களுடைய கருத்தல்ல. அது அவருடைய கருத்தாக இருந்தால் எனக்கு ஒன்றுமில்லை. அதை ஒழிக்கிறதாக இருந்தால், உங்களுடைய முதலமைச்சரையும், உங்களுடைய கட்சியையும் ஒழித்து கதர் இலாகாவை ஒழிக்கிற தைரியம் உங்களுக்கு முதலில் வரட்டும். ஒன்றைச் செய்து விட்டு அதற்கு எதிராக பேசிக்கொண்டிருக்கிற மனச்சாட்சியற்ற ஒரு நிலைமை, ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கைக்கு விரோதமாகப் பேசிக் கொண்டிருக்கிற ஒரு மனப்போக்கு, உங்களிடத்தில் மலிந்து கிடக்கிறது. அது உங்களுடைய நிலைமையைக் காட்டுகிறது.

**திரு. எஸ். ஆர். இராதா:** நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கோபமாக, தடிப்பான வார்த்தைகளையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

**திரு. க. இராமமூர்த்தி:** தடிப்பான வார்த்தைகள் என்றால் உங்களை விட அதிகத் தடிப்பான வார்த்தைகள் கண்டிப்பாக வரும். திமிரும், ஆணவமும் உங்களுக்கு இருக்குமானால், அதைவிட அதிகமாக இங்கேயிருந்து வரும். தடிப்பான வார்த்தை என்றால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** கதரைப் பற்றியோ, கைத்தறியைப் பற்றியோ அவருடைய கொள்கையைப்பற்றிப் பேசுகின்றபோது உறுப்பினர் தன்னுடைய கருத்துக்களைச் சொல்கிறார். அவருடைய தனிப்பட்ட கொள்கை என்கின்ற வகையிலேதான் கருத்துக்களைச் சொல்கிறார். அதற்காக வந்து கதர் இலாகாவை ஒழித்து விடுங்கள், முதலமைச்சரை . . . என்றெல்லாம் பேசுவது சரியில்லை.

(திரு. இராமமூர்த்தி இருக்கையிலிருந்து எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பதில் கூறிக்கொண்டிருக்கிறார்.

**திரு. க. இராமமூர்த்தி:** காட்டுமிராண்டித்தனமாகப் பேசக்கூடியதாக . . .

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** நான் எப்படிப் பேச வேண்டுமென்று நீங்கள் சொல்கிறீர்கள். நான் நின்று பேசிக்கொண்டிருக்கிறேன் அல்லவா? இதுதான் முறை என்று சொன்னால் என்ன அர்த்தம்? முதலில் நான் சொல்வதை நீங்கள் கேளுங்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உட்கார வேண்டும்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** வேறு மாதிரி பேசுவதாக இருந்தால் வெளியே பேசிக்கொள்ளலாம்.

**திரு. க. இராமமூர்த்தி:** அப்படியே செய்வோம்.

**திரு. எஸ். முத்து:** மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, விஞ்ஞானயுகம் வளர்ந்தால்தான் இந்த நாடு வளரும் என்கிற நோக்கத்தோடு கருத்துக்களைச் சொன்னார். வேறு எந்த நோக்கத்தோடும் அவர் கருத்துக்களைச் சொல்லவில்லை. கைத்தறியோ, கதரோ இந்த நாட்டிலே மக்களை வளர்க்க முடியாது, விஞ்ஞான அறிவு வளர வேண்டுமென்ற நோக்கத்தோடு அவர் கருத்துக்களைச் சொன்னார். அதில் வேறு எந்த உள்நோக்கமும் கிடையாது.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, முக்கியமான அடிப்படைக் கருத்துக்களைப் பற்றி, கொள்கைகளைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். எதிர்க் கட்சியிலிருந்து பேசுகிறபோழுது, அதை எதிர்க் கட்சியினுடைய கருத்தாக, அந்த மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்தாக ஏற்றுக்கொள்வது வழக்கம். ஆளுகிற கட்சியிலேயிருந்து ஓர் உறுப்பினர் பேசுகிறபோது, அவர் சொல்கிற கருத்துக்கள் அனைத்தும் அந்தக் கட்சிக்குச் சொந்தமானதாகவோ அல்லது அவர் சார்ந்திருக்கிற கட்சி நடத்துகிற அரசுக்குச் சொந்தமானதாகவோ எண்ணப்படுவது போல் ஒரு நிலைமை தோன்றிவிடுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசிக் கொண்டு வரும்போது இங்கே பல கருத்துக்களைத் தெரிவித்துக்கொண்டு வந்தார்கள். அது அவர்கள் எண்ணுகிற கருத்துக்கள், அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற கருத்துக்கள். அந்தக் கருத்துக்களை எந்த அளவுக்கு கட்சி ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பது ஒரு பிரச்சினை. ஒரு கட்சி ஏற்றுக் கொண்டிருக்கிற அத்தனை கருத்துக்களையும் அந்த கட்சியே நடத்துகிற அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறதா என்பது இன்னொரு பிரச்சினை. ஆகவே அரசுக்கும், கட்சிக்கும், அந்தக் கட்சிக்கு உள்ளே இருக்கிற ஒரு உறுப்பினருக்கும் ஆன மூன்று நிலைமைகள் இருக்கின்றன. மூன்று கடமைகள் இருக்கின்றன. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசிக் கொண்டு வரும்போது கதரை ஒழிக்க வேண்டும், கைத்தறியை ஒழிக்க வேண்டும் என்று சொல்லும்போது, பொதுவாக விஞ்ஞானம் வளர வேண்டும், விஞ்ஞான வளர்ச்சி வளர வேண்டும் என்கிற கருத்துக்களின் அடிப்படையில்தான் அவர்கள் கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். அப்படி பார்க்கிறபோது விஞ்ஞானம் வளர வேண்டுமென்று கம்ப்யூட்டரைக் கொண்டு வருகிறபோது, நாமே தான் அதைத் தடுக்கிறோம். கம்ப்யூட்டரைக் கொண்டு வராதே, ஆள் சக்தியைக் குறைக்காதே என்றெல்லாம் சொல்கிறார்கள். இந்தியா போன்ற ஜனத்தொகை பெருகியுள்ள ஒரு நாட்டில் எல்லாவற்றையும் விஞ்ஞான



கண்கொண்டு இயந்திரமயமாக்குவது என்பது ஒரு தத்துவமாக இருக்கலாம். ஆனால் அதை நடைமுறைப்படுத்துகிறபோது எவ்வளவு பெரிய சிக்கல்கள் வருகின்றன என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். கைத்தறியை ஒழித்து விட்டுதான் மறு வேலை பார்ப்பது என்றால், அறிஞர் அண்ணா போன்றவர்கள் கைத்தறித் துணிகளைத் தோளிலே சுமந்து கைத்தறியைக் காப்பாற்ற வேண்டிய நிலை வந்திருக்காது. அதைப்போலத்தான் இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு—கதர் விற்பனையை அதிகப்படுத்தி, இதன் மூலம் கிராமப்புறத்தில் வேலைவாய்ப்பை அதிகப்படுத்தி, இதன் மூலம் தாழ்த்தப்பட்ட, ஆதி திராவிட மக்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பினை அதிகப்படுத்தியிருக்கிறார்கள் என்கிற புள்ளிவிவரங்களைப் பார்க்கிற நோக்கில்—மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் கதரை ஒழித்து விட்டுதான் மறு வேலை பார்ப்பது என்று தெரிவித்தார்களே, அந்தக் கருத்து அவருடைய சொந்தக் கருத்தே தவிர அரசினுடைய கருத்து அல்ல. அப்படி ஏற்றுக்கொண்டு அல்லது கருதிக் கொண்டு கொஞ்சம் கடுமையான வார்த்தைகளை அல்லது உணர்வுகளை மாண்புமிகு முதலமைச்சர் மீதும் அரசின் மீதும் நீங்கள் சுமத்த வேண்டாம் என்பதுதான் நான் இங்கே கேட்டுக் கொள்ளும் பணிவான வேண்டுகோள். கோபப்படாமல் மாண்புமிகு உறுப்பினர் ஒரு கருத்தைத் தெரிவித்தால், மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் தங்களுடைய கருத்தைச் சொல்லலாம். ஆகவே உறுப்பினர் சொல்கிற கருத்து அரசின் கருத்து அல்ல.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அமைச்சரே இங்கே கேட்டுக்கொண்டிருந்தார். நான் முதலமைச்சர் மீது என்னுடைய கோபத்தைக் காட்டவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன வார்த்தையைச் சொன்னார் என்பதை மாண்புமிகு அறநிலைய அமைச்சர் கேட்டுக்கொண்டிருந்தார். ஆகவே திரும்பவும் அந்த வார்த்தையை நான் சொல்ல வேண்டாமென்று நினைக்கிறேன். அதுதான் அவருடைய கருத்து என்றால், அந்தக் கருத்துக்கு நேர் மாறாக இந்த அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறதா? கதர் வாரியத்தை ஊக்குவித்து, அதற்காக தனிச் சலுகை கொடுத்து, அதுகுறித்து பெருமிதமடைகிற அளவுக்கு சாதனைப் பட்டியல் போட்டு அறிவிப்பு வேறு செய்திருக்கிறதே இந்த அரசு. அப்படி என்றால் அவர் கருத்துக்கு நேர் எதிரான கருத்துள்ள ஒரு ஆட்சியை இன்றைக்கு முதலமைச்சர் தலைமையில் நடத்திக்கொண்டிருக்கிறார்களா? அதை முடித்து வைத்துவிட்டு கதரிடம் வாருங்கள் என்பதற்காகத்தான் நான் அந்த வார்த்தையைப் பயன்படுத்தினேன். அந்த வார்த்தைகளை

முதலமைச்சருக்கு எதிராகவோ, ஆட்சிக்கு எதிராகவோ பேசப்பட்ட வார்த்தைகள் அல்ல. மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர் திரு. இராதா அவர்கள் சொல்லிய வார்த்தைகளுக்கு எதிரான வார்த்தைகள்தான் அவை.

**திரு. சோ. ஆறுமுகம்:** முதியோர்களாக இருந்து இந்த மேலவையை நடத்த வேண்டியவர்கள் எல்லோரும் இளைஞர்களாக இருக்கிறோம். (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் கொஞ்சம் பேசினால், கொஞ்சம் சுறுசுறுப்பாக அவர் ஏதாவது பேச வேண்டும். அதைக் கேட்க வேண்டுமென்று இங்கே எல்லோரும் நினைப்பது உண்டு. ஏதோ அவர் இடையிலே சொன்ன கருத்துக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி சொன்ன கருத்துக்கும் கொஞ்சம் வேகம் வந்துவிட்டது. இருந்தாலும் இதனை இந்த அளவிலே விட்டுவிட்டு "வெளியே வாருங்கள் பார்த்துக்கொள்ளலாம்" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன வார்த்தையையும் அதையொட்டி இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி சொன்ன வார்த்தையையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுவது நல்லது.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** இந்த அவையை கூடுமானவரை எவ்வளவு கண்ணியமாக இந்த அரசு நடத்திக்கொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி இந்த அவையிலே அதிகபட்சமான நேரத்தை எடுத்துக்கொண்டு பேசிக்கொண்டிருப்பதையும் நாமெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இவை எல்லாம் ஒரு கருத்து என்கின்ற அடிப்படையில் நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் திடீரென்று அவர் பேசிக்கொண்டு வருகிறபோது நானும் கேட்டுக்கொண்டு தான் இருந்தேன். "கதர் இலாகாவை ஒழியுங்கள், முதலமைச்சரை . . ." என்று தயவுசெய்து என்ன பேசினார் என்பதையும், அதிலிருந்து எவ்வளவு கடுமையான வார்த்தைகளை எல்லாம் பயன்படுத்தியிருக்கிறார் என்பதையும் பார்க்கலாம். அதைக் கேட்டுக்கொண்டிருப்பது என்கின்ற நிலைமை நீடிக்குமேயானால், அது எங்களைப் பொறுத்தவரையில், நடக்க முடியாத ஒரு விஷயம். காரணம் அதை பல முறைகளில் நாங்கள் எல்லாம் பார்த்துக் கொண்டிருப்பவர்கள். நாங்கள் நிதானமாகவே, பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொண்டிருக்கிறோம். அவர்களுடைய கட்சியைச் சார்ந்த ஒருவர் பேசினார். பிறகு எங்களுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் பேசிக் கொண்டிருந்தார். அவர் ஒரு ஸ்வுட் இங்கிங் செய்துகொண்டிருந்தார். என் மகாராஷ்டிராவில் விசைத் தறிகளை அதிகமாகப் பயன்படுத்தி அங்கே கைத்தறிகளினுடைய எண்ணிக்கையைக் குறைக்கவில்லையா? காங்கிரஸ் சர்க்கார்தான் அதைச் செய்தது. அதை மறுக்க முடியுமா? மில்கள் எல்லாம் வட நாட்டில் எவ்வளவு வந்திருக்கின்றன? அதற்கு முன்பு எல்லாம் கைத்தறிகள்தான் இருந்தன.





வீவிங் மில்ஸ் ஆக இன்றைக்கு வட நாட்டிலே வந்திருக்கின்றன. ஆனால் தமிழ் நாட்டிலே ஸ்பின்னிங் மில்சைத்தான் நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். அப்படி என்றால், இவையெல்லாம் காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கைக்கு விரோதம் இல்லையென்று சொல்லிவிட முடியுமா? இதை ஒரு அரசினுடைய அணுகுமுறை என்று சொல்லலாம். இப்படிச் சொல்லலாமே தவிர, இதை விட்டுவிட்டு இவர்களே நேரடியாக கதருக்குப் பிரதிநிதிகள் போலவும், மத்திய அரசுக்குப் பிரதிநிதிகள் போலவும் இங்கே பேசுவது, அதை நாங்கள் கேட்டுக் கொண்டிருப்பது என்பதெல்லாம் நிச்சயமாக சரியாக வராது. ஒவ்வொருவரும் தங்களுடைய கருத்துக்களை, உணர்வுகளை, சிந்தனைகளை உரிய முறையில் வெளிப்படுத்தலாமேயொழிய இம்மாதிரிச் செய்வது சரியாக இருக்காது. அந்த அடிப்படையில் எந்தக் கோணத்திலேயிருந்தும் எங்களுடைய கருத்துக்களை, சிந்தனைகளை நாங்கள் வைக்கத் தயாராக இருக்கிறோம். "in any way, in any manner, in any state, whether inside the house or outside the house....in any manner". என்கிற அடிப்படையில் அப்படிப்பட்ட நிலைமைகளை நீடித்து விடக் கூடாது என்கிற உணர்வுகளைத் தெரிவிப்பதற்காகத்தான் என்னுடைய கருத்துக்களைக் கூறினேனே தவிர, வேறு ஒன்றுமில்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** இதிலே நானாகத் தலையிட வேண்டிய அவசியம் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் என்னைக் குறித்துச் சொன்ன பிறகு தான் நான் அவைக்கு வந்தேன். கதரைப்பற்றி அவரிடம் எத்தகைய வார்த்தைகள் வந்தன என்பது இங்கே இருக்கிற எல்லோருக்கும் தெரியும்.

(முற்பகல் 11-10)

நான் சொன்ன வார்த்தைகள் திரு. இராதா சொல்லியதற்கு பதிலாக வந்த வார்த்தைகள். என்ன வார்த்தைகள் வந்தன என்று தெரியும். facing a party என்றால் என்ன என்பதும் எனக்குத் தெரியும். நான் வீட்டை விட்டு என்றைக்கு பொது வாழ்வுக்கு வந்தேனோ, அன்றைக்கே எல்லாவற்றுக்கும்தான் வந்திருக்கிறேன். அதோடு மட்டுமல்ல. So far I had the opportunity of being only in the opposition. அதனால் இதற்காகவெல்லாம் தயங்கி வரவில்லை. இந்த அவையின் கண்ணியத்தைக் காப்பாற்றுவதில் வேறு யாருக்கும் சற்றும் குறைந்தவன் நான் இல்லை. அதே நேரத்தில் கட்சியின் பெயர் சொல்லி, என் பெயரையும் சொல்லி அழைத்ததற்குப் பின்னாலும், நான் பதில் சொல்லாமல் இருப்பேன் என்று எதிர்பார்த்தால், அதற்கு நான் அல்ல ஆள்.

[1983 ஏப்ரல் 12

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் உங்களுடைய பெயரைச் சொல்லி அழைப்பது என்பது தவறு என்று எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. அவர் வாடிக்கையாகப் பேசுகிறபோது அவையில் சுறுசுறுப்பு ஏற்படுத்த வேண்டுமென்ற காரணத்திற்காக விளையாட்டாக உங்களை நேரடியாக அழைத்துப் பேசுவதை வைத்துக் கொண்டிருக்கிறார். அதிலே நீங்கள் ஆவேசப்படுவது, உணர்ச்சி வசப்படுவது தேவையல்ல என்பதுதான் என்னுடைய கருத்து. அறிவோடு அறியாமை கண்டற்றால் என்று சொன்னதைப்போல், நேற்றைக்கு இருந்த கருத்து இன்றைக்கு தவறு என்று அறிவு நமக்குச் சொல்லும்போது அதைச் சொல்லக்கூடாது என்று தடைப்படுத்தக் கூடாது என்று சொல்வது தான் என்னுடைய கருத்து.

**திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் வாடிக்கையாகப் பேசுவது என்ற வார்த்தை பொருத்தமானது அல்ல. அது வேறு அர்த்தத்தைத் தரும். முறையாகப் பேசுவது என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** சரி. அவருடைய முறையாக அப்படிப் பேசுவார்.

**திரு. ஏ. ஜே. தாஸ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் பதில் பேசுகிறபோது நாம் இந்த அவையிலும் சந்திப்போம், வெளியிலும் சந்திப்போம் என்று . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அமைச்சருடைய பேச்சுக்கு தவறாக நோக்கம் கற்பிக்காதீர்கள். நீங்கள் அப்படிப் பேசுவதானால், இங்கே பேச வேண்டாம், வெளியிலே போய் பேசலாம் என்றுதான் பேசினார். தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்.

**திரு. எம். ஆர். இராதா:** என்னுடைய கருத்தின் அடிப்படையில் சில மோதல் ஏற்பட்டாலும்கூட, எனக்கு இருக்கிற ஒரேயொரு மகிழ்ச்சி எனக்குக் கோபம் . . .

**திரு. சோ. ஆறுமுகம்:** அப்படியானால் வெளியிலே வாருங்கள், பார்த்துக் கொள்ளலாம் என்ற வார்த்தை, இந்த முறையைப் பின்பற்றி விவாதிக்கிறபோது [illegible] வார்த்தை வந்திருக்கிறது. அதை நீக்குவதுதான் முறையாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1983 ஏப்ரல் 12]

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்தை இந்த அவையிலே விதிகளுக்குட்பட்டு சொல்கிறபோது, அதை இங்கே சொல்ல முடியாத நிலை ஏற்படுகிறபோது, வெளியே எந்தெந்த முறையில் சொல்ல விரும்புகிறீர்களோ, அப்படி ஒரு அரசியல் கட்சியை நடத்துகிறவர்கள் சந்தித்தாக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னபோது, அதையெல்லாம் எதிர்பார்த்து பொது வாழ்க்கைக்கு வந்ததாகச் சொன்னார். நான் அதையெல்லாம் எதிர் பார்த்து வந்து, என்னுடைய 23 வயதிலே பாளையங்கோட்டை சிறைச் சாலையிலே 45 நாள் இருந்து பார்த்தவன். விலா எலும்புகளை எண்ணுவதைப் போல, சிறைச்சாலையின் கம்பிகளை எண்ணத் தயாராக இருந்தவர்கள்தான். போர்க் களத்திலே நின்று பார்த்தவர்கள்தான். ஆக அரசியலுக்கு வருகிற எல்லோரும் அதை எதிர்பார்த்துத்தான் வந்திருக்கிறோம். இந்த அவையிலே எடுத்துக்கொண்ட பொருள்பற்றி விவாதிக்கிற நேரத்தில், இந்த அவையின் விதிகளுக்கு உட்பட்டு பேசுகிறோம். அதை மீறித்தான் வெளியே பேசுவோம் என்றால், சந்தித்துக்கொள்வோம். அந்த வார்த்தைகள் இருப்பதில் ஒன்றும் தவறு இல்லை. நீக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக நாம் எல்லோரும் மனிதர்கள்தான். சில நேரங்களில் வேகம் வரும்போது, எந்தப் பொறுப்பில் இருந்தாலும் கௌரவப் பிரச்சினை வந்து, நாம் சந்தித்துக் கொள்ளலாம் என்பதைப் போல ஒரு நிலைமை மேலவையில் இதுவரையில் வந்ததில்லை. நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், அவை முன்னவராக இருக்கக்கூடியவர் மிகவும் பொறுமை வாய்ந்தவர்கள். இங்கே வேண்டுமானாலும், வெளியே வேண்டுமானாலும் எந்தெந்த விதத்தில், எந்தெந்த இடத்தில், எப்படி வேண்டுமானாலும் சந்தித்துக்கொள்ளலாம் என்பதைப்போல சொல்வது, என்னைக்கூட சங்கடத்தில் ஆழ்த்தியது. நான் கேட்டுக்கொள்வது, எதிர்க் கட்சியில் இருக்கக்கூடியவர் சொல்லிவிட்டால், அவை முன்னவர் என்ற முறையில் எல்லோருக்கும் அமைச்சரவர்கள் பொதுவாக இருக்கக்கூடியவர் என்ற முறையில், தயவுசெய்து 'நாங்கள் தயார்' என்பதுபோன்ற உணர்வுகளுக்கு ஆளாகிவிடக்கூடாது. உணர்வுகளுக்கு நாம் முதன்மை கொடுக்கவேண்டுமானால் நம்முடைய கட்சியா, வேறு கட்சியா என்று இல்லாமல், இவ்வளவு சுமுகமாக அவையை நடத்திக் கொண்டு வந்திருக்கிற நேரத்தில் தயவுசெய்து அந்த அளவுக்குச் செல்லவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். எது வந்தாலும் ஆளும் கட்சிக்கு, அதற்குண்டான கொள்கைதான்; எதிர்க் கட்சியைப் பொறுத்தவரையில், அதற்குண்டான கொள்கைதான். மத்திய அரசு மாநில அரசு என்ற பிரச்சினை

வந்தபோது அவர்கள் தலையிட்டார்கள். இதிலே வேகம் ஒருவருக்கொருவர்
வந்து சந்தித்துக் கொள்ளலாம் என்ற நிலைமை ஏற்பட்டது நியாயம் அல்ல.
உணர்வுகளை ஒவ்வொருவரும் குறைத்துக்கொள்ள வேண்டுமென்ற
வேண்டுகோளை விட்டு நான் அமைகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,
என்னுடைய கருத்தின் அடிப்படையில் எழுந்த விவாதத்தில் என்னைப்பற்றிச்
சிந்திக்கிற நிலைமைக்கு நான் வந்துவிட்டேன். பொதுவாக பொறுமையாக
இருப்பது எவ்வளவு கஷ்டம் என்பதை இன்றைக்குத்தான் என்னால் உணர
முடிந்தது. அதற்காக மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு
நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னை அவர் பொறுமைக்கு ஆளாக்கி
விட்டார். கருத்துக்களைச் சொல்கிறோம், விவாதங்களை எழுப்புகிறோம்,
சில கருத்துக்களை பேசுகிறோம் என்று சொல்கிற நேரத்தில் நான்
கருத்தைச் சொல்வதாலேயே பெரிய ஆபத்து வந்துவிடப் போவதில்லை.
அதற்குப் பின்னாலே அவர்கள் மாற்றுக் கருத்து சொல்லலாம்.
சிந்தனையைக்கூட எழுப்பலாம். நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்கிற
நேரத்தில் குறிப்பிட்டுக் கூறுவதற்குக் காரணம், மத்திய அரசு சில
திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று மாநில அரசுகளை வற்புறுத்து
கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஒரு மாநில அரசுக்குக் கடமை
இருக்கிறது. அப்படி கடமையைச் செய்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுச்
சொன்னேன். நான் அதிலே ஏற்றுக்கொண்ட கொள்கை என்று சொன்னால்,
நான் அந்தக் கைத்தறி சமுதாயத்தைச் சார்ந்தவன் என்ற அடிப்படையில்
சில கருத்துக்களைச் சொல்கிறேன். அப்படிச் சொல்கிற கருத்துக்கள் தவறாக
இருந்தால், அதற்கு மாற்றுக் கருத்து சொல்லலாம். அல்லது எனது
சிந்தனையைக்கூட மாற்றி அமைத்துக்கொள்ளலாம். ஆனால் கோபப்படுகிற
அளவுக்கு, உணர்ச்சி வருகிற அளவுக்குச் செல்வது என்பது சரியல்ல. இந்த
அவைக்கு நான் வந்ததற்குப் பின்னால், எனக்குக் கோபம் வருவதில்லை.
காரணம் இங்கே இருப்பவர்களைப் பார்க்கிறபோது, கோபப்பட வேண்டுமா
என்று நினைக்கிற நிலைமை வருமே தவிர, கோபமே வருவதில்லை. ஆனால்
பேரவையிலே இருந்தால் என்னுடைய உணர்ச்சிகள் வேறுவிதமாகத்தான்
வரும். காரணம் அந்த அவையின் நிலை அது. இந்த அவையின் நிலை,
எவ்வளவு உணர்ச்சியாக வந்தாலும் உணர்ச்சி இல்லாமலேயே வெளியிலே
போகக்கூடிய அளவுக்குத்தான் இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில்,
பொறுமைசாலியாக மாற்றி, என்னுடைய கருத்துக்களுக்கு எந்தக் கருத்து
மாற்றாகச் சொன்னாலும், அதை எந்த நேரத்தில் சொன்னாலும், அதை
ஏற்றுக்கொள்பவன். கருத்துக்குக் கருத்து சந்திப்பதற்கு நான் என்றைக்கும்
தயாரானவன். அந்த இயக்கத்தில் வளர்ந்தவன். பேரறிஞர் அண்ணா அவர்கள்



அப்படித்தான் எங்களைத் தயாரித்திருக்கிறார். மாண்புமிகு புரட்சித் தலைவர் அப்படித்தான் காத்துக் கொண்டிருக்கிறார் என்பதைக் கூறி, கருத்துக்களைச் சந்திக்க நான் என்றைக்கும் தயார், நாங்கள் எந்தக் கொள்கையையும் விவாதிக்கத் தயார், நாங்கள் தெளிவான கொள்கைவாதிகள். தெளிவான லட்சியவாதிகள் என்று குறிப்பிட்டு, ஆதி திராவிடர்-பழங்குடி மக்கள் நலத் துறையில் இந்த அரசு செய்திருக்கிற பல்வேறு சாதனைகளை புள்ளிவிவரங் களுடன் சொல்லி பாராட்ட இயலாத நிலையில் இருந்தாலும், ஆச்சரியப்படக் கூடிய அளவுக்கு சாதனைகளை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி செய்திருக்கிறது என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை கொள்கைக் குறிப்பின்மீது ஆசிரியர் பட்டதாரி முற்போக்கு முன்னணியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கருத்துக்களைக் கூறுவதற்கு முன்பு இந்தத் துறை யினுடைய தலைமையை ஏற்றிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துவரும் பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள், அவர்களுடைய நல்ல உணர்வு, அதிலும் முக்கியமாக பிரச்சினைகளை எளிதாகப் புரிந்துகொண்டு அதை உடனடியாகத் தீர்க்க வேண்டுமென்று காட்டுகிற ஆர்வம் இவற்றை யெல்லாம் நான் பாராட்டி, அந்த ஆர்வமும் உணர்வும் சரியான முறையில் செயல்பட இந்தத் துறையின் அலுவலர் முழுமையான ஒத்துழைப்பைக் கொடுத்தால், மேலும் பல சாதனைகள் இந்தத் துறையைப் பொறுத்தவரையில், செய்ய முடியும் என்ற கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறை ஆற்றியிருக்கும் சாதனையைப் பாராட்டியும், மேலும் சில கருத்துக்களைக் கூறவும் அதே நேரத்தில் சில குறைபாடுகளைச் சுட்டிக் காட்டவும் நான் விரும்புகிறேன்.

வந்தபோது அவர்கள் தலையிட்டார்கள். இதிலே வேகம் ஒருவருக்கொருவர்
வந்து சந்தித்துக் கொள்ளலாம் என்ற நிலைமை ஏற்பட்டது நியாயம் அல்ல.
உணர்வுகளை ஒவ்வொருவரும் குறைத்துக்கொள்ள வேண்டுமென்ற
வேண்டுகோளை விட்டு நான் அமைகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,
என்னுடைய கருத்தின் அடிப்படையில் எழுந்த விவாதத்தில் என்னைப்பற்றிச்
சிந்திக்கிற நிலைமைக்கு நான் வந்துவிட்டேன். பொதுவாக பொறுமையாக
இருப்பது எவ்வளவு கஷ்டம் என்பதை இன்றைக்குத்தான் என்னால் உணர
முடிந்தது. அதற்காக மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு
நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னை அவர் பொறுமைக்கு ஆளாக்கி
விட்டார். கருத்துக்களைச் சொல்கிறோம், விவாதங்களை எழுப்புகிறோம்,
சில கருத்துக்களை பேசுகிறோம் என்று சொல்கிற நோக்கில் நான்
கருத்தைச் சொல்வதாலேயே பெரிய ஆபத்து வந்துவிடப் போவதில்லை.
அதற்குப் பின்னாலே அவர்கள் மாற்றுக் கருத்து சொல்லலாம்.
சிந்தனையைக்கூட எழுப்பலாம். நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்கிற
நோக்கில் குறிப்பிட்டுக் கூறுவதற்குக் காரணம், அது ஒரு
திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று மத்திய அரசு சில
கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்ற மாநில அரசுகளை வற்புறுத்து
இருக்கிறது. அப்படி கடமையைச் செய்கிறார்கள் ஒரு மாநில அரசுக்குக் கடமை
சொன்னேன். நான் அதிலே ஏற்றுக்கொண்ட என்பதைக் குறிப்பிட்டுச்
நான் அந்தக் கைத்தறி சமுதாயத்தைச் சார்ந்தவன் கொள்கை என்று சொன்னால்,
சில கருத்துக்களைச் சொல்கிறேன். அப்படிச் சொல்கிற என்ற அடிப்படையில்
இருந்தால், அதற்கு மாற்றுக் கருத்து கருத்துக்கள் தவறாக
சிந்தனையைக்கூட மாற்றி அமைத்துக்கொள்ளலாம். சொல்லலாம்.
அளவுக்கு, உணர்ச்சி வருகிற அளவுக்குச் செல்வது ஆனால் கோபப்படுகிற அல்லது எனது
அவைக்கு நான் வந்ததற்குப் பின்னால், என்பது சரியல்ல. இந்த
காரணம் இங்கே இருப்பவர்களைப் பார்க்கிறபோது, எனக்குக் கோபம் வருவதில்லை.
என்று நினைக்கிற நிலைமை வருமே தவிர, கோபமே வருவதில்லை. கோபப்பட வேண்டுமா
பேரவையிலே இருந்தால் என்னுடைய உணர்ச்சிகள் வேறுவிதமாகத்தான் ஆனால்
வரும். காரணம் அந்த அவையின் நிலை அது. இந்த அவையின் நிலை,
எவ்வளவு உணர்ச்சியாக வந்தாலும் உணர்ச்சி இல்லாமலேயே வெளியிலே
போகக்கூடிய அளவுக்குத்தான் இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில்,
பொறுமைசாலியாக மாற்றி, என்னுடைய கருத்துக்களுக்கு எந்தக் கருத்து
மாற்றாகச் சொன்னாலும், அதை எந்த நேரத்தில் சொன்னாலும், அதை
ஏற்றுக்கொள்பவன். கருத்துக்குக் கருத்து சந்திப்பதற்கு நான் என்றைக்கும்
தயாரானவன். அந்த இயக்கமே...





அப்படித்தான் எங்களைத் தயாரித்திருக்கிறார். மாண்புமிகு புரட்சித் தலைவர் அப்படித்தான் காத்துக் கொண்டிருக்கிறார் என்பதைக் கூறி, கருத்துக்களைச் சந்திக்க நான் என்றைக்கும் தயார், நாங்கள் எந்தக் கொள்கையையும் விவாதிக்கத் தயார், நாங்கள் தெளிவான கொள்கைவாதிகள். தெளிவான லட்சியவாதிகள் என்று குறிப்பிட்டு, ஆதி திராவிடர்-பழங்குடி மக்கள் நலத் துறையில் இந்த அரசு செய்திருக்கிற பல்வேறு சாதனைகளை புள்ளிவிவரங் களுடன் சொல்லி பாராட்ட இயலாத நிலையில் இருந்தாலும், ஆச்சரியப்படக் கூடிய அளவுக்கு சாதனைகளை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி செய்திருக்கிறது என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை கொள்கைக் குறிப்பின்மீது ஆசிரியர் பட்டதாரி முற்போக்கு முன்னணியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கருத்துக்களைக் கூறுவதற்கு முன்பு இந்தத் துறை யினுடைய தலைமையை ஏற்றிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துவரும் பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள், அவர்களுடைய நல்ல உணர்வு, அதிலும் முக்கியமாக பிரச்சினைகளை எளிதாகப் புரிந்துகொண்டு அதை உடனடியாகத் தீர்க்க வேண்டுமென்று காட்டுகிற ஆர்வம் இவற்றை யெல்லாம் நான் பாராட்டி, அந்த ஆர்வமும் உணர்வும் சரியான முறையில் செயல்பட இந்தத் துறையின் அலுவலர் முழுமையான ஒத்துழைப்பைக் கொடுத்தால், மேலும் பல சாதனைகள் இந்தத் துறையைப் பொறுத்தவரையில், செய்ய முடியும் என்ற கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறை ஆற்றியிருக்கும் சாதனையைப் பாராட்டியும், மேலும் சில கருத்துக்களைக் கூறவும் அதே நேரத்தில் சில குறைபாடுகளைச் சுட்டிக் காட்டவும் முன் வருகிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

இங்கே ஆதி திராவிடர் நலத்துறையுடைய பல்வேறு திட்டங்களில் இன்றைக்குக் கலப்பு மணம் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. கலப்பு மணத்தைப் பொறுத்தவரையில், கலப்பு மணம் புரிபவர்கள் யாராக இருந்தாலும், அவர் களுக்கு இப்போது தரப்படுகிற சலுகைகள் மட்டுமல்லாமல் அவர்களுடைய குழந்தைகளுக்கு அல்லது அவர்களுக்கு எந்த அரசுப் பணியாக இருந்தாலும், இந்த அரசின் கட்டுப்பாட்டுக்குள் வருகிற நிறுவனங்களில் பணியாக இருந்தாலும், அவர்களுக்கு அதை வழங்க முன்னுரிமையைக் கட்டாயமாகத் தர வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டுவருவது கலப்புத் திருமணம் மேலும் வளருவதற்கு, ஜாதி ஒழிப்பு, சித்தாந்தம் வளருவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1983 ஏப்ரல் 12

(முற்பகல் 11-20)

அடுத்து, இந்த அவையிலேயே முன்பொருமுறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். மாணவர்கள் தற்போது ஜாதிச் சான்றிதழ் பெறுவதற்கு நடைமுறையில் எத்தகைய இன்னல்களையெல்லாம் அடைகிறார்கள் என்பதை நாம் நன்கு அறிவோம். இந்த ஜாதிச் சான்றிதழை, வருவாய்த் துறை அதிகாரிகளிடம் சென்று பெறுவதில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஏதாவது செலவழித்தால்தான் அதைப் பெற முடியும் என்ற நிலையும் தற்போது இருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது. உண்மையான நிலை அதுதான். இதற்கு ஒரு நிரந்தரமான பரிகாரத்தைக் கண்டுவிடலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பொரு முறை இங்கே குறிப்பிட்டார்கள். அதாவது ஒரு 'ஐடென்டிடி கார்டு'—நிரந்தரமான ஜாதி அடையாளச் சீட்டு ஒன்றை—வழங்கிவிட்டால், எவ்வப்போது தேவைப் படுகிறதோ அப்போதெல்லாம் மாணவர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்வார்கள், எனவே அப்படிப்பட்ட ஒரு ஐடென்டிடி கார்டு வழங்குவது குறித்து அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று அப்போது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிவிப்பை விரைவில் செயல்படுத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கொள்கை விளக்கக் குறிப்பில் ஆதி திராவிடர்களுக்கான இட ஒதுக்கீடுபற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. தனியார் பள்ளிகள், தனியார் கல்லூரிகள், அரசுப் பள்ளிகள் மற்றும் அரசுக் கல்லூரிகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் போன்ற பல்வேறு இடங்களிலும் இந்த ஒதுக்கீடு முறையாகப் பின்பற்றப்படுகிறது. ஆனால் இத்தகைய முறை பல்கலைக் கழகங்களில் பின்பற்றப்படுகிறதா என்பதையும் அரசு ஆராய வேண்டும். பல்கலைக் கழகங்களில் செய்யப்படும் நியமனங்களில் இத்தகைய இட ஒதுக்கீடு சரியான முறையில் பின்பற்றப்படுகிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பல்கலைக் கழகங்கள் என்பவை அரசு மான்யத்தைப் பெற்று நடைபெறுகிற காரணத்தால், அங்கேயும் இட ஒதுக்கீடு முறை பின்பற்றப்பட வேண்டும். ஆசிரியர் நியமனமானாலும் சரி, ஆசிரியரல்லாத பிற பணியாளர்களின் நியமனமானாலும் சரி, இத்தகைய இட ஒதுக்கீடு முறை கட்டாயமாகப் பின்பற்றப்பட வேண்டும். தற்போது எனக்குத் தெரிந்த வரையில், பல்கலைக் கழகங்களில் இம்முறை பின்பற்றப்படுவதே இல்லை என்பதுதான் உண்மை.



1983 ஏப்ரல் 12] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் செனட் கூட்டத்தில் ஓர் உறுப்பினர் "இப்பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் ஆசிரியர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?" என்று கேட்டார். அதற்கு "அதுபற்றிய விவரம் இல்லை" என்றுதான் பதில் வந்தது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்பது ஒரு ரெசிடென்ஷியல் செட் அப். இந்த விவரத்தை அங்கே ஒரு மணி நேரத்தில் சேகரிக்க முடியும். ஆனால் செனட் உறுப்பினருக்குக் கொடுக்கப்பட்ட பதிலோ "எங்களிடம் விவரம் இல்லை" என்பதாகும். உண்மையான விவரத்தைக் கொடுத்தால், அது அதிர்ச்சி தரத்தக்கதாக இருக்கும் என்ற காரணத்தால், விவரம் இல்லை என்று பதில் சொல்லிவிட்டார்கள். இத்தகைய பதிலைச் சொல்லிச் சமாளிக்கிறார்கள். எனவே இத்தகைய முறைதான் மற்ற பல்கலைக் கழகங்களிலும் பின்பற்றப்படுகிறது என்று நினைக்கிறேன். அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் இட ஒதுக்கீடு முறையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதை அரசு கண்டறிந்து, அதற்கு ஏற்ற வகையில் தற்போது அரசாணைகள் ஏதுமில்லை என்றாலும், பிரத்தியேகமாகப் பிறப்பித்து கண்காணிக்க முன்வர வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஜாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு ஆகிய கொள்கைகளைக் குறித்து அண்ணல் காந்தியடிகளே ஒருமுறை ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார். தென் ஆப்ரிக்காவில் நிற வேற்றுமை காரணமாக அவர் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளானபோது, ஒரு கருத்தைக் குறிப்பிட்டார். இந்தியாவில் பல நூறு ஆண்டுகளாக நாம் ஆதி திராவிடர்களைப் படுத்திய பாட்டிற்காக, ஆதி திராவிடர்கள் அல்லாதோர், ஆதி திராவிடர்களுக்கு இழைத்த கொடுமைகளுக்காகவும் தீமைகளுக்காகவும் பரிகாரமாகத்தான் தென்னாப்பிரிக்காவில் தற்போது இந்தியர்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்று சொன்னார். நாம் நம் நாட்டில் ஆதி திராவிடர்களுக்கு இழைத்த பாவத்திற்கு இங்கே பரிகாரம் கிடைக்கிறது என்று அண்ணல் காந்தியடிகள் குறிப்பிட்டார்கள். பல ஆண்டுக் காலமாக நாம் ஜாதி ஒழிப்பையும் தீண்டாமை ஒழிப்பையும் பற்றி பேசிக் கொண்டிருந்தாலும் உண்மையில் நாம் எதிர்பார்த்த அளவுக்கு மக்கள் மத்தியில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா என்றால், உண்மையில் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். நம்முடைய மனப்பான்மையிலும் உள்ளத்திலும் மாறுதல் என்றைக்கு ஏற்படுகிறதோ அன்றுதான் நாட்டில் தீண்டாமையையும் ஜாதிகளையும் ஒழிக்க முடியும். மக்களின் மனப்பான்மையில் மாறுதலை ஏற்படுத்த வெறும் அரசியல் தலைவர்கள் மற்றும் சமுதாயத் தலைவர்கள் போன்றவர்கள் மட்டும் பாடுபட்டால் போதாது. இதற்கு முக்கியமான தேவை கல்வி. கல்வி மூலம் மட்டுமே நாம் எதிர்பார்க்கிற இந்தப் புரட்சிகரமான

மாறுதலைக் காண முடியும். வேறு எந்தச் சாதனத்தின் மூலமாகவும் இதை அடைய முடியாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே இத்துறை கல்விக்காக 50 சதவீதத்திற்கு மேலாக ஒதுக்கீடு செய்திருப்பதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். ஏறத்தாழ ரூ. 23.7 கோடி கல்விக்காக மட்டுமே இத்துறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

நலத் துறை கொடுக்கிற ஃபர்பார்மென்ஸ் பட்ஜெட்டின் முன்னுரையில் கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது :—

"Promotion of educational and economic interests of Adi-Dravidars and Scheduled Tribes has been enshrined in our Constitution as a Directive Principle of State Policy and, accordingly, the Adi-Dravidar and Tribal Welfare Department is designing specific programmes for these classes of society so as to enable them to derive benefits from general programmes of development in different fields."

இவ்வாறு கல்வித் துறைக்கு முக்கியத்துவம் கொடுப்பது குறித்து நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். கல்வித் துறைக்காக ஒதுக்கப்பட்ட தொகை சரியான முறையில் செலவழிக்கப்பட்டாக வேண்டும். அதிலுள்ள சிலபல குறைபாடுகளை மட்டும் நான் தற்போது சுட்டிக் காட்ட விரும்பு கிறேன். ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு தற்போது— 9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு—பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதை மாற்றி அவர்களுக்கு 6 முதல் 10 வகுப்புகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுவும் இதை நலத்துறைப் பள்ளிகளில் மட்டும் கொடுத்தால் போதாது. கல்வித் துறை மற்றும் தனியார் துறையில் உள்ள கல்வி நிலையங்களில் படிக்கிற அனைத்து ஆதி திராவிட மாணவர்களுக்கும் இத்தகைய வாய்ப்பை வழங்க வேண்டும். அதோடு இது ஒரு ஸ்பெஷல் கோச்சிங் என்ற காரணத்தால், இந்தப் பயிற்சி வகுப்புகளில் ஆசிரியர்கள்-மாணவர்கள் விகிதம் குறைவாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இங்கேயும்கூட ஒரு வகுப்பில் 50, 60 மாணவர்கள் உட்கார்ந்துகொண்டு பாடம் கேட்கிற நிலை இருக்கு மானால், அது சரியான முறையில் கோச்சிங் கொடுப்பதாக அமையாது. எனவே இவர்களுக்கான பயிற்சி வகுப்புகளில் ஆசிரியர்-மாணவர் விகிதம் குறைவாக இருக்க வேண்டும். இதற்காக மேலும் பல பார்ட்-டைம் இன்ஸ்ட்ரக்டர்களைக் கூடுதலாக நியமித்து ஆதி திராவிட மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று [illegible] கொள்கிறேன்.





அடுத்து, நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதிகாரிகளிடமும் எடுத்துச் சொல்லி விவாதித்திருக்கிறேன். ஆதி திராவிட நலத் துறையில் கல்வியைத் தனியாகப் பிரித்து—இதற்கென்று தனிப் பிரிவை ஏற்படுத்தி—தற்போது கல்வித் துறையிலிருந்து பெறப்பட்ட ஒரு இணை இயக்குநரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது—இந்த நிலைமையையும் மாற்றி ஆதி திராவிடர் நலத் துறையிலிருந்தே தகுதிபெற்ற ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்து, அவரைக் கொண்டே இந்த கல்விப் பிரிவை நிர்வகிக்கச் செய்ய வேண்டும். அதைப்போலவே மாவட்டங்களில் ஆதி திராவிடர் நலப் பிரிவிலேயே தனியான மாவட்டக் கல்வி அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும். தற்போது மாவட்டங்களில் உள்ள கல்வி நிலையங்கள் மாவட்ட நலத் துறை அதிகாரிகளின் கட்டுப்பாட்டுக்குள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன, அவர் களையெல்லாம் அத்தகைய பொறுப்புகளிலிருந்து நீக்கி, உத்தேசித்துள்ள மாவட்டக் கல்வி அதிகாரிகளின் அதிகார வரம்புக்குள் கொண்டு வந்து நலத் துறைப் பள்ளிகளைச் செம்மைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலே மூன்று துணை ஆய்வாளர்கள் பதவிகளை ஏற்படுத்தி இந்தத் துறையின் வளர்ச்சிக்காக உறுதுணை செய்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதை விரிவுபடுத்த வேண்டும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு, கல்வித் துறையின் மூலம் வெளியிடப்படும் ஆணைகளை ஆதி திராவிடர் நலத் துறையும் பின்பற்ற வேண்டும் என்று இங்கே குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறையில் இது எவ்வாறு நலத் துறையில் பின்பற்றப்படுகிறது என்பதற்கு இரண்டு சம்பவங்களை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அலுவலையில் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் மேல் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு தரப்பட்டது. நலத் துறையைப் பொறுத்தவரையில், சர்வீஸ் மேன்யுவலில் தலைமை ஆசிரியர் பதவி நியமனத்திற்கு "A degree with B.T." என்று போடப்பட்டிருக்கிறது. ஆனால் 19—12—1979 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணை எண் 1615 மூலம் அவர்களுக்குத் துறைத் தேர்வு என்ற ஒரு நிபந்தனை போடப்பட்டு, நலத் துறை மூலம் அதற்கான சில திருத்தங்களையும் உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் அத்தகைய திருத்தங்கள் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் கவனத்திற்கு முறையாகக்

கொண்டு செல்லப்படவில்லை. ரெக்கார்டுகளை எடுத்துப் பார்த்தாலே
உண்மைகள் கிடைக்கும். 1979-ல் ஏற்படுத்தப்பட்ட விதிமுறையை 1981 வரை

(முற்பகல் 11-30)

பின்பற்றவில்லை. திரு. ராஜமாணிக்கம், திரு. சுப்பாராயன் என்பவர்களுக்கு
1981-ல் பதவி உயர்வு தரப்பட்டு, துறைத் தேர்வு தேர்ச்சி பெற போதிய
அவகாசமும் அந்த ஆணையில் தரப்பட்டது. அதற்குப் பிறகு கல்வித்
துறையின் அரசாணை எண் 122, நாள் 22—1—1979-ல் கல்வித் துறை
ஆசிரியர்களுக்கு வழங்கும் சலுகைகளை அரிசன நலத் துறையில் உள்ள
ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கூறப்பட்டது. அந்த ஆணையை
ஏற்று சமூக நலத் துறை கடித எண் எம்.எஸ். 214, சோசியல் வெல்ஃபேர்
டிப்பார்ட்மெண்ட், நாள் 24—3—1982 மூலமாக கல்வித் துறையின்
கருத்துக்களை ஏற்று, அந்த ஆணையை உறுதிப்படுத்தி கடிதத்தை
வெளியிட்டது. அதற்குப் பிறகு கல்வித் துறையின் அரசாணை எண் 536-ன்
மூலமாக துறைத் தேர்வு தேர்ச்சி பெறாதவர்களுக்கு 1984 வரை துறைத்
தேர்வு தேர்ச்சி பெற கால அவகாசம் தரப்பட்டு, அந்த அடிப்படையில் கல்வித்
துறையில் பதவி உயர்வுகள் தரப்படுகின்றன. கல்வித் துறையின் இந்தச்
சலுகையை இந்தத் துறையில் தராததால், எட்டு ஆசிரியர்கள் பாதிக்கப்
பட்டிருக்கிறார்கள். முன்பே இதைப்பற்றி விவாதித்திருப்பதால் சுருக்கமாகச்
சொல்ல விரும்புகிறேன். கல்வித் துறையின் அரசாணையில் கொடுக்கப்
பட்டிருக்கின்ற கைட்லைன்ஸ் மீறப்பட்டு அந்தச் சலுகை மறுக்கப்பட்டதன்
காரணமாக பணி மூப்பின் அடிப்படையில் நியமிக்கப்படாததால், எட்டு
பட்டதாரி ஆசிரியர்கள் வாய்ப்புகளை இழந்திருக்கிறார்கள்.

அதே ஆணையில் அந்த சர்வீஸ் ரூல்ஸ்படி ஆணையிடுகிறோம் என்று
சொல்லப்பட்டது. அவர்கள் போட்ட ஆணையில் உள்ள எட்டு பேர்களில்
ஒருவரான திரு. தாமோதர நாயர் என்ற ஒருவருக்கு, தகுதியில்லாமல், பதவி
தரப்பட்டு தனியாக ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி
13—2—1983 அன்று ஆசிரியர்களும், 16—2—1983 அன்று நானும்,
5—1—1983 அன்று நானும், ஆசிரியர்களும் சேர்ந்து தந்தி கொடுத்திருக்
கிறோம்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** கல்விக் கொள்கை குறிப்பின்
மீது இவைகளையெல்லாம் பேசியிருக்கலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இவைகள் எல்லாம் இந்தத் துறையின்
கட்டுப்பாட்டிற்குள் வருகின்றன. அது மட்டுமல்லாமல் என் கட்சியின் சார்பாக
நான் ஒருவன்தான் பேசுகிறேன்.





**டாக்டர் இரா. சனார்த்தனம்:** கட்சியின் சார்பில் ஒருவர் பேசுவதால் நான்கு பேர் சார்பாகப் பேசுகிறாரா ?

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** அரசாணை எண் 720, நாள் 28—4—1981-ன்படி மேல் நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்கள் பதவிகள் நிரப்பப்படவில்லை. இதுகுறித்து ஏற்கெனவே தெளிவாகச் சொல்லியிருப்பதால், அதைப்பற்றி மீண்டும் சொல்ல விரும்பவில்லை. அமைச்சர் அவர்களையோ, இந்தத் துறை அதிகாரிகளையோ நான் குறை சொல்ல விரும்பவில்லை. கல்வித் துறையின் ஆணைகளையும், நடைமுறைகளையும் இந்தத் துறைக்கு எடுத்துச் சொல்வதற்காக கல்வித் துறையிலிருந்து ஒரு டெபுடி டைரக்டர் அனுப்பப்பட்டிருக்கிறார். அந்த டெபுடி டைரக்டர் அமைச்சருக்கும், செயலாளருக்கும், இயக்குநருக்கும் சரியான முறையில் எடுத்துச் சொல்லியிருக்க வேண்டும். அதற்காகத்தான் அவர் டெபுடேஷனில் நியமிக்கப்பட்டிருக்கிறார். டெபுடேஷனில் வந்திருக்கிற அவரே சரியான முறையில் செய்யாவிட்டால், இந்தத் துறையினர் என்ன செய்வார்கள்? எடுத்துச் சொல்ல வேண்டியவரே தவறான முறையில் செய்தால், இந்தப் பழியை யார்மீது போட முடியும்? அப்படிப்பட்ட சங்கடமான நிலைமைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள் என்பதை நான் உணர்கிறேன். இதனால் பாதிக்கப்பட்ட ஓரிரு ஆசிரியர்கள் உயர்நீதி மன்றத்திலே வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். இதைக் காரணம் காட்டி நியாயத்தை ஏற்றுக்கொள்வதை அரசு தள்ளுபடி செய்ய வேண்டாம். பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். தவறாகப் போடப்பட்ட ஆணையை மறுபரிசீலனை செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதிமொழி கொடுத்தால், நிச்சயமாக உயர் நீதி மன்றத்தில் உள்ள வழக்குகளைத் திரும்பப் பெறுவதற்கு நான் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகிறேன் என்பதை இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே இந்தக் குறைபாடுகளை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிவர்த்தி செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்றாலும், அதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினர் 15 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் 7 பேர் பேச வேண்டும், அதற்குப் பிறகு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஒன்றே ஒன்று. சென்ற ஆண்டு நடைபெற்ற விவாதத்தில் குறிப்பிட்ட சில பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. சிதம்பரம் அரசு நந்தனார் மேல்நிலைப் பள்ளியில் ஃபிசிக்ஸ், கெமிஸ்ட்ரி போஸ்ட்-கிராஜுவேட் ஆசிரியர் பதவிகளும், அரசு பெண்கள் பள்ளியில் கெமிஸ்ட்ரி, பாட்டனி போஸ்ட்-கிராஜுவேட் ஆசிரியர்கள் பதவியும் கடந்த நான்கு ஆண்டுகளாக நிரப்பப்படாமல் இருக்கின்றன என்றால், கல்வியின் நிலை என்னவாகும் என்பதைப்பற்றி அதிகாரிகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதைப் போலவே சிதம்பரம் பெண்கள் பள்ளியில் உடற்கல்வி ஆசிரியை (பிசிக்கல் டைரக்ட்ரஸ்) பதவி கடந்த மூன்று ஆண்டுகளாக நிரப்பப்படாமல் இருக்கிறது. இப்படி இருக்கின்ற பதவிகள் நிரப்பப்படாமல் இருக்கும்போது, தேவையில்லாத, சர்ப்ளசாக இருக்கக் கூடிய சில போஸ்டுகளுக்கு எப்படி டெபுடி டைரக்டர் சாங்ஷன் செய்கிறார் என்பதைத் துறை பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பி.டி. அஸிஸ்டெண்டுகளுக்குரிய சீனியாரிட்டி லிஸ்ட் வெளியிடப்படவில்லை. அதை உடனடியாக வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சிதம்பரம் நந்தனார் பள்ளிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள். அது தமிழகத்திலே சிறந்த முறையில் இயங்கும் பள்ளி என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இரண்டு நாட்களுக்கு முன்பு நடந்த மாநாட்டில் கூட இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த மாநிலத்திலேயே முதன்மையாக உள்ள பள்ளி அது. அதனுடைய பெருமைக்குக் காரணமாக இருந்த தலைமையாசிரியர் திரு. சுப்பிரமணியம் இப்போது அங்கே இல்லை. அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அது ஒரு விஷயம். அந்தப் பள்ளியில் 24 பிரிவுகள் திறந்தவெளியில் நடக்கின்றன. பெண்கள் பள்ளியில் 12 பிரிவுகள் திறந்தவெளியில் நடக்கின்றன. அந்த அளவிற்கு அங்கே வகுப்பறைகள் இல்லை. பள்ளி விடுதிகளில் போதுமான குடி தண்ணீர் வசதி, சுகாதார வசதி இல்லாததால், பல்வேறு விதமான தொற்றுநோய்கள் மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் வருகின்றன. ஆகவே அங்கே வசதிகளை ஏற்படுத்த வேண்டும். அங்கே நிரந்தரமாக ஒரு ரெசிடென்சியல் மெடிக்கல் ஆபிசரை நியமிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

அரசாணை எம். எஸ். எண் 158, நாள் 29—2—1980-ன்படி நான்கு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஒரு லெபாரட்டரி கட்ட வேண்டும் என்று ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. மூன்றாண்டுகள் ஆகியும் அந்த ஆணை செயல்படுத்தப்படவில்லை. இதற்காக ஒதுக்கப்பட்ட 6½ இலட்சம் ரூபாய் பயன்





படுத்தப்படாமல் கட்டிடங்கள், லெபாரெட்டரி கட்டாமல் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அங்கேயுள்ள விடுதியில் போதுமான அளவிற்கு பாத்திரங்கள் இல்லை. அதையும் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிதம்பரம் வந்தபோது, தொழிற் கல்வி நிலையம் ஆரம்பிப்பது குறித்து வாக்குறுதி கொடுத்தார்கள். நந்தனார் கல்வி நிலைய மாணவர்களின் சார்பாகவும், தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாகவும் அதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, வருகிற கல்வியாண்டிலேயே தாழ்த்தப்பட்ட மாணவர்கள், மாணவிகள் நலனுக்காக ஒரு பாலிடெக்னிக்கை அங்கே ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லி, வீட்டு வசதித் திட்டம் சிதம்பரத்திலே அறிமுகப்படுத்தவில்லை என்பதைச் சொல்லி அதையும் செய்ய வேண்டும் என்று கேட்டு, இந்த அளவிற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். இன்னும் பத்து பேர் பேச வேண்டியிருப்பதால், இன்றைக்காவது எல்லோரையும் நேரத்தோடு வீட்டிற்கு அனுப்ப, சப்ஜெக்ட் பொறுத்த வரையில் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*** திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர், பழங்குடியினர் நல கொள்கை விளக்கக் குறிப்பின் மீது சில வார்த்தைகளை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக மத்திய அரசானாலும், அரசியல் கட்சிகளானாலும் சமுதாயச் சீர்திருத்தங்களை ஏற்படுத்தி ஆதி திராவிடர்களை மேல் நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருப்பதாக பறைசாற்றிக்கொள்ளத் தவறுவதில்லை. இந்த அளவிற்குச் செய்ததற்குப் பிறகும்கூட, உண்மையிலேயே நாம் எதிர்பார்த்த அளவிற்கு அவர்கள் முன்னுக்கு வரவில்லை, வருவதற்குரிய வாய்ப்பு இல்லை என்பதை அனைவருமே ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். பொதுவாக தாழ்த்தப்பட்டவர்கள் என்ற உணர்வு அவர்களுக்கு வாராதவாறு, பொருளாதாரத்திலே தாழ்த்தப்பட்டிருக்கிறோம் என்ற நிலையில் எண்ணி அதிலே உயர, முன்னேறுவதற்கு வாய்ப்பு சகல தரப்பினரும் சேர்ந்து தந்தாக வேண்டிய சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. அவர்களைப் பொறுத்த வரையில், எல்லாத் தரப்பினரும் ஆதரிக்கிறார்கள் என்றாலும், இப்போது நடைபெறுகிற நிலையைச் சொல்ல வேண்டும் என்பதற்காக ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1983 ஏப்ரல் 12

ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டித் தர வேண்டும் என்ற அடிப்படையில்
முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசு மிக விரிவான திட்டங்களைத்
திட்டி—வீடுகள் சிறிதாக இருந்தாலும் நிரந்தரமாக இருப்பதற்குரிய வாய்ப்பு
தேடும் பக்கா வீடுகளை அமைத்துத் தருகிற திட்டத்தை அமைத்துத் தந்தது.

(முற்பகல் 11-40)

ஆனால் அதற்குப் பின்னாலே இன்றைக்கு வீடு கட்டும் திட்டத்திலே ரூபாய்
4 ஆயிரம் என்று குறைத்து, அதுவும் இன்றைக்கு இருக்கக்கூடிய விலைவாசி
ஏற்றத்தின் அடிப்படையிலே அது மிகமிகக் குறைவாகி அதுவும் மண் குடிசை
கள், ஓலை வேய்தல் இப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான் அதைக் கட்டித்தரும்
நிலை ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக நீண்ட காலத்திற்கு அது
நிலைத்து இருக்க முடியாது என்பது மட்டுமல்ல. இதில் நான் குறிப்பிட்டுக்
கேட்க விரும்புவது, பழைய மாதிரி நிரந்தரமான வீடுகள் கட்டித்தர நாம்
முயற்சிக்க வேண்டும். மற்றொன்று, நாம் அவர்களுக்கு வீடு கட்டித் தருகின்ற
இடம் ஒதுக்கப்பட்ட இடத்திலே இருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க
வேண்டும். ஒதுக்கப்பட்ட இடத்திலே ஒடுக்கப்பட்டவர்களுக்கு, தாழ்த்தப்
பட்டவர்களுக்குக் கட்டிக்கொடுக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டிக்
கொடுப்பது மற்றவர்களுக்குச் சமமாக இருக்க வேண்டும். அவர்களுடைய
பொருளாதார, சமுதாய, கல்வி நிலையிலே மாற்றம் காண வேண்டும் என்ற
அளவுக்குச் செயல்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய நாம், சமமான அந்தஸ்திலே
மற்ற பகுதிகளிலே வாழ்கின்றவர்கள் மத்தியிலே அவர்களுக்கு வீடு கட்டிக்
கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஆனால் இப்போதும்
ஒதுக்கி ஒதுக்கி வைக்கிற நிலைதான் ஏற்படுகிறது. பொதுவாக சேரி ஒழிப்புத்
திட்டமே வரவேண்டும். சேரிகளிலே இருக்கக் கூடிய அத்தனை பேர்களுக்கும்,
ஆண்டுக்கு இவ்வளவு பேர்களுக்கு மாற்றம் என்ற அளவில் ஒரு "பேஸ்ட்
புரோகிராம்" போட்டு, மற்றவர்களுக்கு மத்தியிலே இருக்கக்கூடிய அளவுக்கு,
சூழ்நிலைகளை அரசு உருவாக்க வேண்டும். அவர்கள் இன்றைக்கு நாட்டிலே
இருக்கக்கூடிய நிலையைப் பார்த்தால், சற்று வசதி வந்து, ஒரு வாய்ப்பு
வந்தபோது வீடு வாங்கிக்கொண்டுவிடலாம் என்று அவர்கள் நினைத்து,
உயர்ந்தவர்கள் பகுதிக்கு அவர்கள் வரலாம் என்று வந்தால்கூட, அந்த சமு
தாயத்தினர் அவர்களுக்கு அவர்கள் அல்லாத மற்றவர்களுக்கு விற்றுவிடுகின்
றார்கள். அந்த இடத்தை இவர்கள்தான் வாங்க வருகிறார்கள் என்று தெரிந்து
விட்டால், அந்த இடத்தை இவர்களுக்கு விற்க மறுக்கிறார்கள். அப்படிப்பட்ட
சமுதாயத்திலே மாற்றம் ஏற்படத்தக்க வகையிலே அரசு இலவற்றைச் செய்ய
வேண்டும். அவர்களும் மற்றவர்களோடு சமமாகத் தங்கி, குடியிருந்து அவர்
களுடைய வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ளக்கூடிய வகையில் அரசு
திட்டமிட்டுச் செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1983 ஏப்ரல் 12] [திரு. க. மீனாட்சி சுந்தரம்]

அதுபோலவே பள்ளிக் கட்டிடம் கட்டினாலும் சரி, ஆதிதிராவிடர்கள் அலுவலகங்கள் கட்டினாலும் சரி, நாம் பார்க்கலாம். அது கலெக்டர் கட்டிடத்திலே இருக்கிறது என்று சொன்னால், கூட அங்கே ஒரு ஒதுக்கப்பகுதியில் தான் இருக்கும். ஆதிதிராவிடர் நலன் அலுவலகம் என்று சொன்னால், விரல் விட்டு எண்ணக்கூடிய இடங்களில்தான் முக்கியமான இடங்களில் இருக்கின்றது. மற்ற இடங்களிலே தனிப்பட்ட பகுதியில், அதிலேயும் ஒதுக்கப்பட்ட பகுதியிலே, மூலைமுடுக்குகளிலேதான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஒரு இம்பார்ட்டன்ஸ்' இல்லாத அளவுக்கு எங்கேயோ ஒதுக்கப்பட்ட இடத்திலே இருக்கக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது. அதையெல்லாம் மாற்றி அவர்களுக்கு மிக முக்கியத்துவம் தர வேண்டும்.

ஊட்டியிலே நான் 1951-லே இருந்தேன். அப்போது இருக்கின்ற நிலைமைகள் இப்போதும் இருக்கின்றனவோ என்னவோ, எனக்குத் தெரியாது. அங்கு ஆளுநர் அவர்கள் வந்தாலும், முதலமைச்சர் அவர்கள் வந்தாலும், மற்ற யார் வந்தாலும், அங்குள்ள பழங்குடி மக்களுக்கு என்று முன்னுரிமை தந்து, அவர்களை முதல் சீட்டிலே கொண்டுவந்து உட்கார வைக்கின்ற அளவுக்கு அழைப்புக் கொடுத்து கொண்டுவந்து கௌரவிப்பார்கள். அந்த வழக்கம் உண்டு. அந்த வகையிலேகூட ஆதிதிராவிட மக்களுக்கு நாம் எல்லாம் செய்கிறோம் என்று பேசுகின்றபோது, அந்தக் கூட்டங்களிலேகூட அவர்கள் கை கட்டிக் கொண்டு தூரத்திலே நின்று கேட்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்படிப் பட்டவர்களை எல்லாம் அழைத்துவந்து, அரசு விழாக்களிலே அவர்களை முன்னே கொண்டுவந்து வைத்து நிர்பந்தித்து உட்காரச் செய்ய வேண்டும். அவர்களுக்கு அந்த மதிப்பைத் தர வேண்டும். இப்படி சமுதாயத்திலே சில மாற்றங்களைச் செய்தால்தான், இந்த நிலைமைகளை எல்லாம் நாம் சீர்திருத்த முடியும். அவர்களிடத்திலே நிலவுகின்ற மூடநம்பிக்கைகளை. எவ்வளவுதான் பொருளாதாரத்திலே முன்னேற்றவேண்டும் என்று சொன்னாலும், நீக்க வேண்டும். அவர்கள் சம்பாதிக்கின்ற பணத்தை, வேறு வகையிலே மூட வழக்கங்கள் காரணமாக, செலவு செய்கின்ற நிலையிலே இருக்கிறார்கள். அதிலேயிருந்து அவர்களை மாற்றக்கூடிய அளவுக்குச் செய்ய வேண்டும். அவர்களுக்கு அறிவைப் புகட்ட வேண்டும். அதற்குப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோலவே ஆதிதிராவிட நலத் துறையிலுள்ள ஆசிரியர்களுக்குக்கூட, பள்ளிகள் அமைத்தால், அதற்குப் பக்கத்திலேயே வீடுகள் அமைக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அப்படி வீடுகள் அமைக்காத காரணத்தினாலேயே, ஒரு ஊரிலேயிருந்து ஆசிரியர்களை மாற்றினால், அவர்கள் மாற்றப்

பட்ட ஊருக்குச் சென்ற உடனே அந்த ஊரிலே இருக்கக்கூடிய பெரியவர்கள்,
வசதி படைத்தவர்கள். வந்திருக்கின்றவர் யார், அவர் எந்த ஜாதி என்று
கேட்டு, அதற்குப் பின்னாலே அவரை அவர்களை அடித்துத் துரத்தக்கூடிய
நிலைகள் கூட இருக்கின்றன. அது இன்றைக்கும் இருக்கின்றது. அங்கே
செல்கின்ற ஆசிரியர்கள்கூட தாங்கள் உயர்ந்த ஜாதியினர் என்று சொல்லிக்
கொண்டிருக்கிறார்கள். அப்படிச் சொல்லிக்கொண்டு அங்கே போய் வேலை
பார்த்து வருகின்றார்கள். இறுதியிலே அவர் இன்ன ஜாதியினர் என்று தெரிந்து
போனால், அவர்கள் அடிபடுகின்ற நிலையெல்லாம்கூட இருக்கிறது. அப்படிச்
சொன்னால்தான் அங்கே இருக்கமுடியும் என்ற சூழ்நிலை இருக்கிறது. அப்படிச்
பள்ளிக்குப் பக்கத்திலேயே வீடுகட்டித் தந்தால், இந்த நிலை மாற்றப்படும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக நம்முடைய அமைச்சர்
அவர்கள் வந்ததற்குப் பிறகு, கல்வித் துறையைப் பொறுத்தவரையிலும், அவர்
கள் மிகச் சிறப்பாகவே செய்கின்றார்கள். நிதி ஒதுக்கம்கூட ஆண்டுக்கு
ஆண்டு அதிகப்படுத்திப் பெற்றிருக்கின்றார்கள். இந்தச் சாதுரியத்திற்காக
அவரை நான் பாராட்டுகிறேன். கல்வித் துறை தனியாக இருக்க வேண்டும்
என்ற கருத்தை ஒட்டி, பரிட்சார்த்தமாக தென் ஆற்காடு மாவட்டத்திலே
கல்வித் துறையிலே பள்ளித் துணை ஆய்வாளர்களை எல்லாம் நியமித்து;
கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு முயற்சி எடுத்திருக்கிறார்கள்.
அதற்காகவும் பாராட்டுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன்
அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். பல்வேறு ஜி.ஓ.க்கள், பல்வேறு வித
மான அரசாணைகள் இந்தத் துறையிலே சரியாக அமல் நடத்தப்படவில்லை
என்று குறிப்பிட்டார்கள். அதற்குக் காரணமே கல்வி நிலையத்தை, ஆசிரியர்
களை, மாணவர்களைக் காண்காணிக்கின்ற அதிகாரிகளாக வருவாய்த் துறை
அதிகாரிகள் இருப்பதுதான். வருவாய்த் துறை அதிகாரிகள் இருப்பது மட்டு
மல்ல, மேலே இருக்கின்ற ஆணை பிறப்பிக்கவேண்டிய சுப்ரீம் பாடிகூட, மேலே
இருக்கக்கூடிய அதிகாரிகள் கூட கல்வித் துறையிலே அதற்குரிய பதவியிலே
இல்லாத காரணத்தினாலேதான். இங்கே கூட சொன்னார்கள். மாண்புமிகு
உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொன்னார்கள். டெபுடி டைரக்
டராக இருப்பவர் சரியான டைரக்ஷன் தராத காரணம் என்று சொன்னார்
கள். சில நேரங்களிலே டெபுடி டைரக்டர் சரியான டைரக்ஷன் தந்தாலும்
அதற்கு மேலே இருக்கக்கூடியவர்கள் அந்த டைரக்ஷனை ஏற்றுக்கொள்வ
தில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே இவர்களுடைய கருத்துகூட
எடுபடாததற்குக் காரணம் கல்வித்துறையில் அப்படி அப்பாற்பட்டவர்கள்
அங்கே இருப்பதுதான். இந்தத் துறையிலே ஏறத்தாழ 947



பள்ளிகள் இருக்கின்றன. ஆதிதிராவிடர் நலத் துறையிலே பழங்குடியினர் துறையிலே 133 பள்ளிகள் இருக்கின்றன. ஏறத்தாழ ஆறு கோடியே எண்ணூற்று முப்பத்தாறு இலட்சம் ரூபாய் இதிலே செலவு பண்ணக்கூடிய அளவுக்கு நிதி ஒதுக்கம் செய்திருக்கிறார்கள். இவ்வளவு பெரிய தொகையை வைத்து நிர்வகிக்கக்கூடிய இந்த இலாகாவிலே ஏன் கல்விக்கு என்று தனியாக டைரக்டர் ஒருவர் போடக்கூடாது? நிச்சயமாக அதற்கு ஏற்பாடு செய்யலாம். அப்படிச் செய்தால், ஏனைய பள்ளிகளில் இருப்பதுபோல, இந்தப் பள்ளியிலே இருப்பவர்களுடைய கல்வியின் தரம் தாழ்ந்தது அல்ல என்ற நிலை வரும். கல்வித் துறையிலே, அது டெக்னிக்கல் கோர்ஸ், அதில் பழகியவர்கள்தான் இன்ஸ்பெக்டர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் கல்வியின் தரம் உயருமே தவிர, வருவாய்த் துறையிலே மற்ற துறைகளிலே இருப்பவர்களுக்கு அதிலே வாய்ப்பு தரக்கூடாது. அவர்களுக்கு அந்த அதிகாரத்தைத் தரக்கூடாது. தனியாக டி.ஈ.ஓ.-க்கள் இருக்கிறார்கள். அந்தக் காலத்திலே டி.ஈ.ஓ.-க்கள் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர் பெயரிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எழுதிவைத்துவிட்டுப் போனால், பஞ்சாயத்து யூனியன் சேர்மென் நடவடிக்கை எடுக்கமாட்டார். அதைப்போல இருக்கிறது இன்று. ஆதிதிராவிட நலத்துறையில் ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். இந்தத் துறையிலே அந்த டி.இ.ஓ., டெபுடி இன்ஸ்பெக்டர் எழுதி வைத்தால்கூட, மேலே இருக்கின்ற இயக்குநர் அதை ஏற்றுக்கொள்வதில்லை. ஏனெனில் இந்தத் துறையைச் சார்ந்தவர் அங்கே இல்லை. ஆகவே இதற்கு என்று தனியாகவே ஒரு டைரக்டரேட் இருக்க வேண்டும். அப்படி இருந்தால், ஏனைய துறையைப்போல அது நன்றாக அமையும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவருடைய ஆர்வத்திற்கு ஏற்றாற்போல் இந்தக் கல்வித் துறையையும் மிகச் சிறப்பாக உயர்த்த முடியும். அதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் இதை எதற்காகச் சொல்கிறேன்? ஆதிதிராவிடர்களுக்கு என்று பள்ளிகள், இல்லங்கள் இருக்கின்றன. அங்கு காப்பாளர்கள் என்று இருக்கின்றார்கள். அந்த இல்லங்களில் அண்டிரெயிண்ட் டீச்சர்ஸ் காப்பாளர்களாக இருக்கின்றார்கள். அண்டிரெயிண்ட் டீச்சர்ஸ் ஆக இருப்பவர்கள் 500, 600 பேர்கள் இருக்கக்கூடிய பெரிய இல்லத்ினுடைய காப்பாளர்களாக இன்றைக்கும் இருக்கிறார்கள். அதே நேரத்தில் டிரெயிண்ட் டீச்சர்ஸ்கள் எல்லாம் 50, 60 பேர்கள் இருக்கின்ற சிறிய இல்லங்களுக்குக் காப்பாளராக இருந்துகொண்டிருக்கிறார்கள். இது குறித்து 'ரெபரசன்டேஷன்' செய்து அவர்களுக்குத் தரவேண்டும் என்று சொன்ன பிறகு, ஆணை பிறப்பிக்கப்படுகிறது. அந்த ஆணைக்கு நம்முடைய இலாகாவிலே மறு ஆணை வருகிறது. அது நிறுத்தவும் படுகிறது. அதை நிறுத்துகின்ற நிலை

மையிலே இருப்பவர்கள் தான் மேலே இருக்கிறார்கள். அப்படி நிறுத்திவிடு
கின்ற காரணத்தினாலேயே, பயிற்சி பெற்று தகுதி உடையவர்கள் சாதாரண
மாக சின்ன இல்லங்களுக்கும், பயிற்சி பெறாத அன்டிரெயிண்ட் டீச்சர்ஸ் பெரிய
இல்லங்களுக்கும் காப்பாளர்களாக இருக்கும் நிலைகள் எல்லாம் நடைபெற்
றிருக்கின்றன. அதை மாற்ற வேண்டும். மற்றொன்று என்னுடைய தொகுதி
யிலே இருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திருச்சியிலே காட்டூர்
இருக்கிறது. அங்கே ஆதிதிராவிடர்கள் மேல் நிலைப் பள்ளி இருக்கின்றது.
இந்த மேல் நிலைப் பள்ளியிலே ஆசிரியர்கள் காலாகாலத்தில் நியமிக்கப்படு
கின்றார்களா என்றால், மேலதிகாரிகள் கல்வித் துறையிலே இல்லாதவர்களான
காரணத்தினாலேதான், நியமிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை நான்
சொல்கிறேன். அந்தப் பள்ளியிலே 1,500 க்கு மேற்பட்ட மாணவர்கள் இருக்
கின்றார்கள். நான் 7—10—1982 புள்ளிவிவரப்படி சொல்கிறேன். 'ஒரு பானை
சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்று சொல்கின்றார்களே. அதைப்போல சொல்
கிறேன். அந்தப் பள்ளியிலே மட்டும் நியமிக்கவேண்டிய இடங்கள், தமிழாசிரியர்
7 பேர்கள், இடைநிலை ஆசிரியர் 2 பேர், பி.டி. ஆசிரியர் ஒருவர், இடைநிலை
ஆசிரியர் 9 பேர் ஆக 19 ஆசிரியர்கள் செப்டம்பர், அக்டோபர் மாதம் வரை
யிலே நியமிக்கப்படவில்லை என்று சொன்னால், அந்தப் பள்ளியிலே எப்படி
கல்வியின் தரம் உயரும்? தரம் உயரவேண்டுமென்ற கருத்து மேலே இருப்பவர்
களுக்கு இருக்கவேண்டும். அவர்கள் எல்லாவற்றையும் கவனிக்கவேண்டிய
நிலையிலே இருப்பதாலே, கல்வியைக் கவனிப்பதில்லை. வகுப்பு அறைகள்
15 வேண்டுமென்றும் 'லேப்' வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள். இதை
யெல்லாம் செய்யவில்லை என்று சொன்னால், மற்ற பள்ளிகளுக்குப் போட்டி
யாக இந்தப் பள்ளியின் கல்வித் தரம் எப்படி வளர முடியும்? ஆதிதிராவிடர்
கள் பள்ளியிலே இருக்கக்கூடிய மாணவர்கள் அந்த மரபு காரணமாக சற்று
கல்வியிலே தாழ்ந்தே இருப்பார்கள். அவர்கள் முன்னேற வேண்டுமென்று
சொன்னால், மற்றவர்களுக்குத் தருகின்ற சலுகைகளைவிட, வசதிகளைவிட
அவர்களுக்கு அதிகமாகத் தர வேண்டும். அதாவது நோஞ்சான்
குழந்தைக்கு அதிகமான மருந்து, அதிகமான அளவுக்கு சத்துணவு
கொடுத்து வளர்க்க வேண்டும். ஆனால் இருக்கின்ற சத்தையே
தரவில்லை என்று சொன்னால், அது எப்படி வளர முடியும்?

(முற்பகல் 11-50)

அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். அந்தப்
பள்ளியிலே புலவர் தனலட்சுமி என்று ஒரு ஆசிரியை இருக்கிறார். அவரை
இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலைக்கு மாற்றவில்லை. அப்படி மாற்ற





ஆணை இருக்கிறது. ஆண்டுக் கணக்காக இலாக்கா அதைச் செய்யவில்லை. செய்யாமல் இருக்கிறது. காரணம் என்ன? அதிலே ஆர்வம் இருப்பதில்லை. செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருப்பதில்லை.

If a junior gets more pay than a senior என்றால் ஊதியத்தை மாற்ற வேண்டுமென்று இருக்கிறது. இதுவரை அது அமுல்படுத்தப்படவில்லை. காட்டூரிலே எச்.ஆர்.ஏ. தரப்படுகிறது. அங்கே கல்லூரி இருக்கிறது அங்கே இருக்கிறவர்கள் வாங்குகிறார்கள். ஆனால் அந்தப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை. விண்ணப்பித்தும் பயனில்லை. அந்தப் பள்ளி கல்வி இலாக்காவிலே இல்லாததால், இப்படியெல்லாம் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதைச் சொல்லி, எனவே இந்தத் துறையில் கல்வி இலாக்கா தனியாக செயல்பட வேண்டுமென்று எடுத்துச் சொல்லி, அதற்கு அமைச்சரவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வீட்டு மனைப்பட்டா பல பகுதிகளில் வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். வேப்பேரியில் நடேசன் நகர் பகுதி என்று இருக்கிறது. அங்கே பன்னெடுங்காலமாக அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்துவரும் ஆதி திராவிட மக்களுக்கு மறுமலர்ச்சி தர வேண்டுமென்று அங்கே இருக்கும் கற்பக விநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமான இடத்தை அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. ஆதி திராவிட நலத் துறை ஆணை பிறப்பித்திருக்கிறது. குடிசை மாற்று வாரியம் ஆணை பிறப்பித்திருக்கிறது. மற்ற அரசுத் துறைகளைப் பொறுத்து ஆணை பிறப்பித்திருக்கிறது. ஆதி திராவிட நலத் துறையிலிருந்து ஆணை போயிருக்கிறது, ஸ்லம் கிளியரன்ஸ் போர்ட்-லிருந்து ஆணை போயிருக்கிறது. அற நிலையத் துறையிடமிருந்து ஆணை போயிருக்கிறது. அவர்களுக்கு அந்த இடத்தை ஒதுக்க வேண்டுமென்று ஆணை இருக்கிறது. ஆனால் அந்த உத்தரவுகள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றனவா என்றால், இல்லை. அங்கேயுள்ள சில வசதி படைத்தவர்கள். சாதியைக் காட்டி மறுக்கிறவர்கள், அந்த ஆலயத்திலே அறங்காவலர்களாக இருக்கக்கூடியவர்கள்—இவர்களெல்லாம் சேர்ந்து அரசின் உத்தரவை அமுல்படுத்தவில்லை. அவமதிக்கிறார்கள். அதனாலே அங்கே இருக்கக்கூடிய ஆதி திராவிடர் நல சீரமைப்புக் குழு, முதலமைச்சர் அவர்களுக்கும், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சரவர்களுக்கும், அறநிலையத் துறை அமைச்சரவர்களுக்கும் புகார்கள் அனுப்பியிருக்கிறது. உத்தரவு போட்டும் நடைமுறைப்படுத்தவில்லை என்று புகார் அனுப்பியிருக்கிறார்கள். அந்த உத்தரவுகள் நடைமுறைப் படுத்தப்பட்டனவா என்று 'வெரிபை' செய்வது யார்? ஏன் அப்படிச் செய்யவில்லை? அரசு நினைத்தும்

கூட, அமைச்சரவர்கள் நினைத்தும்கூட, விரும்பியும்கூட, பொது மக்கள் கேட்டும்கூட, அரசு ஆணை பிறப்பித்தும் கூட, இன்னமும் நிறைவேற்றப்படா மல் இருக்கக் காரணம் யார்? அதைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். சிக்கல் இருந்தால், அந்தச் சிக்கலைத் தீர்க்க அரசு முன்வர வேண்டும். அந்த வகையிலே அரிசன நலத் துறையிலே நல்ல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வந்தால், அந்தச் சீர்திருத்தங்களை செவ்வனே செய்ய அதிகாரி கள் முனைப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தத் துறை யிலே ஆர்வத்தோடு உள்ள அமைச்சரவர்கள் இதை முனைப்பாகக் கவனிக்க வேண்டும்.

கல்வியைப் பொறுத்தவரையில், தனித் துறை ஏற்படுத்தி, மற்றவர்கள் தலையீடு இல்லாமல், அரசு வகுக்கும் கொள்கையை அமுல்படுத்த முழு உரிமை பெற்ற ஒரு துறையாக மாற்றினால்தான், அந்தத் துறையிலே இருக்கும் அவலங்கள், தரக் குறைவு என்று சொல்லப்படுபவை, மற்ற சங்கடங்கள், 'நிறை வேற்றப்படவில்லை' என்று கூறும் நிலைமைகள் தீரும். மற்றத் துறை மாண வர்களுக்கும், இந்தத் துறை மாணவர்களுக்கும் எந்தவிதத்திலும் வேறுபாடு இன்றி நன்றாகப் படிக்கிறார்கள், அவர்களுடைய கல்வித் தரம் உயர்ந்திருக் கிறது என்று அப்போது இந்தச் சமுதாயம் உணரும் என்று சொல்லி, அமை கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத் துறையின் கொள்கைக் குறிப்பின்மீது என் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய சமுதாயத்திலே பின்தங்கிய இந்த மக்களுக்காக, நாடு விடுதலை அடைந்து 35 ஆண்டுகளாக எவ்வளவோ கோடிக் கணக்கான தொகையை அவர்கள் மேம் பாட்டுக்காக ஒதுக்கியும், யாருக்கும் திருப்தி ஏற்படும் அளவுக்கு இந்தச் சமூகம் முன்னேற்றமடையவில்லை என்பதை வேதனையோடு குறிப்பிட வேண்டியிருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கையில் மேம்பாடு ஏற்பட முக்கிய மான திறவுகோல் என்னவென்றால் கல்வி என்று எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். கல்வியும் அவர்களுடைய மேம் பாட்டுக்கு அவசியம்தான். அந்தச் சமூகத்தில் கல்வி பெற்றவர்களை, அவர் களுக்காக ஒதுக்கப்பட்ட 18 விழுக்காட்டைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை யில் இருக்கும்போது, கல்வி மட்டும் அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் போதுமானதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சமுதாயத்தில் அவர்கள் மேம்பாடு அடைய வேண்டுமென்றால், பொருளாதாரத் துறையில்





அவர்கள் மேம்பாடு அடைய சில காரியங்களை அரசு செய்ய வேண்டியிருக் கிறது. அவர்களிலே மிகப் பெரும்பான்மையோர், 95 சதவிகிதத்தினர் நிலம் இல்லாத விவசாயக் கூலிகள்தான். அவர்கள் தங்கள் குடும்பத்தோடு உழைக்க 1 ஏக்கர், 1½ ஏக்கர் நிலம் கொடுத்தால், அரசு அளிக்கும் மற்ற சலுகைகளை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள, அது அஸ்திவாரமாக இருக்கும். அந்த மக் களின் வாழ்க்கைத் தரம் முன்னேற, நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மூலமாகக் கிடைக்கும் உபரி நிலங்களை வழங்கும்போது, ஆதி திராவிடர்களுக்கு முத லிடம் கொடுத்துள்ளதை வரவேற்கிறோம். இன்னும் அதை வற்புறுத்துகி றோம். அரசுக்கு நிலம் கிடைக்க வேண்டுமென்றால், நிலச் சீர்திருத்தச் சட் டத்தைச் சரியாக அமுல்படுத்த வேண்டும். அதற்கு பல பினாமி ஏற்பாடு களை மாற்ற வேண்டும். பினாமி பற்றி அரசு பேசி வந்திருக்கிறது. இப் போது பினாமி பிரச்சினை கிணற்றில் போட்ட கல்லாக இருக்கிறது. எப்போ தாவது இது பேசப்படுகிறது. அதற்கு பதில் சொல்லப்படுகிறது. பிறகு பினாமி பிரச்சினை எங்கே இருக்கிறதென்று தெரியாமல் போகிறது. இந்தப் பிரச்சினையை தொடர்ந்து மக்கள் முன்னாலே வைக்க வேண்டும். தாழ்த்தப் பட்ட மக்கள் மேலே எல்லோருக்கும் அக்கறை உண்டு. நம்முடைய அரசு பட்டா பாஸ் புத்தகம் வழங்க ஒரு சட்டம் போட்டிருக்கிறது. அதற்குப் பொறுக்குக் கமிட்டி இருக்கிறது. அது காலாகாலத்தில் முடிவு செய்தால் ஸ்டேசுடரியாகப் பட்டா கொடுக்கும் அவசியம் ஏற்படும். அப்போது பட்டா தவறாகக் கொடுக்கப்பட்டது என்று பினாமி சொந்தக்காரர்கள் சொல்ல வாய்ப்பு உண்டு. பட்டா கொடுக்கும்போது, நிலச் சீர்திருத்தச் சட்டத்தை மீறி எவ்வளவு வைத்திருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்க முடியும். பட்டாவில் சொல்லவில்லை என்றால், ஒரு சிலர் அதை அனுபவிக்கும்போது, அது அவர் கள் கையை விட்டுப் போகும் நிலைமை இருக்கும். பினாமி நிலங்களைப்பற்றி சட்டசபையிலே பேசுகிறோம். அந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அரசு எடுக்கும் பல்வேறு நடவடிக்கைகளிலே பட்டா பாஸ் புத்தகம் வழங்கும் சட்டத்தை சீக்கிரமாக நிறைவேற்றினால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அது உதவி செய்யும். தாழ்த்தப்பட்ட மக்களிலே, ஆதி திராவிட மக்களிலே பெரும் பான்மையோர் விவசாயத்திலே இருப்பவர்கள். அரசு போட்டுள்ள குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தை அமுல்படுத்துவதிலே மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இண்டஸ்டிரியல் ரிலேஷன்ஸ் ஆக்ட் என்று இருக்கிறது. தொழிலாளர் தகராறுச் சட்டம் என்று இருக்கிறது. அது தொழிலாளர் மத்தியில் தகராறு ஏற்பட்டால், அதைத் தீர்ப்பதற்காக இருக்கிறது. அதைவிட அதிகப்படியான மக்கள் மினிமம் வேஜஸ் ஆக்ட்-ன் கீழ் வருகிறார்கள். இலட்சக் கணக்கான விவசாயத்

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 ஏப்ரல் 12

தொழிலாளர்களுடைய பிரச்சினை இதில் அடங்கியிருக்கிறது. 18 ரூபாய் என்று நாம் அதைத் தீர்மானித்தாலும்கூட, கிழக் தஞ்சைக்குள்ள வேஜஸ் இருக்கிறதே, அதை அங்கே இருக்கும் விவசாயத் தொழிலாளர்களுடைய இயக் கத்தின் மூலமாக அரசு உதவி பெற்று அமுல் நடத்த முடிகிறது. கிழக்குத் தஞ்சைக்கு வெளியே, மற்றவர்கள் இந்தச் சட்டத்தை அமுல் நடத்த வேண்டு மென்று சொல்லும்போது, நிச்சயமாக பெரிய தகராறு ஏற்படுகிறது. எற் கெனவே நான் கூறினேன். விவசாயத் தொழிலாளர்களுக்காக, ஆதி திராவிடர் களுக்காக இருக்கும் அமைப்பு அதற்கு முயற்சிக்கும்போது, சமுதாயத்தில் பலாத்காரத்தைப் பிரயோகிக்கும் நிலைமை ஏற்படுகிறது. எங்களைப் போன்ற வர்கள் அப்படிப்பட்ட அமைப்புகளை ஏற்படுத்த முயற்சிக்கிறோம். அது சுலபமாக இல்லை. இதை அமுல்படுத்துவதில் அரசுத் தரப்பில் சில பிரச்சினை கள் தொழிலாளர் நலத் துறைக்கு இருக்கின்றன. எனவே 'மினிமம் வேஜஸ் ஆக்ட்' தவிர, விவசாயத் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம் என்ற முறையிலே கொண்டு வந்து, கூலிப் பிரச்சினை மட்டுமல்லாமல், பின்னால் விவசாயத் தொழிலாளி வளரும்போது, அவனுடைய வாழ்க்கை முறைகளைக் கண் காணிக்க வேண்டும். மத்திய அரசு சார்பிலே பல சிபாரிசுகள் இருக்கின்றன. அவற்றை இங்கே அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனவே விவசாயத் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டுவர முயற்சி தேவை என்று தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடி

(நண்பகல் 12-00)

யாக, ஆதிதிராவிடர்-பழங்குடியினருக்கு வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையி லும், அவர்களுக்கு 18 சதவிகிதம் வேலைவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும், அரசு இலாகாக்களிலும், பொதுத் துறைகளிலும் அம்மாதிரி அளிக்கப்பட வேண்டும் என்கிற கொள்கையை அரசு வகுத்திருக்கிறது. இன்றைக்கு ஏராளமான துறைகளிலே, பலவிதமான பதவிகள் இந்த வகையில் இருக்கின்றன. ஆனாலும் 30-க்கு மேற்பட்ட பதவிகளைப் பொறுத்தவரையில். 12 சதவிகிதப் பதவி களைத்தான் அவர்கள் அனுபவிக்கிற நிலைமை இருக்கிறது. இதுபற்றி, ஏன் இந்த நிலைமை என்று அரசு ஆராய்ந்ததா? இந்தத் துறையின் உயர்ந்த நிலையில், பொறுப்பில் இருப்பவர்கள் அந்த வகுப்பைச் சார்ந்தவர்களாக இருப்பதால்தான், இந்த வகுப்பினருக்கான இடங்கள் சரியாகத் தரப்பட வில்லையென்று புகார் சொல்கிறார்கள். இப்படி 18 சதவிகிதத்திற்கான வாய்ப்பு இருந்தும், ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும், 12 சதவிகித இடங்களைத் தான் இவர்கள் பூர்த்தி செய்ய முடிகிறது என்றால், இதற்குக் காரணம் என்ன என்று அரசாங்கம் யோசித்துப் பார்த்ததா? ஏரா... ..., படித்தவர்கள்,



1983 ஏப்ரல் 12] [திரு. ஆ. நல்லசிவன்]

இருக்கத்தான் செய்கிறார்கள். இருந்தும் அரசாங்கம் ஒதுக்கீடு செய்திருக்கும் இடங்களை அவர்களால் ஏன் பூர்த்தி செய்ய முடியவில்லை என்பதற்கான காரணம் குறித்து அரசு ஆராய வேண்டும்.

குறிப்பாகச் சொல்வதென்றால், இந்த இந்தப் பதவிகளுக்கு ஆட்களை நியமிக்க வேண்டுமென்று பப்ளிக் சர்விஸ் கமிஷன் முன்வரும்போது, ஷெட்யூல்ட் வகுப்பினருக்கு இத்தனை இடங்கள் என்று ஒதுக்குகிறார்கள். அப்படி பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்வை நடத்துகின்ற குறிப்பிட்ட ஆண்டில் தேவையான ஷெட்யூல்ட் வகுப்பினர் கிடைக்கவில்லை என்றால், மறுபடியும் அவர்களுக்காக தேர்வு நடத்தப்படுகிறதா? அந்த வகையிலாவது அவர்களுடைய பெர்சென் டேஜ் ஒழுங்காகப் பூர்த்தி செய்யப்படுகிறதா? தகுதியான அப்ளிகேஷன் இல்லையென்றால், அந்த இடத்தை எவ்வளவு நாட்களுக்குக் காலியாக வைத் திருக்கிறார்கள்? அடுத்த தேர்வின்போதும் இவர்கள் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யவில்லையென்று சொன்னால், அந்த இடத்தில் வேறு ஆட்களைப் போடுகிறார்களா? பூர்த்தி செய்யாத காரணத்திற்காக மறுபடியும் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்வு நடத்துகிற முறை நடைமுறையில் இருந்ததா? அப்படி இதுவரை தேர்வை நடத்துகின்ற முறை அமுலில் இல்லையென்றால், இப்போதாவது நடத்தக் கூடாதா? இப்படி 18 சதவிகிதத்தையே சரியான முறையில் பூர்த்தி செய்வதில்லை என்கிற நிலையில், இப்போது 22 சதவிகிதம் கொண்டுவருவதாக நிலைமைகள் இருக்கும்போது, இனிமேலாவது அரசு இதுகுறித்து சீரியசாக இருக்க வேண்டும்.

அடுத்து, வீடு கட்டுவது சம்பந்தமாக ரூபாய் 4,800 கொடுப்பதுபற்றி சொல்லியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அவர் களுக்காக ரூபாய் 1,000 தான் ஒதுக்கப்பட்டது. பின்னாலே அது ரூபாய் 3,000 ஆக ஆக்கப்பட்டது. இப்போது அதை ரூபாய் 4,800 ஆக ஆக்கியிருக்கி றார்கள். சிமெண்ட் லெவி மூலம் ரூபாய் 20, ரூபாய் 30 என்று விற்றுக்கொண் டிருக்கும்போது ரூபாய் 3,000 கொடுக்கப்பட்டது. ஆனால் இப்போது லெவி யைப் பொறுத்தவரையில், எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அரசுக்கும், பொதுப் பணித் துறைக்கும் மட்டும் தான் லெவி சிமெண்ட் கிடைக்கிறது. மற்றவர்கள் எல்லாம் ஓபன் மார்க்கெட்டில் தான் வாங்கிக்கொள்ள வேண்டு மென்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது. ஆக, ஓபன் மார்க்கெட்டில் ரூபாய் 100 க்கு மேல் ஒரு மூட்டை சிமெண்டின் விலை என்று இருக்கும்போது, ரூபாய் 4,800 கொடுப்பது போதாது. குறைந்தபட்சம் இதை ரூபாய் 8,000-க்கு உயர்த்த வேண்டும். ரூபாய் 4,800-ஐ வைத்துக்கொண்டு ஒரு கட்டிடம் கட்ட முடியுமா? முன்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் மீனவர் களைப் பொறுத்தவரையில், 6 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை ரூபாய் 8,500

என்று உயர்த்தினார்கள். அத்திட்டத்தைப் பொறுத்தவரையில் மீனவத்
துறையே மேற்பார்வையிட்டு வீடுகளைக் கட்டுவதாக நான் கேள்விப்படுகிறேன்.
இப்படிப்பட்ட நிலையில் அரசாங்கம் ரூபாய் 4,800 என்று வைத்திருப்பது
சரிதானா? அதை வைத்து ஏழைகள் வீடு கட்ட முடியுமா? அதுவும் ஓடன்
மார்க்கெட்டில் 100 ரூபாய்க்கு மேல் ஒரு மூட்டை சிமெண்டுக்குக் கொடுத்து
வாங்கிக் கட்டுவது என்பது நடைமுறையில் நடக்க முடியுமா? நிலைமை இவ்
வாறு இருக்கும்போது, இப்படி ரூபாய் 4,800 என்று அறிவிப்பதில் என்ன
அர்த்தம் இருக்கிறது? இந்தத் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று
நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வீட்டு மனை ஆர்ஜிதத்தைப் பொறுத்தவரையில், இதுசம்பந்த
மாக மாநில அரசு கொண்டு வந்த "கம்பல்சரி அக்விசிஷன் ஆக்ட்" செல்லாது
என்று உயர் நீதிமன்றம் ஒரு வருடத்திற்கு முன்பு தீர்ப்பு சொல்லியது. அதை
எதிர்த்து இந்த அரசு அப்பீல் செய்திருக்கிறதா? அதுகுறித்து இந்த அரசு
இதுவரை என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்று நான் அறிய விரும்புகிறேன்.
அதில் காலதாமதமாகுமென்று அரசு கருதுமேயானால், வேறு சட்டம் கொண்டு
வந்து இத்திட்டத்தை நிறைவேற்றக் கூடாதா?

அடுத்து, நஞ்சை நிலங்களைப் பொறுத்தவரையில், அரசு திட்டவட்டமாக
எடுக்க வேண்டாமென்று உத்தரவு போட்டிருப்பதாக நான் அறிகிறேன். அரசின்
உணர்வை நான் புரிந்துகொள்கிறேன். உணவு தானிய உற்பத்திக்காக நஞ்சை
நிலமாக மாற்றியிருப்பதை எடுக்கக் கூடாது என்று சொல்லியிருப்பதை நான்
ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அரிசனங்களுக்கு வேறு நிலமே இல்லை என்
கிற நிலைமையில் கூட, அவர்களிடமிருந்து அப்படி எடுக்கப்படுவதாகச் சொல்
கிறார்களே, அப்படி எடுப்பது நல்லதா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** நஞ்சை நிலங்களை எடுக்கக் கூடாது
என்று இந்த அரசு உத்தரவு போடவில்லை. ஆனால் நஞ்சை போன்ற பகுதி
களில் வேறு நிலம் இல்லை என்று சொல்லப்படுகிற நிலையில் நஞ்சை நிலங்
களை எடுக்க வேண்டுமென்ற கட்டாயம் இருக்குமானால், அதனை அரசுக்குச்
சுற்றனுப்பி, என் மூலமாகவும், வருவாய்த் துறை அமைச்சர் மூலமாகவும்
முதலமைச்சர் அவர்களுடைய ஆணை பெற்று, தற்போது அதுகுறித்து ஆணை
வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. ஆ. நல்லசிவன்:** வீட்டு மனைக்காக வேண்டி நில ஆர்ஜிதம் ஓரளவு
சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு மூலம் தடைப்பட்டாலும் கூட, அரசு நஞ்சை
நிலமானாலும் கூட, அதுகுறித்து தேவையான நடவடிக்கை எடுத்திருப்பது





காக நான் அரசைப் பாராட்டுகிறேன். ஆனால் சமுதாயக் காடுகள் என்கிற பெயரால் ஏற்கெனவே பட்டா கொடுக்கப்பட்ட இடங்களிலிருந்து கூட அவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** பட்டா கொடுத்து, அவர்கள் உரிமை பெற்றிருக்கிற நிலங்களிலிருந்து அவர்களை வெளியேற்றுவதே கிடையாது. இந்தச் சமுதாயக் காடுகளை, பயிர் வளர்கிற, காலியாக இருக்கிற இடங்களில் தான் பயிரிடுகிறார்கள். அதுவும் அந்தப் பகுதியிலே இருக்கிற பஞ்சாயத்து அதிகாரிகள், பஞ்சாயத்து ஒன்றிய அதிகாரிகள், ரெவின்யூ அதிகாரிகள் இவர்களையெல்லாம் கலந்துகொண்டு அவர்களாலேதான் முடிவு செய்யப் படுகிறது. எங்கேயாவது பிரச்சினைகள், சிக்கல்கள் வந்தால், ரெவின்யூ அதிகாரிகளும், வனத் துறை அதிகாரிகளும் சேர்ந்து, கலந்து பேசி முடிவெடுத்த பிறகு, பயிர்களை அங்கே நட வேண்டுமென்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம்.

**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த உறுதி மொழிக்கு நன்றி. நான் சொல்ல வந்தது என்னவென்றால், ஏற்கெனவே புறம்போக்கு நிலங்களிலே பயிரிட்டுக்கொண்டிருப்பவர்கள்பற்றி. ஏற்கெனவே பல வருடங்களாக அவர்களுக்குப் பட்டா கொடுக்கப்படாமல், புறம்போக்கு நிலங்களிலே பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த இடங்களை இதற்காகப் பயன்படுத்த, மாற்றுகிற முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்கிற அளவில், அவர்கள் ஏற்கெனவே இருந்துகொண்டிருக்கிறார்கள் என்கிற முறையில், அரிஜன இலாகா மற்றும் காட்டு இலாகா சேர்ந்து இவர்களை வெளியேற்றாமலிருக்கும் வகையில் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி ஒரு கருத்தைச் சொன்னார். கல்லூரி மாணவர்களுக்கு 60 ரூபாய், 80 ரூபாய், 90 ரூபாய் என்று கொடுக்கப்படுவதாகச் சொன்னார். இந்தக் காலத்திலே 60 ரூபாய்க்கு யார் சாப்பாடு போட முடியும்? இப்படி 60 ரூபாய், 80 ரூபாய், 90 ரூபாய் என்று வைத்திருப்பது சரியில்லை. இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு சாப்பிட முடியாது என்கிற நிலையில் அந்த மாணவர்கள் வீட்டிலிருந்து மேலும் பெற்றோர்களிடம் பணம் கேட்டு கஷ்டப்படுத்தும் நிலை இருக்கக் கூடாது. குறைந்தபட்சம் இந்தத் தொகையை 150 ரூபாய் என்று மாற்ற வேண்டும். சாதாரணமாக ஒரு ஆளை வைத்து, சாதாரண சாப்பாட்டைப் பொங்கிச் சாப்பிட்டாலே, மாதந்தோறும் சாப்பாட்டுக்கு குறைந்தபட்சம் ரூபாய் 140-க்கு மேல் ஆகிறது. ஆகவே குறைந்தபட்சம் ரூபாய் 150 என்று அரசாங்கம் உயர்த்த வேண்டும்,

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 ஏப்ரல் 12

அடுத்து, அரசாங்கம் கறவை மாடு போன்றவை வாங்க கடன் கொடுக்கிறது
ஆனால் சொத்து ஜாமீன் கொடுத்தால்தான் இந்தக் கடன் வழங்கப்படுகிறது
இவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயக் கூலிகளாக இருப்பதால், அவர்கள்
சொத்து ஜாமீன் கொடுப்பதற்கான நிலையில் இல்லை. கூட்டுறவுச் சட்டம்
சம்பந்தமாக இந்தப் பிரச்சினை வந்தபோது, கிராமப்புறங்களில் இருக்கிற
அரசங்களுக்குச் சொத்து ஜாமீன் கொடுக்கிற வாய்ப்பு இல்லாமல் இருப்ப
தால், அவர்களுடைய நலன் கருதி, அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது
என்று கேட்டபோது, அமைச்சர் அவர்கள் வேறு ஒரு ஆள் ஜாமீன் போதும்
என்று சொன்னார்கள். ஆனால் இப்போது சொத்து ஜாமீன் வேண்டுமென்று
இந்தத் துறையில் கேட்டால், அவர்கள் எப்படி கொடுக்க முடியும்? இந்த
சமுதாயத்தில் உள்ளவர்கள் பணம் சம்பாதித்து அதன் மூலம் சொத்து
எதையாவது வாங்கியிருந்தால்தானே, அவர்கள் சொத்து ஜாமீன் கொடுக்க
முடியும்?

(பிற்பகல் 12-10)

இல்லாவிட்டால் இந்த கிராமப்புறத்தில் இருக்கிற ஆதி திராவிடர்களுக்கு
எப்படி உதவி செய்ய முடியும்? இந்தச் சொத்து ஜாமீன் எப்படி கொடுக்க
முடியும்? அல்லது அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய உதவிகளை கூட்டுறவு
அமைப்புகளின் மூலமாகக் கொடுத்து, அதை மேற்பார்வை செய்ய,
கண்காணிப்பாளர்களைப் போடுங்கள். அவர்கள் மூலமாக மேற்பார்வை செய்ய
வழி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் சொத்து ஜாமீன்
கண்டிஷன் போட்டால், எப்படி கடன் உதவி செய்ய முடியும் என்பதை
யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிடப் பெண்
களுக்கு 60 வயதுக்கு மேல்தான் உதவித் தொகை என்று இருக்கிறது. தமிழ்
நாட்டில் ஆதி திராவிடர்களுக்கு மட்டும் என்று அல்ல. அறுபது வயதிற்கு
மேற்பட்டு இருப்பவர்கள் எல்லோருக்கும் இந்த பென்ஷன் கொடுக்க வேண்டு
மென்று உத்தரவு இருக்கிறது. ஆனால் அரசிடம் போதுமான நிதி வசதி
இல்லையென்று சொல்லி, தாசில்தாருக்கு டி.ஓ. லெட்டர் எழுதி, இந்தத்
தாலுக்காவில் இவ்வளவு பேருக்கு மேல் போகக் கூடாது என்று கட்டுப்
படுத்துகிறார்கள். எல்லோருக்கும் இந்த உதவித் தொகை கொடுக்க வேண்டு
மென்று அரசு உத்தரவு இருந்தாலும், அரசு ஒதுக்கியிருக்கும் பணம்
போதுமானதாக இல்லாததால், மாவட்டத்திற்கு ஒரு வருடத்துக்கு இவ்வளவு
பேருக்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்று இன்ஸ்ட்ரக்ஷன்
கொடுத்திருக்கிறீர்கள். இது ஆதி திராவிடர்களுக்கு மிகப் பெரிய பாதகம்.
ஏனென்றால் அவர்கள் உழைக்கிறபோதே போதுமான வருமானம் கிடைப்பது
இல்லை. வயதாகிவிட்டால் உழைக்காதபோது அவர்கள் பிள்ளைகளிடம் போய



1983 ஏப்ரல் 12] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

உழைக்கப் போய்விடுவார்கள். ஆகவே
முடியாது. காரணம் அவர்களும் அதன்
பென்ஷன் என்பதை அரிஜன நலத் துறையில் ஒரு நிதி ஏற்பாடு செய்து அதன்
மூலமாக ஆதி திராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு, 60 வயதுக்கு
மேற்பட்டவர்களுக்கு, கொடுப்போம் என்று உத்தரவாதம் கொடுத்து
அதற்கான உத்தரவைப் போட வேண்டும். அப்படிக் கொடுக்கப்படாவிட்டால்,
இதிலேயே அந்தப் பகுதியினைச் சேர்ந்தவர்களுக்கு ஆதி திராவிடத் துறை
மூலம் ஏதாவது ஏற்பாடு செய்து, 60 வயதுக்கு மேற்பட்ட அந்த ஆதி
திராவிடத் தொழிலாளர்களுக்குப் பென்ஷன் கிடைக்க ஏற்பாடு செய்ய
வேண்டும். இதை எல்லோருக்கும் போடுகிற கோட்டாவில் கொண்டுவராமல்,
ஆதி திராவிடர்கள் எல்லோருக்கும் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, இரண்டு மூன்று விஷயங்களைச் சொல்லி முடித்துக்
கொள்கிறேன். ஆதி திராவிட மாணவர்களுக்கு 12 மாதங்களுக்கும் உதவித்
தொகை தர வேண்டுமென்று மத்திய அரசு உத்தரவு இருக்கிறது என்று
கேள்விப்படுகிறேன். ஆனால் இந்த உதவித் தொகை வழங்குகிற அதிகாரத்தை
அந்தந்தக் கல்வி நிறுவனங்களுக்கே கொடுத்திருப்பதால், அந்தக் கல்வி
நிறுவனத்தின் நிர்வாகக் குறைகளைச் சுட்டிக் காட்டும் மாணவர்களுக்கு அந்த
உதவித் தொகை கொடுக்கப்படுவதில்லை என்று குற்றச்சாட்டு இருக்கிறது. பல
இடங்களில் குறைத்துக் கொடுக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டு இருக்கிறது.
பன்னிரண்டு மாதங்களுக்கும் அதைக் கொடுக்காமல், அப்படிப்பட்ட குற்றச்
சாட்டுகளைச் சொல்கிற மாணவர்களுக்கு குறைத்துக் கொடுக்கிறார்கள்.
குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், சென்னை சட்டக் கல்லூரியில் சென்ற
ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 300, 400 பேருக்குக் குறைவாகக்
கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குற்றச்சாட்டு இருக்கிறது. ஆனால் அரசு
அனுமதி அளிப்பது ஒரே மாதிரிதான் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறது.
ஆகவே கல்வி நிறுவனங்கள் தனியாரிடம் சில வருகிறதால் இப்படி இருக்கிறது.
அதை அரசு பரிசீலிக்க வேண்டும்.

ஆதி திராவிட நலத் துறையை நிர்வகிக்கக்கூடிய அதிகாரிகளைப்
பொறுத்தவரையில், அதைத் தனித் துறையாகப் பிரிக்க வேண்டுமென்று
ஏற்கெனவே ஒரு உத்தரவு இருக்கிறது. ஆனால் இந்தத் துறையில் ரெவின்யூ
துறை அதிகாரிகள் நியமிக்கப்படுவதால், காரியங்களை நிர்வகிக்க அவர்கள்
சரியாக வரவில்லை. ஏனென்றால் அவர்கள் அந்தத் துறையைச் சார்ந்தவர்கள்
அல்ல. ரெவின்யூ துறையைச் சேர்ந்தவர்கள். குறிப்பாக ஸ்பெஷல் தாசில்தார்
போடுகிறீர்கள். அதை ரெவின்யூ டிபார்ட்மெண்டைச் சேர்ந்தவர். ஒரு டிப்டி

கலெக்டர்தான் மாவட்ட ஆதி திராவிட நல அதிகாரியாகப் போடப்படுகிறார்.
அவர் ரெவின்யூ துறையைச் சார்ந்தவராக இருக்கிறார்.
துறை தனியாக இருக்கிறது. அதன் காரணமாக அமைச்சருடைய
மாற்றப்படுவதால், அவர்கள் தொடர்ந்து செயல்பட வாய்ப்பு அவர்கள் திடீரென்று
இதன் காரணமாக போதிய தேர்ச்சியும் தொடர்ச்சியும் ஏற்படவில்லை.
விடுகிறது. ஆகவே அரசு ஏற்கெனவே ஜி.ஓ. போட்டபடி, இல்லாமல் போய்
பிரித்து அந்த இலாக்காவின் கீழே வருகிற தனியாக அதைப்
அதிகாரிகளாகப் போட வேண்டும். ஆதி திராவிட பயன்களை நிர்வகிக்கக்கூடிய
மாவட்ட அதிகாரிகளாக என் வரக்கூடாது நலத் துறை அதிகாரிகளே
இதை அமைச்சர் அவர்களின் கவனத்துக்குக் என்று கேட்க விரும்புகிறேன்.
பதில் அளிக்கும்போது அமைச்சர் கொண்டுவர விரும்புகிறேன்.
கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் தெளிவாக்க வேண்டும் என்று

அடுத்தபடியாக, 1980 வரையில் மாவட்ட மாநில அளவிலான ஆலோசனைக்
குழுக்கள் இந்த அமைச்சகத்துக்கு இருந்ததாகக் கேள்விப்படுகிறேன். இப்
போது இருக்கிற அமைச்சர் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, அது அமைக்கப்பட
வில்லை என்றும் கேள்விப்படுகிறேன். அதைப்பற்றி பேரவையில் கேட்ட
வில்லை என்று சொன்னதாகக் கேள்விப்படுகிறேன். உறுப்பினர்களின் தகுதிக் குறிப்புகள் வர
க்கள் இருக்கிறார்கள். இதைவிட என்ன தகுதி வேண்டும்? எம்.எல். ஏ-க்கள், எம்.பி.
கள் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 3 வருட காலமாக சமூக ஊழியர்
மாநில மாவட்ட அளவில் ஆலோசனைக் குழுக்கள் அந்தத் துறைக்கு
தகுதிக் குறிப்புகள் இல்லையென்று சொல்வது போடாமலிருப்பதற்கு
இதற்கு அங்கேயுள்ள அதிகாரிகள் விரும்பாததன் பொருத்தமாக இருக்குமா?
படவில்லையா என்று அமைச்சர் அவர்களைக் காரணமாக, இது அமைக்கப்
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கேட்க விரும்புகிறேன். ஆகவே
கொள்கிறேன். கடைசியாக, நான் சொல்வது, கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்
மனைப் பட்டா வழங்குவதில் இந்த ஆதி திராவிடர்களுக்கு வீட்டு
தொகையில், நிலங்களை இலாகாவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்தத்
அதற்கு மேலே நிர்வாகச் ஆர்ஜிதம் செய்வதற்காக செலவழிக்கப்படுவதைவிட
பட்டாவுக்கு ஒதுக்கிய செலவுக்காக அதிகப் பணம் ஆகிறது. வீட்டுமனைப்
செலவு அதிகமாக தொகையில் ஆக்சுவலாக பணம் ஒதுக்கி, நிர்வாகச்
கேட்டுக்கொள்கிறேன். இருப்பதால், அதிகத் தொகை ஒதுக்க வேண்டுமென்று
நடக்கவில்லை. அந்த அளவுக்கு ஆர்ஜித நடவடிக்கைகள் அதிகமாக
அவர்கள் இப்படிப்பட்ட குறைபாடுகளைப்பற்றி மாண்புமிகு அமைச்சர்
வார்த்தைகளை பதில் தெரிவித்தால், நன்றாக இருக்கும் என்று கூறி, என்
முடித்துக்கொள்கிறேன்.





(மாற்றுத் தலைவர் திரு. க. இராமமூர்த்தி தலைமை)

திரு. ஏ. ஜே. தாஸ்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத் துறையின் 1983-84 ஆம் ஆண்டு கொள்கைக் குறிப்பின்மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என் கருத்துக்களைத் தெரிவிக்க முன் வருகிறேன். இன்று மக்களுடைய தொகையில் ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்காக இருக்கக் கூடிய ஆதி திராவிடர் பழங்குடியினருக்கு இன்று ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகக் குறைவான தொகை. இந்த சமுதாயத்தில் ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்காக இருக்கக்கூடிய ஒரு கோடி மக்களுக்கு இன்றைக்கு ஒதுக்கப் பட்டிருக்கிற தொகை மிகவும் குறைவான தொகை. இப்படிப்பட்ட சமுதாயத்தை, ஆண்டாண்டுக் காலமாக அடிமைப்பட்டிருந்த சமுதாயத்தை மாநில சர்க்காரும் மத்திய சர்க்காரும் கங்கணம் கட்டிக் கொண்டு உயர்த்த வேண்டுமென்று நினைக்கும்போது, அதற்காக ஒதுக்கப்படும் தொகை மிகக் குறைவானது என்பதைச் சுட்டிக்காட்டி, அடுத்த ஆண்டிலாவது இதை இரட்டிப்பாக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு ஆதி திராவிடர்களில் பாதிப் பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அப்படி வறுமைக்கோட்டுக்குக் கீழே இருப்பவர்களை முன்னேற்ற நாம் அதிக திட்டங்கள் உருவாக்க வேண்டும். அவர்களுடைய உயர்வுக்கு இத்துறை அதிக கவனம் செலுத்த வேண்டும். அதே நேரத்தில் பழங்குடியினர் என்று சொல்லக்கூடிய ஷெட்யூல்டு டிரைப்-க்கும் தொகையை உயர்த்த வேண்டும். அவர்களை நல்ல நிலைமைக்குக் கொண்டு வரவேண்டுமென்பது அரசுக் கொள்கையாக இருந்தாலும் பல பேர், உயர்ந்த சாதியினர் தாங்களும் பழங்குடியினர் என்று பொய்யாக சர்டிபிகேட்டுகள் வாங்கி வேலையில் இருப்பதைப் பார்க்கிறோம். மாண்புமிகு சுகாதார அமைச்சர் கூட பேசும்போது, மருத்துவக் கல்லூரியில் இந்தப் பொய் சர்டிபிகேட் வாங்கி, சிலர் சேர்ந்ததாகச் சொன்னார்கள். அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. தொழில் துறையில் மாநில சர்க்கார் 18 சதவீதம் இந்த சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு என்று ஒதுக்கியிருக்கும்போது, மாநில சர்க்கார் அதைக் கடைப்பிடிப்பதில்லை. மத்திய சர்க்கார் 18 சதவீதம் ஒதுக்கி, 18 சதவீதத்தையும் அவர்களுக்குக் கொடுக்கிறது. ஆனால் மாநில சர்க்கார் அப்படி நிரப்பாமலிருப்பதற்குக் காரணம் என்ன? ஆட்கள் இல்லையா? நிறைய ஆட்கள் இருந்தாலும், அவர்களை ஒதுக்குகிற நிலைதான் இருக்கிறது. பதினெட்டு சதவீதத்திற்கு மேலே ஆட்கள் இருந்தாலும் அவர்களுக்கு வேலை கொடுக்காமல், அந்த இடங்களை நிரப்பாமலிருப்பது இந்த அரசுக்கு மிகவும் வேதனை தரக்கூடிய

(பிற்பகல் 12-20)

விஷயமாக இருக்கிறது. இதில் அதிகாரிகள் செய்யும் தவறுகளால்தான்
இத்தகைய நிலைமை ஏற்படுகிறது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன்.

அடுத்து தற்போது, அரசுத் துறையின்கீழ் செயல்படும் ஆதி திராவிடர்
மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு
இரண்டு ஜதை ஆடைகளைக் கொடுக்கிறோம். இவ்வாறு இரண்டு ஜோடி
ஆடைகள் மட்டுமே கொடுப்பதால், மழைக்காலங்களில் ஒரு அணி நனைந்து
விட்டால், அந்த மாணவர்கள் ஈரத் அணியைப் போட்டுக்கொண்டு பள்ளிக்கு
வருகிற நிலைமையைத்தான் பார்க்கிறோம். எனவே இத்தகைய கஷ்டங்களி
லிருந்து மாணவர்களை மீட்பதற்காக ஏன் அவர்களுக்கு ஆண்டுக்கு நான்கு
ஜோடி ஆடைகள் வழங்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். எனவே
அரசு இதில் கவனம் செலுத்தி, மாணவர்களுக்கு ஆண்டுக்கு நான்கு ஜோடி
ஆடைகள் வழங்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின் மூலம் ஆதி திராவிடர்
மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கும்
சத்துணவு வழங்கி வருகிறோம். நாளொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் 45 காசு
செலவில் இது வழங்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில்
34 காசு உணவுப் பொருள் வழங்கு அதையும் மற்றும் கூட்டுறவுச்
சங்கங்களும் வழங்கும் அரிசி போன்றவற்றிற்காகச் சரிக்கட்டப்படுகிறது
என்றும் எஞ்சிய 11 காசு காய்கறிகள் மற்றும் சுவைப் பொருள்கள்
வாங்குவதற்காக மானியமாக வழங்கப்படுகிறது என்றும் சொல்லப்பட்டிருக்
கிறது. 11 காசுகளில் காய்கறிகள் வாங்க முடியுமா என்பதைச் சிந்திக்க
வேண்டும். அதோடு 45 காசுகளில் என்ன சத்துணவு போட முடியும்? எனவே
இந்தத் தொகையை இன்னும் அதிகமாக உயர்த்த வேண்டும் என்று இந்த
நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த மாணவர்
களுக்குப் பாடப் புத்தகங்களை வழங்குகிறோம் என்று சொல்லப்பட்டிருக்
கிறது. ஆனால் நடைமுறையில் என்ன பார்க்கிறோம்? இங்கே மாண்புமிகு
உறுப்பினர்கள் பலரும் பேசியபடி, அத்தகைய மாணவர்களுக்குப் பாடப்
புத்தகங்கள் பள்ளி தொடங்கி மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் அநேகமாகக்
கிடைக்கின்றன. அந்த நிலைமையில் ஒரு தாழ்த்தப்பட்ட குடும்பம் எப்படி
தன்னுடைய பிள்ளைகளுக்குத் தன்னுடைய குறைந்த வருமானத்தில்





புத்தகங்களை வாங்கிக் கொடுக்க முடியும்? எனவே இத்தகைய மாணவர்களுக்கு
பள்ளி திறந்த உடனே பாடப் புத்தகங்கள் கிடைக்கும் வகையில் துறை
நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சிபெற்ற ஆதி திராவிடர், பழங்
குடியினர் மாணவர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லை என்ற கருத்து
இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அநேகமாக லோயர், ஹையர் என்று படித்து
விட்டு பல மாணவர்கள் வேலையில்லை என்று வேலை வாய்ப்பு நிலையத்திலும்
தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்து கொண்டு பலமுறை முயன்றும்
வேலை கிடைக்காமல் கடந்த 5, 6 ஆண்டுகளாகவே இருந்து வருகிறார்கள்.
இப்படிப்பட்ட நிலைமையில் வேலைக்கு ஆட்கள் கிடைக்கவில்லை என்று
குறிப்பிட்டிருப்பது உண்மையிலேயே பரிதாபத்திற்குரிய ஒரு விஷயமாகத்தான்
இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பைச் சார்ந்த மாணவர்களில்
குறிப்பாக அரசினர் உயர்நிலைப் பள்ளி மற்றும் பிற இடங்களில், தங்கிப்
படிக்கும் மாணவர்களுக்கு நல்ல டியூஷன் கொடுத்து உற்சாகப்படுத்துவதை
நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். அதே நேரத்தில் தனியாரால் நடத்தப்
படுகிற மாணவர் இல்லங்களில் தங்கிப் படிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்
குடி மாணவர்களுக்கு 'மாணவர் இல்ல உதவித் தொகையாக' முன்பு கொடுக்
கப்பட்டு வந்த ரூபாய் 35-ஐத் தற்போது ரூபாய் 45 ஆக உயர்த்தியிருக்கிறார்
கள். ஆனால் ஒரு மாணவருக்கு ஒரு மாதத்திற்கு ரூபாய் 45-ல் சாப்பாடு
போட முடியுமா, அதுவும் தனியார் இல்லங்களில் போட முடியுமா என்பதை
எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் வாடகை கொடுக்க வேண்டும். சர்வீஸ்
சார்ஜ் கொடுக்க வேண்டும். இப்படி இவைகளையெல்லாம் கொடுத்துவிட்டு,
தனியார் நடத்துகிற இல்லங்கள் ரூ. 45-ல் ஒரு மாணவருக்குச் சாப்பாடு போட
முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைய விலைவாசி
ஏற்றத்தில் இது முடியாத காரியம் என்பதால், இந்த உதவித் தொகையை
ரூ. 80 ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கொல்லிமலை, சின்னக்கல்ராயன் மலை,
பெரிய கல்ராயன் மலை ஆகிய இடங்களில் தோட்டக் கலையை பழங்குடி
மக்களுக்குக் கற்றுத் தர ஏற்பாடு செய்யப்படும் என்று குறிப்பில் சொல்லப்
பட்டிருக்கிறது. உண்மையிலேயே அது நல்ல திட்டம்தான். ஆனால் இந்தத்
திட்டம் அங்கே முறையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதைப் பார்க்க
வேண்டும். எனக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் சொல்வதென்றால்,
அங்கே மலைப் பகுதிகளில் சாலைகள் போடுவதற்காக ஒதுக்கப்பட்ட
தொகையில் பெரிய ஊழல்கள் நடந்திருப்பதாகத் தெரிகிறது. மத்திய அரசு

[திரு. ஏ. ஜே. தாஸ்] [1983 ஏப்ரல் 12

தருகிற அந்தச் சலுகைகூட அங்கே ஒழுங்காகச் செயல்படுத்தப்படவில்லை
என்ற தகவல்தான் வருகிறது. அதற்கெல்லாம் என்னிடத்தில் போதுமான
ஆதாரங்கள் கூட இருக்கின்றன. அவற்றைக் காட்டவும் தயாராக இருக்கிறேன்.
எனவே அங்கே உள்ள பழங்குடியினர் பழத் தோட்டங்களைப் போடுவதற்கு
காடுகளை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும், மலைப் பகுதியில் ஒன்றிரண்டு
ஏக்கர் நிலங்களைக் கொடுத்து நல்ல பழவகைகளைப் பயிரிட உதவி செய்ய
வேண்டும். அதற்கு அவர்களுக்கு நல்லவிதமாகப் பயிற்சி அளிக்க வேண்டும்.
காடுகளில் நிலங்களை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, தொழில் கருவிகளை இலவசமாக வழங்குதல் என்ற தலைப்பில்,
கருமார், தச்சர், தையல் தொழில்கள், ஏனைய 18 தொழில்களில் பயிற்சி
கொடுப்பதற்காக என்று இத்துறையில் 1983-84 ஆம் ஆண்டிற்காக ரூ. 9.40
லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் நடைமுறையில் என்ன
பார்க்கிறோம் என்றால், இந்தத் துறையில் 50 தையல் மெஷின்கள் அல்லது
50 தச்சுக் கருவிகள் மட்டும்தான் கொடுக்கப்படுகின்றன. இது போதுமானது
அல்ல. எனவே இதற்காக நாம் ஒதுக்கீடு செய்யும் பணத்தை இன்னும்
அதிகமாக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

சிறு தொழில் கடன்கள் என்ற தலைப்பின்கீழ், சைக்கிள் கடைகள்,
ஓட்டல்கள், மளிகைக் கடைகள், அச்சகம் போன்ற 31 தொழில்களை நடத்து
வதற்காக ஆதி திராவிடர்களுக்குக் கடன் வழங்கும் திட்டம் தொடர்ந்து
நடத்தப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வகையில் நாம் ஒதுக்கி
யிருக்கிற தொகை போதுமானதாக இல்லை. விலைவாசி உயர்ந்திருக்கிற இந்த
நேரத்தில் குறைவான அளவுக்குத் தொகை ஒதுக்கப்படுவது சரியல்ல. இந்தத்
தொகையையும் அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஏழை எளிய ஆதி திராவிட மக்கள் மற்றும் பழங்குடியினர்
வாழ்க்கை உயர்வதற்காக என்று மத்திய அரசு சிறப்பு நிதி உதவி செய்து
வருகிறது. இதைக் குறித்து ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
கூட்டிய கூட்டத்திலகூட நான் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னேன். ஏதோ
அவர்களுக்குக் கடன் கொடுப்பது என்ற அடிப்படையில் ஒப்பாப்பட்ட சிறு
சிறு உதவிகளைச் செய்வதை விடுத்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பெரிய
தொழிற்சாலையை ஏற்படுத்தி அதில் ஆதி திராவிட மக்களுக்கே வேலை
வாய்ப்பு அளிப்பதன் மூலம் அவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றத்தை
உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அந்தக் கருத்தை வேறு பல



1983 ஏப்ரல் 12] [திரு. ஏ. ஜே. தாஸ்]

மாண்புமிகு உறுப்பினர்களும் தெரிவித்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அந்தக் கருத்தை அப்போது ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் இங்கே கொள்கை விளக்கக் குறிப்பைப் பார்க்கும்போது, ஆதி திராவிட மக்களை ஏதோ நெசவாளிகளாக மாற்றுகிற நிலைதான் இருக்கிறது. தற்போது நெசவாளர்களுக்கே வேலை இல்லாததன் காரணமாக, பல கோடிக் கணக்கான அளவுக்குத் துணிகள் தேங்கியிருக்கின்றன. எனவே ஆதி திராவிட மக்களை இந்தத் தொழிலில் ஈடுபடுத்துவதை விட்டுவிட்டு, நல்ல தொழிலில் ஈடுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக செங்கல் தயாரிக்கும் கூடங்கள், பாலிதீன் பைகள் தயாரிக்கும் கூடங்கள், தீப்பெட்டி தயாரிக்கும் கூடங்கள் போன்ற தொழில்கள் தொழிற் துறையின் அடிப்படையில் பல இருக்கும்போது, கஷ்டப்படுகிற நெசவுத் தொழிலை ஆதி திராவிட மக்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதற்கு ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்தால், கூட்டுறவுத் துறையின் மூலம் 10 கோடி ரூபாய் கிடைக்கிறது. ஆக மொத்தம் ரூ. 11 கோடியை வைத்துக்கொண்டு தொழிற்சாலையை ஆரம்பித்தால், மக்களின் பொருளாதாரமும் வாழ்க்கைத் தரமும் உயரும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தேர்வாணைக் குழுவில் எதற்கெடுத்தாலும் ஆட்கள் இல்லை என்று சொல்லும் நிலை இருக்கிறது. அதாவது இது தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களில் தகுதியானவர்கள் யாரும் இல்லை என்பதுபோல் இருக்கிறது. ஆதி திராவிடர்கள் தேர்வாணைக் குழுவுக்குப் போனால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்படுவதில்லை. அவர்களுக்கு நாம் தனிப் பயிற்சி வகுப்புகள் நடத்துகிறோம். இப்படிப் பயிற்சி பெற்றவர்கள் தேர்வாணைக் குழுவுக்குப் போனால் வேலை கொடுப்பதில்லை. இதையும் அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு புறம்போக்கு நிலங்களை ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைகளாகப் பிரித்துக் கொடுக்க இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு பல மைல்களுக்கு அப்பால் வீடுகளைக் கட்டிக் கொடுக்கிற நிலைதான் இருக்கிறது. ஊர்ப்புறத்திலிருந்து வெகு தூரம் தள்ளி இருப்பதால், அங்கே ஒருவர் கூட குடியிருப்பதில்லை. பல நேரங்களில் சாலை ஓரங்களில் ஒரு 50 வீடுகள் கட்டப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். அதில் யாருமே குடியிருப்பதில்லை. மாடுகள் கூட அங்கே படுப்பதில்லை. எனவே மக்கள்

[திரு. ஏ. ஜே. தாஸ்]

[1983 ஏப்ரல் 12

குடி இருக்கக்கூடிய இடங்களில் ஊருக்குப் பக்கத்திலேயே வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாமே அந்த மக்களை ஒதுக்குவது என்பது சரியல்ல.

சென்னையில் ஆதி திராவிட மக்கள் வாழ்கிற பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் சரியாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுவதில்லை. எங்கே பார்த்தாலும் குடிசைகள்தான் மலிந்து கிடக்கின்றன. ஆதி திராவிட மக்களில் எத்தனை பேருக்கு குடிசை மாற்று வாரியத்தால் வீடுகள் கொடுக்கப்பட்டிருக் கின்றன என்ற விவரம்கூட இங்கே தரப்படாமல் இருக்கிறது. சிந்தாதிரிப் பேட்டை, கோடம்பாக்கம், சேத்துப்பட்டு போன்ற இடங்களில் குடிசை மாற்று வாரியம் போதுமான அளவுக்கு வீடுகளை ஒதுக்கித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். . . .

மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி): விவாதம் முடிவுறும் வரை, அவையின் நேரம், அவையின் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 12-30)

திரு. ஏ. ஜே. தாஸ்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் குறையைக் கவனிப்பார் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, கலப்புத் திருமணத்தைப்பற்றிக் கூற விரும்புகிறேன். கலப்புத் திருமணத்தை நாம் ஊக்குவிக்கிறோம். ஆதி திராவிடர் சமுதாயத்தில் நடந்த ஒரு சிறிய சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் முன்னிலையில் கலப்புத் திருமணம் நடந்தது. பத்திரிகையில் வந்ததைக் கூட பார்த்தோம். அம்மை யார் அவர்கள் திருமணத்தை நடத்தி வைத்தார்கள் என்பதைப் பார்த்தோம். அதிலே பையன் சாதி இந்துப் பையன். பெண், ஆதி திராவிடப் பெண். பையனுடைய தகப்பனார் போலீஸ் ஸ்டேஷனில், பையனை மீட்டுக் கொடுக்க வேண்டும் என்று புகார் கொடுத்திருக்கிறார். அவர்களுக்கு அமைச்சர் முன் னிலையில் திருமணம் நடந்து, பிறகு அதைத் திருமண பதிவு அலுவலகத்திலும் பதிவு செய்திருக்கிறார்கள். அத்தனையும் ஏற்பட்டதற்குப் பிறகு, நான் கைந்து நாட்களுக்குப் பிறகு, அவர்கள் இருவரையும் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போய், அடித்து "பெண் வேண்டாம்" என்று சொல்லக்கூடிய அளவிற்குத் [illegible] இருக்கிறார்கள் என்ற தகவல் இருக்கிறது. இந்த நிலையில் கலப்புத் [illegible] திற்கு எப்படி முன்வருவார்கள்? மற்றவர்கள் முன்வருவதில் [illegible] இருக்கின்றன. இவைகளைப் போக்க வேண்டும். எந்தவிதமான [illegible] பார்த்துக்கொள்ள வேண்டும்.



1983 ஏப்ரல் 12] [திரு. ஏ. ஜே. தாஸ்]

தமிழகத்திலே ஜாதிக் கலவரங்கள் சிறுசிறு அளவிலும் பெரிய அளவிலும் ஏற்பட்டிருக்கின்றன. ஜாதிக் கலவரங்கள் ஏற்படுகிறபோது, 50 வீட்டைக் கொளுத்திவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். அதனால் பாதிக்கப்பட்டவர் களுக்கு உதவி செய்கிறோம் என்றாலும், அது பெரிதல்ல. உதவி செய்வதால் மட்டும் அவர்களுடைய வாழ்வு உயர்ந்துவிடாது. அதற்காக ஒரு தனி அட்வைசரி போர்ட் அல்லது கமிஷன் அமைக்க வேண்டும். எங்கு எந்தவிதமான காரியங்கள் நடந்தாலும், அவர்கள் அங்கே சென்று தீர விசாரணை செய்து, அவர்களுக்கு என்னென்ன வழிகளில் உதவிகளைச் செய்ய வேண்டும் என்பதை யெல்லாம் சிந்தித்துச் செய்தால், இனி நாட்டிலே இவ்விதமான ஜாதிக் கலவரங்கள் இல்லாமல் இருக்கும்.

அதே நேரத்தில் ஆதி திராவிடப் பெண்கள் கற்பழிக்கப்படும் நிலையைப் பார்க்கிறோம். அதுபற்றி ஒவ்வொன்றையும் விவரமாகச் சொல்லுவதற்கு நேரம் இல்லை. ஆகவே கற்பழிப்பு நிலைமைகளைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சேத்துப்பட்டில் ஏறக்குறைய நாற்பது ஆண்டுக் காலமாக வசிக்கக்கூடிய 35 ஆதி திராவிட மக்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று சொல்லி, அந்த நிலத்தை யாரோ சொந்தம் கொண்டாடும் நிலையைப் பார்க்கிறோம். ஆதி திராவிடர்களுக்காக நிலம் ஒதுக்குகிறோம், நில ஆர்ஜிதம் செய்கிறோம் என்றாலும், நாற்பது ஆண்டுக் காலமாக குடியிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களை அந்த இடத்திலிருந்து அகற்ற எடுக்கும் முயற்சிகளைப் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று மிகத் தெளிவாகச் சொன்னார்கள். உண்மையிலேயே அவர் அப்படிப் பேசியதற்காக அவரைப் பாராட்டுகிறேன். அந்த முறையில் அவர் சார்ந்திருக்கும் ஆளும் கட்சி அவர் சொன்ன கருத்துக்களையெல்லாம் உயர்ந்த எண்ணங்களோடு பரிசீலித்துச் செய்வார்கள் என்று கருதி, அவருக்கும், அந்தக் கட்சிக்கும் நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

THIRUMATHI TARA CHERIAN: Hon. Vice-Chairman, I thank you for giving me this chance to say a few words and I must congratulate the Hon. the Minister for Adi-Dravidar Welfare on the Policy Note that he has given us. I must also congratulate the staff of his department on having given the Policy Note in a beautiful way. One thing I would request the Hon. Minister is that as in other Policy Notes, the

[திரு. ஏ. ஜே. தாஸ்] [1983 ஏப்ரல் 12

குடி இருக்கக்கூடிய இடங்களில் ஊருக்குப் பக்கத்திலேயே வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாமே அந்த மக்களை ஒதுக்குவது என்பது சரியல்ல.

சென்னையில் ஆதி திராவிட மக்கள் வாழ்கிற பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் சரியாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுவதில்லை. எங்கே பார்த்தாலும் குடிசைகள்தான் மலிந்து கிடக்கின்றன. ஆதி திராவிட மக்களில் எத்தனை பேருக்கு குடிசை மாற்று வாரியத்தால் வீடுகள் கொடுக்கப்பட்டிருக் கின்றன என்ற விவரம்கூட இங்கே தரப்படாமல் இருக்கிறது. சிந்தாதிரிப் பேட்டை, கோடம்பாக்கம், சேத்துப்பட்டு போன்ற இடங்களில் குடிசை மாற்று வாரியம் போதுமான அளவுக்கு வீடுகளை ஒதுக்கித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். . . .

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி):** விவாதம் முடிவுறும் வரை, அவையின் நேரம், அவையின் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 12-30)

**திரு. ஏ. ஜே. தாஸ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் குறையைக் கவனிப்பார் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, கலப்புத் திருமணத்தைப்பற்றிக் கூற விரும்புகிறேன். கலப்புத் திருமணத்தை நாம் ஊக்குவிக்கிறோம். ஆதி திராவிடர் சமுதாயத்தில் நடந்த ஒரு சிறிய சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் முன்னிலையில் கலப்புத் திருமணம் நடந்தது. பத்திரிகையில் வந்ததைக் கூட பார்த்தோம். அம்மை யார் அவர்கள் திருமணத்தை நடத்தி வைத்தார்கள் என்பதைப் பார்த்தோம். அதிலே பையன் சாதி இந்துப் பையன். பெண், ஆதி திராவிடப் பெண். பையனுடைய தகப்பனார் போலீஸ் ஸ்டேஷனில், பையனை மீட்டுக் கொடுக்க வேண்டும் என்று புகார் கொடுத்திருக்கிறார். அவர்களுக்கு அமைச்சர் முன் னிலையில் திருமணம் நடந்து, பிறகு அதைத் திருமண பதிவு அலுவலகத்திலும் பதிவு செய்திருக்கிறார்கள். அத்தனையும் ஏற்பட்டதற்குப் பிறகு, நான் கைந்து நாட்களுக்குப் பிறகு, அவர்கள் இருவரையும் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போய், அடித்து "பெண் வேண்டாம்" என்று சொல்லக்கூடிய அளவிற்குத் துன்புறுத்தியிருக்கிறார்கள் என்ற தகவல் இருக்கிறது. இந்த நிலையில் கலப்புத் திருமணத்திற்கு எப்படி முன்வருவார்கள்? மற்றவர்கள் முன்வருவதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இவைகளைப் போக்க வேண்டும். எந்தவிதமான தகாரும் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.



1983 ஏப்ரல் 12] [திரு. ஏ. ஜே. தாஸ்]

தமிழகத்திலே ஜாதிக் கலவரங்கள் சிறுசிறு அளவிலும் பெரிய அளவிலும் ஏற்பட்டிருக்கின்றன. ஜாதிக் கலவரங்கள் ஏற்படுகிறபோது, 50 வீட்டைக் கொளுத்திவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். அதனால் பாதிக்கப்பட்டவர் களுக்கு உதவி செய்கிறோம் என்றாலும், அது பெரிதல்ல. உதவி செய்வதால் மட்டும் அவர்களுடைய வாழ்வு உயர்ந்துவிடாது. அதற்காக ஒரு தனி அட்வைசரி போர்ட் அல்லது கமிஷன் அமைக்க வேண்டும். எங்கு எந்தவிதமான காரியங்கள் நடந்தாலும், அவர்கள் அங்கே சென்று தீர விசாரணை செய்து, அவர்களுக்கு என்னென்ன வழிகளில் உதவிகளைச் செய்ய வேண்டும் என்பதை யெல்லாம் சிந்தித்துச் செய்தால், இனி நாட்டிலே இவ்விதமான ஜாதிக் கலவரங்கள் இல்லாமல் இருக்கும்.

அதே நேரத்தில் ஆதி திராவிடப் பெண்கள் கற்பழிக்கப்படும் நிலையைப் பார்க்கிறோம். அதுபற்றி ஒவ்வொன்றையும் விவரமாகச் சொல்லுவதற்கு நேரம் இல்லை. ஆகவே கற்பழிப்பு நிலைமைகளைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சேத்துப்பட்டில் ஏறக்குறைய நாற்பது ஆண்டுக் காலமாக வசிக்கக்கூடிய 35 ஆதி திராவிட மக்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று சொல்லி, அந்த நிலத்தை யாரோ சொந்தம் கொண்டாடும் நிலையைப் பார்க்கிறோம். ஆதி திராவிடர்களுக்காக நிலம் ஒதுக்குகிறோம், நில ஆர்ஜிதம் செய்கிறோம் என்றாலும், நாற்பது ஆண்டுக் காலமாக குடியிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களை அந்த இடத்திலிருந்து அகற்ற எடுக்கும் முயற்சிகளைப் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று மிகத் தெளிவாகச் சொன்னார்கள். உண்மையிலேயே அவர் அப்படிப் பேசியதற்காக அவரைப் பாராட்டுகிறேன். அந்த முறையில் அவர் சார்ந்திருக்கும் ஆளும் கட்சி அவர் சொன்ன கருத்துக்களையெல்லாம் உயர்ந்த எண்ணங்களோடு பரிசீலித்துச் செய்வார்கள் என்று கருதி, அவருக்கும், அந்தக் கட்சிக்கும் நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

THIRUMATHI TARA CHERIAN: Hon. Vice-Chairman, I thank you for giving me this chance to say a few words and I must congratulate the Hon. the Minister for Adi-Dravidar Welfare on the Policy Note that he has given us. I must also congratulate the staff of his department on having given the Policy Note in a beautiful way. One thing I would request the Hon. Minister is that as in other Policy Notes, the

work done by the department in various fields could have been separately given in the form of an Annexure. From the present Policy Note, in regard to the different activities and types of work, for instance, education, public health, we have to take the points from various pages to know whether a particular scheme or work is included in this or not. Unfortunately, this House had no opportunity to discuss the Policy Note on Social Welfare and the Hon. the Minister for Social Welfare has got under her charge Animal Husbandry dealing with four-legged animals and bipeds. We do not know what has been included in that and what is included in this Policy Note. I am glad that the Commissioner and Secretary to Government in the Social Wefare Department is also present here. The time being limited, I may not be able to say everything I wish to say. From the Policy Note it is seen that out of the total population of 484 lakhs, the population of Adi-Dravidars is 88.86 lakhs and that of the Scheduled Tribes is 5.20 lakhs. The Note also says that the percentage of literacy of Adi-Dravidars is 29.67 and that of Scheduled Tribes is 20.45 and this is very interesting. From the Note we could not know whether there is adult literacy programme and whether there is formal and non-formal education in this department. I had been to the tribal area recently and if I express my views, some of the hon. Members may agree and many of them may not agree. However, the schemes for tribal welfare may be strengthened.

There can be more amount of co-operation and better common approach so far as this department and the Social Welfare Department are concerned. The moneys could not be diverted to other schemes. They should realise that there are voluntary organisations working for the welfare of the tribals and at least on some common points, we could join together and cover more area among the tribals for their benefit. For instance, those in the Balwadis run by the voluntary organisations do not get any food under the Nutritious Noon Meal scheme. Of course, I happen to be on the committee relating to this scheme. Under this scheme, food is to be given to children of different age-groups, like '2 plus', '4 plus', '5 plus' and '9 plus'. The Social Welfare Department was doing it for the children in the age-groups '2 plus' and '4 plus'. Now, they find that



they are not in charge and that the Block Development Officers are in charge. It seems that there is a little bit of misunderstanding. I hope I will not be misunderstood when I say this here. I suppose that, in some other platform, I will be able to have it defined as to who is responsible. Now, in the hill areas, children do not attend the meal centres in large numbers. The attendance in each centre is not more than 20 or 25. The number is so small because the children cannot go up the hill and down the hill just to get one meal. Therefore, in the case of centres in the hill areas the rules have to be relaxed. Sir, I know many of the Hon. Ministers. The Hon. the Minister for Adi-Dravidar Welfare seems to be a very nice person. I hope that I will be able to give him some good ideas. I also hope that, whatever I say, if it is feasible, will be done. Therefore, I think that in the matter of giving Nutritious Noon Meals in the hill areas, we must make a special concession. One hon. Member said that the sum of 45 paise may not be enough for providing a meal. About 25 years ago, this amount would have been more than enough. But, prices have gone up now. Still, I feel that the nutritious meal given at a cost of 45 paise is enough. Again, I hope I will not be misunderstood when I say this here.

Sir, there has been no improvement in the condition of these two classes of people, namely, the Adi Dravidars and the Scheduled Tribes, right from the post-Independence days. Probably, the Government of India also have realised this fact. Therefore, they have brought forth a new scheme called the Special Component Plan. Under that scheme, very rightly, special targets have been set for the welfare of the Scheduled Castes. I am glad to note that, under this scheme, about 9 lakhs of people belonging to the Scheduled Castes will be brought above the poverty-line. In this connection, I would like to make a suggestion. For the tribal areas also, the Government can launch some pilot projects in different areas. The projects should be such that they suit the climate of particular places and also suit the people living in those places. In those projects, different schemes can be brought together and those areas can be made as self-sufficient areas. Of course, money cannot be diverted from one scheme to another. But,

[Thirumathi Tara Cherian.]

because we are a social welfare State, the Government, instead of giving money to the various Departments, can, at some time, bring together all the Departments and evolve a model, ideal project for the tribal areas. Sir, population-wise, I find that the Todas do not need so much of birth control in their areas. But, they need a lot of education in health. They are only very small in number. But, those people once owned the hills. They are the people who originally belonged to that area. Therefore, we should not allow them to die. Due to many factors like sexually transmitted diseases and other things, their population has remained small. Therefore, it is very important to evolve a health scheme to them. Of course, for the Scheduled Castes, the implementation of the family welfare scheme has got to be done. I also find that the Government

(பிற்பகல் 12-40)

have spent a lot of money for getting houses constructed for these people including Todas. Of them, very few houses are being occupied, because, though we want to observe some amount of our old culture, the houses should be convenient to them. Some of them are very bad and I have my own experience. I must congratulate the Hon. Minister on having done so much but I am sorry that the igloo type of houses has also come. However fanatic we may be in our views, Ooty, being a tourist centre, I feel we must have Tamil and English side by side in Ooty. This may be considered.

There is mention about the Public Service Commission and reservations, etc. I hope I will have another chance to speak on these reservations. While we want to give all types of encouragement to these tribal and other people, are we going to commemorate for years together calling them backward classes, scheduled castes, scheduled tribes? When are we going to get them into the mainstream? Have the Government of India or our Government thought of a plan by which they will give a time-limit within which they will all be included in the mainstream? Even where there is reservation, I do not know how many people are being taken from these two



[Thirumathi Tara Cherian.]

sections. In the case of vacancies which could not be filled up by the reserved sections, what do we do? To which community in particular, are these vacancies given? I want the Hon. Minister to explain this point.

I hope I will not be misunderstood. So much is being done by the Government. The Collector is supposed to be the chief man in the district to review the work done. I feel that an independent non-political small committee may be constituted at the district level to appreciate the work done, because the District Collector may have his hands full with other work. Work has got to be done in all the projects. I know that the Government have set up district committees. Here, I think the people in the Department will not misunderstand me if I say one thing. By merely sitting in a room and going through the files, one cannot get an actual picture of the things that are happening in the implementation of various schemes. Of course, the Director, who is an officer of the I.A.S. cadre, is looking after the whole thing. The High Power Committee headed by the Hon. the Chief Minister is also there. Yet, I feel that the Secretariat officials also should be given an opportunity to go, without giving any previous intimation and see what is happening on the spot. Sir, still, many more things have got to be done for the hill tribes. In one page of the Policy Note, it is stated that a sum of Rs. 14 is going to be given to them for a pair of uniform dress. All of us know that, nowadays, stitching charges alone come to Rs. 8 and I do not know how they are going to meet the cost of the dress material. I hope that it will be possible for the Government to increase this amount. As some other hon. Members suggested, at least in certain places where the climate is different, the amount can be increased. In the Annexure to the Policy Note, a list is given showing the institutions which are given subsidies. Now, we have started integrating everything and we speak of national integration. But, even now, we are having schools and hostels run purely for the Scheduled Castes. I do not know the political implications of this. I do not also know the views of the senior politicians at the Union level in this matter. But, I wonder whether this practice of having separate

institutions will be conducive to a healthy national life when these young boys grow up. I hope that, in future, more and more institutions and hostels will come up, where all the children can remain together. The boarders should not know each other's caste and each other's parentage. It should be so in the case of the day-scholars also. In the hostels, all the boys should mix together, live in a room, eat together and sleep together. I hope that the senior politicians will see how such an arrangement could be worked out.

Sir, recently I had been to Elagiri Hills and Javadhu Hills in North Arcot district. There are some co-operative societies in those areas. But, still there is a lot of exploitation. Some of the co-operative institutions have even been closed down. A very competent man is working in those areas for the welfare of the tribal people and I saw some of the slides, etc., that he had. But, I found that there are many people who exploit the tribal people and make money by that exploitation. They are not giving the tribal people a chance to get enlightenment. education and culture. Sir, we want to preserve our culture. We want their improvement in life and we want their advancement in education.

“என்ன அப்பா, நீங்கள் இதையெல்லாம் கற்றுக்கொடுக்கின்றீர்கள் இதுவரையிலே அவர்கள் நன்றாக வேலை செய்துகொண்டிருந்தார்கள். இந்த மாதிரி சொல்லிக்கொடுத்துவிடுகிறீர்கள் என்று இந்தமாதிரி கான்வர்சேஷன் இருக்கிறது.

This type of conversation goes on. Therefore, the work should be done in a co-ordinated way and they should be encouraged. Coming to Todavs, they are one of the handsome communities I have seen. They are tall and stately and from the way in which they dress, they look like Romans and Greeks. Perhaps they have some connection. I do not know. They are experts in the manufacture of some articles but they have no publicity. We should have a show-room where the articles manufactured by them could be sold. I have gone abroad and such articles of artistry are very much in demand. They may be illiterate and we can teach them. What I would suggest is that we must have a show-room so that we may have a better sale of their commodities.



There was talk about untouchability and other atrocities on such people. It may be happening in the North. In the South it is not so. We have been brought up in such a background of culture that we have not come to that stage. Still there are individual cases of house burning and of girls being molested. Even the happening of such individual cases is bad indeed.

VICE-CHAIRMAN (THIRU K. RAMAMOORTHY): Two more Members have to speak and then the Hon. Minister has to reply. The debate should also conclude in time.

THIRUMATHI TARA CHERIAL: Certainly I will finish now. Untouchability should be eradicated. Mahatma Gandhi is quoted in season and out of season. He has himself done the scavenging work. Practice is better than precept. Thank you for giving me an opportunity to say these few words.

திரு. ப. மாணிக்கம்: மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத் துறையின் மூலமாக ஆதி திராவிடர் களுக்கும் பழங்குடியினருக்கும் வழங்கப்படுகின்ற மானியங்கள், உதவிகள் அவர்களுக்குப் போய்ச் சேர்கின்றனவா என்று பார்ப்பதற்கு ஒரு கண்காணிப்பு செல், மானிட்டரிங் செல் பல இடங்களில் தேவைப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்துகிறேன். அது அவரவர்களுக்கு சரிவர போய்ச் சேர்வதில்லை. அதிலே 20 சதவீதம் கூட சேர்வது கடினம். இதைக் கவனிக்க வேண்டும். இதை மட்டுமே மையக் கருத்தாகச் சொல்லி அமைகிறேன்.

(பிற்பகல் 12-50)

திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், மாண்புமிகு அமைச்சரவர்கள் இளைஞராக இருப்பதால், இந்தத் துறை வேகமாகச் செயல்படுவதாகவும், அதே நேரத்தில் அதிகாரிகள் சரியான வழி காட்டுதலோடு அமையவில்லை என்று குறைபட்டுக் கொண்டார்கள். இந்தத் துறை வேகமாகச் செயல்பட்டால் மட்டும், அந்தப் புகழ் அமைச்சருக்குப் போய்ச் சேருவதும், துறை சரியாகச் செயல்படவில்லை என்று சொல்லும் போது அதிகாரிகளைக் குற்றம் சொல்லிப் பேசுவதும் அவ்வளவு முறையாகாது என்பது என்னுடைய கருத்து. இந்தத் துறை சரியாகச் செயல்படவில்லை

என்றால், அதற்கு முழுப் பொறுப்பையும் அமைச்சரவர்கள்தான் ஏற்றுக் கொள்ள வேண்டுமே தவிர, என்னைப் பொறுத்து வேறு ஒருவர் அதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லத் தயாராக இல்லை.

கொள்கைக் குறிப்பிலே, தாழ்த்தப்பட்ட மக்கள் நலன்களுக்காக பழங்குடி மக்களின் நலன்களுக்காக பல்வேறு காரியங்கள் ஆற்றி வருவதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இது புதுமையாக, அமைச்சரவர்களின் திறமையைக் காட்டுவதாக அமையவில்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சட்டப் பேரவையிலே மூன்று முறை உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறேன். இங்கும் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். தொடர்ந்து பார்த்து வருகிறேன். காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற காலத்தில் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர் களின் நலனில் அக்கறை கொண்டு சலுகைகள் அளிக்கப்பட்டன. அதைவிட வேகமாகக் காரியங்கள் செய்யப்பட வேண்டுமென்று, இன்னும் கொஞ்சம் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, இப்போது அதைப் பின்பற்றித்தான் இந்த ஆட்சியிலே காரியங்கள் நடைபெறுகின்றனவே தவிர, வேறு ஒன்று மில்லை.





முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தில் 9, 10 ஆம் வகுப்பு மாணவர் களுக்குச் சத்துணவு வழங்கப்படவில்லையே என்ற கேள்வி எழும் வகையில் கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்குச் சத்துணவு வழங்குகிறார்களா, இல்லையா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு ஆதி திராவிடர்களிலே 50 சதவிகிதத்தினர் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பதாகக் கொள்கைக் குறிப்பிலே கோடிட்டுக் காண்பித் திருக்கிறார்கள். இந்த ஆட்சிக்கு 'வறுமைக் கோடு' என்ற வார்த்தைகள் கிடைத்து, அந்தக் கோடு படாத பாடு படுகிறது இரண்டு ஆண்டுகளாக என்பதை நான் அறிவேன். வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறவர்களை ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உயர்த்தி விடுவோமென்று சொல்லு கிறார்கள். எந்தத் திட்டத்தின் அடிப்படையிலே அவர்களை உயர்த்தப் போகிறார்கள், எந்தப் புதிய சிறப்பு அம்சத் திட்டத்தின் மூலமாக அதைச் செய்யப் போகிறார்கள் என்று சொல்லியிருந்தால், அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 373 வட்டாரங்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களை உயர்த்த காரியங்கள் ஆற்ற விரிவாக்க அலுவலர்களை நியமிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய பணி என்ன? மாதம் ஒரு முறை சம்பளம் வாங்குவது, வட்டார அலுவலகத்தில் உட்கார்ந்து டைரி எழுதுவது என்ற அளவுக்கு இருக்குமா? அவர்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ள பணி என்ன? அவர்கள் என்ன பணி செய்வார்கள்? இதையெல்லாம் தெரிவிக்க வேண்டும். அவர்கள் சிறப்பாகப் பணி செய்கிறார்களா என்று பார்க்க மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய குழு அமைக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் சரியாகச் செயல்படுகிறார்களா என்பதைப் பார்க்க முடியும்.

அடுத்து, காந்தியடிகள் நினைவு படிப்புதவித் தொகை வழங்கப்படுகிற தென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சியினர் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் கொள்கை வழியில் நடப்பவர்கள் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு ஒரு படிப்பு உதவித் தொகை தருகிறதென்றாலும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களை நினைவுபடுத்தும் வகையிலே சிறப்பு மதிப்பெண்களைப் பெறும் மாணவர்களுக்கு மாநில அரசு ஆண்டுதோறும் வழங்கும் காரியத்தை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே பொறியியல், வேளாண்மை, மருத்துவம் முதலிய தொழிற் கல்வி பயிலும் மாணவர்களுக்கு 1974-லிலேயே கடன் உதவி வழங்கும் திட்டம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஏற்படுத்தப்பட்டது. அதை விரிவாக்கி

என்றால், அதற்கு முழுப் பொறுப்பையும் அமைச்சரவர்கள்தான் ஏற்றுக் கொள்ள வேண்டுமே தவிர, என்னைப் பொறுத்து வேறு ஒருவர் அதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லத் தயாராக இல்லை.

கொள்கைக் குறிப்பிலே, தாழ்த்தப்பட்ட மக்கள் நலன்களுக்காக பழங்குடி மக்களின் நலன்களுக்காக பல்வேறு காரியங்கள் ஆற்றி வருவதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இது புதுமையாக, அமைச்சரவர்களின் திறமையைக் காட்டுவதாக அமையவில்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சட்டப் பேரவையிலே மூன்று முறை உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறேன். இங்கும் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். தொடர்ந்து பார்த்து வருகிறேன். காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற காலத்தில் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் நலனில் அக்கறை கொண்டு சலுகைகள் அளிக்கப்பட்டன. அதைவிட வேகமாகக் காரியங்கள் செய்யப்பட வேண்டுமென்று, இன்னும் கொஞ்சம் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, இப்போது அதைப் பின்பற்றித்தான் இந்த ஆட்சியிலே காரியங்கள் நடைபெறுகின்றனவே தவிர, வேறு ஒன்றுமில்லை.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கலப்புத் திருமணம் செய்துகொண்டால், அவர்களை உற்சாகப்படுத்தி சமுதாயத்தில் மாற்றத்தைக் காண தங்கப் பதக்கம் வழங்கினோம். வீட்டு மனைகள் கொடுத்தால் போதாது, அவர்களுக்கு நல்ல நிரந்தரமான வீடுகளைக் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் எடுத்துக் காட்டியது போல், 10,000 ரூபாய் மதிப்பீட்டில் அவர்களுக்கு வீடு கட்டித் தரும் பணியும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தீவிரமாக்கப் பட்டு, செயல்பட்டு வந்தது. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, அந்தத் திட்டத்தைக் கைவிட்டு, இப்போது 4,000 ரூபாய் செலவில், ஆயிரம் ரூபாய் மானியத்தோடு வீடுகள் கட்டித் தரப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை இந்த அரசு நீக்கிவிட்டது. எனவே அந்த மக்களுக்கு நல்ல வசதிகள் செய்து தரக்கூடிய காரியங்கள் இந்தக் கொள்கைக் குறிப்பிலே இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கொள்கைக் குறிப்பில் மாணவ மாணவியரைத் தனியாகப் பிரித்து, அவர்களை விடுதியிலே தங்க வைத்து, படிக்க வைக்க நடவடிக்கை எடுக்கப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது எந்த ஆண்டுக்குள் முடியும் என்று சரியாகச் சொல்லப்படவில்லை.





முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தில் 9, 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்குச் சத்துணவு வழங்கப்படவில்லையே என்ற கேள்வி எழும் வகையில் கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்குச் சத்துணவு வழங்குகிறார்களா, இல்லையா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு ஆதி திராவிடர்களிலே 50 சதவிகிதத்தினர் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பதாகக் கொள்கைக் குறிப்பிலே கோடிட்டுக் காண்பித்திருக்கிறார்கள். இந்த ஆட்சிக்கு 'வறுமைக் கோடு' என்ற வார்த்தைகள் கிடைத்து, அந்தக் கோடு படாத பாடு படுகிறது இரண்டு ஆண்டுகளாக என்பதை நான் அறிவேன். வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறவர்களை ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உயர்த்தி விடுவோமென்று சொல்லுகிறார்கள். எந்தத் திட்டத்தின் அடிப்படையிலே அவர்களை உயர்த்தப் போகிறார்கள், எந்தப் புதிய சிறப்பு அம்சத் திட்டத்தின் மூலமாக அதைச் செய்யப் போகிறார்கள் என்று சொல்லியிருந்தால், அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 373 வட்டாரங்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களை உயர்த்த காரியங்கள் ஆற்ற விரிவாக்க அலுவலர்களை நியமிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய பணி என்ன? மாதம் ஒரு முறை சம்பளம் வாங்குவது, வட்டார அலுவலகத்தில் உட்கார்ந்து டைரி எழுதுவது என்ற அளவுக்கு இருக்குமா? அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணி என்ன? அவர்கள் என்ன பணி செய்வார்கள்? இதையெல்லாம் தெரிவிக்க வேண்டும். அவர்கள் சிறப்பாகப் பணி செய்கிறார்களா என்று பார்க்க மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய குழு அமைக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் சரியாகச் செயல்படுகிறார்களா என்பதைப் பார்க்க முடியும்.

அடுத்து. காந்தியடிகள் நினைவு படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சியினர் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் கொள்கை வழியில் நடப்பவர்கள் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு ஒரு படிப்பு உதவித் தொகை தருகிறதென்றாலும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களை நினைவுபடுத்தும் வகையிலே சிறப்பு மதிப்பெண்களைப் பெறும் மாணவர்களுக்கு மாநில அரசு ஆண்டுதோறும் வழங்கும் காரியத்தை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே பொறியியல், வேளாண்மை, மருத்துவம் முதலிய தொழிற் கல்வி பயிலும் மாணவர்களுக்கு 1974-லிலேயே கடன் உதவி வழங்கும் திட்டம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஏற்படுத்தப்பட்டது. அதை விரிவாக்கி

யிருக்க வேண்டும். ஆனால் கணக்குகளைப் பார்க்கும்போது, கடன் வழங்கிய தொகை குறைந்து காணப்படுகிறது. அந்தத் தொகை அதிகரிக்கும் நிலையிலே இல்லை. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் கொள்கைகளைத் தமிழகத்திலே ஏற்றுக்கொண்டதால்தான், தமிழகத்திலே ஜாதிச் சண்டைகள் வட மாநிலங்களில் இருப்பதைவிடக் குறைந்திருக்கிறது அல்லது இல்லாமலே இருக்கிறது என்று சொல்லத்தக்க அளவுக்கு இருக்கிறது. தந்தை பெரியாரின், பேரறிஞர் அண்ணா அவர்களின் பொதுத் தொண்டு, அவர்களின் கருத்துக்கள் இந்த நாட்டிலே, தமிழகத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக அமைந் திருக்கிறது. கொள்கை விளக்கக் குறிப்பிலே தீண்டாமை ஒழிப்புக்காக தனியாக டி.எஸ்.பி. அந்தஸ்திலே ஒரு அதிகாரியை நியமித்து, காவலர்களை அவருக்குத் துணையாக நியமித்து நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதிலே மிக எச்சரிக்கையாக ஆட்சியாளர்கள் இருக்க வேண்டும். ஏனென்று சொன்னால், காவல் துறையைச் சேர்ந்தவர்களே ஜாதிச் சண்டைகளைக் கிளப்பிவிடுவார்கள். இதிலே கண்காணிப்பாக இருக்கவேண்டும். 31—5—1982 வரை 9,290 வழக்குகள் பதிவு செய்யப்பட்டதாக இருக்கிறது. அதில் 4,061 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அதிகமாகப் பதிவு செய்யப்பட்டு, நாங்கள் தீண்டாமை துஷ்பிரச்சாரம் செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம். வழக்குகளை அதிகமாகப் போட்டு தண்டனை பெற்றுத் தருவதால், ஆங்காங்கு சாதி உணர்வுகள் அதிகரித்து விடுமோ என்ற ஐயப்பாடு சிலர் மத்தியில் எழும் சூழ்நிலை இருக்கிறது. எனவே புகார்கள் வந்தாலும், சமுதாய நலக் கண்ணோட்டத்தோடு, சோஷியல் சர்வீஸ் என்ற அடிப்படையிலே காவல் துறையிலே இருப்பவர்கள் பணி புரிந்து, இரு சாராரையும் கூடுமானவரையில் அழைத்து வைத்து சமாதானப்படுத்த முயற்சிக்க வேண்டும். இந்த சமாதான முயற்சியை மீறிச் செல்கிற நிலைமைக்கு பிரச்சினைகள் மிக மோசமாக வந்தால்தான், கட்டுப்படுத்த முயல வேண்டும். தேவையில்லாமலே நீதிமன்றத்திலே கொண்டு போய் நிறுத்தக்கூடிய வகையிலே அதிகாரிகள் இதில் அதிகார துஷ்பிரயோகத்தைப் பயன்படுத்த முடியாத அளவிலே கண்காணிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது.

(பிற்பகல் 1-00)

ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று எல்லோரும் பேசுகிறார்கள். ஆனால் ஜாதி ஒழிய வேண்டுமென்று உதட்டளவில் பேசினால் போதாது. கொள்கை அளவில் அரசாலே அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும்.





அதற்கு முதலாவதாக நாம் எல்லாம் தமிழர்கள் என்கிற ஒரு உணர்வு வர வேண்டும். இன்றைக்கு உள்ளபடியே நமக்குள் அந்த உணர்வு வாராததால் தான், சில மாவட்டங்களில் அவ்வப்போது பிரச்சினைகள் வருவதும், அதை அடக்க போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதும் ஆன நிலைமைகள் நடக்கின்றன. இது உள்ளபடியே வேதனை தரக்கூடியது. அதிலும் இன்றைக்கு இருக்கிற ஆளும் கட்சியினுடைய ஆட்சிக் காலத்திலே பல விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெறக்கூடிய சூழ்நிலைகள் வந்திருக்கின்றன. ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று எல்லோரும் பேசுகிறோம். இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று மிகத் தீவிரமாகப் பேசினார். அப்படிப்பட்ட உணர்வு வருவதை நாங்கள் பாராட்டு கிறோம். ஆனால் அந்த உணர்வை ஆளும் கட்சியிலே இருக்கிற எல்லோரும் பின்பற்றுகிறார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி. எங்களுடைய இயக்கத்தினுடைய தலைவர், முன்னாள் முதலமைச்சர், டாக்டர் கலைஞர் அவர்கள், ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த குடும்பத்திலுள்ள பெண்ணை தன்னுடைய மகனுக்குத் திருமணம் செய்து வைத்து, எங்களுக்கு ஜாதியில் நம்பிக்கையில்லை, நாம் எல்லாம் தமிழர்கள் என்கிற ஒரு நல்ல உணர்வை உள்ளபடியே ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதுவும் அவர் முதலமைச்சராக இருந்த காலத்திலேயே இந்தக் காரியத்தைச் செய்தார் என்றால், விளம்பரத்திற்காக செய்யப்பட்ட ஒன்றல்ல அது. இன்றைக்கு சமுதாயத்திலே இருக்கிற மூட நம்பிக்கைகளையும், மூடப் பழக்கவழக்கங் களையும் ஒழித்தாக வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களைக் கை தூக்கி விடுகிற எண்ணம் எப்போதுமே ஒரு அரசுக்கு இருக்க வேண்டும். நாம் எல்லாம் தமிழர்கள், நமக்குள் ஏற்றத்தாழ்வுகள் இருக்கக்கூடாது என்கிற நல்ல உணர்வோடுதான் அன்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு சீரிய நோக்கத்துக்காக அந்தக் காரியத்தைச் செய்தார்கள். அதைப்போல இன்றைக்கு ஆளும் கட்சித் தரப்பிலேயிருக்கிறவர்களும் செய்ய வேண்டும். அதேபோல அமைச்சர்களும் செய்ய வேண்டும். ஆனால் அப்படிச் செய்கிற துணிச்சல் அவர்களுக்கு நிச்சயமாக வரவே வராது. காரணம் நாங்கள் பகுத்தறிவுக் கொள்கையிலே நம்பிக்கையுடையவர்கள் என்று சொன்னாலும் கூட சில பேர்—இன்றைக்கு அமைச்சர்களாக இருக்கிறவர்களிலேயே சில பேர் —இந்தக் கொள்கையிலே தடுமாறிக்கொண்டிருக்கிறார்கள். ஜாதி ஒழிய வேண்டுமென்று சொல்கிறார்களேயொழிய, இன்றைக்கு திராவிடர் கழகத்திற்கு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிற மன உறுதி இவர்களுக்கு இல்லையே என்கிற மன வருத்தம் எனக்கு உள்ளபடியே இல்லாமல் இல்லை. திராவிட பாரம்பரியம் என்று நாங்கள் பேசுகிறோம். திராவிட பாரம்பரியம்

என்று பேசுகிறபோது, ஆளும் கட்சியான அ.தி.மு.க.-வும் எதிர்க் கட்சியான தி.மு.க.-வும்—இரண்டு பேரும் சேர்ந்து அப்படித்தான் பேசுகிறோம். "நாங்கள் திராவிட பாரம்பரியத்திலே வந்தவர்கள்தான்" என்பதை நிலைநாட்டுவதிலே ஆளும் தரப்பினர் உறுதியாக இருக்க வேண்டும். ஆளும் கட்சியினர் உள்ளபடியே அப்படி இருந்தால், அவர்கள் சொல்வது எதுவாக இருந்தாலும், நாங்கள் ஏற்றுக்கொள்வோம். ஆனால் சில நேரங்களிலே அவர் கள் அந்தக் கொள்கையிலிருந்து வழுக்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். அதனால் தான் திராவிட பாரம்பரியத்துடன் நாங்கள் அ.தி.மு.க.-வை இணைத் துப் பேச வேண்டுமென்று விரும்பினாலும் கூட, அது கூடாது, தவறு என்று நினைக்கின்ற சூழ்நிலை எங்களைப் போன்ற சிலருக்கு ஏற்படுகிறது.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கைகளை உண்மையிலேயே ஏற்றுக்கொண்டவர்களால்தான் அதன்படி நடந்து காட்ட முடியும். இன்றைக்கு காந்தி பிறந்த நாட்டிலே—குஜராத்திலே—ஜாதிச் சண்டைகள் ஏற்படுகிற அளவுக்கு இங்கே ஒன்றும் ஜாதிச் சண்டைகள் இல்லை. ஆக, இந்த அளவுக்கு இந்தக் கொள்கை வெற்றியடையக் காரணமாக இருந்தவர்கள் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் தான். இப்படிப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரச்சினைகளைப்பற்றி இங்கே நாம் விவாதிக்கிறபோது, இதை யெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அரிஜனங்கள் என்று காங்கிரஸ் ஆட்சியில் இருந்தது—மற்றவர்களாலே இவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்கிற காரணத்தால் தாழ்த்தப்பட்டவர்கள் என்கிற அந்த சொல்லைத்தான் வைக்க வேண்டுமென்று எண்ணி "தாழ்த்தப்பட்டோர் நல இலாகா" என்கின்ற ஒரு அறிவிப்பை அன்றைக்கே நாங்கள் செய்தோம். ஆனால் இப்போது அந்தப் பெயரை இந்த அரசு மாற்ற வேண்டுமென்று யோசனை செய்து "ஆதி திராவிடர்" என்று பெயர் மாற்றம் செய்வதால் மட்டும், என்ன பிரயோஜனம் இருக்க முடியும்? "ஆதி என்றாலே எல்லாம் என்று ஆகிவிடும்" என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள். நாம் எல்லோரும் திராவிடர்கள் தான். எதற்கு "ஆதி" என்கிற வார்த்தையைச் சேர்த்தார்கள்? தாழ்த்தப் பட்டவர்கள் என்ற சொல்லே இருந்திருக்கலாம்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): தந்தை பெரியார் அப்படிச் சொல்லவில்லை. ஆதி திராவிடர்கள் என்றால் முன்னாலேயே வாழ்ந்து வந்தவர்கள் என்று பொருள்.





டாக்டர் இரா. சனார்த்தனம்: "ஆதி" என்றால் முதல் என்று பொருள்.

திரு. சோ. ஆறுமுகம்: மாற்றுத் தலைவர் அவர்கள் சொன்னதைத்தான் டாக்டர் சனார்த்தனம் அவர்களும் சொன்னார்கள். ஆதி திராவிடர்கள் என்று இந்த ஆட்சி பெயரை மாற்றியதாலே பெரிய மாற்றம் ஏற்பட்டுவிட்டது என்று சொல்வது சரியல்ல. பறவைகளுக்கு சரணாலயங்கள் இருப்பது போல், இந்த திராவிட இயக்கங்கள்தான் தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பான இடங்களாக இருந்து செயல்படுகின்றன. சில பேர் தலையை மொட்டை யடிப்பார்கள். அவர்கள் எல்லோருமே முருக பக்தர்களாக ஆகிவிட முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் மொட்டை யடிப்பவர்கள் பெருமாள் பக்தர்கள் என்று சொல்கிறார்கள். எது எப்படி இருந்தாலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பரிந்து பேசுவதால் மட்டும் உண்மையிலேயே அவர்கள் எல்லோரும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பேசுகிறார்கள் என்று பொருள் ஆகிவிடாது. அதுபோல் குல்லா போட்டிருப்பார்கள் சிலர். குல்லா போட்டிருப்பவர்கள் எல்லாம் முஸ்லிம் ஆகிவிட முடியாது. அதுபோல் தாழ்த்தப்பட்டவர்களுக்காகப் பரிந்து பேசுகிறார்கள் என்றால், திராவிட முன்னேற்றக் கழகமானாலும் சரி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமானாலும் சரி, கொள்கையளவில் நாங்கள் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் அந்தக் கொள்கையிலே இப்போது ஆட்சி செய்துகொண்டிருக்கிற ஆளும் கட்சி சற்றே பின்னாலே இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொண்டு, தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்ய வேண்டிய நன்மைகளை இன்னும் துரிதமாக இந்த அரசு செய்ய வேண்டுமென்ற என்னுடைய கருத்துக்களை எடுத்துச்சொல்லி அமருகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாற்றுத் தலைவரவர்களே, இங்கே நடைபெற்ற இந்த விவாதத்திலே பங்கு கொண்டு 10 உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்திலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றி முழுமையாகப் புரிந்துகொண்டிருக்கிற காரணத்தால், இங்கே பிரதிநிதிகளாக வந்திருக்கின்ற உறுப்பினர்கள் அவர்களுக்கு இருக்கக்கூடிய கடமையாக அதை எண்ணி, மிக அருமையான முறையிலே கருத்துக்களைச் சொன்னார்கள். தமிழகத்திலே இருக்கின்ற ஏறத்தாழ 89 இலட்சம் தாழ்த்தப் பட்ட மக்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளை, தங்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளாகக் கருதி, அதை ஏற்றுக்கொண்டு இங்கே நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தமிழக அரசைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கக்கூடிய கருத்துக்களின் அடிப்படையிலே மேலும் இந்த மக்களுக்கு என்னென்ன நல்ல

[திரு. எம். விஜயசாரதி] [1983 ஏப்ரல் 12

காரியங்களை, நன்மைகளைச் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு அவற்றை யெல்லாம் கவனத்திலே கொண்டு காரியங்களைச் செய்ய தயாராக இருக்கிறது என்பதை நான் முதலிலேயே என்றைக்கும் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிக்கொள்ளக் எடுத்துச்சொன்னதைப் போல இந்த சமுதாயத்திலே எல்லோரும் உருவாக்க வேண்டுமென்று சொன்னால், உள்ளபடியே ஒரு மாற்றத்தை நாம் கல்வி வசதியை முதலில் செய்து தர வேண்டுமென்ற இந்த மக்களுக்கு நல்ல கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உணர்வை இந்த அரசும் தான் இந்தத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிற அதன் காரணமாகத் இந்தத் துறையின் மூலம் நடைபெற்று வருகிற கல்வித் தொகையில் பாதிக்கு மேல் செலவிட்டு வருகிறது. இதன் மூலம் இந்த மக்களுடைய துறைக்காக இந்த அரசு கல்வி வசதியைப் பெற்று அவர்களுடைய வருங்காலத்தில் குழந்தைகள் நல்ல வாழ்வை மிக நல்லமுறையிலே அமைத்துக்கொள்ள அவர்கள் தங்கள் உணர்வோடு இந்த அரசு மிகவும் கவனமாக திட்டமிட்டு வேண்டுமென்ற படுத்தி வருகிறது. இந்தத் துறையின் மூலம் 1,035 திட்டங்களைச் செயல் கொண்டிருக்கிறோம். இதன் மூலம் இந்த சமுதாயத்தைச் பள்ளிகளை நடத்திக் மாணவிகள் ஏறத்தாழ 1,87,000 பேர் நல்ல முறையில் சார்ந்த மாணவ வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல், 695 விடுதிகளை கல்வி பயின்று வசதிகளும் இன்றி கிராமப்புறங்களிலிருந்து வருகிற அமைத்து எந்தவித சேர்ந்த குழந்தைகளுக்கு, அவர்கள் நல்ல முறையில் இந்த சமுதாயத்தைச் அறிவு பெற வேண்டுமென்ற உணர்வோடு, வசதிகளை தங்கி படித்து கல்வி கிறோம். இந்த விடுதிகளிலே இந்தக் குழந்தைகள் ஏற்படுத்தித் தந்திருக் படித்து கல்வியினை மிகவும் நல்லமுறையிலே நல்ல முறையிலே தங்கி, நிலைமைகளை உருவாக்கித் தந்திருக்கிறோம். கற்கக் கூடிய அளவுக்கு ஏறத்தாழ 5,741 ஆசிரியர்கள், அதேபோல் இந்தப் பள்ளிகளில் பல தரப்பட்ட ஆசிரியர்கள் பணியாற்றி வருகிறார்கள் என்பதையும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

கல்வித் துறையைப் பொறுத்தவரையில், இன்று பேசிய அனைத்து உறுப்பினர்களுமே அரசு அதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசு தொடர்ந்து இதுவரையில் எந்த அளவுக்கு இதிலே கவனத்தைக் கொண்டிருக்கிறதோ அதைத் தொடர்ந்து செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாணவர்கள் தங்கி பயிலக் கூடிய விடுதிகளை ஒவ்வொரு ஆண்டும் ஏற்படுத்தி வந்திருக்கிறோம். இந்த ஆண்டைப் பொறுத்தவரையில், 10 புதிய விடுதிகளை அமைக்க இருக்கிறோம்.



1983 ஏப்ரல் 12] [திரு. எம். விஜயசாரதி]

விடுதிகளுக்கு நல்ல கட்டிட வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்பதில் நாங்கள் அக்கறை கொண்டிருப்பதன் காரணமாக ஆதி திராவிடர் நல வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக சென்ற ஆண்டு மாணவர்களுக்கு 78 புதிய விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு அந்தக் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும். பள்ளிகளுடைய தரத்தைப்பற்றிக் குறிப்பிடுகிற போது, உறுப்பினர்கள் பலரும் இந்தப் பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி, கட்டிடங்களை நல்லவசதியான முறையில் அமைக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். இந்தத் துறையின் மூலமாக இயங்குகிற பள்ளிகளின் நிலைமையைக் கவனித்ததில் பல பள்ளிகளில் அடிப்படை வசதிகள் கூட ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இல்லாததன் காரணமாக, இந்தத் துறையின் கீழே உள்ள மேல் நிலைப் பள்ளிகளுக்கும், உயர்நிலைப் பள்ளி களுக்கும் தேவைப்படுகிற வசதிகளை ஏற்படுத்த இந்த அரசு இந்த ஆண்டு 43.82 லட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறது என்பதை இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையைப் பொறுத்தவரையில், ஆசிரியர் பிரதிநிதிகள் அதிகமாக இருப்பதால், அவர்களுக்கு இருக்கக்கூடிய பல பிரச்சினைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினார்கள். அது குறித்து எல்லாவற்றுக்கும் பதில் அளிக்க இயலாத நிலை இருந்தாலும் கூட, முக்கியமாக ஒருசில பிரச்சினைகளுக்குப் பதில் அளிக்கிறேன்.

இங்கே பேசுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் மாணவர்கள் விடுதியில் தங்கியிருப்பவர்களுக்கு அளிக்கப்படும் உணவுக்கான தொகை விலைவாசி ஏற்றத்தின் காரணமாக, போதாது என்று சொன்னார்கள். எனக்கும் அது குறித்து கோரிக்கைகள் வந்திருக்கின்றன. இந்த அரசைப் பொறுத்தவரையில், விலைவாசி ஏற்றத்தின் காரணமாக இந்தத் தொகை போதாது என்பதை உணர்ந்திருக்கிறது. அந்த அடிப்படையில் இந்தத் தொகையை உயர்த்துகிற நடவடிக்கைகளை அரசு பரிசீலித்து ஆவன செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்தத் துறையின் மூலமாக வழங்கப்படும் இலவசப் புத்தகங்களைப்பற்றிச் சொல்லும்போது அவை காலத்தில் கிடைப்பதில்லை, அப்படி காலத்தில் கிடைக்கச் செய்ய வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறினார்கள். சென்ற ஆண்டுக்கு முந்தைய ஆண்டு வரையில் அந்தப் பிரச்சினை இருந்தது. சென்ற ஆண்டு முதல் அந்தப் பிரச்சினை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில், 31—6—1983-க்குள் அந்த மாணவர்களுக்கு இலவசப் புத்தகங்களை அளிக்க வேண்டுமென்று பிரத்தியேகமாக ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக புத்தகங்கள் காலத்திலே சென்று அடைந்திருக்கின்றன என்ற விபரத்தை நான் பெற்றிருக்கிறேன். ஒருசில

இடங்களில் பிரச்சினைகள் ஏற்பட்டு, அந்தப் புத்தகங்கள் காலத்திலே கிடைக்கவில்லை என்று சொன்னால், குறிப்பிட்டு இடங்களை என்னிடம் கொடுத்தால், அதன்மீது நடவடிக்கை எடுக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசுகிறபோது, இந்தத் துறையில் பணியாற்றுகிற ஆசிரியர்களைப்பற்றி சில பிரச்சினைகள் எழுப்பினார்கள். அவைகளை எடுத்துச் சொல்லி, இந்தத் துறையின்கீழ் பி.டி. பணி மூப்புப் பட்டியலை வெளியிட வேண்டுமென்று சொன்னார்கள். அதை முழுமையாக ஏற்றுக்கொண்டு, தற்போது பணி மூப்புப் பட்டியலைத் தயாரித்திருக்கிறது. வெளியிடும் நேரத்தில் அதனால் ஏற்படும் எதிர்ப்புகளை, குறைபாடுகளை அறிந்துகொள்வதன் மூலமாக மேலும் திருத்திக்கொள்ள வாய்ப்பு ஏற்படும். அந்தப் பணி மூப்புப் பட்டியலை விரைவில் வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நந்தனார் பள்ளியைப்பற்றி ஒருசில பிரச்சினைகள் இங்கே பேசப்பட்டன. அங்கே சுகாதார வசதி தேவையென்றும், விடுதியில் உள்ள பாத்திரங்கள் போதாது என்றும் சொன்னார்கள். அதை ஏற்றுக்கொள்கிற வகையில் அது குறித்த நடவடிக்கைகளை எடுக்கிறேன் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதிகமான விடுதிகள் கட்டித் தரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். வருகிற 1983-84 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 235 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, ஆண்களுக்கும் பெண்களுக்கும் விடுதிகள் கட்டுகிற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று முடிவு எடுக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசுகிறபோது, இந்தத் துறையின்கீழ் இருக்கக்கூடிய மேல்நிலைப் பள்ளியாசிரியர்களையும் உயர்நிலைப் பள்ளியாசிரியர்களையும் தலைமை ஆசிரியர்களையும் தேர்வு செய்கிறபோது ஏற்படுகிற பிரச்சினைகளைச் சொன்னார்கள். முதலிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் அரசு உத்தரவை எதிர்த்து ஹைக்கோர்ட்டுக்குச் சென்ற காரணத்தால், தற்போது உறுதியாக எதுவும் சொல்ல முடியவில்லை. என்றாலும்கூட, அந்த வழக்குகளைத் திரும்பப் பெற்றால், அதன்மீது அரசு பரிசீலனை செய்து நியாயமாகக் கிடைக்க வேண்டியதை ஆராய்ந்து, அந்த நியமனங்கள் சரியில்லை என்று சொன்னால் நியமனத்தை அரசு பரிசீலனை செய்ய ஆவன செய்யும். அந்த வழக்குகளை வாபஸ் பெறுகிற நடவடிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுப்பார்கள் என்று கருதுகிறேன்.



மேலும் அவர்கள் பேசுகிறபோதும் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசுகிறபோதும், இந்தத் துறையைக் குறிப்பிட்டுச சொல்லி, இந்த கல்வித் துறைக்கு என்று தனியாகவே ஒன்று அமைந்தால், இந்தத் துறையின்கீழ் இயங்குகிற வகையில் நல்ல தரத்தைப் பெறும் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். இயக்குநர் அவர்களின் அதிகாரத்திற்குட்பட்ட கல்வி அதிகாரிகள் செயல்பட வேண்டுமென்ற வகையில் அந்த யோசனையை வருகிற காலத்தில் இந்த அரசு நிச்சயமாக கருத்தில் கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துறையின்கீழ் இயங்குகிற பள்ளிகளின் கல்வித் தரம் உயர வேண்டுமென்பதில் அரசு அதிக அக்கறை செலுத்தி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் சொன்னதைப்போல், உறுப்பினர் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து, மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிற கருத்துக்களுக்கு ஏற்பளிக்கக் கூடிய வழிவகைகளையும் உருவாக்க இருக்கிறோம். அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்களைப்பற்றிச் சொல்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும், திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும் கல்வித் துறையில் இருக்கக்கூடிய விதிகள் இந்தத் துறையிலுள்ள கல்வித் துறைக்கும் பொருந்துமாறு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். கல்வித் துறையில் இருக்கக்கூடிய விதிகள் எந்த அளவுக்குப் பொருந்தும் என்று அறுதியிட்டுக் குறிப்பிட வேண்டுமென்ற நிலை இருப்பதால், ஆதி திராவிட நலத் துறை அதிகாரிகளையும் கல்வித் துறை அதிகாரிகளையும், நிதித் துறை அதிகாரிகளையும் ஆக இந்த மூன்று துறைகளின் அதிகாரிகளையும் கொண்ட ஒரு உயர்மட்டக் குழு அமைத்து, அந்தக் குழு பரிசிலனை செய்து அதன் மூலமாக எந்த முறையில் பணியாற்ற வேண்டுமென்பதை நாம் ஏற்றுக் கொள்கிற வகையில், ஒரு குழு அமைப்பதற்கு நாம் முடிவுக்கு வந்தால், பல்வேறு சூழ்நிலைகளைக் கையாளக் கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதுகுறித்து விரைவாக தங்களுடைய அறிக்கையை அளிக்குமாறு கேட்டுக்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, **on a point of clarification.**
ஏற்கெனவே, கடித எண் எம்.எஸ். 214, தேதி 24—3—1981 அன்று வெளியிட்டுள்ள சமூக நலத் துறையின் கடிதத்தில் இந்தக் கொள்கை தெளிவாக

ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. தாமதத்தைத் தவிர்க்க கல்வித் துறை அரசாணை எண் 122-ல் வெளியிடப்பட்டுள்ள அம்சங்கள் அனைத்தையும் அப்படியே செயல்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"In the circumstances stated above, it has been decided that all orders issued by the Education Department governing teaching profession should be made applicable to the personnel in Harijan and Tribal Welfare Schools and Backward Classes institutions."

எனவே இப்படித் தெளிவாகக் குறிப்பிட்ட பிறகும், மறுபடியும் ஒரு குழு அமைக்க வேண்டியதன் அவசியம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, "கன்செஷன்ஸ்" என்று சொல்லுகிறபோது—ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பதவி உயர்வுக்குத் தெரிவு செய்யும்போது, பதவி உயர்வும் கன்செஷனில் வரும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இது சில குழப்பங்களை ஏற்படுத்தியதால்தான், இனி வருங்காலத்திலாவது அப்படிப்பட்ட குழப்பங்கள் நிகழக்கூடாது என்ற நல்ல எண்ணத்தோடு இத்தகைய குழுவை அமைத்து, அதன் பரிந்துரைகளை விரைவாகச் செயல்படுத்துவது என்று முடிவெடுத்திருக்கிறோம். அதைப் போலவே கல்வித் துறையின் மூலமாகப் பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் அனைத்தும் நலத் துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் இந்தக் கருத்தைச் சொல்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் குழுவையும் விரைவாகக் கூட்டி அது தன்னுடைய பரிந்துரைகளை அரசுக்கு விரைவில் தர வேண்டும் என்கிற அளவுக்குக் கூட அரசு ஆணை பிறப்பிக்கத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீட்டு மனை வழங்கும் பிரச்சினையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் ஒரு கருத்தைக் குறிப்பிட்டார். இந்த அரசைப் பொறுத்தவரையில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவு விரைவில் இடங்களைக் கையகப்படுத்தி வீட்டு மனைகளாகத் தர முடியுமோ அதற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொண்டிருக்கிறோம். இந்த வகையில் 1978 ஆம் ஆண்டு இந்த அரசு ஒரு சட்டம் கொண்டு வந்தது. ஆனால், அந்தச் சட்டம் செல்லாது என்று இங்குள்ள உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டதன் காரணமாக, அந்தத் தீர்ப்பை எதிர்த்து [illegible] இப்போது உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு



செய்துள்ளோம். அந்த வழக்கை விரைவுபடுத்த வேண்டும் என்ற வகையில் நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கிறோம். இருந்தாலும், அந்த வழக்கு தற்போது நிலுவையில் இருப்பதால், இங்கே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, ஏற்கெனவே இருக்கிற திட்டத்தின் அடிப்படையில் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்தத் திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்படுகிறது. அதாவது 1894 ஆம் ஆண்டு சட்டத்தின் அடிப்படை யிலேயே நிலங்களைக் கையகப்படுத்தி, இந்த அரசு ஆதி திராவிடர்களுக்குக் கொடுத்து வருகிறது. அந்தச் சட்டத்தின் காரணமாக ஏற்படுகிற கால தாமதத்தை இந்த அரசு உணர்ந்திருந்தாலும், ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைகளைப் பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்பதில் இந்த அரசு அக்கறை கொண்டிருப்பதால், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, பெருமளவுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியிருக்கிறோம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், 1966 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ 10 ஆண்டுக் காலத்தில் ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்கப்பட்ட வீட்டு மனைப் பட்டாக்களின் எண்ணிக்கை 91,658 ஆகும். ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பதவி ஏற்றிருக்கும் கடந்த 4½ அல்லது 5 ஆண்டுக் காலத்தில் ஆதி திராவிட மக்களுக்காகக் கொடுத்திருக்கும் வீட்டுமனைப் பட்டாக்களின் எண்ணிக்கை 1,40,000 ஆகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விழைகிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம், இந்த அரசு இயற்றிய புதிய சட்டம் செல்லாது என்று தீர்ப்பளிக்கப்பட்ட நிலையிலும்கூட, பழைய சட்டம் காலதாமதத்திற்கு அடிகோலுகிறது என்ற நிலை இருந்தாலும்கூட, ஏழை எளிய ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்க வேண்டும் என்ற அடிப்படையில், நடவடிக்கைகளை மேற்கொண்டு அதிகமான எண்ணிக்கையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களைக் கொடுத்திருக்கிறோம்.

தாழ்த்தப்பட்ட மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவு செய்து தர வேண்டும் என்ற தன்மையில் அவர்களின் பொருளாதார நிலை உயர வேண்டும் என்ற எண்ணத்தையும் இந்த அரசு கொண்டிருக்கிறது. அந்த வகையில் பல்வேறு பொருளாதாரத் திட்டங்களைத் தமிழகத்தில் செயல்படுத்தி வருகிறோம். வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற ஆதி திராவிட மக்களின் பொருளாதார நிலை மேம்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு அவர் களிடையே பல்வேறு தொழில்களை அறிமுகப்படுத்தி அவர்களுக்கெல்லாம் நிரந்தரமான ஒரு மாத வருவாய் கிடைக்கத்தக்க வழிவகைகளை இந்த அரசு செய்து வருகிறது என்பதையும் சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

[திரு. எம். விஜயசாரதி] [1983 ஏப்ரல் 12

மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி அவர்கள் பேசும்போது, சிறப்பு நிதி உதவி சென்னையில் செயல்படுத்தப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். சென்னையைப் பொறுத்தவரையில், சிறப்பு நிதி உதவியைக் கொண்டு வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களை மேலே கொண்டு வர வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்களையும் பங்குகளையும் கொடுத்திருக்கிறோம். அதோடு லேபரேட்டரி டெக்னீஷியன்களாக இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த பெண்கள் பயிற்சி பெறுவதற்கான நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டிருக்கிறோம். இதைத் தவிர, மேலும் பல பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை சென்னையில் இந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற்கு என்று கொண்டு வந்திருக்கிறோம் என்பதையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மாத வருவாயைத் தேடித் தர வேண்டும் என்ற எண்ணத்தோடு சென்ற ஆண்டே பல்வேறு கவர்ச்சித் திட்டங்களையும் பொருளாதாரத்தை முன்னேற்றும் திட்டங்களையும் இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஜே. தாஸ் அவர்கள் பேசும்போது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று நிரந்தரமான தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும், அவர்களைத் தொழிலில் ஈடுபடுத்துவதன் மூலம் முறையான வருவாய்க்கு வகை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். இந்த வகையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தொழிற்சாலைகளைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவே உருவாக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். சென்ற ஆண்டு நான் கூட்டியிருந்த சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் கலந்துகொண்ட பல்வேறு உறுப்பினர்களும் இந்தக் கருத்தைச் சொன்னதன் அடிப்படையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் அச்சங்குளத்தில் தனியானதொரு நூற்பாலையைத் தாழ்த்தப்பட்டவர்களின் நலனுக்காகவென்றே உருவாக்கி இருக்கிறோம். அதற்குத் தேவைப்படுகிற நிதியில் சுமார் இரண்டு கோடி ரூபாயை தமிழ் நாடு ஆதி திராவிட வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் மானியமாக அளித்திருக்கிறது. இந்த நூற்பாலை அமைக்க ஆகும் மொத்தச் செலவு ரூ. 4.39 கோடியாகும். அதில் இரண்டு கோடி ரூபாயை தாட்கோ மானியமாகக் கொடுத்திருக்கிறது. இதன் மூலமாக 300 ஆதி திராவிடர்களுக்கு நிரந்தரமான வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில், இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறோம். இதற்காக அந்த அச்சங்குளத்தில் 25 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி கட்டிட வேலைகள் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இயந்திரங்கள் வாங்கும் ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு மே மாதம் முதல் அந்த நூற்பாலை செயல்படத் தொடங்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



1983 ஏப்ரல் 12] [திரு. எம். விஜயசாரதி]

அடுத்து, ஒவ்வொரு ஆண்டும் புதிதாகத் திட்டங்களை உருவாக்கி அதன் மூலமாக தாழ்த்தப்பட்ட மக்களை வறுமைக் கோட்டிற்கு மேலே கொண்டு வந்து, சமுதாயத்தில் அவர்கள் மற்றவர்களுக்கு நிகராக வர வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், இந்த ஆண்டு மத்திய நிதி உதவியின்கீழ் ஏறத்தாழ 10 கோடி ரூபாய் செலவில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த இருக்கிறோம். சென்ற ஆண்டு அருந்ததியினர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு—அவர்கள் எந்தவிதமான வசதி வாய்ப்பும் இல்லாமல் சாலை ஓரங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற நிலைமையை மாற்ற வேண்டும் என்று கருதி, 500 பங்குகளை அவர்களுக்கு என்று உருவாக்கிக் கொடுத்தோம். ஒவ்வொருவருக்கும் ரூ. 7,000 வீதம் ரூ. 35 லட்சம் இதற்காக இந்த அரசு ஒதுக்கீடு செய்தது. அது 500 அருந்ததியினருக்குப் பயன்பட்டது. இது நல்ல பயனளிக்கக் கூடிய திட்டமாக இருக்கிற காரணத்தால், அதே அளவுக்கு இந்த ஆண்டும் சுமார் 500 பங்குகளைத் தயாரித்து, 500 பேர் பயன் அடையத்தக்க வகையில் ரூ. 35 லட்சம் ஒதுக்கீடு செய்து, அவர்களுக்கு அந்த வசதியைச் செய்திட இருக்கிறோம் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

அதைப்போலவே படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிற ஏழை ஆதி திராவிட சமுதாயத்தைச் சார்ந்த ஆண்களும் பெண்களும் தங்களுக்கென்று கடைகளை வைத்துக்கொள்ளுகிற வகையில் இந்த ஆண்டு அரசு புதிதாக ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறது. அதன் மூலம் 400 பங்குகளை அவர்களுக்கு அளித்து அவர்களெல்லாம் சுய தொழிலில் ஈடுபட்டு, ஒரு நிரந்தரமான வருவாய்க்கு வழி தேடிக்கொள்ள வேண்டும் என்று அரசு நடவடிக்கை

(பிற்பகல் 1-30)

எடுத்துக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், 20 இலட்சம் ரூபாயை அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது. இதன் மூலமாக 400 ஆதி திராவிட ஆண்களும், பெண்களும் பயன் அடைவார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கூட்டுறவுத் துறையில் பட்டு நூல் தயாரிக்கும் ஆலை சுமார் 44 இலட்சம் ரூபாய் அளவில் அமைய இருக்கிறது. சிறப்பு நிதி உதவியிலிருந்து 13.5 இலட்சம் ரூபாயைக் கொடுத்து, இதன் மூலமாக 100 இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறுகிற வாய்ப்பை உருவாக்க இருக்கிறோம். இதன் மூலம் நிரந்தர மாத வருமானம் கிடைக்கச் செய்து, 100 ஆதி திராவிடர்கள் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்கு மேலே வருவதற்குரிய நடவடிக்கையை எடுக்க இருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இதைத் தவிர சேரன் போக்குவரத்துக் கழகத்தினுடைய உதவியோடு ஆதி திராவிட இளைஞர்களுக்கு லாரி ஓட்டுநர் பயிற்சி மற்றும் மோட்டார் வாகனங்களைப் பழுது பார்த்தல் ஆகியவற்றுக்காக மோட்டார் வாகன பயிற்சி நிலையம் ஒன்று ஒரு கோடி ரூபாய் அளவில் அமையவிருக்கிறது. இதற்காக சிறப்பு நிதி உதவியிலிருந்து 40 இலட்சம் ரூபாய் தாவிருக்கிறோம். இதன் மூலமாக ஆயிரம் ஆதி திராவிட இளைஞர்கள் பயிற்சியில் ஈடுபட்டு, அவர்களுக் கென்று நல்ல வருமானத்தை, எதிர்காலத்தை ஏற்றுக்கொள்ளுகிற வழி வகையை, இந்த அரசைப் பொறுத்தவரையில், செய்திருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசுகின்றபோது, 18 சதவீதத்தைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லி அந்த 18 சதவீதத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற வகையிலே சொன்னார்கள். மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், அதிலே அதிக அக்கறை செலுத்தி, கண்காணிப்பை வைத்து தமிழகத்திலே இருக்கக்கூடிய இட ஒதுக்கீட்டைப் பூர்த்தி செய்கின்ற நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிற அந்தக் கருத்தை ஒட்டி நான் யோசனையாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சி பெற்ற ஆதி திராவிட, பழங்குடி மாணவர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லாததால், அவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 18 சதவீத இடங்களை நிரப்ப இயலாமல் போகிறது என்று சொல்லுகிறார்கள். தமிழகத்தில் அவர்களுக்காக ஒதுக்கப் பட்ட மூவாயிரம் இடங்கள், டைப்பிஸ்ட், ஸ்டெனோவாகப் பயிற்சி பெற்ற ஆதி திராவிடர்கள் இல்லாததால், வேறு சிலரால் நிரப்பப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஆதி திராவிட மக்களுக்காக ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலேயும் ஒரு கமர்ஷியல் இன்ஸ்டிடியூட்டைத் துவக்கி, ஆண்டு ஒன்றுக்கு இரண்டாயிரம் பேருக்குப் பயிற்சி கொடுத்தால், அதிலே 25 சதவீதத்தினர் தேர்ச்சி பெறுவார்கள். எவ்வளவுதான் பயிற்சி அளித்தாலும் தேர்ச்சி பெறுவது குறைவாகத்தான் இருக்கும். நானும் தட்டச்சு பயிற்சி நிலையத்தை வைத்துக் கொண்டிருப்பதால் சொல்லுகிறேன், 100 மாணவர்களை தேர்வுக்கு அனுப்பினால் 35 பேர்தான் தேர்ச்சி பெறுகிறார்கள். அந்த அடிப்படையிலே மாவட்டம்தோறும் இந்த இலாக்காவின் சார்பில் ஏற்படுத்தலாம். அதற்கு அதிகம் செலவாகாது. 50 டைப்ரைட்டர்களை வாங்கி வைத்தால், ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 200 பேருக்குப் பயிற்சி அளிக்கலாம். [illegible]





பயிற்சி அளித்து, அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அந்த இடங்களை நிரப்ப அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்குப் பயன் அளிக்கக் கூடிய வகையிலே இருப்பதால், அரசு அதைப் பரிசீலனை செய்யும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், இதற்கு முன்பு எத்தனையோ ஆண்டுக் காலமாக 18 சதவீதம் என்பது பூர்த்தி செய்யப்படாத நிலையில் இருந்து வந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அரசு மெத்தனமாக இல்லாமல் அதிக அக்கறை செலுத்த வேண்டும் என்று முதல்வர் அவர்கள் அக்கறை கொண்டிருப்பதால், இதிலே இந்த அரசு அதிகக் கண்காணிப்பைச் செலுத்தி 18 சதவீதம் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் பேசுகின்றபோது, ஒரே ஒரு கருத்தை, அந்தக் கருத்தும் நல்ல பயன் அளிக்கக் கூடியதாகச் சொல்லி யிருக்கிறார்கள். இந்த நலத் துறையின் மூலமாக, மற்ற துறைகளின் மூலமாக மானியமாகக் கொடுக்கக்கூடிய தொகை இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர் களுக்குப் போய்ச்சேரவில்லை என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக கண்காணிப்புக் குழு அமைக்க வேண்டும் என்ற யோசனையும் சொல்லியிருக்கிறார்கள். அதையும், அரசைப் பொறுத்தவரையில், ஏற்றுக் கொண்டு எந்த வகையிலே அமைத்தால் நலமாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்த்து ஆய்ந்து இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், தாழ்த்தப்பட்ட மக்கள் மேன்மை பெற்று சமுதாயத்தில் பொருளாதார ரீதியாக உயர்ந்து மற்றவர்களுக்கு நிகராக வருவதன் மூலமாக சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை அகற்ற முடியும் என்ற நம்பிக்கை இருப்பதால், இந்த அரசைப் பொறுத்தவரையில், தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வந்திருக்கிறது.

இந்த விவாதத்தில் பங்கு கொள்ளுகிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இந்த அரசின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுகிற விதத்தில், பாராட்டுகிற நிலையில் கருத்துக்களைச் சொல்லி, இந்த அரசு செய்ய வேண்டிய காரியங்களை உள்ளம் திறந்து எடுத்துச் சொன்னதற்காக நன்றி

தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எந்த உணர்வின் அடிப்படையிலே அந்தக் கருத்துக்களை, யோசனைகளைச் சொன்னார்களோ அதே உணர்விலே அதனை ஏற்றுக்கொண்டு, இந்த அரசு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், நான் குறிப்பிட்ட பிரச்சினை குறித்து ஒரு உறுதிமொழி கொடுத்தார்கள். இது சட்டச் சிக்கல் வாய்ந்ததாக இருப்பதால், ஒன்று கேட்க விரும்புகிறேன். வெளியிடப்பட்ட ஆணைகளில் உள்ள தவறுகளைத் திருத்தி மறுபரிசீலனை செய்வதற்கு அமைச்சர் அவர்கள் உறுதிமொழி கொடுத்தால், உயர்நீதி மன்றத்தில் உள்ள வழக்குகளைத் திரும்பப் பெறுவது குறித்து நான் பொறுப்பேற்றுக்கொள்ளுகிறேன் என்று சொன்னேன். அமைச்சர் அவர்கள் அதைச் சற்று மாற்றி, நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுவதற்கு நான் உறுதிமொழி கொடுத்தால், அதைப் பரிசீலனை செய்வேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே சிக்கல் இருப்பதால், அதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நான் சுட்டிக்காட்டிய அடிப்படையில் தவறு இருப்பதாகக் கருதி மறுபரிசீலனை செய்வதாக அரசு தரப்பிலே சொன்னால், ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அதைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு நான் பொறுப்பு ஏற்றுக்கொள்ளுகிறேன். இது குறித்து அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள், வழக்கை வாபஸ் பெற உதவுவதாக இந்த அவையில் சொல்லியிருக்கிறார்கள். வழக்கு ஏற்கெனவே வழக்கு மன்றத்திலே இருப்பதால், அது குறித்து மேலும் உறுதியாக எதுவும் சொல்ல இயலாது என்றாலும், ஆசிரியர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில், சரியில்லை என்ற உணர்வை வெளிப்படுத்தியிருப்பதால் சரியில்லாத நியமனத்தை விதிகளின்படி பரிசீலனை செய்வோம் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழக்கை வாபஸ் பெறுவார்கள் என்று சொல்லியிருப்பதால், அதன்மீது நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மீண்டும் அவை 13—4—1983 புதன்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 2-37)



5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. *Statutory Rules and Orders.*

251. Notification issued with G.O. Ms. No. 421, Agriculture, dated 12th January 1983 regarding certain amendments to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962 [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

252. Notification issued with G.O. Ps. No. 779, Commercial Taxes and Religious Endowments, dated 7th July 1982 regarding amendment to the Tamil Nadu General Sales Tax Rules, 1959 [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1958).]

253. Notification issued with G.O. Ps. No. 897, Commercial Taxes and Religious Endowments, dated 2nd August 1982 regarding amendment to the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).]

254. Notification issued with G.O. Ps. No. 898, Commercial Taxes and Religious Endowments, dated 2nd August 1982 regarding amendment to the Tamil Nadu General Sales Tax Rules, 1959 [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).]

255. Notification issued with G.O. Ps. No. 1421, Commercial Taxes and Religious Endowments, dated 24th December 1982 regarding exemption from levy of Sales Tax on purchase of raw materials made by Thiruvalargal Pambanadi Energy Systems Private Limited, Madras [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).]

256. Notification issued with G.O. Ps. No. 245, Commercial Taxes and Religious Endowments, dated 27th February 1982 regarding certain amendments to the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).]

[1983 ஏப்ரல் 12

257. Notification issued with G.O. Ps. No. 947, Commercial Taxes and Religious Endowments, dated 13th August 1982 regarding exemption from Sales Tax on the goods already suffered Tax under entries 144, 145, 147 of the First Schedule, prior to 1st July 1981 [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act 1959 (Tamil Nadu Act 1 of 1959).]

### B. Reports, Notifications and Other Papers.

* 144. List of Schemes sanctioned under Special Central Assistance regarding Adi Dravidar Welfare (Tamil).

145. Tamil Nadu Khadi and Village Industries Board Policy and Programmes, 1983–84 (Tamil and English).

146. Twenty-fifth Report of the Committee on Puwlic Undertakings on the action taken by the Government on the Recommendations contained in the Third Report of the Committee on Public Undertkings (1977-78) on the Report (Civil) of the Comptroller and Auditor-General of India for the year 1972–73. (Tamil and English).

### இணைப்பு I

**519**-ம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

கூத்தாநல்லூர், அரசினர் மேல்நிலைப்பள்ளி, தற்போது இயங்கிவரும் கட்டிடம், தொடர்ந்து செயல்படக்கூடிய நிலையில் இல்லை என்று 4—11—1982-ல் தஞ்சை கோட்ட பொதுப்பணித்துறை செயற் பொறியாளர், தலைமை ஆசிரியருக்கு தெரிவித்ததாகத் தெரிகிறது. 'B' பிரிவு பள்ளி. எனவே இப்பள்ளிக்கு 18 வகுப்பறைகளும் அலுவலக மற்றும் தலைமையாசிரியர் அறையும் ஒரு ஆய்வுக்கூடமும் தேவையாதலால் இதற்கான மதிப்பீடுகளும் வரைபடமும் தயாரித்து அனுப்பும்படி முதன்மைக் கல்வி அலுவலரை பொதுப் பணித்துறை செயற்பொறியாளர் 10—1—1983-ல் கேட்டுக் கொண்டுள்ளார். இதற்கு சுமார் ரூ. 15 லட்சம் செலவாகுமெனக் கருதப்படுகிறது. இது குறித்து மாவட்ட ஆட்சியாளர் கேட்டுக்கொண்டதின் பேரில், தஞ்சாவூர் முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட ஆட்சியாளருக்கு

* Laid on the table of the House on 11th April 1983.



1983 ஏப்ரல் 12]

ஒரு அறிக்கையும் அனுப்பியுள்ளார். மேலும் கூத்தாநல்லூரிலுள்ள சில சமூகர்கள், இப்பள்ளிக்கு கட்டிடம் கட்டித்தர நன்கொடை அளிப்பது குறித்து சில பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

2. கூத்தாநல்லூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில், 648 மாணவர்கள் படித்து வருவதாகவும் அதில் 19 பிரிவுகள் உள்ளதாகவும். இந்த வகுப்புகளில் 8 வகுப்பறைகள் ஓட்டுக்கட்டிடத்திலும் ஏனைய 11 வகுப்புகள், ஓலைவேய்ந்த கொட்டகைகளிலும் நடந்து வருவதாகவும் தெரிய வருகிறது. பழுதடைந்த கட்டிடத்தில் உள்ள வகுப்புக்களை உடனடியாக வேறு கீத்துக் கொட்டகைகளிலாவது, அல்லது தனியார் கட்டிடங்களிலாவது மாற்றி அமைத்துச் செயல்படும்படி, தஞ்சை முதன்மைக் கல்வி அலுவலரும், நாகப்பட்டினம் மாவட்டக் கல்வி அலுவலரும் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள் என்றும் பள்ளி வரும் மார்ச் 31-ம் நாள் மூடப்பட இருப்பதால் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படியாகவும், விடுமுறை நாட்களின்போது தற்காலிக கீத்துக் கொட்டகைகள் போடுவதற்கும் நடவடிக்கை எடுக்கும்படியாக முதன்மைக் கல்வி அலுவலர் அறிவுறுத்தப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இணைப்பு II

**521**-ம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

கடலூர் நகராட்சியில் கழிவுநீர் அகற்றுவதற்கான இரண்டு லாரிகளில் ஒரு லாரி (எம்.டி.எப். 3917) கழிவுநீர் அகற்ற உபயோகப்படுத்த முடியாத நிலையில் இருந்ததால் அதை குப்பை அகற்றும் லாரியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மற்றொரு லாரி (டி.என்.எப். 3437) தகுதிச் சான்றிதழ் பெறும் பொருட்டு பழுது பார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த பழுது பார்க்கும் வேலைகள் விரைவில் செய்து முடிக்கப்படும்.

இதற்கிடையில் மாட்டு வண்டிகளைப் பயன்படுத்தி சுகாதாரப் பணியாளர்கள் கழிவுநீரை முறையாக அகற்றி வருகிறார்கள். மேலும் ஏற்கெனவே உள்ள வடிகால்களை வெட்டி தூர்வாரி கழிவுநீர் தேங்காவண்ணம் இணைந்து அப்புறப்படுத்தப்படுகிறது.

நகராட்சி மற்றும் அரசுப் பணியாளர்கள் உதவியுடன் கொசு ஒழிப்புப் பணியும் நடந்து வருகிறது.

கடலூர் நகரில் மூளைக்காய்ச்சல் நோய் ஏதும் இல்லை. முன் எச்சரிக்கை நடவடிக்கையாக கொசுக்கள் பரப்பும் நோய்களைத் தடுப்பதற்கு "பேட்டெக்ஸ் 1000" என்ற கொல்லி மருந்து அவ்வப்போது தெளிக்கப்படுகிறது.

[1983 ஏப்ரல் 12

## இணைப்பு

(523-ம் பக்கத்தில் இணைப்பு-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத் துறை.

### மானியக் கோரிக்கை எண் 31.

### கொள்கை விளக்கக் குறிப்பு (1983-84).

"ஆதி திராவிடர் பழங்குடியினர் நலன்" என்ற தலைப்பின்கீழ் 1983-84 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை எண் 31-ல் ரூ. 4,445.68 இலட்சம் ஒதுக்க ஒப்புதல் அளிக்குமாறு இச் சட்டமன்றப் பேரவையினை வேண்டுகிறேன்.

2. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி, தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகை 484 இலட்சமாகும். இதில் ஆதி திராவிடர் 88.86 இலட்சம் பேர். பழங்குடியினர் 5.20 இலட்சம் பேர். இது மொத்த மக்கள் தொகையில் முறையே 18.34 சதவீதமும் 1.07 சதவீதமும் ஆகும். தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் கல்வியறிவு பெற்றவர்கள் 46.76 சதவீதம். இதில் கல்வியறிவு பெற்ற ஆதி திராவிடர் 29.67 சதவீதமும், பழங்குடியினர் 20.45 சதவீதமும் ஆவர்.

3. தமிழ் நாட்டிலுள்ள ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்காக அரசு கொண்டுவந்த பலமுனைத் திட்டங்களின்கீழ் பயன்பெறுவதோடு கல்வி, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, வருவாய், கூட்டுறவு, தொழில் போன்ற பல பொதுத்துறை திட்டங்களின்கீழ் ஏனைய பொதுமக்கள் பெறும் நலனையும் பெறுகின்றனர். ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை செயற்படுத்திவரும் நலத் திட்டங்களின் பலனையும் இவர்கள் பெறுகின்றனர்.

4. ஆதி திராவிடர்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தைத் தீவிரப் படுத்த புதிதாகக் கொண்டுவரப்பட்ட சிறப்புக் கூறுகள் கொண்ட திட்டம் 1980-81 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருவதை இந்த அவையினர் நன்கறிவர். ஆதி திராவிடர் பழங்குடியினர் நலனுக்கென கொண்டுவரப்பட்ட சிறப்புக் கூறுகள் கொண்ட திட்டத்தின் நோக்கங்களாவன :—

(i) ஆதி திராவிடர்களில் பாதிபேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளனர். ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இவர்கள் வறுமை நிலையி லிருந்து விடுபட்டு நல்ல நிலைமைக்கு வர உதவுதல்.

(ii) ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, மின்வசதி, சுகாதார வசதி, பள்ளிக்கூட வசதி முதலியவற்றை செய்து கொடுத்தல்.



1983 ஏப்ரல் 12]

இவ்விரண்டு நோக்கங்களையும் எய்த, இதர வளர்ச்சித் துறைகளின் முயற்சியையும் நிதி வாயில்களையும் ஒருங்கு திரட்டி பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின்கீழ் பொதுத் துறையிலிருந்து நன்மையை ஆதி திராவிடர்கள் பெற அரசு வழி வகுத்துள்ளது. இதற்காக, ஒவ்வொரு வளர்ச்சித் துறைக்கும் திட்ட இலக்கும், நிதி இலக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. நிதி இலக்கும் விவரங்கள் இணைப்பு IX -ல் கொடுக்கப்பட்டுள்ளன. திட்டங்களின் முன்னேற்றத்தைக் கவனிக்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிதி இலக்கையும் திட்ட இலக்குகளையும் நிர்ணயிக்குமாறு வளர்ச்சித் துறைகள் அனைத்தும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. இச் சிறப்புக் கூறுகள் கொண்ட திட்டம் பிரித்தறிய முடியாத துறைகளிடமிருந்து வரும் உதவி கணக்கெடுக்கப்பட வில்லை. தமிழ் நாட்டில் 18 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் பாதிபேர் அதாவது 9 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களின் வறுமை நிலையைப் போக்கி அவர்களை மேம்பட்ட நிலைக்குக் கொண்டுவர ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்களின் நலனைக் கவனித்துக்கொள்ள, தமிழ் நாட்டிலுள்ள 378 வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு விரிவாக்க அதிகாரியை அரசு 1982-83 ஆம் ஆண்டில் நியமித்துள்ளது. மேலும், சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர்களின் மேம்பாட்டிற்காகச் செயல்படுத்தப்படும் அனைத்து வளர்ச்சித் திட்டங்களின் திட்ட மேம்பாட்டையும், நிதி மேம்பாட்டையும் கோட்ட அளவிலேயே திறம்பட ஆய்வு செய்து கண்காணிக்க, சென்னை மாவட்டத்தை தவிர பிற அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு வருவாய் கோட்டத்திலும் ஒரு குழு அமைக்கப் பட்டுள்ளது. இது இதற்காக திங்கள் ஒருமுறை கூடும். கோட்டாட்சியர் இதன் தலைவராக இருப்பார்.

5. பழங்குடியினர் நலனுக்காக பழங்குடியினர் நலத் துணை திட்டத்தின் கீழ் தனித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. பழங்குடியினர் நலத் துணைத் திட்டம் வந்ததையடுத்து, பழங்குடியினர் மேம்பாட்டு நடவடிக்கை களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கல்வி, பொருளாதார முன்னேற்றம், சுகாதாரம், வீட்டு வசதி மற்றும் ஏனைய திட்டங்களின்கீழ் உள்ள இயல்பான துணைத் திட்டங்களுடன் இத்திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, தொன்மை பழங்குடியினருக்கான புதிய மேம்பாட்டுத் திட்டம் ஒன்றும் உள்ளது.

6. இந்திய ஆட்சிப் பணி பதவி நிலையிலுள்ள இயக்குநரின் தலைமையின் கீழ் ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறை செயல்பட்டு வருகிறது. பொது நிருவாகத்தில் இவருக்கு உதவியாக மாவட்ட வருவாய் அலுவலர் பதவித்

தரத்தில் உள்ள இணை இயக்குநர் ஒருவர் உள்ளார். நேர்முக உதவியாளர் ஒருவரும் உள்ளார். கல்வி தொடர்பான திட்டங்களில் இவருக்கு உதவியாக கல்வித்துறை துணை இயக்குநர் உதவி புரிகிறார். கணக்குப் பிரிவில் கணக்கு அலுவலர்கள் இருவர் இயக்குநருக்கு உதவியாக இருக்கின்றனர். இவர்கள் துறை கணக்குகளுக்கும், துறை கணக்கு குறித்த துறை தணிக்கைக்கும் பொறுப்பு வகிக்கின்றனர். பல்வேறு கூட்டுறவுத் திட்டங்கள், சில்லறை வணிகர்களுக்கு வட்டியில்லாக் கடன்கள் வழங்க அனுமதி அளிப்பது ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் கூட்டுறவு துறைப் பதிவாளர் ஒருவர் இயக்குநருக்கு உதவுகிறார். மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியாளர்களின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்கள் இத்துறையின் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துகின்றனர். மாவட்ட அளவில் சிறப்புக் கூறுகள் கொண்ட திட்டம் செயல்படுத்தப்படுவதை ஆய்ந்து கண்காணிப்பது மாவட்ட ஆட்சியாளர்களின் பொறுப்பாகும். குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை முறையாக செயற்படுத்துவதும் மாவட்ட ஆட்சியாளரின் பொறுப்பாகும்.

7. ஆதி திராவிடருக்கான சிறப்புக் கூறுகள் கொண்ட திட்டத்தின்கீழ் வரும் பல்வேறு திட்டங்கள் மற்றும் குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் விதிமுறைகள் மற்றும் பழங்குடியினர் நலத் துணைத் திட்டத்தின் கீழ் வரும் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டதன் பயனாக ஆதி திராவிடர், பழங்குடியினரின் சமூகப் பொருளாதார வளர்ச்சி வேகம் பெற்றுள்ளது. இதுவரை, ஆதி திராவிடர் பழங்குடியினர் நல இயக்குநர், இயக்குநர் அலுவலகத்தின் வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ள நலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மட்டுமே பொறுப்பேற்றிருந்தார். அரசுத் துறைகளிலும், அரசு பொதுத்துறை நிறுவனங்களிலும், கல்வி நிறுவனங்களிலும் ஆதி திராவிடருக்கு 18 சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்பதை ஆய்வு செய்து கண்காணிக்கவும் அவர் உயர் அதிகாரக் குழுவின் உறுப்பினர்-செயலாளர் என்ற முறையில் பொறுப்பேற்றுள்ளார். இதுபோன்ற சிறப்புக் கூறுகள் திட்டம், குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், பழங்குடியினர் நலத் துணைத் திட்டம் ஆகியவை செயற்படுத்தப்படுவதையும் ஆய்வு செய்வதும் ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை இயக்குநரின் பொறுப்பாகும். சிறப்புக் கூறுகள் கொண்ட திட்டம், குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், பழங்குடியினர் நல துணைத் திட்டம் ஆகியவை செவ்வனே செயற்படுத்தப்படுவது குறித்து அரசுக்குத் தெரிவிக்கும் கூடுதல் பொறுப்பும் ஆதி திராவிடர் பழங்குடியினர் நல இயக்குநர், மாவட்டங்களிலுள்ள அத்துறை அதிகாரிகள் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



### ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத் திட்டங்கள்.

8. ஆதி திராவிடர்-பழங்குடியினர் நல மானியக் கோரிக்கையில் ஒதுக்கப்பட்ட தொகையைத் தவிர 'மூலதனச் செலவு' என்ற தலைப்பில் ரூ. 540.01 இலட்சமும், "கடன்கள்-முன்பணங்கள்" என்ற தலைப்பின்கீழ் ரூ. 73.61 இலட்சமும், "கொத்தடிமைகளுக்குப் புதுவாழ்வு அளித்தல்" என்ற தலைப்பின்கீழ் ரூ. 0.26 இலட்சமும் சாட்டியவை என்பதில் ரூ. 2.02 இலட்சமும் ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத் திட்டங்களுக்காக 1983-84 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத் திட்டத்திற்காக 1983-84 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. 5,061.58 இலட்சம் ஒதுக்கப்படும்.

ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலனுக்காக தமிழ் நாடு அரசு மேற்கொண்டுள்ள பணிகள் பின்வரும் மூன்று பெருந்தலைப்புகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

1. கல்வி.
2. வேலை வாய்ப்பு, பொருளாதார மேம்பாடு.
3. பொதுச் சுகாதாரம், வீட்டு வசதி.

#### 1. கல்வி.

9. ஆதி திராவிடர்-பழங்குடியினர் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு முதன்மையானதாகவும், இன்றியமையாததாகவும் திகழ்வது கல்விதான் என்பதை வலியுறுத்த வேண்டிய அவசியம் இல்லை. தற்போது ஆதி திராவிடர்-பழங்குடியினர் மாணவர்களுக்கென்றே ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை நடத்திவரும் பள்ளிகளில் மட்டுமல்லாமல், கல்வித்துறை தனியார் நிறுவனம் நடத்தும் பள்ளிகளிலும் அவர்களுக்கு தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைக் கல்வி அளிக்கப்படுகிறது. வரவு-செலவுத் திட்டத்தில் இத்துறைக்கு ஒதுக்கப்படும் தொகையில் பெரும்பகுதியானது கல்விக்காக ஆண்டுதோறும் செலவிடப்படுகிறது. அதன் விவரம் வருமாறு :—

| ஆண்டு | ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலனுக்கான மொத்த ஒதுக்கீட்டுத் தொகை. | ஆதி திராவிடர்/பழங்குடியினர் கல்விக்காக மட்டுமான ஒதுக்கீடு |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| (1) | (2) | (3) |
| 1981-82 | 2,702.17 | 1,791.25 |
| 1982-83 | 4,285.64 | 2,117.58 |
| 1983-84 | 4,460.99 | 2.378.27 |

**படிப்புதவித் தொகை :—**

### 10. மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு :

1976-77 ஆம் ஆண்டு இறுதிவரை, முதல் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு வரை பயிலும் ஆதி திராவிடர் (இந்து)-பழங்குடியினர், கிறித்துவராக மாறிய ஆதி திராவிடர் மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்பிற்காக மாணவரில்லங்களில் தங்கிப் பயிலாததற்கான படிப்புதவித் தொகையும் வழங்கப்பட்டது. இந்த படிப்புதவித் தொகை, புத்தகங்களுக்காகவும், தனிக் கட்டணங்களுக்காகவும் ரொக்கமாகக் கொடுக்கப்பட்டது. படிப்புதவித் தொகையுடன், அவசியமானபோது தேர்வுக் கட்டணங்களும் ரொக்கமாகக் கொடுக்கப்பட்டது. இந்த படிப்புதவித் தொகை வழங்க, பெற்றோர்/பாதுகாவலரின் அதிக அளவு ஆண்டு வருமானம் ரூ. 3,000 என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1977-78 ஆம் ஆண்டு முதற்கொண்டு, நான்காம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையில் பயிலும் ஆதி திராவிடர் (இந்து), பழங்குடியினர், மதம் மாறிய ஆதி திராவிட மாணவர்களுக்கு, அவர்களின் பெற்றோரின்/பாதுகாவலரின் வருமானத்தை பாராமல் இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. முதல் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குக் கல்வித் துறை இலவசமாகப் புத்தகங்களையும், சிலேட்டுகளையும் வழங்கி வருகிறது. சம்பந்தப்பட்ட நிலையங்களுக்குத் தனிக் கட்டணங்களைத் திருப்பிக் கொடுப்பது தொடர்பான சலுகைகள் தேர்வுக் கட்டணங்களைச் செலுத்துவதில் அளிக்கப்பட்ட சலுகைகள் ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதி திராவிட மாணவர்களுக்கு, அவர்களுடைய பெற்றோரின்/காப்பாளரின் வருமானத்தைக் கருதாமல் அளிக்கப்படுகிறது. இச்சலுகைகளினால் IV முதல் X ஆம் வகுப்பு வரையிலான வகுப்புகளில் பயிலும் மாணவர்களில் இந்து ஆதி திராவிடர், பழங்குடியினர் கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த சுமார் 7.80 இலட்சம் மாணவர்கள் 1981-82 ஆம் ஆண்டில் பயனடைந்தனர். இதைத் தவிர, பள்ளிகளுடன் இணைக்கப்பட்ட மாணவரில்லங்களில் தங்கிப் பயிலும் V முதல் X வகுப்புகளில் பயிலும் இந்து ஆதி திராவிடர், பழங்குடியினர் கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதி திராவிட மாணவர்களுக்கு, மாணவரில்லங்களில் தங்கிப் பயில்வதற்குரிய கட்டணங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பிற்கு மாணவரில்லங்களில் தங்கிப் பயில்வதற்கான கட்டணத் தொகைக்கு ஒப்புதலளிப்பதற்கான வருமான வரம்பு ஆண்டொன்றுக்கு ரூ. 3,000-லிருந்து ரூ. 6,000-மாக உயர்த்தப்பட்டது. இது, 1981-82 ஆம் கல்வி ஆண்டிலிருந்து செயலுக்கு வந்தது. தங்கிப் பயிலும் மாணவர் ஒருவருக்கு 1981-82 ஆம்





ஆண்டில் உணவு, தங்குவதற்குரிய கட்டணங்கள் வகையில் வழங்கப்படும் தொகை திங்களொன்றுக்கு 10 ரூபாய் உயர்த்தப்பட்டது. உணவு மற்றும் தங்குவதற்குரிய தற்போதைய கட்டண விதம் ஆண்டொன்றுக்கு ரூ. 250-லிருந்து ரூ. 350 வரை ஆகும்.

### 11. மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்டபடிப்பு :

மெட்ரிக் வகுப்பிற்கு மேற்பட்ட வகுப்புகளில் படிக்கும் இந்து ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்கள் அனைவருக்கும் அவர்களுடைய பெற்றோரின்/காப்பாளரின் வருமானத்தைக் கருத்திற் கொள்ளாமல் படிப்புக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. இவ்விதம், ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்புகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கு எல்லா வகுப்புகளிலும் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.

மேல் நிலைப் பள்ளிப் படிப்பு, மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு, கலைக் கல்வி, அறிவியற் கல்வி, உயர்மட்ட தொழிற்நுட்ப பயிற்சிகள் ஆகியவற்றைப் பயிலும் இந்து ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவரில்லத்தில் தங்கிப் பயிலும், மாணவர்களுக்கும் மாணவரில்லத்தில் தங்கிப் பயிலாத மாணவர்களுக்கும் படிப்புதவித் தொகை தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இந்து ஆதி திராவிடர், பழங்குடியினர் எம் மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கருத்திற் கொள்ளாமல், மத்திய அரசின் படிப்புத் தொகை வழங்கப்படுகிறது. மத்திய அரசின் படிப்புதவித் தொகையை பெறத் தகுதியற்ற இந்து ஆதி திராவிடர், பழங்குடியினர் மாணவர்களுக்கும் (அவர்கள் எம் மதத்தைச் சேர்ந்தவராய் இருப்பினும்) கிறித்துவ மதத்திற்கு மதம் மாறிய ஆதி திராவிட மாணவர்களுக்கும், மாநில அரசின் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. மத்திய அரசின் உதவித் தொகையை பெறுவதற்கான வருமான வரம்பு ஆண்டொன்றுக்கு 9,000 ரூபாயிலிருந்து 12,000 ரூபாயாக 1—7—1981 முதற்கொண்டு உயர்த்தப்பட்டது. மாநில அரசின் உதவித் தொகையைப் பெறுவதற்கான வருமான வரம்பு ஆண்டொன்றுக்கு ரூ. 3,000-லிருந்து ரூ. 6,000 ஆக 1981-82 ஆம் கல்வியாண்டிலிருந்து உயர்த்தப்பட்டது.

ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மருத்துவ, பொறியியற் கல்வி பயிலும் மாணவர்களுக்கும்/மாணவரில்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும் வழங்கப்படும் பராமரிப்புப் படியினை மத்திய அரசு 1—1—1978-லிருந்து திங்களொன்றுக்கு ரூ. 60 ஆக உயர்த்தியது. ஏனைய படிப்புகளுக்கும், பராமரிப்புப் படியை 1—7—1981-லிருந்து திங்களொன்றுக்கு

ரூ. 5-லிருந்து ரூ. 60 வரை உயர்த்தியுள்ளது. மத்திய அரசு வழங்கும் படிப்புதவித் தொகையில் பராமரிப்புச் செலவிற்கான தற்போதைய தொகை திங்களொன்றுக்கு ரூ. 50-லிருந்து ரூ. 200 வரை உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் பயனடைந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 1977-78-லிருந்து 1981-82 வரையிலான ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகை ஆகியவை குறித்த விவரங்கள் வருமாறு :—

| ஆண்டு | மாநில அரசின் விதிமுறைகளின் கீழ் மெட்ரிக் படிப்பிற்கு | | | மத்திய அரசின் விதிமுறைகளின் கீழ் மெட்ரிக் படிப்பிற்கு | |
|---|---|---|---|---|---|
| | முந்தைய படிப்பு. | மேற்பட்ட படிப்பு. | தொகை (ரூபாய் இலட்சத்தில்.) | மேற்பட்ட படிப்பு | தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
| | (பயனடைந்தவர்களின் எண்ணிக்கை) | | | (பயனடைந்தவர்களின் எண்ணிக்கை) | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| ஆதி திராவிடர்கள். | | | | | |
| 1977-78 | 6,10,070 | 4,930 | 83,48 | 18,050 | 1,53.67 |
| 1978-79 | 6,69,688 | 3,819 | 1,02.46 | 18.254 | 1,53.02 |
| 1979-80 | 7,74,965 | 5,887 | 1,60.67 | 22,890 | 2,13.41 |
| 1980-81 | 7,79,444 | 8,229 | 1,71.49 | 39,214 | 2,78.10 |
| 1981-82 | 7,88,781 | 8,149 | 1.52.23 | 43,949 | 4,15.21 |
| பழங்குடியினர் | | | | | |
| 1977-78 | .. | .. | .. | 225 | 2.52 |
| 1978-79 | 3 | .. | 0.01 | 218 | 1·07 |
| 1979-80 | .. | 1 | 0.01 | 69 | 0.74 |
| 1980-81 | 53 | .. | 0.11 | 255 | 2.08 |
| 1981-82 | 39 | .. | 0.09 | 473 | 2.88 |

குறிப்பு 1.—மத்திய அரசின் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 1978-79 ஆம் ஆண்டு முடிவில் செலவிடப்பட்ட தொகையைவிட அதிகமாகச் செலவிடப்பட்ட தொகையை மத்திய அரசு ஏற்கும். எஞ்சிய தொகையை பொறுப்பேற்ற செலவுத் தொகையாக மாநில அரசு ஏற்கும்.

குறிப்பு 2.—புத்தமதத்திற்கு மாறிய ஆதி திராவிட மாணவர்கள், மத்திய அரசின் படிப்புதவித் தொகையைப் பெறத் தகுதியுடையவராவர்.



மத்திய அரசின் படிப்புதவித் தொகை குறித்த நடைமுறைகளின் கீழும், மாநில அரசின் படிப்புதவித் தொகை குறித்த அறிக்கையின் கீழும், மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட அனைத்துப் படிப்புகளுக்கும் படிப்புதவித் தொகை வழங்குவதற்கு கல்வி நிறுவனங்களின் தலைவர்களே, ஒப்புதலளிக்கும் அதிகாரிகளாவர் என்று 1982-83 ஆம் கல்வியாண்டிலிருந்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதனால், தொழில் பயிற்சிகளும் (இப்பயிற்சியில் சேர பள்ளி இறுதி வகுப்பில் தேறியிருக்க வேண்டிய அவசியமில்லை) மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பாகக் கருதப்படும்.

இப்புதிய நடைமுறையின்படி, 1981-82 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட படிப்புதவித் தொகையின் முதல் தவணைத் தொகைச் செலவிடப்பட்ட தொகையில் 90 சதவீதத்திற்குச் சமமான தொகை 1982-83 ஆம் ஆண்டில் தகுதிவாய்ந்த மாணவர்களுக்கு படிப்புதவித் தொகையின் முதல் தவணைத் தொகையாகப் பிரித்துக் கொடுப்பதற்கான முன்பணமாக கல்வி நிறுவனங்களின் தலைவர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை, 43,279 மாணவர்களுக்கு முதல் தவணைத் தொகை வழங்குவதற்காக, மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்புகளைக் கொண்ட 1,400 கல்வி நிறுவனங்களுக்கு இதுவரை ரூ. 249.71 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நிறுவனத் தலைவர்கள் வழங்கிய படிப்புதவித் தொகையை அடிப்படையாகக் கொண்டு படிப்புதவித் தொகையின் இரண்டாம் தவணைத் தொகை வழங்கப்பட உள்ளது.

12. செயலாக்கத் திட்டம் :

கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் தொடர்ந்து பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளி இறுதித் தேர்வில் முதலாவதாகவும், இரண்டாவதாகவும் வெற்றி பெறும் ஆதி திராவிடர் மாணவர்கள் (ஆண்கள்) இருவருக்கும், கிறித்தவராக மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்கள் (ஆண்கள்) இருவருக்கும் மேற்படிப்பைத் தொடர்வதற்கு உதவியளிக்கப்படுகிறது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றிற்கு (விடுமுறைக் காலம் உட்பட) ரூ. 30 கல்விச் சிறப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. அம்மாணவர்கள் மாணவர் இல்லத்தில் தங்க வேண்டும் என்ற நியதியோ அல்லது அவர்களுடைய பெற்றோரின் வருமானத்திற்கு வரம்போ இத்திட்டத்தின்கீழ் வரையறுக்கப்படவில்லை 10 +2+ 3 என்ற கல்வி முறை கொண்டு வரப்பட்ட பின்னர், 10 ஆம் வகுப்பில் முதலாவதாகவும் இரண்டாவதாகவும் வெற்றி பெறும் ஆதி திராவிடர் (ஆண்கள்) மாணவர்களுக்கும், கிறித்துவ மதத்திற்கு மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களுக்கு 1978-79 ஆம் ஆண்டு முதல் படிப்புதவித் தொகை வழங்கப்படுகின்றது. 1979-80 ஆம் ஆண்டிலிருந்து ஆதி திராவிடர் மாணவியர், கிறித்துவர்களாக

மதம் மாறிய ஆதி திராவிடர்). பழங்குடியினர் (ஆண் மற்றும் பெண் இருபாலாருக்கும்) இத்திட்டத்தின்கீழ் படிப்புதவித் தொகை வழங்கப் படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பொதுத் தேர்வில் மிக அதிகமாக மதிப்பெண்களையும் அதற்கு அடுத்த அதிகமான மதிப்பெண்களையும் ஒரே மாதிரியாகப் பெறும் மாணவர்கள் இருவருக்கு மேற்பட்டு இருப்பார்களே யானால், அவர்களுக்கு இப்படிப்புதவித் தொகை முழுவதும் வழங்கப்படும். மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு அவர்களுடைய உணவுக் கட்டணம், மாணவரில்ல வாடகைக் கட்டணம் ஆகியவற்றைக் கழித்து கொள்ளாமல் பரிசுத்தொகை முழுவதும் வழங்கப்படுகிறது.

1983-84 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 3.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

13. காந்தியடிகள் நினைவு படிப்புதவித் தொகை.

கல்வியிற் சிறந்து விளங்கும் இந்து ஆதி திராவிடர் மாணவர்களுக்கு வழக்கமாக அளிக்கப்படும் படிப்புதவித் தொகையுடன் 1980-81 ஆம் ஆண்டிலிருந்து மேல் நிலைக் கல்வித் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு "காந்தியடிகள் நினைவுப் படிப்புதவித் தொகை" வழங்கப் படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு மாணவரும் ஒரு மாணவியும் தெரிந்தெடுக்கப்படுவர். படிப்புதவித் தொகை முதலாண்டிற்கு ரூ. 1,500-ம், அடுத்துவரும் ஒவ்வோர் ஆண்டிற்கும் ரூ. 1,000-ம் வழங்கப்படுகிறது.

14. தகுதி—வருவாய்—பரிசுத் திட்டம்.

கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோரின் நலனைக் கருதி, "காந்தி நினைவுப் பரிசுத் திட்டத்தைப்" போன்றே தகுதி—வருவாய் பரிசுத் திட்டம் 1976-77 ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் கிறித்துவ மதத்திற்கு மதம் மாறிய ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவரும் ஒரு மாணவியும், பழங் குடியினர் வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவரும் ஒரு மாணவியும் இப்பரிசுத் திட்டத்தின்கீழ் தெரிந்தெடுக்கப்படுகின்றனர்.

15. தகுதிக்கென்று வழங்கப்படும் தனி மானியம்.

பள்ளி இறுதித் தேர்விலும், புகுமுக வகுப்புத் தேர்விலும் 60 சதவீதமும் அதற்கு அதிகமாகவும் மதிப்பெண் பெற்றுள்ள ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்துவ மதத்திற்கு மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்கள்



ஒவ்வொருவருக்கும் தகுதி மானியமாக ரூ. 300-ஐ 1976-77 முதல் ஒவ்வோராண்டும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை 1980-81 ஆம் ஆண்டு முதல், பள்ளி இறுதித் தேர்விலும் (10 ஆண்டு பாட முறைத் திட்டம்), மேல் நிலைக் கல்விப் படிப்பின் இரண்டாம் ஆண்டிற்குரிய தேர்விலும் 60 சதவீதமும் அதற்கு அதிகமாகவும் மதிப்பெண் பெறும் ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்துவ மதத்திற்கு மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் இந்தத் தகுதி மானியம் வழங்கப்படுகிறது. 1983-84 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 14.45 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

16. கடன் படிப்புதவித் தொகைகள்

பொறியியல், வேளாண்மை, மருத்துவம் முதலிய தொழிற் கல்வி கற்கும் மாணவர்கள், அவர்களுக்கு வழங்கப்படும் படிப்புதவித் தொகையைவிட அதிகப்படியான தொகையினை செலவிட வேண்டியுள்ளது. எனவே அரசு இதனைப் பரிசீலித்து, நிதியுதவி தேவைப்படும் மாணவர்களுக்குக் கடன் வழங்க ஆணை பிறப்பித்து உள்ளது. 1974-75 ஆம் ஆண்டு முதல் பட்டப் படிப்புப் பயிலும் மாணவர்களுக்கும் கடன் படிப்புதவித் தொகை வழங்கப் படுகிறது. 1979-80 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை, இதற்குச் செலவிடப்பட்ட தொகை ஆகியவை பற்றிய விவரங்கள் வருமாறு :—

| | ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் | | கிறித்துவ மதத்திற்கு மதம் மாறிய ஆதி திராவிடர்கள். | |
|---|---|---|---|---|
| ஆண்டு. | எண்ணிக்கை. | வழங்கப் பட்ட தொகை. | எண்ணிக்கை. | வழங்கப் பட்ட தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1979-80 | 4,912 | 36.09 | 153 | 0.89 |
| 1980-81 | 6,015 | 57.78 | 153 | 1.13 |
| 1981-82 | 7,884 | 54.62 | 176 | 1.03 |
| 1982-83 (1982 டிசம்பர் வரை) | 2,486 | 17.19 | 235 | 1.36 |

1983-84 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரூ. 61.00 இலட்சமும், கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரூ. 1.01 இலட்சமும் 1983-84 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டு உள்ளது.

மேலும், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் நீரடி வசதியற்ற கழிப்பிடங்களைச் சுத்தம் செய்தல், தோல் பதனிடுதல், தோல் உரித்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், ஆதி திராவிடர்கள் அல்லாத வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்பிற்காக வழங்கப்படும் படிப்புதவித் தொகை தொடர்ந்து வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1983-84 ஆம் ஆண்டிற்கு ரூ. 2.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

**17. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள்.**

(அ) **ஆதி திராவிடர்கள்.**—இம்மாநிலத்தில் 947 ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| 1. தொடக்கப் பள்ளிகள் | 842 |
| 2. நடுநிலைப் பள்ளிகள் | 71 |
| 3. உயர்நிலைப் பள்ளிகள் | 26 |
| 4. மேல்நிலைப் பள்ளிகள் | 8 |
| மொத்தம் | 947 |

இப்பள்ளிகளில் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய வகுப்பைச் சேர்ந்த சுமார் 1.78 இலட்சம் மாணவர்கள் பயிலுகின்றனர். ஆதி திராவிடர் நல மேல்நிலை/உயர்நிலைப் பள்ளிகளுக்கும், பழங்குடியினர் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் நூலக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) **பழங்குடியினர்.**—இத்துறை பழங்குடியினருக்காக 138 பள்ளிகளை நடத்தி வருகிறது. அவற்றின் விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| அரசு பழங்குடியினர் உறைவிட தொடக்கப் பள்ளிகள் | 118 |
| அரசு பழங்குடியினர் உறைவிட நடுநிலைப் பள்ளிகள் | 12 |
| அரசு பழங்குடியினர் உறைவிட உயர்நிலைப் பள்ளிகள் | 4 |
| அரசு பழங்குடியினர் உறைவிட மேல்நிலைப் பள்ளிகள் | 3 |
| அரசு பழங்குடியினர் உறைவிடம் இல்லாத பள்ளி | 1 |
| மொத்தம் | 138 |



மற்கூறிய உறைவிடப் பள்ளிகளில் இலவச உணவு வழங்கும் திட்டத்தின் ,598 மாணவர்கள் பயனடைகின்றார்கள். 1982-83 ஆம் ஆண்டில் புதியதாக ழங்குடியினர் உறைவிட தொடக்கப் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன.

982-83 ஆம் ஆண்டில் 3 பழங்குடியினர் உறைவிட தொடக்கப் பள்ளிகள் லைப் பள்ளிகளாகவும், 2 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளி கவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

982-83 ஆம் கல்வி ஆண்டில் ஆதி திராவிடர் நலத் தொடக்கப் பள்ளி று நடுநிலைப் பள்ளியாகவும், 9 ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளிகள் நிலைப் பள்ளிகளாகவும், 4 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளி கவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளதுடன் ஆதி திராவிடர் நலப் பள்ளி க்கும், பழங்குடியினர் உறைவிடப் பள்ளிகளுக்கும் பல்வேறு பதவித்தா ரியர்களும் கூடுதலாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத்துறை நடத்தும் பள்ளிகளுக்குக் டட வசதி செய்து கொடுப்பதற்காக 1980-81-இல் ரூபாய் 1 கோடி செலவில் மதிக்கப்பட்ட திட்டம் ஒன்று 1981-82-ல் தொடர்ந்து செயல்படுத்தப் து.

1981-82-இல் 14 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டு ற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

1982-83, 1983-84 ஆம் ஆண்டுகளில் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்குக் டடங்கள் கட்டுவதற்காக ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

1983-84-இல் மாணவ மாணவியர் சேர்ந்து படிக்கும் ஆதி திராவிடர் நல ல்நிலைப் பள்ளிகள்/உயர்நிலைப் பள்ளிகளை மாணவர்களுக்கென்றும், ணவியர்களுக்கென்றும் தனித்தனியாகப் பிரிக்கக் கருதப்பட்டுள்ளது. ஆதி ரவிடர் நலப் பள்ளிகள்/பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய ளிகளுக்கு மேசை, நாற்காலிகள், கணித சாதனங்கள், நூலக வசதிகள், புரவு வசதிகள், விளையாட்டுச் சாமான்கள் ஆகியவற்றை வழங்கவும் கருதப் டுள்ளது. கூடுதலாக வகுப்பு அறைகளைக் கட்டவும், விளையாட்டுத் திடல் படுத்தவும் கருதப்பட்டுள்ளது. கூடுதலாக இடைநிலை ஆசிரியர்களை மிப்பதன் மூலம் ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் கருதப் டுள்ளது.

**18. மாணவ, மாணவியருக்கு உடைகள் வழங்குதல்.**

ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும் அல்லது அரசினர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவியர் அனைவருக்கும் ஒவ்வோர் ஆண்டும் இரண்டு ஜதை உடைகள் வழங்கப்படுகின்றன. 4 முதல் 10 வரையில் உள்ள வகுப்புகளில் பயிலுகின்றவர்களும் அரசினர் ஆதி திராவிட நல மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலுபவர்களுமான மாணவர்களுக்கு இரண்டு ஜதை உடைகள் வழங்கப்படுகின்றன. ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகளில் 1 முதல் 8 வரையில் உள்ள வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவராயிருப்பினும் ஒவ்வோர் ஆண்டும் இரண்டு உடைகள் வழங்கப்படுகின்றன. இந்த இரண்டு ஜதை உடைகளும் கல்வி ஆண்டு தொடக்கத்திலேயே வழங்க ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

பழங்குடியினர் உறைவிடப் பள்ளிகள், ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள சாரணர்களுக்கும் சாதாரண பயிற்றுநர்களுக்கும் 1982-83 ஆம் ஆண்டிலிருந்து சீருடைகள் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

**19. கல்விச் சுற்றுலா.**

மாணவர்கள் தங்களது பொது அறிவை வளர்த்துக்கொள்ளுவதற்கு ஏதுவாக ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களை முக்கியமான இடங்களுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லும் திட்டம் 1969-70 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு உயர் நிலைப் பள்ளியிலிருந்தும் 40 மாணவர்களை கல்வி சுற்றுலா அழைத்துச் செல்வதற்கு 1977-78 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும், ரூ. 1,000 வழங்கப்படுகிறது. அதற்காக 1983-84 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர், பழங் குடியினர் மாணவர்களுக்காக ரூ. 0.37 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது.

**20. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம்.**

1—7—1982-க்கு முன்னர் ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் ஒவ்வொரு வருக்கும் நாளொன்றுக்கு 22 காசு அடங்கச் செலவில் நண்பகல் உணவு வழங்கப்பட்டது. 1—7—1982-லிருந்து ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும் 5 + 9 + வயது வரையுள்ள குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் 0.45 காசு செலவில் சத்துணவு வழங்கும் புதிய திட்டத்தை சென்னை மாநகரம் நீங்கலாக தமிழ் நாடு முழுவதிலும்





அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஆண்டு முழுவதும் சத்துணவு வழங்கப்படுகிறது. பின்னர் இத்திட்டம் 10 முதல் 14 வயது வரை யுள்ள மாணவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. இத்திட்டம் 15—9—1982-லிருந்து சென்னை மாநகருக்கும் நீட்டிக்கப்பட்டது.

45 காசு செலவில், 34 காசு உணவுப் பொருள் வழங்கு துறையாலும், மற்றும் கூட்டுறவுச் சங்கங்களும் வழங்கும் அரிசி, எண்ணெய், பருப்பு போன்றவற்றிற்காக சரிகட்டப்படுகிறது. எஞ்சிய 11 காசு காய்கறிகள், சுவைப் பொருள்கள் வாங்குவதற்காக மானியமாக வழங்கப்படுகிறது.

வனத்துறை நடத்தும் 14 பள்ளிகள் உட்பட ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப்பள்ளிகளில் பயிலும் 1,72,636 மாணவர்களுக்கு 1,070 மையங்களில் சத்துணவு வழங்கப்படுகிறது.

ஆதி திராவிடர்/பழங்குடியினர் நலப்பள்ளிகளில் புதிய மதிய உணவு வழங்குவதற்காக 1983-84 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 86.82 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

**21. மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், எழுது பலகைகள் முதலியவற்றை வழங்குதலும் பள்ளிகளுக்குச் சாதனங்கள் வழங்குதலும்.**

இம்மாநிலத்தில் ஆதி திராவிடர்களுக்காகவும், பழங்குடியினருக்காகவும் 1,085 பள்ளிகளை இத்துறை நடத்தி வருகிறது. கல்வியாண்டில் ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப்பள்ளிகள் திறக்கப்பட்ட பிறகு, இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலும் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், எழுது பலகைகள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 1982-83 ஆம் ஆண்டில் 1.87 இலட்சம் மாணவர்கள் பயனடைந்தனர். இதற்காக, 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 34.47 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

22. ஆசிரியர்களுக்கு குடியிருப்புகள்.

ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் களுக்குச் சமவெளிகளில் ஒவ்வொன்றும் ரூ. 15,030 செலவிலும் மலைப் பகுதிகளில் ஒவ்வொன்றும் ரூ. 17,000 செலவிலும் வீடுகள் கட்டிக் கொடுக்கப் படுகின்றன. இதுவரை 182 ஆசிரியர் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இதற்காக 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 4.44 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது. இதில் ஆசிரியர்கள் குடியிருப்புகளைப் பராமரிப்பதற்கான செலவும் அடங்கும்.

23. குழந்தைகள் காப்பகம்.

1977-78 ஆம் ஆண்டிலிருந்து 1980-81 ஆம் ஆண்டு வரையில் ஒவ்வோராண்டும் 50 என்ற விதத்தில் குழந்தைகள் காப்பகங்களை ஏற்படுத்த அரசு அனுமதித்து வந்துள்ளது. 200 குழந்தைகள் காப்பகங்களை ஏற்படுத்த உத்தரவிடப் பட்டுள்ளது. குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் 70 குழந்தைகள் உள்ளன. பணிபுரியும் மகளிரின் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பினை அவர்களிடமிருந்து ஏற்றுக் கொள்வதும் வளர்ந்து வரும் வயதில் அவர்களுக்கு தூய சுகாதாரமான நல்ல பழக்க வழக்கங்களைக் கற்பிப்பதும், அக்குழந்தைகளுக்குப் பள்ளிச் செல்லும் பழக்கத்தை உருவாக்குவதும் இதன் நோக்கமாகும். 3 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் இக்காப்பகங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். இத்திட்டம் நண்பகல் உணவுத் திட்டத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 1983-84 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 5.77 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

24. தட்டச்சு சுருக்கெழுத்துக் கல்வியில் பயிற்சி அளிப்பதற்காக திட்டம்.

தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி பெற்ற ஆதி திராவிடர், பழங்குடியினர் மாணவர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லையாதலால், தட்டச்சு, சுருக்கெழுத்தர் பதவிகளில், அவர்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள 18 சதவீத இடங்களை நிரப்ப இயலாது போகிறது. இதனைக் கருத்திற் கொண்டு, தனியார் நடத்தும் வணிகக் கல்வி நிறுவனங்களில் ஆதி திராவிடர் மாணவர்களுக்கும் பழங்குடியினர் மாணவர்களுக்கும் தட்டச்சு, சுருக்கெழுத்தில் பயிற்சி அளிப்பதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றை அரசு கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தின்படி 950 மாணவர்களுக்கு தட்டச்சுப் பயிற்சியும், 475 மாணவர்களுக்கு சுருக்கெழுத்துப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதற்காக 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 3.52 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

25. சட்டப் பட்டதாரிகளுக்கு நிதி உதவி.

சட்டத் தொழிலை மேற்கொள்ள ஆதி திராவிடர் பழங்குடியினரைச் சேர்ந்த சட்டப் பட்டதாரி மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு, அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம் ஒன்றை அரசு கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் சட்டத் தொழிலை மேற்கொள்ள விரும்புகிற



ஆதி திராவிடர், பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த சட்டம் பயின்ற பட்டதாரிகள் ஐவருக்கு 1974-75 ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட நிதி உதவிகள் அளிக்கப்படுகின்றன:

(i) வழக்குரைஞராகப் பதிவு செய்துகொள்வதற்கான கட்டணம், வழக்குரைஞர்கள் அறைக்கான வாடகைக் கட்டணம் முதலிய வகையில் ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூ. 750 கடன்.

(ii) புத்தகங்கள், மேசை, நாற்காலி முதலியவை வாங்க ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூ. 750 உதவித் தொகை.

1982-83 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தின்கீழ் தெரிந்தெடுக்கப்படும் பட்டதாரிகளின் எண்ணிக்கை 5-லிருந்து 15 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

26. கல்லூரி மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சித் திட்டம்.

கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ், பொருளாதாரம், அரசியல், கணிதம் போன்ற பாடங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் பொருட்டு, சென்னை மாநகரில், மாணவர்களுக்காக ஒரு நிலையமும், மாணவிகளுக்காக ஒரு நிலையமும் ஆக இரண்டு நிலையங்கள் இரு திங்கள் காலத்திற்கு செயல் படுகின்றன. இந்த வசதி, 1976-77-இல் மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. இந்தப் பயிற்சி வசதி 189 கல்லூரிகள் அனைத்திலும் ஓராண்டில் இரு திங்கள்கட்கு அளிக்கப்பட்டது. இப்பயிற்சிக் காலத்தின்போது ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ. 1,000 மொத்தத் தொகையாக அளிக்கப்படுகிறது. 1983-84-லிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப் படும். இதற்காக இவ்வாண்டில் ரூ. 1.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை தொழில் நுட்பக்கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள 7 பொறியியல் கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிடர் பழங்குடியினர் மாணவர் களுக்கும் இச் சிறப்புப் பயிற்சித் திட்டத்தை 1981-82 ஆம் ஆண்டில் அரசு விரிவுபடுத்தியுள்ளது.

27. மாணவர் இல்லங்கள்.

பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கு மாணவர் இல்ல வசதிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வோர் ஆண்டும் தேவை, நிதி நிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் புதிய மாணவரில்லங்கள் திறக்கப்படுகின்றன. தனியார் மாணவர் இல்லங்களும் அரசின் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்படுகின்றன. ஆதி

திராவிடர், பழங்குடி நல மாணவர் இல்லங்களில் கீழ்க்கண்டவாறு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் :—

| ஆதி திராவிடர் மாணவரில்லங்கள்— (1) | சதவீதம். (2) |
| --- | --- |
| ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் | 75 |
| பிற்பட்ட வகுப்பினர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பரம்பரையினர். | 20 |
| முன்னிலை வகுப்பினர் | 5 |
| **பழங்குடியினர் மாணவரில்லங்கள்—** | |
| பழங்குடியினர் | 60 |
| ஆதி திராவிடர்கள் | 30 |
| பிற்பட்டோர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பரம்பரையினர் | 10 |

1982-83 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்களுக்கென்று உள்ள 675 மாணவர் இல்லங்களில் மொத்தம் 42,978 மாணவர்கள் பயனடைந்தனர். மாணவர் இல்லங்களில் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் 10 சதவீதம் கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளது. பழங்குடியினரைப் பொறுத்தமட்டில், மொத்தம் 905 மாணவர் களைக் கொண்ட 20 மாணவர் இல்லங்கள் உள்ளன. 1982-83 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்களுக்காக 15 புதிய மாணவர் இல்லங்கள் திறக்கப்பட்டுள்ளன; இவற்றில் 900 மாணவர்கள் தங்கலாம். 1983-84 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் களுக்காக 10 புதிய மாணவர் இல்லங்களைத் திறப்பதற்கு நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

1983-84 ஆம் ஆண்டில் புதிய மாணவரில்லங்களைத் திறப்பதற்கும், 695 மாணவரில்லங்களைப் (ஆதி திராவிடர்களுக்கு 675, பழங்குடியினருக்கு 20) பராமரிப்பதற்கும் ரூ. 491.13 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அரசு ஆதி திராவிடர்/பழங்குடியினர் மாணவர் இல்ல மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ரூ. 2 மதிப்புள்ள விளையாட்டுப் பொருட்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.



ஆதி திராவிடர் மாணவர்கள் தங்கியுள்ள அரசு இல்லங்களுக்கு அளிக்கப் படும் பல்வேறு உணவுக் கட்டண விதங்கள் வருமாறு :—

| மாணவர் இல்லங்களின் வகை. (1) | மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு அளிக்கப்படும் கட்டணம். (2) |
| --- | --- |
| | ரூ. |
| 1. சென்னை நகரிலுள்ள அரசு கல்லூரிமாணவர்/மாணவியர் இல்லங்கள், சென்னை மாநகரிலுள்ள அரசு தொழிற்பயிற்சி மாணவர் இல்லங்கள். | 95 |
| 2. வெளியூர்களிலுள்ள அரசு கல்லூரி மாணவர்/மாணவியர் இல்லங்கள், அரசு தொழிற்பயிற்சி மாணவர் இல்லங்கள். | 60 |
| 3. உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான அரசு இல்லங்கள். | 60 |

பழங்குடியினர் உறைவிடப் பள்ளி மாணவர்களுக்கும், பழங்குடியினர் மாணவர் இல்லங்களுக்கும் அளிக்கப்படும் பல்வேறு உணவுக் கட்டண விதங்களின் விவரம் வருமாறு :—

| வகை. (1) | மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு அளிக்கப்படும் கட்டணம். (2) |
| --- | --- |
| | ரூ. |
| பழங்குடியினர் உறைவிட தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், பழங்குடியினர் மாணவர் இல்லங்கள். | 45 |
| பழங்குடியினர் உறைவிட உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி. | 60 |

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்ட ஆதி திராவிடர் மாணவர் இல்லங்கள், பழங்குடியினர் மாணவர் இல்லங்கள், பழங்குடியினர் உறைவிட பள்ளிகள் ஆகியவற்றுக்குப் பழைய சமையல் பாத்திரங்களுக்குப் பதிலாக 1982-83-இல் புதிய பாத்திரங்கள் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

1982-83-ல் பழங்குடியினர் உறைவிடப் பள்ளிகள், பழங்குடியினர் இல்லங்களில் உள்ளவர்களுக்குக் கர்ணம் மேசைகள் வழங்க ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

1982-83-இல் மலைப் பகுதியிலுள்ள ஆதி திராவிடர் பழங்குடியினர் அரசு மாணவர் இல்லங்களில் உறங்குவதற்கு சிமிண்டால் ஆன படுக்கை இருக்கைகள் கட்ட ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

1983-84 ஆம் ஆண்டில், அரசுக் கல்லூரி, தொழிற்பயிற்சி மாணவர் இல்லங்களில் தங்கிப்படிப்பவர்களுக்கு சிறிய மேசை ஒன்றும், நாற்காலி ஒன்றும் வழங்கக் கருதப்பட்டுள்ளது. இதற்காக 1983-84 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ. 4.25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மலைப்பகுதிகளில் அமைந்துள்ள பழங்குடியினர் உறைவிடப் பள்ளி மாணவர்களுக்கும், பழங்குடியினர் மாணவர் இல்ல மாணவர்களுக்கும் 1983-84 ஆம் ஆண்டில். கம்பளி சட்டைகள் வழங்கக் கருதப்பட்டுள்ளது. இதற்காக 1983-84 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2.99 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**28. அரசு இல்லங்களிலுள்ள மாணவர்களுக்குக் கட்டுப்பாட்டு விலைகளில் இன்றியமையாப் பொருள்களை வழங்குதல்.**

இத்துறை நடத்தி வரும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர் இல்லங்கள் அனைத்திற்கும் தேவைப்படும் இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாட்டு விலைகளில், தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் வாங்கப்படுகின்றன.

**29. மாணவர் இல்லங்களுக்கான கட்டிடங்கள் கட்டுதல்.**

ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை நடத்தும் 695 அரசு இல்லங்களில் (ஆதி திராவிடர் மாணவர்களுக்கு 675, பழங்குடியினர் மாணவர் களுக்கு 20) 147 மாணவர் இல்லங்கள் (ஆதி திராவிடர் மாணவர்களுக்கு 132, பழங்குடியினர் மாணவர்களுக்கு 15) அரசு கட்டிடங்களில் அமைந்துள்ளன.



ஆதி திராவிடர், பழங்குடியினர் மாணவர்களுக்கான இல்லங்களைக் கட்டும் பணியை தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டு கழகம் மேற்கொண்டுள்ளது. இதுவரையில், ஆதி திராவிடர்களுக்காக 219 மாணவர் இல்லங்கள் (ஆதி திராவிடர்களுக்கு 214, பழங்குடியினர்களுக்கு 5) கட்டு வதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அவற்றில் 74 இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டன. 145 இல்லங்கள் கட்டும் பணி பல்வேறு நிலங்களில் நடந்தேறி வருகிறது.

1982-83 ஆம் ஆண்டில் மாணவர்-மாணவியர் இல்லங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

1983-84 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர், பழங்குடியினர் மாணவ, மாணவியர் இல்லங்கள் கட்டுவதற்காக ரூ. 240.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**30. பகுதி நேர சிற்றாசிரியர்கள்.**

ஆதி திராவிடர், பழங்குடியினருக்கான அரசினர் உயர்நிலைப் பள்ளி மாணவர் இல்லங்களில் தங்கி பயிலும் மாணவர்கள் தேர்வுகளைச் சிறப்பாக எழுதத் துணைபுரியும் பொருட்டு, பகுதி நேர சிற்றாசிரியர்கள் நியமிக்கப் படுகின்றனர். இத்தகைய பகுதி நேர சிற்றாசிரியர்கள் பதவிகள் 248 உள்ளன. இவை தவிர கல்லூரி மாணவர் இல்லங்களுக்காக மூன்று பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் பதவிகளும், தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரத்திலுள்ள நந்தனார் அரசு மாணவர்/மாணவியர் இல்லங்களில் ஐந்து பதவிகளும் உள்ளன. அக்டோபர் முதல் நாள் தொடங்கி ஓர் ஆண்டில் ஆறு மாதங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படுவார்கள். மேல்நிலைக் கல்வி புதியதாகத் தொடங்கப்பட்டதால், உயர்நிலைப்பள்ளி மாணவர் இல்லங்களில் ஒன்பதாவது, பத்தாவது வகுப்பு களில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை பதினைந்தும் அதற்கு மேற்பட்டும் இருப்பின் பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். இதற்காக 1983-84 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 1.42 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**31. தனியார் நடத்தும் மாணவர் இல்லங்களுக்கான உதவித் தொகை.**

ஆதி திராவிடர், மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கான அரசு இல்லங்களை தவிர, 41 இல்லங்கள் ஆதி திராவிடர் மாணவர்களுக்காகவும் நான்கு பழங்குடியினர் மாணவர்களுக்காகவும் உறைவிடப் பள்ளிகள் தனியார் நிறுவனங்கள் அரசு நிதியுதவியுடன் நடத்தி வருகின்றன.

உதவித் தொகை பெறும் இல்லங்களுக்கு அளிக்கப்படும் உணவு மானியத்
தொகையை 1981-82 ஆம் ஆண்டிலிருந்து அரசு உயர்த்தியுள்ளது. சென்னை
மாநகரம், மற்றும் மாவட்ட, வட்ட தலைமை இடங்கள், இரண்டாம் நிலை
நகராட்சிகள் ஆகிய இடங்களில் அமைந்துள்ள அரசு உதவியுடன் நடத்தப்
பட்டு வரும் மாணவர் இல்லங்களில் தங்கி பயிலும் ஒவ்வொரு மாணவருக்கும்
வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை திங்கள் ஒன்றுக்கு ரூ. 35 ஆக இருந்ததை
ரூ. 45 ஆக உயர்த்தப்பட்டுள்ளது; ஏனைய இடங்களில் மாதம் ஒன்றுக்கு
ரூ. 30-லிருந்து ரூ. 40-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. தனியாரால் நிருவகிக்கப்படும்
நான்கு பழங்குடியினர் மாணவர் உறைவிடப் பள்ளிகளில் பயிலும் ஒவ்வொரு
மாணவருக்கும் வழங்கப்படும் மானியத் தொகை திங்கள் ஒன்றுக்கு
ரூ. 36-லிருந்து ரூ. 46-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டு வரவு
செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்கென ரூ. 11.23 இலட்சம் ஒதுக்கப்
பட்டுள்ளது.

## 2. வேலை வாய்ப்பும் பொருளாதார மேம்பாடும்.

### 32. வேளாண்மை.

**உழவு மாடுகள்.**

வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் ஆதி திராவிடர்கள், பழங்குடியினரின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் பொருட்டு, உழவு மாடுகள், விதைகள், பிற வேளாண்மைக் கருவிகள் ஆகியவற்றை வாங்குவதற்காக ஒவ்வொருவருக்கும் 600 ரூபாய் என்ற வீதத்தில் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

**பாசனக் கிணறுகள்.**

பாசனக் கிணறு வெட்டுவதற்காக கொடுக்கப்பட்டு வரும் உதவித்தொகை
திட்டத்தினை அரசு மாற்றியமைத்துள்ளது. இப்புதிய திட்டத்தின்கீழ் கிணறு
வெட்ட ஆகும் மொத்த செலவில் 1/3 பாகம் உதவித் தொகையாக அளிக்கப்
படும். மீதமுள்ள 2/3 பாகம் நிலவள வங்கி/வணிக வங்கிகளிலிருந்து கடனாக
வழங்கப்படும். மேற்கூறிய அரசு உதவித்தொகை கிணறு வெட்டும் செலவின்
1/3 பாகமாக அல்லது உயர் அளவுத்தொகை ரூ. 5,000-மாக இருக்கும்.
1983-84 ஆம் ஆண்டில் இதற்கென ஆதி திராவிடர்களுக்கு ரூ. 5.97 இலட்சமும்
பழங்குடியினருக்காக ரூ. 1.49 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர,
இந்த இனங்களுக்கு கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர்களுக்கு
ரூ. 0.95 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



மேலும், ஆதி திராவிடர்கள் வைத்திருக்கும் நிலங்களுக்குப் பாசன வசதிகள் அளிப்பதற்காக, மத்திய அரசு அளிக்கும் சிறப்பு நிதியுதவியைக் கொண்டு, பெரும் பாசனத் திட்டம் ஒன்றை இம்மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ் நாடு குழாய்க் கிணறுகள் நிறுவனத்தைச் சேர்ந்த தனிப் பணியாளர்கள், ஆதி திராவிடர்கள் வைத்திருக்கும் நிலங்களை இத்திட்டத்தின் கீழ்க் கண்டறிந்து வருகின்றனர். செங்கற்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள ஆதி திராவிடர் நிலங்களுக்குப் பாசன வசதிகளை அளிக்கத் தமிழ் நாடு குழாய்க் கிணறுகள் நிறுவனம் திட்டங்களை வகுத்துள்ளது. இந்நிறுவனம், 31—12—1982 முடிய மதுரை மாவட்டத்தில் ரூ. 241.83 இலட்சம் மொத்த செலவில் கடுமையான பாறைப் பகுதிகளில் 12 கிணறுகள் தோண்டுவது உட்பட 198 குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்காகத் திட்டமிட்டு 29 குழாய்க் கிணறுகள், தோண்டி முடித்துள்ளது. மேலும் 10 குழாய்க் கிணறுகள் தோண்டும் பணி நடைபெற்று வருகிறது.

### 33. தோட்டக்கலை.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கொல்லி மலை, சின்னக்கல்ராயன் மலை, பெரியகல்ராயன் மலை ஆகிய இடங்களில் தோட்டக் கலையை மேம்படுத்து வதற்கு தட்ப வெப்ப நிலை சாதகமாக உள்ளது. எனவே அங்கு வாழும் பழங்குடி மக்களின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு, தருமபுரி, தோட்டக்கலை—மலைத் தோட்டப் பயிர் இயக்குநரின் நிர்வாகக் கட்டுப் பாட்டின்கீழ் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மேற்கூறிய திட்டத்தினை ஆத்தூர் தோட்டக் கலை உதவி இயக்குநர் செயல்படுத்தி வருகிறார். இதற்கான செலவினம் ஆதி திராவிடர் பழங்குடியினர் நல நிதியிலிருந்து பெறப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பழங்கள், காய்கறிகள் முதலியவற்றை வெற்றிகரமாகவும், கணிசமான வருமானம் தரத்தக்க வகையிலும் உற்பத்தி செய்வதற்காகப் பழங் குடியினருக்கு நடைமுறை ஆலோசனை, அறிவுரை, தொழில் நுட்ப உதவி ஆகியவை அளிக்கப்படுகின்றன. பழங்கள், காய்கறிகள் மற்றும் சமையலுக்கு பயன்படும் வாசனைப் பொருள்களாகிய, ஏலம் இலவங்கம் ஆகியவற்றைப் பயிரிடுவதற்கான பொருள்கள் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. சுமார் 8,714.56 ஏக்கர் பரப்பளவு இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்சொன்ன திட்டத்திற்கு 31—7—1982 வரை ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத்துறையின் நிதியிலிருந்து தொகை செலவிடப்பட்டது. இத்திட்டம், பழங் குடியினர் துணைத் திட்டத்தின்கீழுள்ள ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்துடன் சேர்க்கப்பட்டு, தோட்டக்கலை மலைத் தோட்டப் பயிர்கள் இயக்குநரால் 1—8—1982 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**34. தொழில் கருவிகளை இலவசமாக வழங்குதல்.**

கருமார், தச்சர், தையல் தொழில்கள், ஏனைய 18 தொழில்களில், தொழில் நுட்பப் பயிற்சிப் பெற்ற ஆதி திராவிடர்கள், பழங்குடியினர்கள், கிறித்துவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர்கள் ஆகியவர்களுக்கு இலவசமாக கருவிகள், சாதனங்கள் வழங்கும் திட்டம், தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1983-84 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 9.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**35. சிறுதொழில் கடன்.**

சைக்கிள், கடைகள், ஓட்டல்கள் (சிற்றுண்டிச் சாலைகள்), மளிகைக் கடைகள், அச்சகம், முதலியவை போன்ற முப்பத்தோரு (31) தொழில்களை நடத்துவதற்காக ஆதி திராவிடர்களுக்கு சிறு தொழில் கடன் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. தொழில் வகைகளுக்கு ஏற்ப ரூ. 125-லிருந்து ரூ. 15,000 வரை கடன் தொகை வழங்கப்படுகிறது. 1983-84 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்களுக்காக ரூ. 10.00 இலட்சமும், சமயம் மாறிய ஆதி திராவிடர்களுக்காக ரூ. 1.00 இலட்சமும், பழங்குடியினருக்காக ரூ. 0.50 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**36. பயிற்சி நிலையங்கள்.**

வேலை வாய்ப்பு பயிற்சித் துறையிலிருந்து மாதம் ஒன்றிற்கு ரூ. 25 பெறும் ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த பயிற்சியாளர்களுக்கு ஆதி திராவிடர் நல நிதியிலிருந்தும் திங்கள் ஒன்றுக்கு கூடுதலாக ரூ. 30 பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதன் மூலம் 1—8—1980-லிருந்து அவர்கள் பெறும் பயிற்சி உதவித் தொகை மொத்தம் ரூ. 55 ஆகிறது. ஆதி திராவிடர் மாணவர் அனைவருக்கும் ரூ. 55 பயிற்சி உதவித் தொகையும் பழங்குடி மாணவர்களுக்கு ரூ. 82.50 பயிற்சி உதவித் தொகையும் தொடர்ந்து வழங்கப்படுகின்றது. 1983-84 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 12.62 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வேலை வாய்ப்பு பயிற்சித் துறை இயக்குநரால் செயல்படுத்தப்படுகிறது.

**37. கூட்டுறவு.**

(அ) ஆதி திராவிடர்கள்—

தொழில் துறையில், ஆதி திராவிடர்கள் துரிதமாக முன்னேற வசதி செய்து கொடுக்கும் நோக்கோடு குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் பயிற்சி நிலையங்கள், பயிற்சி உற்பத்தி



நிலையங்கள், பணி நிலையங்கள் பலவற்றை அரசு நிறுவியுள்ளது. இவை, தொழில்-வணிக இயக்குநர், சமூக நலத்துறை இயக்குநர், தமிழ் நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியம் ஆகியவர்களால் நடத்தப்படுகின்றன. இந்நிலையங்களையும் சங்கங்களையும் நடத்துவதற்குத் தேவையான செலவுத் தொகை ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறையால் ஏற்கப்படுகிறது.

(ஆ) பழங்குடியினர்கள்—

பழங்குடியினரை சுரண்டல்காரர்களின் பிடியிலிருந்து விடுவிக்கும் பொருட்டும், காடுபடு பொருள்களைப் பழங்குடியினர் விற்பனை செய்வதற்கு உதவும் பொருட்டும், அவர்களுடைய பொருளாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டும், அவர்களுக்கென இம்மாநிலத்தில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், வனத் தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றை அரசு அமைத்துள்ளது. தற்போது பழங்குடியினருக்காக, இரண்டு கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், ஐந்து வனத் தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், இரண்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை உள்ளன. நியாயமான வட்டி விதத்தில் நிதியுதவி அளிக்கும் நிறுவனங்கள் மூலம் பழங்குடியினருக்கு மாற்றுக் கடன் வசதிக்கு வகை செய்வதற்காகப் பெரிய அளவிலான பழங்குடியினர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் 13 ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் உற்பத்திக்காகக் கடன் வசதியை அளிப்பதோடு மட்டுமின்றி, நுகர்வோர் கடன் வசதிகளையும் அளிக்கின்றன. வேளாண்மை இடுபொருட்களை விநியோகிப்பதற்கு ஏற்படும் செலவினங்களைச் சரிக்கட்ட நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மலைவாழ் பழங்குடியினருக்கு உதவும் பொருட்டு சிறு தொழில்களைத் தொடங்குவதற்குரிய திட்டம் ஒன்று தனியாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**38. பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள்.**

ஏழை ஆதி திராவிடர்களுக்கு உதவி புரிதல், அவர்களுக்கு சுய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த ஆதி திராவிடர் உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒரு கால்நடைக்கு 1,500 ரூபாய் பெறுவதற்கு தகுதியுடையவர் ஆவர். இந்தத் தொகையில் ரூ. 500 ஆதி திராவிடர் நல நிதியிலிருந்து மானியமாகவும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து 1,000 ரூபாய் கடன்

தொகையாகவும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு உறுப்பினரும் இரு கால்நடைகளை வாங்குவதற்கு மட்டுமே மேற்கூறிய உதவியைப் பெற தகுதியுடையவராவார். ஆதி திராவிடர்கள் மற்றும் கிறிஸ்துவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர்கள் ஆகியோருக்கு மானியம் வழங்க இத்திட்டத்திற்கு 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 17.83 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### மத்திய அரசு சிறப்பு நிதி உதவி.

39. சிறப்பு உட்பகுதி திட்டத்தைச் செயற்படுத்துவதற்கென கூடுதல் உதவியாக மத்திய அரசு சிறப்பு நிதி உதவியை வழங்குகிறது. ஒருங்கிணைந்த கிராமப்பகுதி வளர்ச்சித் திட்ட முறையைப் போலவே பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் மூலம் சுமார் 50,000 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு உதவியாக அமைய, மாவட்ட கிராம வளர்ச்சி முகவரமைப்புகளிடம் மத்திய அரசின் சிறப்பு உதவியாக ரூ. 9.56 கோடி வழங்கப்பட்டது. இத்தொகையைக் கொண்டு 30—11—1982 ஆம் நாள் வரையில் குடும்ப நலனை நோக்கமாகக் கொண்ட திட்டங்களின்கீழ் 8.32 கோடி ரூபாய் செலவில் 91,496 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு உதவி செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மையும் வேளாண்மை தொடர்பான பணிகளும்தான் ஆதி திராவிடர்களின் முதன்மைப் பணியாக இருந்த போதிலும், இப்பணிகளில் அவர்கள் ஆண்டு முழுவதும் ஆதாயம் ஈட்டத்தக்க அளவில் தொடர்ந்து ஈடுபட இயலாது. மேலும் அவர்களுடைய வாழ்க்கைத் தொழில் முறையைப் பலதிறப்படுத்த வருவாய் ஈட்டும் தொழில்கள், தொழில் பிரிவுகள், தொழில் பேட்டைகள் முதலியவற்றை ஏற்படுத்துவதற்கு இந்த மத்திய அரசு சிறப்பு நிதி உதவியை பயன்படுத்த வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. மேற்கூறிய திட்டங்களுக்கு நிதியுதவி செய்யும் பொருட்டு 1981-82 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை மத்திய அரசால் வழங்கப்பட்ட ரூ. 1,748.62 லட்சத்தை தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி நிறுவனத்திடம் அளிக்கப் பட்டுள்ளது.

கைத்தறித் துணிகள் தயாரிப்புப் பணியில், இராமநாதபுரம் கிழக்கு மாவட்டத்தில், 400 ஆதி திராவிடர்கள் பயன்பெறும் வகையில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலையை ஏற்படுத்தவும், மதுரை, சேலம், வடாற்காடு, திருநெல்வேலி, புதுக்கோட்டை, பெரியார், தருமபுரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 1,475 ஆதி திராவிடர்கள் பயனடையும் வகையில் விசைத் தறித் தொழில் வளாகங்களை ஏற்படுத்தவும், 800 ஆதி திராவிடர்கள் பயனடையும் வகையில் 8 தொழில்முறை நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தவும், அரசு



அனுமதி வழங்கியுள்ளது. கதர் கிராம தொழில்களின் மூலம் மாநிலத்தில் காலணி தைக்கும் 500 தொழிலாளிகளுக்கு பெட்டிக் கடைகள் வழங்கவும், வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு காலணி தயாரிக்கும் பிரிவையும் ஒரு பயிற்சி நிலையத்தையும் ஏற்படுத்தவும் பெரியார் மாவட்டம் கோங்கம்பாளையத்தில் ஒரு குரோம் தோல் பதனிடும் பிரிவையும், 20 கிராம நூற்பு மையங்கள் 8 நேபாளி தறி நிலையங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்துறையில் அரசு ரூ. 250.63 இலட்சம் உதவித் தொகை வழங்கியுள்ளது. இதன் மூலம் 7,965 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

தொழில் துறையில், செங்கல் தயாரிக்கும் கூடங்கள், பாலித்தின் பைகள் தயாரிக்கும் கூடங்கள், நிப்பெட்டி தயாரிக்கும் கூடங்கள் முதலியவற்றிற்காக ரூ. 69 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 3,359 நபர்கள் பயனடைவர்.

ஆதி திராவிடர்களின் நிலங்களுக்குப் பாசன வசதிகள் செய்து கொடுக்கும் வகையில் தமிழ் நாடு குழாய்க்கிணறுகள் தோண்டும் கழகத்தால் ஒரு பெருந் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், செங்கல்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் செயல் படுத்தப்பட்டுவருகிறது. மேற்சொன்ன மாவட்டங்களில், வருவாய்த் துறைப் பணியாளர்களை நியமிக்க தமிழ் நாடு குழாய்க்கிணறுகள் கழகத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான செலவுத் தொகையில் 50 சதவிகிதத் தொகையை மத்திய அரசு, சிறப்பு உதவித் தொகையிலிருந்து மானியமாகவும் தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திலிருந்து 25 விழுக்காடு தொடக்கத் தொகையாகவும் எஞ்சிய தொகை வங்கிகளிடமிருந்து கடனாகப் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

### 40. கிராமத் தொகுதி வளர்ச்சித் திட்டம்.

சென்னை மாவட்டம் நீங்கலாக ஏனைய 15 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு ஒரு வளர்ச்சி வட்டாரம் எனத் தேர்ந்தெடுத்து ஆதி திராவிடர்களுக்கான பொருளாதார வளர்ச்சிப் பணிகள் தீவிரமான முறையில் செயல்படுத்தும் திட்டத்தை தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் 1982-83-ல் ஏற்றுள்ளது. இதன்படி ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் 1,000 ஆதி திராவிடர் குடும்பங்கள் என மொத்தம் 15,000 குடும்பங்கள் பயன் பெறுவர். பொருளாதார நிலையில் மிகவும் பின் தங்கியவையாகவும் ஆதி திராவிடர்கள் பெருமளவில் வசிக்கும் ஒதுக்கப்பட்ட பகுதிகளாகவும் உள்ள வட்டாரங்கள் இத்திட்டத்திற்காக தெரிந்தெடுக்கப்

படுகின்றன. கிராமப்பகுதி நூலிழை தயாரிக்கும் நிலையம், நேபாளி நெசவு நிலையங்கள், கிராமப்பகுதி பயிற்சி நிலையங்கள், காலணி உற்பத்திப் பிரிவு, பாய் முடையும் நிலையம், கயிறுப்பொருள்கள் தயாரிக்கும் நிலையம், கையினால் காகிதம் செய்யும் பிரிவு, கல் உடைக்கும் பிரிவுகள், உலைக்கற்கள் தயாரிக்கும் பிரிவுகள் போன்ற கிராமப்பகுதி குடிசைத் தொழில்கள் மூலம் ஆண்டு முழுவதிலும் பணியில் ஈடுபடும் வகையில் ஆதி திராவிடர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க இத்திட்டம் வகை செய்கிறது. இதன் மூலம், குடிநீர், இடுகாடு, பள்ளிகள் ஆகியவற்றிற்குச் செல்லும் நடைபாதை, மருந்தகங்கள், நியாயவிலைக்கடைகள், தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் உள்ள ஏனைய வசதிகள் ஆகியவற்றை வழங்க இத்திட்டம் வகை செய்கிறது

**41. பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு—தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு நடத்தும் தேர்விற்கு பயிற்சியளித்தல்.**

ஆதி திராவிடர்கள், பழங்குடியினர்கள், சமயம் மாறிய ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகரிக்கும் நோக்கத்துடன், ஒவ்வொரு ஆண்டும். தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழுவால் நடத்தப்படும் தொகுதி பணிக்குரிய போட்டித் தேர்வு எப்பொழுதெல்லாம் நடத்தப்படுகிறதோ அப்பொழுதெல்லாம் அத்தேர்வினை எழுத விண்ணப்பித்துள்ளவர்களுக்குச் சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. தொகுதி VI பணிக்குரிய போட்டித் தேர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் 2 மாதங்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சி காலத்தில் மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 45 பயிற்சி உதவித்தொகை அளிக்கப்படுகிறது, 1982-83 ஆம் ஆண்டு இம்மாநிலத்தில் 17 நிலையங்கள் செயல் பட்டன. 1983-84 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 0.02 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**42. ஆயுதப்படைப் பிரிவு, காவல் துறைப் பணிகளில் சேர்த்துக் கொள்ளப் படுவதற்காக ஆதி திராவிடர்களுக்குப் பயிற்சியளித்தல்.**

ஆதி திராவிடர் (இந்து வகுப்பினைச் சேர்ந்த மாணவர்கள்) தரைப்படை மற்றும் காவல் துறையில் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படும் வாய்ப்பினை அதிகரிக்க, இவர்களுக்கு உடல் அமைப்பு அறிவு கூர்மை இவற்றை அதிகரிக்கும் நோக்கோடு சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டமாகும் இது. சென்னை, முன்னாள் இராணுவத்தினர் நல வாரியத்தின் இணை இயக்குநர் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் பயிற்சி முகாம்களை நடத்துகிறார். தேவைப்படும் ஆதி திராவிடர் இனத்தைச்



சேர்ந்த மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலருடையதாகும். முதற்கண், இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இரு மாவட்டங்களில், ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 ஆதி திராவிடர் மாணவர்களுக்கு 2 திங்கள் கால அளவிற்கு பயிற்சி முகாம்கள் நடத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த முகாம்கள் பயனளிக்கும் வகையில் அமைந்துள்ளதால், 16 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 ஆதி திராவிட மாணவர்களுக்கு 60 நாட்களுக்கு படைப் பிரிவு, காவல்துறையில் சேர்வதற்கு வகை செய்யும் பொருட்டு மேற்சொன்ன பயிற்சி முகாம்களை நடத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. பயிற்சி மாணவர்களுக்கு உணவு தங்குமிட வசதிகள் போன்ற எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

**43. அனைத்திந்திய அரசு பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத ஆதி திராவிடர் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தேர்வுக்கு முன்பு பயிற்சி அளிக்கும் நிலையம்.**

இந்திய ஆட்சி பணி, இந்தியக் காவல் பணி போன்ற அனைத்திந்தியப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத ஆதி திராவிடர் பழங்குடி மாணவர்களுக்குத் தேர்விற்கு முன் பயிற்சி அளிக்கும் நிலையம் 1966 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்நிலையம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சிக்கு இந்தியா முழுவதும் உள்ள மாணவர்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். இந்நிலையத்துடன் இணைக்கப்பட்ட மாணவர் இல்லம் ஒன்றும் உள்ளது. பயிற்சி பெறும் மாணவியருக்கு சென்னை மாநிலக் கல்லூரி மகளிர் விடுதியில் தங்குமிட வசதியும், உணவு வசதியும் அளிக்கப்படுகின்றன. பயிற்சி பெறுபவர் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு ரூ. 125 உணவிற்காக செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று அனைத்திந்திய பணிகளில் நியமனம் பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 மானியம் அளிக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 42 மாணவர்கள் அனைத்திந்தியப் பணிகளில் நியமிக்கப் படுவதற்கு இறுதியாக தெரிந்தெடுக்கப்பட்டனர். சென்னையிலுள்ள தேர்வுக்கு முன் பயிற்சி அளிக்கும் நிலையத்திற்குத் துணையாக மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களின் தலைமையிடங்களில் துணை நிலையங்கள் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

**44. பொதுச் சுகாதாரம், வீட்டு வசதி, வீட்டுமனைகள் வழங்கும் திட்டம்.**

**வீட்டுமனைகள் :**

எங்கெல்லாம் அரசு புறம்போக்கு நிலங்கள் உள்ளனவோ, அங்கெல்லாம் இந்த நிலங்கள் மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாக ஆதி திராவிடர்கள் பழங் குடியினருக்கு வீட்டு மனைகளாக ஒப்படைப்பு செய்யப்படுகின்றன. அரசு

நிலங்கள் இல்லாதபோது 1894 ஆம் ஆண்டு
சட்டம் 1/1894 சட்டத்தின்கீழ் தனியார் நிலங்கள் கையகப்படுத்துதல
அவற்றை தகுதியுடைய ஆதி திராவிடர்கள்/பழங்குடியினருக்கு 3 செண்டுகள
வீதம் வீட்டு மனைகளாக வழங்கப்படுகிறது. 1949 ஆம் ஆண்டிலிருந்து கையகப்படுத்து
1982-83 ஆம் ஆண்டு வரை (31—12—1982 ஆம் நாளன்று இருந்தவாறு)
3,96,431 மனைகள் வழங்குவதற்காக 24,797.84 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்
பட்டது. இதில் 3,55,100 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. எஞ்சி
யுள்ள பட்டாக்கள் விரைவில் வழங்கப்படும். 1982 ஆம் ஆண்டு டிசம்பர்
திங்கள் 31 ஆம் நாள் வரை ஆதி திராவிடர்கள்/பழங்குடியினருக்கு வீட்டு
மனைகள் வழங்குவதற்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு ரூ. 1,038,28
இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இயன்றவரையில் சாதி இந்துக்கள் வாழ்கின்ற
குடியிருப்புகளுக்கு அருகாமையிலேயே ஆதி திராவிடர்கள்/பழங்குடியினர்
வீட்டு மனைகள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
இத்திட்டத்திற்காக 1983-84 ஆம் ஆண்டில், ரூ. 125.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்னும் உணர்வைப்
போக்கவும், எல்லா வகுப்பு மக்களிடையே உள்ளத்தளவில் ஒருமைப்பாட்டை
ஏற்படுத்தவும், உண்மையிலேயே நலிந்த பிரிவினர் அனைவருக்கும் உதவி
புரியவும், ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைகளை வழங்குதல்/வீடு கட்டிக்
கொடுத்தல் என்னும் திட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட வீட்டு மனை
களில்/கட்டப்பட்ட வீடுகளில் ஆதி திராவிடர்கள், பிற்படுத்தப்பட்ட
வகுப்புகளைச் சேர்ந்த ஏழைகள் ஆகியோருக்கு முறையே 80 விழுக்காடு,
10 விழுக்காடு என்று ஒதுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்
துள்ளது. தேசிய கிராமப்பகுதி வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் ஆதி
திராவிடர்களுக்கு வீட்டுமனைகள் வழங்குவதற்காக கையகப்படுத்தப்பட்ட
மனைகளை சமப்படுத்துமாறு மாவட்ட ஆட்சி தலைவர்கள் அனைவருக்கும்
அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

45. தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி கழகம்.

இந்நிறுவனம் பிப்ரவரி திங்கள் 1974 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. ஆதி
திராவிடர்களுக்கு, மீனவர்களுக்கு வீடுகளை கட்டித் தருதல், மாணவர்
இல்லங்கள்/பள்ளிக் கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள் ஆகியவற்றைக்
கட்டுதல் ஆகிய பணி, இந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆதி
திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளுக்கும்
இந்நிறுவனம் பொறுப்பு வகிக்கிறது. 1982-83 முதல் தமிழ் நாடு ஆதி திராவிடர்
வீட்டு வசதி வளர்ச்சித் திட்டத்தை அரசு உதவித்தொகை மற்றும்
பயன்படுவோர் பங்குத்தொகை ஆகிய (அடிப்படையில் செயல்படுத்தப்பட



வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. வீடு கட்டுவதற்கென செலவு ரூ. 4,000 ஆகும். இதில் அரசு ரூ. 3,250-ஐ உதவித்தொகையாக வழங்கும். பயனடைவோர் ரூ. 750 மதிப்புள்ள அளவிற்கு உடலுழைப்பளிக்க தங்களுடைய பங்கைச் செலுத்த வேண்டும். வீட்டு மனைப்பரப்பு 201 சதுர அடி ஆகும். இது கிராமப்பகுதி வீட்டு வசதி திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் வடிவமைப்பைப் போன்றே கட்டப்படும். உதவித்தொகை, தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி நிறுவனத்தின் மூலம் பகிர்ந்தளிக்கப்படும். தொழில் நுட்ப மேற்பார்வை, உதவி போன்ற தேவையான அடிப்படை உதவிகள் பயனடைவோருக்கு தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி நிறுவனத்தின் மூலம் அளிக்கப்படும். 1979-80, 1980-81 ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட நிதியிலிருந்து திருத்தப்பட்ட முறையில் 10,000 வீடுகள் கட்டிக் கொடுக்கும் பணி மேற்கொள்ளப்படும். இந்நிறுவனம் ஆதி திராவிடர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தும் பணியினை நிறைவேற்ற இயலும் பொருட்டு ஆதி திராவிடர் வளர்ச்சி நிறுவனத்திற்கு நிதியுதவி முதலீடு செய்வதற்காக மாநில அரசுக்கு மத்திய அரசு உதவி புரியும் திட்டம் ஒன்றை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. பங்கு முதலீட்டில் 49 சதவீதத் தொகையை மத்திய அரசும், 51 சதவீதத் தொகையை மாநில அரசும் அளிக்கின்றன. இத்தொகை வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள ஆதி திராவிடர்களுக்கு உதவி புரிவதற்காக பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் தொடக்கச் செலவுத் தொகையாக பயன்படுத்தப்படும். ஆதி திராவிடர்கள் தங்களது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள ஆதாயம் தரும் தொழில்களைத் தொடங்குவதற்காக மொத்த செலவில் 25 விழுக்காடுத் தொகை, இந்த தொடக்கச் செலவுத் தொகையாக 4 விழுக்காடு வட்டி வீதத்தில் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

இதுவரை, தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி நிறுவனத்திற்கு ரூ. 500 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 31—12—1982 வரை 75,395 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு ரூ. 388.75 இலட்சம் தொடக்கச் செலவு தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 1983-84-ல் வரவு செலவு மதிப்பீட்டில் இதற்காக ரூ. 200 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் நகர் மற்றும், கிராமப்பகுதிகளிலும் வாழும் ஆதி திராவிடர்களுக்கு உதவிடும் பொருட்டு இந்திய அரசு வழங்கும் சிறப்பு உதவித் தொகையை, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல், தொழிற்பேட்டைகளை மேம்படுத்துதல் தொகுதித் திட்டங்களை மேம்படுத்துதல் போன்றவற்றிற்காக இந்திய அரசு வழங்கும் சிறப்பு உதவித் தொகையைத் தமிழ் நாடு ஆதி

திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி நிறுவனத்திடம் அளிக்க, இந்த அரசு முடிவு செய்துள்ளது. இம்மேம்பாட்டுப் பணிகளை செய்து முடிக்க இயலும் வண்ணம் இந்நிறுவனத்தின் நிர்வாகப் பணியாளர் அமைப்பு பலப்படுத்தப்பட்டுள்ளன.

1982-83-ல் ஆதி திராவிடர்களுக்கென ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் ஒன்றை சென்னை மாநகர் நீங்கலாக இம்மாநிலத்தின் 15 மாவட்டங்களிலும் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய ஒவ்வொரு வட்டாரத்திலும் செயல் படுத்தக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 15,000 குடும்பங்கள் பயனடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்சொன்ன நிறுவனத்தின், சமுதாயக் கூடங்கள், பள்ளிக் கட்டிடங்கள், மாணவர் இல்லங்கள் ஆகியவற்றைக் கட்டும் திட்டம் மன நிறைவளிக்கும் வகையில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**46. கிராம வீட்டு வசதித் திட்டம்.**

கிராம வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கிராம வீட்டுவசதிக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் 4,000 ரூபாய் செலவில் கிராமப் பகுதிகளில் வீடு கட்டப் படுகின்றது. ஆண்டு வருமானம் 4,200 ரூபாய்க்கு மேற்படாதவரும் இத்திட்டத்தின் மூலம் பயனடைவோருமான ஆதி திராவிடர், பழங்குடியினர் ஒவ்வொருவருக்கும் வட்டியில்லாக் கடனுக்கும், 1,000 ரூபாய் உதவித் தொகைக்கும் இத்திட்டம் வகை செய்கிறது. ஆதி திராவிடர்கள் பெரும் அளவில் உள்ள இடங்களில் வீடுகட்ட விழையும் ஆதி திராவிடர் வகுப்பைச் சேராதவரும் இத்திட்டத்தின்கீழ் உதவித்தொகை பெறத் தகுதியுடையவர் ஆவார். பயன்பெறும் ஆதி திராவிடர் பழங்குடியினருக்கும் வழங்கப் படுவதற்காக உதவித் தொகை குறித்து ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறையின் 1983-84 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 600 இலட்சம் மூலதனம் மற்றும் வட்டிக்காக நிதியொதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இத்திட்டம் சென்னை கூட்டுறவுச் சங்கங்கள் (வீட்டு வசதி) பதிவாளரால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1—4—1982 முதல் 31—12—1982 நாள் வரையில் 26,009 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றுள் 21,924 வீடுகள் ஆதி திராவிடர்களுக்கென கட்டப்பட்டவையாகும்.

**47. துப்புறவுப் பணியாளர்கள், குப்பை கூட்டுபவர்கள் பணி நிலையை மேம்படுத்துதல்.**

துப்புறவுப் பணியாளர்கள் மலக்கூடையை தலையில் சுமக்கும் பழக்கம் தற்போது இம்மாநிலத்தில் நடைமுறையில் இல்லை. பெருக்குபவர்களுக்கும், துப்புறவுப் பணியாளர்களுக்கும் தள்ளு வண்டிகள், கையுறைகள், புதை காலணிகள், தட்டுகள், சுரண்டு கருவிகள் ஆகியவற்றை இலவசமாக வழங்குவது போன்ற திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. 1977-78 ஆம் ஆண்டில் 432 தள்ளு வண்டிகளும் 216 தட்டுகளும், சுரண்டு கருவிகளும் ரூ. 1.76 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் செயற்படுத்த 1979-80-ல் 58 நகராட்சிகளுக்கு 2,980 தள்ளு வண்டிகளும் 102 பேரூராட்சி களுக்கு 390 தள்ளுவண்டிகளும், 480 சுரண்டு கருவிகளும் வழங்க ரூபாய் 9,66,400 வழங்கப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டில் 250 தள்ளு வண்டிகள், 250 சுரண்டு கருவிகள், தட்டுகள் ஆகியவற்றை ரூ. 1,58,154 செலவில் 83 பேரூராட்சிகளுக்கு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.



**48. குடிநீர் வசதிகள்.**

ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடி மக்களுக்கும், கிறித்துவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற் கென் ஆதி திராவிடர் குடியிருப்புகளில் குடிநீர்க் கிணறுகள் தோண்டப் படுகின்றன. ஒரு குடிநீர்க் கிணறு தோண்டுவதற்காகும் உயர்வு அளவு செலவு வரம்பு ரூ. 7,500 ஆகும். குடிநீர்க் கிணறுகள் தவிர, ஆதி திராவிடர்கள், பழங் குடியினர், கிறித்தவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர்கள் ஆகியோருக்காக ஆண்டுதோறும் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின்கீழ் நிலமட்ட நீர்த் தேக்கங்களும் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு நில மட்ட நீர்த் தேக்கம் கட்டவும் ஆழ்கிணறு தோண்டவும் உயரளவு செலவு வரம்பு ரூ. 15,000-லிருந்து ரூ. 20,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சாதாரண திறந்த கிணறுகளுக்கு பதிலாக இயன்ற அளவிற்கு துளைக் கிணறுகள் அமைக்கப் படுகின்றன. ஆதி திராவிடர்களும் பழங்குடி மக்களும் கிறித்துவ மதத்திற்கு சமயம் மாறிய ஆதி திராவிடர்களுக்கும் குடிநீர் கிணறுகள் அமைத்து கொடுப்பதற்காக 1983-84 ஆம் ஆண்டில் ரூபாய் 29.12 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

**49. மின் வசதி.**

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் வசதி செய்து கொடுக்கும் வகையில் தமிழ் நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய ஒவ்வோராண்டும் அரசு இழப்பீட்டுத் தொகை வழங்குகிறது. இதற்கென்று 1957-58 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. 31—3—1981 ஆம் நாள் நிலவரப்படி 25,714 ஆதி திராவிடர குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டுவிட்டது. 1981-82 ஆம்

ஆண்டில், புதிதாக உருவான 883 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்படவிருக்கிறது. இவற்றுள் 31—3—1982 ஆம் நாள் வரையில் 149 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு அளிக்கப் பட்டுவிட்டது.

**50. சமுதாயக் கூடங்கள்.**

ஆதி திராவிடர் குடியிருப்பில் வாழும் மக்கள் திருமணம், சமூக விழாக்கள், கூட்டங்கள் நடத்துவதற்கென்று அக்குடியிருப்புகளில், 1971-72 ஆம் ஆண்டி லிருந்து படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின்கீழ் ஒவ்வொன்றும் ரூபாய் 10,500 செலவில் சமுதாயக் கூடங்கள் கட்டித்தரப்பட்டன. 1974-75 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொன்றும் ரூ. 15,000 மதிப்பீட்டுச் செலவில் சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டன. 1980-81 ஆம் ஆண்டிலும் 1981-82 ஆம் ஆண்டிலும் ரூ. 3.43 இலட்சம் செலவில் சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்காக ஏழு இடங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்தொகை தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் வசம் ஒப்படைக்கப் பெற்றுள்ளது. இதற்கென 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 1.50 இலட்சம் ஒதுக்கப்பெற்றுள்ளது.

**51. சமுதாய நிலையங்கள்.**

ஆதி திராவிடர்கள், அவர் தம் குழந்தைகள் ஆகியோரிடையே நல்ல சுகாதாரப் பழக்கங்களைப் பரவச்செய்யும் பொருட்டு ஆடவர் சமூகப் பணியாளர் ஒருவரும், மகளிர் சமூகப் பணியாளர் ஒருவரும் குற்றேவலர் (பெண்) ஒருவரும் கொண்ட 25 சமுதாய நிலையங்கள் இம்மாநிலத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. அவர்கள் தங்கள், தலைமையிடத்திலிருந்து 5 முதல் 8 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள கிராமங்களில் தீவிர பிரச்சாரம் செய்கின்றனர். சிறார்களை நீராட்டி, ஆரோக்கியமாகவும் நேர்த்தியாகவும் இருக்கும் பழக்கத்தையும் அவர்கள் கற்றுக் கொடுக்கின்றனர். இந்நிலையங் களில் முதலமைச்சரின் சத்துணவும் பல்வகை வைட்டமின் சத்துள்ள மாத்திரைகளும் ஆதி திராவிடர் பழங்குடியினர் சிறார்களுக்கு வழங்கப் படுகின்றன.

இச்சிறார்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு 14 ரூபாய் செலவில் ஆண்டுக்கு இருமுறை உடைகளும் வழங்கப்படுகின்றன. இதற்கென 1983-84 ஆம் ஆண்டில் 4.46 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.





**52. நீர்புற சலவைக் கூடம்.**

1978-79 ஆம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சலவைத் தொழிலாளி சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்குச் சலவைக்கூடம் அமைத்துத் தரும் திட்டம் கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் பேரூராட்சியில் செயல் படுத்தப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மேலும் இரண்டு பேரூராட்சிகளில் (மணவாளகுருச்சி மறறும் அருமனை), நீர்புற சலவைக் கூடங்கள் கட்டித்தரப்பட்டன. 1980-81 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆய்குடியிலும், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டம் பாக்கைக்குளத்திலும் நீர்புறச் சலவைக் கூடங்கள் அமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மருகலூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டத்திலுள்ள இலத்தூரிலும், நீர்ப்புற சலவைக் கூடங்கள் அமைக்கும் பணிக்காக உதவித் தொகை மற்றும் கடனாக ஒவ்வொரு ஊருக்கும் ரூ. 10,000 வழங்கப் பெற்றுள்ளது. 1983-84 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ. 0.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**53. தீண்டாமை ஒழிப்பு.**

திருத்தி இயற்றப்பட்ட "குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்" 1976 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19 ஆம் நாள் முதற்கொண்டு நடைமுறைக்கு வந்துள்ளது. இச்சட்டம் செவ்விய முறையில் செயல்படுத்துவதற்காக காவல் துறை துணைத் தலைமை காவல் அதிகாரி பதவி நாத்தில் காவல் துறை அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இம்மாநிலத்தில் தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தஞ்சாவூர் (மேற்கு), மதுரை (தெற்கு), கோயம்புத்தூர் (நகர்புறம்), செங்கற்பட்டு (கிழக்கு), இராமநாதபுரம் (மேற்கு), வட ஆற்காடு, கன்னியாகுமரி, சேலம், தர்மபுரி, நீலகிரி, புதுக்கோட்டை, செங்கற்பட்டு (மேற்கு), மதுரை (வடக்கு), இராமநாதபுரம் (கிழக்கு), தஞ்சாவூர் (கிழக்கு), கோயம்புத்தூர் (கிராமப்புறம்) மற்றும் பெரியார் ஆகிய மாவட்டங்களில் 20 இயங்கும் காவல் படைப்பிரிவுகள் இயங்கிவருகின்றன. இக்காவல் படைப் பிரிவுகள் அனைத்திற்கும் ஜீப்புகள் வழங்கப்பெற்றுள்ளன. 31—5—1982 ஆம் நாள் வரையில் இயங்கும் காவல்படைப் பிரிவுகள் 9,290 வழக்குகளைப் பதிவு செய்துள்ளன. இவற்றில் 4,061 வழக்குகளில் நீதிமன்றங்கள் தண்டனை வழங்கியுள்ளன.

குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான குற்றங்களை பதிவு செய்து விரைவில் விசாரித்து முடிவு செய்ய திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் (கும்பகோணம்) மாவட்டங்களில் நான்கு தனி நீதி மன்றங்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

தனி நீதிமன்றங்கள் செயல்பட்டுவரும் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களிலும் வழக்குகள் பெருமளவு நிலுவையாக உள்ள தென் ஆற்காடு, கோயம்புத்தூர் மாவட்டங்களிலும் உள்ள நீதிமன்ற பணிகளைக் கவனிக்க 6 வழக்கு நடத்தும் குழுக்களை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது.

குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தைச் செம்மையாகச் செயல் படுத்த அரசுக்கு ஆலோசனை நல்கிட மாநில அளவிலான குழுவை அரசு திருத்தி அமைத்துள்ளது.

தீண்டாமைக் கொடுமையினை அகற்றுவதில் தூய்மையும், துப்புரவும் பேருதவியாக அமைவதால் ஒவ்வொரு வட்டத்திலும் துப்புரவுடன் பராமரிக்கப் படும் ஆதி திராவிடர் குடியிருப்பு ஒவ்வொன்றிற்கும் ஒரு வானொலிப் பெட்டி பரிசாக வழங்கப்படுகிறது. இதற்காக 1983-84 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 0.63 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை மாநகர் நீங்கலாக) தீண்டாமையை ஒழிக்கத் தீவிரமாகப் பாடுபடும் இரண்டு கிராமங்களுக்கு பரிசுகள் வழங்கப் படுகின்றன. முதற்பரிசின் மதிப்பு 1,000 ரூபாய், இரண்டாவது பரிசின் மதிப்பு 500 ரூபாய் ஆகும். இதற்காக 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 0.23 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் சனவரி திங்கள் 24 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை 'தீண்டாமை ஒழிப்பு வாரம்' கொண்டாடப்படுகிறது. இந்த வாரத்தில் தீண்டாமை ஒழிப்பினை மக்களின் கவனத்திற்கு கொண்டுவர மாநிலம் முழுவதும் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஆதி திராவிடர், பழங்குடி மக்கள் ஆகியோரின் நலனுக்காக ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை எடுத்த நடவடிக்கைகளை விளக்கும் சிறப்பு வெளியீடுகள் 1978-79 ஆம் ஆண்டிலிருந்து அரசால் வெளியிடப்பட்டு வருகிறது. இதுபோன்று நடப்பாண்டிலும் சிறப்பு வெளியீடு வெளியிடப்



54. கலப்புத் திருமணங்கள்.

சாதி சமய வேறுபாடற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு ஊக்குவிக்கும் ஒரு நடவடிக்கையாக கலப்புத் திருமணங்கள் செய்து கொண்டுள்ள தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கங்களும் பாராட்டுச் சான்றிதழ் களும் வழங்கும் திட்டம் 1968-69-ல் கொண்டுவரப்பட்டது. கிறித்தவ சமயத்திற்கு மாறிய ஆதி திராவிடர் மக்களுக்கும் 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் நாள் முதல் இத்திட்டம் பொருந்துமாறு நீட்டிக்கப் பட்டுள்ளது. தற்போது கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகள் பின்வரும் பரிசுகளும் சலுகைகளும் பெறத் தகுதியுடையவராவர்:—

(1) 8 கிராம் (14 காரட்டு) எடையுள்ள தங்கப் பதக்கமும் பாராட்டுச் சான்றிதழும்.

(2) தம்பதிகளின் ஆண்டு வருமானம் 6,000 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக இருந்தால், திருமணச் செலவு வகையில் 300 ரூபாயும், தேசியச் சேமிப்பு பத்திரம் 4,000 ரூபாய்க்கும் வழங்கப்படும். இப்பத்திரம் அவர்கள் இருவர் பெயரிலும் இருக்கும்.
இதனை அவர்கள் விற்கவோ, அடைமானம் வைக்கவோகூடாது. ஆறு ஆண்டு காலத்திற்குள் அவர்கள் பிரிந்துவிட்டால், வட்டி உட்பட சேர்ந்துள்ள தொகை முழுவதும் அரசுக்குச் சேரும். மனைவியை இழந்தவர்களுக்கும் கணவனை இழந்தவர்களுக்கும் மணவிலக்கு செய்து கொண்டவர்களுக்கும் குழந்தைகள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி 21—8—1979 முதல் மேற்சொன்ன சலுகைகள் நீட்டிக்கப்பட்டுள்ளன.

(3) கலப்புத் திருமணம் செய்த தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகள் பெற்றோர்கள் அளிக்கின்ற உறுதிமொழிக்கு இணங்க தந்தையின் சாதியோ தாயின் சாதியோ சேர்ந்தவர்களாகக் கருதப்படுவர். ஒரு குழந்தைக்கு அளிக்கப்படும் உறுதிமொழி இத்தம்பதியினரின் மற்ற குழந்தைகளுக்கும் சாரும்.

(4) மேல்நிலை வகுப்பில் அல்லது அதற்குச் சமமான வகுப்பில் தேறியவர்களுக்கு ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ் முதலாம் ஆண்டு பட்டப் படிப்பிற்காக ஆறு இடங்கள் 1979-80 ஆம் ஆண்டு முதல் கலப்புத் திருமணத் தம்பதிகளின் பிள்ளைகளுக்கு என்று ஒதுக்கப்படுகின்றன.

இத்திட்டம் தொடங்கியதிலிருந்து பழையதிட்டத்தின்கீழ் 843 தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின்கீழ் 146 தம்பதியருக்கும் ஒவ்வொரு தம்பதியருக்கும் ரூ 4,300 என்ற விதத்தில் ரொக்கம் வழங்கப்பட்டது.

18—9—1978 ஆம் நாளன்று அல்லது அதற்குப் பிறகு நடந்த திருமணங்களுக்கு இச்சலுகை பெற வேண்டி மனுச் செய்வதற்கான கால அளவை 2 ஆண்டு காலத்திற்கு அரசு நீட்டித்துள்ளது.

இத்திட்டத்திற்காக 1983-84 ஆம் ஆண்டில் ரூபாய் 10.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

55. இறுதிச் சடங்குகளுக்கு தொகை அளித்தல்.

ஆதி திராவிடர்கள், பழங்குடி மக்கள், கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர்கள் குடும்பத்தினரில் ஒருவர் இறந்துவிட்டால் இறுதி சடங்குகளுக்காக ரூபாய் 50 நிதியுதவி வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்குடும்பங்களின் எளிய பொருளாதார நிலையையும் வறுமைச் சூழ்நிலையையும் கருத்திற்கொண்டு ஒவ்வொரு ஈமக்கடனுக்கும் இந்த நிதியுதவியளிக்கப்படுகிறது.

1983-84 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூ. 52.93 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

56. ஆதி திராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டங்கள். தன்னிறைவுத் திட்டம்.

இம்மாநிலத்தில் 1979-80 ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டம் கொண்டுவரப்பட்டு குறிப்பிட்ட 69 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட 69 வளர்ச்சி வட்டாரங்களிலுள்ள ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு பின்வரும் வசதிகளை செய்து கொடுக்க பழங்குடியினர் நலத்துறை 1980-81 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 75 இலட்சம் ஒதுக்கியது :—

1. குடிநீர் வசதி செய்தல்.
2. ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும் இடுகாடுகளுக்கும் இணைப்புச் சாலைகள் போடுதல், சிறு பாலங்கள் அமைத்தல், இடுகாடுகள் அமைத்தல்.
3. பள்ளிக்கட்டிடங்கள் கட்டுதல்.



இத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 66.23 இலட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டம் 1981-82-ல் 150 வளர்ச்சி வட்டாரங்களுக்கு நீட்டிக்கப்பெற்றது. இதற்கென ரூ. 88.47 இலட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பெற்றது. சென்னை மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலரைத் தவிர ஏனைய மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்களுக்கு இத்தொகை பகிர்ந்தளிக்கப்பெற்றுள்ளது. இத்தொகை புதிய பணிகளையும் தன்னிறைவுத் திட்டத்தின் 1 மற்றும் 2 ஆவது கட்ட வேலைகளில் விடுபட்ட பணிகளையும் மேற்கொள்வதற்காகச் செலவிடப்படும்.

57. பழங்குடியினர் துணைத் திட்டம்.

தமிழ்நாட்டிலுள்ள பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காகப் பழங்குடியினர் நலத் துணைத் திட்டம், 1976-77 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கம் ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்து வருகின்றது. இதற்கான தொகை (1976-77 ஆம் ஆண்டில்) ரூ. 101.88 இலட்சமாக இருந்தது. தற்போது (1983-84 ஆம் ஆண்டில்) ஆறு மடங்கு உயர்ந்து ரூ. 600.58 இலட்சமாக உள்ளது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் துணைத் திட்டத்திற்காக (1980-85) ரூ. 2,167.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பெற்றுள்ளது.

பழங்குடியினர் துணைத் திட்டமானது பகுதி அடிப்படையிலான திட்டமாகும். பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் ஒன்பது ஒருங்கிணைந்த பழங்குடியினர் முன்னேற்றத் திட்டப் பகுதிகளில் (துணைத் திட்டப் பகுதி) வசிக்கின்ற சுமார் 2.10 இலட்சம் பழங்குடியினர் பயனடைகின்றனர். குறைந்தது 15,000 பழங்குடியினரை கொடிய வறுமையிலிருந்து மீளச் செய்து நல்வாழ்வு வாழச் செய்வதே இந்த பழங்குடியினர் துணைத் திட்டத்தின் நோக்கமாகும். ஆறாம் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் ஓராண்டுக்கு 3,000 வீதம் பழங்குடியினர் குடும்பத்தினரை முன்னேறச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

பழங்குடியினர் துணைத் திட்டத்தில் தோட்டக்கலை, மண்வளப் பாதுகாப்பு, சிறு பாசனம், கூட்டுறவு, கால்நடை வளர்ப்பு, வன வளர்ப்பு, கல்வி, சுகாதாரம், சமூக நலம், கிராமியத் தொழில்கள், பட்டுப்புழு வளர்ப்பு, சாலைப் போக்குவரத்து, குடிநீர் வழங்கல், மின் இணைப்பு வழங்குதல் ஆகியன அடங்கும்.

[1983 ஏப்ரல் 12

பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப் பெறும் பல்வேறு திட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட மாநில பழங்குடியினர் முன்னேற்ற அதிகார மன்றத்தால் ஆய்வு செய்யப்பெறுகின்றது. முதலமைச்சரின் சிறப்புக் கட்டளையின்பேரில், தமிழ் நாட்டில் வசிக்கும் அனைத்து பழங்குடியினருக்கும் இரண்டாண்டு காலத்திற்குள் குடிநீர் வழங்கும் நோக்கத்துடன் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் ஆய்வினை மேற்கொண்டுள்ளது.

இத்திட்டங்களைச் செயற்படுத்த அந்தந்த துறைகள் பொறுப்பேற்கின்றன. மாவட்ட ஆட்சியர்கள் அந்தந்த மாவட்ட ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் தலைமைத் திட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகளாவர்.

**58. ஆதி திராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் இடம் ஒதுக்கீடு செய்வதற்கான விதிகள்.**

**1. கல்வி நிறுவனங்களில் அனுமதி—**

மருத்துவக் கல்வி, பொறியியல் கல்வி, ஏனைய தொழில் கல்வி நிறுவனங்கள் உட்பட கல்வி நிறுவனங்களில் ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் உரிய இடம் கொடுக்க 18 விழுக்காடு இடங்கள் ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதற்கென அமைக்கப்பட்டுள்ள குழு 9—3—1982 அன்று ஆதி திராவிடர் நல அமைச்சரின் தலைமையில் கூடி, பொறியியல் மருத்துவம், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் கலைக் கல்லூரிகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களை சேர்த்துக் கொள்வது குறித்து விரிவாக ஆய்வு செய்தது. பல்தொழிற் பயிற்சிப் பள்ளிகளில், ஆதி திராவிடர், பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் 1971-72-ல் 5.83 விழுக்காட்டினர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்; ஆனால் 1980-81 ஆம் கல்வி ஆண்டில் 21 சதவீதம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்பதைக் கருதிப் பார்த்தால், அவர்களை மேற்கூறிய பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்வது அதிகரித்துள்ளது என்பது தெளிவாகிறது. இதுபோலவே பொறியியல் கல்லூரிகளிலும் 1971-72-ல் 4.33 விழுக்காட்டினர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்; ஆனால் 1980-81-ல் 8.6 சதவீதம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதிலிருந்து பொறியியல் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனத் தெரிகிறது. 1981-82, 1982-83 ஆம் ஆண்டிற்கான விவரங்கள் சேகரிக்கப்பெற்று அவை குழுவினால் ஆய்வு செய்யப்படும்.



1983, ஏப்ரல் 12]

**2. அரசுப் பணிகளில் நியமனம்—**

மாநில அரசுப் பணிகளில் 18 விழுக்காடு இடங்கள், ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு துறைத் தலைவரும் தலைமைச் செயலகத் துறைகளும் ஆண்டுதோறும் விவரகணக்கு ஒன்றை அனுப்பவேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளதன் மூலம், இட ஒதுக்கீடு குறித்த விதியை நியமன அதிகாரிகள் ஒழுங்காகப் பின்பற்று கின்றனரா என்பது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. அரசுப் பணிகளில் மற்றும் அரசு பொது நிறுவனங்களில் ஆதி திராவிடர்களுக்கும், அளிக்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவம் குறித்து ஆராய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும், ஆதி திராவிடர் நல அமைச்சரை துணைத் தலைவராகவும், ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை இயக்குநரை உறுப்பினர் செயலாளராகவும் கொண்ட உயர் மட்டக்குழு செயல்பட்டு வருகின்றது.

அரசுத் துறைகளிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் அளிக்கப்பட்டுள்ள இடங்கள் (விழுக்காட்டில்) வருமாறு:—

| | விழுக்காடு. |
|---|---|
| 31—12—81 அன்றுள்ளவாறு. | |
| அரசுத் துறைகள் | 12.47 |
| அரசு பொதுத்துறை நிறுவனங்கள் | 12.17 |

கண்காணிப்புத் துணைக்குழு—பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் அரசு இரண்டாம் செயலாளரைத் தலைவராகக் கொண்டு "உயர் அதிகாரக் கண்காணிப்புக் குழு" ஒன்றை அரசு அமைத்துள்ளது. இது, உயர்நிலைக் குழுவின் நிலையான துணைக் குழுவாகும். ஆதி திராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் இட ஒதுக்கீடு குறித்த விதிகளை பதவி உயர்வு, பதவி மாற்றம் மூலம் செய்யப்படும் அனைத்து நியமனங்களுக்கும் பொருந்தச்செய்வதுபற்றி செயற்குறிப்பை இக்குழு ஆய்வு செய்யும். மேலும் பல நிலைகளில் செய்யப்படும் பணி நியமனங்களை மீண்டும் ஆராய்ந்து தற்போதுள்ள நிலையினை மதிப்பீடு செய்து, அரசுப் பணிகளில் ஆதி திராவிடர் பழங்குடியினருக்குப் போதுமான பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வழிவகைகளையும் தெரிவிக்கும்.

59. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் [illegible].

கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட தொழிலாளர்கள் மீண்டும் அடிமைத்தளைகளில் வீழ்ந்துவிடாமல் நல்வாழ்வு வாழ வகை செய்வதில் இந்த அரசு எப்போதும் ஆர்வம் காட்டி வருகிறது. இவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான திட்டங்கள் தீட்டி செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு விளை நிலம் வழங்கப்பட்டும், வேலை வாய்ப்பு அளித்தும், பயன் பெறும் கடனும் வேளாண்மைக் கடன்களும் வழங்கப்பட்டுள்ளன. தற்போதைய கொத்தடிமைகளை விடுவிக்கும் திட்டத்துடன் பழங்குடி மக்கள் மேம்பாட்டு ஒருங்கிணைப்புத் திட்டம் மற்றும் மிகப்பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்துடன் செயல்படுத்தினால் கொத்தடிமையிலிருந்து விடுதலை பெற்ற தொழிலாளர்களின் சமூக பொருளாதார நிலை உயரும் என அரசு கருதுகிறது. இம்மாநிலத்தில் 30—11—1982 முடிய 27,874 கொத்தடிமைகள் புதுவாழ்வு பெற்றுள்ளனர்.

60. 31 ஆம் எண்ணுள்ள இம்மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 44.48 கோடி (சாட்டிய செலவு உட்பட) செலவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதோடு ஏனைய மூன்று மானியக் கோரிக்கையின்கீழ் ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத்திற்காகச் செலவு செய்யக் கருதியுள்ள தொகைபற்றிய விவரங்கள் வருமாறு :—

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| மானியக் கோரிக்கை எண் 43. பல்வகை. | 0.0026 |
| மானியக் கோரிக்கை எண் 57 பல்வகை மூலதனச் செலவு. | 5.4001 |
| மானியக் கோரிக்கை எண் 58 கடன்களும் முன் பணமும். | 0.7361 |
| மொத்தம் | 6.1388 |



ஆதி திராவிடர், பழங்குடியினரின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காக மேற்சொன்ன மானியக் கோரிக்கைகள் அனைத்தின் கீழும் மொத்தத்தில் 50.62 கோடி ரூபாய் செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆகவே, இம்மாநிலத்தில் நல்வாழ்வு வாழ்ந்து வரும் ஏனைய மக்களைப் போல் ஆதி திராவிடர், பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த அரசு அயராது பாடுபட்டு வருகிறது.

நூலகம் ★ சென்னை-600 008 ★
143180
D
V211,32'N83
N83.192.3-4

## தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,

எழும்பூர், சென்னை-600 008

### தவணைத்தாள்

சே எண் : 143180

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
| --- | --- | --- | --- |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.P. 259A-6—1,00,000—30-1-84.